# மெஹர் பிரபு

## (MEHER PRABHU)

**இக்கால அவதார புருஷரின் வருகை**
**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு

**(MEHER BABA'S LIFE HISTORY)**

## குறுகிய தமிழாக்கம்

**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு இருபது

## (VOLUME TWENTY)

**1967 - 1969**

# இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறைநாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா மட்டுமே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 8000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, ஜூலை 2024

✉ vela.radhakrishnan@gmail.com

✆ **+919225631113**

REV:01/12.11.2025

இது எங்கள் பிரார்த்தனை.
இப்போது நிறைவடைந்துள்ள பணி,
அடுத்த எழுநூறு ஆண்டுகளுக்கு,
கடவுளின் அன்பையும்,
ஏக இறைவன் எனும்
உண்மைப்பொருளையும்
வெளிப்படுத்தும்
அவதார புருஷரின்
தெய்வீக நோக்கத்திற்கு
உகந்ததாக, உதவுவதாக
இருக்க வேண்டும்.

# மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட மாமனிதர்
## (SOMETHING SUPERHUMAN)

லட்சக்கணக்கான வார்த்தைகள், ஆயிரத்தொரு சிக்கல் நிறைந்த சிந்தனைகள் மற்றும் உணர்ச்சிகள், ஆயிரக்கணக்கான சித்திரங்கள், கதாபாத்திரங்கள் மற்றும் ஆளுமைகளுக்குப் பின்னர், இத்துடன் நான் மேலும் என்ன இணைக்க முடியும்? இறை மனிதனாக நிலைகொண்டுள்ள ஒருவரின் முன்னிலையில், 'உண்மைப்பொருளாக உளதாயிருக்கும் இறைவன் யார்? உண்மைப்பொருள் என்றால் என்ன?' என்ற வாசகரின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்தில், என்னிடம் என்ன பெரிய ஆற்றலும், அனுபவமும் இருக்க முடியும்!

'விவரிக்க முடியாத ஒருவரை' விவரிக்கும் விதத்தில் நான் என்ன புகழ்ந்து பேச முடியும்? 'கூறுவதற்கே வார்த்தைகள் இல்லாத ஒருவரை'ப் பற்றி நான் என்ன கூற முடியும்? எனவே, 'பெயர் வழங்க முடியாத ஒருவரை', 'சொல்லிலடங்கா ஒருவரை', 'ஆயிரக்கணக்கான வடிவங்களை ஒன்றாக உள்ளடக்கிய ஏக இறைவனை' நான் வழிபட்டு வணங்க வேண்டும். நான் நம்பிக்கையின்மையை எதிர்கொள்ளும் போது, நம்பிக்கையை வழங்க வேறு யார் ஒருவரை நான் அழைக்க முடியும்? நான் உதவியற்ற நிலையை அனுபவிக்கும் போது, வேறு யார் ஒருவரிடம் உதவி கோர முடியும்? குளறுபடிகள், குழப்பம், அவநம்பிக்கை போன்றவற்றை சந்திக்கும்போது, ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளுக்காக வேறு யார் ஒருவரை நான் நாட முடியும்?

எல்லையற்றவர் என்னை எனது மனதின் எல்லைக்கு அழைத்துச் சென்றார். இறை ஒளியாக இருப்பவர், நான் எந்த அளவுக்கு இருள் நிறைந்தவன் என்பதை எனக்குக் காண்பித்தார். நான் எத்தகைய அறியாமையை உள்ளடக்கியவன் என்பதை இறை ஞானி எனக்கு வெளிப்படுத்தினார். அளவிறுதியற்றவரான '**அவர்**', அவருக்கு முன்னால் ஒரு தனி மனிதனின் வரம்பு உடைந்து, சுக்குநூறாகிப் போவதை எனக்கு வெளிச்சமிட்டுக் காட்டினார். ஒருவர் நேர்மையாக இருந்தால், எல்லையில்லா '**அவர்**' முன்னால் ஒன்றுமில்லா தன்மையைப் பார்க்கிறார்; ஒருவர் தனது 'நான்' எனும் சுயம் ஒன்றுமில்லாததை அனுபவிக்கிறார். '**அவர்**' இல்லாமல் எதுவும் இல்லை. '**அவர்**' இல்லாமல் நான் ஒன்றுமில்லை. '**அவர்**' இல்லாமல் ஒன்றுமில்லாத ஒன்றை உருவாக்கும் பன்முகத்தன்மை மட்டுமே உள்ளது. '**அவர்**' இல்லாமல் ஒன்றுமே இல்லை என்ற நிலை, மனதிற்கு தாங்க முடியாத ஒன்று. அனைத்து தத்துவங்களின் முதல் கேள்வி என்னவெனில்: "ஒன்றுமில்லாமல் இருப்பதற்கு பதிலாக ஏதாவது ஒன்று இருப்பதன் காரணம் என்ன?" மனதில் ஏதோ ஒன்று இருக்க வேண்டும், அது கற்பனையாக இருந்தாலும் கூட, அந்தக் கற்பனையை உருவாக்கும் மாயை, அதிக

பன்முகத்தன்மையை உள்ளடக்கியது. ஆனால், ஒன்றுமில்லை என்பதற்கு பதிலாக, ஏதோ ஒன்று இருப்பதாகத் தோன்றுவது ஒரு கனவே தவிர வேறொன்றுமில்லை.

இதுபோன்ற வார்த்தைகள் அனைத்தும் எதை நோக்கி வழிநடத்தும்? இதுபோன்ற புத்தகங்கள் அனைத்தும் எங்கே அழைத்துச் செல்லும்? இவை அனைத்தும், மனதால் '**அவரை**' அறிய முடியாது என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் அழைத்துச் செல்கிறது. எவ்வளவுதான் கற்றறிந்தாலும், மனதால் உள்வாங்கி, கிளிப்பிள்ளை போல மீண்டும் மீண்டும் மொழிந்தாலும், '**அவரை**' அறிய முடியாது. ஆனால் அத்தகைய சூழ்நிலையை மனம் தாங்கிக் கொள்ளாது என்பதால் '**அன்பு**', '**நகைச்சுவை உணர்வு**' (LOVE AND HUMOUR) இரண்டும் அதற்கு உறுதுணையாக உள்ளன. அன்பு, நகைச்சுவை உணர்வு இரண்டும் இல்லாமல், மாயை, அதாவது மனம் அதன் உள் மற்றும் வெளிப்புற பரிமாணங்களுக்கு இடையிலான உணர்வின் சந்திப்பாக (பரிமாற்றம்) உருவெடுத்து இருப்பது, தாங்க முடியாதது, சகிக்க முடியாதது மற்றும் அர்த்தமற்றது; ஏனெனில் அது ஒன்றுமே இல்லாத நிலையில் உள்ளது. '**அன்பு, நகைச்சுவை உணர்வு**' இரண்டும் தான் மனதைத் தாங்கிக் கொள்ளும் வலிமை வாய்ந்தவை.

இந்தப் புத்தகங்களின் தொகுப்பு எனது மனதிற்கு, 'மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒன்றை' அடையாளப்படுத்தும் அதே வேளையில், நான் அதை எதிர்கொண்டு தாங்கிக்கொள்ள வேண்டிய ஒரு கட்டத்தில், அது என்னை சின்னாபின்னமாக்கி, எனது மனதை, புரிந்துகொள்ள முடியாத 'இறை ஒளியின்' விளிம்பில் விட்டுச் சென்றது. இந்த வார்த்தைகளின் உள் அர்த்தத்தை உள்வாங்க வேதனையாக இருந்தது. '**அன்பு, நகைச்சுவை உணர்வு**' இவை இரண்டும் இல்லாத பட்சத்தில், இந்த 'இறை ஒளி'யின் சாராம்சம் தாங்கிக்கொள்ள முடியாததாக இருக்கும். ஒருவர் அன்பை கண்டுகொள்வதோடு, அதை உளமார ஏற்றுக்கொள்ள வேண்டும்; அதுபோல், ஒருவர் நகைச்சுவை உணர்வை எதிர்கொள்ளும் போது, அதை மனமார ஆமோதிக்க வேண்டும். ஒருவர் இதைச் செய்தால், அவர் 'மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒன்றை' சாதித்ததாகக் கூறப்படும்.

இந்தக் கருத்தை விளக்கும் விதத்தில், 1950ஆம் ஆண்டு 'புது வாழ்வின்' (NEW LIFE) தொடக்கத்தில் பெல்காவ்ம் நகருக்கு வெளியே நிகழ்ந்த பின்வரும் சம்பவத்தை மேற்கோள் காட்டி, அக்டோபர் 30ஆம் தேதி காலை தமது ஆண் தோழர்களின் முன்னிலையில், மெஹர் பாபா எழுத்துப்பலகையில் இவ்வாறு எடுத்துரைத்தார்:

- **"....எனது உறுதிமொழி எக்காரணத்தைக் கொண்டும் மாற்ற முடியாதது; 1951 ஜனவரி 1 முதல், உங்களில் ஒருவர் கூட என்னுடன் இருக்க மாட்டார். அதைத்தான் நான் எதிர்பார்க்கிறேன். அதுவே நான் மேற்கொள்ளும் அனைத்து மாற்றங்களுக்கும் உதவிகளுக்கும் காரணம்; இது நீங்கள் என்னுடன் இணைந்திருக்க வழிவகுக்கும்...."**

- இந்த நிலையில், டாக்டர் நீலுவிடம் பாபா அவரை உதைக்குமாறு கட்டளையிட்டார். நீலு உடனடியாக இணங்கினார். சில கணங்களுக்குப் பிறகு, பாபா தொடர்ந்தார், **“இந்தப் ‘புது வாழ்வில்’, சில சூழ்நிலைகளில் ‘மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒன்றை’ உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். இக்கட்டான இந்த சூழ்நிலையில் உங்களுடன் நானும் இணைந்து இருக்கிறேன். அனைத்து சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாகவும், முகமலர்ச்சியாகவும் இருப்பது ‘மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டது.’ எனவே, நாம் இயன்றவரை ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க முயற்சிப்போம். நாம், ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்ட உறுதிமொழியை நிலைநிறுத்துவதற்காக நான் உங்களுக்கு உதவும் அதே வேளையில் நீங்களும் எனக்கு உதவுங்கள்.”**

என்னைப் பொறுத்தவரை, ‘புது வாழ்வு’ (NEW LIFE) காலகட்டத்தில் இல்லாமல் இருந்த நமக்கு, இந்த சம்பவம் என்ன அர்த்தத்தைக் குறிக்கிறது - மெஹர் பாபாவுடனான நட்பும், தோழமையும் உண்மையில் எதை உணர்த்துகிறது? இதை நினைத்து எனது மனம் திக்குமுக்காடிய போது - ஏதோ ‘மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட மனித தன்மை’ (SOMETHING SUPERHUMAN) இன்றியமையா தேவை என்பதை உணர்ந்தேன் - ஏனெனில், யானையை சுமக்கும் சிறுவனைப் போல் இந்த முழு வாழ்க்கை வரலாற்று சுமையையும் நான் சுமக்க வேண்டியது எனது பொறுப்பு. இந்த வாழ்க்கை வரலாற்றை உருவாக்கும் பொறுப்பை நான் ஏற்க வேண்டியிருந்தது. அனைத்து சூழ்நிலையிலும் ‘மகிழ்ச்சியாகவும் முகமலர்ச்சியாகவும்’ இருப்பதில் நான் பலமுறை தோல்வியை சந்தித்தேன். இதுவரை என்னால் அப்படி ஒரு ‘புது வாழ்வை’ வாழ முடியவில்லை, ஆனால் ‘ஏதோ மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட மனித தன்மை’யின் ஆர்வம் என்னைக் கவர்கிறது. வேறு எந்த இடத்திலும், காலத்திலும் மெஹர் பாபா இத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்தியதை நான் கண்டுகொள்ளவில்லை.

இந்தப் புத்தகம் அவதார் மெஹர் பாபாவின் வாழ்க்கை மற்றும் ஆன்மீகப் பணியின் இறுதி தொகுப்பைக் குறிக்கிறது - உளதாயிருத்தலின் அடிப்படையில், மானிடன், மெஹர் பாபாவை இக்காலகட்டத்தின் கடவுளாக, அவதார புருஷராகக் காண்கிறான். 1984-85 ஆண்டுகளுக்குப் பிறகு, நான் முதல் புத்தகத்தை வடிவமைக்கத் தொடங்கியபோது, அடுத்த பதினேழு ஆண்டுகளுக்கு நான் வாழ வேண்டிய வாழ்க்கையின் ஒரு கருத்தைத் தீர்மானிக்க வேண்டியிருந்தது. அசல் கையெழுத்துப் பிரதியில் 4500 பக்கங்களுக்கும் குறைவான அத்தியாயங்கள் இருந்தன, அதைச் சுருக்குவது சாத்தியமில்லை என்று எனக்குத் தெரியும். ஜூலியஸ் ஸீஸர் லத்தீன் மொழியில் எடுத்துரைத்த வார்த்தைகள் எனது நினைவுக்கு வந்தன: ‘வேனி. வேதி. வென்சி. (VENI. VEDI. VENCI)’, வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ‘வேறுபாடு மூலம் வெற்றி காண்பது.’ எனவே

மெஹர் பாபா ஒரு புதிய பாகத்திற்குள் நுழைந்தபோது அல்லது புதிய இடத்தில் தலைமையகத்தை அமைத்தபோது அல்லது ஒரு புதிய கட்டத்திற்குள் தனது பணியைத் தொடங்கியபோது, ஒரு புதிய அத்தியாயம் உருவானது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒவ்வொரு அத்தியாயமும் விரிவடைந்து, மனதின் சிந்தனையின் பொருளாக தன்னைத்தானே மறுகட்டமைத்து, வரையறுக்கப்பட்ட அச்சாக வடிவமைக்கப்பட்டது, இதனால் வார்த்தைகள் அவற்றின் இறுதி அர்த்தத்தையும் விளக்கத்தையும் உள்ளடக்கிக் கொண்டன. ஒவ்வொரு தொகுப்பும், ஒரு பருவகாலம் நிறைவடைந்து புதிய காலநிலை உருவாவது போல், இதுவும் புதுப்புது அத்தியாயங்களாக உருவெடுத்தது.

நான் பிரிட்டிஷ் - இந்திய - ஆங்கில கலவையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட உள்ளடக்கத்தில் (எழுதப்பட்ட அனைத்தும் புரிந்துகொள்ளக்கூடியதாக இருப்பதை உறுதிசெய்து) பணிபுரிந்து கொண்டிருந்தபோது, சில சமயங்களில், அதில் சொல்லப்பட்டதையும் அதன் அர்த்தத்தையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாததால், நான் வேறு விதத்தில் புரிந்து, விளக்க வேண்டியிருந்தது. பிறரின் உதவியுடன், மீண்டும் சொற்களின் அமைப்பை மாற்றி எழுதும்போது, புரியாத விஷயங்கள் புலப்படும். இது மீண்டும் மீண்டும் நிகழ்ந்தது. எதுவாயினும் இறுதிச் சொற்களுக்குப் பொறுப்பேற்பது என்பது, அது வெளிப்படுத்தும் பொருளிலும், எனது மனத் தெளிவிலும் இருந்தது; இது ஒவ்வொரு வாக்கியத்தையும் மீண்டும் மீண்டும் படிக்கவும், மீண்டும் படித்து புரிந்துகொள்ளவும் என்னைக் கட்டாயப்படுத்தியது; மிகவும் வேடிக்கையான தொனியில் சொல்லப்போனால், இது அறிவுத்திறனால் விளைந்த ஆணவத்தை ஒடுக்க, ராட்சஷ கதைகளைச் சொல்லி சித்திரவதை செய்வது போன்ற ஒரு பயிற்சியாகும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் நினைத்ததை அல்லது உள்ளூர உணர்ந்ததை சிறப்பாகச் செய்தேன், ஆனால் இப்போது பல குறைபாடுகள் இருப்பதை நான் கண்டாலும், அது மனித அபூரணத்தால் நிகழ்வது என்று சமரசம் செய்ய வேண்டியதாகிறது.

மொத்தத்தில், இது ஒரு கடினமான பணி. பணிபுரியும் போது உடல் உழைப்பு ஒருவருக்கு வலியைத் தரும். ஒருவர், தன்னை விட கனமான ஒன்றைத் தூக்க முற்படும்போது, வலி தவிர்க்க முடியாதது; அதைப் புரிந்துகொள்ளவும், மேலும் ஆழமாக சிந்திக்கவும், இதுவரை அனுபவம் இல்லாத அல்லது மனதளவில் முன்பு நினைத்திராத ஒன்றை முயற்சிப்பது என்பது மன அழுத்தத்தை விளைவிக்கும். ஒரு கவிஞர் கூறினார்: “சிந்திக்காத ஒன்றை சிந்திப்பது என்பது தெய்வீக சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் ஆத்மாக்களைப் போன்றது.” அந்த அனுபவம் பயங்கரமானதாக இருக்கலாம். மேலும் ஒருவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளுடன் தொடர்பு கொள்ளும்போது, உங்களுக்குள் இருக்கும் ‘மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட மனித தன்மையை’ பயன்படுத்த ஒருவர் தயாராக இருக்க வேண்டும். இந்தப் புத்தகத்தில்

இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகள் செயல்படுகின்றன என்பதை நான் கண்டுகொண்டேன்; அதை நான் உங்களுக்கு வெளிப்படுத்த விரும்புகிறேன்.

மெஹர் பாபாவின் புகைப்படங்கள் அனைத்தும் இல்லாமல் இருந்திருந்தால், அவரது வாழ்க்கை வரலாறு, முழுமையாகப் புரிந்துகொள்ளப்படாத ஒன்றாக இருந்திருக்கும். புகைப்படங்கள் எனது சிறந்த பங்களிப்பாகும், அதுவே இந்தப் பணியின் இலகுவான அம்சமுமாகும்; ஏனெனில் அவை மெஹர் பாபாவின் தெய்வீக மற்றும் மனித அழகையும், பன்முகத்தன்மை மற்றும் ஆளுமை அனைத்தையும் காந்தம் போல கவர்ச்சியாகப் பிரதிபலிக்கின்றன. பல வருடங்கள் மெஹர் பாபாவின் புகைப்படங்களைப் பார்த்து, படித்து, அவற்றுடன் பணிபுரிந்ததால், பாபாவின் வாழ்க்கையின் பல அம்சங்களை, அவரது பணியின் ஆரம்பம் முதல் இறுதி வரை, ஒத்திசைவான மனப் படிமங்களின் திரையில் காட்சிப்படுத்த என்னைத் தயார்படுத்தினேன். அவரது வாழ்க்கைக் கதையின் பக்கங்கள் விசாலமாக விரிவடைந்தபோது, விபரங்கள் அனைத்தும் பின்பு வெளிப்பட்டன. இந்தப் புகைப்பட முயற்சியில் என்னை ஊக்கப்படுத்திய மெஹரா ஜே. ஈரானி, பாபாவின் சகோதரி மணி மற்றும் பாதிரி (ஃபேரடூன் டிரைவர்) ஆகியோருக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். பாபாவின் சகோதரர்களான ஜால், பெஹராம், ஆதி ஜூனியர், மற்றும் ஹெடி மெர்டென்ஸ், ரானோ கெய்லி, மார்கரெட் க்ராஸ்கே, எலிஸபெத் பேட்டர்ஸன், ஆதி கே. ஈரானி, பெண்டு ஆகியோருக்கும், நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக எலிஸபெத் பேட்டர்ஸன் இந்தக் கருத்தை வலியுறுத்திக் கூறினார்: “பாபாவின் அசல் புகைப்பட எதிர்மங்கள் (NEGATIVES) எனது விலைமதிப்பற்ற பொக்கிஷங்கள்.” மெஹர் பாபாவின் அன்பர்களிடையே அவரது வெளிப்பாட்டின் ஓர் அம்சம், அவருடைய புகைப்படங்கள் உயிர்பெற்று வருவதாகும் என்பது எனக்குத் தெரியவந்தது.

இந்தப் பணியின் ஒரு கடினமான அம்சம் என்னவெனில், நான் மெஹர் பாபாவை நேரடியாக சந்திக்காத போதும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டதால், மக்கள் என் மீது ஏகப்பட்ட வெறுப்பை வெளிப்படுத்தினர். மேலும், என்னுடன் நெருக்கமாக இருந்த பலர், இதை என்னால் செய்ய முடியும் அல்லது நான் செய்வேன் என்ற நம்பிக்கை இல்லாததால், அதன் சுமையின் அழுத்தத்தில் நான் உடைந்துவிடுவேன் என்று நினைத்தனர். மேலும் பெரும்பாலான மக்கள் இதை ஏளனம் செய்தனர். பல விமர்சகர்கள் கூறினர்: “மெஹர் பாபா உடலைத் துறந்துவிட்டார், ஒருவருக்கு உயிர்வாழும் குருநாதர் தேவைப்படுகிறார்.” ‘அவதார புருஷர் அளவிறுதியற்றவர், நித்தியமானவர், என்றென்றும் மனித குலத்துடன் எப்பொழுதும் தொடர்பில் இருப்பவர்’ என்பதை அவர்கள் சற்றும் புரிந்து கொள்ளவில்லை. அவரை எந்த நேரத்திலும் அணுக முடியும்.

இப்போது அதெல்லாம் ஒன்றுமில்லாமலாயிற்று, ஏனெனில் நான் பணியை முடித்துவிட்டேன். பத்திரிகையாளர் டாம் ஹாப்கின்ஸனின் (TOM HOPKINSON) வார்த்தைகளில், “அதை நிறைவு செய்ய நூறு ஆண்டுகள் ஆகும்,”

ஆனால், மெஹர் பாபா ஏறக்குறைய இருபது ஆண்டுகளில் என்னை அதை முடிக்கச் செய்தார். கடவுள் விரும்பிய ஒன்றை நான் செய்து முடித்ததால், இதுவரை வாழ்ந்தவர்களிடையே மிகவும் அதிர்ஷ்டசாலியாக நான் என்னைக் கருதுகிறேன். நான் இந்தப் பரவசத்தை உணரும்போது, நான் பொறாமைப்படும் அளவுக்கு எந்த மனிதனும் இல்லை; நான் அவதூறு இழைக்கும் அளவுக்கு யார் ஒருவரும் இல்லை; எல்லா தவறுகளும் சரி செய்யப்பட்டுவிட்டன, அனைத்தையும் மன்னிப்பதற்காக நான் இந்த விலையைச் செலுத்தினேன். இது ஓர் அற்புதமான உணர்வு, அதன் காரணமாக பூமியில் உயிர் வாழும் அதிர்ஷ்டசாலி நபர்கள் மத்தியில் நானும் இருக்கிறேன், மேலும் இது அன்புடனும், நல்ல நகைச்சுவையுடனும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்மை பயக்கும் என உணர்கிறேன்.

நான் பிரார்த்தனையை விரும்பும் மனிதன் அல்ல, உளமார செயலில் ஈடுபடும் சிந்தனை உள்ளவன். ஆனால் நான் பிரார்த்தனை செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது. “புத்தகத்தைப் படிப்பதன் மூலம் மனிதன் கடவுளை கண்டுகொள்ள முடியாது” என்ற ரூமியின் வார்த்தைகளை ஒருவர் அனுபவிக்கும் அந்த நாள் வரும் வரை, இந்தப் பணியை முடித்ததன் மூலம், நான் செய்ததற்கு நீண்ட கால அர்த்தம் இருக்க வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்கிறேன். இறையுணர்வை எய்தும் பாதையில் ஒருவர் நுழையும் நேரம் அது. அந்த இறை உணர்தலின் செயல்பாட்டில் அனைத்து புத்தகங்களும் தூக்கி எறியப்படுகின்றன; உலகப் பொக்கிஷங்கள், சாம்ராஜ்யங்கள், அதிகாரங்கள் அனைத்தும் உதவாப்பொருட்கள் மற்றும் கந்தல்களின் குப்பைக் கிடங்காக மாறுகின்றன; மேலும் உலகின் அனைத்து பேரழிவுகளும் ஒருவர் உடலில் ஏற்படும் காயங்களைப் போன்றது. இதுவே மெஹர் பாபாவின் வருகையின் இறுதி நோக்கம், இறுதி இலக்கு - இறை உணர்வை எய்தல். மெஹர் பாபா ஏன் பூமியில் அவதார புருஷராக வருகை தந்தார், என்ன ஓர் ஆக்கப்பூர்வமான பணியைச் செய்ய என்னைப் பணித்தார் என்பது எனது குறுகிய அனுபவம்.

ஒரு தத்துவஞானியாக, ஒரு போர்வீரனாக அல்லது
தியாகியாக இருப்பது ஒரு பொருட்டல்ல என்பேன்.
நான் ஒரு வாள், நான் ஒரு பட்டாகத்தியாக -
ஒரு பேனா வடிவில் - அவர் கைகளில் இருப்பேன்.
எனது பங்களிப்பை எனது சொந்த இரத்தத்தில்
கையொப்பமிட முடியும் என்பதில் பெருமைப்படுவேன்.

பல ஆண்டுகளாக, ஹ஁ஃபீஸின் இந்த வார்த்தைகள் எனக்கு ஆறுதலாக இருந்து, எனது எழுத்துப் பணி முழுவதும் என்னை வழிநடத்தி வந்தன.

“வாழ்க்கையில் மனிதன் ஒரு மயிரிழையில்
தடுக்கி தடுமாறினாலும், அவனை சீர் செய்ய
மனம் மட்டுமே உறுதுணையாக இருக்கும்.

ஓ' கரும் வெற்றிடத்தில் அதனுடன்
சமநிலைப்படுத்தத் துணியும் தருணத்தில்,
அவனுடைய தலைவிதி விரக்தியை சந்திக்கும்."

ஹபீஸ் இதை சாதித்தார். அவருடைய சாதனை எனக்கு நம்பிக்கையைத் தருகிறது, அது உங்களுக்கும் நம்பிக்கையைத் தர வேண்டும்.

இறுதியாக 'அவரது சுய வார்த்தைகளில்...' (IN HIS OWN WORDS) மெஹர் பாபாவின் 'வாழ்க்கை வரலாறு' அவரது ஐந்து குருநாதர்கள் மற்றும் பெற்றோரின் வாழ்க்கையிலிருந்து தொடங்க வேண்டும் என்று குறிப்பிட்டதைப் போல, வரலாற்றின் இறுதியில் அவரது 'வெளிப்பாடு' (MANIFESTATION) குறித்து எழுதப்பட வேண்டும் என்பது அவரது விருப்பம். 1922 முதல் 1969 வரையிலான அனைத்து வரலாற்றுத் தொகுப்புகளிலும் இலக்கமுறையில் (DIGITAL) 'வெளிப்படுவது' (MANIFEST) அல்லது 'வெளிப்பாடு' (MANIFESTATION) என்ற சொற்களுக்காக கணினித் தேடல் மூலம் பொருள் சேகரிக்கப்பட்டது. உள்ளடக்கத்தைப் படித்த பின்னர், அவதார புருஷரின் 'வெளிப்பாடு' ஒரு சிக்கலான மற்றும் பரந்த பொருளை உள்ளடக்கியது என்பதை நீங்களும் புரிந்துகொள்வீர்கள். வாசகர் தனது சொந்த முடிவுகளை எடுக்க வேண்டும். அவதார புருஷரின் வெளிப்பாட்டின் முழு அர்த்தம் என்ன என்பதன் உறுதியான விளக்கத்தை வழங்கக்கூடிய எந்த ஒரு மனிதனும் இப்போது உயிர்வாழவில்லை. மெஹர் பாபாவின் வெளிப்பாடானது பூமியில் நமக்கு பல்வேறு விஷயங்களைக் குறிப்பிடுகிறது, மேலும் 18,000 மனித உலகங்களுக்கும், பிரபஞ்சத்தில் உள்ள எண்ணற்ற கிரகங்களில் வாழும் கோடிக்கணக்கான உயிரினங்களுக்கும், அடுத்த 700 முதல் 1400 ஆண்டுகளுக்கான அவரது பணியின் ஒவ்வோர் அம்சமும் உள்ளடங்கும் என்பதில் சந்தேகமில்லை.

லாறன்ஸ் ரைட்டர், மார்ச்' 2001
(LAWRENCE REITER, MARCH' 2001)

# நிகழ்வுகளின் காலவரிசை

**1967**
- ஜூலை, மெஹராஸாத்தில் பாபாவின் ஏகாந்தவாசம் தொடர்ந்தது
- ஜூலை **10,** பாபாவின் **42**ஆவது ஆண்டு மௌன நிறைவு விழா

**1967**
- ஜூலை **21** முதல் நவம்பர் **21** வரை, கடுமையான ஏகாந்தவாசம்

**1967**
- செப்டம்பர் **20,** தொழுநோயாளிகளுடனான பணி மற்றும் நேர்காணலுடன் பாபாவின் செய்தி காணொளிப் படமாக்கப்பட்டது

**1967**
- செப்டம்பர் **27,** பூனா ஸெயின்ட் வின்சென்ட் உயர்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு விழா - மெஹர் பாபாவின் சிறப்புச் செய்தி

**1967**
- அக்டோபர் **1,** உலகம் முழுவதும் வாழும் அனைத்து பாபா- அன்பர்களுக்கும் சுற்றறிக்கை வெளியீடு

**1967**
- நவம்பர், ஹமிர்பூர் (மெஹர்புரி), மஹேவா (மெஹரஸ்தானா) மற்றும் நௌரங்கா (மெஹர் தாம்) ஆகிய இடங்களில் வருடாந்திர சிறப்பு மேளா

**1967**
- டிசம்பர் **1,** பாபா 'அவரது ஏகாந்தவாசப் பணியின் கடைசி **70** நாட்கள்' எனச் சுட்டிக்காட்டினார்

**1967**
- டிசம்பர் **5,** பாபாவின் பிறந்தநாளுக்கான (**25.02.1968**) செய்தி வழங்கப்பட்டாலும், பிறந்தநாள் வரை அதை வெளியிட வேண்டாம்' என அறிவுறுத்தப்பட்டது

**1967**
- டிசம்பர் **22,** மெஹராவின் பிறந்தநாள்
- **1968,** ஜனவரி **20,** உலகம் முழுவதும் வாழும் அன்பர்களுக்கு சுற்றறிக்கை வெளியீடு

**1968**
- பிப்ரவரி **20,** தற்போதைய ஏகாந்தவாசம், மார்ச் **25** அன்று நிறைவடைவதற்கு பதிலாக, மே **21** வரை தொடரும் - பாபாவின் அறிவிப்பு

**1968**
- பிப்ரவரி **25,** கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் அமைந்த மெஹர் பாபா மையங்களில் பெரிய அளவில் பிறந்தநாள் கொண்டாட்டம், சிறப்புச் செய்தி

**1968**
- ஏப்ரல் **1,** மெஹர் பாபா, ஆண், பெண் மண்டலியுடன் பூனா, குருபிரசாத் வருகை
- மே **15,** 'வாழ்க்கை சுற்றறிக்கை' வெளியீடு

**1968**
- மே **21** - ஜூன் **27,** ஐந்து வாரங்கள் ஏகாந்தவாசப் பணி தொடர்ந்தது
- ஜூலை **1,** மெஹர் பாபா மண்டலியுடன் மெஹராஸாத் வருகை

| | |
|---|---|
| 1968 | • ஜூலை 10, மெஹர் பாபாவின் மௌனத்தின் 43ஆவது ஆண்டு நிறைவு<br>• ஜூலை, மணியின் குடும்பக் கடிதம் வெளியீடு |
| 1968 | • அக்டோபர் 13, 1969 ஏப்ரல் 10 - ஜூன் 10 வரை, குருபிரசாத்தில் தரிசனத்திற்கான முடிவு குறித்து சேவகர்களுடன் சந்திப்பு & சுற்றறிக்கை வெளியீடு |
| 1968 | • நவம்பர் 13, 'மண்டலி உறுப்பினர் யார்' என்பதன் அர்த்தத்தையும், அதன் நிலையையும் தெளிவுபடுத்தும் விளக்கம் |
| 1968 | • டிசம்பர் 1 , மெஹர் பாபா பிறந்த பூனா, ஸஸூன் பொது மருத்துவமனையின் 100ஆவது ஆண்டு நிறைவு விழா |
| 1968 | • டிசம்பர் 11, பாபாவின் 75ஆவது பிறந்தநாளுக்காக செய்தியை வழங்கி ஜனவரிக்கு முன்னர் அதை அச்சிட்டு வெளியிட வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டது |
| 1968 | • டிசம்பர் 22, 23 தேதிகளில் மெஹராஸாத்திற்கு வருகை தரும் பாபா-அன்பர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் வெளியிடப்பட்டன |
| 1969 | • ஜனவரி 7, வாழ்க்கை சுற்றறிக்கை எண்: 71, ஆகஸ்ட் 15 வெளியிடப்பட்டது<br>• ஜனவரி 9, பாபாவின் இரத்த மாதிரிகள் சோதனைக்காக அனுப்பப்பட்டது |
| 1969 | • ஜனவரி 12க்குப் பின்பு, பாபா அறையை விட்டு வெளியே வராமல், நாளுக்கு நாள் உடல்நிலை தீவிரமடைந்தது |
| 1969 | • ஜனவரி 19, பாபாவின் உடல்நிலை ஓரளவு நன்றாக இருந்தது - பல உள்ளூர் அன்பர்களுக்கு உணவு தயார் செய்து வழங்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது |
| 1969 | • ஜனவரி 24, மீண்டும் பாபாவின் இரத்த மாதிரிகள் சோதனைக்காக அனுப்பப்பட்டது |
| 1969 | • ஜனவரி 28, 30, பாபாவிற்கு அடிக்கடி உடலில் கொடூரமான நடுக்கங்கள் ஏற்படத் தொடங்கின |
| 1969 | • ஜனவரி 31, மதியம் 12:15 மணியளவில், பயங்கரமான தசைப்பிடிப்பு பாபாவை உலுக்கி, மூச்சைத் திணறடிக்க அவரது சுவாசம் திடீரென நின்றது |
| 1969 | • பிப்ரவரி 7, பாபாவின் உடல் மதியம் 12:15 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது |
| 1969 | • பிப்ரவரி 7, மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு நிறைவடைந்தது. |

# பொருளடக்கம்

காலத்தின் கண்ணீர் - நான்கு மாத ஏகாந்தவாசம் ......... 3

காலத்தின் கண்ணீர் - ஏகாந்தவாசம் நீட்டிப்பு ................. 46

கடைசி காலகட்டம் - குருபிரசாத்........................................ 90

இறுதி ஏகாந்தவாசம் ..................................................107

காலத்தின் கண்ணீர் - இறுதி மாதம் ..................................181

மெஹர் பாபாவின் சமாதி - இறுதி ஏழு நாட்கள்..........218

பிற்சேர்க்கை - 1: காட்சித் தொகுப்பு .....................................236

பிற்சேர்க்கை - 2: சொற்பொழிவுகள் .....................................243

பிற்சேர்க்கை - 3: பிரார்த்தனைகள்.........................................259

பிற்சேர்க்கை - 4: உயிர் துறந்தவர்கள்..................................262

பிற்சேர்க்கை - 5: 1958 - மர்டில் பீச் சகவாசத்தில் கலந்துகொண்டவர்கள்..........................................................268

பிற்சேர்க்கை - 6: 1958 - ஆஸ்திரேலியா சகவாசத்தில் கலந்துகொண்டவர்கள்..........................................................275

பிற்சேர்க்கை - 7: 1958 - மெஹராபாத் சகவாசத்தில் கலந்துகொண்டவர்கள்..........................................................277

பிற்சேர்க்கை - 8: 1962 - கிழக்கு-மேற்கு சகவாசத்தில் கலந்துகொண்டவர்கள்..........................................................283

பிற்சேர்க்கை - 9: இறுதி உயில் மற்றும் உறுதிச்சான்று 288

பிற்சேர்க்கை - 10: மெஹர் பாபாவின் வாழ்க்கை நிகழ்வுகளின் காலவரிசை ....................................................291



**பூனா** (POONA)**, 1967**

# காலத்தின் கண்ணீர் - நான்கு மாத ஏகாந்தவாசம்

(**Age Weeps Again - Four Months In Seclusion**)

மெஹராஸாத்தில் பாபாவின் ஏகாந்தவாசம் தொடர்ந்தது. அவர் காலையிலும், மதிய வேளையிலும் மண்டலி மண்டபத்தில் ஆண்களுடன் அமர்ந்தார்; மேலும் அவரை மண்டபத்திலிருந்து அவரது அறைக்கு, முன்னும் பின்னுமாக அழைத்துச் செல்லும்போது, தோட்டக்கார சிறுவர்கள் ஷங்கர், பாபு, காஷிநாத், பானுதாஸ் போன்றோர் அவரது தூக்கு நாற்காலியை எடுத்துச் செல்ல அழைக்கப்பட்டனர். பாபா இந்த கிராமத்து சிறுவர்களிடம், "**இன்று எத்தனை ரொட்டிகள் உண்டீர்கள்?**" என்று கேலி செய்து, எத்தனை ரொட்டிகள் உண்டனரோ அத்தனை முறை அவர்களின் முதுகில் தட்டிக் கொடுப்பது வழக்கம், மேலும் குறைவாக உண்பவர்களிடம் அதிகமாக உண்டு வலுவாக வளருமாறு அறிவுறுத்தினார்.

ஸரோஷ், விலூ இருவரும் 1967 ஜூலை 5 காலை 9:00 மணிக்கு ஐந்து நிமிடங்கள் பாபாவைப் பார்க்கவும், மேலும் கோஹெரின் சகோதரர் ஜால் இரண்டு நாட்களுக்குப் பின்னர் 7ஆம் தேதி ஃபெராமுடன் வரவும் அனுமதிக்கப்பட்டனர். கைக்கோபாத் 8ஆம் தேதி மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டார்; மேலும் பாபா இல்லாத நேரத்தில் மெஹராஸாத்தில் தங்கியிருந்த பாதிரி, மெஹராபாத் திரும்பிச் சென்றார். ஆதி 9ஆம் தேதி ரமா, மெஹர்நாத், ஷீலா மூவரையும் அழைத்து வந்தபோது, அவர்கள் பாபாவை சந்தித்தனர்.

1967 ஜூலை 10 திங்கட்கிழமை, மெஹர் பாபாவின் மௌனத்தின் 42 ஆண்டு நிறைவு விழாவையொட்டி, ஜூலை 9 நள்ளிரவு முதல் 10 நள்ளிரவு வரை பூரண மௌனத்தைக் கடைப்பிடிக்குமாறு பாபா தனது அன்பர்களுக்கு அறிவுறுத்தினார். அவ்வாறு செய்ய முடியாதவர்கள் 10ஆம் தேதி காலை 8:00 மணி முதல் இரவு 8:00 வரை, பன்னிரண்டு மணி நேரம் தண்ணீர் கூட அருந்தாமல் உபவாசம் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

ஜூலை 8 அன்று, நீதிபதி முகர்ஜி (JUDGE MUKHARJI) கொல்கத்தாவில் மௌன தினத்தைக் கொண்டாடும் வகையில் 'மௌனத்தின் சொல்வன்மை' (THE ELOQUENCE OF SILENCE) என்ற தலைப்பில் உரை ஒன்றை நிகழ்த்தினார். இந்த உரை பாபாவிற்கு முன்கூட்டியே அனுப்பப்பட்ட அந்தத் தருணத்தில், பாபா அவருக்கும் பிற அன்பர்களுக்கும் கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**நான் எனது மௌனத்துடன் என்னைப் பிணைத்துக் கொண்டிருப்பதால், நான் அதைக் கலைக்கும்போது, உண்மையான சுதந்திரம் என்ன என்பதை மனிதகுலம் உணரும்.**

தேஷ்முக், நானா கேர் மற்றும் நாக்பூர் குழுவினருக்கு, பாபா இந்த செய்தியை அனுப்பினார்:

**இந்த ஆண்டு மௌன தினத்தின் நிறைவு விழாவில், மௌனத்தின் அழகை ரசித்து, மௌனத்தில் வாழ்க்கைப் பயணத்தின் இலக்கை அடைவதற்காக விழித்திருக்கும் அனைவருக்கும் எனது அன்பும் ஆசிகளும்.**

ஜூலை 10ஆம் தேதி காலை மெஹராஸாத்தில், ஹாரி கென்மோர் அனுப்பிய ஒலிப்பதிவைக் கேட்க, பாபா, ஆண், பெண் மண்டலி அனைவரையும் மண்டபத்திற்கு அழைத்தார். சமீபத்தில் நியூயார்க் நகரில் 'பார்பஸான் பிளாஸா' ஹோட்டலில் (BARBAZON PLAZA HOTEL) நடைபெற்ற பொது நிகழ்ச்சியில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. எலிஸபெத், கிட்டி, டார்வின் ஷா, ஹாரி கென்மோர் ஆகியோர் முதன்மைப் பேச்சாளர்கள். (ஒலிப்பதிவு கருவியை இயக்குவதற்காக ருஸ்தம் காக்கா ஒரு மின்சக்தி மோட்டாரை மெஹராஸாத்திற்குக் கொண்டு வந்தார்.)

இர்வின் லக், பாபாவிற்காக, கைகளால் உருவாக்கப்பட்ட புத்தகம் ஒன்றை அனுப்பி வைத்தார்; அவர் பல்வேறு மேற்கோள்கள் மற்றும் புகைப்படங்களை தொகுத்து, 'தி ஸைலண்ட் மாஸ்டர், மெஹர் பாபா' (THE SILENT MASTER, MEHER BABA) என்ற தலைப்பை வழங்கினார். அது ஜூலை 10 அன்று மெஹராஸாத்தை வந்தடைந்தது; அடுத்த நாள் இர்வினுக்கு பாபா கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**நீங்களாக உருவாக்கிய உங்கள் இதய அன்பினால் நிரம்பிய புத்தகத்தை அடையப் பெற்றதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இது அற்புதமாக எழுதப்பட்டுள்ளது மேலும் என்னை மகிழ்விக்கும் விதத்தில் உங்கள் அன்பின் உழைப்பைக் குறித்து அளவு கடந்து பேசுகிறது. நான் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் உணர்கிறேன். உங்களுக்கு என் அன்பு.**

அதா ஷிஃப்ரின் (ADAH SHIFRIN, இர்வின் லக்கின் குடும்ப நண்பர்) மற்றும் மியாமியில் வாழும் பலர், 'மெஹர் பாபா இஸ் லவ்: ஃபார் சில்ட்ரன் 4 டூ 100' (MEHER BABA IS LOVE: FOR CHILDREN 4 TO 100) என்ற தலைப்பில் குழந்தைகளுக்காக, பாபாவின் பல்வேறு சித்திரங்களைத் தொகுத்து, புத்தக வடிவில் உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டனர். அந்தப் புத்தகமும் மெஹராஸாத்தை இந்த நேரத்தில் வந்தடைந்தது. பாபா அதை மிகவும் விரும்பி, அதா ஷிஃப்ரினுக்கு தொலைத்தந்தி ஒன்றை அனுப்பினார்:

**'மெஹர் பாபா இஸ் லவ்'** (MEHER BABA IS LOVE) **என்ற உங்கள் புத்தகம் என்னை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்துள்ளது; உங்கள் அன்பின் அயராத உழைப்பு என் இதயத்தைத் தொட்டது. இது குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்களையும் மகிழ்விப்பதோடு, அவர்களை என்னை நோக்கி வெகுவாக ஈர்க்கவும் வழிவகுக்கும். உங்களுக்கும்**, (அரண் **&** அதா - ARON **&** ADAH) **ஷி்ஃப்ரின்ஸ்**, (பாட்ரிசியா - PATRICIA) **ஸார்ஜென்ட்ஸ் -** SARGENTS, **மே பாண்டிஸ்** (MAY BONDYS), **ஆன் ஃபோர்ப்ஸ்** (ANN FORBES) **மற்றும் புத்தகத்தை வெளியிட உதவிய அனைவருக்கும் எனது அன்பையும் ஆசிகளையும் வழங்குகிறேன்.**

எஸ்ரா மிர் (EZRA MIR) என்ற இந்திய குறும்படத் தயாரிப்பாளர், 1932ஆம் ஆண்டு ஹாலிவுட்டில் பாபாவை முதன்முதலில் சந்தித்தார். கேப்ரியல் பாஸ்கலுடன் (GABRIEL PASCAL) கூட்டுத் திரைப்பட முயற்சியைப் பற்றிய விவாதம் இந்த சந்திப்பில் நிகழ்ந்தது. மிர், 1937இல் அது தொடர்பாக பாபாவை மீண்டும் மும்பையில் சந்தித்தார். 1965இல் கனடாவில் சந்தித்த லூயிஸ் வான் காஸ்டெரென் (LOUIS VAN GASTERAN) என்ற டச்சு திரைப்படத் தயாரிப்பாளருக்கு மிர் இப்போது உதவி செய்து கொண்டிருந்தார். வான் காஸ்டெரென் பாபாவிற்கு கடிதம் எழுதி அவரை மெஹராஸாத்தில் காணொளி திரைப்படமெடுக்கும் அனுமதியைப் பெற்றார். வான் காஸ்டெரெனுக்குத் தேவையான ஏற்பாடுகளில் உதவுவதற்காக மிர் அவருடன் இணைக்கப்பட்டார். 1967 ஜூலை 16 ஞாயிற்றுக்கிழமை அன்று, எஸ்ரா மிரை மெஹராஸாத்திற்கு அழைத்து வந்து, காணொளி படப்பிடிப்பைப் பற்றி விவாதிக்க பாபா, ஜால்பாயை அனுமதித்தார். மிரின் நெருங்கிய நண்பரும், பூனாவில் வாழும் 'இந்திய ஃபில்ம் இன்ஸ்டிட்யூட்' (INDIAN FILM INSTITUTE) இயக்குனருமான ஜகத் முராரி (JAGAT MURARI), அவரது மனைவி லட்சுமி, அவர்களது இரண்டு குழந்தைகள் மற்றும் ஜால்பாய், மிர் ஆகியோருடன் ஆதி மெஹராஸாத் சென்றார். அவர்களுடனான நேர்காணலின் போது, பாபாவிற்கு வான் காஸ்டெரென் எழுதிய கடிதங்களின் பிரதிகள் மிர்ருக்கு காட்டப்பட்டன.

ஆதி அடுத்த நாள் ஃபெராம், பாஸ்கர் இருவருடன் மெஹராஸாத் திரும்பி வந்த வேளையில், பாபா அவர்களின் அலுவலக பணிகளைப் பற்றி விசாரித்தார். 18ஆம் தேதி இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்த டான், மும்பையில் அவருடன் இணைந்த பைதூலுடன் அன்று மதியம் மெஹராஸாத் சென்றார்.

அலன் கோஹென் (ALLAN COHEN), பாபாவைப் பற்றிய செய்தித்தாள் துணுக்குகளையும், போதைப்பொருளுக்கு எதிரான பாபாவின் செய்தியைப் பரப்பும் சமீபத்திய பணியின் அறிக்கைகளையும் அனுப்பியதைத் தொடர்ந்து, ஜூலை 20 அன்று பாபா அவருக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**முயற்சியை விரைவுபடுத்தக் கோரி நான் விடுத்த அழைப்புக்கான உங்கள் பதிலில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்; ஏனெனில், நேரம் வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது. நான் உங்கள் அனைவரையும் நினைத்துப் பெருமைப்படுகிறேன் - நீங்கள், ரிக்** (சேப்மென்), **பாப்** (ராபர்ட் ட்ரே஼பஸ்) **மற்றும் பாபா-இளைஞர்கள். உங்கள் அனைவருக்கும் என் அன்பும் ஆசிகளும்**.

1967 ஜூலை 19 அன்று அதி தீவிரமான ஏகாந்தவாசத்தில் நுழைவதற்கு முன்னர் ஆதி, ஸரோஷ், விலூ ஆகியோரை பாபா சந்தித்தார். மறுநாள் காலை 8:30 மணி முதல் 11:30 மணி வரை ஆதி மீண்டும் அழைக்கப்பட்ட போது, பாபா கீழ்வரும் அறிவுறுத்தல்களை வழங்கினார்:

**ஜூலை 21 முதல் நவம்பர் 21 வரை, நான் மிகவும் கடுமையான ஏகாந்தவாசம் மேற்கொள்ள உள்ளேன். எனது வெளிப்பாட்டிற்கான நேரம் விரைவில் நெருங்கி வருகிறது, மேலும் எனது உலகளாவிய பணி அதன் விகிதத்தில் மிகவும் தீவிரமடைந்துள்ளது. இந்தத் தீவிரமான ஏகாந்தவாச பணியின் காலகட்டத்தில், எனக்கு சிறிதளவு இடையூறும் இருக்கக்கூடாது. இந்த நான்கு மாதங்களில் நான் எந்தவிதமான அஞ்சல் பரிமாற்றத்திலும் கலந்து கொள்ள மாட்டேன்; அவசர காலங்களில் கூட, நானாக எவரையும் எனது பணி நிமித்தம் அழைக்கும் வரை, எவரும் மெஹராஸாத்திற்கு வரக்கூடாது.**

நான்கு மாத காலத்திற்காக, பாபா பின்வரும் அறிவுரைகளை வழங்கினார்.

(1) **மிகவும் முக்கியமான விஷயம் ஒன்று உள்ளது: ராணி (மஹாராணி ஷாந்தாதேவி), நரிமன், டான் ஸ்டீவன்ஸ், அலன்** (கோஹென்), **ரிக்** (சேப்மென்), **பாப் ட்ரே஼பஸ், லூயிஸ் வான் காஸ்டெரென் ஆகியோரிடமிருந்து வரும் முக்கியமான அஞ்சல்கள், ஒவ்வொரு சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9:00 மணிக்கு, பாபா முன்னிலையில் வாசிக்கப்படுவதைத் தவிர, கடிதங்கள் அல்லது தொலைத்தந்திகள், எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும், நவம்பர் இறுதிவரை மண்டலியின் கைகளுக்கு வரும் கடிதங்கள் மூலமாக அவர்கள் பாபாவை தொந்தரவு செய்யக்கூடாது.**

(2) **பாபா, மண்டலி, ஆதி இவர்களில் யார் ஒருவரையும் நோக்கி வரும் உண்மையான சிக்கல்களின் வகைகளில், மிக மிக மிக முக்கியமானதாகக் கருதப்படும் எதையும் பாபாவிடம் நவம்பர் இறுதி வரை, தள்ளி வைக்க முடியாத பட்சத்தில், சனிக்கிழமைகளில் மட்டுமே தெரிவிக்கலாம்.**

(3) **ஜெர்பாய்** (கைக்கோபாத்தின்) **குடும்பம் மற்றும் மன்ஸாரி ஆகியோர் ஏதேனும் கடுமையான நோயை எதிர்கொள்ள நேர்ந்தால், சனிக்கிழமைகளில் மட்டும் பாபாவின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். மேலும், பூனாவில் வாழும் பாபாவின் குடும்பம், பிந்த்ரா ஹவுஸ் குடும்பம் மற்றும் மெஹர்ஜி, மெஹராபாத், மெஹராஸாத், குஷ்ரு குவாட்டர்ஸில் வாழும் மண்டலி ஆகியோரின் கடுமையான நோய் குறித்து பாபாவிற்கு சனிக்கிழமை தெரிவிக்கவும்.**

(4) **பின்வரும் பாபா-அன்பர்கள் உயிரைத் துறந்தால் உடனடியாக பாபாவிடம் தெரிவிக்கப்பட வேண்டும்: எலிஸபெத், கிட்டி, ரூத் வைட், பென்** (**ஹெய்மன்**), **ஐவி, நரிமன், அர்னவாஸ், பெஹராம்** (**பாபாவின் சகோதரர்**), **டான்** (**கின்**), **ஸூனாமா, தீனா தலாட்டி, ஆதி சீனியர், மற்றும் பாபாவின் அன்பில் மிக மிக நெருக்கமாக இருப்பவர், அவர்களின் சீரமைப்புக்காக பாபாவின் வழிகாட்டுதல் தேவைப்படும் பட்சத்தில் உடனடியாக பாபாவின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும்.**

(5) **திங்கள் முதல் வெள்ளி வரை காலை வேளையில், பாபா கீழ்வருவனவற்றில் கலந்து கொள்வார்:**

(அ) **கைக்கோபாத்துடன் இணைந்து பணிபுரிவது.**

(ஆ) **பாவ் கல்சூரியுடன் இந்தி புத்தகம்** (**தி நத்திங் அண்ட் தி எவ்ரிதிங்** - THE NOTHING AND THE EVERYTHING) **எடுத்துரைத்தல்.**

(இ) **'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **திருத்தமும், இணைத்தலும்.**

**திங்கள் முதல் வெள்ளி வரை - மதியம்: செய்தித்தாள், கட்டுரைகளுக்கு மட்டுமே செவிமடுத்தல்.**

(6) **சனிக்கிழமை காலை: தவிர்க்க முடியாத 'தலைவலி' கடிதங்கள் மற்றும் தொலைத்தந்திகள், அல்லது மிக மிகத் தீவிர தன்மை மிக்கவை அல்லது எதிர்பார்த்த சில கடிதங்கள் மட்டுமே.**

**மதியம்: செய்தித்தாள்களுக்கு செவிமடுத்தல்.**

(7) **ஞாயிறு காலை: பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்.**

**ஞாயிறு பிற்பகல்: செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகள் வாசிப்பது.**

(8) 1967 நவம்பர் இறுதி வரை, விருந்து உபசாரம் எனும் பெயரில் மெஹராஸாத்திற்கு உணவுப் பொருட்கள் எதுவும் அனுப்பப்படக்கூடாது.

(9) தரிசனத்திற்காகவோ அல்லது மண்டலியை சந்திப்பதற்காகவோ மெஹராஸாத்திற்குப் பார்வையாளர்கள் எவரும் வரக்கூடாது.

(10) மெஹராஸாத் பணியில் நேரடித் தொடர்புள்ளவர்கள் மட்டும், காலை 11:00 மணிக்குப் பிறகு, முற்றிலும் தேவைப்படுவதானால் வருகை தரலாம். வாமன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 11:00 மணிக்கு தவறாமல் வர வேண்டும்.

(11) ஸரோஷ், விலூ இருவரும் அஹமதுநகரில் திரையிடுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காணொளி திரைப்படங்கள் குறித்த தகவல்களைத் தெரிவிக்க வேண்டும், அதற்கிணங்க பாபா, பெண் மண்டலியை அஹமதுநகருக்கு அனுப்புவார்: 'தி ஸவுண்ட் ஆஃப் மியூசிக்' (THE SOUND OF MUSIC), 'லாரன்ஸ் ஆஃப் அரேபியா' (LAWRENCE OF ARABIA), 'டாக்டர் ஸிவாகோ' (Dr.ZHIVAGO) மற்றும் 'மை ஃபேர் லேடி' (MY FAIR LADY). விலூ இந்தத் திரைப்படங்களுக்கு பெண்மணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும்.

(12) ஆதி காலை 11:00 மணிக்குப் பிறகு பணி நிமித்தம் மெஹராஸாத்திற்குச் செல்லலாம்.

(13) மண்டலியில் எவரும் நவம்பர் இறுதி வரை மெஹராஸாத்திற்கு வெளியே செல்லக்கூடாது - பணி நிமித்தம் முற்றிலும் தேவைப்பட்டால், ரானோ அல்லது கோஹெர் அல்லது பைதூல் போன்றவர்கள் அஹமதுநகருக்கும், பைதூல் மும்பைக்கும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

(14) பாபாவின் கோபத்தைத் தூண்டும் அளவுக்கு யார் ஒருவரும் காரணமாக இருக்கக் கூடாது.

(15) 1967 அக்டோபர் மாதம் பாபாவிற்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும்.

(16) ஆதி, லூயிஸ் வான் காஸ்டெரென், எஸ்ரா மிர், ஜகத் முராரி, ஜால்பாய் ஆகியோரின் 'மெஹர் பாபாவின் காணொளி படப்பிடிப்பிற்கான' தேதி ஞாயிற்றுக்கிழமை என்று நிர்ணயிக்கப்பட்டால், பாபா அந்த ஒரு நாளில் மூன்று மணிநேரம் மட்டுமே ஏகாந்தவாசத்திலிருந்து வெளியே வருவார். ஸரோஷ், ஆதி, சகன், பகீரத் மற்றும் அஹமதுநகர் மையத்தின் உதவியுடன் அழைத்து வரப்படும் தொழுநோயாளிகளின் கால்களைக் கழுவும் நிகழ்ச்சியை நடத்தலாம்.

(17) சகன் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை காலை 11:00 மணிக்குப் பிறகு பாபாவின் உணவை மெஹராஸாத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

(18) **ஞாயிற்றுக்கிழமைகளில் 'பொழுதுபோக்கிற்காக', பாபா பாடகர்களை அஹமதுநகர் மையம், அல்லது பூனா அல்லது மும்பையிலிருந்து வர அவராகவே அழைப்பு விடுப்பார், மேலும் இந்த நிகழ்ச்சிகளைப் பற்றி வேறு எவரும் பரிந்துரை செய்யக்கூடாது.**

(19) **சுருக்கமாகச் சொன்னால், 1967 நவம்பர் 21 வரை, எந்த விதமான தொந்தரவையும் பாபா விரும்பவில்லை.**

1967 ஜூலை 21 வெள்ளிக்கிழமை முதல் பாபா தனது 'தீவிரமான' ஏகாந்தவாசப் பணியை, கைக்கோபாத்துடன் மண்டலி மண்டபத்திற்குள் தினமும் காலையில் மூன்று மணி நேரம் தொடங்கினார். கதவுகளும் ஜன்னல்களும் இறுக்கமாக மூடப்பட்டிருந்தன, சிறிதளவு சத்தம் கூட அனுமதிக்கப்படவில்லை - பறவைகள் கூட சத்தமின்றி விரட்டப்பட்டன, அதனால் அவை பாபாவைத் தொந்தரவு செய்ய முடியாது. மண்டபத்தின் உள்ளே, கைக்கோபாத் ஒரு குறுகிய இருக்கையில் நின்று, கடவுளின் ஏழு நாமங்களை (யா யெஸ்தான், அஹூரமஸ்தா, அல்லா, ஈஷ்வர், பரமாத்மா, சர்வவல்லமையுள்ள கடவுள், பர்வர்திகார்) தொடர்ந்து திரும்பத் திரும்ப மொழியும்போதும், பாபா, தலைகுனிந்து கைக்கோபாத்தின் பாதங்களைத் தொட்டார். இது நூற்றுக்கணக்கான முறை நடந்தது. பாவ் கல்சூரி வெளியே காவல் புரிந்தார், பாபாவின் இந்தப் பணியின் போது மெஹராஸாத்தில் முழு அமைதி நிலவியது.

ஒவ்வொரு நாள் காலையிலும் பிம்பல்காவ்ம் கிராமத்திலிருந்து மெஹராஸாத் வளாகத்தில் அலைந்து திரிந்த நாய்க்குட்டி ஒன்றுதான், பாபா மண்டலி மண்டபத்தின் பக்கம் வரும்போது முதலில் அவரை வாழ்த்தி வரவழைத்தது. நாய்க்குட்டி பசியால் உணவு தேடிக்கொண்டிருந்தது. பாபா அந்த நாயை பராமரிக்க வேண்டும் என்று கூறி அதற்கு ரம்மு (RAMMU) என்று பெயரிட்டார். நாய்க்குட்டி வந்த வேளையில் மிகவும் மெல்லியதாக இருந்தது, ஆனால் மெஹரா மற்றும் மெஹருவின் கண்காணிப்பின் கீழ் (செல்லப்பிராணிகளுக்கு அதிகமாக உணவளிக்கும் பாபாவின் பழக்கம்!), ரம்மு விரைவில் திடகாத்திரமாகத் தடித்து காணப்பட்டது.

பாபாவை தூக்கு நாற்காலியில் அழைத்துச் செல்ல, தோட்டக்கார சிறுவர்களை டாக்டர் கோஹெர் விசில் அடித்து அழைக்கும் அவ்வேளையில், ரம்மு, பாபாவுக்காக மண்டலி மண்டபத்தின் வாசலில் காத்திருப்பது வழக்கம். கைக்கோபாத்துடன் பாபாவின் ஏகாந்தவாசப் பணி நிறைவடைந்ததும், கதவுகளும் ஜன்னல்களும் மீண்டும் திறக்கப்படும். அப்போது, பாபா செய்யும்

முதல் காரியம், ரம்முவுக்கு ஒரு ரொட்டித் துண்டைக் கொடுப்பதுதான். மெஹரா அந்த நாய்க்கு ஒரு குச்சியின் மேல் குதிக்கும் பயிற்சியை வழங்கியிருந்தார். ஒவ்வொரு நாளும் மண்டலி, பாபாவின் முன்னால் ஒரு குச்சியைப் பிடித்துக்கொண்டிருப்பது வழக்கம்; பாபா ரொட்டித் துண்டை மறுபக்கத்தில் பிடித்திருக்க, ரம்மு குச்சியை குதித்து கடந்து, பாபாவின் கைகளிலிருந்து ரொட்டியைப் பற்றிக்கொள்ளும். நாயுடன் விளையாடுவது பாபாவின் கடுமையான ஏகாந்தவாசப் பணிக்குப் பின்னர் இனிமையான ஒரு பொழுதுபோக்காக அமைந்தது.

அதைத் தொடர்ந்து, பாபாவின் அறிவுறுத்தல்களைக் குறிப்பெடுக்கும் பாவ் கல்சூரியைத் தவிர, பிற ஆண் மண்டலியை பாபா, மண்டபத்திற்கு வெளியே அனுப்பிவிடுவதும் வழக்கமாக நடந்து வந்தது. 1967 ஜூலை 21 முதல், பாபா ஒரு புதிய புத்தகத்திற்கான கருப்பொருளை பாவ் கல்சூரிக்கு எடுத்துரைக்கத் தொடங்கினார், அதற்கு பாபா '**தி நத்திங் அண்ட் தி எவ்ரிதிங்**' (THE NOTHING AND THE EVERYTHING) என்று பெயரிட்டார். பாபா அவரிடம், "**நான் 1925-26 ஆண்டுகளில் மெஹராபாத்தில் எழுதிய புத்தகத்தில் பத்து சதவிகிதத்தை இப்போது தருகிறேன்... இதர 90 சதவிகிதம் 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தில் உள்ளது**" என்று கூறினார்.

சில நாட்களில், பாவ் கல்சூரி குறிப்பெடுக்கும் புத்தகத்திற்கான அறிவுறுத்தல்கள் நிறைவடைந்ததும், பாபா, மண்டலியை மீண்டும் மண்டபத்திற்குள் அழைப்பது வழக்கமாக நடந்தது. பிற பணிகளைப் பொறுத்தவரை, '**கடவுள் பேசுகிறார்**' (GOD SPEAKS) **புத்தகத்தை முதல் பக்கத்திலிருந்தே உரக்கப் படிக்கத் தொடங்குமாறு** பாபா, எரச்சிற்கு அறிவுறுத்தினார். எரச் அதைப் படிக்கும் போது, பாபா ஒரு குறிப்பிட்ட பத்தியை சைகையால் தெரிவிப்பதும், ஃபிரான்சிஸ், பக்கம், வரிகள் இரண்டையும் ஒரு காகிதத்தில் குறித்துக்கொள்வதும் வழக்கமாக நடந்து வந்தது. இது ஒவ்வொரு நாளும் செய்யப்படவில்லை, ஆனால் நேரம் அனுமதிக்கப்பட்டால் மட்டுமே. பாபா, இந்த முறையில் முழு புத்தகத்தையும் பார்த்த பின்பு, மீண்டும் திருத்தங்களுக்கான விளக்கங்களை வழங்குவதாகக் கூறினார். பாபா இவ்வாறு விளக்கினார், "**எனது விளக்கங்களைக் குறிப்பெடுப்பதற்கும், அவற்றை தெளிவுபடுத்தும் விதத்தில் சுருக்கமாக மாற்றியமைப்பதற்கும் ஃபிரான்சிஸ் பொறுப்பாவார்**." ஆனால் அந்த சந்தர்ப்பம் உருவாகவும் இல்லை, மேலும் பாபா தெளிவுபடுத்த விரும்பிய விஷயங்களை அவர் தெளிவுபடுத்தவுமில்லை.

பாபா ஒவ்வொரு காலையிலும் மூன்று மணி நேரம் மண்டபத்தில் பணிபுரிந்து, மீண்டும் பிற்பகல் 3:00 மணி முதல் 20 நிமிடம் தனது அறையில் தனிமையில் அமர்ந்து, கைமுஷ்டிகளால் மார்பிலும் தொடைகளிலும் பலமாக அறைவதையும் வழக்கமாகக் கொண்டார். இப்படி வேகமாக அறைவது குறித்து அவர் விளக்கியதாவது: "**நான் மேல்நிலை ஆன்மீகத் தளங்களில் பணிபுரிகிறேன், பௌதீக உடலுடனான இணைப்பைப் பராமரிக்க நான் இதைச் செய்தாக வேண்டும்**."

பூனாவில் இருந்தபோது பாபா கூறினார்: "**எனது உடல்நிலை சரியில்லை. மெஹராஸாத்தில் நான் மேலும் பலவீனமாகிவிடுவேன். சில நேரங்களில் என்னால் மண்டலி மண்டபத்திற்கு வர முடியாது, வருவதானால் காலதாமதமாக வருவேன்**." ஆனால் அவரது ஏகாந்தவாச பணி தொடங்கிய நாளிலிருந்து, பாபா காலை 6:00 மணிக்கு அவரது பணியைத் தொடங்க மண்டபத்தில் தயாராக இருந்தார்.

ஃபிரான்சிஸ் நள்ளிரவு 1:30 மணி வரை, எழுத்துப் பணியில் ஈடுபட்டிருந்ததாலும், பாவ் கல்சூரி நள்ளிரவு வரை அவரது இரவுக் கண்காணிப்புப் பணியைத் தொடர்ந்ததாலும், இருவரும் தாமதமாகத் தூங்கி விழிக்க பாபா அனுமதித்தார். ஃபிரான்சிஸ் ஒரு மாற்றத்தை விரும்பி தூங்குவதற்கான வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார், ஆனால் பாபா மண்டபத்திற்கு வந்ததும் அவரை அழைப்பது தவறாமல் நடந்த ஒன்று. இப்படியே பல நாட்கள் கடந்து, கடைசியில் ஃபிரான்சிஸ் தனது நிதானத்தை இழந்து, "இவர் என்ன ஒரு குரூரமான கடவுள்! பலவீனமாக இருப்பதால், தாமதமாக வருவதாகக் கூறிய பின்னரும், இப்போது அவர் முன்பை விட முன்னதாகவே வருகிறார்!" என்று நினைத்தார்.

1967 ஆகஸ்ட் 5 சனிக்கிழமை காலை, பாபா முன்னிலையில் இரண்டு ஒலிப்பதிவு இசைத்தட்டுகள் இசைக்கப்பட்டன. ஒன்று இறை-அன்பரை விவரிக்கும் ஸைகல் (SAIGAL) பாடிய பாடல்; இரண்டாவதாக மல்லிகா புக்ராஜின் (MALIKA PUKHRAJ) மஸ்துகள் மற்றும் அவர்களின் இறை போதையைப் பற்றியது. பாபா அவற்றை ஃபிரான்சிஸுக்காக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததும், ஃபிரான்சிஸ் அதற்குக் கவிதை வடிவம் கொடுத்தார். இறை அன்பைப் பற்றிய முதல் பாடல் இந்த வார்த்தைகளுடன் தொடங்கியது: "நான் பைத்தியம், நான் பைத்தியம், சௌகரியங்களுக்கு நான் ஓர் அந்நியன்! (I AM MAD, I AM MAD, A STRANGER TO COMFORT)."

ஜால்பாய் ஆகஸ்ட் 11 அன்று மெஹராஸாத்திற்கு வந்தபோது மணியை மட்டுமே சந்தித்தார், பாபாவைப் பார்க்கவில்லை. ரமா, மெஹர்நாத், ஷீலா மூவரும் ஆதியுடன் ஆகஸ்ட் 20 ஞாயிறு அன்று பாபாவைப் பார்க்க அழைக்கப்பட்டனர். பாபாவை மகிழ்விக்கும் விதத்தில் சில நல்ல கவாலி பாடகர்களை ஏற்பாடு செய்யவும், அவரது தீவிரமான ஏகாந்தவாச பணியிலிருந்து அவருக்கு சிறிது ஓய்வு வழங்கவும், மும்பைக்குச் சென்று, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஆதிக்கு அறிவுறுத்தப்பட்டது. கஜ்வானி அதற்கான செலவுகளை ஏற்கவும், அவர்களின் கட்டணத்தை செலுத்தவும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

ஆதி மும்பை சென்று வெவ்வேறு பாடகர்களைத் தொடர்பு கொண்டார். ஆகஸ்ட் 25ஆம் தேதி அஹமதுநகர் திரும்பிய அவர், மதியம் 2:00 மணிக்கு மெஹராஸாத் வந்து பாபாவிடம் தெரிவித்தார். மறுநாள் ஆதி மீண்டும் அழைக்கப்பட்டு, நிகழ்ச்சிகளுக்கான பாபாவின் விருப்பங்களைப் பற்றி அவருடன் மேலும் நீண்ட விவாதத்தில் ஈடுபட்டார்.

ஒரு நாள் இரவு, பாபா, பாவ் கல்சூரியிடம், **“உங்கள் சிறந்த நண்பர் யார்?”** என வினவினார்.

பாவ் கல்சூரி, “நானா” என்று பதிலளித்தார், ஏனெனில் நானா கேரை நாக்பூரில் கல்லூரி நாட்களிலிருந்தே அவருக்குத் தெரியும்.

**“அவர் இல்லாமல் இங்கே நீங்கள் தனிமையை உணர்கிறீர்களா?”** என்று கேட்டதற்கு பாவ் கல்சூரி ‘ஆம்’ என்றார்.

**“நான் அவரை இங்கே அழைக்கட்டுமா?”**

“பாபா, ஏகாந்தவாச வேளையில் அவரை எப்படி அழைக்க முடியும்?”

**“அதைப் பொருட்படுத்த வேண்டாம்”** என்று பாபா பதிலளித்தார்.

மறுநாள் மண்டலி மண்டபத்தில், பாபா, நானா கேருக்கு ஒரு தொலைத்தந்தி அனுப்புமாறு எரச்சிற்கு அறிவுறுத்தி, அவரை மெஹராஸாத்தில் வந்து தங்குமாறு தெரிவித்தார். பெண்டு, எரச் இருவரும் ஆட்சேபனை தெரிவித்தனர், ஆனால் பாபா அது குறித்த விளக்கம் எதுவும் வழங்கவில்லை.

நானா கேர், ஆகஸ்ட் 28 அன்று காலை வந்து ஏறக்குறைய ஒரு மாதம் தங்கியிருந்தார். அவர் இரவில் பாபாவின் அருகில் மூன்று மணிநேரம் கண்காணிப்பாளராகப் பணிபுரிய, பின்னர் அலோபாவால் விடுவிக்கப்பட்டார். நானா கேர், அலோபா இருவருக்கும் இந்தக் கடமை வழங்கப்படுவது இதுவே முதல் முறை. (அலோபா பிப்ரவரி 1968 வரை அதைத் தொடர்ந்தார், பின்னர் அது நிறுத்தப்பட்டது.)

பாபா தனது இரண்டு ஆள்காட்டி விரல்களையும் இணைத்து பாவ் கல்சூரியிடம், "**நானா இங்கு வரும்போது, நீங்கள் இருவரும் ஒன்றாக இணைந்து அனைத்தையும் செய்யுங்கள். ஒன்றாக நடக்கவும், ஒன்றாக உணவு உண்ணவும், எப்பொழுதும் ஒருவரோடொருவர் இணைந்திருங்கள்**" என்று பாபா கூறியிருந்தார். பாபாவின் அறிவுரைகளைப் பின்பற்றி, நானாவின் நிலையான தோழனாக மாறினார் பாவ் கல்சூரி; ஆனால் சில நாட்களில் பாவ் கல்சூரிக்கு பிற பணிகள் இருந்ததால் அவர் சோர்ந்து போனார்; நானா எப்பொழுதும் அவர் அருகாமையிலேயே இருந்தார். ஆனால் நானா வந்த சில நாட்களில், பாபாவிடம் நானாவின் பெயரை எப்போதேனும் குறிப்பிடாததற்காக பாவ் கல்சூரி வருந்தினார்!

1967 செப்டம்பர் 4 திங்களன்று, பாபாவின் இரத்த சர்க்கரை அளவைக் கண்டறிய இரத்தம் சேகரிக்கப்பட்டு, மாதிரிகள் அஹமதுநகர் ஆயுர்வேத மருத்துவமனையில் பணிபுரிந்த டாக்டர் தோம்ப்ரேவிற்கு (DR. THOMBRE) அனுப்பப்பட்டன. மூன்று நாட்களுக்குப் பிறகு கோஹெர், டாக்டர் கிரான்டிற்கு எழுதிய கடிதத்தில், 'உணவுக்குப் பின்' சர்க்கரை அளவு அதிகமாக இருந்ததாகவும், பாபாவின் சிறுநீர் அறிக்கையும் சீராக இல்லை என்றும் தெரிவித்தார். 5ஆம் தேதி முதல், பாபாவின் இரு கால்களிலும் வீக்கம் வெளிப்பட்டு, தொடர்ந்து மயக்கம் வரும் நிலையில் காணப்பட்டார். அவருக்கு அதிக அளவு சிறுநீர்ப்பெருக்கி (DIURETICS) கொடுக்கப்படவே வீக்கம் குறைந்தது. மயக்கத்திற்கு சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும் ராஸ்டினான் (RASTINON) மாத்திரைகளும் கொடுக்கப்பட்டன. செப்டம்பர் 8 மீண்டும் 26 தேதிகளில் இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. செப்டம்பர் 9 அன்று, டாக்டர் கிரான்டுடன் பாபாவின் அறிக்கை குறித்து விவாதிக்க டாக்டர் டான் பூனாவிற்குச் சென்று, அன்று மாலையே மெஹராஸாத்திற்குத் திரும்பி வந்தார்.

செப்டம்பர் 10 ஞாயிற்றுக்கிழமை, அவரது ஏகாந்தவாசப் பணியின் பாரத்தை மிதப்படுத்தும் விதத்தில் பொழுதுபோக்காக, கவாலி பாடகர் அப்துல் ரஹ்மான் கச்வாலா (ABDUL RAHMAN KACHWALA) மற்றும் ஐந்து இசைக்கலைஞர்கள் மும்பையிலிருந்து மெஹராஸாத்திற்கு காலை 11:30 மணிக்கு அழைக்கப்பட்டனர். கச்வாலா ஒரு பெரிய, திடகாத்திரமான மனிதர், ஆனால் அவரது குரல் மிகவும் மெல்லியதாக இருந்தது; மேலும் அவரது கஸல் தேர்வுகளையும், அவர் பாடிய விதத்தையும் பாபா விரும்பினார். அவர் நிகழ்ச்சியைத் தொடங்கி 2:00 மணி வரை, மீண்டும் மதியம் 2:30 முதல் மாலை 4:00 மணி வரையும் தொடர்ந்து நிகழ்த்தினார்.

பாபாவின் மகிழ்ச்சியை கண்டு, கச்வாலா இடைவிடாது பாடி இறுதியில் மிகவும் சோர்வடைந்தார். அவர் பாபாவிடம், "நான் களைத்துப்போய் விட்டேன், இனி என்னால் பாட முடியாது" என்று கெஞ்சினார். ஆனால் பாபா அவரிடம் மேலும் ஒரு கஸல் பாடுமாறு கேட்டுக்கொண்டார். கச்வாலா, அவரால் இயன்ற வரை, மீண்டும் மீண்டும் பாட பாபா அனுமதித்த முதல் கவாலி பாடகர் ஆவார்.

வெகுமதியாக, பாபா தனது கைக்குட்டைகளில் ஒன்றை அவருக்கு வழங்கினார், மேலும் கவாலி பாடகர் மற்றும் இசைக்கலைஞர்கள் அவரது கையைத் தொட்டு முத்தமிடவும் அனுமதித்தார்.

நீதிபதி பிரேம் கில்னானி மீண்டும் அஹமதுநகருக்கு இடம் மாற்றப்பட்டார். அவர் தனது மனைவி மற்றும் இரண்டு மகன்களுடன் பாபாவின் தரிசனத்திற்காக மெஹராஸாத்திற்கு வந்து, தரிசனத்திற்குப் பிறகு காரில் அஹமதுநகருக்குப் புறப்பட்டுச் சென்றனர். அந்த நேரத்தில் மானேக்கும் தனது இருசக்கர வாகனத்தில் மெஹராஸாத் வந்திருந்தார். சில முக்கியமான தகவல் அவர் மூலமாக அனுப்பப்பட இருந்ததால், கில்னானி குடும்பத்தினருக்கு முன்பாக அஹமதுநகரை சென்றடையுமாறு பாபா, மானேக்கிடம் அறிவுறுத்தினார். மானேக் தன்னால் இயன்றவரை வேகமாகச் சென்று, கில்னானி குடும்பத்தினருக்கு முன்பாகச் திரும்பிச் சென்றார். மானேக்கின் கீழ்ப்படிதல் பாபாவை மகிழ்ச்சியடையச் செய்தாலும், அடுத்த நாள், மணிக்கு 30 மைல்களுக்கு மேல் வேகத்தில் அவரது இருசக்கர வாகனத்தில் பயணிக்கக் கூடாது என்று கட்டளையிட்டார்!

மற்றுமொரு நாள், மானேக் கொட்டும் மழையில் ஒன்பது மைல்களைக் கடந்து மெஹராஸாத்திற்குச் சென்ற வேளையில் ஓரிடத்தில், அவரது இருசக்கர வாகனம் சேற்றில் சிக்கியது, மேலும் அவர் மெஹராஸாத்தை சென்றடைந்த போது, அவர் நனைந்து சேறும் சகதியுமாக இருந்தார். "**ஏன் இந்தக் கொட்டும் மழையில் வந்தீர்கள்?**" பாபா அவரிடம் வினவினார்.

"முக்கியமான அஞ்சல்கள் இருப்பதாக ஆதி கூறினார்" என்று மானேக் பதிலளித்தார்.

"**நீங்கள் உயிரைத் துறந்திருந்தால், யார் பொறுப்பு? உங்கள் பெற்றோருக்கு புத்தி இல்லையா? உங்களை மழையில் இங்கு அனுப்பிய ஆதிக்கும் புத்தி இல்லையா?**" எனக் கேட்டு, பாபா அவருடைய உடைகளை மாற்றுமாறு கூறினார், மேலும் மானேக்கிற்கு சூடான தேநீர் வழங்கப்பட்டு, மழை நின்ற பின்னர் அவர் அஹமதுநகருக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

பாபா, 'தி நத்திங் அண்ட் தி எவ்ரிதிங்' (THE NOTHING AND THE EVERYTHING) புத்தகத்திற்கான கருத்துக்களை பாவ் கல்சூரிக்குத் தொடர்ந்து, பெரும்பாலும் மண்டலி மண்டபத்தில், ஆனால் இரவில் அவரது அறையிலும் எடுத்துரைத்தார். இதில் விசித்திரம் என்னவெனில், சில வேளைகளில் பாபா ஒரு குறிப்பிட்ட 'கருத்தை' மீண்டும் மீண்டும் எடுத்துரைப்பதை வழக்கமாகக் கொண்டார். பிற நேரங்களில், ஏதேனும் தெளிவின்றி அல்லது மிகவும் சிக்கலானதாக இருக்கும் போது, பாபா கூறியதை அவரால் பின்பற்ற முடியாத பட்சத்தில், பாவ் கல்சூரி மேலும் விளக்கங்களைக் கேட்பதும் வழக்கம். அந்த நேரங்களில் பாபா, **"நான் கூறுவதைக் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள், குறுக்கிடாதீர்கள். அதை நான் உங்களுக்குப் பின்பு விளக்குகிறேன். அப்போது உங்களுக்கு அனைத்தும் தெளிவாகப் புலப்படும்"** என்று சைகையால் தெரிவித்தார்.

பாவ் கல்சூரிக்கு பாபா எடுத்துரைத்தது, எரச் மூலம் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தை பாபா முன்னிலையில் படித்து திருத்தம் செய்வது இரண்டும் செப்டம்பர் 10 முதல் முழுவதுமாக நிறுத்தப்பட்டன. பாபா இதற்கு மேலும் விஷயங்களை விளக்கவுமில்லை, பாவ் கல்சூரிக்குக் கருத்துக்களை தெளிவுபடுத்தும் பணி தொடரவுமில்லை. ஆறு ஆண்டுகளுக்குப் பின்பு, பாபா தனது பௌதீக உடலைக் கைவிட்ட பிறகு, பாவ் கல்சூரி இந்தப் புத்தகத்தை நிறைவு செய்யும் பணியில் ஈடுபட்டார். அவர் அதை எழுதத் தொடங்கியபோது, பாவ் கல்சூரிக்கு பாபா அனைத்து விஷயங்களையும் தெளிவுபடுத்தியதால், பாபா அவரது வாக்குறுதியை தனக்கே உரித்தான வழியில் நிறைவேற்றினார் என்பதைக் கண்டறிந்தார்.

1967 செப்டம்பர் 12 அன்று பாபாவின் உலகளாவிய பணி கடுமையான பின்னடைவை சந்தித்தது. அன்று இரவு கைக்கோபாத் வராண்டாவில் நடந்து சென்று கொண்டிருந்த போது, எறும்பு ஒன்று அவரைக் காலில் கடித்தது. கைக்கோபாத்தின் கண்பார்வை மோசமாக இருந்ததால், அவர் அதை தேள் என்று நினைத்து, காலை பலமாக அசைத்ததில் கீழே விழுந்து தொடை எலும்பு முறிந்தது. டான் அவரை பரிசோதிக்க அன்று இரவு மெஹராஸாத்திற்குச் சென்றார்; மறுநாள் காலை அவர் அவசர மருத்துவ ஊர்தி மூலம் பூத் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டு, பின்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிது மெஹராபாத்திலிருந்து வந்து அவரை கவனித்து உதவினார்.

மறுநாள் காலையில் பாபா மண்டலி மண்டபத்திற்கு வந்தபோது, கைக்கோபாத்தின் காயத்தைக் குறித்த செய்தி அவரை மிகுந்த

வருத்தத்திற்குள்ளாக்கியது. விபத்து காரணமாக சில பணிகளை நிறைவு செய்ய அவர் நிர்ணயித்த நேரத்தை தள்ளிப்போட வேண்டியது வரும் என்று பாபா சுட்டிக்காட்டினார். “**இப்போது நான் தனிமையில் பணிபுரிய வேண்டும், எனது (வெளிப்பாட்டிற்கான) முழுக் கால அட்டவணையும் நிலைகுலைந்துள்ளது**” என்று அவர் கூறினார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா அசாதாரணமான ஒன்றைச் செய்தார் - அவர் ஒரு குழந்தையைப் போல் அழத் தொடங்கினார்! அவர் இது குறித்து விளக்கியதாவது: “**நான் கைக்கோபாத்தை எண்ணி கண்கலங்கவில்லை, ஆனால் எனது பணியை நினைத்து வருந்துகிறேன். நான் என்ன பணிபுரிகிறேன் என்று கைக்கோபாத்திற்கு குறைந்தபட்ச சிந்தனையும் இல்லை! ஆனால் அவருடன் ஏகாந்தவாசத்தில் பணிபுரிவதன் மூலம், எனது உலகளாவிய பணி மிகவும் எளிதாக மேற்கொள்ளப்படுகிறது.**”

செப்டம்பர் 15ஆம் தேதி, கைக்கோபாத்திற்கு டாக்டர் மெல்வின் பிரீஸ்மேன் (Dr.MELVIN BRIESEMAN) அறுவை சிகிச்சை செய்து, அவரது தொடை எலும்பு மற்றும் இடுப்புப் பகுதியில் உலோகக்கம்பி செருகப்பட்டது. டாக்டர் டானும் அறுவை சிகிச்சையில் உடனிருந்தார். ஆதி அன்று மெஹராஸாத்திற்குச் சென்றபோது, பாபா ஒரு சுற்றறிக்கைக்கான அனைத்து விபரங்களையும் எடுத்துரைத்தார் (அக்டோபர் 1 அன்று வெளியிடப்பட்டது).

கைக்கோபாத் சென்ற பின்பு, பாபா தனது காலை நேர ஏகாந்தவாசப் பணியை நிறுத்தினார், ஆனால் அவரது பிற்பகல் பணி அடுத்த ஒன்றரை ஆண்டுகளுக்கு, 1969 ஜனவரி 30 வரை தொடர்ந்தது.

செப்டம்பர் 17 ஞாயிறு காலை 11.30 மணியளவில் ‘சோட்டா கவால்’ என்ற இணைப் பாடகர் தனது இசைக் கலைஞர்களுடன் பாபாவை மகிழ்விக்க மெஹராஸாத்திற்கு வந்தார். இருப்பினும், பாபா, கவாலிப் பாடகரின் பாடலையோ அல்லது அதன் தேர்வுகளையோ அதிகம் ரசிக்கவில்லை, மேலும் அவர் நிகழ்ச்சியின் நேரத்தைக் குறைத்து மதியம் 1:00 மணிக்கு நிறைவு செய்யுமாறுக் கூறி, குழுவை தேநீர் அருந்த அனுப்பினார். ஆனால் தேநீருக்குப் பிறகு, சோட்டா கவாலின் பாடும் திறன் மேம்படவே, பாபா நிகழ்ச்சியை ஒரு மணி நேரம் நீட்டித்தார். அன்று மதியம் 2:00 மணிக்கு அனைவரும் புறப்பட்டுச் சென்றனர். இந்த இசை நிகழ்ச்சி தனிப்பட்டதாக இருந்ததால், பாதிரி, ஆதி, டாக்டர் டான், சகன், வாமன், பகீரத் ஆகியோரைத் தவிர வெளியிலிருந்து வேறு எவரும் அழைக்கப்படவில்லை. நரிமனும் அன்று மும்பையிலிருந்து வந்திருந்தார், நானா கேர் நாக்பூருக்குத் திரும்பிச் சென்றார்.

அஹமதுநகரிலிருந்து மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்ட ஏழு தொழுநோயாளிகளின் கால்களைக் கழுவுவதற்காக, ஒரு நாள் காலையில் மூன்று மணி நேரம் மட்டுமே ஏகாந்தவாசத்திலிருந்து வெளியே வரப்போவதாக பாபா அறிவித்தார். இந்தப் பணிக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கட்டளையிடப்பட்டவர்கள் மட்டுமே அன்றைய தினம் மெஹராஸாத்தில் இருக்க அனுமதிக்கப்பட்டனர்.

ஆம்ஸ்டர்டாம் (AMSTERDAM) நகரைச் சேர்ந்த திரைப்படத் தயாரிப்பாளரான லூயிஸ் வான் காஸ்டெரென், (LOUIS VAN GASTEREN, **45**) என்பவருக்கு ஒரு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. இர்வின் லக் மூலமாக பாபாவைப் பற்றி முதன்முதலில் வான் காஸ்டெரென் தெரிந்துகொண்டார். இர்வின் நியூயார்க் நகரில் ஒரு வாடகைக் காரை ஓட்டிக்கொண்டிருந்தபோது, அவர் வான் காஸ்டெரெனை ஒருமுறை விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். காரின் டாஷ்போர்டில் (DASHBOARD) ஒரு சிறிய 'பாபாவின் புகைப்படம்' பொருத்தப்பட்டிருந்ததை லூயிஸ் கவனித்தார்.

**1965** ஜூன் மாதத்தில், ராபர்ட் ட்ரே஼பஸ், கேம்பிரிட்ஜில் ஒரு நண்பர் மூலமாக வான் காஸ்டெரெனை சந்தித்தார். ஒரு வருடத்திற்குப் பின்னர், **1966** செப்டம்பரில் ட்ரே஼பஸ், ஆம்ஸ்டர்டாமில் வான் காஸ்டெரெனுடன் ஒரு வாரம் தங்க நேர்ந்தது; அந்த விஜயத்தின் போது அவர் பாபாவைப் பற்றி வான் காஸ்டெரெனிடம் விரிவாகக் கூறினார். திரைப்பட தயாரிப்பாளரும் அவரது மனைவியும் ஒரு மாதத்திற்கு முன்னதாக கலி஼போர்னியா மாநிலத்தில் ரிக் சேப்மெனின் விருந்தினர்களாக இருந்தனர். 'நேமா ஏவியோனா ஸா ஸாக்ரெப்' (NEMA AVIONA ZA ZAGREB- அதாவது, ஸாக்ரெப் நகருக்குச் செல்ல விமானம் இல்லை) என்ற தலைப்பில் டச்சு மொழியில் **35** மிமீ வண்ணக் காணொளித் திரைப்படத்தை உருவாக்கும் தனது திட்டத்தைப் பற்றி வான் காஸ்டெரென், ட்ரே஼பஸிடம் கூறினார். மெஹர் பாபாவை அதில் இணைக்க விரும்புவதாகவும் ஆனால் அதற்குத் தேவையான நிதி இல்லை என்றும் வான் காஸ்டெரென் கூறினார்.

பாப் ட்ரே஼பஸ்ஸிற்கு எரச் எழுதிய கடிதத்தின் மூலமாக, வான் காஸ்டெரெனிடம், அவரது யோசனையைப் பற்றி நேரடியாக ஆதிக்குக் கடிதம் எழுதுமாறு பாபா அறிவுறுத்தினார். வான் காஸ்டெரென், பாபாவின் அனுமதியையும், அவரைக் காணொளி திரைப்படம் எடுக்க அழைப்பு விடுக்கவும் கோரி, 'மெஹர் பாபா பற்றிய உண்மையை, திரைப்பட ஊடகங்கள் மூலம் உலகிற்குத் தெரிவிக்க விரும்புவதாக' குறிப்பிட்டிருந்தார். பல கடிதப்

பரிமாற்றங்களுக்குப் பிறகு, 'நவம்பர் மாதம் அவர் இந்தியா வரலாம்' என்று பாபா முடிவு செய்தார்.

அதன் பின்னர் அவர் தேதியை மாற்றி, செப்டம்பர் 20 அன்று, பாபா ஏகாந்தவாசத்திலிருந்து வெளியே வரும் மூன்று மணி நேரத்தில், வான் காஸ்டெரென் மெஹராஸாத் வந்து, பாபா தொழுநோயாளிகளுடன் பணிபுரிவதை திரைப்படமாக்க வேண்டும் என்றார்.


இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி, 1967 செப்டம்பர் 17 அன்று லூயிஸ் வான் காஸ்டெரென் தனது உதவியாளர்கள் (அவருடன் ஆம்ஸ்டர்டாம் நகரில் 'ஸ்பெக்ட்ரம் பிலிம்ஸில்' - 'SPECTRUM FILMS' - பணிபுரிந்தவர்கள்) - ஒளிப்பதிவாளர் ஜான் டி பாண்ட் (JAN DE BONT, 24) மற்றும் ஒலிப்பதிவாளர் பீட்டர் ப்ரூக்மேன் (PETER BRUGMAN, 21) இருவருடன் மும்பைக்கு வந்தார். பூனாவில் ஜால்பாய் அவர்களை சந்தித்து, செப்டம்பர் 19, செவ்வாய்கிழமை காலை 9:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார்; ஆதி, ஸரோஷ் ஆகியோரும் உடன் இருந்தனர். திரைப்படத் தயாரிப்பாளருக்கு தனது நேரத்தில் ஐந்து நிமிடங்களை மட்டுமே வழங்கப்போவதாக பாபா கூறியிருந்தார், ஆனால், பாபாவுடனான வான் காஸ்டெரெனின் சந்திப்பு 40 நிமிடங்கள் நீடித்தது.



மெஹராஸாத் (MEHERAZAD), 20 செப்டம்பர் (SEPTEMBER) 1967
இடது புறம்: ஜால்பாய், எரச் - வலது புறம்: எரச், ஜால்பாய், பெண்டு, சகன்
(LEFT:JALBHAI, ERUCH – RIGHT: ERUCH, JALBHAI, PENDU, CHAGAN)



**லூயிஸ் வான் காஸ்டெரென், மெஹராஸாத், 1967**
(LOUIS VAN GASTEREN, MEHERAZAD, 1967)



**ஏகாந்தவாச மலை, மெஹராஸாத், 1967**
(SECLUSION HILL, MEHERAZAD, 1967)

எல்.எஸ்.டி. (LSD) தாக்கத்தின் கீழ், ஜன்னலுக்கு வெளியே குதித்து உயிரைத்துறந்த ஓர் இளம் அமெரிக்கன் பற்றிய செய்தியைக் கேள்விப்பட்ட வான் காஸ்டெரென் கலக்கமடைந்தார். அந்த இளைஞனின் பெற்றோரை சந்தித்து, அவர் நேர்காணலை நிகழ்த்தியதோடு, கடந்த ஆகஸ்ட் மாதம் நியூயார்க் நகரின் மில்ப்ரூக்கில் (MILBROOK, NEW YORK) எல்.எஸ்.டி. ஆதரவாளர் திமோதி லியரியுடன் (TIMOTHY LEARY) உரையாடி, அதை காணொளிப் படமாக்கினார். எல்.எஸ்.டியின் ஆபத்துகள் குறித்த பாபாவின் எச்சரிக்கை லியரிக்கு தெரிவிக்கப்பட்டபோதும், லியரி தொடர்ந்து போதைமருந்தை உட்கொண்டார். மெஹர் பாபா, போதைப்பொருள் உபயோகத்திற்கு எதிராக எச்சரித்ததற்கு, அவரது எதிர்மறையான எதிர்வினை பற்றி லியரியிடம் கேட்கப்பட்டபோது, அவர் வான் காஸ்டெரெனிடம் கூறினார், "பாபா கடவுள், நானும் எப்படிக் கடவுளாக முடியும் எனக் கற்றுக்கொள்கிறேன். எனது தெய்வீகத்தன்மையைக் கண்டறியும் முறை பாபாவின் முறைகளிலிருந்து சற்று வித்தியாசமானது - ஆனால் அவர் எனக்குக் கூறுகிறார்: 'கவலைப்படாதீர்கள், திமோதி, மகிழ்ச்சியாக இருங்கள்.'"

பாபா, வான் காஸ்டெரெனிடம், எல்.எஸ்.டி. மரிஜுவானா, பிற போதைப்பொருட்கள் மற்றும் அவர் தயாரிக்கும் முழு நீளத் திரைப்படம் குறித்துக் கேட்டார். ஒரு கட்டத்தில், பாபா இவ்வாறு விளக்கினார்: **"ஆயிரக்கணக்கான மக்கள் சூழ்ந்திருந்தாலும் நான் தனியாக இருக்கிறேன், ஏனெனில் அவர்கள் அனைவரிடமும் நான், என்னை மட்டுமே காண்கிறேன். உங்களைப் பொறுத்தவரை, நீங்கள் இமயமலையில் இருந்தாலும், நீங்கள் அங்கே தனியாக இருக்க மாட்டீர்கள், ஏனெனில் ஆயிரக்கணக்கான எண்ணங்களும் ஆசைகளும் உங்கள் நிலையான நண்பர்களாக இருக்கும்."**

பாபா மேலும் கூறினார்: **"நான் மனிதகுலத்திற்காக துன்பப்படுகிறேன், நான் துன்பங்களை அனுபவிக்கிறேன், நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, மனிதகுலத்தை துன்பத்திலிருந்து விடுவிப்பேன்."**

வான் காஸ்டெரென், பாபாவின் தரிசனத்திற்கான அவரது மனைவியின் ஆர்வத்தைப் பற்றி கூறினார், ஆனால் அவர் உடல்நிலை சீரில்லாமல் இருந்ததால் அவரால் வர இயலவில்லை. பாபா, வான் காஸ்டெரெனிடம், **"நீங்கள் வந்தபோது என்னை உங்களுக்குத் தெரியாது. இப்போது நீங்கள் என் அரவணைப்பைப் பெற்று, என்னிடம் நெருங்கி வந்துள்ளீர்கள். நான் யார் என்பது உங்களுக்குப் படிப்படியாகத் தெரியும்"** என்று உறுதியளித்தார்.

பாபாவை சந்தித்ததில் வான் காஸ்டெரென் மிகவும் மனம் நெகிழ்ந்துபோனார், பாபாவும் அவரைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

லூயிஸ் வான் காஸ்டெரென் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார், "பாபாவின் புன்னகையில் எல்லாமே அடங்கியுள்ளது! அதிலிருந்து மகிழ்ச்சியின் நீரோட்டம் பாய்ந்தோடுகிறது. நான் பாபாவின் சில நூறு அடிகள் மட்டுமே திரைப்படம் எடுக்க நினைத்தேன், ஆனால் இப்போது என்னால் முடிந்த அளவு காட்சிகளை எடுக்கத் தீர்மானித்துள்ளேன். இந்தப் படத்தின் மூலம் உலகம் பாபாவை அறியும்."

அவர்கள் தங்கயிருந்த விலூ வில்லாவில் சிற்றுண்டி உண்ட பின்பு, வான் காஸ்டெரெனும் அவரது குழுவினரும் ஸரோஷுடன் மெஹராபாத் படப்பிடிப்பிற்காகச் சென்றனர், மேலும் அவர்கள் சுற்றுப்புற கிராமங்களை காணொளி திரைப்படம் எடுக்க அன்று மாலை மெஹராஸாத் திரும்பி வந்தனர். எரச், ஃபிரான்சிஸ் இருவரும் லூயிஸுடன் பாபாவைப் பற்றி சிறிது நேரம் உரையாடினர். உலகில் வாழும் வேறு எந்த ஆளுமையும், அவர் எவ்வளவுதான் பெரியவராக இருந்தாலும், பாபாவுடன் ஒப்பிட முடியாது என்று ஃபிரான்சிஸ் விளக்கியதை வான் காஸ்டெரென் புரிந்து கொண்டதாகத் தோன்றியது, மேலும் அவர் பாபாவை நோக்கி வெகுவாக ஈர்க்கப்பட்டார்.

அந்தி வேளையில், சூரிய அஸ்தமனத்தைத் திரைப்படமாக்குவதற்காக வான் காஸ்டெரென் தனது குழுவினருடன் ஏகாந்தவாச மலைக்குச் (MEHERAZAD SECLUSION HILL) சென்றார். 'இந்த இடத்தின் நிசப்தத்தை' பத்து நிமிடங்களுக்குப் பதிவு செய்ய, உள்ளூர் அரைவை மில் இயந்திரங்களை சிறிது நேரம் நிறுத்தக் கூறுமாறு அவர் எரச்சிடம் கேட்டுக்கொண்டார். பின்னர் அவர்கள் விலூ வில்லாவிற்குத் திரும்பி வந்தனர்.

1967 செப்டம்பர் 20 புதன் அன்று, சகன், ஆதி, ருஸ்தம் காக்கா, மானேக், பகீரத், ரங்கோலே ஆகியோர் தொழுநோயாளிகளின் கால்களைக் கழுவும் நிகழ்ச்சிக்காக, ஏழு தொழுநோயாளிகளை மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தனர். கல்சூரி குடும்பத்தினர், ஜால்பாய், பெஹராம், ஜெஹாங்கு, கில்னானி குடும்பத்தினர், ஸரோஷ் ஆகியோரும் உடனிருந்தனர். ஜகத் முராரி, ஜால்பாய் மூலமாக 35 மிமீ கருப்பு-வெள்ளையில் இந்த நிகழ்வை காணொளி படமாக்க அனுமதி கோரினார், பாபா அவரது கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்தார்.

முராரி தனது படக்குழுவினர் மற்றும் ஒளிப்பதிவு பேராசிரியரான சி.வி. கோபாலுடன் (C.V.GOPAL) வந்தபோது, பாபா, கோபாலின் வருகையால் மகிழ்ச்சியடைந்து அவரிடம், **"உங்கள் மனைவி நீங்கள் என்னை நேசிப்பதைவிட அதிகமாக என்னை நேசிக்கிறார்"** என்று கூறி கேலி செய்தார்.

நகைச்சுவை கலந்த தொனியில் கோபால் பதிலளித்தார், "நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன், பாபா, என் மனைவி, என்னை விட அதிகமாக உங்களை நேசிக்க முடியாது!"

மெஹராஸாத் திரும்பிய பிறகு முதல் முறையாக, பாபா தனது ஏகாந்தவாசத்திலிருந்து வெளியே வந்து, ஏழு தொழுநோயாளிகளின் கால்களைக் கழுவுவதற்கு ஆயத்தமானார். நிகழ்ச்சியைத் தொடங்கும் முன்பு பாபா இவ்வாறு கருத்துரைத்தார், "**தொழுநோயாளிகள் அழகற்ற கூண்டுகளில் வாழும் அழகான ஆத்மாக்கள். தொழுநோயாளிகளை நான் தலைவணங்குவது எனக்கு நானே தலைவணங்குவதற்கு நிகராகும். நான் அவர்களுக்குள் இருக்கிறேன், நானே எல்லாமும் எல்லோரும். இங்கே நீங்கள் எவரும் தொழுநோயாளிகளை சுதந்திரமாக தொடக்கூடாது; என்னுடன் அது வித்தியாசமானது.**"

பாபா நிகழ்ச்சியைத் தொடங்கும் போது, முராரியும் வான் காஸ்டெரெனும் தங்கள் திரைப்பட காட்சிகளை வரிசைப்படுத்தி சீரமைப்பதில் மும்முரமாக இருந்தனர். இரண்டு குழுவினருக்கும் இடையே முறுகல்நிலை ஏற்பட்ட போது, என்ன பிரச்சினை என்று பார்க்குமாறு பாபா, எரச்சிடம் சுட்டிக்காட்டினார்.

வான் காஸ்டெரென் எதிர்ப்புத் தெரிவித்தார், "இது எனது படப்பிடிப்புக்கான நாள்! அவர் எனது காட்சிகளை திரைப்படம் எடுக்கிறார்!"

பாபா குறுக்கிட்டு, "**இது அவருடைய நாளோ, உங்கள் நாளோ அல்ல, என்னுடைய நாள்!**" முராரியைப் பார்த்து கண் சைகைகள் மூலமாக, வான் காஸ்டெரெனின் வழியில் அவரை அனுமதிக்குமாறு தெரிவித்தார்.

ஏழு தொழுநோயாளிகளின் கால்களைக் கழுவி தலைவணங்கிய பின்பு, பாபா ஒவ்வொருவருக்கும் தனது அன்பின் அடையாளமாக ஒரு போர்வையை வழங்கினார். அவர்களுக்கு தேநீர், இனிப்புகள் மற்றும் மதிய உணவும் வழங்கப்பட்டது.

ஏழு தொழுநோயாளிகளுடன் பாபா தனது பணியை நிறைவு செய்த பிறகு, வான் காஸ்டெரென் மேலும் சில திரைப்பட காட்சிகளுக்காக மெஹராஸாத் பூந்தோட்டத்தில் அமருமாறு கேட்டுக் கொண்டார். பாபா அதற்கு இணக்கம் தெரிவிக்கவே, மெஹராஸாத்தின் பின்னால் உலர்ந்த, நீரோட்டமில்லாத ஓடைப்பகுதி அருகே காணொளி திரைப்படமாக்கப்பட்டது. பாபாவுக்காக ஒரு நாற்காலி இரண்டு கருவேல மரங்களின் நிழலின் கீழ் வைக்கப்பட்டிருந்தது, அதன் பின்னணியில் ஏகாந்தவாச மலை அற்புதமாகத் தோற்றமளித்தது. திரைப்படம் எடுக்கும் வேளையில் பாபாவின் சௌகரியம் மற்றும் விருப்பங்களை வான் காஸ்டெரென் கவனிக்கத் தவறவில்லை.

ஒரு கட்டத்தில், பாபா அமருவதற்கு இசைந்தாற்போல் அவரது நிலைப்பாட்டை மாற்ற வேண்டியிருந்தபோது, வான் காஸ்டெரென் தனது

கைகளை அசைத்து அவருக்கு உறுதியளித்தார். "நாம் உங்கள் விருப்பத்திற்கு இணங்க அனைத்தையும் செய்வோம் பாபா, எந்தப் பிரச்சினையும் இராது, கவலைப்படாதீர்கள்."

கண்களில் ஒரு மின்னல் ஒளியுடன் பாபா கூறினார், **"என்னால் கவலைப்பட முடியாது என்பதுதான் எனது ஒரே கவலை!"**

லூயிஸ் வான் காஸ்டெரென், பாபாவிற்கு காகிதப்பூ கிளை ஒன்றைக் கையில் கொடுத்து, பின்னர் அவரது கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார். திறந்த வெளியில் கிராமப்புற சூழலில் அமர்ந்திருந்த நேரத்தில், பல வருடங்களாக மண்டலி அவரைப் பார்த்ததை விட மிகப்பொலிவான தோற்றத்துடன் காணப்பட்டார். அவரது புன்னகை அற்புதமாக இருந்தது! பாபாவுடன் பின்வரும் உரையாடல் நிகழ்ந்தது.

வான் காஸ்டெரென் வினவினார், "பாபா, நீங்கள் யார்?"

பாபா பதிலளித்தார்: **நான் மனித உருவில் வருகை தந்த கடவுள். கடவுளைக் குறித்த எனது அனுபவம் இடைவேளையின்றி தொடர்ச்சியாக உள்ளது. ஆனால் தங்களை கடவுளின் அவதாரம் என்று கூறிக்கொள்பவர்களும் இங்கே இருக்கிறார்கள், அவர்கள் கடவுளின் உணர்வை அடையப் பெறாத போதும், அதை அனுபவிப்பதாகக் கூறுகிறார்கள். அவர்கள் பாசாங்குத்தனம் படைத்தவர்கள்! அவர்களை விட, கடவுள் உணர்வை அடையப் பெறாதவர்களும், தம்மைக் கடவுள் என்று சொல்லாதவர்களும் சிறந்தவர்கள்.**

**இந்தியாவில், காலங்காலமாக கஞ்சா, மரிஜுவானா, ஹாஷிஷ் போன்ற போதைப்பொருட்களைப் பயன்படுத்துபவர்கள் உள்ளனர். இந்த போதைமருந்துகளை உட்கொள்ளும்போது அவர்கள் உற்சாகமாக உணர்கிறார்கள்; அவர்கள் வண்ணங்களையும் பல்வேறு காட்சிகளையும் காண்கிறார்கள். அவர்கள் தங்கள் பிரமைகள் மூலமாக இறுதி இலக்கை அடைந்துவிட்டதாக உணர்கிறார்கள். இது அவர்களை இறுதியில் பைத்தியக்காரத்தனத்தை நோக்கித் தள்ளும் வேளையில், அவர்கள் உண்மையில் பைத்தியமாகிவிடுகிறார்கள். அந்தப் பொய்யும் போலியுமான அனுபவம் தொடர்ச்சியானது அல்ல; அவர்களின் அனுபவத்தில் ஒரு தடங்கலும், இடைவெளியும் ஏற்படுகிறது. உண்மையான இறை அனுபவம் ஒன்றுதான் தொடர்ச்சியாக இருப்பது.**

"ஒருவர் தன்னைக் கடவுளாக எப்படிக் கண்டுகொள்ள முடியும்?" என்று வான் காஸ்டெரென் கேட்டார்.

கடவுளை நேசிப்பதே வாழ்க்கையின் குறிக்கோள், கடவுளுடன் ஐக்கியமாவதே வாழ்க்கையின் இறுதி இலக்கு. மேலும் கடவுளை உணர, ஒருவரிடம் அன்பு இருந்தாக வேண்டும்.

அன்பு இரண்டு வகையானது, ஒன்று உலக அன்பு - அதாவது இந்த உலக அன்பின் மூலம் ஒருவர் தனது மனைவி, குழந்தைகள் மற்றும் உலகத்தை நேசிக்கிறார்.

இரண்டாவது வகையான அன்பு தெய்வீக அன்பு; இது முழு உலகத்தையும் துறப்பதன் மூலம் (மட்டுமே) அடையப்பெற முடியும். ஆனால் அதற்காக நீங்கள் உங்கள் குடும்பம், குழந்தைகள் மற்றும் உங்கள் உலகப் பொறுப்புகளை விட்டுவிட வேண்டும் என்று அர்த்தமாகாது. வெளியளவில் துறப்பது அல்ல, ஆனால் மனதளவில் துறப்பது ஒன்றுதான் முக்கியத்துவம் வாய்ந்தது, அதை பரிபூரண குருநாதரின் அருளால் (மட்டுமே) அடையப்பெற முடியும். உங்களால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறதா?

மூன்று வகையான நம்பிக்கைகள் உள்ளன: முதல் வகை அறிவார்ந்த நம்பிக்கை என்று அழைக்கப்படுகிறது - புத்தித்திறன் மூலமாக அடையப்பெறும் நம்பிக்கை. அதாவது ஒரு திட்டவட்டமான புரிதல் மூலம், வாசிப்பதன் மூலம், கடவுள் உளதாயிருக்கிறார் என்பதை நம்புவது.

இரண்டாவது வகை நம்பிக்கை, பார்வை மூலமாக அடையப்பெறுவது. மேல்நிலை ஆன்மீகத் தளங்களில் பயணிப்பவர் எங்கும் எதிலும் கடவுளைக் காண்கிறார். புத்தித்திறன் மூலமாக உறுதியாகும் நம்பிக்கையை விட, பார்வையின் மூலம் அடையப்பெறும் நம்பிக்கை பெரியது.

மூன்றாவது வகையைச் சார்ந்த நம்பிக்கை, கடவுளுடன் ஐக்கியமாவது. அதுவே உண்மையான திடநம்பிக்கை, கடவுளை உணர்வுபூர்வமாக அறிவது. கடவுளை உணர்ந்தவர், அவர் ஒருவரே உளதாயிருப்பதை அறிவார். அவர் எல்லையற்ற அறிவு, சக்தி மற்றும் பேரின்பத்தின் உண்மையான மற்றும் தொடர்ச்சியான அனுபவத்தைக் கொண்டிருக்கிறார்.

இந்த உண்மையான இறை-உணர்தல் அனுபவத்திற்கும், போதைப்பொருள் உட்கொள்வதன் மூலம் பெறப்பட்ட தவறான அனுபவங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில், முந்தையது, இடைவேளையின்றி தொடர்ச்சியான அனுபவமாகும், அதேசமயம் போதைப்பொருள் மூலம் பெறப்பட்ட அனுபவங்கள் தொடர்ச்சியாக

**இருப்பதில்லை. போதைப்பொருள் அனுபவங்கள் தவறானவை மட்டுமின்றி உடல், மனம் மற்றும் ஆன்மீக ரீதியில் தீங்கு விளைவிப்பவை.**

**நீங்கள் இருப்பதால் கடவுளும், கடவுள் இருப்பதால் நீங்களும் இருக்கிறீர்கள். ஆனால் அந்த அனுபவம் லட்சத்தில் ஒருவருக்கு மட்டுமே இருக்கும்.**

ஜெகத் முராரி இடையே குறுக்கிட்டு, "(மனிதகுலத்திற்கு) உங்கள் செய்தி என்ன?" என வினவினார்.

**"மனிதகுலத்திற்கான எனது செய்தி என்னவெனில், வாழ்க்கையின் இறுதி இலக்கு இறை உணர்வை எய்துதல். இதர அனைத்தும் ஒரு கனவு."**

"ஒருவன் எப்படி இறைவனுடன் ஐக்கியமாக முடியும்?"

**"'அன்பின் மூலம்' நான் விளக்கினேன். அந்த அன்பு, பரிபூரண குருநாதர்களின் அருளால் அடையப்பெறும் கடவுளின் அன்பளிப்பு."**

அப்போது வான் காஸ்டெரென் வினவினார்: "திரைப்படம் பார்க்கும் அனுபவமும் ஒரு வகையான தியானம் என்று நினைக்கிறீர்களா?"

பாபாவின் சைகைகளை விளக்கிக் கொண்டிருந்த எரச், அவருக்காக இதை எடுத்துரைத்தார்:

**அதைப் பற்றி பாபா உங்களுக்கு விளக்குவார். முதலாவதாக, ஒரு முக்கியமான விஷயம் என்னவெனில், இது எனது மௌனத்தின் 43ஆவது ஆண்டு; இடைவேளையின்றி தொடர்ச்சியாக நிகழும் ஒன்று. ஏறக்குறைய ஒவ்வோர் ஆண்டும், 'அடுத்த ஆண்டு நான் எனது மௌனத்தைக் கலைப்பேன்' என்று என்னைப் பின்பற்றும் அன்பர்களிடம் சொல்கிறேன். இருந்தும், நான் தொடர்ந்து மௌனமாகவே இருக்கிறேன்.**

**இது, ஒரு மருத்துவர் தனது நோயாளியை குணப்படுத்த, ஒரு மாதம் ஆகும் எனத் தெரிந்திருந்தும், நோயாளியைப் பார்த்ததும், அவருக்கு ஆறுதல் கூறும் விதத்தில், 'கவலைப்படாதீர்கள், ஏழு நாட்களில் நீங்கள் சரியாகிவிடுவீர்கள்' என்று கூறுவது போல. ஒவ்வொரு வாரமும் மருத்துவர் இதையே மீண்டும் செய்கிறார், சரியான நேரத்தில் நோயாளி குணமடைந்துவிடுகிறார்.**

**எனவே என் அன்பர்களுக்கும், உலகிற்கும் நான் அடுத்த வருடம் அல்லது அடுத்த வருடத்திற்குப் பிறகு பேசுவேன் என்று சொல்கிறேன், இருந்தும் நான் எனது மௌனத்தைத் தொடர்கிறேன். ஆனால் இப்போது, நிச்சயமாக நான், மிக விரைவில் எனது மௌனத்தைக் கலைக்கப் போகிறேன், ஏனெனில் 'பூரணமாக குணமடையும்' நேரம் வந்துவிட்டது. மேலும் நோயாளிகளும் பொறுமையிழந்து வருகின்றனர்.**

**இப்போது திரைப்படம் பார்ப்பவர்களைப் பற்றி: அவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீக விஷயங்களைப் பற்றி உலகிற்கு எடுத்துச் சொல்ல, திரைப்பட உலகம் அற்புதமான வாய்ப்பைக் கொண்டுள்ளது. திரைப்படங்களைப் பார்ப்பவர்கள் தங்களை மறந்து மனமார, இதயபூர்வமாக அவற்றில் ஒன்றிவிடுகிறார்கள். அவர்கள் தங்கள் கவலைகளையும் உலகையும் மறந்து விடுகிறார்கள்.**

**தன்னை மறந்து இறைவனை உணர்வதே ஒருவருக்கு மிக முக்கியமான விஷயம்.**

பாபாவிடமிருந்து ஒரு செய்தி வான் காஸ்டெரெனுக்கு, குறிப்பாக எரச்சால் வாசிக்கப்பட்டது:

**நான் நித்தியமாக பேசுகிறேன். ஆன்மாவிற்குள் ஆழமாக கேட்கும் குரல் எனது குரல், அதுவே உத்வேகம், உள்ளுணர்வு, வழிகாட்டுதலின் குரல். இந்தக் குரலுக்கு ஏற்புடையவர்கள் மூலமாக, நான் பேசுகிறேன்.**

**எனது வெளியளவிலான மௌனம் ஆன்மீகப் பயிற்சி அல்ல; இது உலக நன்மைக்காக மட்டுமே மேற்கொள்ளப்பட்டு பராமரிக்கப்படுகிறது. கடவுள், அவரது அளவிறுதியற்ற மௌனத்தை அனுபவிப்பவர்களைத் தவிர, எப்பொழுதும் கவனிக்கப்படாமலும், கேட்கப்படாமலும் மௌனமாகப் பணிபுரிகிறார்.**

**லூயிஸ், உங்களுக்கு எனது செய்தி என்னவெனில், என்னைக் காணொளித் திரைப்படம் எடுக்கும் நல் அதிர்ஷ்டம் உங்களுக்குக் கிடைத்தது; இந்த வாய்ப்பின் விளைவு மிகப்பெரியது. எனது உலகளாவிய பணியில் நீங்கள் எனக்கு உதவியுள்ளீர்கள்.**

பாபா மகிழ்ச்சியாகவும், தொடர்ந்து விளக்கங்களை வழங்கும் மனநிலையிலும் இருந்தார். அவர் கண்களிலிருந்து அன்பு ஒளிர்ந்தது, அவரது வெளிப்பாட்டில் ஒரு தனித்தன்மை வாய்ந்த பிரகாசம் தென்பட்டது. காணொளி படப்பிடிப்பு நிறைவடைந்ததும், பாபா பிரதான இல்லத்திற்குத் திரும்பிச் சென்றார்; வான் காஸ்டெரென் அவரது உதவியாளர்களுடன் புறப்படத் தயாரானார்; அதற்கு முன்பு, பாபா அவரிடம், **"ஒரு நாள் நான் யார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளும் அந்த நாள் வரை, என்னை மேலும் மேலும் நேசியுங்கள்"** என்று கூறினார்.

பிற்பகலில், பாபா ஏழு தொழுநோயாளிகளையும் மீண்டும் ஒன்று திரட்டி, புதிய வெள்ளைத் துண்டு துணிகளையும், போர்வைகளையும் வழங்கினார். பாபா அவர்களைத் தலைவணங்கிய காட்சியை முராரி குழுவினர் காணொளிப் படமாக்கினர். தொழுநோயாளிகளுடன் பாபா பணிபுரிந்தது இதுவே கடைசி

முறையாகும். அதைத் தொடர்ந்து, பலத்த மழை பொழியத் தொடங்கியது. திரைப்படக் குழுவினர் தங்கள் பணியை முடிக்கும் வரை, பாபா மழையைத் தடுத்து நிறுத்தியதாக அங்கிருந்த அனைவருக்கும் தோன்றியது.

அடுத்த நாள் காலை, அஹமதுநகரிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, ஜகத் முராரி, வான் காஸ்டெரென் ஆகியோர் அஹமதுநகர் மெஹர் பாபா மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர், அங்கு பாபாவின் அறிவுறுத்தலின்படி, முராரியின் குழுவினர் மேலதிகமான காணொளிப் படப்பிடிப்பை மேற்கொண்டனர்.

மெஹராஸாத்தில் பாபா, வான் காஸ்டெரெனின் குழுவினரின் திறமையைப் பாராட்டினார், "**லூயிஸ் மற்றும் அவரது உதவியாளர்கள் அனைவரும் அவர்களின் பணியை நன்கு அறிந்தவர்கள். லூயிஸ் ஒரு கலைஞர் என்பதால் மட்டுமல்ல, நல்லுள்ளம் படைத்தவர் என்பதாலும் நான் அவருடன் மிக்க மகிழ்ச்சியாக உணர்ந்தேன். அவரும், அவரது உதவியாளர்களும் என் அன்பால் வெகுவாக ஈர்க்கப்பட்டனர். லூயிஸ் அவரது கலையில் ஒரு மேதை என்பதாலும், அவர் என் மீது கொண்ட அன்பின் காரணமாகவும், நான் 100 சதவிகிதம் அவருடன் ஒத்துழைத்ததால், அவர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது.**"

கருவேல மரங்களுக்குக் கீழே நடந்த காணொளி படப்பிடிப்பைப் பற்றிக் குறிப்பிடுகையில், பாபா மேலும் கூறினார்: "**எனக்கு இது (இயேசு செய்ததைப் போல) மீண்டும் மலையில் ஒரு பிரசங்கம்** (SERMON ON THE MOUNT) **செய்வது போல் இருந்தது. லூயிஸ் இங்கும், மெஹராபாத்திலும் கழித்த இரண்டு நாட்களில், அவர் என்னைப் பற்றி கொஞ்சம் புரிந்து கொண்டதை என்னால் காண முடிந்தது. மேலும் அவர் என் மீதான அன்பை பேச்சிலும் செயலிலும் வெளிப்படுத்தினார். அவர் காணொளி திரைப்படத்தை உலகம் முழுவதும் காண்பிக்க தன்னால் முடிந்த அனைத்தையும் முயற்சிப்பார் என்று எனக்குத் தெரியும். அவர் முழு மனதுடன் அதில் பணிபுரிந்தார், நானும் எனது முழு மனதுடன் ஒத்துழைத்தேன். எனவே, இது நற்பலனை நல்க வேண்டும்.**"

பல ஆண்டுகளுக்குப் பிறகு, வான் காஸ்டெரென் இவ்வாறு எழுதினார்:

மெஹர் பாபாவுடனான (இந்த முதல்) சந்திப்பின் போது, நான் பாபாவை நீண்ட நாட்களாக அறிந்திருப்பது போல் உணர்ந்தேன். நான் என் அனுபவத்தில் அவரை எனது சகோதரனாகப் பார்த்தேன்; தனிமையின் ஆழமான உணர்வை என்னுடன் பகிர்ந்து கொண்டது போலவும் உணர்ந்தேன். உண்மையில், நான் அவருடன் பேசாமல், ஒரு வார்த்தை கூட பேசாமல் அமர நேர்ந்திருந்தால்,

மேலும் உள்ளளவிலான தொடர்பும், மாபெரும் ஒற்றுமை உணர்வும் இருந்திருக்கும். ஒருவகையில், அவரிடம் கேள்விகளை எழுப்பி, எனது நோக்கத்தை விளக்க வேண்டியதாக இருந்ததால் சற்று வருந்தினேன். என் உதவியாளர்களின் குழு அங்கு இல்லாதிருந்திருந்தால், அவர் முன்னிலையில் அமைதியாக இருந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பேன்.

...பாபா அவரது ஒத்துழைப்பை நல்கியது மட்டுமின்றி, திரைப்படம் எடுக்கும் மிகையான உணர்வுடன் இருந்தார். அவர் உண்மையில் காணொளித் திரைப்படம் எடுப்பதை விரும்பினார் என்பதும், திரைப்படமெடுக்கும் போது, கேமரா சீராகச் செயல்படுகிறதா என்பதை சரிபார்த்து, அவர் அனைத்தையும் தொடர்ந்து அவரது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்ததும் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது.

அவரது அனுபவத்தைத் திரும்பிப் பார்க்கையில், வான் காஸ்டெரெனின் ஒளிப்பதிவாளர் ஜான் டி பான்ட் (JAN DE BONT) இவ்வாறு நினைவுகூர்ந்தார்:

இது மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்வாக இருந்தது. மெஹர் பாபா அறைக்குள் பாதங்களை எடுத்து வைத்த அந்த கணத்தில், அங்கிருந்த அனைவரும் ஒரு மாற்றத்திற்கு உள்ளாயினர். அவரைப் பற்றி எனக்கு மிகக் குறைவாகவே தெரியும். அவரது கைகளைக் குலுக்கி, அவரது கவர்ந்திழுக்கும் கண்களைப் பார்த்த போது, உங்களுடன் உண்மையில் ஓர் இணைப்பை உருவாக்க விரும்பிய ஒரு மனிதனை நான் பார்த்தேன்; அவரிடமிருந்து கண்களை விலக்க மிகவும் கடினமாக இருந்தது. கை சைகைகளை மொழியாக்கம் செய்பவர் மூலம் அவர் பேசினாலும், அறையில் இருந்த ஒவ்வொருவருடனும் பேசுவது போல் உணர முடிந்தது. அவரது முகத்தை மிகவும் நெருக்கமாகக் கேமராவில் பார்த்த போது, நாங்கள் முதன்முறையாக சந்தித்திருந்தாலும், அவர் என்னைப் பற்றிய அனைத்தையும் அறிந்திருப்பதை உணர முடிந்தது. ஒரு கட்டத்தில் அவரது கண்களில் கண்ணீர் மல்கியதை கேமராவின் லென்ஸ் மூலம் பார்த்தேன். தெளிவாகப் பார்த்து, புரிந்துகொள்ளும் விதத்தில் அருகாமையில் பார்க்கும் அளவுக்குப் பெரிதாக்கினேன். அவை உண்மையான கண்ணீர், அருகில் இருந்த அனைவரையும் உணர்ச்சிவசப்படச் செய்தது. பின்னர் அவர் தனது கண்ணீரை ஒரு வெள்ளை கைக்குட்டையால் துடைத்து, என்னை ஆச்சரியத்திற்குள்ளாக்கும் விதத்தில், கூட்டம் நிறைவடைந்த பின்னர் அதை என்னிடம் கொடுத்தார். நான் பல ஆண்டுகளாக அந்தக் கைக்குட்டையை வைத்திருந்தேன், ஆனால் துரதிர்ஷ்டவசமாக எனது பல பயணங்களில் ஒன்றில் அதை நான் இழக்க நேர்ந்தது. எப்பொழுதும்

புன்முறுவல் செய்த வண்ணம், ஆறுதல் வழங்கும் அவரது முகத்தை என்னால் மறக்கவே முடியாது.

இளம் ஒலி பொறியாளர் பீட்டர் ப்ரூக்மேன் இவ்வாறு எழுதியிருந்தார்:

மெஹர் பாபாவைக் காணொளி திரைப்படம் எடுக்கும்போது வெளிப்பட்ட அவரின் மிக வலுவான ஆன்மீக சக்தியின் நினைவு, உண்மையில் என்றென்றும் மனதில் தனித்து நிற்கிறது. நான் அவரை முதன்முதலில் பார்த்தபோது அதை நேரடியாக உணர்ந்தேன். பொலிவான சருமம் மற்றும் நரைத்த தலைமுடியுடன் வெண்ணிற உடையணிந்து, அப்பழுக்கற்ற வெள்ளை நிற மெத்தைகளில் தனது பிரகாசமான அறையில் ஒரு முதியவர் போல பாபா அமர்ந்திருந்தார். அவரது கண்கள் ஒரு குறிப்பிடத்தக்க சக்தியைக் கொண்டிருந்தன, அதை விவரிப்பது மிகவும் கடினமாக இருந்தது: மிகுந்த உயிர்த்துடிப்புடன், பேசும் திறன்படைத்த வெளிப்படையான அரவணைக்கும் நற்புரிதலுடன், ஊக்கமளிக்கும் அன்பு நிறைந்த கண்கள். இது மிகவும் விசித்திரமான அனுபவமாக, இதுவரை பார்த்திராத போதும், அவரது சைகை மொழியை என்னால் நன்றாகப் புரிந்துகொள்ள முடிவது போலத் தோன்றியது. அவர் என்னுடன் மிகவும் நேரடியான வழியில் தொடர்புகொள்வது போலவும், எனது ஆத்மாவுடன் நேரடியாகப் பேசுவது போலவும் தோன்றியது. இது உண்மையில் மிகவும் விசித்திரமான, ஆழமான அனுபவம், நான் எனது வாழ்க்கையில் பலமுறை நினைத்துப் பார்த்தேன். அவரை சந்தித்ததை நான் இன்னும் ஒரு பாக்கியமாகவே உணர்கிறேன்.

1967 செப்டம்பர் 24 ஞாயிற்றுக்கிழமை அன்று, ஜெய்ப்பூர் கவாலி பாடகர் மற்றும் அவரது இசைக்கலைஞர்கள், மெஹராஸாத்தில் பாபாவுக்காக இசை நிகழ்ச்சி ஒன்றை நடத்தினர். இசைக் கலைஞர் கச்வாலா பாடுவதை விட, பாபா இவரது பாடலை மிகவும் விரும்பினார்; காலை 11:15 மணி முதல் பிற்பகல் 3:00 மணி வரை, ஏறக்குறைய நான்கு மணி நேரம், தேநீருக்கான இரண்டு இடைவேளைகளுடன் அவர் பாடுவதைக் கேட்டு ரசித்தார். பாபா ஆறு இசைக்கலைஞர்களுக்கும் ஒவ்வொரு கைக்குட்டையை வழங்கினார். ஆதி, பாதிரி, சகன், வாமன், பகீரத் ஆகியோர் மீண்டும் அதில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

தற்போதைய ஏகாந்தவாச காலகட்டத்தில் பாபா இவ்வாறு கூறுவதை வழக்கமாகக் கொண்டார்: “**இப்போதெல்லாம் எனக்கு எதுவும் நினைவில் இருப்பதில்லை. எரச் எல்லா விஷயங்களையும் எனக்கு நினைவூட்டிக் கொண்டே இருக்கிறார்.**”

பாபா ஒவ்வொரு நாளும் இதைத் திரும்பத் திரும்பச் சொல்வது வழக்கமாக நடந்து வந்ததால், ஒரு நாள் எரச் அவரிடம், "கடவுளாக உங்கள் மீது நாங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை உங்களின் இந்தக் கூற்றுகளால் சிறிதளவும் பாதிக்கப்படாது. நீங்கள் விரும்புவதை நீங்கள் சொல்லலாம், ஆனால் எங்கள் அசைக்கமுடியாத நம்பிக்கை என்றென்றும் நிலைத்திருக்கும்."

மேலும், இந்த ஏகாந்தவாசத்தின் போது, பாபா சில விஷயங்களைத் திரும்பத் திரும்ப சொல்வது வழக்கமாக நடந்தது. உதாரணமாக, அவர் பாவ் கல்சூரிக்கு சில கருத்துக் குறிப்புகளை வழங்கியபோது, அவர் 1925-26களில் எழுதிய இரகசிய புத்தகத்தில் 90 சதவீதத்தை 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) தொகுப்பிலும், இதர பத்து சதவீதத்தை 'தி நத்திங் அண்ட் தி எவ்ரிதிங்' (THE NOTHING AND THE EVERYTHING) புத்தகத்திலும் வழங்கியதாக, தினமும் திரும்பத் திரும்பக் கூறி வந்தார். எரச் இதை பிற ஆண்களுக்கு மத்தியில் மண்டலி மண்டபத்தில் பலமுறை திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டிய நிர்பந்தம்.

பாபா, இரவு கண்காணிப்பு வேளையில், பாவ் கல்சூரியிடம் சில விஷயங்களைத் திரும்பத் திரும்பக் கேட்பதை வழக்கமாகக் கொண்டார் - சில சமயங்களில் தொடர்ந்து பத்து நிமிடங்கள் கேட்டதையே கேட்டுக் கொண்டிருந்தார்! ஒரு கட்டத்தில், ஒரு மாதத்திற்கு பாவ் கல்சூரியிடம் சரியாக மாலை 5:45 மணிக்கு வருமாறு அறிவுறுத்தி, பாபா அவரிடம், "**நீங்கள் எத்தனை மணிக்கு வருவீர்கள்?**" என வினவினார்.

பாவ் கல்சூரி, "5:45 மணிக்கு" என்று பதிலளித்தார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா அதே கேள்வியைக் கேட்டார், "**நீங்கள் எத்தனை மணிக்கு வருவீர்கள்?**"

"5:45 மணிக்கு" என்று பாவ் கல்சூரி பொறுமையாக பதிலளித்தார். சில நிமிடங்கள் கழித்து, பாபாவிடமிருந்து அதே கேள்வியும், பாவ் கல்சூரியிடமிருந்து அதே பதிலும் பரிமாறப்பட்டது. இது சில நேரங்களில் ஒரு மணி நேரம் முழுவதும் நீடித்தது.

ஒரு நாள் பாபா, "**நாளை மாலை 5.30 மணிக்கு வாருங்கள்**" என்று பாவ் கல்சூரிக்கு அறிவுறுத்தி, அதன் பின்னர்: "**எத்தனை மணிக்கு வருவீர்கள்?**" என்று மறுபடியும் கேட்டார்.

பாவ் கல்சூரி எரிச்சலுடன், "எனக்குத் தெரியும் பாபா! நான் 5:30 மணிக்கு வருவேன்" என்றார்.

பாபா புன்முறுவல் செய்துகொண்டே, “**நான் வென்றுவிட்டேன், நீங்கள் தோல்வியுற்றீர்கள்**!” - அதாவது, பாவ் கல்சூரி தனது பொறுமையை இழந்ததால் பாபா வென்றுவிட்டதாகப் பொருள்.

ஒருமுறை பாபா, கோஹெரை அழைத்து, அவர் செய்ய வேண்டிய ஒன்றைத் திரும்பத் திரும்ப எடுத்துரைக்கக் கூறினார். கோஹெர் சிறிது நேரம் தொடர்ந்து அதையே கூறிவிட்டு, “நான் புரிந்துகொண்டேன் பாபா!” என்றார்.

பாபா பதிலளித்தார், “**இல்லை, இல்லை, நீங்கள் புரிந்துகொள்ளவில்லை**!” மேலும் “**கோஹெர் அதைத் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும்**” என்று பாபா வலியுறுத்தினார்.

கோஹெர் அதையே செய்து பின்பு கூறினார், “பாபா, நாங்கள் மீண்டும் மீண்டும் ஒரே விஷயங்களைத் திரும்பத் திரும்பச் செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதை நான் புரிந்துகொள்கிறேன், ஆனால் இப்போது நாங்கள் அப்படிச் செய்வதில் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் இருக்கிறோம். நாங்கள் இனிமேல் எரிச்சலடைய மாட்டோம்.”

ஒருமுறை பெண்டுவும் தனது பொறுமையை இழந்து பாபாவிடம் கோபமடைந்தார், ஆனால் பாபாவும் விடாப்பிடியாக, மீண்டும் மீண்டும் அதையே வலியுறுத்தினார். பெண்டு அதைத் தொடர்ந்து சில நாட்கள் செய்ய வேண்டியிருந்தது.

காக்கா பாரியாவுடன், அது வித்தியாசமாக இருந்தது. சிறுநீரில் யூரியா (UREMIA) அதிகமானதன் காரணமாக, காக்கா கோர்வையாக உரையாடுவதில் சிக்கல் ஏற்பட்டது. அவர் குழப்பமடைந்து, கேட்ட ஒவ்வொரு விஷயத்திற்கும் தவறான பதிலை வழங்கிவந்தார். உதாரணமாக, அவர் ஒன்றை அண்டா (முட்டை) என்று திரும்பத் திரும்பச் சொல்லியபோது, பெண்டு ஒரு தீப்பெட்டியைக் கொடுத்ததும், அதையே அவர் அர்த்தப்படுத்தி கூறினார். பாபா அவரிடம் அங்கு இருப்பவர்கள் யார் என்று கேட்க, அவர் அலோபாவை ‘வெள்ளரிக்காய்’ என்றும், பாவ் கல்சூரியை ‘எலி’, பெண்டுவைப் ‘பூண்டு’ என்றும் அழைத்தார். சில நிமிடங்களில், அவர்கள் யார் என்று பாபா மீண்டும் அவரிடம் கேட்கவே, அவர் முற்றிலும் மாறுபட்ட பெயர்களை வழங்கினார்.

தூக்கு நாற்காலியில் அமர்வதற்கு முன்பு, பாபா, காக்காவிடம் தோட்டப் பணியாளர்களின் பெயர்களைக் கேட்பதும், ஒவ்வொரு முறையும் காக்கா வித்தியாசமான பதில்களை வழங்குவதும் வழக்கமாக நடந்து வந்தது. இந்தப் பெயர்களை நினைவில் கொள்ளுமாறு பாபா, ஃபிரான்சிஸிடம் கூறுவதும், மேலும் அவர் வீட்டின் வராண்டாவிற்கு வரும்போது, மெஹராவும்

இதர பெண்மணிகளும் காக்காவின் சமீபத்திய பெயர் சூட்டு நிகழ்ச்சியைக் கேட்டு மகிழும் விதத்தில், காக்கா கூறியதை ஃபிரான்சிஸ் உரத்த குரலில் மீண்டும் எடுத்துரைத்தார். காக்காவின் தவறான உச்சரிப்பும், அவர் கூறிய விதமும் பாபாவைப் பெரிதும் மகிழ்வித்ததோடு அனைத்து மண்டலியும் அதைக் கேட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஒரு நாள், சற்று நகைச்சுவை தொனியில் பாபா, காக்காவின் பேச்சைப் பற்றிக் குறிப்பிட்டார், "**இது 1,000 ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் பேசிய மொழி**, **காக்கா அதை இன்றும் நினைவில் கொள்கிறார்**!"

மண்டலி மண்டபத்தில் ஒவ்வோர் ஆண் மண்டலியும், பாபா அங்கு அமர்ந்திருக்கும் போது, ஒரு குறிப்பிட்ட இடத்தை ஆக்கிரமிப்பது அனுதினமும் நடந்துவந்தது. பாவ் கல்சூரியைத் தவிர பிற அனைவரையும் காக்கா பொருட்படுத்தாமல், அவர் பாவ் கல்சூரியின் தலையில் அவ்வப்போது குட்டு ஒன்றைக் கொடுப்பதன் மூலம் மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்; மேலும் அவரது குறும்புத்தனம் பாபாவையும் மகிழ்வித்ததைக் கண்டார். பாபாவின் கால்களை அழுத்திவிட பாவ் கல்சூரி வழக்கமாக அழைக்கப்பட்டார்; இந்த நேரத்தில், காக்கா அவருக்குப் பின்னால் பதுங்கி வந்து, அவரது தலையில் அறைந்து, பின்னர் அவர் பாபாவின் கைகளைப் பணிவுடன் குலுக்குவது வழக்கம். ஒருமுறை, பாபாவின் கால்களை அழுத்த பாவ் கல்சூரி அழைக்கப்படாததால், காக்கா மிகவும் அமைதியிழந்ததைக் கண்ட பாபா, அவரைத் திருப்திப்படுத்தும் விதத்தில் பாவ் கல்சூரியிடம், "**காக்கா பொறுமை இழந்த நிலையில் உள்ளார்**, **என் முன்னால் வந்து அமருங்கள்**" என்று அறிவுறுத்தினார். அப்போது காக்கா, பாவ் கல்சூரியின் தலையில் அறையும் வாய்ப்பை அடையப்பெறுவார்.

1936-37 முதல் ராஹுரியில் நிறுவப்பட்ட 'மனநிலை பாதிக்கப்பட்ட மற்றும் மஸ்த்' ஆசிரமங்களின் நாட்களிலிருந்து, காக்கா, பைதூல் இருவருக்கும் இடையே மோதல்கள் நிகழ்ந்து வந்தன. ஒருவர் மற்றொருவரிடம் இவ்வாறு கூறினார்: "நீங்கள் அழைத்து வந்த மஸ்த் பைத்தியம், நான் அழைத்து வந்தவரே மேல்நிலை மஸ்த்!" 1960 ஆண்டுகளின் பிற்பகுதியிலும் கூட, அவர்களுக்கிடையேயான இந்த உரசல் தொடர்ந்தது. ஆனால் இந்த நேரத்தில், அவர்களிடையே நிலவிய முறுகல் நிலை, பாபாவிற்கும் பிற மண்டலிக்கும் வெறுப்பூட்டுவதாக இல்லாமல் வேடிக்கை நிகழ்வாக இருந்தது. ஒருமுறை, அவர்கள் தொடர்ந்து மோதிக்கொண்டிருந்தபோது, பாபா கூறினார், "**பைதூல்**, **காக்கா இருவரையும் கிளிகளைப் போல் இருபுறமும் கூண்டுகளில் தொங்கவிட விரும்புகிறேன்**!" இருவருக்கும் இடையேயான வாக்குவாதம்

கைகலப்பிற்கு வழிவகுக்கும் வேளையில், எரச், பெண்டு இருவரும் தலையிட்டு அவர்களைத் தடுப்பது கண்கொள்ளா காட்சி.

ஒருமுறை, பாபாவின் அருகில் பாவ் கல்சூரி கண்காணிப்புப் பணியில் இருந்தபோது, பலத்த சத்தம் கேட்கவே, பாபா என்ன நடந்தது என்பதைக் கண்டறிய பாவ் கல்சூரியை அனுப்பினார். அவர் ஆண் மண்டலி பக்கம் சென்றபோது, காக்காவைக் கைத்தடியால் மிரட்டியபடி, பைதூல் (பக்கவாதத்தால் சற்று செயலிழந்த நிலையில்) தள்ளாடுவதைக் கண்டார். காக்காவும், எதுவும் புரியாமல் முணுமுணுத்தபடி, பைதூலின் கைத்தடியை அவரது கைகளிலிருந்து பிடுங்கி அவரை அறைய ஆயத்தமானார். இந்தக் காட்சியை கோர்வையாக அவருக்கு விவரித்தபோது பாபா அடக்கமுடியாமல் சிரித்துக் கொண்டிருந்தார்.

மண்டலி மண்டபத்தில், பாபா ஒவ்வொரு நாளும் காக்காவின் அருகில் நடந்து சென்று, அவர் அறையின் முழு நீளத்திலும் சில முறை நடக்கும்போது, ஆதரவாக அவரது கையைப் பற்றிப் பிடித்துக் கொண்டார். காக்காவிற்கு மட்டும் ஏன் இந்த சலுகை வழங்கப்பட்டது என்று அவர் ஒருபோதும் கேட்காமல், பைதூல் சுவரோரமாகத் தரையில் அமர்ந்து அதிருப்தியில் அவரைப் பார்த்தார். ஒரு நாள் பாபா அவர் அருகில் நின்று பைதூலின் கன்னங்களை வருடியபோது, அவர் முகம் சூரியனைப் போல் ஒளிர்ந்தது! ஒருமுறை, பைதூலின் தூய்மையற்ற பழக்கங்களைப் பற்றி கூட்டத்தில் யாரோ ஒருவர் கேலி செய்த போது, பாபா அனைவருடனும் சேர்ந்து சிரித்தாலும், “**அவர் எனக்கு அபரிமிதமான சேவை செய்துள்ளார்**!” என்று கருத்துத் தெரிவித்தார்.

பைதூல் ஒருமுறை தனது அறையில் தூபம் ஏற்றி தூங்கிக் கொண்டிருந்த வேளையில் நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்து புகையைக் கிளம்பியது. ஓட்டுனர் யூஸூஃப் அவரை தூக்கத்திலிருந்து எழுப்பினார். பின்பு, யூஸூஃப், காக்காவிடம், “அவர் இறந்திருக்கக் கூடும்!” என்று தெரிவித்தார்.

காக்கா உடனே தீவிர தொனியில் கத்தினார், “மெஹராஸாத்தில் இல்லை; மெஹராபாத்தில் இறக்கட்டும்!” ஏனெனில் மெஹராஸாத்தில் அடக்கம் செய்யப்படும் ஒரே மண்டலி உறுப்பினர் காக்கா என்று பாபா கூறியிருக்கிறார்.

காக்காவிற்கு ஏற்கனவே நான்கு முறை மாரடைப்பு ஏற்பட்டது; இது, 1950 ஆண்டுகளில் ‘புது வாழ்வு’ (NEW LIFE) காலகட்டத்தில் தொடங்கியது. 1965இல் அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டது, 1967இல், அவர் மிகவும் கடுமையான ஐந்தாவது மாரடைப்பால் பாதிக்கப்பட்டார். கோஹெர், அலோபா, பாவ் கல்சூரி ஆகியோர் அவருக்கு சிகிச்சை அளித்தனர், ஆனால் அவர் அவ்வளவு எளிதாக எதையும் ஏற்றுக்கொள்ளும் நோயாளி அல்ல. மகிழ்விப்பதற்குக் கடினமான, அனைத்திலும் நிறைவை எதிர்பார்க்கின்ற, அவரது உதவியாளர்களுக்கு செவிமடுக்கத் தயாராக

இல்லாத நபராக காக்கா இருந்தார். ஒரு நாள் இரவு கோஹெர், பாபாவின் படுக்கையறைக்கு வந்து, “பாபா, காக்காவின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும். அவரை இப்போது காப்பாற்ற முடியாது!” என்று கெஞ்சினார்.

பாவ் கல்சூரியும் அதையே கூறினார், ஆனால் பாபா இவ்வாறு பதிலளித்தார், “**அவரைக் காப்பாற்ற முடியாவிட்டால், அவருடைய நேரம் நெருங்கிவிட்டது என்று நீங்கள் நினைத்தால், அவர் மருத்துவமனையில் இருப்பதை விட இங்கே மெஹராஸாத்தில் இறப்பது நல்லது. ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், அவர் இப்போது உயிரை விடமாட்டார்.**”

காக்காவின் உடல்நிலை மோசமடைந்தது, மேலும் அவர் கையை உயர்த்த முடியாத அளவுக்கு பலவீனமடைந்தார். ஒரு நாள் மண்டலி மண்டபத்தில், அவரைக் கண்காணிப்பதில் மிகவும் விரக்தியடைந்த அலோபா, ‘காக்காவை கவனிப்பது இயலாத காரியம்’ என்று புகார் கூறினார், ஏனெனில் அவர் தொடர்ந்து மன உளைச்சலுக்கு ஆளாகி, அவரை கவனித்துக் கொள்ள முயன்ற அனைவரையும் துன்புறுத்தி அவரது உடல்நிலையை பாழாக்குகிறார்.

பாபா அறிவுறுத்தியதற்கு இணங்க, எரச், பெண்டு, பாவ் கல்சூரி மூவரும் காக்காவை தூக்கி மண்டலி மண்டபத்திற்குள் கொண்டு சென்றனர். அவரை பாபாவின் அருகில் அமர வைத்து, ஒரு கோப்பை தண்ணீரை அருந்தக் கொடுத்தார். காக்கா அதை மெதுவாக உறிஞ்சி, அரை மணி நேரத்திற்குள் மிகவும் சுறுசுறுப்பாக மாறினார். அவர் அறையை சுற்றுமுற்றும் நோட்டமிட்டு, அவரைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை கவனித்து, பாவ் கல்சூரியின் அருகில் சென்று அவரது தலையில் அறைந்தார். பின்னர் எழுந்து நின்று, மண்டபத்தை விட்டு வெளியேறி, சமையலறைக்குச் சென்று, மதிய உணவை உண்டு, தட்டுகளை சுத்தம் செய்து வைத்தார். அதன் பின்னர் அவர் தனது படுக்கையை சீர் செய்து வழக்கமான பணிகளைச் செய்யத் தொடங்கினார். எவராலும் நம்ப முடியவில்லை! நகரவே முடியாமல், இதயத் துடிப்பு, தொடர்ந்து செயலிழந்த நிலையில் இருந்தவர் இப்போது மிகவும் சாதாரணமாக நகர்ந்து கொண்டிருந்தார். உயிரைத் துறந்து மீண்டும் உயிர் பெற்று வந்தது போலத் தோன்றியது! 1967ஆம் ஆண்டு முதல், காக்கா உயிரைத் துறக்கும் வரை (1969 பிப்ரவரி 27), அவருக்கு மீண்டும் எந்த மருத்துவ உதவியும் தேவைப்படவில்லை மற்றும் அவரது சொந்த பணிகளை அவரே செய்தார். ஆனால் அவர் பாவ் கல்சூரியை அவ்வப்போது அறைந்து கொண்டே இருந்தார்! அவர் ‘பாபாவின் பொம்மை’யாக இருந்து, அவரது அன்பில் ஒரு குழந்தையைப் போல மாறினார்.

பூனா ஸெயின்ட் வின்செனட் உயர்நிலைப் பள்ளியின் கத்தோலிக்க தலைமையாசிரியர் ரெவரெண்ட் ஈ.ஆர். டிஸோஸா (THE CATHOLIC PRINCIPAL OF ST. VINCENT'S HIGH SCHOOL IN PPNA, THE REVEREND E.R. D'SOUZA), பாபாவிற்கு ஒரு கடிதம் அனுப்பி இருந்தார், பாபா ஒரு காலத்தில் அந்தப் பள்ளிக்கூடத்தில் மாணவராக இருந்ததால், எதிர்வரும் அக்டோபர் மாதத்தில், பள்ளியின் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில், 'பல்சமய-நம்பிக்கை' நன்றி செலுத்தும் சேவையில் (INTER-FAITH THANKSGIVING SERVICE) பாபா கலந்துகொண்டு, விழாவை சிறப்பிப்பது அனைவரையும் மகிழ்ச்சியடையச் செய்யும் எனக் குறிப்பிட்டிருந்தார். பாபா அந்த சேவையில் கலந்து கொள்ளவில்லை, ஆனால் 1967 செப்டம்பர் 27 அன்று அவர் பின்வரும் செய்தியை வழங்கினார்:

**நேர்மையான மாணவர்கள், தங்களை அறிவாற்றலால் ஆயத்தப்படுத்திக் கொள்ளவும், சமுதாயத்தில் ஏற்புடைய குடிமக்களாக மாறவும் கல்வி நிறுவனங்கள் உதவுகின்றன. மேலும் அந்த மாணவர்கள், கல்வி நிறுவனங்களையும் அவற்றின் வாய்ப்பு மற்றும் வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் புத்திசாலிகள்.**

**ஆனால் இந்த அறிவு, கற்றலின் உச்ச உயர் நிலை அல்ல. ஒருவர் அறிவின் மூலாதாரத்தைச் சென்றடைய ஏங்கும் ஒரு காலம் வரும். ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளை மறைக்கும், புத்தி அல்லது அறிவுத்திறனின் அகந்தையாகிய முகத்திரையை விலக்கி, ஒருவர் எளிமையாகவும் நேர்மையாகவும் நேசிக்கக் கற்றுக்கொண்டால் மட்டுமே, இந்த மூலாதாரத்தை நோக்கிய பயணத்தை மேற்கொள்ள முடியும்.**

**விண்வெளியில் உருவாக்கப்பட்ட பொருட்களைத் தேடி மனம் உயரத்தில் பறக்கும் போது, அது வெறுமையைத் தேடி அலையும். ஆனால் மனிதன் தனக்குள் ஆழமாக மூழ்கும்போது, அவன் உளதாயிருக்கும் முழுமைத் தன்மையை அனுபவிக்கிறான்.**

டாக்டர் டான் செப்டம்பர் 26ஆம் தேதி பாபாவின் இரத்தத்தை பரிசோதனைக்காக பூனாவிற்கு எடுத்துச் சென்ற அடுத்த இரண்டு நாட்களில் 28ஆம் தேதி டாக்டர் கிரான்ட் மெஹராஸாத்திற்கு வருகை தந்தார்.

1967 அக்டோபர் 1 அன்று, பாபாவின் அறிவுறுத்தல்படி, உலகம் முழுவதும் வாழும் அனைத்து பாபா அன்பர்களுக்கும் இந்த சுற்றறிக்கையை ஆதி அனுப்பிவைத்தார்:

**அவதார் மெஹர் பாபா, 'அவரது ஏகாந்தவாசம் இந்த ஆண்டு நவம்பர் 21ஆம் தேதி நிறைவடையாது, ஆனால் 1968 பிப்ரவரி 25 வரைத் தொடரும்**

**என்பதை, அவரது அன்பர்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்' என விரும்புகிறார்.**

**'பிரபஞ்சத்தின் தலைவிதி அவரது ஏகாந்தவாசத்தின் தோள்களில் தொங்குகிறது, மனிதகுலத்தை மீட்டெடுப்பது அவரது இறை வெளிப்பாட்டைப் பொறுத்தே உள்ளது என்றும், ஆதலால் அவர் முற்றிலும் இடையூறு எதுவுமின்றி இருக்க விரும்புவதாகவும்'** மெஹர் பாபா கூறுகிறார். **எனவே, பாபாவின் பணி நிமித்தம் யார் ஒருவரையும் பிரத்யேகமாக அழைக்காதவரை, அல்லது அன்பர்களுக்கு தரிசனம் வழங்குவதாக அவரே அறிவிக்கும் வரை, எந்த சூழ்நிலையிலும் அவரைப் பார்க்க எவரும் முயற்சிக்கக் கூடாது.**

**கடிதப் பரிமாற்றத்திற்கான கட்டுப்பாடு தொடர்கிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். தொலைத்தந்திகள் உட்பட எந்த விதமான கடிதப் பரிமாற்றத்திலும் பாபா கலந்து கொள்ள மாட்டார். மேலும், யார் ஒருவரும் அவர்களின் தனிப்பட்ட அல்லது பிறரின் விவகாரங்கள் குறித்து எனக்கு அல்லது என்னுடன் வாழும் மண்டலி உறுப்பினர்களுக்கு எழுதக்கூடாது.**

**1968 பிப்ரவரி 25க்குப் பிறகு, பாபா, அவரது அன்பர்களை எப்போது பார்ப்பார் என்பதை அறிவிப்பார். இதற்கிடையில், யார் ஒருவரும் அவரைப் பார்க்க வராமல், பாபாவின் அறிவிப்புக்காகக் காத்திருக்க வேண்டும்.**

**குறிப்பு: அவதார் மெஹர் பாபா, அவரது 74ஆவது பிறந்தநாளை 1968 பிப்ரவரி 25 அன்று, அனைத்து பாபா மையங்களில் அல்லது பொது இடங்களில் கொண்டாட தனது அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அனுமதிக்கிறார். பாபாவின் பிறந்த நாளைக் கொண்டாட விரும்பும் ஒவ்வொருவரும், மற்றுமோர் அறிவிப்பை எதிர்பாராமல் கொண்டாட வேண்டும். பாபாவின் 74ஆவது பிறந்தநாள், அவர் ஏகாந்தவாசத்திலிருந்து வெளிவருவதுடன் ஒன்றிணைந்து போவதால், அது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய ஒரு சந்தர்ப்பமாக இருக்க வேண்டும்.**

மூன்று வாரங்கள் பூத் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர், 1967 அக்டோபர் 5 வியாழன் அன்று, கைக்கோபாத் மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டார், அவரைக் கண்காணித்து வந்த டாக்டர் அலு கம்பாட்டாவுடன், டாக்டர் பிரீஸ்மேனும் வந்தார். பாபாவின் விருப்பத்திற்கிணங்க, இன்னமும் நடக்க முடியாத நிலையில் இருந்த கைக்கோபாத்தை கவனிப்பதற்காக, டாக்டர் அலு மெஹராஸாத்தில் ஒரு

வருடம் தங்கியிருந்தார். கைக்கோபாத் மருத்துவமனையில் ஒரு கடினமான நேரத்தைக் கழிக்க வேண்டிய சூழ்நிலை (அஹமதுநகருக்கு வந்த அவரது மகன், அவரையும் மண்டலியையும் குறித்து மிகவும் மோசமாக நடந்து கொண்டது கைக்கோபாத்தை வருத்தத்திற்கு உள்ளாக்கியது). கைக்கோபாத் மிகவும் சோகமாக, மனச்சோர்வுடன் காணப்பட்டார், மேலும் மெஹராஸாத் இல்லத்திற்குத் திரும்பி வந்து, பாபாவின் சகவாசத்தில் மீண்டும் இருக்கும் வாய்ப்பை எண்ணி அதீத உற்சாகத்தில் இருந்தார். அக்டோபர் 7ஆம் தேதி, பாபாவையும் அவரையும் பார்க்க கைக்கோபாத்தின் மனைவி மற்றும் மகள்களை பாதிரி அழைத்து வந்தார்.

அதே நாளில், டாக்டர் பிரீஸ்மேன், அவரது குடும்பத்தினர் மற்றும் சில நண்பர்களுடன், 'ஹேப்பி வேலி' (HAPPY VALLEY) மலைக்கு சுற்றுலா சென்ற வேளையில், அங்கு அவர்கள் தேனீக்களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். உடனடியாக அவர்கள் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு டாக்டர் கோஹெர், டாக்டர் டான் மற்றும் மண்டலி அவர்களுக்கு அவசர சிகிச்சையை வழங்கினர்.

கைக்கோபாத் இல்லாததால், பாபாவின் ஏகாந்தவாச பணியில் தடங்கல் ஏற்பட்டது, ஆனால் அவர் திரும்பி வந்ததும், பாபாவின் பணி மீண்டும் தீவிரமடைந்தது. கைக்கோபாத் இரு சக்கர நாற்காலியில் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு, அங்கு பாபா அவருடன் தனியாகப் பணிபுரிந்தார். கைக்கோபாத் சக்கர நாற்காலியில் அமர்ந்து, கடவுளின் ஏழு நாமங்களைத் தொடர்ந்து உச்சரித்துக் கொண்டிருந்தார்.

கைக்கோபாத் முன்பு போல நாற்காலியில் நிற்க முடியாத சூழ்நிலை; எனவே, இப்போது, கடவுளின் ஒவ்வொரு நாமத்தையும் திரும்பத் திரும்ப மொழியும் போது, பாபா அவரது கால்களைத் தொடுவதற்கு பதிலாக, அவரது தோள்களைத் தொடுவதை வழக்கமாகக் கொண்டார். தினமும் காலையில் மூன்று மணி நேரம், மதியம் அரை மணி நேரமும் பாபா இதைச் செய்துவந்தார்.

1967 அக்டோபர் 8 ஞாயிற்றுக்கிழமை அன்று, கஜ்வானி, ஸிகன்போரியா, ஜால் தஸ்தூர், கிஷோர் மிஸ்திரி ஆகியோர் ஆதியுடன் மெஹராஸாத்திற்கு வந்தனர். சர்வதேச சுற்றுலா கண்காட்சி (INTERNATIONAL TOURIST FAIR) மும்பையில் 30ஆம் தேதி திறக்கப்பட இருந்தது; 'மாண்ட்ரீல் கண்காட்சி'யில் (MONTREAL EXPO) கனடா நாட்டைச் சார்ந்த அன்பர்கள் செய்ததைக் கேள்விப்பட்ட பின்பு, ஸிகன்போரியா இந்தக் கண்காட்சியில் இதேபோன்ற ஒரு சாவடியை அமைக்கும்

உத்வேகத்தால் தூண்டப்பட்டார். பாபா அவர்களுடன் நிகழ்த்திய அரை மணி நேர உரையாடலில் இந்தத் திட்டத்தை செயல்படுத்த அவர்களை ஊக்குவித்தார். மும்பையில் செய்யவேண்டிய பிற பணிகளைப் பற்றியும் அவர்களுக்கு அறிவுறுத்தினார்; மேலும் செப்டம்பர் மாதத்தில் மெஹராஸாத்தில் மூன்று கவாலி பாடகர்களின் இசைநிகழ்ச்சியில் உதவியதற்காக கஜ்வானியிடம் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். எதிர்வரும் நவம்பர் மற்றும் பிப்ரவரி மாதங்களில் ஜெய்ப்பூர் கவாலி பாடகருடன் மேலும் இரண்டு இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுமாறு பாபா கேட்டுக் கொண்டார்.

அன்று, பாபா, ரமா கல்சூரியிடம் தனக்கும் மெஹராவிற்கும் 20 பஜ்ஜிகளை தயார் செய்து அனுப்புமாறு கூறினார், வாமன் படலே அவற்றைக் கொண்டு வந்தார். அதைத் தொடர்ந்து, ரமா ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பஜ்ஜிகளை அனுப்பி வந்தார், சில சமயங்களில் பிற உணவுகளும் வரழைக்கப்பட்டன.

டாக்டர் கிண்டே, ஜிம் மிஸ்திரி, நரிமன், அர்னவாஸ் மற்றும் அனைத்து மும்பை அன்பர்களின் உதவியுடன், 'சர்வதேச சுற்றுலா கண்காட்சி'யில் ஒரு சாவடி அமைக்கப்பட்டது, மேலும் 'மெஹர் பாபா யார்?' (WHO IS MEHER BABA?) என்ற தலைப்பில் ஒரு சிறிய புத்தகமும், பல்வேறு இந்திய மொழிகளில் 'உலகளாவிய செய்தி' (UNIVERSAL MESSAGE) என்ற கையேட்டுடன் அச்சிடப்பட்டது.

சிறு புத்தகத்தில் வெளியிடப்பட வேண்டிய கருப்பொருளை பாபா, அவரே அங்கீகரித்திருந்தார். "மெஹர் பாபா யார்?" என்ற முதல் கேள்விக்கு, அவர் இந்த பதிலை எடுத்துரைத்தார்: "**அவர் உங்களில் உளதாயிருப்பதன் சாராம்சம், இதுவே உங்களை இந்தக் கேள்வியைக் கேட்கத் தூண்டுகிறது**."

அக்டோபர் 15 அன்று மூர்த்தி, அவரது குடும்பத்தினர், டாக்கே, அவரது மனைவி ஆகியோர் ஆதியுடன் மெஹராஸாத்திற்கு வந்த வேளையில், மும்பை 'சர்வதேச சுற்றுலா கண்காட்சி' பற்றி விவாதிக்கப்பட்டது.

மெஹர் பாபாவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்தக் 'கண்காட்சி சாவடி'க்கு ஆதரவு வழங்கும் விதத்தில், ஆதி, ஸரோஷ், விலூ ஆகியோர் பாபாவின் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டனர். பிரதமர் இந்திரா காந்தி இந்தக் கண்காட்சியை அதிகாரப்பூர்வமாக திறந்து வைத்து, திறந்த ஜீப்பில் அனைத்தையும் பார்வையிட்டார். அவர் இந்தக் 'கண்காட்சி சாவடி'யை அணுகியதும், கஜ்வானி அருகில் சென்று, 'அவதார் மெஹர் பாபா விழித்தெழச் செய்பவர்' (AVATAR MEHER BABA THE AWAKENER) என்று எழுதப்பட்ட பெரிய அடையாளப் பலகையைச்

சுட்டிக்காட்டி அவரது கவனத்தை ஈர்த்தார். அமர் ஸிங் ஸைகல் அவரைக் கீழே இறங்கி வந்து பார்வையிடுமாறு அழைத்தார், ஆனால் அதற்கான நேரமில்லாததால், இந்திரா காந்தி திறந்த வாகனத்தில் நின்று கொண்டு மெஹர் பாபாவின் உருவப்படத்தை நோக்கி கைகளைக் கூப்பி வணங்கினார்.

ஆதி, ஸரோஷ், விலூ மூவரும் 1967 நவம்பர் 2ஆம் தேதி காலை 9:30 மணிக்கு மெஹராஸாத் சென்று, பாபாவிற்கு ஒரு முழுமையான அறிக்கையை வழங்கினர்.

1967 செப்டம்பர் மாதத்திலிருந்து மண்டலி மண்டபத்தில் பாவ் கல்சூரிக்கு வழக்கமாக குறிப்புகள் வழங்குவது நிறுத்தப்பட்டாலும், 'தி நத்திங் அண்ட் தி எவ்ரிதிங்' (THE NOTHING AND THE EVERYTHING) புத்தகத்தின் இரண்டாம் பகுதிக்காக, இரவு நேரக் கண்காணிப்பின் போது, எப்போதேனும் சில குறிப்புகளை வழங்கி வந்தார். பாவ் கல்சூரி இந்தப் புதிய கருத்துகளை பல ஏடுகளில் குறிப்பெடுத்துக் கொண்டார். 1967 அக்டோபர் 10 அன்று பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**ஆரம்பத்தில் அளவிறுதியற்ற இறை-அறிவு எதையும் அறியவில்லை, அளவிறுதியற்ற இறை-அறியாமையும் எதையும் அறியவில்லை. ஆனால் இறை-அறியாமை அது ஒன்றுமில்லாதது என்பதைத் தெரிந்துகொண்டது. எனவே இறை-அறிவு எதையும் அறியவில்லை, இறை-அறியாமைக்கு அது ஒன்றும் இல்லை என்று தெரியும். இவ்வண்ணம் வெளியளவில் இறை-அறியாமை என்பது அறிவாகவும், இறை-அறிவு அறியாமையாகவும் இருந்தது. இறை-அறியாமை இறை-அறிவின் ஓர் அங்கமாக இருந்தது; ஆனால், இறை-அறிவு இறை-அறியாமையில் இல்லை.**

**திடீர் ஆர்வம் (தற்போக்கு எண்ணம்) உருவானதும், இறை-அறியாமையிலும், இறை-அறிவிலும் ஒரு பரபரப்பு ஏற்பட்டது, இறை-அறிவுக்கும் இறை-அறியாமைக்கும் இடையே எல்லையற்ற மோதல் உருவானது. இது ஓர் எல்லையற்ற அதிர் வெடிப்பை ஏற்படுத்தியது, மேலும் இந்த அதிர் வெடிப்பின் விளைவு இறை-அறியாமையின் மீது வீழ்ந்தது, ஏனெனில் இறை-அறிவுக்கு ஒருபோதும் எந்த பாதகமும் ஏற்பட முடியாது. மேலும், இதன் விளைவாக எல்லையற்ற இறை-அறியாமை எண்ணற்ற வரையறுக்கப்பட்ட அறியாமைகளாக உருவெடுத்தது.**

மெஹர்நாத்தின் பதினான்காவது பிறந்தநாளில் 1967 அக்டோபர் 22 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா, மெஹர்நாத், ரமா, ஷீலா மூவரையும் மதிய உணவிற்காக மெஹராஸாத்திற்கு அழைத்தார். அன்றைய தினம் பாபாவுடன்

முழுக் குடும்பம் மற்றும் மெஹர்நாத்தின் புகைப்படங்களை மணி எடுக்க முடிந்தது.

அதே நாளில், 100,000-க்கும் மேற்பட்ட போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் வாஷிங்டன், டி.சி.யில் (WASHINGTON, D.C.) ஒன்றுதிரண்டு, வியட்நாம் போரில் அமெரிக்கா தொடர்ந்து போராடுவதை நிறுத்தக் கோரிக்கை விடுத்தனர்.

அக்டோபர் 24ஆம் தேதி, மெக்சிகோவின் குயிர்னவாக்கா (CUERNAVACA, MEXICO) நகரைச் சேர்ந்த திரு. ரீஜொன் (REGRON) என்பவரின் அலுவலகத்திலிருந்து ஆதிக்கு ஒரு நீண்ட தொலைபேசி அழைப்பு வந்தது: 'மேற்கத்திய உலகிற்கு நீங்கள் இன்றியமையா தேவை' என்ற செய்தியை பாபாவிற்குத் தெரிவிக்குமாறும், 'பாபா விரைவில் வருகை தர வேண்டும்' என்றும் கேட்டுக் கொண்டார். '**பாபாவின் ஏகாந்தவாசம் நிறைவடைவதைத் தொடர்ந்து, மேற்கத்திய அன்பர்கள் அழைக்கப்படும் வேளையில், அவரும் இந்தியாவிற்கு வரலாம்**' என்று ரீஜொனுக்குத் தெரிவித்து பாபா அன்பான பதிலை அனுப்பினார்.

கான்பூரைச் சேர்ந்த ராஜ் குமார் ஷர்மா, நவம்பர் 6ஆம் தேதி, பாபாவை மெஹராஸாத்தில் ஆதியுடன் சந்தித்தார், மேலும் பாபா அவரது '**தற்போதைய ஏகாந்தவாசத்தை நிறைவு செய்த பின்னர், அவருடைய அனைத்து சிரமங்களையும் பாபாவிடம் தெரிவிக்குமாறு**' கூறினார். '**அந்த நேரத்தில் ராஜ் மெஹராஸாத்தில் மூன்று அல்லது நான்கு நாட்கள் தங்க அனுமதிக்கப்படலாம்**' என்றும் பாபா கூறியதைக் கேட்டு ஷர்மா மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

ஆந்திராவைச் சேர்ந்த பாஸ்கர ராஜு, 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) தொகுப்பைக் குறித்து பல விளக்கப்படங்களைத் தயாரித்து, குருபிரசாத்தில் பாபாவிடம் வழங்கினார். பாபா அவற்றைப் பெரிதும் விரும்பி, "**இந்த வரைபடங்களை நீங்களே உங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் தயார் செய்துள்ளீர்கள், ஆனால் இப்போது நான் உங்களுக்குக் கூறுகிறேன், "பாபா அனைத்து கடவுள்களின் கடவுள்' என்ற கருப்பொருளில் ஒரு விளக்கப்படத்தை தயார் செய்யுங்கள்**" என்று கூறினார். பாஸ்கர ராஜுவும் அவ்வாறே செய்து, பாபாவிற்கு அதை நவம்பர் 9 அன்று அனுப்பி வைத்த போது, பாபா அவரது முயற்சியில் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

1967 நவம்பர் 12 ஞாயிற்றுக்கிழமை காலையில், பல நெருங்கிய அஹமதுநகர் அன்பர்கள் மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர். பாபா, 'அவர் எப்படி நடக்க முயற்சித்தார்' என்பதை அவர்களுக்குக் காட்ட விரும்பி, மண்டலி மண்டபத்தில் நடந்து, **"நான் எப்படி நடக்கிறேன்?"** என வினவினார். அவர் மிகவும் சுதந்திரமாக நடமாடுவதைக் கண்டு அங்கிருந்த அனைவரும் ஆச்சரியத்திற்கு உள்ளாயினர், நிச்சயமாக மிகவும் மகிழ்ச்சியளிப்பதாக அவரிடம் கூறினர்.

பிரேம் கில்னானி அவரது குடும்பத்தினருடன் சற்று தாமதமாக வந்த வேளையில், பாபா காரணத்தைக் கேட்டார். அதிர்ச்சியடைந்த கில்னானி, "நான் சரியான நேரத்தில் வந்துவிட்டேன்!" என்றார்.

அவரைத் திருத்திய பாபா, **"உங்கள் 'சரியான நேரம்' பாபா-நேரம் அல்ல! எப்பொழுதும் பாபா-நேரத்தை நினைவில் கொள்ளுங்கள்!"** என்று கூறினார்.

பாபா அவருக்கு முன்னும் பின்னும் மீண்டும் நடந்து காட்டினார். ருஸ்தம் காக்கா, ஸில்லா காக்கு, உஷா, கோகிலா ஆகியோர் சில பாடல்களைப் பாடினர், அதற்கிடையே பாபா இவ்வாறு கேட்டுக் கொண்டார், **"பாவ் இசையமைத்த பாடல்களைப் பாடுங்கள். அவை மிகவும் சிறப்பாக உள்ளன, மொழிநடை எளிமையாக உள்ளது. மதுசூதனின் பாடல்களின் மொழி, கேட்பவர்களுக்கு எப்போதும் தெளிவாக இருப்பதில்லை."**

பாபா அப்போது அஹமதுநகர் அன்பர்களுக்கு இவ்வாறு எடுத்துரைத்தார்:

**ஆந்திரா, ஹமிர்பூர் மற்றும் உலகம் முழுவதும் உள்ள பிற மையங்களில் எனது பணி தீவிரமாக மேற்கொள்ளப்படுகிறது. அமெரிக்காவில், பல புதிய அன்பர்கள் என்னிடம் வருகிறார்கள், அவர்களும் எனது பணியில் தீவிரமாக உள்ளனர். அலன் கோஹென், ரிக் சேப்மென், ராபர்ட் ட்ரே:பஸ் போன்ற உயர் கல்வி பயின்ற இளைஞர்கள் அங்கு எனது பணியில் எப்பொழுதும் மும்முரமாக இருக்கின்றனர். ரிக், அலன் இருவரும் ஆகஸ்ட்** (23) **மாதத்தில் தேசிய அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட 'தி ஜோ பைன் ஷோ'** (THE JOE PYNE SHOW) **எனும் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தோன்றி, லட்சக் கணக்கான பார்வையாளர்கள் மற்றும் ரசிகர்களிடம் என்னைப் பற்றி பேசினர். பில் லே பாஜ்** (BILL LE PAGE) **ஆஸ்திரேலியாவிலும் இதே பணியை செய்துள்ளார், மேலும் அதற்கு கிடைத்த வரவேற்பு மிகப்பெரியது என்று எழுதுகிறார்.**

**இங்கே நீங்கள் இருக்கிறீர்கள் - என்னிடமிருந்து ஒன்பது மைல் தொலைவில் இருந்தாலும் நீங்கள் எதுவும் செய்வதில்லை! வெளி நபர்களுக்கு இல்லாத எனது தரிசன வாய்ப்பு உங்களுக்கு வழங்கப்படுகிறது. எனக்காக எப்படிப் பணிபுரிவது என்று நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, எனது ஏகாந்தவாசத்திலிருந்து இன்று நான் உங்களை சந்திக்கிறேன்.**

பாபா இவ்வாறு கூறி முடித்தார், "**எனது நேரம் நெருங்கிவிட்டது, விரைவில் நான் எனது மௌனத்தைக் கலைப்பேன். எதிர்வரும் உலகப் பேரழிவைக் குறித்து நான் அவ்வப்போது விடுக்கும் அழைப்பு மிக அருகாமையில் உள்ளது. 1968 பிப்ரவரி 25 அன்று** (பாபாவின் தற்போதைய ஏகாந்தவாசம் நிறைவடையும் நேரத்தில்), **மிகப் பெரிய மாற்றம் ஏற்படும். இது மனிதகுலத்தின் மீதான என் அன்பின் காரணமாக, நடைமுறைக்கு வராமல் தள்ளிப்போடப்பட்ட எனது முந்தைய அறிவிப்புகளில் ஒன்று போலல்லாமல் நிச்சயமாக நிகழும்.**"

அதைக் கேட்ட நஸர்வான் ஸட்டா அடக்கமுடியாமல் சிரித்தார், அது உண்மையாக நிகழுமா என்ற சந்தேகம். அதற்கு பதிலளித்த பாபா, "**நஸர்வான் இப்போது சிரிக்கிறார், ஏனெனில் இதுவரை நான் சொன்னபடி செய்யவில்லை. ஆனால் இந்த முறை நான் தீவிரமாக இருக்கிறேன். எனது நேரம் நெருங்கிவிட்டது!**

"**அடுத்த மூன்று அல்லது நான்கு மாதங்களில், அனைவரும் ஒவ்வொரு மூச்சிலும் என்னை நினைவுகூர வேண்டும்! மூச்சை உள்வாங்கும் போதும், வெளிவிடும் போதும் பாபாவை நினைவுகூர வேண்டும். கடவுள் ஒருவரே உண்மையானவர், பிற அனைத்தும் மாயை என்பதை நினைவில் கொள்ளுங்கள்." கண்ணாடியில் தனது பிரதிபலிப்பைப் பார்க்கும் பறவையின் உவமையை பாபா எடுத்துரைத்தார், அது ஒரு பிரதிபலிப்பு என்று தெரியாமல், கண்ணாடி உடைந்து சுக்கு நூறாகும் வரை அல்லது அதீத களைப்பில் தனது செயலைக் கைவிடும் வரை, தொடர்ந்து கண்ணாடியில் கொத்திக் கொண்டே இருக்கும்.**"

பாபா, தூன் ஸட்டாவைத் தழுவி, "**மகிழ்ச்சியாக இருங்கள், கவலைப்படாதீர்கள். என் அன்பை உங்களுக்குத் தருகிறேன்**" என்று ஆறுதல் கூறினார். பாபாவைப் பார்ப்பது இதுதான் கடைசி முறை என்று தூன் உணர்ந்தார்; அவ்வண்ணமே நடந்தது. காலை 10:30 மணிக்கு அஹமதுநகர் குழுவினர் அனைவரும் புறப்பட்டுச் சென்றனர்.

டாக்டர் டான் தனது பிறந்தநாளான நவம்பர் 14 அன்று மெஹராஸாத்திற்கு வந்தார், மேலும் 16ஆம் தேதி மன்ஸாரி மற்றும் கைக்கோபாத்தின் குடும்பத்தினரை பாதிரி மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்றார். அடுத்த நாள், அக்பர் பிரஸ்ஸிலிருந்து கெய்மாய் மற்றும் சகோதரிகள் பானுமாசி, குலாமாசி ஆகியோர் காலை 9:00 முதல் 11:30 மணி வரை மெஹராஸாத்திற்கு வருகை தந்தனர். பூனாவைச் சேர்ந்த ஸாம் கேரவாலாவும் (பானுமாசியின் மகன்) இந்த நேரத்தில் பாபாவை சந்திக்க வந்தார். நீண்ட கால விடுமுறைக்குப் பிறகு, கப்பலில் வானொலி அதிகாரியாகத் தனது பணியைத் தொடங்குவதற்கு சற்று முன்பு, பாபா, ஸாம் கேரவாலாவை தரிசனத்திற்காக அழைப்பது வழக்கம். அவரைத் தழுவிய பின்பு, மண்டலி மண்டபத்தில் அமர வைத்து, **“எப்போது மீண்டும் உங்கள் கப்பல் பணியில் இணையப் போகிறீர்கள்?”** என்று கேட்டார்.

ஸாம் பதிலளித்தார், “எனது விடுப்பு (1968) பிப்ரவரி 9ஆம் தேதி நிறைவடைகிறது, ஆனால் நான் அதை நீட்டிக்க நினைத்துள்ளேன், அதனால் நான் செல்வதற்கு முன்னர் உங்கள் பிறந்த நாளில் பங்கெடுக்க முடியும்.”

பாபாவிற்கு இந்த யோசனையில் விருப்பமில்லை, **‘ஸாம் தனது விடுமுறை நிறைவடைந்ததும் பணியில் இணையுமாறு கூறி**, **பிப்ரவரி 21ஆம் தேதி அவரது கப்பல் எங்கு இருந்தாலும் அதை பாபாவிற்குத் தெரிவிக்குமாறு**’ அறிவுறுத்தினார். சில நாட்களுக்குப் பிறகு, ஸாம் கேரவாலாவைத் தனியாக மெஹராஸாத்திற்கு அழைத்து, பாபாவின் உத்தரவை மறந்துவிட வேண்டாம் என்று அவருக்கு நினைவூட்டினார்.

1967 நவம்பர் 19 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா அரன்காவ்ம் கிராமத்தில் வாழும் தனது அன்பர்களையும் பக்தர்களையும் அழைத்தார். மெஹராபாத் குடும்ப குவார்ட்டர்ஸில் வாழ்ந்து வந்த அனைவரும் (ஜங்க்ளே குடும்பம் மற்றும் வாலு), மேல்மலையில் வாழும் மன்ஸாரி, கைக்கோபாத்தின் குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய அன்பர்களும் அழைக்கப்பட்டனர், அவர்கள் காலை 9:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு வரத் தொடங்கினர். மாட்டு வண்டிகள், பேருந்துகள், மிதிவண்டிகள் போன்றவற்றில் பயணம் செய்து அல்லது கால்நடையாக நடந்து, மொத்தம் சுமார் 300 பேர் வருகை தந்தனர். பெஹராம், ஜெஹாங்கு இருவரும் பூனாவிலிருந்து வந்து சில திரைப்படக் காட்சிகளை பதிவு செய்தனர். பாபா ஒவ்வொருவருக்கும் ஒரு லட்டு உருண்டையைப் பிரசாதமாக வழங்குவதற்கு முன்பு, பிரபா ஜங்க்ளே, யாதவ் காம்ப்ளே, சிது போன்றவர்கள் சில கஸல்களைப் பாடினர். அரன்காவ்ம் கிராமத்தைத் தவிர

வேறு எவருக்கும் அனுமதி வழங்காதபோதும், பிம்பல்காவ்ம் கிராமத்திலிருந்து ஒரு சிலர் கலந்துகொண்டனர்.

ஒரு கட்டத்தில், பாபா அஹமதுநகர் குழுவினரிடம் கூறியதையே இவர்களுக்கும் எடுத்துரைத்தார்: **"எனது நேரம் நெருங்கிவிட்டது, எனவே எனது தாமனை** (மேலங்கி) **உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள்."**

வாமன், ஃபெராம், பாஸ்கர், ஆதி ஆகியோர் 1967 நவம்பர் 20 காலை 9:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர். பாபா முன்பு பலமுறை செய்ததைப் போலவே, உயிரைத் துறந்த அன்பர்களின் பட்டியலை எரச் வாசித்தார். மண்டலி விடுபட்ட சில நபர்களின் பெயர்களை நினைவு கூர்ந்தனர். எரச் முழுப் பட்டியலையும் வாசித்த பிறகு, பாபாவால் வழங்கப்பட்ட ஒரு வரி பிரார்த்தனை அவருக்கு முன்பாக மொழியப்பட்டது:

**கடவுளே, என்னைவிட்டுப் பிரிந்த அன்பர்களுக்கு அவர்களின் அன்பு, சேவை, நம்பிக்கை மற்றும் நேர்மைக்கு ஏற்ப, உகந்த வெகுமதிகளை வழங்குவீராக.**


அப்போது பாபா இவ்வாறு கருத்துரைத்தார், **"நாளை முதல் எனது ஏகாந்தவாசம் மேலும் தீவிரமடையும்."** அவர் தொடர்ந்து கூறியதாவது: **"1968 பிப்ரவரி 21 அன்று** (அவரது ஏகாந்தவாசம் நிறைவடையும் நாள்), **மிகவும் இடரார்ந்த மற்றும் குறிப்பிடத்தக்க ஒன்று நிகழும்."**

நவம்பர் 21 காலை 9:45 மணிக்கு, பாபா இந்தப் பிரார்த்தனையை வழங்கினார்:


**என் அன்பர்கள் மீது கடவுள் ஆசீர்வாதத்தைப் பொழிய நான் வேண்டிக்கொள்கிறேன்; நான் எனது பௌதீக உடலைத் துறப்பதற்கு முன்னர், அவர்கள் தங்கள் பௌதீக உடலைக் கைவிடும் அந்தத் தருணத்தில், என் மீதான அவர்களின் நம்பிக்கை, அன்பு மற்றும் சேவைக்கு ஏற்ப என் அருகில் தங்கள் இடங்களைத் தக்கவைத்துள்ளனர்.**

**மேலும் நான் எனது பௌதீக உடலைக் கைவிட்டாலும், என் அன்பர்களின் நம்பிக்கை, அன்பு மற்றும் சேவைக்கு ஏற்ப, அவர்கள் உயிர் வாழும் அந்தத் தருணத்தில் என் அன்பர்களுக்காக நான் கடவுளின் ஆசீர்வாதங்களை வேண்டிக்கொள்கிறேன்.**

**மேலும் என் மனதில் நிலைகொண்டுள்ள சிலர், என்னை எனது உண்மை ரூபத்தில் உணர்ந்துகொள்ள, நான் கடவுளின் அருளை வேண்டுகிறேன்.**



மெஹர் பாபாவுடன்
மெஹர்நாத், ரமா,
பாவ், ஷீலா கல்சூரி
**22 அக்டோபர் 1967**
(MEHERNATH, RAMA,
BHAU, SHEELA WITH
MEHER BABA
22 OCTOBER 1967)



விக்டோரியா
(VICTORIA) **&**
பீட்டர் வாக்கர்
(PETER WALKER)

# காலத்தின் கண்ணீர் - ஏகாந்தவாசம் நீட்டிப்பு

(**Seclusion Extended**)

1967 நவம்பர் இறுதியில் ஹமிர்பூர் (மெஹர்புரி), மஹேவா (மெஹரஸ்தானா) மற்றும் நௌரங்கா (மெஹர் தாம்) ஆகிய இடங்களில் நடைபெற்ற வருடாந்திர மேளாக்களுக்கு (திருவிழா) பாபா தனது பிரதிநிதியாக சகனை அனுப்பினார். சகன் இந்தி மொழியில் உரை வழங்குவதற்காக ஒன்றைத் தயார் செய்யுமாறு பாவ் கல்சூரியிடம் கூறப்பட்டது. சகன் ஹமிர்பூருக்குப் புறப்படுவதற்கு முன்பு, பாபா அவரை மெஹராஸாத்திற்கு அழைத்து, அந்த உரையை வாசிக்கச் சொன்னார். பாபா, பெண் மண்டலியையும் வரவழைத்தார், அவர்கள் மண்டலி மண்டபத்தின் ஜன்னலுக்கு வெளியே திரைக்குப் பின்னால் நின்று கேட்டுக் கொண்டிருந்தனர். பாவ் கல்சூரி எழுதிய உரையை சகன் படித்து, சில பாடல்களையும் பாடியபோது, பாபா மிக்க மகிழ்ச்சியடைந்து, அவரை மனதாரத் தழுவினார்.

பாபா, சகனை உத்தரபிரதேசத்தில் நடந்த இதர இரண்டு 'மெஹர் மேளா'க்களுக்கும் - ஒன்று பாக்டா (BAGDA) கடலோரப் பகுதிக்கும், மற்றொன்று கன்டார்கா (KHANDARKA) கிராமத்திற்கும், பின்னர் அவரை பாபாவின் பிறந்தநாள் விழாவிற்கு அவரது பிரதிநிதியாக கான்பூருக்கும் அனுப்பி வைத்தார். ஒவ்வொரு முறை சகன் புறப்படுவதற்கு முன்பும், பாபா அவரை மெஹராஸாத்திற்கு அழைத்து, பாவ் கல்சூரி தயார் செய்த இந்தி உரைகளைப் வாசிக்கச் சொல்வது வழக்கம். சகன் அவற்றை ஆண், பெண் மண்டலி முன்னிலையில் மண்டபத்தில் வாசித்தார். பாபாவிற்கு இது ஒரு பொழுது போக்கு, ஆனால் பாவ் கல்சூரிக்கு இது மேலதிகமான கடமையாக இருந்தது. அவர் இரவு நேரக் கண்காணிப்பு, இந்தி மொழியில் கடிதப் பரிமாற்றம், பகலில் பாபாவுடன் அமர்ந்திருப்பது, ஸரோஷ், அமர் ஸிங் ஸைகல், சகன் போன்ற மற்றும் பலருக்கு உரைகள் எழுதி, பிற எழுத்துக்களிலும் பணியாற்ற வேண்டிய கட்டாயம்.

நவம்பர் நடுப்பகுதியில் ஒரு நாள், பாவ் கல்சூரியிடம் பாபா கஸல் எழுதுமாறு அறிவுறுத்தினார். அதற்கு அவர், "பாபா, ஹிந்தி மொழியில் கஸல்கள் எழுத முடியாது. உருது அல்லது பாரசீக மொழியில் மட்டுமே எழுத முடியும்" என்று பதிலளித்தார்.

பாபா கூறினார், "**என்னை நீங்கள் என்னவாக எடுத்துக்கொள்கிறீர்கள்? நான் உஸ்தாத் (மாஸ்டர்)! நான் கனிக்கு** (DR. GHANI) **கஸல்களை எழுதக்**

**கற்றுக் கொடுத்தேன், உங்களுக்கும் கற்றுத் தருகிறேன். ஆனால் முதலில் முயற்சி செய்யுங்கள்.**"

எனவே, பாவ் கல்சூரி கஸல் வடிவில் கிட்டத்தட்ட 200 பாடல்களை முயற்சித்து எழுதினார் (பின்னர் அவை 'மெஹர் கீத்திகா' (MEHER GEETIKA என்ற புத்தகமாக அச்சிடப்பட்டது). பாபா அவற்றை விரும்பினார், ஆனால், "**இவை பாடல்கள், கஸல்கள் அல்ல. அடுத்த கோடை விடுமுறையில் குருபிரசாத்தில் நான் உங்களுக்கு அதைக் கற்பிப்பேன்**" என்று குறிப்பிட்டார். இதற்கிடையில், டாக்டர் டானின் 'தி வேஃபேரர்ஸ்' (THE WAYFARERS) புத்தகத்தை ஹிந்தியில் மொழிபெயர்க்குமாறு பாபா அறிவுறுத்தவே, பாவ் கல்சூரி இந்தப் பணியையும் தொடங்கினார்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் 1960இல் பாபா அவருக்கு ஹிந்தி மொழியில் இரண்டு கஸல்களை எடுத்துரைத்த போது, அது கஸல்களை எழுத வழி வகுத்தது; ஆனால் பாபா அதற்கு இசை வடிவம் வழங்கச் சொல்வார் என்று பாவ் கல்சூரி நினைக்கவில்லை.

ஃபிரான்சிஸ் பிராபஸோனும் பாபாவுக்காக ஆங்கிலத்தில் கவிதைகளையும் கஸல்களையும் தொடர்ந்து எழுதினார். ஒவ்வொரு புதிய பாராயணத்தின் முடிவிலும், பாபா மகிழ்ச்சி பொங்க ஒளிர்ந்தார்; சில சமயங்களில், "**இது உங்கள் கைவண்ணங்களில் மிகச் சிறந்ததாகும். இந்த முறை நீங்கள் உங்களையும் கடந்துவிட்டீர்கள்!**" என்று பாராட்டினார்.

1967 நவம்பர் 26 ஞாயிற்றுக்கிழமை அன்று, கஜ்வானி முன்னர் ஏற்பாடு செய்ததற்கு இணங்க, ஜெய்ப்பூர் கவாலி பாடகரை மும்பையிலிருந்து மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். ஆனால், இம்முறை அஹமதுநகரிலிருந்து ஆதி, ருஸ்தம் காக்கா, டாக்கே போன்ற சிலருக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டது. கவாலி இசை நிகழ்ச்சி காலை 9:30 முதல் மதியம் 2:00 மணி வரை, ஒரு மணிநேர இடைவேளையுடன், அற்புதமான கஸல்களுடன் தொடர்ந்தது. பாபா இந்த நிகழ்ச்சியை மிகவும் ரசித்ததோடு, அவர் முன்பைவிட இன்னும் சிறப்பாக பாடினார் என்று கருத்துத் தெரிவித்தார்.

இரண்டு நாட்களுக்குப் பின்பு, நவம்பர் 28ஆம் தேதி, பாபா எதிர்வரும் பிறந்தநாள் நிகழ்ச்சி குறித்த கூட்டத்திற்காக ஆதி, ஸரோஷ், விலூ, ருஸ்தம் காக்கா, ரங்கோலே, பகீரத், வாமன் ஆகியோரை அழைத்தார்.

1967 நவம்பர் 21 வரை, நான்கு மாதங்கள் கைக்கோபாத்துடன் ஏகாந்தவாசத்தில் பணிபுரிவதாக பாபா முதலில் கூறியிருந்தார், ஆனால் (கைக்கோபாத்தின் விபத்து காரணமாக) அவரது பணியில் தடை ஏற்பட்டதால்,

பாபா தனது ஏகாந்தவாசப் பணியின் காலத்தை மூன்று மாதங்கள் நீட்டித்தார். நவம்பர் 30 அன்று ஆதிக்கு இவ்வாறு தெரிவிக்கப்பட்டது:

**எஞ்சியுள்ள 70 நாட்கள் நிகழும் ஏகாந்தவாசப் பணியை நாளை முதல் பாபா மீண்டும் தொடங்க உள்ளார். அவரது ஏகாந்தவாசம் நீட்டிக்கப்பட்ட இந்தக் காலகட்டத்தில், அவரது பிறந்தநாள் செய்தியைத் தவிர வேறு எந்தத் தொலைதந்திகளும், கடிதங்களும் அவரது பெயரில் அனுப்பப்படக்கூடாது. பாபாவின் ஏகாந்தவாசம் 1968 பிப்ரவரி 21 அன்று நிறைவுறும், ஆனால் அது பொது மக்களுக்கு பிப்ரவரி 25ஆக இருக்கும். 1967 டிசம்பர் 1 முதல் 1968 பிப்ரவரி 25 வரை, பாபா யார் ஒருவருடைய தனிப்பட்ட விஷயங்களிலும் கவனம் செலுத்த மாட்டார், மேலும் அந்தக் காலகட்டத்தில் அவரைத் தொந்தரவு செய்யக்கூடாது.**

**மிகவும் மனதிற்கு உகந்த, உற்சாகம் ஊட்டும் தகவல்கள் மற்றும் அவருடைய அன்பர்களில் எவரேனும் உயிரைத் துறந்தால் அது குறித்த செய்திகள் மட்டுமே பாபாவிற்குத் தெரிவிக்கப்பட வேண்டும். மனச்சோர்வை விளைவிக்கும் செய்திகள், விமர்சனங்கள் அல்லது அறிக்கைகளை பாபாவின் கவனத்திற்குக் கொண்டுவரக்கூடாது. மகிழ்ச்சியான, மிகவும் நல்ல உற்சாகமளிக்கும் செய்திகள் மட்டுமே பாபா முன்னிலையில் வாசிக்கப்படும் அல்லது தெரிவிக்கப்படும்.**

**பாபா இடையூறு எதுவும் இல்லாமல் இருக்க விரும்புவதால், மெஹராஸாத்திலும் எவரும் அவரை சந்திக்க வேண்டாம் என்று விரும்புகிறார். அவராகவே** (அவரது பணிக்காக) **அழைக்கப்படுபவர்களை மட்டுமே அவர் சந்திப்பார்.**

அதே நாளில், பாபா இந்தச் செய்தியை வெளியிட்டார்: "**நான் எங்கும் உளதாயிருக்கிறேன், ஆனால் எங்கும் கண்டுகொள்ள முடியாத விதத்தில் இருக்கிறேன். என் அன்பர்களின் அன்பும் நம்பிக்கையும் மட்டுமே நான் உளதாயிருப்பதை உணர வைக்கும். என்னைக் கண்டுகொள்ள, நீங்களாக இருக்கும் உங்கள் நிலைப்பாட்டின் திரையை அகற்ற வேண்டும்.**"

1967 டிசம்பர் 1 வெள்ளி முதல், பாபா 'அவரது ஏகாந்தவாசப் பணியில் எஞ்சியுள்ள 70 நாட்கள்' எனச் சுட்டிக்காட்டியதைத் தொடங்கும் ஆயத்தத்தில் இருந்தார். கைக்கோபாத்துடனான அவரது பணி, காலையிலும் மாலையிலும் தொடர்ந்தது. அந்தப் பணியின் ஒவ்வோர் அமர்வுக்குப் பிறகும், பாபா சோர்வாக, வியர்வையால் நனைந்து காணப்பட்டார். எரச் வியர்வையை உலரச் செய்து, டால்கம் பவுடரைத் தடவி, சுத்தமான சத்ராவை அணிய உதவினார்.

ஒரு நாள் பாபா பணியைப் பற்றி விளக்குகையில், இவ்வாறு கூறினார்: “**நான் வெளியளவில் செய்வதை மட்டுமே நீங்கள் பார்க்க முடியும், ஆனால் நான் ஒரே நேரத்தில் அனைத்து ஆன்மீக உணர்வுத் தளங்களிலும் தொடர்ந்து பணிபுரிகிறேன். எனது இறை-வெளிப்பாட்டின் நேரம் நெருங்க நெருங்க, எனது பணியின் அழுத்தம் அதிகமாக இருக்கும். அது குறித்த ஒரு குறுகிய யோசனையும் உங்களுக்கு இராது.**

“**இப்போது கடந்துகொண்டிருக்கும் நாட்கள், எதிர்வரும் காலத்தில் நடக்க இருப்பதோடு ஒப்பிடுகையில் ஒன்றும் இல்லை. ஏகாந்தவாச மலையின் குறுகிய உயரத்தை எவரெஸ்ட் சிகரத்துடன் ஒப்பிடுவது போல் இருக்கும்!**”

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், பாபா “**அவரது நேரம் வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது...**” என்று மீண்டும் குறிப்பிட்டார்.

அதற்கு பதிலளித்த எரச், “பாபா, ‘நேரம் வேகமாக நெருங்குகிறது’ என்று நீங்கள் கூறும்போது, அந்த நேரமே நம்மைவிட்டு விலகிச் செல்வதைக் காண்கிறோம் - நாங்கள் அதை எப்போதேனும் கையகப்படுத்த முடிவதாகத் தெரியவில்லை!” என்று கூறினார்.

இது உண்மைதான், அனைத்து கடிதப் பரிமாற்றங்களுக்கும் தடை செய்யப்பட்ட போதிலும், கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளிலிருந்து பல கடிதங்கள் வந்த வண்ணம் இருந்தன. காலையில் அவரது பணி முடிந்ததும், பாபா முன்னிலையில் சில கடிதங்கள் சத்தமாக வாசிக்கப்பட்டன, ஃபிரான்சிஸ் அவருடைய சமீபத்திய கஸலை வாசிப்பதும் வழக்கமாக நடந்தது. அதைத் தொடர்ந்து பாபா மதிய உணவுக்காக, பெண்மணிகள் பக்கம் சென்று 11:30 மணிக்கு திரும்பி வருவதை வழக்கமாகக் கொண்டார்.

பெரும்பாலான கடிதங்கள் பாபாவின் தரிசனத்தை நாடுபவர்களிடமிருந்து வந்தன; சில, குடும்பத்தில் பிறப்பு அல்லது இறப்பு பற்றி பாபாவிடம் கூறுவதாக இருந்தன; ஒரு சிலர் தங்கள் பிரச்சினைகளுக்கு குரல் கொடுத்தனர்; பிறர் கேள்விகள் எழுப்பினர். அத்தகைய கடிதம் ஒன்று மதப் பிரிவைச் சார்ந்த ஒருவரிடமிருந்து வந்தது. மதப் பிரிவுகளைப் பற்றி பாபா குறிப்பிடுகையில், “**கடவுளின் கருணையின் ஒளியிலிருந்து தங்களை மறைத்துக் கொள்ளும் மரபுவழி நபர்கள் கூட, அவருடைய இரக்கத்தின் வெளிப்பாட்டை ஒருபோதும் இழக்க மாட்டார்கள்.**”

சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப் பற்றி பாபா மேலும் குறிப்பிட்டார், “**இயேசு கூறினார், ‘தந்தையே, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது, அவர்களை மன்னியுங்கள்’. நான்**

**சொல்கிறேன், 'தந்தையே, அவர்களிடம் இரக்கம் காட்டுங்கள், ஏனெனில் என்ன நடக்கும் என்று அவர்களுக்குத் தெரியாது.'"**

1967 டிசம்பர் 3 ஞாயிற்றுக்கிழமை அன்று, சகன் மெஹராஸாத்திற்கு வந்து ஹமிர்பூர் கண்காட்சி நிகழ்ச்சிகளைக் குறித்து தெரிவித்தபோது, பாபா அவற்றை ஏற்பாடு செய்தவர்களுக்கு - கயா பிரசாத் கரே, ஸ்ரீபத் ஸஹாய், ராம்ஸஹாய் யாதவ், பாபு ராம்பிரசாத், புக்கார், சீதாராம், கேஷவ் நிகம், லக்ஷ்மிசந்த் பாலிவால் ஆகியோருக்கு - இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: **"நான் மனித உருவில் வருகை தந்த கடவுள், நான் எனது தற்போதைய ஆழ்ந்த ஏகாந்தவாசத்திலிருந்து உங்களுக்கு என் அன்பையும் ஆசீர்வாதத்தையும் வழங்குகிறேன்."**

1967 டிசம்பர் 5 அன்று, பாபாவின் எதிர்வரும் பிறந்தநாளுக்காக இந்தச் செய்தியை எடுத்துரைத்தார்:

**எனது 74ஆவது பிறந்தநாளை என் அன்பர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடட்டும், ஏனெனில் மார்ச் 25ஆம் தேதிக்குப் பின்னர் இதுவரை நடக்காத ஒரு பெரிய சம்பவம் நடக்கும்.**

'**இந்தச் செய்தி ஆதியின் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டாலும், 1968 பிப்ரவரி மாதத்தில் பிறந்தநாளுக்கு சற்று முன்பு வரை அதை வெளியிட வேண்டாம்**' என்று அவருக்கு அறிவுறுத்தப்பட்டது.

அன்று இரவு 8:00 மணிக்கு, சாஞ்சியின் சகோதரரும், அர்னவாஸின் தந்தையுமான நௌரோஜி தாதாசாஞ்சி (NAOROJI DADACHANJI, 84), மாரடைப்பால் மும்பையில், பாபாவின் பெயரை உதட்டில் உச்சரித்துக்கொண்டே உயிரைத் துறந்தார். நௌரோஜி தனது வாழ்க்கையையும் குடும்பத்தையும் முழுமையாக பாபாவுக்காக அர்ப்பணித்தவர் மற்றும் பெங்களூரில் (1939-40) பாபாவுடன் தங்கியிருந்த நீண்டகால அன்பர்களில் ஒருவர். தொழிலில் கட்டிட ஒப்பந்தக்காரராக பணிபுரிந்த நௌரோஜி, 1938இல் மெஹராபாத் மேல்மலையில் பாபாவின் எதிர்கால சமாதியின் கட்டமைப்பை மேற்பார்வையிட்டார். அந்த நாட்களில் பாபா மும்பைக்குச் செல்லும் போதெல்லாம் தாதரில் அமைந்த நௌரோஜியின் இல்லத்தில் தங்கிவந்தார். அவரது வருகையின் நினைவாக, பாபா பயன்படுத்திய அறையில், அவருடைய பெரிய வர்ணம் பூசப்பட்ட புகைப்படத்தின் முன்னால் எண்ணெய் விளக்கு தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தது. அர்னவாஸ், நர்கிஸ், ஹோமா, ரோடா ஆகியோருக்கு பாபா இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: அவர்களின் அன்பான தந்தை 'பாபாவிடம் வந்துள்ளதாகவும், அவரது அன்பில் மகிழ்ச்சியாக இருப்பதாகவும்'

குறிப்பிட்டிருந்தார். இறுதிப் பயணத்தை மேற்கொண்டவர்களின் பட்டியலில் நௌரோஜியின் பெயரும் இணைக்கப்பட்டது.

ஸரோஷ், விலூ இருவரும் டிசம்பர் 9 அன்று மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர். அன்றைய தினம், கனடாவில் பணிபுரியும் அவினாஷ் ஸக்ஸேனாவையும் (AVINASH SAXENA) பார்க்க பாபா ஒப்புக்கொண்டார். நவம்பர் மாதத்தில் சில நிமிடங்கள் பாபாவைப் பார்க்க அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது, ஆனால் ஆதியின் தொலைத்தந்தி அவரின் கைகளை வந்தடையவில்லை; எனவே, பாபா விதிவிலக்கு அளித்து, 9ஆம் தேதி அவருக்கு தரிசனம் வழங்கினார்.

1967 டிசம்பர் 10 ஞாயிற்றுக்கிழமை காலை மெஹராஸாத்தில் நடந்த கூட்டத்தில், அஹமதுநகரில் 'மெஹர் மேளா'வுடன் பாபாவின் பிறந்தநாளை மிகப் பெரிய அளவில் கொண்டாடும் ஸரோஷின் யோசனை குறித்து விவாதிக்க, ஸரோஷ், ஆதி, சகன், டாக்கே, ரங்கோலே, ருஸ்தம் காக்கா ஆகியோர் அழைக்கப்பட்டனர். எட்டு நாள் கண்காட்சி 1968 பிப்ரவரி 21 அன்று தொடங்க முன்மொழியப்பட்டது; சாவடிகள், மகிழ்ச்சியான பிறந்தநாள் விழாவின் அணிவகுப்புகளும் பரிந்துரைக்கப்பட்டன. ஜெஹாங்குவின் தந்தை, மும்பையைச் சேர்ந்த மன்செர்ஷா ஸுகத்வாலா மற்றும் நாசிக் நகரைச் சேர்ந்த மினூ பரூச்சா ஆகியோர் ஏற்பாடுகளை மேற்பார்வையிட ஒப்புக்கொண்டனர். (பின்பு கண்காட்சி ரத்து செய்யப்பட்டது, மேலும் ஒரு அணிவகுப்பு மட்டுமே நடைபெற்றது.)

(மும்பை) இந்தியாவின் மேற்குக் கரையில் டிசம்பர் 11 அன்று அதிகாலை 4:30 மணியளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அஹமதுநகர், மெஹராபாத், மெஹராஸாத் ஆகிய இடங்களில் சுமார் 50 வினாடிகளுக்கு அதிர்வு அலைகள் உணரப்பட்டன. நிலநடுக்கம் ஏற்பட்ட போது, பாபா அவரது படுக்கையறையில் இருந்தார். டாக்டர் கோஹெர் அறைக்குள் விரைந்து வந்து, அவரைத் தழுவிக் கொண்டார்! கோஹெர், பாபாவைக் காப்பாற்ற முயன்ற முயற்சியைக் கண்டு, அவர் சிரித்தார். அந்த நேரத்தில் கண்காணிப்புப் பணியில் இருந்த ரானோ, டாக்டர் கோஹெருடன் இணைந்து நிலநடுக்கத்தின் போது பாபாவின் பாதுகாப்பு குறித்து தனது கவலையை வெளிப்படுத்தினார்.

கைக்கோபாத் தனது இடுப்பில் கடுமையான வலியை அனுபவிக்கத் தொடங்கினார், மேலும் எக்ஸ்-ரேக்கள் எடுக்கப்பட்ட போது, அளவுக்கு அதிகமான எடையைத் தாங்கியதன் காரணமாக, அவரது இடுப்புப் பாகத்தில் இருந்த உலோகக் கம்பி இடம்பெயர்ந்தது கண்டுபிடிக்கப்பட்டது. டிசம்பர் 14ஆம் தேதி

அவசர மருத்துவ ஊர்தி மூலம் அழைத்துச் செல்லப்பட்டு மீண்டும் மருத்துவமனையில் கம்பி அகற்றப்பட்டது. பாபா அப்போது, **“கைக்கோபாத்துடனான எனது பணி முழுமையடையாமல் உள்ளது, ஆனால் நான் அதைத் தனியாக செய்து முடிப்பேன்”** என்று குறிப்பிட்டார்.

பாபா மண்டலி மண்டபத்தில் தனியாகப் பணிபுரியத் தொடங்கிய அந்த நேரத்தில் அவர் தனது மார்பிலும் தொடைகளிலும் பலமுறை பலமாக அறைந்தார். பாபா, மேல்நிலை ஆன்மீகத் தளங்களில் தமது பணியை செய்து கொண்டிருந்த போது, மெஹராஸாத்தில் இருந்தவர்கள் மீது பூரண மௌனம் திணிக்கப்பட்டது. அவர்கள் எங்கும் நகராமல், தங்கள் அறைகளில் அமர்ந்திருக்க வேண்டும். பாவ் கல்சூரி மண்டபத்திற்கு வெளியே கண்காணிப்புப் பணியில் இருந்தார்; பாபா கைகளைத் தட்டும்போது அவரோ அல்லது எரச்சோ உள்ளே சென்றனர். பாபா மண்டலி மண்டபத்தில் காலையில் மூன்று முதல் நான்கு மணி நேரமும், மதியம் ஒரு மணி நேரமும், மீண்டும் அவரது அறையில் 20 நிமிடங்களும் பணிபுரிந்தார். இந்த வழக்கம் பல நாட்கள் தொடர்ந்தது.

பணி மிகவும் தீவிரமாக இருக்கும் சில நேரங்களில், பாபா மயக்கம் வருவதாகக் கூறவே, அவர் கீழே சரிந்து விடுவதைத் தடுக்க பாபாவின் இடுப்பைச் சுற்றி நாற்காலியில் இடுப்புப்பட்டி ஒன்றைக் கட்டுமாறு பாவ் கல்சூரிக்கு அறிவுறுத்தப்பட்டது. மெஹர்வான் ஜெஸவாலா ஒருமுறை அங்குத் தங்கியிருந்தபோது நடந்ததை நினைவு கூர்ந்ததற்கு இணங்க, “இது மிகப்பெரிய ஆன்மீகப் பணியாக இருந்தது. பணி நிறைவடைந்த அடுத்த கணமே நாங்கள் அங்கு அழைக்கப்பட்டோம், அப்போது அவரது பௌதீக உடல் இருந்த நிலையைப் பார்க்க முடிந்தது. பாபாவின் உடல் மிகவும் சோர்வாகவும் அனைத்து சக்தியை இழந்தது போலவும், வியர்வையால் மூடி, களைத்துப்போய் இருந்தார்.”

1967 டிசம்பர் 18 அன்று, குஷ்ரு குவார்ட்டர்ஸில், ஆதியின் பெண் பணியாட்களில் ஒருவரான ஸுமனுக்கும், ரமா கல்சூரிக்கும் இடையே ஏதோ வாக்குவாதம் ஏற்பட்டது. நண்பகல் வேளையில், ஸுமன் உரத்த குரலில் கத்தத் தொடங்கியதோடு, பாபாவை அவதூறாகப் பேசினார். பணிக்கார பெண் கூறியதைக் கேட்டு மிகவும் வருத்தமடைந்த ரமா அவரை அறைந்தார். மோதலால் கலக்கமடைந்த ஆதி, தொலைபேசி மூலமாக பாபாவிற்குத் தகவல் தெரிவித்தார். அன்று பிற்பகல் 2.30 மணியளவில் பாபா அவர்களை மெஹராஸாத்திற்கு அழைத்தார். ஆதி இரு பெண்மணிகளுடன், மெஹர்நாத் மற்றும் ஷீலாவையும் காரில் அழைத்துச் சென்றார்.



மெஹராஸாத் (MEHERAZAD), **1966**-**1967**
மன்ஸாரி (MANSARI), மணி (MANI), நர்கிஸ் தாதாசாஞ்சி (NARGIS DADACHANJI), கேட்டி (KETIE), நாஜா (NAJA), கோர்ஷெத் (KHORSHED), மெஹரா (MEHERA), அர்னவாஸ் (ARNAVAS)

மண்டபத்தில் அமர்ந்திருந்த பாபா, தகராறு குறித்த அனைத்து விவரங்களையும் கேட்டபின்பு, ரமாவிடம், **"இன்று நண்பகலில் நடக்கவிருந்த ஏதோ ஒரு பயங்கரமான சம்பவத்திலிருந்து, நீங்கள் என்னை எப்படிக் காப்பாற்றினீர்கள் என்று உங்களுக்குத் தெரியாது - உங்களில் எவருக்கும் தெரியாது, எனக்கு மட்டுமே தெரியும். அது இன்று நிகழவிருந்தது, ஆனால் உங்கள் மோதலால், எனது மனம்** (கவனம்) **குஷ்ரு குவார்ட்டர்ஸை நோக்கி திரும்பியது, அதனால் அந்த சம்பவம் நிகழவில்லை, இப்போது காலம் கடந்துவிட்டதால் அது நிகழாது.**

**"இன்று என்ன நடக்க இருந்தது என்று எவருக்கும் தெரியாது. ரமா என்னைக் காப்பாற்றினார்"** என்று பாபா மீண்டும் மீண்டும் கூறி, அவரை சைகையால் அழைத்து அரவணைத்துக் கொண்டார்.

என்ன நடக்க இருந்தது? ஒருவேளை உலகின் நான்கில் மூன்று பாகம் அழிந்து போயிருக்கலாம் என்று கல்சூரி தம்பதியினர் யூகித்தனர். அன்றைய தினம் பெண்களுக்கிடையே மோதல் நிகழ்ந்தபோது, பாபாவின் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்தது, உண்மையில் அவர் தனது பௌதீக உடலைக் கைவிடும் நிலையில் இருப்பது போலத் தோன்றியது அவர்களுக்குத் தெரியாது. ஆதி தொலைபேசி மூலம் பேசியபோது, சிறு சிறு வீட்டுச் சண்டையைக் காரணம் காட்டி தேவையில்லாமல் பாபாவைத் தொந்தரவு செய்கிறார் என்று எண்ணி பாவ் கல்சூரி எரிச்சலடைந்தார், ஆனால் அது அனைத்தும் பிரியமான பாபாவின் உள் பணியின் ஓர் அங்கம் என்பதை இப்போது உணர்ந்தார். உண்மையில் சர்ச்சையைத் தூண்டுவதற்கு பாபாவின் காரணங்கள் இருந்திருக்க வேண்டும்.

மெஹராவின் பிறந்தநாள் 1967 டிசம்பர் 22 வெள்ளிக்கிழமை அன்று கொண்டாடப்பட்டது, மேலும் நரிமன், அர்னவாஸ், ஜிம்மி, கேட்டி, கோர்ஷெத், நர்கிஸ், ரோடா ஆகியோர் மும்பையிலிருந்தும், மனு பூனாவிலிருந்தும் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஒவ்வோர் ஆண்டும், ஃபிரான்சிஸ் இந்த நிகழ்விற்காக ஆங்கிலத்தில் ஒரு கவிதைக்கு வடிவம் கொடுத்து, அதை அவர் மண்டலி மண்டபத்தில் பாபா முன்னிலையில் வாசிப்பது வழக்கம். அந்த ஆண்டு, பாபா, மெஹராவுக்காக இந்தியிலும் ஒரு கவிதையை எழுதுமாறு பாவ் கல்சூரியிடம் கூறினார், அந்தக் கவிதையும் அவர் முன்னால் வாசிக்கப்பட்டது.

பாவ் கல்சூரியின் மனைவி ரமாவிடம், பாபாவுக்காக முறுக்கு பதார்த்தமும், 24ஆம் தேதி வறுத்த வழுதுணங்காயும் தயார் செய்து அனுப்புமாறும், வாரத்திற்கு ஒரு முறை அதைத் தொடருமாறும் அறிவுறுத்தப்பட்டது. டிசம்பர் 25ஆம் தேதி சகன் அனைவருக்கும் உணவு தயார்

செய்து அனுப்பினார், அடுத்த வாரமும் அவ்வாறே செய்தார். 26ஆம் தேதி ஆதி மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார், டாக்டர் டானும், மன்ஸாரியும் மறுநாள் சென்றனர்.

1967 டிசம்பர் 29 அன்று கைக்கோபாத் மருத்துவமனையிலிருந்து திரும்பி வந்தார். மருத்துவர்களால் உலோகக் கம்பியை மீண்டும் பொருத்த முடியாததால், கைக்கோபாத் படுக்கையில் இருக்க வேண்டும் அல்லது சக்கர நாற்காலியைப் பயன்படுத்த வேண்டிய நிர்பந்தம். கைக்கோபாத் மெஹராஸாத்திற்குத் திரும்பி வந்தாலும், பாபா அவருடன் மீண்டும் பணிபுரியாமல், தனியாகவே செய்து வந்தார்.

அவருடைய பணியின் வேகம் அதிகரித்துக்கொண்டே போனதால், பாபா மிகவும் சோர்வாகவும் பலவீனமாகவும் இருந்தார், ஆனால் அவர் சில சமயங்களில் இதை மண்டலியிடமிருந்து மறைத்து விடுவதுண்டு. தூக்கு நாற்காலியில் அமர உதவுவதற்காக ஃபிரான்சிஸ் அவரது கையைக் கொடுத்தால், பாபா, அவர் இன்னும் எவ்வளவு வலிமையானவர் என்பதை காட்ட முயல்வது போல, பாபா அவரை நோக்கி ஃபிரான்சிஸை இழுப்பது ஒவ்வொரு நாளும் நடந்து வந்தது - உண்மையில் அவரது உலகளாவிய பணி அவரது உடலை துண்டு துண்டாக நசுக்கியது!

1968 ஜனவரி மாதத் தொடக்கத்தில், பாபாவின் இரத்த மாதிரிகள் மீண்டும் எடுக்கப்பட்டு பூனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டன. இரத்த சர்க்கரை மற்றும் கொழுப்புச்சத்து அளவுகளில் முன்னேற்றங்கள் இருந்தன, ஆனால் யூரியா இன்னும் அதிகமாக இருந்தது. டாக்டர் கிரான்ட் அனைத்து புரதங்களையும் நிறுத்தி சைவ உணவை கடைப்பிடிக்குமாறும், பாபாவின் சிறுநீரக சுரப்பியும் (PROSTATE GLAND) பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தார்.

ரமா, ஷீலா, மெஹர்நாத் ஆகியோர் 1968 ஜனவரி 7அன்று மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர். ஷீலா அடுத்த ஞாயிற்றுக்கிழமையும் அதைத் தொடர்ந்து அடுத்த ஞாயிறு அவரது சகோதரர் மெஹர்நாத்தும் மதிய உணவுக்காக அழைக்கப்பட்டனர். அவர்கள் வாமனுடன் வந்து பாபாவிற்கு வேடிக்கையான கதைகளைச் சொல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

மெஹர்ஜி ஜனவரி 14 அன்று மெஹராஸாத்திற்கு வந்தார். 17ஆம் தேதி, பாபா பின்வரும் பிரார்த்தனையை எடுத்துரைத்தார்: "**இறைத் தந்தையே, இந்த ஆண்டு உங்கள் அனைத்து பணிகளையும் செய்ய உங்கள் அன்பு மகனுக்கு**

**உதவுங்கள், இந்த ஆண்டு ஜூலை மாதம் அவரது மௌனத்தின் கடைசி ஆண்டைக் குறிக்கும்."**

ஜனவரி 20 அன்று, உலகம் முழுவதும் வாழும் அவரது அன்பர்களுக்கு கீழ்வரும் சுற்றறிக்கையை அனுப்புமாறு பாபா அறிவுறுத்தினார்.

**1968 பிப்ரவரி 25ஆம் தேதி வரை தொடர இருந்த அவரது ஏகாந்தவாசம், 1968 மார்ச் 25 வரை தொடரும் என்பதை, அவரது அன்பர்கள் அனைவரும் அறிய வேண்டும் என அவதார் மெஹர் பாபா விரும்புகிறார். இந்தத் தேதிக்குள் பிரபஞ்சத்திற்கான அவரது ஏகாந்தவாசப் பணியின் கட்டம் முடிவடையும், மேலும் ஏகாந்தவாசம் எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்பதை அன்பர்கள் அனைவரும் அறிய வேண்டும் என்றும் பாபா விரும்புகிறார்.**

**'பிரபஞ்சத்தின் தலைவிதி அவரது ஏகாந்தவாசத்தின் தோள்களில் தொங்குகிறது என்றும், மனிதகுலத்தை மீட்டெடுப்பது அவரது இறை வெளிப்பாட்டைப் பொறுத்தே உள்ளது' என்றும், அவர் ஏற்கனவே கூறியதை அவரது அன்பர்கள் அனைவரும் நன்கு உணரவேண்டும்' என அவர் விரும்புகிறார். ஏகாந்தவாசத்தில் அவரது உலகளாவிய பணியை நீட்டித்தது அவரது தெய்வீகக் கருணை மற்றும் அவரது இறை-வெளிப்பாட்டிற்கு முன்னதாக வெளிப்படும் அன்பின் செயல் என்றும் அவர் கூறுகிறார்.**

**இந்த உலகளாவிய பணியில் அவருக்கு உதவும் விதத்தில், அவர்கள் இந்த சுற்றறிக்கையை அடையப் பெற்றதிலிருந்து 1968 மார்ச் 25ஆம் தேதி வரை, தினமும் ஒருமுறை குருநாதருக்கான பிரார்த்தனை (பர்வர்திகார் பிரார்த்தனை) மற்றும் மனம் வருந்தி மன்னிப்பு கோரும் பிரார்த்தனையை தனியாகவோ அல்லது ஒன்றிணைந்தோ மொழிய வேண்டும் என்று பாபா விரும்புகிறார். மேலும் 1968 மார்ச் 16 நள்ளிரவு முதல் மார்ச் 17 நள்ளிரவு வரை, 24 மணி நேரம், முழு மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.**

**1968 மார்ச் 25ஆம் தேதி வரை, பாபா முற்றிலும் இடையூறு எதுவுமின்றி இருக்க விரும்புகிறார். எனவே, எந்த சூழ்நிலையிலும், அவர் யார் ஒருவரையும், குறிப்பாக, ஏதேனும் பணிக்காக அழைக்காதவரை, எவரும் அவரை சந்திக்க முயற்சிக்கக் கூடாது. கடிதப் பரிமாற்றத்தின் மீதான கட்டுப்பாடு தொடரும்; கண்டிப்பாக அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.**

**பாபா அவரது அன்பர்களை அழைத்து அவர்களுக்கு தரிசனம் வழங்குவதாக அறிவிக்கும் வரை, யார் ஒருவரும் அவரைப் பார்க்க வராமல்**

**பொறுமையாக, பாபாவின் அன்பில், பாபாவின் சொந்த அறிவிப்புக்காகக் காத்திருக்க வேண்டும்.**

**தயவு செய்து இதை, தீவிர கவனத்தில் கொள்ளவும்: பாபா அவரது கிழக்கு மற்றும் மேற்கத்திய அன்பர்கள் அனைவரும், அவரது அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னர், பாபாவின் தரிசனத்தை நாடி வரக்கூடாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.**

ஜனவரி 28 அன்று, பாபாவின் இளைய சகோதரர் ஆதி ஜூனியர் லண்டனிலிருந்து ஒரு மாதம் மெஹராஸாத்தில் தங்க வந்தார். ஆதி ஜூனியரின் மகன் தாரா, இந்தியப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளும் விருப்பத்தைத் தெரிவித்து பாபாவிற்கு கடிதம் எழுதியிருந்தார்; மேலும் குமாரின் மகள் அம்ரித்திற்கு பாபாவின் ஒப்புதலுடன் அவரது திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டது. (மெஹரா அந்தப் பெண்ணை பாபாவிடம் பரிந்துரைத்திருந்தார்.) ஆதி ஜூனியர் அவர் தங்கியிருந்த காலத்தில், பாபாவுடன் திருமண ஏற்பாடுகளை விவாதித்து முடிவு செய்தார்.

1968 ஜனவரி 31 புதன் அன்று காலை 11:00 மணிக்கு பாபா பின்வரும் நபர்களை மெஹராஸாத்திற்கு அழைத்தார்: ஆதி, ஃபெராம், ஸரோஷ், விலூ, பாதிரி, ஜங்க்ளே, சகன், டாக்கே, பிரேம் கில்னானி, அவரது மனைவி கிரிஜா மற்றும் இரண்டு மகன்கள் வினோத் & ராஜ். அவர்கள் வந்த கார்கள் மெஹராஸாத்தை சுமார் பத்து நிமிடங்களுக்கு முன்னதாகவே வந்து சேர்ந்தன. ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையின்படி, அவர்கள் மெஹராஸாத்தை நெருங்கும் அவ்வேளையில், ஸரோஷ் அவர்கள் வருகையை அறிவிக்கும் விதத்தில் ஹார்ன் ஒலியை எழுப்புவது வழக்கம். பாபா மண்டலி மண்டபத்தில் தனது காலை ஏகாந்தவாசப் பணியை முடித்துவிட்டு, ஆன்மீக உள் தளங்களிலிருந்து 'இறங்கி' வெளி உலகுடன் தம்மை சீர்செய்யும் வேளையில், அவரது உடலில் வழிந்த வியர்வையை துடைத்து, உடைகளை மாற்ற எரச் உதவிக் கொண்டிருந்தார். அன்று அழைக்கப்பட்டவர்கள் சீக்கிரமாக வந்ததைக் கண்டு பாபா மிகவும் வருத்தமாகவும் எரிச்சலாகவும் உணர்ந்தார், மேலும் அவர்களை அணுகுச் சாலையில் சில நூறு அடி தூரத்தில் இருந்த மா மரத்தின் கீழ் காத்திருக்குமாறு கூறி அனுப்பினார்.

சரியாக பதினொரு மணிக்கு, பாபா மண்டலி மற்றும் குழுவை மண்டபத்திற்குள் அழைத்து, அவர்களை, குறிப்பாக ஸரோஷைக் கடிந்து கொண்டார்: "**காலை மூன்று மணி நேரம், மதியம் அரை மணி நேரம் - எனது ஏகாந்தவாசப் பணிபுரியும் அந்த நேரத்தில் முழு மௌனம் கடைப்பிடிக்க**

**வேண்டியது உங்களுக்குத் தெரியாதா? அந்த நேரத்தில், நான் மெஹராஸாத்தில் நிலவும் சூழலில், எனது பணியில் முற்றிலும் மூழ்கியிருக்கும் வேளையில், அனைத்தும் ஸ்தம்பித்த நிலைக்கு வந்துவிடுகின்றன. இருந்தும் மெஹராஸாத்தில் நீங்கள் கவனக்குறைவாகவும் அஜாக்கிரதையாகவும் இருந்தால், எனது பணியில் இடையூறு விளைவிக்க நேரும். இன்று காலை 10:30 மணி வரை நான் எனது பணியில் மும்முரமாக இருந்தேன். இப்போது உங்கள் அனைவரையும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்.**"

பிரேம் கில்னானி, டாக்கே இருவரிடமும் பாபா, "**பல வாரங்களாக நான் காலையில் மூன்று மணி நேரமும், மதியம் அரை மணி நேரமும் எனது பணிக்காக அமர்ந்திருப்பதையும், இந்தக் காலகட்டத்தில் முழு அமைதி நிலவ வேண்டும் என்பதையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்களா இல்லையா?**" என்று கேள்வி எழுப்பினார்.

இரண்டு பேரும் அமைதியாக இருந்தனர்.

மெஹர் பாபா சோர்வாகவும், தளர்வுற்றும் காணப்பட்டார் என்பது அவரது முகத்தில் தெளிவாகத் தெரிந்தது, மேலும் அவர் ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்தபோது அவரது முகம் வெளிறியும் இருந்தது: "**நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது, நான் எனது பணியை முற்றிலும் அமைதியாக முடிக்க விரும்புகிறேன். நான் எப்படிப் பணிபுரிகிறேன், என்ன அழுத்தத்தைத் தாங்கிக் கொள்கிறேன் என்பது எனக்கு மட்டுமே தெரியும். உங்களுக்கு இதைக் குறித்த சிறிதளவு யோசனையும் இருக்க முடியாது. மூன்று மணிநேரம் எந்த சலனமும் இல்லாமல் அமர்ந்து பணிபுரிவது, என்னில் தாங்க முடியாத, எல்லையற்ற அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. சிறிது ஓய்வுக்குப் பின்னர் அரை மணி நேரம் பிற்பகலில் பணிபுரிகிறேன்.**"

அதைத் தொடர்ந்து பாபா, "**ஆனால் நாம் இப்போது, இன்றைய சந்திப்பின் நோக்கத்திற்கு வருவோம்**" என்றார். ஹ ஃபீஸைப் புகழ்ந்து 1930களில் கவிஞர் அஸ்ரார் மஜாஸ் (ASRAR MAJAZ) எழுதிய இந்த வரிகளை (உருது மொழியில்) வாசிக்குமாறு அவர் அலோபாவிடம் கேட்டுக்கொண்டார்:

ஆயிரமாயிரம் பாராட்டுக்கள் ஹ ஃபீஸுக்கு உரித்தாகட்டும்,
நாங்கள் ஹபீஸுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.
அவருடைய குரல் தெய்வீக குரல் (லிஸான்'உல்-காலிப்),
ஏழாவது ஆன்மீகத் தளத்திலிருந்து ஹ ஃபீஸ் பூமிக்கு வந்தார்.
அவர் தீர்க்கதரிசி இல்லை என்றாலும், 'திவான்' வழியாக மொழிவது,
தீர்க்கதரிசிகள் மொழிவது போன்ற வார்த்தைகளால் நிறைந்துள்ளது.

என்ன ஓர் அற்புதமான 'திவான்' இது, அதில் ஒவ்வொரு கஸலும்
அதீத பிரகாசத்துடன் ஒளிரும் நட்சத்திரம் போல ஜொலிக்கும்.
ஹ:ஃபீஸ் அவரைக் குறித்து முன்வைக்கும்
எந்தக் கூற்றும் நியாயமானது -
அது, அவரது மகத்துவத்திற்கு உகந்த உன்னதமான சான்றாக உள்ளது.
ஓ பிரியமானவரே, உண்மைப்பொருளின் பெருங்கடலில் மூழ்குவாயாக!
ஹ:ஃபீஸின் திவானில் என்ன விலைமதிப்பற்ற ரத்தினங்கள் உள்ளன!
அவரது கஸல்களில் இனிமை, அழகு இரண்டையும்
ஒளிரச் செய்வது மட்டுமின்றி
அவர் ஆன்மீகப் பாதையின் ரகசியங்களை
அற்புதமாக வெளிப்படுத்துகிறார்.
அஸ்ரார், வாருங்கள், நம் இதயங்களையும்
ஆத்மாக்களையும் அர்ப்பணிப்போம்
அவரது காவலர் நடமாடும் புழுதி நிறைந்த
வீட்டு வாசற்படியை சென்றடைவோம்!

பாபா, இந்த கஸலைக் கேட்டு இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்:

**ஹ:ஃபீஸைப் போற்றிப் புகழ்வதிலும் அவரது ஈரடிப் பாடல்களின் அழகை காட்டுவதிலும் அஸ்ரார் எதையும் விட்டுவிடவில்லை என்பதை இந்த வரிகள் வெளிப்படுத்துகின்றன. சுருக்கமாகச் சொன்னால், அவர் ஹ:ஃபீஸ்-பைத்தியம்!**

**அவரைப் பற்றி அறியப்பட்டதற்கு இணங்க, ஹ:ஃபீஸ் மாபெரும் புகழ் பெற்ற பாரசீக கவிஞர், மேலும் அவரது காலத்தின் பரிபூரண குருநாதர். அஸ்ரார் தனது இறுதி வரிகளில், அவரின் தெய்வீக உருவடிவமான ஹ:ஃபீஸைப் போன்ற ஒருவருக்கு சேவை செய்யும் அதிர்ஷ்டம் கிடைத்ததால், ஹ:ஃபீஸின் வீட்டுக் காவலர் மிதித்த மண்ணின் மீது தனது இதயத்தையும் ஆத்மாவையும் அர்ப்பணித்து, அவரது மேன்மையைப் போற்றிப் புகழ்ந்து, ஹ:ஃபீஸை மகிமைப்படுத்த விரும்புகிறார்!**

தொடர்ந்து பாபா, ஹ:ஃபீஸின் வாழ்க்கையைப் பற்றி சிறியதொரு விளக்கத்தை வழங்கினார்:

**ஹ:ஃபீஸ் ஏறக்குறைய 700 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தார் (1325-1389). குரானை மனதளவில் அறிந்தவர் ஹ:ஃபீஸ் என்று அழைக்கப்படுகிறார், அவருடைய இதயமும் ஆன்மாவும் கடவுளின் சேவை மற்றும் சிந்தனைகளுக்கு மட்டுமே அர்ப்பணிக்கப்பட்டதாக அறியப்படுகிறார்.**

ஒருமுறை அவருடைய இளமை பருவத்தில், ஹஃபீஸ் ஒரு செல்வந்தர் குடும்பத்தின் மிக அழகான பெண்ணை சந்தித்த அந்த கணமே அவர் காதல் வயப்பட்டார்; அது உடலளவிலான காதல் அல்ல; ஆனால், அவர் அந்தப் பெண்ணின் அழகை விரும்பினார். அதே நேரத்தில், அவர் ஒரு சிறந்த பாரசீக கவிஞராக இருந்த அவரது ஆன்மீக குரு அத்தருடன் தொடர்பில் இருந்தார். ஹஃபீஸ், அத்தரின் சீடராக இருந்ததால், பல வருடங்களாக தினமும் அவரை சந்திப்பது வழக்கமாக நடந்தது. அவர் தினமும் ஒரு கஸலுக்கு இசை வடிவம் கொடுத்து, அதை அத்தர் முன்னால் பாடினார், அதன் மூலம் குருநாதர் அவரை மகிழ்ச்சியாகவும் மனநிறைவுடனும் இருக்கச் செய்தார்.

நிஜாமுதீன் அவுலியா, புவாலி ஷா கலந்தர் மற்றும் அஜ்மீரின் கிஸ்தி ஆகியோர் ஸூஃபி பாரம்பரியத்தின் பரிபூரண குருநாதர்கள் என்பதை பாபா தெளிவுபடுத்தினார். கிஸ்தி கூட தீர்க்கதரசி முஹமதின் நிலைக்கு சமமாக இருந்ததாகக் குறிப்பிடப்பட்டாலும், அவர் நபிக்கு இணையானவர் அல்ல, ஆனால் அவரது காலத்தின் 'குதுப்-இ-இர்ஷத்' (QUTUB-E-IRSHAD) எனும் ஆன்மீக வரிசைக்கு தலைவர். கிஸ்தி இந்தியாவில் ஸூஃபி பாரம்பரியத்தை நிறுவினார், மேலும் அஜ்மீரில் அமைந்த அவரது சமாதி, புனித யாத்திரை ஸ்தலமாக மதிக்கப்படும் இடமாகும்.

இந்தப் பரிபூரண குருநாதர்கள் மற்றும் பிற முஸ்லீம் குதுப்கள், ஹஃபீஸின் பல்வேறு திவான்களில் அடங்கிய கஸல்களுக்கு செவிமடுப்பதை எப்பொழுதும் விரும்பினர்.

இப்போது, ஒரு பரிபூரண குருநாதரின் கைகளில் முழு உலகமும் இருக்கும்போது, கவிதை அல்லது கஸல்கள் வரைவது என்பது ஒரு பெரிய விஷயமல்ல. ஆனால், சத்குரு துக்காராம் விளக்கியது போல், ஒருவரின் அசல் தன்மை, இறை உணர்வை அடைந்த பிறகும் நிலைத்திருக்கும். கஸல்களை ரசிப்பது முஹமதியர்களின் இயல்பு. எனவே, இறையுணர்வை எய்திய முஹமதியர்கள் அவற்றை தொடர்ந்து அனுபவிக்கிறார்கள்.

ஹஃபீஸ் அவர் எழுதிய கஸல்களை தனது குருநாதர் முன்னால் வாசிக்கும் வேளையில், குருநாதர் அவற்றை ரசித்து, (எவரிடமேனும் குறிப்பெடுக்கக் கூறி) தனது பிற சீடர்களிடம் படித்துப் பயன்பெற அதை ஒப்படைத்து, "அவை எதிர்கால சந்ததியினருக்கு முக்கியமான பொக்கிஷமாக இருக்கும்" என எடுத்துரைத்தார். ஆனால் ஹஃபீஸ் அவற்றைக் கண்டுகொள்ளவில்லை, அவர் உயிரைத் துறந்த பிறகுதான் அவை ஒன்று திரட்டப்பட்டன.

ஹ∴பீஸின் முந்தைய வாழ்க்கையைப் பற்றி பாபா கூறினார்:

**இருபது வருடங்கள் கடந்துவிட்டன, இந்த நேரமெல்லாம் ஹ∴பீஸ் அழகான பெண்ணின் அன்பின் நெருப்பால் நிறைந்திருந்தார், மேலும் அவர் தனது குருநாதரையும் நேசித்தார். ஒருமுறை, அத்தர் அவரிடம் கேட்டார்: "உங்களுக்கு என்ன வேண்டும் என்று சொல்லுங்கள்."**

**ஹ∴பீஸ், அந்தப் பெண்ணுக்காக எவ்வளவு ஏங்குகிறார் என்பதை வெளிப்படுத்தினார். அத்தர் பதிலளித்தார்: "காத்திருங்கள், நீங்கள் அந்தப் பெண்ணை அடையப் பெறுவீர்கள்."**

**பத்து வருடங்கள் கடந்தன, ஆக மொத்தத்தில் முப்பது வருடங்கள், ஹ∴பீஸ் நம்பிக்கை இழந்து மனமுடைந்து போனார். ஆரம்பத்தில், அவர் தனது குருநாதருக்கு எதிராகக் கொதித்தெழுந்தார்; பின்பு படிப்படியாக குளிர்ச்சியடைந்தார். ஒரு நாள் அத்தருடன் தனியாக இருந்தபோது அவர் கண்கலங்கி அழத் தொடங்கினார். குருநாதர் அவரிடம் என்ன விஷயம் என்று கேட்க, ஹபீஸ் நெருப்பாகக் கொதித்துக் கொண்டிருந்தார்: "உங்களுடன் இருந்ததால் நான் என்ன அடையப் பெற்றேன்? முப்பது வருடங்கள் கடந்துவிட்டன!"**

**அத்தர் கூறினார்: "பொறுமையாக இருங்கள், அது ஒரு நாள் உங்களுக்குத் தெரியும்."**

**ஹ∴பீஸ் பதிலளித்தார்: "நீங்கள் ஏன் அந்தக் கேள்வியைக் கேட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்!" அவரது குருநாதர் அத்தருடன் நிகழ்ந்த இந்த சந்திப்புக்கு சரியாக 39 நாட்களுக்குப் பிறகு, ஹ∴பீஸ் 'சில்லா-நாஷினி'யை, அதாவது ஒரு வட்டம் வரைந்து, தனது ஆசையை நிறைவேற்றுவதற்காக, அதனுள் 40 நாட்கள் உணவு, நீர் எதுவுமின்றி தவமிருந்தார்.**

**ஒரு வட்டத்தின் எல்லைக்குள் ஒருவர் 40 நாட்கள் அசையாமல் இருப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. ஆனால் ஹ∴பீஸின் காதல் ஏக்கம் அளப்பரியதாக இருந்ததால் அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. நாற்பதாவது நாளில், ஒரு தேவதை அவர் முன் தோன்றிய போது, அந்த தேவதையின் அழகைப் பார்த்து, ஹ∴பீஸ் நினைத்தார்: "இந்த சொர்க்க லோக மகிமையுடன் ஒப்பிடுகையில் அந்தப் பெண்ணின் அழகு ஒன்றுமில்லை!"**

**தேவதை, ஹ∴பீஸிடம் என்ன வேண்டும் என்று கேட்க, ஹ∴பீஸ் அவரது குருநாதரின் விருப்பத்தின் மகிழ்ச்சிக்காக காத்திருக்க முடியும் என்று பதிலளித்தார். கடைசி நாளின் காலை நான்கு மணியளவில், ஹ∴பீஸ் தனக்குத்தானே விதித்துக் கொண்ட 'சில்லா-நாஷினி'யிலிருந்து வெளியே**

வந்து, தனது குருநாதரிடம் சென்றபோது, குருநாதர் அவரைத் தழுவினார்; அந்த அரவணைப்பில் ஹாஃபீஸ் இறை உணர்வை அடையப் பெற்றார்.

ஹாஃபீஸின் கவிதைகளை தெளிவுபடுத்திய பாபா இவ்வாறு விளக்கினார்: "அவருடைய கஸல்களில் ஒரு பாதியை இறை உணர்தலுக்கு முன்னரும், மறு பாதியை அத்தர் இறை உணர்வை வழங்கிய பின்னரும் இயற்றினார். இந்த கஸல்கள் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட அழகும், மிக்க தனித்துவமும் வாய்ந்தவை, மிகவும் அற்புதமானவை. இறை உணர்வுக்கு முன்னதாக உருவான கஸல்கள் அவரது அளப்பரிய மகிழ்ச்சியையும், பொங்கி வழியும் புத்துணர்ச்சியையும் சித்தரித்தன. இறை உணர்வுக்குப் பின்பு சத்குருவாக சாதாரண உணர்வு நிலைக்கு வந்த பின்னர் எழுதிய இரண்டு கஸல்கள் மிகவும் புகழ் வாய்ந்தவை."

பாபா மேலும் கூறினார்: "எனக்கு மரபு வழி வந்த இசையை விட, கஸல் மற்றும் கவாலி பாடல்களில் பிரியம் அதிகம். சாய்பாபா, பாபாஜான் ஆகியோரும் அவற்றை ரசித்தனர். 'ஃபிரான்சிஸ், உங்கள் கஸல்கள் 700 ஆண்டுகள் இசைக்கப்படும்' என்று நான் கூறும்போது, நான் சொல்வதை நீங்கள் காதுகளில் வாங்குவதில்லை. ஆனால் அது அப்படியே இருக்கும் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்."

பாவ் கல்சூரியைப் பாராட்டி, பாபா தொடர்ந்து கூறினார், "பாவ், காலத்தால் அழியாத 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்' (THE EVERYTHING AND THE NOTHING) புத்தகத்தை இந்தியில் மொழிபெயர்த்துள்ளார்; இப்போது 'தி வேஃபேரர்ஸ்' (THE WAYFARERS) புத்தகத்தின் இந்தி பதிப்பில் பணியாற்றி வருகிறார், இது அவருடைய முக்கியமான பணிகளில் ஒன்றாகும்."

இந்தக் கூட்டத்தை வரவழைத்ததற்கான காரணத்தை விளக்கி, பாபா கூறினார்: "யார் ஒருவராலும் என்னைப் புரிந்து கொள்ள முடியாது, அல்லது நான் எப்படிப் பணிபுரிகிறேன் என்பதைக் குறித்து சிறிதளவும் சிந்திக்க முடியாது. காலையில் மூன்று மணிநேரம் மற்றும் பிற்பகல் அரை மணி நேரம் நான் செய்யும் இந்தப் பணியை, என்னால் கூட புரிந்து கொள்ள முடியாது.

"ஏன்? எனது நேரம் நெருங்கி வருகிறது; இப்போது அது நம் வீட்டு வாசல் வரை வந்துவிட்டது. ஆனால் என்ன நடக்கும் என்று எனக்கு மட்டுமே தெரியும். நான் இன்று உங்களை ஏன் அழைத்தேன் என்று நானாக உங்களுக்குச் சொல்கிறேன்.

**"பிப்ரவரி 25 முதல் மார்ச் 25 வரை, ஒரு மாதத்திற்குள், எனது பணி தீவிரமடையும். நான் நாள் முழுவதும் தனியாக அமரலாம். எனவே, நீங்கள் எனக்கு உதவ வேண்டும். எப்படி?"**

முன்பு செய்தது போல், எந்தக் கேள்வியும் எழுப்பாமல், பரிபூரண குருநாதருக்குக் கீழ்ப்படிவதை குறித்த ஹஃபீஸின் ஈரடி கவிதைகளை பாரசீக மொழியில் எடுத்துரைக்குமாறு பாபா அலோபாவிற்கு அறிவுறுத்தினார் ('அதிர்ஷ்டசாலியான அடிமைக்குப் பொருத்தமானது…" என்ற ஈரடி கவிதை.)

அஹமதுநகரைச் சேர்ந்த மண்டலி மற்றும் குழு உறுப்பினர்கள் அவருக்கு எவ்வாறு உதவ முடியும் என்பதை விளக்கி, பாபா, ஹஃபீஸின் ஈரடிக் கவிதைகளை மேற்கோள் காட்டி மீண்டும் வலியுறுத்திக் கூறினார்:

**ஏன் அல்லது எதற்காக என்ற கேள்விக்கு இடமில்லாமல், குருநாதரின் கட்டளைகளை நிறைவேற்றுவது. 100 சதவீதம் கீழ்ப்படிவது என்பது ஒருவருக்கு சாத்தியமற்றது; ஆனால் முழு அன்புடனும் விருப்பத்துடனும் கீழ்ப்படிவது சாத்தியம். என் அருளால் மட்டுமே ஒருவர் என்னை உணர முடியும். எனக்கு உதவ என்ன செய்ய வேண்டும் என்பதை நான் உங்களுக்குச் சொல்கிறேன்.**

**இங்கு என்னுடன் வாழ்பவர்கள், நான் சொல்வதற்கு மறுப்புக் கூறாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நான் 'இல்லை' என்று சொன்னால், அது இல்லை என்று அர்த்தம். அது** (உங்கள் மனதில்) **சரியோ தவறோ, நான் சொல்வதைச் செய்யுங்கள். நீங்கள் பரிந்துரைகளை வழங்கலாம், ஆனால் நான் கேட்டால் மட்டுமே.**

**உங்களைப் பொறுத்தவரை, இன்று நான் அஹமதுநகரிலிருந்து என் அருகில் அழைத்த சிலர், அடுத்த இரண்டு மாதங்களுக்கு, முடிந்தவரை அடிக்கடி என்னை நினைவில் கொள்ளவும், பாலியல் செயல்களில் ஈடுபடுவதை முற்றிலும் தவிர்க்கவும் வேண்டும். உங்களுக்குக் காம சிந்தனைகள் வரும்போது, என்னை நினைவில் கொள்ளுங்கள், நான் உங்களுக்கு உதவுவேன்.**

**உங்கள் நிதி விவகாரங்கள், குடும்பம் மற்றும் குழந்தைகளைப் பற்றி கவலைப்பட வேண்டாம். என்ன நடக்கப் போகிறது என்பது உங்களுக்குத் தெரியாது - இதுவரை நடக்காத ஒன்று. எனவே, இந்த முக்கியமற்ற பொருட்களைப் பற்றி கவலைப்படாமல், மகிழ்ச்சியாகவும் முகமலர்ச்சியாகவும் இருக்க முயற்சி செய்யுங்கள்.**

**மீண்டும், நான் ஏகாந்தவாசத்தில் பணிபுரியும் இக்காலகட்டத்தில் என்னை மேலும் மேலும் நினைவில் கொள்ளவும்; தடைவிதிக்கப்பட்ட**

**ஒன்றை** (பாலியலில் ஈடுபடுவதை) **எனது கட்டளையாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.**

பாபா மேலும் கூறினார்:

**மூன்று மணி நேரம் அமர்ந்திருப்பதால் ஏற்படும் சிரமம் எனது கால்களைக் கல்லாக மாற்றியது போல் இருக்கும். நான் அமைதியை வலியுறுத்துவதன் காரணம் என்னவெனில், சிறிதளவு ஓசை அல்லது சத்தம் கூட எனது பணியுடனான இணைப்பைத் துண்டித்துவிடும். அமர்ந்திருக்கும் போது நான் உடல் அசைவின்றி இருக்கிறேன்; எந்த வெளியுலக உணர்வும் இல்லாமல் எனது பணியில் முழுமையாக மூழ்கிவிடுகிறேன். இதற்கு, அமைதி பெரிதும் உதவுகிறது. நான் சாதாரண உணர்வு நிலையை அடையப் பெறுவதற்கான முயற்சி உடனடியாக வருவதில்லை.**

தொடர்ந்து பாபா, பிரேம் கில்னானி மற்றும் அங்கிருந்த உள்ளூர் வாசிகளில் அஹமதுநகரைச் சேர்ந்த ஒருவரை அழைத்து, அவருடைய கால்களை உணரச் செய்த போது, அவை மரத்தைப் போல் உறுதியாகவும், கல்லைப் போல கடினமாகவும் இருந்ததை அவர்கள் ஊர்ஜிதம் செய்தனர். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, பக்தியின் காரணமாக, '**அவர்கள் மண்டபத்திற்குள் நுழைவதற்கு முன்னர், அவரை வணங்கவோ, அவருடைய பாதங்களைத் தொடவோ அல்லது எந்த விதமான வணக்கமும் செலுத்தவோ கூடாது**' என்ற பாபாவின் தெளிவான உத்தரவை மீறி, பாபாவின் பாதங்களை கில்னானி தொட்டார். இந்தச் செயல் பாபாவை வேதனைக்குள்ளாக்கி, வருத்தமடையச் செய்தது என்பது அவருடைய முகபாவனையிலிருந்து தெரிந்தது. அவர் சோகமான அதிருப்தியில் தலையை அசைத்தார், ஆனால் சிறிது நேரத்திற்குப் பிறகு, கில்னானியை மன்னித்தார், "**என்னை வணங்கவோ அல்லது எனது பாதங்களைத் தொடவோ கூடாது என்று நான் உங்களுக்குக் கூறியிருந்தேன், நீங்கள் ஏன் அதைச் செய்தீர்கள்? எனது பாதங்களில் என்ன இருக்கிறது?**"

பின்பு பாபா தொடர்ந்தார்:

**பிப்ரவரி 25 முதல், ஃபிரான்சிஸ், எரச், பெண்டு, பாவ் கல்சூரி, அலோபா மற்றும் என் அருகில் வாழும் அனைவரும்** (என்னுடன்) **எந்தவிதமான வாக்குவாதத்திலும் ஈடுபடாமல், நான் சொன்னபடியே செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க முயற்சிக்க வேண்டும். உள்ளளவில், நீங்கள் அதை உணராமல் இருக்கலாம், ஆனால் வெளியளவில் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க முயற்சிக்க வேண்டும். இதன் மூலம் நீங்கள் எனக்கு உதவுவீர்கள். ஒவ்வொரு நாளும், காக்கா என்னை**

**உற்சாகப்படுத்துகிறார். ஃபிரான்சிஸ், காக்காவைப் பின்பற்றுகிறார், அது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.**

**இரண்டு மாதங்களுக்கு, மார்ச் 25 வரை, எங்கும் எதிலும் முழுமையான கீழ்ப்படிதல் மிகவும் இன்றியமையாதது - வாக்குவாதங்கள், பரிந்துரைகள் எதுவும் வேண்டாம். நான் அவற்றை உங்களிடம் கோரும்போது நீங்கள் கொடுக்கலாம். பைதூல் (மாரடைப்பு காரணமாக) முடங்கிப்போன நிலையிலும், நான் அவரை வெளியே சென்று எனது தினசரி ஏகாந்தவாச அமர்வின் போது, மாமரத்தின் கீழ் அமரச் சொல்கிறேன், ஏனெனில் அவர் இங்கே இருப்பது எனக்குத் தொந்தரவாக உள்ளது.**

**இன்று உங்கள் அனைவருக்கும் மெஹராவை முதல் முறையாகப் பார்க்கும் ஒரு சிறப்பு நிகழ்வு. ஆண்கள் மெஹராவைப் பார்த்ததில்லை. நீங்கள் 'ஜெய் பாபா!' என்று அவருக்குக் கூறுங்கள், அவரும் 'ஜெய் பாபா!' என்று பதிலளிப்பார். அவர் இதுவரை இறை உணர்வை எய்தவில்லை, அவருக்கு எந்தவிதமான ஆன்மீக அனுபவமும் இல்லை. ஆனால் அவர் எனது ராதா.**

**இந்தியாவில் மக்கள் ஏன் 'கிருஷ்ணா-ராதா', 'ராம்-சீதா" என்று அழைக்காமல் 'ராதா-கிருஷ்ணா', 'சீதா-ராம்' என்று அழைக்கிறார்கள் என்பதை ஒரு நாள் நான் ஃபிரான்சிஸுக்கு விளக்கப் போகிறேன்.**

**என் மீதான மெஹராவின் அன்பு 100 சதவீதம் தூய்மையானது. பாபாவை நேசிக்கும் பிற அனைவரையும் போல் இல்லை. இத்தனை ஆண்டுகளாக அவர் என்னுடன் இருந்துவருகிறார், தூய்மையின் மொத்த வடிவமாக இருக்கிறார். அவருக்கு காம சிந்தனைகளோ ஆசைகளோ இல்லை – அவரது 'கிருஷ்ணா' (பாபா) மீது இம்மி அளவு கூட இல்லை. அவருடைய வாழ்வின் ஒரே நோக்கம் என்னை நேசிப்பதே. இதையெல்லாம் நான் ஃபிரான்சிஸுக்கு விளக்குவேன்.**

இந்த நிலையில், வெளி நபர்களை மெஹராஸாத்திற்கு அழைத்து வந்ததற்காக ஆதியை பாபா, கண்டித்தார்; மேலும் அவர்கள் பயணம் செய்யும் வழியில் வாய்ப்பு இருந்தால் பாபாவைப் பார்க்கலாம் என்று கூறி அவர்களை அலுவலகத்திலிருந்து அழைத்து வந்தார். பாபா மேலும் கூறினார், "**ஆதியின் நடத்தை என்னைத் திகிலுறச் செய்கிறது**!" பாபா மீண்டும் ஆதியிடம், பிறர் மெஹராஸாத்திற்கு வருவதைத் தடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறினார். பாபா மெஹராபாத்திலிருந்து எவரையேனும் அல்லது சில மண்டலியை பணி நிமித்தம் அழைக்கலாம், அது வேறு விஷயம். ஆனால்

மெஹராஸாத்திற்கு வரும் தேவையற்ற பார்வையாளர்கள் குறித்து அவர் மிகவும் தீர்க்கமாக இருந்தார்.

பாபா மண்டபத்தை விட்டு வெளியேறிய பிறகு, விருந்தினர்கள் மற்றும் உள்வாசி மண்டலி அனைவரும் வளாகத்தின் பின்புறத்திற்கு அழைக்கப்பட்டனர், அங்கு பாபா தனது வீட்டின் வராண்டாவில் மெஹராவுடன் அமர்ந்திருந்தார். அவர்களில் பெரும்பாலோர் மெஹராவை முதன்முறையாகப் பார்த்து, பாபாவின் மீதான அன்பின் தூய்மையைக் கண்டு வியந்தனர். அனைவரும் அவருக்கு "ஜெய் பாபா!" என்று கூற, மெஹரா வெட்கத்துடன் பதிலுக்கு அதையே திரும்ப திரும்பக் கூறி வணங்கினார். அஹமதுநகரிலிருந்து வந்த குழுவினர் சிறிது நேரம் மண்டலியுடன் வளாகத்தில் ஒன்றுகலந்து உரையாடி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

மெஹர்வான் ஜெஸவாலாவும் பூனாவிலிருந்து இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார், மேலும் இந்த ஆண்டு ஒரு மாத விஜயத்தில் மெஹராஸாத்தில் தங்கியிருந்தார்

கூட்டம் நிறைவடைந்த பிறகு, பாபா அடுத்த ஆறு வாரங்களுக்கான ஏகாந்தவாசப் பணி குறித்த அட்டவணையை கோடிட்டுக் காட்டினார்:

1968 பிப்ரவரி 9-19 தினசரி:

- காலை ஒன்றரை மணி நேரம்
- மதியம் அரை மணி நேரம்
- அவரது அறையில் கால் மணி நேரம்

1968 பிப்ரவரி 20:

- காலை மூன்று மணி நேரம்
- மதியம் அரை மணி நேரம்
- அவரது அறையில் கால் மணி நேரம்

1968 பிப்ரவரி 21 முதல் மார்ச் 21 வரை தினசரி:

- காலை நான்கு மணி நேரம்
- மதியம் ஒரு மணி நேரம்
- அவரது அறையில் கால் மணி நேரம் (இது ரத்து செய்யப்படலாம்)

1968 பிப்ரவரி 25 அன்று தவிர:

- காலையில் ஒரு மணி நேரம் மட்டுமே

புதிய அட்டவணை 1968 பிப்ரவரி 9 முதல் அமலுக்கு வந்தது. பாபா அவரது உலகளாவிய பணிக்காக தமது பிரபஞ்ச உடலை முழுவதுமாக தியாகம் செய்து, அதில் முழுமையாக இணைந்தார். ஒவ்வொரு நாளும், அவரது பணி

நிறைவடைந்ததும், அவரது முகம் தீவிர சோர்வின் அறிகுறிகளை வெளிப்படுத்தியது. சில நேரம், பணி முடிவடைந்த பின்னரும், பாபா தொடர்ந்து அதில் மூழ்கி இருப்பது போலத் தோன்றினார். (ஒரு ரயிலைப் போலவே, பிரேக்குகள் பயன்படுத்தப்பட்டாலும், உடனடியாக நிற்காமல் படிப்படியாக வேகம் குறைவதோடு இதை ஒப்பிடலாம்.)

பாபாவின் தினசரி காலை ஏகாந்தவாசப் பணி நிறைவடைந்ததும், மண்டலி அனைவரும் மண்டபத்திற்குள் அழைக்கப்பட்டனர்; அங்கு எரச் பிரார்த்தனைகளை மொழிந்தார். அதைத் தொடர்ந்து மண்டலி, ஒருவர் பின் ஒருவராக பாபாவின் நாற்காலிக்கு முன் வந்து, பாபாவின் முன்னால் வைக்கப்பட்ட பந்து போன்ற மெல்லணை மீது தனது கால்களை வைத்து, அவரவர் மத மரபுக்கு இணங்க, கடவுளின் நாமத்தை ஏழு முறை உச்சரித்த வேளையில், பாபா அவர்களைத் தலை வணங்கினார்.

அமெரிக்காவில், பெஞ்சமின் வி. ரைட் (BENJAMIN V WRIGHT, **24**), **1966** அக்டோபர் மாதத்தில், நியூயார்க் நகரில் பாபாவைப் பற்றி கேள்விப்பட்டார்; சக போதைப்பொருள் வாடிக்கையாளரான ஸிண்டி விட்டேக்கர் (CINDY WHITAKER), போதைப்பொருள் உட்கொள்வதை நிறுத்துவதற்கான தனது உறுதியையும், அதற்காக மெஹர் பாபா அவரில் ஆற்றிய பங்கையும் அவரிடம் எடுத்துரைத்தார். ஒரு வருடம் கடந்தது, பெஞ்சமின் ரைட் லெபனான் மலைகளில் வாழ்ந்தபோது, கிறிஸ்துமஸ் தினத்திற்கு முந்தைய நாளன்று, '**எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னை வந்து பாருங்கள்**' என்று பாபா அவரிடம் பேசிய ஓர் உள்ளார்ந்த அனுபவம் அவருக்குக் கிடைத்தது. பென்னின் நண்பர், மற்றுமோர் இளம் அமெரிக்கர், ஸ்டான்லி 'ஸ்கிப்' எம். ஃபிஷர் (STANLEY 'SKIP' M FISHER,**18**), அவருடன் தங்கியிருந்தவரும் இதேபோன்ற அனுபவத்தை அடையப் பெற்றார்.

இருவரும் ஒன்றாக இணைந்து பயணம் செய்ய ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து, லெபனானை விட்டு வெளியேறி, ஜனவரி இரண்டாவது வாரத்தில் இந்தியாவிற்குத் தரைவழியாக பயணம் செய்தனர். அவர்கள் **1968** பிப்ரவரி **11** அன்று மும்பை வந்தடைந்தனர், ஆனால் பென், பாபாவிடம் தனியாக செல்ல விருப்பம் தெரிவித்ததால், இருவரும் இந்தியா வந்ததும் பிரிந்து செல்ல முடிவு செய்தனர். பென் மூன்று வாரங்களுக்காக பூனா சென்ற வேளையில், ஸ்கிப் அஹமதுநகருக்குச் சென்றார்.

பிப்ரவரி **15**ஆம் தேதி பாபாவைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஸ்கிப் ஃபிஷர், ஆதியின் அலுவலகத்திற்கு வந்தார். ஸ்கிப்பிடமிருந்து ஒரு குறிப்பு மெஹராஸாத்திற்கு அனுப்பப்பட்டது, ஆனால், கடுமையான

ஏகாந்தவாசம் மேற்கொண்டதால், பாபா அந்த இளைஞரை சந்திக்க அனுமதிக்கவில்லை. அதற்கு பதிலாக அவர் இந்த ஏழு அறிவுரைகளை எரச் மூலம் அவருக்கு அனுப்பி வைத்தார்:

1) **பாபா கடுமையான ஏகாந்தவாசம் மேற்கொள்வதால் ஸ்கிப் ஃபிஷரைப் பார்க்க மாட்டார்.**
2) **அவர் அதைக் குறித்து மகிழ்ச்சியற்றவராக இராமல், பாபாவை மேலும் மேலும் அடிக்கடி நினைவில் கொண்டு, நேசிக்க வேண்டும் என்று பாபா விரும்புகிறார்.**
3) **அவர் தனது இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்று, ஒரு சாதாரண வாழ்க்கையை வாழவும், தனது வாழ்வாதாரத்தை ஈட்டவும், முடிந்தவரை பாபாவைப் பற்றி சிந்திக்கவும், பாபாவைப் பற்றிய புத்தகங்களை மட்டுமே படிக்கவும் வேண்டும் என்று பாபா விரும்புகிறார். அவர் தனது நண்பர்களுக்கும், பிற அனைவருக்கும் பாபாவைப் பற்றியும் அவருடைய அன்பு மற்றும் சத்தியத்தின் செய்தியைப் பற்றியும் கூற வேண்டும்.**
4) **அவர் இந்த போதை மருந்துகளை உட்கொள்வதை நிரந்தரமாக நிறுத்த வேண்டும் என்று பாபா விரும்புகிறார். அவர் போதைப்பொருளை உட்கொள்ளவோ அல்லது கையாளவோ கூடாது, ஆனால் நேர்மையான மற்றும் இயல்பான வாழ்க்கையை வாழ வேண்டும்; மேலும் போதைப்பொருளால் விளையும் தற்காலிக இன்பத்திற்காக, பிறரிடம் போதை மருந்துகளை உட்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்த வேண்டும். ஆனால் நிச்சயமாக, குறிப்பிட்ட நோய்களின் நிவாரணத்திற்காக, ஒரு மருத்துவ பயிற்சியாளரால் பரிந்துரைக்கப்படும் போது, அத்தகைய மருந்துகளை எடுத்துக்கொள்ளலாம்.**
5) **அவர் (ஸ்கிப் ஃபிஷர்) விரைவில் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்று பாபா விரும்புகிறார்; மேலும் அவர், பாபாவை முழு மனதுடன் நினைவுகூர்ந்து, மேலே குறிப்பிட்டுள்ளபடி 100 சதவிகிதம் அவருக்கு வழங்கப்பட்ட அறிவுரைகளைப் பின்பற்றினால், பாபா அவருக்கு உள்ளளவில் உதவுவார். பாபாவின் ஏகாந்தவாசத்திற்குப் பின்னர், அவரை சந்திக்கும் விஷயத்தில், அவர் (ஸ்கிப் ஃபிஷர்) நியூயார்க் நகரில் வாழும் பாபா-அன்பர்களுடன் தொடர்பில் இருக்க வேண்டும், மேலும் பாபா தனது மேற்கத்திய அன்பர்களுக்கு**

**அவரைப் பார்க்க வருமாறு அழைப்பு விடுத்த பின்னரே அவர் இந்தியாவிற்கு வர வேண்டும்.**

6) **பாபாவின் அறிவுரைகளை நிறைவேற்றத் தயாராக இருந்தால், இக்கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும், அவருடைய நண்பரான பென்னுக்கும் பொருந்தும். எனவே, ஸ்கிப் ஃபிஷர், பென்னைத் தொடர்பு கொண்டு, இந்தக் கடிதத்தை அவருடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று பாபா விரும்புகிறார்.**

7) **தனது உலகப் பொறுப்புகளை விடாமுயற்சியோடும் நேர்மையோடும் செய்யும்போது, அவரது அன்றாடக் கடமைகளின் இடையே கூடுமானவரை பாபாவை நினைவில் கொள்ளுங்கள்.**

**ஸ்டான்லி ஸ்கிப் ஃபிஷர், பென்ஜமின் இருவருக்கும் பாபா அவரது அன்பையும் ஆசீர்வாதத்தையும் அனுப்புகிறார். இந்தியாவிலிருந்து விரைவில் புறப்பட்டு, அமெரிக்காவை சீக்கிரம் சென்றடையுங்கள்.**

பாபாவின் செய்தியை அடையப் பெற்ற ஸ்கிப் ஃபிஷர், மறுநாள் மாலை அஹமதுநகரிலிருந்து ரயிலில் புறப்பட்டுச் சென்று, அமெரிக்காவிலிருந்து பணம் வரும் வரை, ஏழு நாட்கள் மும்பையில் காத்திருந்து, பாஸ்டன் நகருக்கு விமானத்தில் பயணம் செய்தார். பென் ரைட் பூனாவில் சில வாரங்களைக் கழித்து, பின்னர் அஹமதுநகர் சென்றார்.

டான் பிப்ரவரி 15 அன்று மெஹராஸாத்திற்குச் சென்று, அவ்வப்போது செய்வது போல, கைக்கோபாத்தை மருத்துவ ரீதியில் கண்காணித்து வந்தார், அன்று காலை மெஹர்ஜியும் சில மணி நேரத்திற்காக வந்தார்.

1968 பிப்ரவரி 20 செவ்வாய்க்கிழமை காலை 9:30 மணிக்கு ஏற்கனவே அறிவுறுத்தியபடி, கஜ்வானி, பாபா விரும்பிய பாடகர்களில் ஒருவரான ஜெய்ப்பூர் கவாலி பாடகர் மற்றும் அவரது இசைக்கலைஞர்களை மெஹராஸாத்திற்கு அழைத்து வர ஏற்பாடு செய்தார். பாபா, மண்டலி மற்றும் அஹமதுநகரைச் சேர்ந்த சில நெருங்கிய அன்பர்களுக்கு முன்பாக அவர்கள் மூன்று மணி நேர இசை நிகழ்ச்சியை வெகு சிறப்பாக நிகழ்த்தினர். அன்று இரவும், குஷ்ரு குவார்ட்டர்ஸில் 2,000 பேர் ஒன்றுதிரண்ட கூட்டத்திற்கு முன்பாக கவாலி இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

அன்று காலை, பாபா தனது தற்போதைய ஏகாந்தவாசம், மார்ச் 25 அன்று நிறைவடைவதற்கு பதிலாக, மே 21 வரை தொடரும் என்று அறிவித்தார்.

பிற்பகல் சுமார் 3:00 மணியளவில், மெஹராஸாத்தில் அசாதாரண நிகழ்வு ஒன்று நடந்தது. ஒரு பெரிய, கருப்பு முகமும், நீண்ட கால்களும் கொண்ட குரங்கு தோன்றியது. அது எங்கிருந்து வந்தது என்று எவருக்கும் தெரியவில்லை. மண்டலி மண்டபத்தை விட்டு வெளியேறி, பாபா தனது அறைக்குள் நுழைந்தபோது, பிரதான வீட்டின் குல்மொஹர் மரத்தின் கிளையில் அது அமர்ந்திருந்தது. பெண்மணிகள், குரங்கு அதன் கூட்டத்திலிருந்து தப்பித்தவறி வந்திருக்க வேண்டும் என்று நினைத்தனர்; மேலும் ஒவ்வொருவரும் குரங்கைத் துரத்துவதற்கான தந்திரங்களை உற்சாகமாகப் பரிந்துரைத்தனர். பாபாவிற்கு எந்த இடையூறும் விளைவிக்காதபடி ஒருவர் குரல் கொடுத்து அதை விரட்ட விரும்பினார். மற்றொருவர் அதைத் தொந்தரவு செய்யாமல் தனியாக விட்டுவிட்டால் தானாகவே சென்றுவிடும் என்றார். வேறொருவர் அது பசியாக இருக்கலாம் என்று நினைத்து வாழைப்பழம் வழங்கப் பரிந்துரைத்தார். குரங்கு, எவரேனும் அதற்கு அருகில் சென்றால் தாக்கக்கூடும் என்று சிலர் அஞ்சினர், மேலும் அதை அச்சுறுத்தாதபடி கணிசமான தூரத்தில் இருக்குமாறு எச்சரித்தனர். முதலில் குரங்கு அவர்களைக் கண்டு அஞ்சாதவாறு வீட்டின் கூரையில் வாழைப்பழங்கள் கவனமாக வைக்கப்பட்டன. ஆனால் குரங்கு அதன் பற்களை கடித்து, மரக்கிளைகளை ஆவேசத்துடன் அசைத்து, அதுபோன்ற நட்பு சைகைகளை நிராகரித்தது. இதைப் பார்த்த பெண்மணிகள் குரங்கை அப்படியே விட்டுவிட முடிவு செய்து, அலட்சிய போக்கைக் கடைப்பிடித்தனர்.

குரங்கு அமைதியாக இருந்த சுமார் ஒரு மணி நேரம் எல்லாம் நன்றாக இருந்தது, ஆனால் அது திடீரென வெறித்தனம் பிடித்தது போல மாறியது. பிரதான வீட்டின் மீது பாய்ந்து, அது ஒரு கூரையிலிருந்து மற்றொரு கூரைக்கு வேகமாகத் தாவி, பல ஓடுகளை உடைத்தெறிந்தது. அதற்குப் பிறகு குரங்கு வீட்டின் உச்சியிலிருந்து மிகவும் ஆபத்தான முறையில் கீழே குதித்தது; பாபாவின் அறைக்கு வெளியே அமர்ந்து அலறல் சத்தமிட்டது. அப்போது பாபா ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்; பாவ் கல்சூரியும், டாக்டர் கோஹெரும் அவருடன் இருந்தனர். மேற்கூரை அவர்கள் மீது இடிந்து விழும் என்று எண்ணி, பாபாவைப் பாதுகாக்கும் விதத்தில் கோஹெர், விரைவாகத் தன் உடலால் அவர் உடலை மூடிக்கொண்டு, பாபாவின் நாமத்தை மொழிந்தார்.

இதற்குப் பிறகு, குரங்கைத் துரத்தும் முயற்சியில் ஆண்களும் ஒன்றிணைந்து, மூங்கில் கம்பிகள், துடைப்பங்கள், கையுறைகள் மற்றும் குடைகளை அசைத்து, அங்குமிங்கும் குரங்கை சுற்றி வளைத்து துரத்திய போது, அது மரத்தின் உச்சியிலிருந்து மற்றுமோர் உச்சிக்கும், கூரையிலிருந்து

கூரைக்கும் விரைந்து பாய்ந்தது. சூரிய அஸ்தமனத்திற்கு சற்று முன்பு, குரங்கு தனது குறும்புத்தனங்களை நிறுத்திவிட்டு, பிம்பல்காவ்ம் கிராமத்தை நோக்கிச் சென்றது, பின்னர் அது ஒரு மாதத்திற்கும் மேலாக அமைதியாக அங்கேயே இருந்து, அது வந்ததைப் போலவே திடீரென மறைந்தது.

இந்த சம்பவத்தைக் குறித்து பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: **“நான் ஏகாந்தவாசத்தை நீட்டிக்க முடிவு செய்த அதே நாளில், என் அறையின் கூரையில் குரங்கு விளைவித்த அழிவும், அட்டகாசமும் எனது பணியைப் பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, மேலும் மே 21க்குப் பிறகு நடைபெறவிருக்கும் அனைத்துடனும் தொடர்புடையது.**”

ஸாம் கேரவாலாவின் விடுமுறை இந்த நேரத்தில் நிறைவடைந்தது; அவர் எகிப்து நாட்டுக்கு விமானத்தில் பயணம் செய்து, அங்கு ‘எம்.வி. பர்வதி ஜெயந்தி’ (M.V. PARVATI JAYANTI) கப்பலில் இணைந்தார். அங்கிருந்து கப்பல் மும்பையை நோக்கிப் புறப்பட்டது. சில மாதங்களுக்கு முன்பு, ஸாம் மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்தபோது, 1968 பிப்ரவரி 21 அன்று, ஸாம் இருக்கும் இடத்தை பாபாவிற்குத் தெரிவிக்குமாறு அவருக்குக் கட்டளையிட்டிருந்தார்; மேலும் இந்தத் தகவல் 21ஆம் தேதிக்கு குறைந்தது மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு முன்னதாகவே பாபாவைச் சென்றடைய வேண்டும். பாபா அவருக்கு இதுபோன்ற ஒரு கட்டளையை வழங்குவது இதுவே முதல் முறை, மேலும் பாபா மிகவும் கடுமையான ஏகாந்தவாசம் மேற்கொண்ட இந்த நேரத்தோடு ஒத்துப்போனது; இவ்வேளையில் அனைத்து கடிதப் பரிமாற்றங்களும் முற்றிலும் நிறுத்தப்பட்டன. ஆனால் பாபா, “**இந்த விதிமுறை ஸாமுக்குப் பொருந்தாது; ஸாம், அந்த நாளில் அவர் இருக்கும் இடத்தைத் தவறாமல் எனக்குத் தெரிவிக்க வேண்டும்**” என்று கூறியிருந்தார்.

அதன்படி, 1968 பிப்ரவரி 18 அன்று ஸாம், பாபாவிற்கு ஒரு தொலைத்தந்தியை அனுப்பினார், அதில் அவர் மும்பையை நோக்கிக் கப்பலில் பயணம் செல்வதாகவும், மேலும் பாபாவின் பிறந்தநாளை ஒட்டி அவருக்கு அன்பையும் மரியாதையையும் தெரிவித்து வாழ்த்துவதாகவும் கூறியிருந்தார். ஸாம் பயணம் செய்த கப்பல் அடுத்த நாள் அட்லாண்டிக் பெருங்கடலில் நுழைந்தது. கடுமையான சூறாவளி காற்று, தூறலுடன் மழைப்பொழிந்து கொண்டிருந்ததால் கண்பார்வை எட்டும் தூரம் மிகக் குறைவாக இருந்தது. கப்பலின் சரியான இருப்பிடத்தை அவர்களால் துல்லியமாகக் கண்டுகொள்ள முடியாத நிலையில், அவர்களின் கணக்கீடுகள் சுட்டிக்காட்டியதை விட கப்பல் கடற்கரைக்கு மிக அருகில் நகர்ந்தது.

பிப்ரவரி 21 அன்று காலை 8:30 மணி முதல் இரவு 8:30 மணி வரை, கப்பல் பாறைகளால் சூழப்பட்ட கரையில் நகர்ந்து கொண்டிருந்தது, கடல் சீற்றம் காரணமாக கப்பல் கடுமையாகத் தாக்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாக அன்று இரவு, உச்ச அலையின் நேரம் ஆதலால், அவர்களால் கப்பலை கரையோரம் தரையிறங்கச் செய்து, மெதுவாக மொராக்கோ நாட்டின் காஸாபிளாங்கா (CASABLANCA IN MOROCCO) துறைமுகத்திற்குள் நுழைய முடிந்தது, அங்கு கப்பல் நிறுவனத்தின் பணியாளர்கள் மற்றும் காப்பீட்டு முகவர்கள் கப்பலில் ஏறி, சரக்குகளை இறக்கிக்கொண்டிருந்தபோது, கப்பலின் மேல் கட்டுமான பகுதியில் மூன்று அல்லது நான்கு உலோகத் தகடுகள் அவிழ்ந்து, அனைத்து பிணைப்பு ஆணிகளும் உடைந்திருப்பது கவனிக்கப்பட்டது. அந்தத் தட்டுகள் அப்படியே இருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்த குழுவினர், கப்பலை நகர்த்தி கிட்டத்தட்ட 70 மைல் தூரம் பயணிக்க அனுமதித்தனர். அதைத் தொடர்ந்து கப்பல் சரிசெய்ய முடியாததாகக் கண்டறியப்பட்டு, மொத்த இழப்பாக அறிவிக்கப்பட்டது.

கப்பலில் பயணம் செய்த அனைவரையும் காப்பாற்றியது பாபாதான் என்பதை ஸாம் நன்கு அறிந்திருந்தார், மேலும் காஸாபிளாங்கா துறைமுகத்திலிருந்து எழுதிய கடிதத்தில் அவருக்கு அனைத்து விவரங்களையும் தெரிவித்ததற்கு பதிலளிக்கும் விதத்தில், பாபா இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: **“உங்கள் பிறந்தநாள் தொலைத்தந்தி மற்றும் கடிதம் வந்து சேர்ந்தது. கவலைப்பட வேண்டாம். 'பர்வதி ஜெயந்தி' கப்பலில் அன்று பயணம் செய்த உங்களுக்கும் பிற அனைவருக்கும் என் அன்பும் ஆசீர்வாதமும். ஏகாந்தவாசத்திலிருந்து மெஹர் பாபா.”**

1968 பிப்ரவரி 20 முதல், எதிர்வரும் பிறந்தநாள் விழாக்களின் காரணமாக பாபா மண்டலி மண்டபத்தில் அவரது காலை நேர ஏகாந்தவாசப் பணியை நிறுத்தினார். அடுத்த நாள், பாபா சுற்றறிக்கை ஒன்றின் விபரங்களை எடுத்துரைத்து, அதை பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு, மார்ச் 4 அன்று தட்டச்சு செய்து, அச்சிடப்பட்டு உலகம் முழுவதும் அஞ்சலாக அனுப்பப்படும் அறிவுறுத்தல்களுடன் ஆதிக்கு அனுப்பி வைத்தார்.

பின்வரும் செய்தி அவதார் மெஹர் பாபா மேற்கொண்ட ஏகாந்தவாசத்திலிருந்து அவரது அன்பர்களுக்கு வழங்கப்பட்டது:

**1968 மார்ச் 25ஆம் தேதியுடன் எனது ஏகாந்தவாசம் நிறைவடையாது என்பதை என் அன்பர்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனது ஏகாந்தவாசம் தொடர வேண்டும், ஏனெனில் நான் மேற்கொள்ளும் பணி, 1968 மே 21ஆம் தேதிக்கு முன்பு முடிவடையாது.**

மார்ச் 25 அன்று முடிவடைய இருந்த ஏகாந்தவாசம், 1968 மே 21 வரை தொடர வேண்டும். இது தவிர்க்க முடியாதது.

இந்த ஏகாந்தவாசத்தில் நான் மேற்கொள்ளும் பணியின் மகத்துவத்தைக் குறித்து, எவருக்கும் எந்த எண்ணமும் இருக்க முடியாது. நான் வழங்கக்கூடிய ஒரே குறிப்பு என்னவெனில், நான் ஏகாந்தவாசத்தில் மேற்கொள்ளும் பணியுடன் ஒப்பிடுகையில், உலகின் அனைத்து முக்கியமான பணிகளும் ஒன்றாகச் சேர்க்கப்படுவது கூட மிகச் சிறியதாக இருக்கும். என்னைப் பொறுத்தவரை எனது பணியின் சுமை என்னை நசுக்கினாலும், அந்தப் பணியின் பலன் உலக மக்கள் அனைவராலும் தீவிரமாக உணரப்படும்.

எனது பிறந்தநாள் செய்தியில் நான் அறிவித்த அனைத்தும் கடந்து செல்லும் என்பதை நீங்கள் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன் - ஒரே வேறுபாடு என்னவெனில், 1968 மார்ச் 25க்குப் பிறகு விரைவில் நடக்க இருந்தது, இப்போது 1968 மே 21 முடிந்ததும் நடக்கும்.

நான் மீண்டும் சொல்கிறேன், இதுவரை நடக்காத ஒரு மகத்தான சம்பவம் நடக்கும். ஆனால் இப்போது அது 1968 மே 21க்கு முன்னதாக நடக்காது.

பிரபஞ்சத்தின் தலைவிதி எனது ஏகாந்தவாசத்தின் தோள்களில் தொங்குகிறது; மேலும், மனிதகுலத்தை மீட்பது எனது இறை வெளிப்பாட்டைப் பொறுத்தது என்பதையும் நான் மீண்டும் சொல்கிறேன்.

என் அன்பர்களிடம் நான் கேட்பதெல்லாம், 1968 மே 21ஆம் தேதிக்குள் எனது பணியை நிறைவு செய்ய எனக்கு உதவுங்கள்; இதனால் இந்தத் தேதிக்குள் ஏகாந்தவாசத்தில் மேற்கொள்ள வேண்டிய எனது உலகளாவிய பணி நிறைவடையும்; அதன் பின்னர் ஏகாந்தவாசத்திற்கான எந்தத் தேவையும் இராது.

இந்தப் பணியில் எனக்கு உதவ, 1968 மே 21ஆம் தேதி வரை, அனைத்து அன்பர்களும் தனித்தனியாகவோ அல்லது குழுவாகவோ தினமும் ஒருமுறை குருநாதருக்கான பிரார்த்தனை மற்றும் மனம் இரங்கி மன்னிப்புக் கோரும் பிரார்த்தனையை தொடர்ந்து மொழிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; மேலும், 1968 மே 19 ஞாயிற்றுக்கிழமை - அதாவது மே 18 நள்ளிரவு முதல் 19 நள்ளிரவு வரை 24 மணிநேரம் முழு மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். (இந்த நாளில், பிரார்த்தனைகளை உரத்த குரலில் மொழியக் கூடாது, ஆனால் அமைதியாக மனதிற்குள் மொழிய வேண்டும்.)

**இதன் விளைவாக, மார்ச் 17ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மௌனம் கடைப்பிடிக்கக்கூடாது.**

**1968 மே 21ஆம் தேதி வரை முற்றிலும் இடையூறு எதுவுமின்றி இருக்க விரும்புவதை வலியுறுத்துகிறேன். எந்த சூழ்நிலையிலும் யார் ஒருவரும் என்னை சந்திக்க முயற்சிக்கக் கூடாது. எனது பணிக்காக எவரையேனும் பிரத்யேகமாக அழைக்க வேண்டுமாயின், நானாகவே அவரை அழைப்பேன். கடிதப் பரிமாற்றத்திற்கு நான் விதித்துள்ள கட்டுப்பாடு தொடர வேண்டும், அது கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டும்.**

**'என் அன்பர்களை சந்திப்பேன் அல்லது அவர்களுக்கு தரிசனம் வழங்குவேன்' என்று நான் அறிவிக்கும் வரை, யார் ஒருவரும் தன்னிச்சையாக வரக்கூடாது, ஆனால் பொறுமையாகவும், அன்புடனும், எனது சுய அறிவிப்புக்காகக் காத்திருக்க வேண்டும்.**

**அவதார் மெஹர் பாபாவின் மேற்கூறிய செய்தியை உங்கள் பணியுடன் தொடர்புள்ள அனைவருக்கும் தயவு செய்து விரைவாக எடுத்துச் செல்லுங்கள்.**

**தயவு செய்து மிகவும் உன்னிப்பாக கவனிக்கவும்: கிழக்கு மற்றும் மேற்கத்திய அன்பர்கள், அவருக்கு முற்றிலும் எவ்விதமான இடையூறும் விளைவிக்காமல் இருக்க வேண்டும் என்று பாபா விரும்புவதையும், அவருடைய அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னர் அவர்கள் பாபாவின் தரிசனத்திற்காக வரக்கூடாது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்.**

**அவதார் மெஹர் பாபா 1968 ஏப்ரல் முதல் ஜூன் இறுதி வரை வழக்கம் போல குருபிரசாத், 24, பந்த் கார்டன் சாலை, பூனா-1 எனும் முகவரியில் தங்க உள்ளார். குருபிரசாத்தில் அவரது ஏகாந்தவாசப் பணி இடையூறு இல்லாமல் தொடரும், எனவே அவர் அங்குத் தங்கியிருக்கும் வேளையில் முற்றிலும் தொந்தரவு இல்லாமல் இருக்க விரும்புகிறார்.**

1967 டிசம்பர் மாதத்தில், பாபா அவரது பிறந்தநாளுக்காக ஒரு செய்தியை எடுத்துரைத்தார்; அந்த நாளில் '**அவரது அன்பர்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்**' என்றும் குறிப்பிட்டார்; ஏனெனில் "**மார்ச் 25ஆம் தேதிக்குப் பின்னர், இதுகாறும் நிகழாத ஒரு மகத்தான சம்பவம் நிகழும்.**" இந்த ஆண்டிற்காகத் தயாராக இருக்கும் எண்ணத்தில், எரச் மேற்கூறிய செய்தியுடன் நூற்றுக்கணக்கான தொலைத்தந்திகளைத் தயார் செய்து, 1968 பிப்ரவரி 8 அன்று

இந்தியாவில் வாழும் அன்பர்களுக்கும் 13ஆம் தேதி ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா அன்பர்களுக்கும் அனுப்பினார்.

அதைத் தொடர்ந்து, இந்தக் கடைசி சுற்றறிக்கையை பாபா எடுத்துரைத்த பிறகு, பிறந்தநாள் செய்தியை இவ்வாறு மாற்ற விரும்பினார்: **"மே 21க்குப் பின்னர் உடனடியாக ஏதேனும் பெரிய சம்பவம் ஒன்று நிகழும்!"** எனவே, எரச் அவரது சகோதரர் மெஹர்வான் இருவரும் புதிய தொலைத்தந்திகளை அனுப்ப கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது.

பிப்ரவரி 20 மற்றும் 22 தேதிகளில், இந்தத் தொலைத்தந்தி பாபாவிடமிருந்து முறையே ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா, பாகிஸ்தானில் வாழும் அவரது அன்பர்களுக்கு அனுப்பப்பட்டது:

**எனது 74ஆவது பிறந்தநாளைக் கொண்டாட, என் அன்பில் ஒன்றுகூடி இருக்கும் அனைவருக்கும் நான் மேற்கொள்ளும் ஏகாந்தவாசத்திலிருந்து, என் ஆசிகளை அனுப்புகிறேன். அன்பானது, உருவமற்ற எல்லையில்லா ஏக இறைவனை, இறை-மனிதனாக வரையறுக்கப்பட்ட உருவில் மனிதர்களிடையே கொண்டுவருகிறது. அன்பின் நிமித்தம் நான் உங்கள் மத்தியில் வந்துள்ளேன், ஆதலால் என்னை மேலும் மேலும் நேசிக்கவும்.**

பல சந்தர்ப்பங்களில் 'அவதாரின் உறைவிடத்தில்' (AVATAR'S ABODE) வாழும் அன்பர்கள் ஒரு புதிய பிறந்தநாள் வாழ்த்து அட்டையை உருவாக்குவதும் அல்லது பாபாவின் செய்திகளில் ஒன்றை நகலெடுத்து பாபாவிற்கு அனுப்புவதும் வழக்கம். அந்த வருடம் ஜான் புரூஃபோர்ட் ஓர் அட்டையில் பாபாவின் முகத்தை மையால் வரைந்து இந்தியாவிற்கு அனுப்பினார். அந்த ஓவியத்தைப் பார்த்த பாபா அதை முத்தமிட்டார். அவர் ஜானுக்கு (1968 பிப்ரவரி 29 அன்று) தொலைத்தந்தி ஒன்றை அனுப்பினார்: **"நீங்கள் வரைந்த எனது ஓவியம் நானே முத்தமிடத் தூண்டுதலாக இருந்தது."** ஃபிரான்சிஸ், ப்ரூஃபோர்டுக்கு எழுதிய கடிதத்தில், பாபா இதுகாறும் இப்படி ஒன்றைச் செய்ததைப் பார்த்ததில்லை என விவரித்திருந்தார்.

1968ஆம் ஆண்டில், கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் அமைந்த மெஹர் பாபா மையங்களில் அவரது பிறந்தநாளை பொதுமக்களிடையே கோலாகலமாக, பெரிய அளவில் கொண்டாட வேண்டும் என்று பாபா தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார், மேலும் பலர் அவ்வாறு செய்ய திட்டமிட்டதில் அவர் மகிழ்ச்சியடைந்தார். இப்போது 150க்கும் மேலான மெஹர் பாபா மையங்களைக் கொண்ட ஆந்திரப் பிரதேசத்தில், பாபாவின் 74ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, 74 நாட்கள் நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன. "ஊக்கமும், உற்சாகமும் மிக்க ஆந்திரா மக்கள் ஆழ்கடலில் மூழ்கி மெஹர்

பாபாவைப் பற்றி மீன்களுக்கும் சொல்லிவிடுவார்கள்” என்று மண்டலியில் ஒருவர் குறிப்பிட்டு அவர்களைப் பாராட்டினார்.

1968 பிப்ரவரி 25 ஞாயிற்றுக்கிழமை, பாபாவின் பிறந்தநாளுக்காக மெஹராஸாத் பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டது. வழக்கம் போல, பாபா அன்று காலை அவரது அறையில், ஒவ்வொரு மண்டலி மற்றும் ஓட்டுநர் யூஸுஃப், அலங்காரத்திற்காக முழு முனைப்பில் ஈடுபட்ட தோட்டத் தொழிலாளர்களையும் தழுவினார். அப்போது பாபா தனியாக ஒரு மணி நேரம் மண்டலி மண்டபத்தில் பணிபுரிந்தார்.

அன்று, பாபா இந்த சிறப்புச் செய்தியை, தொலைத்தந்தி மூலம் உலகம் முழுவதிலும் வாழும் தனது அன்பர்களுக்கும் அனைத்து மையங்களுக்கும் அனுப்பினார்:

**வெளியளவில் அனுஷ்டிக்கப்படும் இந்தப் பிறந்தநாளில், எனக்காக வாழும், மேலும் எனது கட்டளையின் பேரில் எனக்காக உயிரைத் துறக்கும் அனைவருக்கும் எனது மரியாதையையும், வணக்கத்தையும் அனுப்புகிறேன்.**

அன்றைய தினம் அஹமதுநகர் மெஹர் மையத்தில் ஒரு மாபெரும் பிறந்தநாள் விழா நடைபெற்றது. நகரின் வெவ்வேறு சாலைகளில் வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டன, பெரிய அளவில் அலங்காரங்கள் செய்யப்பட்டன. முந்தைய ஆண்டைப் போலவே, ஒரு பெரிய ஊர்வலம் திட்டமிடப்பட்டது, மேலும் ஜபல்பூர் கல்லூரியின் முதல்வர் கிரிஜாநந்தன் துபே (GIRIJANANDAN DUBE) காந்தி மைதானத்தில் பொது உரை ஒன்றை வழங்க இருந்தார்.

அன்று பிற்பகல் சுமார் 4:00 மணியளவில் மெஹராஸாத்தில் பாபா அவரது அறையில் இருந்தபோது, பாவ் கல்சூரியிடம் கூறினார், “**இன்று, அஹமதுநகர் மக்கள் எனது பிறந்தநாளை பொது இடங்களில் கோலகலமாகக் கொண்டாடப் போகிறார்கள். இன்று மாலை, அவர்கள் நகரம் முழுவதும் ஒரு பெரிய ஊர்வலம் நடத்த உள்ளனர் என்று எனக்குத் தெரியும். எல்லோரும் இதற்காக மிகவும் கடினமாக உழைத்ததில் மிக்க மகிழ்ச்சியாகவும், மனநிறைவுடனும் இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன். ஆனால் மழை பொழிந்தால் அனைத்தும் சீரழிந்துவிடும்; மழை வரும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**”

பாவ் கல்சூரி, “இல்லை, பாபா, மழை பொழியாது! வானம் தெளிவாக உள்ளது” என்றார்.

**“ஆனால் மழை பொழிந்தால் என்ன நடக்கும்? ஊர்வலத்திற்காக இரவு பகலாக உழைத்ததால் ஸரோஷ் மிகவும் வருத்தப்படுவார். மழை**

**பொழியும் என்று நினைக்கிறீர்களா? வெளியே சென்று வானத்தைப் பாருங்கள்.**"

பாவ் கல்சூரி வெளியே சென்று வானத்தைப் பார்த்துவிட்டு திரும்பி வந்து, அதையே திரும்பத் திரும்பச் சொன்னார், "மழை பொழியாது, பாபா. வானம் மிகவும் தெளிவாக உள்ளது. மழைக்கான அறிகுறியே இல்லை. கவலைப்படாமல் இப்போது ஓய்வெடுங்கள்."

பாபா எந்த பதிலும் கூறாமல் படுக்கையில் சாய்ந்தார்; ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு மீண்டும் எழுந்து அமர்ந்து, '**மேகங்கள் ஒன்றுதிரண்டுள்ளனவா**' என்று வெளியே சென்று பார்க்குமாறு பாவ் கல்சூரியிடம் கூறினார். அவர் பார்த்துவிட்டு மேகங்கள் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். "இது மழைக்காலம் கூட இல்லை" என்று பாவ் கல்சூரி சுட்டிக்காட்டினார்.

பாபா அவரை ஒவ்வொரு பதினைந்து நிமிடங்களுக்கும் வெளியே அனுப்புவதைத் தொடர்ந்தார்; மேலும் அவர் ஐந்து மணிக்கு வெளியே சென்று பார்க்கச் சொன்னபோது, வானத்தில் கார்மேகங்கள் நிறைந்திருந்தன. "**பாருங்கள்! நான் எச்சரித்தேன்! இப்போது என்ன நடக்கும்?**" என்று பாபா சைகையால் தெரிவித்துக் கொண்டிருந்த அந்த நேரத்தில் மழை கொட்டத் தொடங்கியது.

பாவ் கல்சூரி திகைத்துப் போனார். பாபா உடனே, "**இப்போதே சென்று அலோபாவை** (அவரது சைக்கிளில்) **நீர் வளத் தளத்திற்கு அனுப்பி, தொலைபேசி மூலமாக ஆதியைத் தொடர்புகொண்டு அஹமதுநகரில் மழை பொழிகிறதா?**" என்று கேட்குமாறு சைகையால் தெரிவித்தார். வெளியே மழை பெய்து கொண்டிருந்ததால், பாவ் கல்சூரி, கோஹெரிடம் ஒரு குடையைக் கொண்டு வருமாறு கேட்டுக்கொண்டார், ஆனால் பாபா பொறுமையின்றி, "**சீக்கிரம்! இப்போதே செல்லுங்கள்!**" என்று கூறவே, பாவ் கல்சூரி மழையில் நனைந்தபடி ஆண்கள் பக்கமாக வளாகத்தைத் தாண்டிச் சென்றார். அலோபாவிற்குச் செய்தியை வழங்கி விட்டு பாபாவிடம் திரும்பி வந்தார்.

பாபா உடனே அவரிடம் வினவினார், "**அலோபா, ஆதியை தொலைபேசியில் அழைத்த பின்னர் அந்தச் செய்தியை என்னிடம் கொண்டு வரச் சொன்னீர்களா?**"

"இல்லை, பாபா. நான் எப்படி அவரிடம் அதைச் சொல்வது? நீங்கள் அவர்களை அழைக்காதவரை உங்கள் அறைக்கு யார் ஒருவரும் வர அனுமதிக்கப்படுவதில்லை."

"**நீங்கள் மறுபடியும் சென்று அவரிடம் சொல்லுங்கள்**" என்றார் பாபா. "**உங்களைப் போன்ற முட்டாள்களை நான் பார்த்ததே இல்லை!**" மீண்டும், பாவ்

கல்சூரி மழையில் துள்ளிக் குதித்து, தொலைபேசி விவகாரம் குறித்த செய்தியை பாபாவிற்குத் தெரிவிக்குமாறு அலோபாவிற்கு அறிவுறுத்தச் சென்றார். அலோபா ஏற்கனவே சென்று விட்டதால், பாவ் கல்சூரி, மெஹர்வானிடம், திரும்பி வந்ததும் சொல்லுமாறு கூறினார்.

பாவ் கல்சூரி அறைக்குத் திரும்பி வந்ததும், முற்றிலும் நனைந்து, எரிச்சலடைந்த நிலையில் அவரது மனதில் எண்ணங்கள் அலைமோதின: "ஆதியை தொலைப்பேசியில் அழைத்துப் பேசுவதில் என்ன அவசரம்? அஹமதுநகரில் மழை பெய்தால், பெய்யட்டும்! அதில் பாபா என்ன செய்வார்? இதோ, நான் முற்றிலுமாக நனைந்துவிட்டேன்; நள்ளிரவு வரை பாபாவுடன் இந்த ஈரமான உடையில் அமர்ந்திருக்க வேண்டும்!"

பாவ் கல்சூரி, பாபாவின் அறைக்குள் நுழைந்ததும் பாபா, "**அஹமதுநகரில் மழை பெய்தால் எல்லாம் சீரழிந்துவிடும்**!" என்று சைகையால் தெரிவித்தார்.

அதற்கு பாவ் கல்சூரி, "அங்கே நிகழும் நிகழ்ச்சி பாழாகிறதோ இல்லையோ, இங்கே எனது திட்டம் முற்றிலும் பாழாகிப்போனது! நான் முழுவதுமாக நனைந்து ஈரமாகிவிட்டேன்!" என்றார்.

பாபா சிரித்துக்கொண்டே, "**இங்கே வாருங்கள்**" என்று சைகையால் அழைத்து, அவரது கைக்குட்டையால் பாவ் கல்சூரியின் முகத்தை மென்மையாகவும் அன்பாகவும் துடைக்கத் தொடங்கினார்.

பாவ் கல்சூரி உடனே, "அதை என்னால் செய்ய முடியும் பாபா" என்றார்.

இருப்பினும் பாபா தொடர்ந்து, அவர் பாவ் கல்சூரியிடம் ஈரமான ஆடைகளைக் கழற்றி, அவற்றைப் பிழிந்து, உலர்த்துவதற்காக அறையில் கம்பியில் தொங்கவிடக் கூறி, உடலைச் சுற்றி அணிந்து கொள்ள ஒரு போர்வையைக் கொடுத்தார்.

இந்த நேரத்தில், பாபாவின் கருணை மற்றும் மென்மைத் தன்மையால் பாவ் கல்சூரி மனம் நெகிழ்ந்து போனார்; நடந்ததை நினைத்து அவர் எரிச்சலடையவில்லை. ஆயினும்கூட, பாபா ஏன் இந்த வீண் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார் என நினைத்து ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்.

அலோபா விரைவில் மகிழ்ச்சியான செய்தியுடன் திரும்பி வந்தார்: "அஹமதுநகரில் ஒரு துளி மழை கூட இல்லை என்று ஆதி கூறுகிறார். உண்மையில், அங்கு மேகங்கள் ஒன்று திரளாமல், வானம் தெளிவாக உள்ளது, ஊர்வலம் தொடங்குகிறது. இதுவரை நடந்த நிகழ்ச்சி அனைத்தும் வெற்றிகரமாக உள்ளது."

அப்போது, பாபா ஏன் அப்படி நடந்து கொண்டார் என்று பாவ் கல்சூரிக்குப் புரிந்தது.

பாபாவின் சகோதரர் ஆதி ஜூனியர் ஊர்வலத்தில் கலந்து கொண்டு, திரும்பி வந்து பாபாவிடம், 'அஹமதுநகரின் வரலாற்றில் இது போன்ற ஊர்வலம் ஒன்றைப் பார்த்ததில்லை' என்று தெரிவித்தார். மாலை, 5:00 முதல் 11:00 மணி வரை, ஆறு மணி நேரம் நடந்த இந்த அணிவகுப்பில், அலங்கரிக்கப்பட்ட 25 மாட்டு வண்டிகள், இரண்டு அல்லது மூன்று வேறுவேறு வாத்தியக் குழுக்கள், லெஜிம் நடனக் கலைஞர்களின் இரண்டு குழுக்கள், வாள் கூத்துகள், ஒரு வெண் குதிரை, வாணவேடிக்கை ஆகியவை இடம்பெற்றன. பல பஜனைக் குழுக்கள் மற்றும் ஒரு கவாலி குழு. ஆனால் மக்களின் ஒருமித்த கவனமும், மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திறந்த ஜீப்பில், பாபாவின் ஒளிரும் ஆளுயர ஓவியத்தில் இருந்தது. சில பார்வையாளர்களுக்கு பாபாவே வாகனத்தில் ஊர்வலம் வருவது போலத் தோன்றியது!

மெஹர் பாபாவை கௌரவிக்கும் இந்த அணிவகுப்பில் ஒவ்வொரு மதத்தைப் பின்பற்றுபவர்களும் பங்கேற்க வேண்டும் என்று ஆதி விரும்பினார்; அதை மனதில் கொண்டு, பிம்பல்காவ்ம் கிராமத்திலிருந்து சில கிறிஸ்தவ நண்பர்களை அழைத்தார். மேலும் ஒரு சில பௌத்தர்கள், சீக்கியர்கள் மற்றும் ஸொராஸ்ட்ரிய பாதிரியார் ஒருவரும் கலந்து கொண்டனர். ஏறக்குறைய 30,000 அனைத்து மதத்தினரும் இந்த ஊர்வலத்தில் பங்கெடுத்தனர், அதைக் கேள்விப்பட்ட பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

1968 பிப்ரவரி 27 அன்று, பாபா, அஹமதுநகர் மையத்தின் முக்கிய சேவகர்களில் பத்து நபர்களை மெஹராஸாத்திற்கு அழைத்தார். பாபா அவரது பிறந்தநாளை ஒட்டி இவ்வளவு பிரமாண்டமான கொண்டாட்டத்தை, குறிப்பாக காந்தி மைதானத்தில் ஊர்வலம் மற்றும் உரை நிகழ்த்துவதில் அவர்களின் அயராத முயற்சிகளைப் பாராட்டினார். கிரிஜாநந்தன் துபே, டி.கே. ராமானுஜம், 28, (கிரிஜாநந்தனுடன் வந்தவர்கள்) ஆகியோரும் பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். ஒரு கட்டத்தில், துபே கடவுளிடம் சரணடைவது பற்றி பாபாவின் முன்னால் ஈரடிக் கவிதை ஒன்றை மொழிந்ததை பாபா பாராட்டினார். பாபாவை வணங்கவோ அல்லது தழுவவோ கூடாது என்று முன்கூட்டியே எச்சரிக்கப்பட்ட போதிலும், துபே, ராமானுஜம் இருவரும் புறப்படுவதற்கு முன்பு பலமுறை பாபாவின் கன்னங்களில் முத்தமிட அனுமதித்தார்.

உலகெங்கிலும் உள்ள பெரிய மற்றும் சிறிய மையங்களில், அந்த ஆண்டு பாபாவின் பிறந்த நாள் முன்னெப்போதும் கண்டிராத ஆடம்பரத்துடனும்

ஆரவாரத்துடனும் கொண்டாடப்பட்டது. பாபா அவரது ஏகாந்தவாசத்தை நீட்டிப்பது குறித்து மார்ச் 4ஆம் தேதி அனுப்பிய சுற்றறிக்கை அவரது அன்பர்கள் மற்றும் பக்தர்களின் கைகளை வந்தடையவில்லை; மேலும் முன்னெப்போதும் இல்லாத ஒன்றைப் பற்றி எல்லா இடங்களிலும் பல விவாதங்கள் நடந்தன. செய்தித்தாள்கள் பாபாவின் ஆபத்தான அறிவிப்புகளைப் பற்றிய கட்டுரைகளை அச்சிட்டன. இந்தியாவின் சில நகரங்களில், 'பேரழிவின் காலநேரம் ஒத்திவைக்கப்பட்டது' மற்றும் 'எதிர்வரும் பேரிடர்!' போன்ற திடுக்கிடும் தலைப்புகளுடன் வெளிவந்த கட்டுரைகள் பெரும் பரபரப்பை உருவாக்கியது. இதன் மூலம் பொதுமக்களின் கவனம் மெஹர் பாபா மீது குவியத் தொடங்கியது. இதைத்தான் பாபா விரும்பினார்.

ஜபல்பூரைச் சேர்ந்த அன்பர் ஒருவர், பாபாவின் பிறந்தநாளில் ஒரு பொதுக்கூட்டத்திற்கு முன்னால் தனது உரையில், பாபா அறிவித்ததைக் குறிப்பிடலாமா என்று கேட்டு பாவ் கல்சூரிக்கு எழுதியிருந்தார்; அதைக் குறித்து எதுவும் சொல்லத் தேவையில்லை என்று பாவ் கல்சூரி பதில் எழுதினார். இதை பாபாவின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, பாவ் கல்சூரியின் பதிலால் அதிருப்தி அடைந்த அவர், '**இதுவரை நடக்காத ஒன்று நடக்கப் போகிறது!**' என்று கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும் என அந்த நபரிடம் தெரிவித்து, மீண்டும் எழுதுமாறு அறிவுறுத்தினார்.

பொதுவாக, இது போன்ற விஷயங்கள் பரபரப்பை விளைவித்து, எதுவும் நடவாத சூழ்நிலையில், அதன் விளைவு சாதகமற்ற எதிர்வினையாக மாறும். ஆனால் மெஹர் பாபாவின் விஷயத்தில், பொதுமக்கள் தரிசனத்திற்காக ஏங்கினர்! கடவுளை நேசிப்பவர்களைப் பொறுத்தவரை இது முற்றிலும் வேறுபட்டது, ஏனெனில் அவர்களின் உள்ளார்ந்த அன்பு, தெய்வீக குருநாதரிடமிருந்து எந்தவிதமான மாறும் சூழ்நிலையையும் அல்லது கூற்றுகளையும் சார்ந்ததாக இராது. ஆனால் இங்கு பொதுஜனங்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இருப்பினும், பாபாவின் மீது ஆர்வம் கொண்டவர்கள், அந்தப் 'பேரிடர்' இதுகாறும் நிகழாத போதும் கூட, மெஹராஸாத்திற்கு நேரடியாக கடிதங்களை எழுதினர்.

இக்காலகட்டத்தில் பாபாவின் வருகையின் தொடக்கத்திலிருந்து, இது போன்ற நிகழ்வுகள் பொதுவாக நடந்த வண்ணம் இருந்தன. பாபா பொது அறிவிப்புகளை வெளியிட்டு, அவர் அறிவித்ததற்கு இணங்க நிகழாத போதிலும், முடிவுகளும் விளைவுகளும் எப்பொழுதும் சாதகமாகவே இருந்ததைக் காண முடிந்தது. எடுத்துக்காட்டாக, 1932இல் லாஸ் ஏஞ்சலஸ், ஹாலிவுட் பவுலில்

பாபா, தனது மௌனத்தைக் கலைக்கப் போவதாக அறிவித்தார். அமெரிக்க தேசம் முழுவதும் அவரது முதல் வார்த்தைகளை வானொலியில் ஒலிபரப்ப விரிவான ஏற்பாடுகளை செய்தபோது, பாபா அமைதியாக ஹவாய் மற்றும் சீனா வழியாக இந்தியாவிற்குப் புறப்பட்டார். இது பொதுமக்களிடையே ஒரு மாறுபட்ட எண்ணத்தை உருவாக்குவது இயற்கையானது; ஆனால் பொதுவாக, மேலதிகமான மக்கள் அவரைப் பற்றி அறிந்து கொண்டு அவரை சந்திக்கும் ஆர்வத்தில் இருந்தனர்.

காலம் குறிப்பிட்டது போல, “முழுப் பிரபஞ்சத்தின் துடிப்பும் அவரது கைகளில் இருப்பதால், அது அவரது விருப்பத்திற்கு ஏற்ப துடிக்கிறது, அவதார புருஷரால் மட்டுமே இதுபோன்ற விஷயங்களைச் செய்ய முடியும்.”

இந்தக் காலகட்டத்தில், பீட்டர் மற்றும் விக்டோரியா வாக்கர் (PETER & VICTORIA WALKER) என்ற இளம் ஜோடி இந்தியாவில் தன்னிச்சையான பயண வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர்; அவர்கள் பாபாவின் பிறந்தநாள் தினத்தன்று அஹமதுநகருக்கு வந்த போது, இருவரும் விலூ வில்லாவில் தங்க வைக்கப்பட்டனர். பீட்டர் (26) ஆங்கிலேயர் மற்றும் விக்டோரியா (23) அமெரிக்கர். இரண்டு இளம் பாபா அன்பர்களான மைக் மற்றும் கேட் மெக்கின்னெர்னி (KATE MCLNNERNEY) மூலமாக இங்கிலாந்தில் பாபாவைப் பற்றி அவர்கள் கேள்விப்பட நேர்ந்தது. அதைத் தொடர்ந்து இருவரும் இந்தியாவை நோக்கித் தரைவழியாகப் பயணம் செய்தனர். அவர்கள் இந்தியா வந்ததும், ‘பாபாவைப் பார்க்க முடியுமா?’ என்று ஆதிக்கு எழுதியபோது, ‘பாபா ஏகாந்தவாசத்தில் இருப்பதாகவும், யார் ஒருவரையும் பார்க்கவில்லை’ என்றும் தெளிவாக விளக்கி பதிலளித்தார். ஆதி அவர்களுக்கு இவ்வாறு எழுதியதை பாபாவிடம் கூறவே, ‘**பாபா, அவர்களை நேசிப்பதாகவும், அவர்கள் அமெரிக்காவிற்குத் திரும்பிச் சென்று, போதைப்பொருள் கலாச்சாரத்தை நிறுத்த மக்களை வற்புறுத்துமாறு பாபா கூறியதாகவும்**’ ஆதி எழுதினார்.

ஆதியின் கடிதத்தை அடையப்பெற்ற வாக்கர் தம்பதியினர் ஏமாற்றம் அடைந்தனர், ஆனால் மனம் தளரவில்லை. அவர்கள் மும்பை வந்தடைந்ததும், பூனாவிற்கு ரயிலில் சென்று, தொடர்ந்து சரக்கு வாகனத்தில் அஹமதுநகரை நோக்கிப் பயணம் செய்தனர். அவர்கள் பாபாவின் பிறந்தநாள் விழா நடந்த அந்தத் தருணத்தில் வர விரும்பினர், எப்படியேனும் பாபாவைப் பார்க்கும் ஒரு வாய்ப்பு கிடைக்கும் என உள்ளூர நம்பினர். பிறந்தநாள் அணிவகுப்பில் மாட்டு வண்டி ஒன்றில் அவர்களை அமர வைத்தார் ஆதி.

வாக்கர் தம்பதியினர், பாபாவிற்கு மற்றுமொரு குறிப்பை எழுதி, அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்து, இருவரும் அவரை விரும்புவதாகவும், அவருக்கு அருகாமையில் இருப்பதில் திருப்தி அடைவதாகவும் கூறியிருந்தனர். அவர்கள் சில நாட்கள் அங்குத் தங்கி இடங்களை சுற்றி பார்க்க எண்ணினர். ஒரு கட்டத்தில், பாபா அவர்களை சந்திக்குமாறு ஆதி ஜூனியர், பாபாவைக் கேட்டுக்கொண்டார். (ஒருவேளை பீட்டர் ஆங்கில குடிமகன் என்பதால் ஆதி ஜூனியர் அனுதாபத்தை வெளிப்படுத்தியிருக்கலாம்; ஆதி அப்போது லண்டனில் வசித்து வந்தார்.) இறுதியில் பாபா இணக்கம் தெரிவித்தார்.

பிப்ரவரி 28 காலை சுமார் 6:00 மணியளவில் ஸரோஷ், விலூ, ஆதி ஜூனியர் ஆகியோர் சத்தமாக அவர்களின் அறைக்கதவைத் தட்டினர், “எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்!” என்று கத்தினர், “பாபா உங்களைப் பார்க்க விரும்புகிறார்! விரைந்து தயாராகி வாருங்கள்.!” வாக்கர் தம்பதியினருக்கு அவர்களின் காதுகளை நம்பவே முடியவில்லை.

அவர்கள் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர், மேலும் மண்டலி மண்டபத்திற்கு வெளியே, ஆதி ஜூனியர், விக்டோரியாவிடம் பாபா பயன்படுத்திய ஒரு வெள்ளை கைக்குட்டையை அவருடன் எப்பொழுதும் வைத்திருக்குமாறு கூறினார். தம்பதிகள் பதற்றத்துடன் உள்ளே சென்று ஒரு வரிசையில் நின்றனர். மேலும் இரண்டு கிழக்கத்திய அன்பர்களும் கலந்து கொண்டனர்.

பாபாவுடனான தனது முதல் தருணங்களை விக்டோரியா நினைவு கூர்ந்தார்:

அவரைப் பார்த்ததும் எனக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது, உடனே எனது கண்களில் கண்ணீர் வழிந்தது. மின்சாரம் தாக்குவதைப் போல் உணர்ந்தேன். உடல் முழுவதும் தள்ளாடுவது போல் இருந்தது. அதே நேரத்தில், பாபா முழு அமைதியின் உணர்வை வெளிப்படுத்தினார். அவரது தொடர்ச்சியான முக பாவனைகளுடன், கைகளும் விரல்களும் அசைவது நின்றபாடில்லை. நான் அவரால் வெகுவாக ஈர்க்கப்பட்டேன்.

பாபா ‘**அவர்கள் எப்படி உணர்கிறார்கள், அவர்கள் நன்றாக தூங்கினார்களா**’ என்று கேட்டார். ‘**அவர்கள் போதைப்பொருட்களை** (ஹஷிஷ் மற்றும் மரிஜுவானா) **பயன்படுத்தினார்களா?**’ என்று அவர் கேட்டார், மேலும் அவர்கள் பதிலளிப்பதற்கு முன்பு பீட்டரிடம், அழுத்தம் திருத்தமாக சைகையால் தெரிவித்தார், “**போதைப்பொருளைப் பயன்படுத்துவதை நிறுத்துங்கள்! அமெரிக்காவிற்குச் சென்று போதைப்பொருள் பயன்படுத்துவதை**

**நிறுத்துமாறு மக்களைத் தூண்டுங்கள். போதைப்பொருள் ஒரு மாயை - மாயையின் விளையாட்டு.**"

'**அவர்களுக்கு இந்த சிறப்பு வாய்ப்பு வழங்கப்படுவதை எவரிடமும் கூறக்கூடாது**' என்ற நிபந்தனையின் பேரில் பாபா அவர்களைப் பார்க்க இணக்கம் தெரிவித்ததாக விளக்கினார். ஒரு கட்டத்தில், பாபா, விக்டோரியாவின் வயிற்றைச் சுட்டிக்காட்டி, கனிவாகக் கேலி செய்தார். விக்டோரியா பின்பு பாபா கூறிய கருத்தின் முக்கியத்துவத்தைப் பிரதிபலித்த போது, அவர்கள் இந்தியாவிற்கு வருகை தந்த பின்னர் அவர் கர்ப்பமானார்!

அடுத்த சில நிமிடங்களில் '**அவர்கள் புறப்பட வேண்டிய நேரம் இது**' என்று பாபா சைகையால் தெரிவித்த போது, இருவரும் மண்டபத்தை விட்டு வெளியேறினர். விக்டோரியா இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "நான் உணர்ச்சியற்ற நிலையில் இருந்தேன். நான் வெளியே அமர்ந்து அழுதேன். என் இதயம் நெகிழ்ந்தது. நான் பிரமிப்பில் ஆழ்ந்தேன்."

பாபா அவர்களைத் திரும்ப அழைத்து, அவரை அணுகி, இடது கன்னத்தில் முத்தமிடுமாறு சைகையால் தெரிவித்தார். விக்டோரியா தொடர்ந்து கூறினார்:

நான் அவரை அணுகியதும் என் உடல் மிகவும் உஷ்ணமாக இருந்ததை உணர்ந்தேன். நான் அவரது கன்னத்தில் முத்தமிட்டு, தூய்மையின் இந்த அற்புதமான வாசனையை உடனடியாக நுகர்ந்தேன். எனது பள்ளிக்கூட இலக்கண வகுப்பில் கத்தோலிக்க கன்னியாஸ்திரிகளை நான் நினைவில் வைத்திருந்தது போல், ஏதோ ஓர் அலாதியான வாசனையாக இருந்தது. இது மிகவும் தூய்மையான, புத்தம் புதிய வாசனை, மற்றும் அவரது சருமம் மிகவும் மென்மையாக இருந்தது. நான் மிக்க மகிழ்ச்சியுடனும் அன்புடனும் அழுதுகொண்டே வெளியேறினேன்.

நான் அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும்போது, பாபா என்னைச் சுட்டிக்காட்டி புன்முறுவல் செய்து கொண்டிருந்தார். என்றென்றும் அங்கேயே இருக்குமாறு பாபா என்னிடம் கேட்டிருந்தால், நான் நிச்சயமாக இருந்திருப்பேன் என்று நினைத்துக்கொண்டேன். அவர் கேட்கும் எதையும் செய்ய நான் முற்றிலும் தயாராக இருந்தேன். எனது வாழ்வில் அந்த நாட்களை, குறிப்பாக பாபாவை சந்தித்த நாளை நினைத்துப் பார்க்கும் போதெல்லாம், உணர்ச்சிவசப்பட்டு, திகைப்பில் ஆழ்ந்து, அங்கேயே அமர்ந்து, அழவேண்டும் என உணர்ந்தேன்.

உணர்ச்சி பொங்கிய நிலையில், பீட்டர், விக்டோரியா இருவரும் நாள் முழுவதும் தனியாக இருந்தனர், மேலும் இரண்டு நாட்கள் அஹமதுநகரில் தங்கினர். ஒருமுறை அவர்கள் அங்குத் தங்கியிருந்த நாட்களில், பாபாவின்

சமாதியைப் பார்வையிட மெஹராபாத்திற்குச் சென்றனர், பாதிரி அவர்களை ஒரு சுற்றுப்பயணத்தில் அழைத்துச் சென்றார்.

அஹமதுநகரிலிருந்து பூனா சென்ற வேளையில், அங்கு அவர்கள் பெஞ்சமின் வி. ரைட்டை சந்திக்க நேர்ந்தது; ஆனால், பாபாவின் அறிவுறுத்தலின்படி, அவரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டதை இருவரும் பென்னிடம் தெரிவிக்கவில்லை. பூனாவிலிருந்து தெற்கு நோக்கி கோவாவிற்குச் சில மாதங்கள் பயணம் செய்து, வடக்கே காட்மண்ட் (KATHMANDU) வரை சென்று, தொடர்ந்து பல மாதங்கள் இந்தியாவில் அலைந்து திரிந்த பிறகு, ஸான் ஃபிரான்சிஸ்கோ (SAN FRANCISCO) நகரைச் சென்றடைந்தனர்.

நரிமன், அர்னவாஸ், கேட்டி, ஜிம் மிஸ்திரி, கோர்ஷெத் ஆகியோர் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக மும்பையிலிருந்து மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர். ஒரு நாள் மதிய வேளையில் மண்டலி மண்டபத்தில், பாபாவின் கால்களை மஸாஜ் செய்து கொண்டிருந்த போது ஜிம் மிஸ்திரி, “பாபா, நான் மஸாஜ் செய்வதற்கு மிகவும் ஏற்றதான சிறந்த எண்ணெய் ஒன்றைக் கொண்டு வந்துள்ளேன்” என்றார்.

பாபா அதை எடுத்து வரச் சொன்னதும், ஜிம் அதை பாவ் கல்சூரியிடம் கொடுத்தார். பாபாவிற்கு வழுவழுப்பான எதுவும் பிடிக்காது என்று தெரிந்ததால், சிறிதளவு எண்ணெயை மட்டும் எடுத்து பாபாவின் கால்களில் தேய்க்கத் தொடங்கினார். ஜிம் அதைப் பார்த்து கேலி செய்தார், “ஏன் இந்தக் கஞ்சத்தனம்? நீங்கள் ஏன் இவ்வளவு குறைவாக எடுத்துக்கொள்கிறீர்கள்? சற்று அதிகமாகப் பயன்படுத்துங்கள்!”

அன்று வெப்பம் மிகவும் அதிகமாக இருந்தது, பாபாவின் கால்களை மஸாஜ் செய்யும் போது, பாவ் கல்சூரிக்கு வியர்த்தது. ஜிம் அதிக எண்ணெயைப் பயன்படுத்துமாறு கிண்டல் செய்து கொண்டிருக்க, இறுதியில், பாபா அருகில் வருமாறு ஜிம்மிடம் சைகை செய்து, “**இப்போது, நீங்கள் ஒரு காலை மஸாஜ் செய்யுங்கள், பாவ் மற்றொன்றை மஸாஜ் செய்யட்டும்**” என்று அறிவுறுத்தினார். ஜிம் தனது சுய தந்திரத்தில் சிக்கிக்கொண்டது போலத் தோன்றியது! மஸாஜ் செய்து பழக்கமில்லாத அவர், ஒரு மணி நேரத்திற்கும் மேலாக அதைத் தொடரவே, முற்றிலும் சோர்ந்து போனார். பாவ் கல்சூரி நன்கு பழக்கமானவர், ஆனால் ஜிம் மிஸ்திரிக்கு இது புது அனுபவம் ஆதலால், பாபா கற்றுத் தந்த பாடத்தை எண்ணி அவர் மனதிற்குள் சிரித்துக் கொண்டார்.

மெஹர்வான் ஜெஸவாலா மெஹராஸாத்திலிருந்து மார்ச் 1 அன்று பூனாவிற்கும் இரண்டு நாட்களுக்குப் பின்னர், ஆதி ஜூனியர் இங்கிலாந்திற்கும் புறப்பட்டுச் சென்றனர்.

1968 மார்ச் மாதத்தில், லின் ஆட்ட் (LYN OTT) பாபாவுடனான சந்திப்பைச் சித்தரிக்கும் ஒரு பெரிய ஓவியத்தை பாபாவிற்கு அனுப்பினார். மெஹராஸாத் மண்டலி மண்டபத்தில் தொங்கவிடப்பட்ட அந்தச் சித்திரம், சுவரை இன்றும் அலங்கரிக்கிறது. பாபா அவருக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**மெஹராஸாத்தை வந்தடைந்த உங்கள் அழகிய ஓவியம் என்னை மிகவும் மகிழ்விக்கிறது. என் அழகின் வெளிப்பாட்டில் உங்கள் அன்பின் வெளிப்பாடு என்னை ஆழமாகத் தொட்டது.**

இதற்கிடையில், ஏற்கனவே குறிப்பிட்டபடி, இந்தியா வந்ததிலிருந்து, பெஞ்சமின் வி. ரைட் பூனாவில் (ஸ்பைசர் கல்லூரியில் - SPICER COLLEGE) தங்கியிருந்தார், அவர் இதை 'குழப்பத்தின் காலகட்டம்' மற்றும் 'தொலைந்து போனது போன்ற உணர்வு நிலை' என்று விவரித்தார்.

ஒரு நாள், உண்மையில் அவர் இந்தியாவில் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதைக் கண்டுகொள்ளும் முயற்சியில் ஒரு குளத்தின் அருகே அமர்ந்து, ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிய அவ்வேளையில், பாபா அவருக்கு இவ்வாறு பதிலளித்தார்: "**என்னைக் கண்டுகொள்ள நீங்கள் எங்கும் செல்லவேண்டியதில்லை, நான் உங்களுக்குள் வாழ்கிறேன், நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்.**"

அடுத்த நாள் 1968 மார்ச் 5 அன்று, பென் பூனாவிலிருந்து அஹமதுநகர் செல்லும் பேருந்தில் சென்றார். அவர் ஆதியின் அலுவலகத்திற்கு வந்து, அவர் யார் என்பதையும் அவரது நோக்கத்தையும் விளக்கியபோது, ஆதி, பாபாவிற்கு ஒரு குறிப்பை எழுதக் கோரி, அதை அவர் மெஹராஸாத்திற்கு அனுப்பிவைப்பதாகக் கூறினார்.

பென் குஷ்ரு குவார்ட்டர்ஸில் அன்று இரவைக் கழித்தார்; அடுத்த நாள், பாதிரியுடன் மெஹராபாத்திற்கு சைக்கிளில் சென்று, அனைத்தையும் பார்வையிட்டு, மன்ஸாரி மற்றும் பிற குடியிருப்பாளர்களை சந்தித்து, பின்னர் அவர் மீண்டும் ஆதியின் அலுவலகத்திற்குச் சென்றார்; அவர் வந்தபோது எரச்சிடமிருந்து அங்கு வந்த குறிப்பு அவருக்காகக் காத்திருந்தது:

1968 மார்ச் 6

என் அன்பான ஆதி,

பிரியமான பெஞ்சமின் உண்மையில் ஆசீர்வதிக்கப்பட்டவர்! இதை முழுமையான 'இறை-அதிர்ஷ்டம்' என்றுதான் கூறவேண்டும், ஏனெனில், பாபா இன்று கடைசி நேரத்தில், அவர் தற்போதைய ஏகாந்தவாசத்தில் கடிதங்கள், தொலைத்தந்திகள் அனைத்தையும் கேட்டு பதிலளித்து முடிப்பதற்கு முன்னர், உங்களிடமிருந்து ஏதேனும் குறிப்புகள் வந்தனவா என்று விசாரித்தார் - பெஞ்சமினின் கடிதத்தைப் படிக்கும் 'பாபா வழங்கிய' வாய்ப்பை எண்ணி நான் அளப்பரிய உற்சாகத்தில் இருந்தேன்.

'**பெஞ்சமினின் அன்பு அவரைச் சென்றடைந்ததையும், தற்போதைய ஏகாந்தவாசத்தில் அது அவரை மகிழ்வித்ததையும் நீங்கள் அவருக்குத் தெரிவிக்க வேண்டும்**' என்று பாபா எனக்கு அறிவுறுத்துகிறார்; '**பெஞ்சமின் அமெரிக்காவிற்குத் திரும்பிச் சென்று, போதைப்பொருளில் ஈடுபட வேண்டாம் என்று மக்களுக்குச் சொல்லவும், அவருடைய அன்பின் செய்தியைப் பரப்பவும்**' அவர் விரும்புகிறார்; பெஞ்சமின் போதைப்பொருள் உட்கொள்வதையும், அதை விநியோகிப்பதையும் நிறுத்தியதில் பாபா மிகவும் மகிழ்ச்சியடைகிறார். மேலும் 'பெஞ்சமின் நியூயார்க் நகரில் வாழும் ஃப்ரெட் - எல்லா (வின்டர்ஃபெல்ட்) மற்றும் ரிக் எம். சேப்மெனுடன் தொடர்பில் இருக்க வேண்டும்' என்றும் பாபா விரும்புகிறார். பாபா அவரது ஏகாந்தவாசத்திலிருந்து, பெஞ்சமின், ஸ்டான்லி ஃபிஷர், பீட்டர் - விக்டோரியா (வாக்கர்) ஆகியோருக்கு தனது அன்பையும் ஆசீர்வாதத்தையும் அனுப்புகிறார். பெஞ்சமின் அவரது இதயத்தில் பாபாவை அமெரிக்க தேசத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்று விரும்புகிறார்.

பெஞ்சமின் அஹமதுநகரிலிருந்து ஏற்கனவே புறப்பட்டுச் சென்றிருந்தால், அவருடைய அடுத்த தொடர் தொடர்பு முகவரிக்குக் கடிதம் அல்லது தொலைத்தந்தி மூலமாக இந்தச் செய்தியை அனுப்புங்கள். மேலும், உங்களிடம் அவருடைய இந்திய முகவரி இல்லையென்றால், பெஞ்சமினுக்கான பாபாவின் செய்தியை ஃப்ரெட் - எல்லா தம்பதியினர் மற்றும் ரிக் ஆகியோருக்கு அனுப்பி, பெஞ்சமின் ரைட்டைத் தேடிக் கண்டுபிடித்து, அவர் அமெரிக்காவிற்குத் திரும்பும் வேளையில் பாபாவின் செய்தியை வழங்குங்கள். மேலும், நான் இத்துடன் இணைக்கும் பெஞ்சமினுக்கு அனுப்பும் கடிதத்தின் நகலை ஃபிரெட் - எல்லா தம்பதியினர் மற்றும் ரிக் ஆகியோருக்கும் அனுப்பவும்.

பெஞ்சமின் உங்களை சந்தித்து, இந்தக் கடிதத்தை எழுதியதில் பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார். ஸ்டான்லி ஃபிஷர் விட்டுச்சென்ற 'காட் ஸ்பீக்ஸ்' (GOD SPEAKS) பிரதியை நீங்கள் பெஞ்சமினுக்குக் கொடுத்தீர்கள் என்று நம்புகிறேன்.

உங்கள் அன்புடன்,
எரச்

அன்று இரவு டான், பெஞ்சமினை ரயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். அவர் மறுநாள் காலை மும்பை வந்தடைந்து, அன்றிரவு நியூயார்க்கிற்கு விமானத்தில் புறப்பட்டுச் சென்றார்.

1968 மார்ச் 6ஆம் தேதி முதல், 1968 மே 21 வரை எந்தக் கடிதப் பரிமாற்றத்தையும் அனுமதிக்க மாட்டேன் என்று கூறி, கடிதங்கள், அறிக்கைகள் அல்லது தொலைதந்திகளுக்கு செவிமடுப்பதையும், அதற்கு பதில் அனுப்புவதையும் பாபா நிறுத்திவிட்டார். இருப்பினும், அவரது நெருங்கிய அன்பர்களின் திடீர் மரணம் குறித்த எந்தத் தொலைதந்தியையும் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று அறிவுறுத்தினார். பாபா மார்ச் 7 அன்று, ஏகாந்தவாசத்தில் அவரது பணியைத் தொடர்ந்தார்.

பாபாவின் ஏகாந்தவாசப் பணி தொடர்ந்து தீவிரமடைந்தது. அவர் இப்போது மண்டலி மண்டபத்தில் காலையில் நான்கு மணி நேரம், மதியம் ஒரு மணி நேரம், பின்னர் அவரது அறையில் பதினைந்து நிமிடங்கள் தனியாகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவரது பணி உடலில் கடினமான தாக்கத்தை ஏற்படுத்தினாலும், பாபா அவ்வப்போது ஆண் மற்றும் பெண் மண்டலியிடம், **“எனது பணி மிகவும் திருப்திகரமாகச் செய்யப்படுகிறது”** என்று தெரிவித்து வந்தார். பாபா பணிபுரியும் போது, மண்டலி குறைந்த அளவு அல்லது முற்றிலுமாக சத்தம் எழுப்பக்கூடாது. பைதூல் அவ்வப்போது தும்மும் பழக்கத்தைக் கொண்டிருந்ததால், பாபா அதைக் கேட்காத வகையில் அவரை வெகு தொலைவில் ஒரு மாமரத்தின் கீழ் அமர வைத்தனர்.

1968 மார்ச் மாதத்தில், மணி தனது குடும்பக் கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

முற்றிலும் அமைதி காக்கும் இந்த நேரங்களில், காக்கை குரல் எழுப்புவதும் அல்லது காற்று வீசுவதால் திடீரென ஜன்னல் சத்தம் கேட்பதும் அனைவரையும் திடுக்கிடச் செய்கிறது. மண்டபத்தின் வெளிப்புறத்தில் சரளைக் கற்கள் மீது நடப்பது முட்டை ஓடுகளில் நடப்பது போலத் தோன்றுகிறது.

இந்த ஓசையற்ற ஏகாந்தவாசப் பணிகள் நிறைவடைந்து, மீண்டும் பாபாவுடன் அமர்ந்திருக்கும் போது, மற்றுமொரு வகையான அமைதி நிலவுகிறது: அவருடைய கவனத்திற்கு எந்தக் கடிதமும் கொண்டுவர முடியாது, எந்தக் கேள்வியும் எழுப்பக் கூடாது, அவரது அன்றாட குறு, சிறு அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதில் எந்த வாதம், விவாதம் அல்லது சாக்குப்

போக்கிற்கும் இடமில்லை; குறைந்தபட்ச தொந்தரவுக்கு எந்த காரணமும் வழங்க வழியில்லை - ஏகாந்தவாசம் எனும் கொள்கலன் எளிதாக உடைந்துவிடும் அளவுக்கு மென்மையானதாக இருந்தது.

குருபிரசாத்தில் பாபா தங்கி இருக்கும் வேளையில், பைதூல் அவரது மகள் ஸர்வாருடன் தங்கும் நோக்கத்தில், 1968 மார்ச் 24 அன்று, பைதூலை அலோபா மும்பைக்கு அழைத்துச் சென்றார். மார்ச் 29ஆம் தேதி ஆதி, பாலா தம்பத் ஆகியோருடன் பாதிரி, கைக்கோபாத்தின் குடும்பத்தினரை மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். கைக்கோபாத்தின் உடல்நிலை காரணமாக, பாபா பூனாவில் இருந்தபோது, டாக்டர் அலு அவரை கவனித்துக் கொள்ள மெஹராஸாத்தில் தங்க வேண்டியிருந்தது. கைக்கோபாத்தின் குடும்பத்தினரை, மாதம் ஒருமுறை பாபாவை சந்திக்க மெஹராஸாத்திற்கு அழைத்து வருமாறு ஆதி, பாதிரி இருவருக்கும் அறிவுறுத்தப்பட்டது.

1968 மார்ச் மாதம் ரிச்சர்ட் ஆல்பர்ட்டிடமிருந்து ஆதிக்கு வந்த கடிதத்தில், அவர் தனது கல்வி வாழ்க்கையைக் கைவிட்டு இந்தியாவிற்குப் பயணம் செய்ததாகவும், நீம் கரோலி பாபா என்ற குருவின் வழிகாட்டுதலின் கீழ் ஹரிதுவாரில் ஒரு கோவிலில் தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆல்பர்ட், பாபாவின் தரிசனத்தைப் பெற விரும்பினார். பாபாவின் ஏகாந்தவாசம் தொடர்ந்ததாகவும், மே மாதத்திற்குப் பிறகும் தரிசனம் அனுமதிக்கப்படும் என்பதில் உறுதியாக இல்லை என்றும் ஆதி பதிலளித்தார். ஆல்பர்ட்டின் நோக்கத்தைக் குறித்து நீம் கரோலி பாபா அறிந்ததும், “நீங்கள் மெஹர் பாபாவை சந்திக்க விரும்புகிறீர்களா? மெஹர் பாபாதான் உங்கள் உண்மையான குருநாதர் என்பது உங்களுக்குத் தெரியும்” என்று ஆல்பர்ட்டிற்குத் தெரிவிக்கும் வகையில், அவர் வழக்கத்திற்கு மாறான கருத்தைத் தெரிவித்தார்.

ஆதி மெஹராஸாத்திற்கு வந்தபோது, ரிச்சர்ட் ஆல்பர்ட் இந்தியாவில் இருப்பதை பாபாவிடம் தெரிவிக்க முடிந்தது. பாபா, நீம் கரோலி பாபாவிற்கும், ஆல்பர்ட்டிற்கும் தனது ஆசீர்வாதங்களை தொலைத்தந்தி மூலமாக அனுப்புமாறு கூறினார்.

ரமா, மெஹர்நாத், ஷீலா, ரூஸி பாப் ஆகியோருடன் ஆதி மார்ச் 31 அன்று மெஹராஸாத் வந்தார். அன்று பாபா மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார். புது வாழ்வின் போது மெஹர்ஜியின் பெயரில் வைக்கப்பட்டிருந்த கீழ் மெஹராபாத் மற்றும் ‘குடும்பக் குடியிருப்புகள்’ குறித்து ஒரு விவாதம் நடைபெற்றது. பாபா அங்கீகரித்த அவதார் மெஹர் பாபா

அறக்கட்டளைக்கு இந்த சொத்தை பரிசாக வழங்க மெஹர்ஜி இணக்கம் தெரிவித்தார்.

பாபாவிற்காக தேநீர் மற்றும் சூடான ரொட்டி மண்டபத்திற்கு கொண்டு வரப்பட்டது, அதில் ஆதி, எரச் இருவருக்கும் பாபா ஒவ்வொரு துண்டை பிரசாதமாக வழங்கினார்.

# கடைசி காலகட்டம் - குருபிரசாத்

(**Last Stay At Guruprasad**)

1968 ஏப்ரல் 1 திங்கட்கிழமை காலை 8:30 மணிக்கு பாபா, ஆண், பெண் மண்டலியுடன் பூனாவிற்குப் புறப்பட்டு, இறுதி முறையாக குருபிரசாத்தில் தங்கினார். மீண்டும், அவர் டாக்டர் டானின் வோல்ஸ்லி (WOLSELEY) காரில் மெஹரா, மணி, கோஹெர், மெஹரு ஆகியோருடன் சவாரி செய்தார்; நாஜா, ரானோ மற்றும் அவர்களது பணிப்பெண்கள் இருவரை ஆதியும், பாவ் கல்சூரி, எரச், ஃபிரான்சிஸ், பெண்டு, அலோபா ஆகியோரை வாமனும் இரண்டு கார்களில் பின்தொடர்ந்தனர். பகீரத் அவரது சரக்கு வாகனத்தில் அனைத்து பொருட்களையும் எடுத்துச் சென்றார். 'தரிசனத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது' என்று வர்ணம் பூசப்பட்ட அறிவிப்புப் பலகைகள் அவர்களுடன் எடுத்துச் செல்லப்பட்டு குருபிரசாத்தின் வெளியில் தொங்கவிடப்பட்டன.

அந்த ஆண்டு (1968), மண்டலி குருபிரசாத்தை விட்டு வெளியேற அனுமதிக்கப்படவில்லை, ஆதலால் எரச் மூன்று மாதங்கள் முழுவதையும் அங்கேயே கழிக்க வேண்டியிருந்தது (முந்தைய ஆண்டுகளில், அவர் தனது குடும்பத்துடன் பிந்த்ரா ஹவுஸில் இரவுகளைக் கழித்தார்). உணவு தயார் செய்த நாஜாவும் பிந்த்ரா ஹவுஸில் தங்காமல் குருபிரசாத்தில் தங்க வேண்டிய கட்டாயம். பல்வேறு பணியில் உதவுவதற்காக மும்பையிலிருந்து கோர்ஷெத் அழைக்கப்பட்டார், ஆனால் பூனாவில் தங்கியிருந்த மூன்று மாதங்கள் முழுவதும் கோர்ஷெத், நாஜா இருவரும் மௌனம் கடைப்பிடித்தனர். சதாஷிவ் பாட்டீல், ஜால்பாய், பெஹராம், அவரது மகன்கள் மற்றும் ஜெஹாங்கு, மெஹர்ஜி, மெஹர்வான் அல்லது வேறு எவருக்கும் குருபிரசாத் வர அனுமதி வழங்கப்படவில்லை. நானா கேர், பால் நாத்து இருவர் மட்டுமே ஆண் மண்டலிக்குத் தங்கள் பணியில் உதவ அழைக்கப்பட்டனர்.

குருபிரசாத்தில் பாபா இறுதி முறையாக தங்கியிருந்தபோது, அவருடைய தினசரி காலை ஏகாந்தவாசப் பணிக்கான நேரங்கள் பின்வருமாறு திட்டமிடப்பட்டது:

5 மற்றும் 6 ஏப்ரல் - ஒரு மணி நேரம்

ஏப்ரல் 6 முதல் 15 வரை - படிப்படியாக இரண்டு மணி நேரம் அதிகரிக்கும்

ஏப்ரல் 16 முதல் 20 வரை - இரண்டு மணி நேரம்

ஏப்ரல் 21 முதல் மே 21 வரை - மூன்று மணி நேரம்

இதைத் தவிர, ஒவ்வொரு மதியமும் பாபா அவரது ஏகாந்தவாசப் பணியில் 20 நிமிடங்களைச் செலவிடுவது வழக்கமாக நடந்தது. 1969 ஜனவரி 30 வரை ஒவ்வொரு நாளும் பிற்பகலிலும் பணி தொடர்ந்தது. காலை மற்றும் பிற்பகல் வேளைகளில் அனைத்து ஏகாந்தவாசப் பணிகளையும் பாபா அவரது அறையில் தனியாக அமர்ந்து செய்து வந்தார். அவர் அமர்ந்திருந்த மஞ்சள் நிற நாற்காலியை யார் ஒருவரும் தொடக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டது. நாற்காலியைச் சுற்றி கட்டப்பட்ட கயிறு, எல்லா பக்கங்களிலும் ஓர் அரணை உருவாக்கியது, மேலும் அந்த பகுதிக்குள் எவரும் நுழைய அனுமதிக்கப்படவில்லை. பாபா பணிபுரியும் போது முழு அமைதி காக்கப்பட்டது, மேலும் குருபிரசாத்தின் பணியாட்கள் கூட, அந்த நேரத்தில் தத்தமது பணியை நிறுத்துமாறு தெரிவிக்கப்பட்டனர்.

ஏப்ரல் பொதுவாக இந்தியாவில் ஆண்டின் வெப்பமான மாதங்களில் ஒன்றாக இருந்தாலும், 1968இல் காலநிலை குளிர்ச்சியாகவும் இனிமையாகவும் இருந்ததால் அவரது ஏகாந்தவாசப் பணிக்கு உதவியாக இருந்தது என்று பாபா குறிப்பிட்டார். அஹமதுநகருடன் ஒப்பிடுகையில் பூனாவில் மிதமான தட்பவெப்பநிலை இருந்ததால், பாபா அவரது வழக்கமான மூன்று மாத காலத்தை மேலும் பதினொரு நாட்களுக்கு நீட்டிக்க முடிவு செய்தார்.

காலையில் ஏகாந்தவாசத்தில் பணிபுரியும் போது, பாபாவின் அறைக்கு வெளியே கண்காணிப்பாளராக நானா கேர் நியமிக்கப்பட்டார். பாபா கைகளைத் தட்டும்போது, நானா, எரச் இருவரும் அவரது அறைக்குள் சென்று, பாபாவின் உடலில் இருந்த வியர்வையைத் துடைத்து, டால்கம் பவுடரைத் தூவி, சத்ராவை மாற்றுவதற்கு அல்லது இயற்கையின் அழைப்பில் அவருக்கு உதவியாக இருந்து, அருந்த நீர் வழங்கினர். இந்தப் பணியை நிறைவு செய்து, பாபா பிரதான மண்டபத்திற்கு வரும் வேளையில், எரச் குருநாதருக்கான 'பர்வர்திகார்' (MASTER'S PRAYER) மற்றும் மனம் வருந்தி மன்னிப்புக் கோரும் 'இரங்கல் பிரார்த்தனை'களை (REPENTANCE PRAYER) மொழிவது வழக்கமாக நடந்துவந்தது.

பாவ் கல்சூரி தவிர பிற மண்டலி அனைவரும் பிரார்த்தனையில் இணைய அழைக்கப்பட்டனர்; அது தினசரி வழக்கத்தின் ஒரு பகுதியாக இருந்தது. பாவ் கல்சூரி 'தி வேஃபேரர்ஸ்' (THE WAYFARERS) புத்தகத்தின் மொழிபெயர்ப்புப் பணிகளை நிறைவு செய்யும் நோக்கத்தில் அவருக்கு இந்த காலை அமர்வுகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**இந்தப் பிரார்த்தனைகளில் நான் பங்கேற்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, இதன் மூலமாக, இந்தப்**

**பிரார்த்தனைகளில் மேலதிக சக்தி வேரூன்றப்படுகின்றன; மக்கள் அவற்றை மொழியும்போது அதன் சக்தியை உணர்ந்து பலனடைவர்.**"

பாபா மேலும் கூறினார்: "**இந்த நேரத்தில் நான் மேற்கொள்ளும் ஏகாந்தவாசப் பணி, முந்தைய அவதார காலகட்டங்களில் செய்யப்படாத, மிகவும் தனித்துவமான ஒன்று.**"

நானா கேர் இவ்வாறு அவதானித்தார்:

குருபிரசாத்தில் பாபாவுடன் இருந்த மூன்று மாதங்களில் நான் கவனித்தது என்னவெனில், அவர் இடைவிடாமல் உள்ளார்ந்த துன்பத்தில் ஆழ்ந்திருந்தார். இரவும் பகலும் இடைவெளி இல்லாமல் அது தொடர்ந்ததை என்னால் உணர முடிந்தது. நான் சில சமயங்களில் பாபாவிடம் இவ்வாறு கூறி வந்தேன், 'இது முழு உலகின் பாரத்தையும் தம் மீது சுமக்கும் பழைய முறை, அதனால் நீங்கள் தொடர்ந்து துன்பப்படுகிறீர்கள். ஏன் நவீன வழிமுறைகள் மூலமாக இந்த வகையான துன்பங்களை அகற்றக்கூடாது?'

பாபா அகன்ற புன்னகையுடன், "**வேறு வழியில்லை. நான் இந்த துன்பத்தை அனுபவித்தாக வேண்டும். அதுதான் மனிதகுலத்தை விடுவிக்கும் ஒரே வழி. அதற்காகவே நான் அவதார புருஷராக வருகிறேன்**" என்று பதிலளித்தார்.

1968இல் இறுதி ஏகாந்தவாசத்தின் போது, பணியை நிறைவு செய்து மண்டலியிடம் வரும் வேளையில், அவர் எங்களிடம் கூறினார், "**நான் எனது அறையில் சிறப்புப் பணிகளில் ஈடுபடும்போது, எனக்கு எந்தத் துன்பமும் இல்லை; தலையிலிருந்து இமயமலை போன்ற பாரத்தைக் கீழே இறக்குவது போலவும், ஆனால் பணி முடிந்து நான் இந்த அறைக்கு வந்தவுடன், முழு பாரமும் மீண்டும் என் மீது திணிக்கப்படுவது போலவும் உணர்கிறேன்.**"

ஆனால் பாபா யார் ஒருவரையும் சிறிது நேரம் தரிசனத்திற்காக அனுமதிக்கும் போதெல்லாம், அவர் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் போதும், பாபாவின் மனநிலையிலும், அவரது முகபாவத்திலும் திடீர் மாற்றத்தைக் காண முடிந்தது; அவர் அனுபவித்தது போல நாங்கள் உணர்ந்து கொண்டிருந்த துன்பம் அனைத்தும் திடீரென மறைந்துவிடும். அவர் அளவிறுதியற்ற ஆனந்தத்தில் மகிழ்ச்சியாகவும், ஒளிரும் முகத்துடனும் காணப்பட்டார். ஆனால் தரிசனத்திற்காக வந்த நபர் அறையை விட்டு வெளியேறிய அடுத்த கணமே, பாபாவை மீண்டும் அதே பரிதவிப்பான சூழலில் காண நேர்ந்தது; அதை உடனடியாக உணர முடிந்தது.

பாபா தங்கியிருந்த வளாகத்திற்குள் எவரும் நுழைவதற்கு எதிராக கடுமையான தடை விதிக்கப்பட்டிருந்தது. எந்த அளவுக்கு கண்டிப்பான

உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன என்பதை பின்வரும் இரண்டு சம்பவங்கள் ஓரளவு உணர்த்தும்.

நானா கேர், அலோபா இருவரும் மாறி மாறி பகல் வேளையில் கண்காணித்து, கவனக்குறைவாக யார் ஒருவரும் உள்ளே நுழையாமல் பங்களாவின் வாயிலில் விழி வைத்துக் காத்திருந்தனர். ஒரு நாள் சில பெண்மணிகள் அங்கு வர நேர்ந்தது, ஆனால் அலோபா அங்குச் சென்று வாயிலைத் திறக்கவிடாமல் தடுத்தார். அவர்கள் பாபாவை தரிசனம் செய்ய வேண்டும் என மனதார வேண்டினர். அலோபா அவர்களுக்கு உதவ முடியாத தனது முழு இயலாமையையும் எடுத்துக்கூறி, கெஞ்சி அவர்களை வெளியேறுமாறு கேட்டுக்கொண்டதை, அந்தப் பெண்மணிகள் மறுத்துவிட்டனர். கடைசியாக, பாபாவை தூரத்திலிருந்து தரிசனம் செய்யும் ஒரு வழியைக் காட்டுமாறு கேட்டுக்கொண்டனர். முற்றிலும் உதவியற்ற நிலையில், அலோபா மறுநாள் காலை 10:00 மணிக்கு அவர்கள் வாசலில் நிற்க வேண்டும், ஏனெனில் அந்த நேரத்தில், பாபா தனது பணியை நிறைவுசெய்து, தனது அறையிலிருந்து மண்டபத்திற்குச் செல்லும் போது, வராண்டா வழியாக நடந்து செல்வது வழக்கம்.

அலோபா அவர்களுடன் பேசிக் கொண்டிருக்க, பாபா தனது அறைக்குள் இருந்த பாவ் கல்சூரி, நானா இருவரிடமும் அலோபாவை உடனடியாக அழைக்குமாறு அறிவுறுத்தினார். பாவ் கல்சூரி வெளியே வந்து அலோபா வாயில் அருகே இருப்பதைக் கண்டு அவரை அழைக்க, அலோபா, நானாவுடன் பாபாவின் அறைக்குள் வந்தார். சற்று காலதாமதம் ஆனது குறித்து பாபா விசாரித்தபோது, அலோபா வாயிலில் நின்று கொண்டிருந்ததை பாவ் கல்சூரி விளக்கினார். என்ன நடந்தது என்று பாபா, அலோபாவிடம் கேட்டார், பின்னர் **“அந்தப் பெண்மணிகளிடம் நீங்கள் என்ன கூறினீர்கள்?”** என வினவினார்.

அலோபா உண்மையைக் கூறவே, பாபா சீற்றமடைந்தார். **“எனது அறிவுறுத்தல்கள் உங்களுக்கு நினைவில்லையா?”** அவர் கொந்தளித்தார். **“என் அன்பர்கள் எனது தரிசனத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள், இருந்தும் நான் அவர்களைப் பார்க்கவில்லை. இங்கே, எனது பணியில் எனக்கு உதவுவதற்கு பதிலாக, நீங்கள் தடையாக இருக்கிறீர்கள்!”**

பாபா, நானாவிடம் அலோபாவின் முகத்தில் எச்சிலைத் துப்புமாறு கட்டளையிட்டதும் அதை அவர் செய்தார்; பின்னர் இருவரையும் வெளியேறச் சொன்னார்.

சிறிது நேரம் கழித்து, பாபா மீண்டும் அலோபாவை அழைத்து, மன்னித்து, **“இனி ஒருபோதும் இதுபோலச் செய்யாதீர்கள்! எப்பொழுதும்**

**என்னை மகிழ வைப்பதில் கவனம் செலுத்துங்கள்; பிறரின் மகிழ்ச்சியைப் பற்றி கவலைப்படாதீர்கள்!**" என்று எச்சரித்தார்.

அதேபோன்று மற்றுமொரு சம்பவம், பாபா அவரது கட்டளைகளை அந்த ஆண்டு எவ்வளவு தீவிரமாக அமல்படுத்த விரும்பினார் என்பதை விளக்குகிறது. ஒரு நாள் சாது ஒருவர் பாபாவின் தரிசனத்திற்காக வந்த போது அலோபா, நானா, எரச் மூவரும் பாபாவை சந்திக்கும் எண்ணத்தைக் கைவிட்டு திரும்பிச் செல்லுமாறு அவரிடம் கேட்டுக்கொண்டனர், ஆனால் அவர் அசைந்தபாடில்லை. உண்மையில், "எனக்கு மெஹர் பாபாவின் தரிசனம் கிடைக்காத வரை, நான் வெளியேற மாட்டேன்!" என்று தீர்க்கமாக பதிலளித்தார்.

எரச் அவருக்கு நீண்ட நேரம் விளக்க முயன்றார், ஆனால் சாது பிடிவாதமாக இருந்தார். பாபா மண்டபத்திற்குச் செல்லும் நேரமாகிவிட்டதால், அங்கு சிறிது நேரம் தியானம் செய்ய அனுமதித்த பின்னர் எரச், அலோபா, நானா மூவரும் சாதுவை உடல் ரீதியாக வாயிலுக்கு வெளியே தூக்கிச் சென்று தாழ்ப்பாளிட வேண்டியதாயிற்று.

மே மாத தொடக்கத்தில், புக்காரும் ஹமிர்பூரிலிருந்து ஒரு குழுவினரும் வந்து பாபாவின் தரிசனத்திற்காக இயன்றவரை முயன்றனர்; ஆனால் அவர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது, அதற்கு பதிலாக ஆதியை சந்திக்க அஹமதுநகர் செல்லுமாறு வற்புறுத்தப்பட்டனர்.

மெஹராஸாத்தில், டாக்டர் டான் எழுதிய 'தி வே:ஃபேரர்ஸ்' (THE WAYFARERS) புத்தகத்தை இந்தியில் மொழிபெயர்க்க பாபா, பாவ் கல்சூரிக்கு அறிவுறுத்தினார்; ஆனால் அவருக்கு அதைச் செய்ய சிறிதளவு நேரமும் இல்லாததால், அவர்கள் குருபிரசாத் வந்ததும் அவர் இந்தப் பணியைத் தொடங்கினார். புத்தகத்தை முழுமையாக மொழிபெயர்ப்பதை பாபா விரும்பவில்லை, ஏனெனில் இது மிகவும் இயல்முறைப்போக்கில் எழுதப்பட்டிருப்பதாக அவர் உணர்ந்தார், ஆனால் அவரது மஸ்த் பணியைப் பற்றிய மேலதிக விவரங்களுடன் எழுதப்பட்ட முழுமையான சரித்திரத்தை விரும்பினார். இருப்பினும், மண்டலியுடன் அதைக் குறித்து விவாதித்த பின்பு, புத்தகத்தை அப்படியே மொழிபெயர்த்து, 1948க்குப் பிறகு, பாபாவின் 'மஸ்துகள் மற்றும் ஏழைகளுடனான தொடர்புகளை' ஓர் இணைப்பாக எழுத முடிவு செய்யப்பட்டது; புத்தகம் 1950 மற்றும் 1960களில் மேற்கொண்ட கடைசி மஸ்த் தொடர்பு குறித்த விபரங்களுடன் புதுப்பிக்கப்பட்டது.

1968 ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள் மாலை 3:00 மணிக்கு, பாவ் கல்சூரி வழக்கம்போல பாபாவின் அறைக்குச் சென்று இரவு 8:00 மணி வரை கண்காணிப்புப் பணியில் அமர்ந்தார். பாபாவின் அறை மூச்சுத் திணறும் அளவுக்கு வெப்பமாக இருந்தது. அதில் அடியெடுத்து வைப்பது ஒரு சமையலறை அல்லது நீராவிக் குளியல் அறைக்குள் நடப்பது போல் இருந்தது. பாபா அறிவுறுத்தியதற்கு இணங்க ஒவ்வொரு காற்று துவாரங்கள், ஜன்னல் மற்றும் கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டன. பாபா அவரது அரை காலுறையுடன் படுக்கையில் அமர்ந்திருந்தார்; அவரது மார்பு வெறுமையாக இருந்தது; நெற்றி மற்றும் கைகளிலிருந்து வியர்வை வழிந்தது.

பாபா அற்புதமான மனநிலையில் காணப்பட்டார். அவர் முன்பு மெஹராஸாத்தில் குறிப்பிட்டது போல், "**இன்று, கஸல் எழுதுவது எப்படி என்பதை நான் உங்களுக்குக் கற்றுத் தருவேன்**" என்று பாவ் கல்சூரிக்குத் தெரிவித்தார்.

வியர்வை வழிய அவர் முன்னால் நின்றுகொண்டிருந்த பாவ் கல்சூரி ஒரு வார்த்தையும் கூறவில்லை. கஸல் எழுதுவது குறித்த பேச்சு முதலில் எழுந்தபோது, பாவ் கல்சூரி எதிர்ப்புத் தெரிவித்திருந்தார், மேலும் அவர் எழுதிய 'கஸலை ஒத்த' பாடல்களை முடிக்க இன்னமும் அவர் அதில் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

பாபா அவரைப் பாராட்டினார், "**நீங்கள் முழு மனதுடன் எழுதியுள்ளீர்கள், பாடல்கள் நன்றாக உள்ளன, ஆனால் நீங்கள் கஸல்கள் எழுத வேண்டும் என்று நான் விரும்புகிறேன், இன்று நான் உங்களுக்கு அதைக் கற்பிக்கிறேன். நான் உங்களுக்கு வழங்கும் ஒரு வரியை எனது தாளத்திற்கு ஏற்ப நீங்கள் திரும்பச் சொல்ல விரும்புகிறேன். நான் எனது தொடைகளில் தட்டித் தாளமிடுவேன்.**"

எனவே, பாபா இந்தியில் இந்த வரியை எடுத்துரைத்தார்: "**இப்போது அன்பின் பெயரைக் கேட்க கூட என் இதயம் அஞ்சுகிறது.**"

பாபா அவரது கைமுட்டிகளால் ஒரு தாளத்தைப் போட்டு, தபேலா போல தனது தொடைகளில் தட்டியபோது, பாவ் கல்சூரி அந்த வரியை சத்தமாக மீண்டும் சொல்லத் தொடங்கினார். பாபாவின் முன்னால் நின்று, பாவ் கல்சூரி இந்தியில் வரியை மீண்டும் மீண்டும் மொழிந்தார். "இப்போது அன்பின் பெயரைக் கேட்க கூட என் இதயம் அஞ்சி நடுங்குகிறது… இப்போது அன்பின் பெயரைக் கேட்க கூட என் இதயம் அஞ்சி நடுங்குகிறது…" அரை மணி நேரம் கடந்த பின்னரும், பாபா சொன்னதை பாவ் கல்சூரியால் புரிந்துகொள்ள முடியவில்லை.

பாவ் கல்சூரியின் உடலில் வியர்வை நிரம்பி வழிந்தது; பாபாவும் அதுபோலவே வியர்வையால் நிரம்பி இருந்தார். பாபா எதைப் புரியவைக்க முயற்சிக்கிறார் என்று பாவ் கல்சூரிக்கு இன்னமும் தெரியவில்லை. எனவே அவர், "பாபா, என்னால் நீங்கள் கூறுவதைப் பின்பற்ற முடியவில்லை, தயவுசெய்து இந்த சிரமத்தை எனக்காக எடுத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் ஏற்கனவே ஏகாந்தவாசப் பணியால் அதீத சுமையுடன் இருக்கிறீர்கள்" என்றார்.

பாபா ஒருமுறை கூட அவரது நிலையான தாளத்தை நிறுத்தாமல், "**தொடரவும்**" என்று சைகையால் தெரிவித்தார்.

பாவ் கல்சூரி மீண்டும் அரை மணி நேரம் அதே வரியை திரும்பத் திரும்ப மொழிந்தார், ஆனால் பாபா சொல்ல முயற்சிக்கும் தாளத்திற்கு ஒத்திசைவாக அவரால் அதை மொழிய முடியவில்லை. மீண்டும் பாவ் கல்சூரி கெஞ்சினார், "பாபா, இங்கே வெப்பம் மிகையாக உள்ளது! இப்போது, தயவுசெய்து நிறுத்துங்கள்!"

பாபா "**மீண்டும் தொடருங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார். மீண்டும் பதினைந்து நிமிடங்களுக்கு, பாவ் கல்சூரி அதே வரியைத் திரும்பத் திரும்ப மொழிய, பாபா அவரது தொடையில் தட்டும் சத்தம் தொடர்ந்தது.

இந்தக் கடைசி பதினைந்து நிமிடங்களில் அது, ஒரே மாதிரியாக சலிப்பூட்டுவதாக இருந்ததைக் கண்டு, பாவ் கல்சூரி மேலும் மேலும் கோபமுற நேர்ந்தது. மிகவும் அசௌகரியமான வெப்பம் காரணமாக, அவருக்குத் தாளத்தில் கவனம் செலுத்துவது கடினமாக இருந்தது. பாபாவும் இடைவிடாது தாளமிட்டுக் கொண்டிருந்ததால் உடல் முழுவதும் வியர்வை வழிந்து கொண்டிருந்தது. அது தொடர்ந்து ஒரு மணி நேரம் பதினைந்து நிமிடங்கள் நடந்து கொண்டிருந்த அவ்வேளையில், பாவ் கல்சூரி தன்னைத் தானே அடக்க முடியாமல், "பாபா, தயவுசெய்து இப்போது நிறுத்துங்கள்; என்னால் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை!" என்றார்.

இம்முறை பாபா வெறுப்பை வெளிப்படுத்தும் விதத்தில் அவரைப் பார்த்து, "**உங்களால் பயனில்லை! அங்கே போய் அமருங்கள்**" என்று கூறினார். அவர் மீண்டும் படுக்கையில் சாய்ந்த வண்ணம், தபேலாவில் இசைப்பது போல, முட்டிகளால் தொடைகளைத் தொடர்ந்து தட்டினார்.

பாபாவை அதிருப்தியடையச் செய்யும் விதத்தில் முட்டாள்தனமாக நடந்து, தோல்வியுற்றதாக உணர்ந்து பாவ் கல்சூரி நாற்காலியில் அமர்ந்தார். அப்போது அற்புதம் ஒன்று நிகழ்ந்தது. அவர் நாற்காலியில் அமர்ந்திருந்தபோது, திடீரென அவர் மனதில் தெளிவான புரிதலின் தென்றல் வீசியது போல் இருந்தது - பாபா என்ன விரும்புகிறார் என்பதை அவர் உடனடியாக அறிந்து கொள்ள

முடிந்தது! கஸல்களை, தாள இசைவுடன், சரியான பாணியில் எப்படி வடிவமைத்து எழுதுவது என்பது அவருக்குப் புரிந்தது.

அந்த நேரத்தில் உடனடியாக, பாபா வேறு எதுவும் கூறாமல், படுக்கையில் எழுந்து அமர்ந்து, சடசடவென விரல்களை அசைத்து, “**இப்போது நீங்கள் இசையமைக்கலாம்**!” என்றார்.

அரை மணி நேரத்திற்குள், பாபாவின் ‘மெஹர் ஸரோத்’ (MEHER SAROD) என்ற தலைப்பில் கஸல் புத்தகத்திற்கான முதல் கஸலை பாவ் கல்சூரி இயற்றி, வாசித்த போது பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார். அவர் பாவ் கல்சூரியை அரவணைத்த வண்ணம், “**ஆமாம், இதுவே எனக்கு வேண்டும். இனி, தினமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வரிகளை உங்களுக்கு வழங்குவேன், நீங்கள் தொடர்ந்து இசையமைக்க வேண்டும்**” என்று உறுதியளித்தார்.

இரண்டு மாதங்கள் தொடர்ந்து ஒவ்வொரு நாளும், பாவ் கல்சூரிக்கு ஒன்று அல்லது மேலதிகமான கஸல்களை இயற்ற பல ஈரடிக் கவிதை வரிகளை பாபா வழங்கி வந்தார். நல்ல மனநிலையில் இருக்கும் சில தருணங்களில் பாபா அவரே முழு கஸலையும் இயற்றினார். சில சமயங்களில், அவர் ஸர் மஸ்த் (SAR MAST), மஜ்னுன் & லைலா (MAJNUN & LAILA), அல்லது ஃபர்ஹாத் & ஷிரின் (FARHAD & SHIRIN) போன்ற ஒரு கதையை விவரிப்பதும் அல்லது சில கருத்துகளை வழங்க, பாவ் கல்சூரி அவற்றை உரை நடையில் எழுதுவதும் அவ்வப்போது நடந்து வந்தது. ஒவ்வொரு நாளும் பாவ் கல்சூரி மதியம் பாபாவிடம் செல்லும்போது, அவர், “**இன்று எத்தனை கஸல்கள் எழுதியுள்ளீர்கள்? அவற்றை வாசியுங்கள்**” என்று கேட்டுவந்தார்.

சில கஸல்கள் பாபாவின் அறையிலேயே இயற்றப்பட்டன. சில நேரங்களில், பாபா ஈரடி வரி ஒன்றை வழங்கிய பின்பு, பாவ் கல்சூரி அவரது சிந்தனையில் மூழ்கிவிடுவதும், பாபா தண்ணீருக்காக சைகையால் தெரிவித்தால், பாவ் கல்சூரி அதை கவனத்தில் வாங்காத பட்சத்தில், அவர் அதை எடுக்க நடந்து செல்வதும், ஆனால் பாபா விரும்பியதை எடுக்க மறந்துவிடுவதும் அவ்வப்போது நடந்து வந்தது. பாவ் கல்சூரி அங்கேயே நின்று பாபாவைப் பார்த்து, கஸலில் மூழ்கிய வண்ணம் நிற்பதைக் கண்டு, பாபா சிரித்துக்கொண்டே, தண்ணீரைக் கொண்டு வருமாறு மீண்டும் சைகையால் தெரிவிப்பதும் வழக்கமாக நடந்தது.

பாபா சில நேரங்களில் பாவ் கல்சூரியிடம் ஒரு குறிப்பிட்ட வரியை அல்லது முழுக் கவிதையையும் திரும்பச் சொல்லுமாறு கேட்டுக்கொள்வது உண்டு. பாபா அடிக்கடி அவரைத் தழுவி, முத்தமிட்டு, சைகையால் தெரிவித்தார், “**நீங்கள் என்ன எழுதியுள்ளீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? அது என்**

**இதயத்தைத் தொடுகிறது? அது எவ்வளவு உன்னதமானது - எவ்வளவு ஆழமான கருத்தை உள்ளடக்கியது என்று உங்களுக்குத் தெரியாது! நீங்கள் எழுதியது என்னவென்று உங்களுக்கே தெரியாது. உங்கள் வரிகளின் நடை நதிபோலப் பாய்ந்தோடுகிறது!"**

1968 ஏப்ரல் 4 அன்று பாபா குருபிரசாத் வந்த பின்னர், உலக நிகழ்வுகளில் ஆஃப்ரிக்க-அமெரிக்க குடிமக்கள் உரிமைத் தலைவரும், 1964 அமைதிக்கான நோபல் பரிசு வென்றவருமான மார்ட்டின் லூதர் கிங் (MARTIN LUTHER KING) படுகொலை செய்யப்பட்டார். நான்கு நாட்களுக்குப் பிறகு, வட வியட்நாம் அமெரிக்காவுடன் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக்கொண்டது. இது 1968 மே இரண்டாவது வாரத்தில், பாரிஸ் நகரில் தொடங்கப்பட்டு இறுதியில் வியட்நாம் போரின் முடிவுக்கு வழிவகுத்தது.

அலன் கோஹென் (ALLAN COHEN), ரிக் சேப்மென் (RICK CHAPMAN), ராபர்ட் ட்ரேஃபஸ் (ROBERT DREYFUSS), பவ்லா கார்டன் (PAULA GARDON), அலென் ஏல் (ALAIN YOUELL) போன்றவர்கள் செய்துவந்த போதைப்பொருள் எதிர்ப்புப் பணிகளின் வழக்கமான அறிக்கைகள், கடிதப் பரிமாற்றம் தடை செய்யப்பட்டிருந்தாலும், பாபாவிற்கு அனுப்பப்பட்டன. ஏப்ரல் 26 அன்று, ரிக், அலன் இருவருக்கும் பாபா கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**எனது ஏகாந்தவாசப் பணியின் நடுவே, ஏப்ரல் 12 முதல் 14 வரையிலான உங்கள் பணி குறித்த அறிக்கையை, எரச் இன்று வாசிக்கக் கேட்டேன். நீங்கள் செய்த பணியில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், 'எந்த சூழ்நிலையிலும் உண்மைப்பொருள் உண்மையைக் கைவிடாது' என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும் என விரும்புகிறேன்.**

இரண்டு இளைஞர்களும் மே 1 அன்று மீண்டும் ஒரு தொலைத்தந்தியை அனுப்பினர்:

ஏகாந்தவாசத்தில் அமைதியாக அமர்ந்து, உலகம் முழுவதையும் தனது காலடியை நோக்கி ஈர்க்கும் அவதார புருஷரின் வழிகள் மர்மமும், அற்புதமும் நிறைந்தவை. உங்களில் நிலைகொண்டுள்ள ஒரே உண்மைப்பொருளை, பிறரில் எழுச்சியுறச் செய்வதைக் காண்பதில் நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். உங்கள் அன்பின் உறுதித்தன்மையில் நாங்கள் பூரிப்படைகிறோம்.

குருபிரசாத்தில் வந்து குடியேறிய சில நாட்களுக்குப் பிறகு, பாபா மண்டலியிடம் இவ்வாறு குறிப்பிட்டார்: "1968 **மே 21க்குப் பின்பு நடக்கவிருப்பது**

**மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும், இதுவரை நிகழாத ஒன்றாகவும், கோடிக்கணக்கான ஆண்டுகள் மீண்டும் நிகழாமலும் இருக்கும்.**"

அவர் மேலும் கூறினார், "**அந்த மிக முக்கியமான சம்பவம் திடீரென நடக்கும், படிப்படியாக அல்ல. அது நடக்கும் தருணம் வரை, மக்கள் தங்கள் அன்றாட விவகாரங்களை, அதைக் குறித்து எதையும் அறியாத முறையில் நடந்து கொள்வார்கள்.**"

இருந்தபோதிலும், அந்த '**ஏதோ மிக முக்கியமான ஒன்று**' என்னவாக இருக்கும் என்பதை பாபா இன்னும் வெளிப்படுத்தவில்லை.

அவரது ஏகாந்தவாசப் பணி தொடர்ந்தபோதிலும் 1968 மே 4 அன்று, கோஹெரை இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகளை எடுத்து, ரூபி ஹால் மருத்துவமனைக்கு ஆய்வுக்காக அனுப்ப பாபா அனுமதித்தார்.

இதற்கிடையில், ஸொராப்ஜி ஸிகன்போரியாவின் பேரன் விராஃப் (VIRAF) உடல்நலம் குன்றி இருந்ததை அவர் பாபாவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அதற்கு பதிலளிக்கும் விதத்தில் பாபா ஒரு தொலைத்தந்தியை அனுப்பினார்: "**விராஃப் இப்போது எப்படி இருக்கிறான்? நீங்களும், அலமாயும்** (அவரது மனைவி) **தைரியமாகவும் அமைதியாகவும் இருப்பீர்களாக!**"

அந்த நேரத்தில் விராஃப் கடுமையாக நோய்வாய்ப்படவில்லை என்றாலும், பாபா ஏன் இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார் என்று ஸிகன்போரியா திகைப்பில் ஆழ்ந்தார். அதன் பின்பு பாபாவிடமிருந்து இரண்டாவது தொலைத்தந்தியும் வந்தது: "**விராஃப் எனக்கு சொந்தமானவன். உங்களுக்கு அல்ல. எனவே கவலையின்றி மேலதிக தீவிரத்துடன் எனது பணியைச் செய்யத் தயாராக இருங்கள்.**" சிறுவனின் உடல்நிலை மோசமாகி, ஒரு மாதத்திற்குள் அவன் உயிரைத் துறந்தான்; அதற்குப் பின்னரும் ஸிகன்போரியா மற்றும் அவரது குடும்பத்தினர் இறை-மனிதனின் விருப்பத்திற்கு அடிபணிந்து இருந்தனர்.

அமெரிக்காவில், ஜீன் அட்ரியல் கடந்த பதினெட்டு ஆண்டுகளாக பாபாவின் தொடர்பில் இல்லாமல் இருந்தார்; ஆனால் 1968 மே 11 அன்று, அவர் பாபாவிற்கு எழுதிய ஒரு சுருக்கமான கடிதத்தில் கூறியதாவது: "அன்புள்ள பாபா, நான் ஒருபோதும் உங்களை நேசிக்காமல் இருந்ததில்லை அல்லது எப்பொழுதும் இருக்க மாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியும்... இந்த எளிய உண்மை தான் இக்கடிதத்தை எழுத என்னைத் தூண்டுகிறது."

பாபா இந்தத் தொலைத்தந்தி மூலம் ஜீனின் பக்தியை ஆமோதித்தார்: **“நான் உங்களை நேசிக்கிறேன், நான் இறுதிவரை உங்களுடன் இருக்கிறேன்.”**

மே 10ஆம் தேதி, பாபா அவரது அன்பர்களுக்காக கீழ்வரும் செய்தியை வழங்கினார், இதை மே 15 அன்று ‘வாழ்க்கை சுற்றறிக்கை’யாக (LIFE CIRCULAR) ஆதி அனுப்பினார்:

மிகவும் ஆழ்ந்த, கடுமையான ஏகாந்தவாசத்திலிருந்து, அவதார் மெஹர் பாபா, அவரது அன்பர்கள், சேவகர்கள் அனைவருக்கும் பின்வரும் செய்திகளை அனுப்புமாறு அறிவுறுத்துகிறார்:

1) **“நீங்கள் எப்படி உணருகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்கள் அன்பை நான் அறிவேன். என்னைப் பார்க்கத் துடிக்கும் உங்கள் ஏக்கத்தின் வேதனை எனக்குத் தெரியும். நான் என்ன செய்கிறேன், என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும். என்னைப் பார்க்கும் உங்களுக்கான சரியான நேரம் எப்பொழுது வரும் என்றும் எனக்குத் தெரியும், அந்த நேரத்தில் நான் உங்களை அழைப்பேன். அந்த நேரம் வரும் வரை, நான் என் அன்பர்களைப் பார்ப்பேன் என்று அறிவிக்கும் வரை, எனது வார்த்தை மற்றும் என் அன்பின் மீது ஆழ்ந்த நம்பிக்கையுடன், எனது விருப்பத்திற்கு முழுமையான கீழ்ப்படிதலுடன் நீங்கள் அனைவரும் பொறுமை காக்க வேண்டும். “என் அன்பர்களுக்கு தரிசனம் வழங்குகிறேன்’ என்று அறிவிக்கும் வரை, நீங்கள் யார் ஒருவரும் வர முயற்சிக்காதீர்கள், எவரையும் வருமாறு தூண்டாதீர்கள், எவரும் வரவும் வேண்டாம். நான் குருபிரசாத் அல்லது மெஹராஸாத் எங்கிருந்தாலும், நான் எனது சுற்றறிக்கையை வெளியிடும் வரை, நீங்கள் அனைவரும் எனது விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்து காத்திருக்க வேண்டும். என் மீதான உங்கள் அளப்பரிய அன்பு, உண்மைப்பொருளையும், இறை அன்பையும் உலகிற்கு பறைசாற்றுவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். எனது வார்த்தைகளுக்கான உங்கள் கீழ்ப்படிதல் பிரபஞ்சத்திற்கான எனது பணியில் உதவியாக இருந்ததை எண்ணி நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நான் உங்களுடன் இருக்கிறேன். என் அன்பை உங்களுக்கு வழங்குகிறேன்.**
2) **“எனது அன்பர்களும், சேவகர்களும் தங்கள் மனசாட்சிக்கு இணங்க தத்தமது நாட்டின் சட்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டும்.”**

3) “எனது அன்பர்களும், சேவகர்களும் அவர்களது தனிப்பட்ட அரசியல் நோக்கங்கள், அரசியல் கண்ணோட்டங்கள், அல்லது அவர்களது வணிக ஈடுபாடுகள் எதுவும் உண்மைப்பொருளையும், இறை அன்பையும் உலகிற்கு எடுத்துச் செல்லும் பணியில் தலையிட அனுமதிக்கக்கூடாது.”

4) “எனது அன்பர்களும், சேவகர்களும் தங்கள் வாழ்வாதாரத்தை, நேரமும், நிபந்தனைகளும் அனுமதிக்கும் அளவுக்கு நேர்மையாக சம்பாதிக்க வேண்டும்; மேலும் அவர்கள் தங்கள் தார்மீக உணர்வு மற்றும் மனசாட்சி போன்றவற்றிற்குக் கட்டுப்பட்டு சம்பாதிக்கப்படாத எதையும், எனது பணி மற்றும் நோக்கத்திற்காக ஒருபோதும் பங்களிப்பாக வழங்கக்கூடாது.”

5) “எனது அன்பர்கள் அனைவரும் 1968 ஜூலை 9ஆம் தேதி வரை, ஒவ்வொரு நாளும், குருநாதருக்கான ‘பர்வர்திகார்’ மற்றும் மனம் வருந்தி மன்னிப்பு கோரும் இரங்கல் பிரார்த்தனை இரண்டையும் தொடர்ந்து மொழிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஜூலை 10ஆம் தேதி, எனது மௌனத்தின் 43ஆவது ஆண்டு நிறைவை அனுஷ்டிக்கும் விதத்தில், 1968 ஜூலை 9 நள்ளிரவு முதல் ஜூலை 10 நள்ளிரவு வரை, 24 மணி நேரம் மௌனம் கடைப்பிடிக்க வேண்டும்.

மௌனம் கடைப்பிடிப்பது நடைமுறையில் சாத்தியமற்றதாகக் கருதும் அன்பர்களுக்கு உபவாசம் மேற்கொள்ளும் விருப்பத்தை பாபா தெரிவிக்கவில்லை என்பதை தயவு செய்து நினைவில் கொள்ளவும். இது குறித்த விபரங்களை மேலும் தெளிவுபடுத்த யார் ஒருவரும் கடிதம் எழுத வேண்டிய தேவையில்லை.

மேலும், ‘கடிதப் பரிமாற்றத்தின் மீதான தற்போதைய தடை, இப்போது போலவே தொடருவது மட்டுமின்றி, கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்’ எனவும் பாபா விரும்புகிறார். ‘கடுமையாகக் கடைப்பிடிப்பது’ என்பது முக்கியமாக, கட்டுப்பாட்டை மறந்தவர்களுக்கும், தடைக்கு முந்தைய காலத்தை நினைவில்கொண்டு கடிதம் எழுதுவதில் தவறிழைப்பவர்களுக்கும் பொருந்தும்.

அவதார் மெஹர் பாபாவின் மேற்கூறிய செய்திகளை உங்கள் பணியின் எல்லைக்குள் அடங்கும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தயவுகூர்ந்து விரைவாகத் தெரிவிக்கவும்.

பூனாவில் வழக்கமான ஏற்ற தாழ்வுகள் இருந்தபோதிலும் பாபாவின் உடல்நிலை மொத்தத்தில் நன்றாகவே இருந்தது. ஒரு நாள் அவர் மிகவும் நன்றாகவும், ஒளிரும் முகத்துடனும் இருந்ததோடு, மிகவும் வேகமாக நகர்ந்த அவ்வேளையில் மண்டலி அவரது சைகைகளை அதே வேகத்தில் எடுத்துரைக்கக் கடினமாக இருந்தது. அடுத்த நாளே அவர் சோர்வாகக் காணப்படுவதும் மாறி மாறி நிகழ்ந்து வந்தது; பாபா இதை இவ்வாறு விளக்கினார்: "**எனது உடல் ஆரோக்கியத்தில் இந்த ஏற்ற தாழ்வுகள் எனது உலகளாவிய பணியின் மாற்றத்தால் ஏற்படுகின்றன**."

அன்பர்கள் அவரது ஏகாந்தவாசத்தின் சுவரைத் தகர்த்தெறிந்து தரிசனம் கோரும்போது, பாபா இவ்வாறு கூறி வந்தார்: "**பொறுமையாக இருங்கள். என் அன்பில் காத்திருங்கள். எனக்காகக் காத்திருப்பது வீண் போவதில்லை. நீங்கள் என்னைப் பார்ப்பீர்கள், ஆனால் நான் அழைக்கும் வரை காத்திருங்கள். எனது தாமனை** (மேலங்கி) **உறுதியாகப் பற்றிக்கொண்டு என் அழைப்புக்காகக் காத்திருங்கள்**."

1968 மே 18 நள்ளிரவிலிருந்து, பாபா அறிவுறுத்தியதற்கு இணங்க சம்பந்தப்பட்ட அனைவரும் 24 மணி நேரம் மௌனம் கடைப்பிடித்தனர். குருபிரசாத்தில் தங்கியிருந்த மண்டலியும் அவ்வாறே செய்தனர்.

மே 21 செவ்வாய்க்கிழமை ஒரு முடிவையும், ஆரம்பத்தையும் குறித்தது. பாபா தனது அன்பர்களைப் பார்க்காமல் ஏகாந்தவாசம் மேற்கொண்ட போது - அது 'முடிவுறாதது போலத் தோன்றும் இடையறாத' ஏகாந்தவாசத்தின் முடிவாகவும், அவரது அன்பர்கள் அவரைப் பார்ப்பதிலிருந்து விலக்களிக்கப்பட்ட போது - அது 'விலக்கு' என்று குறிப்பிடப்படும் ஒரு காலகட்டத்தின் தொடக்கமாகவும் இருந்தது. இதை பாபா இவ்வாறு விளக்கினார்:

**எனது ஏகாந்தவாசம் இன்றுடன் முடிவடைந்தாலும், எனது ஏகாந்தவாசத்திற்காக விதிக்கப்பட்ட அனைத்து கட்டுப்பாடுகளும் தொடர்ந்து நடைமுறையில் உள்ளன.**

**ஏகாந்தவாசத்திற்குப் பின்னர் ஒதுக்கப்படும் மிகக் குறுகிய காலகட்டத்தில் நான் இப்போது செய்து வரும் சில குறிப்பிட்ட பணிகள் ஜூன் 25 அன்று நிறைவடையும் என்றும் கூறுகிறேன். அதன்பின், நடக்கவிருக்கும் மாபெரும் நிகழ்ச்சி குறித்து நான் முடிவு செய்வேன். என் அன்பர்களை நான் தரிசனம் செய்ய அனுமதிக்கும் விதம் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். வெகுஜன தரிசன நிகழ்ச்சி எதுவும் இராது. நான் தரிசனம் வழங்க ஆரம்பித்ததும், அது தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குத் தொடரும். நான்**

**தரிசனம் வழங்கும் நாட்களில் 'தனித்துவம் மிக்க பாபா'வாக இருக்கும் நாட்கள் நெருங்கிக் கொண்டிருப்பதாக நான் கூறுகிறேன். அது எனது 'இறை-வெளிப்பாடு' போல் இருக்கும்.**

இறுதியாக 1968 மே 21 அன்று பாபா ஏகாந்தவாசத்திலிருந்து வெளியே வந்து, ஒதுக்கப்பட்ட மிகக் குறுகிய காலகட்டத்தில் அடியெடுத்து வைத்தாலும், ஏகாந்தவாசத்தின் போது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளில் எந்த மாற்றமும் இராது. பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**இந்த ஒதுக்கப்பட்ட மிகக் குறுகிய காலகட்டம் 'ஒன்றிணைவதற்கு' வழிவகுக்கும் - அதாவது எனது தரிசனத்தில் அனைவரும் ஒன்றிணைக்கப்படும் நேரம்.**"

மே 21 அன்று எரச், பாபா விரும்பியபடி, நவம்பர் மாதம் மெஹராஸாத்தில் நடந்ததைப் போலவே, உயிரைத் துறந்தவர்களின் பெயர்களை வாசித்து, அந்த நேரத்தில் பாபா எடுத்துரைத்த அதே ஈரடிப் பிரார்த்தனையை மொழிந்தார்: "**கடவுளே, என்னைவிட்டுப் பிரிந்த அன்பர்களுக்கு அவர்களின் அன்பு, சேவை, நம்பிக்கை மற்றும் நேர்மைக்கு ஏற்ப, உகந்த வெகுமதிகளை வழங்குவீராக.**"

ஏகாந்தவாசம் நிறைவடைந்த பிறகும் பாபாவின் பணி நின்றபாடில்லை; இது 1968 ஜூலை இறுதி வரை தொடர்ந்தது. பாபாவின் பணி நிறைவடைந்த பின்னர், அவர் மிகவும் சோர்வாகக் காணப்பட்டதால், பாபா, அவரது உடல் ஆரோக்கியத்தை அலட்சியப்படுத்தாமல், மெதுவாக சில மணி நேரங்களே பணிபுரியுமாறு மண்டலி கேட்டுக்கொண்டனர். அதற்கு பாபா பதிலளிக்கும் விதத்தில் இவ்வாறு விளக்கினார்: "**இது, மீண்டும் ஒருமுறை ஏகாந்தவாசப் பணியை நீட்டித்து, அது நிறைவுறும் தேதியைத் தள்ளிப்போடுவதாகப் பொருள்படும். இப்போது நான் அதை அனுமதித்தால், அது முடிவை காலவரையின்றி ஒத்திவைத்து, அதன் போக்கை வேறு விதத்தில் மாற்றியமைக்கும்.**"

இதன் விளைவாக, பாபா ஐந்து வாரங்கள் அவரது பணியைத் தொடர்ந்தார் - 1968 மே 21 முதல் ஜூன் 27 வரை - தினமும் அரை மணி நேரம் பணிபுரிந்தார். ஒரு மாதத்திற்கும் மேலாக, குருபிரசாத்தில் பாபா தங்கியிருந்த கடைசி நாட்களில், அவர் பால் நாத்து, நானா கேர் இருவரையும் தனது அறைக்கு, அரை மணி நேரத்திற்காக, இரவு 7:00 மணிக்கு அழைப்பதை வழக்கமாகக் கொண்டார். நாக்பூர் பல்கலைக்கழகத்தின் மராட்டி துறை முதல்வர், பேராசிரியர் ஏ.என். தேஷ்பாண்டே (A.N. DESHPANDE) எழுதிய மராட்டி கவிதைகளை ஒவ்வொரு மாலையும் அவர்கள் இருவரும் வாசிப்பதைக் கேட்க விரும்பினார். நானா கேர்,

தேஷ்பாண்டேயிடம் பாபாவைப் பற்றி ஓராண்டுக்கு முன்னரே கூறியிருந்தார்; தேஷ்பாண்டே, அவரை சந்திக்கவில்லை என்றாலும், பாபாவின் புத்தகங்களைப் படித்த பின்னர் அவர் பாபாவால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். தேஷ்பாண்டே பாபாவுடன் கடிதப் போக்குவரத்து தொடர்பு வைத்திருந்தார், மேலும் பாபா முன்னிலையில் இப்போது அவருக்காகப் படித்துக் கொண்டிருந்த தேஷ்பாண்டே எழுதிய ஸ்லோகங்கள் அடங்கிய 'நவி மனாச்சே ஸ்லோக்' (நவீன யுகத்தின் ஸ்லோகங்கள் - NAVE MANACHE SHLOK) என்ற படைப்பில் மெஹர் பாபாவைப் பற்றிய பல குறிப்புகள் இருந்தன.

பாபாவை மகிழ்விக்க, நானா கேர், பால் நாத்து இருவரும் இரண்டு வேடிக்கையான குறு நாடகங்களை அரங்கேற்றினர்; மேலும் ஃபிரான்சிஸ் தொடர்ந்து அவரது ஆங்கில கஸல்களை அவருக்கு உரத்த குரலில் வாசித்தார். பாவ் கல்சூரி, இந்தியில் மொழிபெயர்த்த 'தி வேஃபேரர்ஸ்' (THE WAYFARERS) புத்தகத்தை அவர் படிப்பதையும் பாபா கேட்டுக் கொண்டிருந்தார்.

1968 ஜூன் 3 அன்று ஹாரி கென்மோர் (HARRY KENMORE), தொலைபேசியில் நியூயார்க் நகரிலிருந்து குருபிரசாத்தை தொடர்பு கொண்டு, பாபா விரைவில் தரிசனம் வழங்குவார் என்ற நம்பிக்கையில், ஏதேனும் புதிய செய்திகள் உள்ளனவா என்பதைக் கேட்டறிந்தார். அந்த வருடம் பாபா தரிசனம் வழங்குவார் என்று தான் நினைக்கவில்லை என எரச் பதிலளித்தார்.

24ஆம் தேதி, பாபா, இரண்டு முறை எரச்சிடம் உயிரைத் துறந்தவர்களின் பட்டியலைப் படிக்குமாறு கூறினார். அது குறித்து பின்னர், அவர் கருத்துத் தெரிவிக்கையில், "**என்னுடனான அவர்களின் நெருக்கம், எனக்கு அவர்கள் செய்த சேவை, எனக்காக அவர்கள் செய்த தியாகம் அனைத்திற்கும் ஏற்ப கடவுள் அவர்களை ஆசீர்வதித்தார். ஆமென்!**" அன்றைய தினம் பாபா, பெண் மண்டலியை ஹஸ்ரத் பாபாஜானின் சமாதிக்கு மரியாதை செலுத்த அனுப்பிவைத்தார்.

ஜூன் 25 அன்று, பாபாவின் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, மீண்டும் சர்க்கரை, யூரியா மற்றும் கொழுப்புச்சத்து அளவுகள் சோதிக்கப்பட்டன. மஹாராணி ஷாந்தாதேவி 1968 ஜூன் 26, 27 தேதிகளில் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்பட்டார். பாபா மெஹராஸாத் திரும்பிச் செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்ததால், ஜூன் 28 முதல் ஜூலை 4 வரை தமது ஏகாந்தவாசப் பணியை நிறுத்தி வைத்தார்.

ஜூன் 29 அன்று, பூனா மருத்துவ மனையில் பாபாவின் மார்பு, கழுத்து, முதுகெலும்பு பாகங்கள் எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. பாபாவிற்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டது அல்லது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டது இதுவே கடைசி முறையாகும்.

ஜூன் 30 அன்று காலை 11:00 மணிக்கு இந்துமதி தேஷ்முக் எழுதிய மராட்டி நாடகமான 'மெஹர் தீப்தி' (MEHER DEEPTI, THE LIGHT OF MEHER) புத்தகத்தின் நகலில் பாபா கையெழுத்திட்டார்.



மெஹர் பாபாவுடன் மெஹரு - குருபிரசாத்திலிருந்து மெஹராஸாத் வருகை
(LEAVING GURUPRASAD FOR MEHERAZAD, MEHERU IN FRONT)



மெஹர்  பாபா (MEHER BABA), மெஹராஸாத் (MEHERAZAD)

# இறுதி ஏகாந்தவாசம்
(**The Final Seclusion**)

ஆதி, டாக்டர் டான் இருவரும் ஜூன் 30ஆம் தேதி தத்தமது கார்களில் குருபிரசாத் வந்து பாபாவை சந்தித்தனர். பாபா முதலில் குருப்பிரசாத்தில் தங்கியிருப்பதை ஜூலை 12 வரை நீட்டிப்பதாகக் கூறியிருந்தாலும், அவர் தமது திட்டத்தை மாற்றி, 1968 ஜூலை 1 அன்று மெஹராஸாத்திற்குத் திரும்பிச் சென்றார். குருபிரசாத்தில் பிரியாவிடை அளிக்கவும், மெஹராஸாத் செல்லும் வழியில் பூனா அல்லது அஹமதுநகரில் யார் ஒருவர் அவரைப் பார்க்கவும் அனுமதிக்கப்படவில்லை.

இதற்குப் பிறகு பாபா மீண்டும் மெஹராஸாத்தை விட்டு வெளியே வரவில்லை.

பாபா இல்லாத நேரத்தில், பாதிரி, காக்கா, கைக்கோபாத், டாக்டர் அலு கம்பாட்டா ஆகியோர் மெஹராஸாத்தில் பணியாட்களுடன் தங்கியிருந்தனர். ரக்மா (RAKHMA), ஸேவ் (SEY-O, ஸே-ஓ - உச்சரிப்பு) என்றழைக்கப்படும் இரண்டு பணிக்காரப் பெண்கள் நீண்ட காலமாகப் பணிபுரிந்து வந்தனர்; அவர்கள் கூலிக்காக அல்ல, ஆனால் பாபாவின் மீதுள்ள அன்பினால் அதைச் செய்தனர். பிம்பல்காவ்ம் கிராமத்தில் வாழ்ந்த, பாபாவிடம் அதீத பக்தி மிக்க ஜெய் (JAI), கங்கி (GANGI) எனும் இரண்டு பணிப்பெண்களும் இருந்தனர். கங்கி, கோரக் (GORAKH) என்ற சிறுவனின் மாற்றாந்தாய் ஆவார், அவர் பல ஆண்டுகளுக்கு முன்பு, பாபாவின் விருப்பத்திற்கு இணங்க மும்பையில் கோர்ஷெத் என்பவரால் வளர்க்கப்பட்டார். இப்போது, வயது முதிர்ந்த நிலையில், கோரக் மெஹராஸாத்தில் சேவகராக பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றார்.

பாபா தமது ‘விலக்கு வழங்கப்பட்ட’ (EXCLUSION) பணியை 1968 ஜூலை 5 வெள்ளிக்கிழமை முதல் தொடங்கினார். அலோபாவிற்கு மீண்டும் இரவு கண்காணிப்புப் பணி வழங்கப்பட்டது; முதலில் இரவில் நான்கு மணி நேரமும், பின்னர் ஆறு மணி நேரமும் பாபா தமது பௌதீக உடலைத் துறக்கும் வரை அதைச் செய்து வந்தார். பாவ் கல்சூரி, பெண்டு, ரானோ மூவரும் வழக்கமான கண்காணிப்பாளர்களாக இருந்தனர், ஆனால் ரானோவின் உடல்நிலை சீரில்லாததால், இந்த இறுதி கட்டத்தில் அவருக்கு முதல் இரண்டு மணிநேரம் பணி வழங்கப்பட்டது.

பாபாவின் ஏகாந்தவாசப் பணி ஜூலை இறுதி வரை தினமும் காலை அரை மணி நேரம் மண்டலி மண்டபத்திலும், மதியம் அவரது அறையிலும்

தொடர்ந்தது. வழக்கம் போல, குருநாதருக்கான ‘பர்வர்திகார்’ மற்றும் மனம் வருந்தி மன்னிப்புக் கோரும் இரங்கல் பிரார்த்தனைகள் (MASTER’S & REPENTANCE PRAYERS), பாபாவின் பணி முடிந்ததும் காலையில் மண்டபத்தில் மொழியப்பட்டது.

ஜூலை 8 மதியம் 1:30 மணிக்கு ஆதி மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். ஃபிரான்சிஸ், பாபாவின் ஏகாந்தவாசப் பணியின் போது மரத்துப் போன அவரது இடது கையை மெதுவாக மஸாஜ் செய்து கொண்டிருந்தார். ஆதி தனது சமீபத்திய மும்பை விஜயத்தைக் குறித்து கூறினார், அங்கு அவர் டாக்டர் ராம் கிண்டேயை சந்தித்து பாபாவின் கழுத்து எக்ஸ்-ரேக்களைக் காட்டினார். கிண்டே, கஜ்வானி இருவருக்கும் தொலைத்தந்தி மூலம் அன்பான ஆசிகளை அனுப்புமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார். டாக்டர் டானும் அன்று மெஹராஸாத்திற்கு வந்து கைக்கோபாத்தைப் பரிசோதித்தார்.

மெஹர் பாபாவின் மௌனத்தின் 43ஆவது ஆண்டு நிறைவு தினம் 1968 ஜூலை 10ஆம் தேதி புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினம் இந்தியாவில் வாழும் பாபாவின் சேவகர்களுக்கு, ஒரு தவறான புரிதல் அவர்களுக்கிடையே பிளவை ஏற்படுத்தியதன் காரணமாக, ‘அவதார் மெஹர் பாபாவின் இறுதி எச்சரிக்கை’ என்ற சுற்றறிக்கையை ஆதி வெளியிட்டார்:

**மெஹர்-குடும்பத்தின் அன்பான சகோதர சகோதரிகளே,**

**‘மெஹர்-குடும்பம்’ எனும் மையத்தில் பிளவு ஏற்பட்டிருப்பதைக் கண்டு நான் மிகவும் வேதனைப்படுகிறேன். இந்த உண்மை, மிகுந்த தயக்கத்துடன் அன்பான பாபாவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது, மேலும் பாபா தமது பிரியமான அனைவருக்கும் இதைத் தெரியப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறார்:**

1) **பிளவுக்கான காரணம் எதுவாக இருந்தாலும், ஒவ்வொருவரும் அதைக் களைந்து, ஒருவருக்கொருவர் செய்த குற்றங்களை மன்னித்து, மறப்பதன் மூலம் அதை சரி செய்வதற்கு ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஒருவர் மிகவும் நேர்மையாகவும், மிக்க பணிவாகவும், அதீத அன்பாகவும் இருக்க தீர்மானித்தால் இது சாத்தியமாகும். பாசாங்குத்தனம், ஆணவம், வெறுப்பு போன்றவை பிளவைப் பெரிதாக்கி அவமதிப்பை வளர்க்கின்றன.**
2) **இது அவதார யுகத்தின் மிக முக்கியமான காலகட்டமாகும், மேலும் அவரது அன்பர்கள் அனைவரும் அவரது தாமனை (மேலங்கி) எந்த சூழ்நிலையிலும் தங்கள் கைகளிலிருந்து நழுவவிடாமல் மிகவும்**

உறுதியாகப் பற்றிக் கொள்ள தங்களால் இயன்றவரை முயற்சிக்க வேண்டும்.

3) அவரது அன்பர்கள் அனைவருக்கும், குறிப்பாக இந்த நெருக்கடியான காலகட்டத்தில் காமத்திற்கு அடிபணியாமல் இருப்பது மிகவும் இன்றியமையாதது. சோதனைகள் பெரியதாக இருந்தாலும், அவர் மீதான உங்கள் அன்பு அதிகமாக இருக்க வேண்டும். அவரை முழு மனதுடன் நினைவுகூர்ந்து, நீங்கள் வீழ்ந்த இடத்திலிருந்து விரைவாக எழுந்து அவருடைய அன்பிலும் சேவையிலும் முன்னேறிச் செல்லவேண்டும்.

4) அவதார யுகத்தின் இந்த இக்கட்டான காலகட்டத்தில், தாங்கள் புனிதமானவர்கள், பக்திமான்கள் மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளைக் கொண்டிருப்பதாக நம்ப வைக்கும் விதத்தில் பிறரை வழிநடத்தும் நபர்களிடம், எல்லா நேரங்களிலும் எச்சரிக்கையாக இருப்பது மிகவும் முக்கியமானது. அப்படிப்பட்ட நபர்கள் எவ்வளவுதான் பக்தி மிக்கவர்களாகத் தோன்றினாலும், ஒரு பாபா அன்பர், அத்தகைய பக்தியை அவதாரத்தின் தெய்வீகத்துடன் ஒருபோதும் கலக்கக்கூடாது!

5) தாங்கள் குருநாதர்கள், சாதுக்கள் என்றும், பிற மனிதர்களுக்கு உதவும் சக்திகளைப் படைத்தவர்கள் என்று வலியுறுத்தி கூறவும் செய்யும் நபர்களிடமிருந்து விலகி இருக்குமாறு அனைத்து பாபா அன்பர்களுக்கும் மீண்டும் மீண்டும் எச்சரிப்பதை, ஓர் உண்மையான பாபா அன்பர் நினைவில் கொள்ள வேண்டும். பாபா அன்பர்களும், சேவகர்களும் அத்தகைய நபர்கள் மற்றும் அவர்களின் விவகாரங்களில் ஒருபோதும் தலையிடக்கூடாது; பரிபூரண குருநாதர்கள் மற்றும் அவதார புருஷரின் மீது மதிப்பும் மரியாதையும் இல்லாத நேர்மையற்ற 'மனிதகுலத்தின் உதவியாளர்கள்' என்று கூறப்படும் நபர்களுடன் ஈடுபாடுக் கூடாது. சத்குருக்கள் மற்றும் அவதார புருஷர் என்ற பெயரில் பிறரை ஏமாற்றி, தங்கள் சுயநலத்திற்காக ஆன்மீகத்தைப் பயன்படுத்துபவர்களிடம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

6) அவரது அன்பர்கள் மற்றும் சேவகர்கள், ஒருவர் வேறொருவர் குடும்ப விவகாரங்களில் நெருக்கமாக ஈடுபடக்கூடாது, மேலும் அவர்கள் தத்தமது குடும்பங்கள் தொடர்பான தனிப்பட்ட விவகாரங்களால் உணர்ச்சிவசப்படக்கூடாது. எந்தவொரு தனிப்பட்ட

**விவகாரங்களும், ஒருவருக்கொருவர் தங்கள் உறவைக் கெடுக்கவோ அல்லது உண்மைப்பொருளுக்காக அவர்கள் செய்யும் பணியில் அவர்களின் முயற்சிகளை பாதிக்கவோ அனுமதிக்கக் கூடாது.**

7) **பாபாவின் அன்பின் செய்தியை பிறரிடையே பரப்பும் அவரது அன்பர்களும் சேவகர்களும், அவரது அன்பை தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளவும், அவரது பெயரில் நல்லிணக்கம் மற்றும் புரிதலின் உணர்வை நிலைநிறுத்தவும் அவர் விரும்புகிறார். அவர்கள் பிறரிடம் குறைவான ஆக்ரோஷத்துடனும், தம் மீது அதீத தீவிரத்துடனும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்; எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் பாபாவை முழு மனதுடன் நேசிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்; ஏனெனில், தங்களைத் தாங்களே எப்போதும் நேசிப்பதை விட அதிகமாக அவர்களை நேசிக்கும் ஆதிகாலப் புருஷர் அவர்.**

**மேலே குறிப்பிட்டுள்ள ஏழு விஷயங்களை முழு கவனத்துடன் கருத்தில் கொள்ளுங்கள்; ஏனெனில் அவை பிரியமான பாபாவிடமிருந்து வந்தவை. அவை எங்கும் வாழும் அவருடைய அன்பர்களுக்கும், சேவகர்களுக்கும் பொருந்தும்.**

அன்பு வணக்கங்களுடன், உங்கள் சகோதரர்,
ஆதி கே. ஈரானி

**1968** ஜூலை **16**ஆம் தேதி, பைதூல், ஹோமா தாதாசாஞ்சியுடன் மும்பையிலிருந்து வந்தார். அன்று பாபாவுக்காக உணவு தயார் செய்த சகனுடன் ஆதி அவர்களை மெஹராஸாத்திற்குக் காரில் அழைத்துச் சென்றார். மறுநாள், கைக்கோபாத்தின் மனைவி மற்றும் இரண்டு மகள்களையும் கைக்கோபாத்தை சந்திக்க, பாதிரி மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார்.

பாபாவின் உள்பணி தீவிரமடைந்த நிலையில், அவரது உடலில் விளைவித்த தாக்கத்தின் காரணமாக, ஒவ்வொரு நாளும் பணி நிறைவடைந்த பின்னர் அவர் சோர்வாகக் காணப்பட்டார். ஜூலை நடுப்பகுதியில் ஒரு நாள், அவர் இவ்வாறு குறிப்பிட்டார்: “**பௌதீகத் தளத்திலிருந்து முற்றிலும் விலகி பணிபுரியும் நேரங்களில், தினமும் எனக்கு இது எவ்வளவு கடினமான உழைப்பாக உள்ளது; மேலும் பௌதீக உலகுடன் என் உடல் தொடர்பைத்**

**தக்க வைத்துக் கொள்ள, அதனுடனான தொடர்பு துண்டிக்காமல் இருக்க, நான் மிகுந்த சிரமத்தைத் தாங்கிக்கொள்ள வேண்டும்!"**

ஜூலை 27 அன்று, பாபா, ஆதியிடம் கூறினார்: **"நான் எனது பணியின் உச்சத்தை எட்டும் போது, உடல் உளைச்சலை உணரவில்லை, ஆனால் நான் கீழே இறங்கி வருகையில், உடல் சோர்வு அதிகமாக உணரப்படுகிறது. இன்று செய்த மகத்தான பணியில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்."**

இரண்டு நாட்களுக்குப் பிறகு, பணியின் பளுவால் ஏற்பட்ட அழுத்தம் மிகப்பெரியதாக மாறியது போலத் தோன்றியது. பாபாவின் உடல்நிலை குறித்து மெஹராஸாத்திற்கும் ஆதியின் அலுவலகத்திற்கும் இடையே கவலை தோய்ந்த தொனியில் தொலைபேசி தகவல்கள் முன்னும் பின்னுமாக விரைந்தன. டாக்டர் டான் அன்றைய தினம் மெஹராஸாத்திற்கு மூன்று முறை வெவ்வேறு மருந்து மாத்திரைகளைக் கொண்டு சென்றார். பூனாவிலிருந்தும் மருந்து வரவழைக்கப்பட்டது, மெஹர்ஜியும் மெஹர்வானும் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருந்தனர்.

ஜூலை 30 அன்று பாபாவின் 'விலக்களிப்பு' (EXCLUSION) குறித்த பணி நிறைவடைந்தது, அன்று முதல் பிரார்த்தனைகள் மொழிவதும் நிறுத்தப்பட்டது. அன்று மாலை பாபா இவ்வாறு அறிவித்தார்:

**எனது பணி முடிவடைந்தது. 100 சதவீதம் திருப்திகரமாக நிறைவடைந்தது. இந்தப் பணியின் விளைவும் 100 சதவீதமாக இருக்கும்; இது (1968) செப்டம்பர் இறுதியிலிருந்து வெளிப்படும்.**

**நான் அதை எப்படி இறுதி வரை, அதன் நிறைவு வரை வைத்திருந்தேன் என்பது எனக்கு மட்டுமே தெரியும். பணியின் அழுத்தம் என்னை எவ்வளவு நசுக்கியது என்பது குறித்த யோசனையின் சுவடுகள் கூட உங்களுக்கு இருக்க முடியாது, ஏனெனில் அது மனித புரிதலுக்கு அப்பாற்பட்டது. இறுதி நாளில், என் உடல், முற்றிலுமாக முறுக்கிப் பிழிந்து எடுப்பது போல் உணர்ந்தேன்!**

இந்தச் செய்தி 1968 ஜூலையில் மணியின் அடுத்த குடும்பக் கடிதத்தில் (FAMILY LETTERS) இணைக்கப்பட்டது.

கோஹெர் 1968 ஜூன் 5 அன்று அடீல் வோல்கினுக்கு எழுதினார்:

பிரியமான பாபாவின் ஏகாந்தவாசக் காலம் மே 21 அன்று நிறைவடைந்தது, ஆனால் தற்போதைக்கு அவர் 'விலக்களிப்பை' (EXCLUSION) ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. அவருடன் தங்கியிருக்கும் அனைத்து மண்டலிக்கும், எங்கும் வாழும் அவரது அன்பர்களுக்கும் அவர் விதித்த கட்டுப்பாடுகள் இப்போதும் அமலில் உள்ளன. குருபிரசாத்தை விட்டு வெளியேற

எங்களுக்கு இன்னமும் அனுமதி இல்லை, எவரும் உள்ளே வரவும் அனுமதிக்கப்படவில்லை. குருபிரசாத்தின் கதவுகள் மூடப்பட்டுள்ளன.

அவரது ஏகாந்தவாசம் நிறைவடைந்த பின்னரும் இன்றும் நீடித்திருக்கும் இந்த வகையான ‘விலக்களிப்பு’ (EXCLUSION) நீண்ட காலம் நீடிக்காது என்று நாங்கள் நம்புகிறோம். அவர் விதித்திருந்த தடையை நீக்குவது குறித்து பாபா விரைவில் முடிவெடுப்பார். நல்லதே நடக்கும் என்று நம்புவோம்.

பாபாவின் செய்தி உலகின் பல பகுதிகளிலும் வேகமாகப் பரவி வருகிறது. அவர் நம்மிடமிருந்து எவ்வளவு தூரம் ஒதுங்கி இருக்கிறாரோ, அவ்வளவு ஆழமாக மனித இதயங்களில் வேரூன்றியுள்ளார். இறை-மனிதனை திருப்பி அனுப்புவதற்கு உலகம் இப்போது கிட்டத்தட்ட தயாராகிவிட்டதாகத் தெரிகிறது. இந்த நேரத்தில் திரும்பி வந்து நம்மிடையே இருக்கும் இறை-மனிதன், மானிடன் தன்னிடம் திரும்புவதற்கு பொறுமையாகக் காத்திருக்கிறார். என்ன ஒரு தெய்வீக விளையாட்டு! நமது தத்துவவாதம் எவ்வளவுதான் இருந்தாலும், நமது தற்போதைய துன்பத்தைக் குறைக்க அது உதவாது. உண்மையில் இன்றியமையா தேவை, துன்பத்தைக் குறைப்பது அல்ல, துன்பத்திலிருந்து மானிடனை மீட்டெடுப்பது. மீட்பராகிய அவதார புருஷர் அவரது தெய்வீக செயல்பாட்டை விரைவில் தொடங்கட்டும்.

**(1968 ஜூலை 28):** பாபாவின் ஏகாந்தவாசக் காலம் மே **21** அன்று நிறைவடைந்தாலும், நாங்கள் குருபிரசாத்திலிருந்து திரும்பி வந்த பின்னரும், மெஹராஸாத்தின் சூழ்நிலை ஏகாந்தவாச நாட்களில் இருந்ததைப் போலவே உள்ளது. இதுவரை, பாபா அவரது பணி தொடர்பான அவசர தொலைத்தந்திகள், அறிக்கைகள், கடிதங்களைத் தவிர, பார்வையாளர்களை அனுமதிக்கவில்லை அல்லது எந்தக் கடிதப் பரிமாற்றத்திலும் கலந்துகொள்ளவில்லை. இருப்பினும், ‘வானிலை’ விரைவில் சீராகி, ஏகாந்தவாச மேகத்திற்குப் பின்னால் நீண்ட காலமாக மறைந்திருக்கும் பிரியமானவரைப் பார்க்கும் ஏக்கத்தில் இருக்கும் பாபா-அன்பர்களுக்காக அவர் மீண்டும் வெளிப்படுவார் என்ற குறிப்புகளை பாபா நமக்கு வழங்கி வருகிறார்.

இதற்கிடையில், கராச்சியில், ஆதி **&** டாலி அர்ஜனியின் பதினான்கு வயது மகன், ஃபேரடூன் (FAREDOON), **1968** ஜூலை **23** அன்று, அவர்களது பங்களாவின் முதல் மாடியிலிருந்து விழுந்து விபத்துக்குள்ளானார். இதைக் குறித்து பாபாவிற்குத் தெரிவிக்கப்பட்டதும், அவர் **1968** ஜூலை **23** அன்று ஒரு தொலைத்தந்தி அனுப்பினார்: **“என்னை நேசிப்பவர்கள் ஒருபோதும் இறப்பதில்லை**, **அவர்கள் என்னில் நிரந்தரமாக வாழ்கிறார்கள்**. **யார்**

**ஒருவரும் வருவதுமில்லை, எவரும் போவதுமில்லை, எவருக்கும் இன்பமும் துன்பமும் என்னவென்று தெரியாது!"**

அவர் அர்ஜனி குடும்பத்திற்கு இந்த இரண்டாவது தொலைத்தந்தியை அனுப்பினார்: "**ஃபேரடூன் என்னில் அவரது இறுதி ஓய்விடத்திற்கு வந்துவிட்டார். ஃபேரடூன் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார். அதனால், நீங்களும், டாலியும், குடும்பத்தில் அனைவரும் என் அன்பில் மகிழ்ச்சியாக இருங்கள், உங்களுக்கும் எனக்கும் இடையில், இந்த மிக முக்கியமான எனது அவதார காலகட்டத்தில், எதையும் நுழைய அனுமதிக்காதீர்கள்."**

சில நாட்களுக்குப் பின்னர், எரச், ஹோஷங் தாதாசாஞ்சியின் கடிதத்தை பாபா முன்னிலையில் படித்தார், அதில் அவர் இந்தத் துயரமான நிகழ்வைக் குறிப்பிட்டிருந்தார்: "எங்கள் அன்பான பாபா (அர்ஜனி குடும்பத்திற்கு) அவருடைய விருப்பத்திற்கு தலைவணங்குவதற்கான வலிமையை வழங்கட்டும்."

பாபா கூறினார்: "**எனது விருப்பத்திற்கு அடிபணியத் தெரிந்தவர் வலிமையான மனிதனாக இருக்க வேண்டும். ஒரு மனிதருக்கு எனது விருப்பத்திற்கு தலைவணங்க பலம் தேவை, அதேசமயம் பலவீனமான ஒருவர் எனது விருப்பத்திற்கு கீழ்ப்படிவார். மேலும், வாழ்க்கையின் அனைத்து சூழ்நிலைகளிலும், எனது தெய்வீக சித்தத்திற்குத் தலைவணங்காத அல்லது பணிந்து போகாத ஒருவர், மனிதனே இல்லை!"**

1968 ஜூலை மாதத்தில் மூன்று நெருங்கிய மேற்கத்திய அன்பர்கள் காலமாயினர்: நியூயார்க் நகரில் வாழ்ந்த பெரில் வில்லியம்ஸ் (BERYL WILLIAMS), ஸியாட்டிலில் வாரன் ஹீலி (WARREN HEALY) மற்றும் இங்கிலாந்தில் டக்ளஸ் ஈவ் (DOUGLAS EVE).

மூன்று இடங்களுக்கும் தனித்தனியாக அனுப்பப்பட்ட தொலைத்தந்திகளில், பாபா இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: '**பெரில் என்றென்றும் என்னுடையவர்**'; '**என் மீதான வாரனின் அன்பு தனித்துவமானது**' மற்றும் '**டக்ளஸ் என்றென்றும் ஆசீர்வதிக்கப்பட்டவர். டக்ளஸ் என்னுடன் இருக்கிறார், மகிழ்ச்சியாக இருக்கிறார். நீங்கள்** (அவரது மனைவி மோலி) **அல்லது குடும்பத்தினர் சோகமாக இருப்பதை நான் விரும்பவில்லை, ஆனால் அவரது மகிழ்ச்சியில், பெரு மகிழ்ச்சியாகவும், முகமலர்ச்சியுடனும் இருக்க வேண்டும்.**' டக்ளஸ் ஈவ் உயிரைத் துறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு புற்றுநோயால் அவதியுற்றார். 1967 டிசம்பரில் மோலிக்கு எழுதிய கடிதத்தில், பாபாவிடமிருந்து இந்தச் செய்தியை மணி தெரிவித்திருந்தார்: '**டக்ளஸ் எனக்கு மிகவும் பிரியமானவர். மேலும் அவர் என் மீது வைத்துள்ள**

**ஆழ்ந்த அன்பின் காரணமாக, அவர் எனது துன்பத்தைப் பகிர்ந்து கொள்வதால், அது அவருக்கு ஓர் ஆசீர்வாதம். என்னை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும் என்று டக்ளஸிடமும், நான் எப்பொழுதும் அவர்களுடன் இருக்கிறேன் என்று மோலியிடமும் கூறுங்கள்.'**

1968 ஜூலையில் ஒரு நாள் காலை, கவிதை நயத்துடன் கூடிய இந்த பாசுரத்தை பாபா எடுத்துரைத்தார்:

**கடவுள் எப்பொழுதும் உளதாயிருந்தார்.**
**கடவுள் எப்பொழுதும் உளதாயிருப்பார்.**
**அவர் ஒருபோதும் மாறாதவர், என்றென்றும் ஒன்றானவர்.**
**மேலும் மாயையை, நித்திய நாடகமாக விளையாடுபவர்.**

பின்னர், ஆகஸ்ட் மாதத்தில், பாபா கீழ்வரும் கருப்பொருளைத் தொடர்ந்து விளக்கினார்:

**நிரந்தரமானது, அளவிறுதியற்றது**
**ஒருபோதும் மாறாது, எப்போதும் ஒன்றானது;**
**மேலும் அவரது ஒருமைத்தன்மையின் முழுமையில்**
**விளையாடும் விளையாட்டோ பலவிதமானது.**

வேறொரு முறை, பாபா '**வருகிறேன், வருகிறேன், வருகிறேன் - வந்துவிட்டேன்!**' என்று கூறியதை எரச் எடுத்துரைத்தது, தலைகீழாக ஏலத்திற்குக் குரல் கொடுப்பவரின் அழைப்பைப் போல் ஒலித்தது என்று ஃபிரான்சிஸ் கூறியதும், மின்னும் கண்களுடன், பாபா, "**உங்களில் யார் ஒருவருக்கும் இதன் அர்த்தம் தெரியாது**" என்று சைகையால் தெரிவித்தார். சில நாட்களுக்குப் பின்னர், அவர் மற்றுமொரு வரியை கவிதை நயத்துடன் ஒலிக்கச் செய்தார்:

**வருகிறேன், வருகிறேன், வருகிறேன் - வந்துவிட்டேன்!**
**நான் மாயையுடன் விளையாடி சோர்வாக இருக்கிறேன்!**

'அவதார் மெஹர் பாபா அறக்கட்டளை'யின் கூட்டம் 1968 ஆகஸ்ட் 5 திங்கட்கிழமை மெஹராஸாத்தில் நடைபெற்றது, ஆனால் பாபா, 6ஆம் தேதி மும்பைக்குத் திரும்புவதற்காக இருந்த நரிமனைத் தவிர வேறு எந்த அறங்காவலர்களையும் சந்திக்க அனுமதிக்கவில்லை.

1968 ஆகஸ்ட் மாதத்தில், பாபா தரிசனம் வழங்க இணக்கம் தெரிவித்ததால், எந்த விதமாக நடத்தப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொள்ள, செப்டம்பர் 1ஆம் தேதி ஒரு சிறிய கூட்டத்தை நடத்த விரும்புவதாக

அறிவித்தார். ஆனால் சில நாட்களுக்குப் பிறகு, கூட்டம் அக்டோபர் 13ஆம் தேதிக்கு, ஆறு வாரங்களுக்குப் பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

ஆகஸ்ட் 7 ஞாயிற்றுக்கிழமை, பாபா மற்றும் பெண்மணிகளுக்கு, ரமா கல்சூரி பஜ்ஜிகளை தயார் செய்து அனுப்புமாறு அறிவுறுத்தினார். மறுநாள், ரமா, பாபாவிற்காக ஒரு ராக்கியை அனுப்பியிருந்தார் (அந்தப் பெயரில் அழைக்கப்படும் இந்து பண்டிகையின் போது, ஒரு சகோதரி தனது சகோதரனின் மணிக்கட்டில் கட்டும் தாயத்து போன்ற அடையாளச் சின்னம்), அதை பாபா அன்புடன் ஏற்றுக்கொண்டார்.

1968 ஜூலை 30ஆம் தேதி பாபாவின் 'விலக்களிப்பு' காலகட்டத்தில் செய்துவந்த பணி நிறைவடைந்த பின்னரும், அவர் மதியம் 20 நிமிடங்கள் தனது அறையில் தனியாகப் பணிபுரிந்து வந்தார். அது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு கூறினார்: "**எனது பணியில் ஏதோ ஒன்று கடைசி கட்டங்களிலிருந்து விடுபட்டுள்ளது, அதை நான் ஈடுசெய்ய வேண்டும்**." பின்னர் அவர் அதை தனது பணியின் '**வால் பாகம்**' ('THE TAIL') என்று அழைத்தார்.

இப்போது அவருடைய பணியின் பெரும்பகுதி முடிந்துவிட்டதால், பாபா தினமும் காலையிலும், மதியம் 1:30 மணி முதல் மண்டலி மண்டபத்தில் ஆண் மண்டலியுடன் அதிக நேரம் செலவிடத் தொடங்கினார். காலையில், பாவ் கல்சூரி 'வேஃபேரர்ஸ்' (WAYFARERS) புத்தகத்தின் இந்தி மொழிபெயர்ப்பை பாபா முன்னிலையில் வாசித்தார். பாவ் கல்சூரி வாசிக்கும் போது எரச், பாபாவின் பாதங்களை மஸாஜ் செய்தார்.

கடந்த சில மாதங்களாக பாபாவின் பாதங்களில் மாற்றம் தென்பட்டு அவை கல்லைப் போல கடினமாகிவிட்டன. ஒரு கூர்மையான ஊசி தோலில் ஊடுருவாத அளவுக்கு தோல் திடமாகிவிட்டது. அவரது பணியின் விளைவு அவரது பாதங்களைக் கடுமையாக பாதித்ததோடு, உடல் பலவீனமடைந்தது. இருப்பினும், பாபா அவரது ஆரோக்கியத்தின் உண்மை நிலையை மண்டலியிடமிருந்து மறைத்து, மிகவும் சோர்வாக இருந்தாலும், உடல்நிலை சீராக இருப்பது போலத் தோற்றமளித்தார்.

பாபா அவரது நாற்காலியில் அமர்வதற்கு முன், மண்டலி மண்டபத்தில் முன்னும் பின்னுமாக நடந்தார்; காக்கா அவருக்குப் பக்கத்தில் ஒரு பாதுகாப்புக் காவலரைப் போல நடந்து சென்றார். காக்கா தனது 'புதிய' மொழியை மிகுந்த நம்பிக்கையுடன் பயன்படுத்தி, ஒவ்வொன்றையும் தவறாக உச்சரித்து அல்லது ஒவ்வொருவருக்கும் தவறாகப் பெயர் வழங்கும் வேளையில், அது தொடர்ந்து பாபாவிற்கு பொழுதுபோக்காகவும், மகிழ்ச்சியின் தருணங்களாகவும் இருந்தது.

பாபா பலமுறை கூறினார், "**அனைவரும் எனது சுமையை அதிகரிக்கும் அதே நேரத்தில், காக்கா அதில் ஒரு பாகத்தை அகற்றுகிறார்.**"

பாபா சரியான நேரத்தைப் பின்பற்றுவதில் மிகவும் குறிப்பாக இருந்தார்; மேலும், ஒரு விவாதத்தை எவ்வளவுதான் கவனமாகக் கேட்டுக்கொண்டிருப்பது போலத் தோன்றினாலும் அல்லது ஏதேனும் விஷயங்கள், செய்தித்தாள் வாசிப்பதில் கவனம் செலுத்தினாலும், குறிப்பிட்ட நேரத்தில் (காலை 11 மணி) மண்டபத்தை விட்டு வெளியேறுவதை வழக்கமாகக் கொண்டார். சுவர்க் கடிகாரத்தை அவர் கண்காணிக்கத் தவறியதில்லை.

ஒரு நாள், உலகின் தற்போதைய நிலைமையைக் குறித்து, பாபா முணுமுணுத்தார், "**இது ஒரு மிகப் பெரிய குழப்பமான சூழ்நிலை! எனது அனைத்து வருகைகளிலும், இம்முறை நான் எனது பொறுமையை மிக அதிக அளவில் பயன்படுத்துகிறேன்.**"

வேறொரு தருணத்தில், அவர் மண்டலியிடம் இவ்வாறு குறிப்பிட்டார்: "**நீங்கள் அனைவரும் உடைந்து போன மரத்தளபாடங்கள் தவிர வேறொன்றுமில்லை! ஆனால் நானே உங்களைத் தேர்ந்தெடுத்தேன், எனவே நீங்கள் நான் விரும்புவது போல் இருக்க வேண்டும்.**"

ஆஸ்திரேலியாவில், வில்லியம் ரெட்டிங் (WILLIAM READING) என்றழைக்கப்பட்ட இளம் கலைஞர், 1966ஆம் ஆண்டு, அவருடைய 19 வயதில், மெஹர் பாபாவைப் பற்றி முதன்முதலில் கேள்விப்பட்டார். பாபாவைப் பற்றிய அனைத்து இலக்கியங்களையும் படித்துவிட்டு, இறுதியில் பில் லே பாஜ் நிகழ்த்திய கூட்டங்களுக்குச் சென்றதோடு, பாபாவின் சில திரைப்படங்களையும் பார்த்தார். விரைவில் அவர் இங்கிலாந்திலிருந்து ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா முழுவதும் சைக்கிளில் பயணம் செய்த ஓர் இளம் ஆங்கிலேயரின் தொடர்பில் வந்து, நண்பரானார். அவரது புதிய நண்பர் மூலமாக, மெஹர் பாபா கடுமையான ஏகாந்தவாசம் கடைப்பிடிப்பதாக அவருக்கு அறிவுறுத்தப்பட்டாலும், கலைக் கல்லூரி படிப்பை விட்டு வெளியேறிய பிறகு, தனது முதல் வேலையை அடையப் பெறவும், மெஹர் பாபாவைப் பார்க்கும் நம்பிக்கையில் இந்தியாவிற்குப் பயணம் மேற்கொள்ளவும் ரெட்டிங் வெகுவாகத் தூண்டப்பட்டார்.

1968 ஏப்ரல் மாதத்தில் ரெட்டிங் ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேறி, ஆசியா வழியாக இந்தியாவை நோக்கிப் பயணம் செய்தார். சில வாரங்கள் மும்பையில் தங்கி தபேலாவின் அடிப்படை பாடங்களைக் கற்றுக்கொள்ள

முயற்சித்து, தொடர்ந்து பூனாவிற்குச் சென்று, ஜால்பாயை சந்தித்த பின்னர் அவர், 1968 ஆகஸ்ட் 5 அன்று அஹமதுநகரில் ஆதியின் அலுவலகத்தை வந்தடைந்தார். பாபாவிற்கு ஒரு குறிப்பு எழுதுமாறு ஆதி அவருக்கு வலியுறுத்தவே, ரெட்டிங் தனது ஹோட்டலுக்குச் சென்று பின்வருமாறு எழுதினார்:

அன்புள்ள பாபா,

எனது பெயர் வில்லியம் ரெட்டிங் மற்றும் நான் ஆஸ்திரேலியாவின் சிட்னியிலிருந்து பயணம் செய்தேன், அங்கு நான் பில் லே பாஜை சந்தித்ததோடு, உங்களின் சில திரைப்படங்களையும் பார்த்தேன். 'நீங்கள் கடவுளா?' என்பது எனக்குத் தெரியாது, ஆனால் நான் படித்த உங்கள் படைப்புகள் அனைத்தும் சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மையாக எனக்குத் தோன்றுகிறது, மேலும் உங்களைப் பார்க்க நான் மிக்க ஆவலாய் இருக்கிறேன்.

வில் அனுப்பிய குறிப்பு ஆகஸ்ட் 7ஆம் தேதி பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டது, பாபா அந்தக் கடிதத்தைப் படித்ததில் மகிழ்ச்சியடைவதாக எரச் மூலமாக பதில் அனுப்பினார்:

**...பாபா ஏற்கனவே உங்களோடு இருப்பதால், அவரை உங்கள் இதயத்தில் அழைத்துச் செல்ல வேண்டும் என அவர் விரும்புகிறார். பாபா அவரது அன்பை இத்துடன் உங்களுக்கு அனுப்புகிறார்; மேலும் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என விரும்புகிறார். நீங்கள் அவரை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறுகிறார், அதனால் நீங்கள் அவரை நேசிக்கவும், அவருக்கு அதிக அளவில் சேவை செய்யவும் முடியும்.**

**பாபாவின் அன்பு, வில்லியம் மீது இருக்கும்.**

பாபாவைப் பார்க்கும் விருப்பத்தைத் தெரிவித்து ரெட்டிங் மற்றுமொரு குறிப்பை எழுதினார்; மேலும், பாபா மேலே குறிப்பிட்டதைப் போலவே மீண்டும் பதிலளித்தார். இது சில நாட்கள் தொடர்ந்து நடந்தது. பாபாவிற்கு அனுப்புவதற்காக ஆதியிடம் மற்றுமொரு குறிப்பை வழங்கும்போது, டாக்டர் டானுடன் ரெட்டிங் சிறிது நேரம் உரையாடிக்கொண்டிருந்தார், அப்போது டான் அவரைப் பார்த்து கூறினார்: "நீங்கள்தான் 'புதிய மனித இனத்தைச் சார்ந்தவர்' (NEW HUMANITY)!"

ஆகஸ்ட் 7 அன்று, டாக்டர் டான், ஒருவேளை அந்த இளைஞர் மீது அனுதாபமாக உணர்ந்து, தந்திரமாக ஏகாந்தவாச மலைக்கு அவரை காரில் அழைத்துச் சென்று, அங்கிருந்து டானின் தொலைநோக்கியின் மூலமாக பாபாவின் ஒரு குறுகிய பார்வையை அடையப் பெறலாம் என்று பரிந்துரைத்தார்.

மெஹராஸாத்திற்குப் பின்னால் அமைந்த இரண்டு மலைகளில் ஒவ்வொன்றிலிருந்தும் பாபாவைக் காணத் தவறிய போதிலும், அவர் பாபாவைக் காணும் ஆர்வத்தில் தொலைநோக்கி வழியாக உற்றுப் பார்த்தபோது, "பாபா உண்மையிலேயே மனித உருவில் கடவுள் என்று தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள உதவ வேண்டும் என்று பாபாவிடம் வேண்டினார்."

அவர்கள் ஏகாந்தவாச மலைக்குச் சென்றபோது வானம் மேகமூட்டமாகி, லேசான மழை பொழியத் தொடங்கியது, வானவில் விண்ணை அலங்கரித்தது. அவர்கள் ஏகாந்தவாச மலையில் பாதி தூரம் சென்றபோது, வானவில் மெதுவாக நகர்ந்து ஒரு முனை மெஹராஸாத்தின் கூரையைத் தொட்டுக்கொண்டு இருந்தது. அதுவே அவரது உள் ஏக்கங்களுக்கு பாபாவின் பதில் என்று அவர் எடுத்துக்கொண்டது பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அவர் பின்னர் அது குறித்து விவரித்தது போல்: "அவரது தெய்வீகத்தை எனக்கு உறுதிப்படுத்தும் ஒரு மிக நுட்பமான மற்றும் அழகான வழி இது. உண்மையில், அஹமதுநகர் (குஷ்ரு குவார்ட்டர்ஸ்) மற்றும் மெஹராபாத்தில் வாழும் மக்கள், வானிலை உட்பட, அனைத்தும் பாபாவின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக வாழ்வது போலத் தோன்றியது."

டாக்டர் டான் அவருக்கு 'தி வேஃபேரர்ஸ்' (THE WAYFARERS) புத்தகத்தின் நகல் ஒன்றை படிப்பதற்காக வழங்கினார்; ஆகஸ்ட் 8 அன்று புத்தகத்தின் முகப்பில் இருந்த புகைப்படத்திலிருந்து பாபாவின் உருவப்படத்தை வரைந்து அடுத்த நாள் அதை பாபாவிற்கு அனுப்பிவைத்தார். பாபா அந்த அட்டையிலிருந்த வரைப்படத்தைப் பார்த்து, அதில் கையொப்பமிட்டு பின்னர் அதை அவரிடம் திருப்பிக் கொடுத்தார். மேலும், பாபா அவரது சித்திரங்களை அட்டையில் எஞ்சியிருக்கும் பக்கங்களிலும் வரைந்து நிரப்புமாறு ரெட்டிங்கிற்கு செய்தியை வழங்க அறிவுறுத்தி, மண்டலியிடம் கூறினார்: "**வில்லியம் என்னைப் பார்க்க வேண்டிய தேவையில்லை, ஏனெனில் நான் அவருடைய வரைபடத்தில் கையெழுத்திட்டது அவர் என்னை தரிசனம் செய்ததற்கு சமம்**."

ஆகஸ்ட் 10 அன்று, வில்லியம் ரெட்டிங் மெஹராபாத்திற்கு மிதிவண்டியில் சென்றார், அங்கு பாதிரி அவருக்கு ஒரு சுற்றுப்பயணத்தை வழங்கி, முஹமது மஸ்தை அறிமுகப்படுத்தினார். பாதிரி, ரெட்டிங்குடன் கைகளைக் குலுக்குமாறு மஸ்தை கனிவான சொற்களால் இணங்க வைத்தார், பின்பு வில்லியம் இவ்வாறு எடுத்துரைத்தார்: "நாங்கள் கைகளைத் தொட்டபோது அது ஒரு லேசான மின்சார அதிர்ச்சியைப் போன்ற உணர்வை ஏற்படுத்தியது - ஆனால் எந்தவிதமான அதிர்வும் அதனுடன் தொடர்புடைய அசௌகரியமும் இல்லாமல் - அது என் உடல் முழுவதும் பரவியது."


மேலும் அவர் அது குறித்து கூறியதாவது, ”நான் முஹமது மஸ்தின் சில புகைப்படங்களை எடுத்த பிறகு, பாதிரி ஒரு கோப்பை தேநீரைப் பரிந்துரைத்து, அதை அவர் தனது அறையில் பரிமாறினார். பாதிரியுடன் உரையாடும் போது பாபா ‘ஏக இறைவனாக உளதாயிருக்கும்’ அந்தத் தீவிர உணர்வு என்னுள் தோன்றியது. எனது கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. மெஹர் பாபாவின் பிரசன்னம் பாதிரியிடமிருந்தும் அவரது நேர்மையான, எளிமையான வாழ்க்கையிலிருந்தும் வெளிப்பட்டதாகத் தோன்றியது.”

தேநீர் வேளையில் பாபாவைப் பற்றி பாதிரி பேசுவதைக் கேட்டதும், உணர்ச்சிவசப்பட்ட ரெட்டிங்கின் மனம் அமைதியடையவே, இருவரும் மெஹராபாத் மேல்மலைக்கு நடந்து சென்றனர், ஏனெனில் பாதிரி அவருக்கு மேல்மலை மற்றும் பாபாவின் எதிர்கால சமாதியைக் காண்பிக்க விரும்பினார். ரெட்டிங் அவரது வார்த்தைகளில் கூறியதாவது: “இன்று வரை நடந்த வேறு ஒரு நிகழ்வால் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், அது ஏன் என்று எனக்கு முழுமையாகப் புரியவில்லை.. சில பணிகளின் நிமித்தம், பாதிரி வெறிச்சோடிய அந்த இடத்தில், பாபாவின் எதிர்கால சமாதியில் என்னைத் தனியாக விட்டுச் சென்றார். நான் சுவரோவியத்தைப் பார்த்துக் கொண்டே நகர்ந்தேன், திடீரென ஆழமான கல்லறைக் குழியில் செல்லும் ஓர் அதீத தூண்டுதலை உணர்ந்தேன். நுழைவாயிலின் முகப்பில் கைகால்களை ஊன்றி சிரமப்பட்டு இறங்கி, உடலை வளைத்து மறுபக்கம் வரை சென்றேன். அப்போது நான் பாபாவைப் பற்றியும், அவர் உடலை அங்கு வைக்கும் போது என்னவாக இருக்கும் என்றும் நினைத்துப் பார்த்தேன். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு நான் வெளியே சென்று பாதிரி எங்கே என்று பார்க்க வந்தேன்.”

பாதிரி பின்பு டாக்டர் டானிடம் அந்த இளைஞனின் நேர்மையான குணம் அவரை வெகுவாகத் தொட்டதாகக் கூறினார்.

10ஆம் தேதி வில்லியம் ரெட்டிங், தான் திட்டமிட்டபடி நேப்பாளத்திற்குப் பயணம் மேற்கொள்ளாமல், ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பும்படி பாபா அறிவுறுத்தல்களை வழங்கினார், ஆனால் பேருந்தில் பூனாவிற்குத் திரும்பிச் செல்லும் பயணம் அவருக்குக் கண்ணீரை வரவழைத்தது. ரெட்டிங்கின் வார்த்தைகளில் அவர் கூறியதாவது, “நான் எனது உண்மையான இல்லத்தை விட்டு வெளியேறுவது போல் உணர்ந்தேன்.” 1968 ஆகஸ்ட் 12 அன்று அஹமதுநகரை விட்டு வெளியேறிய அவர், சில நாட்களுக்குப் பிறகு தனது 21ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். சிட்னியில் தனது பெற்றோரின் இல்லத்திற்குத் திரும்பிச் செல்லும் வரை, ரெட்டிங், ஆதியின் மூலமாக பாபாவிற்கு மேலும் குறிப்புகளை எழுதிக் கொண்டிருந்தார்.

வில்லியம் ரெட்டிங், பாபா உலகையே தமது கைகளில் தாங்கிய வண்ணம் இருந்த மற்றொரு ஓவியத்தை அனுப்பினார், அதற்கு ஆதியின் மூலமாக பாபா இந்த பதிலைத் தெரிவித்தார், "**பாபா இதையும் விரும்புகிறார், ஆனால் முதல் சித்திரம் வரைந்த அளவுக்கு அல்ல...**"




பாபாவின் கையெழுத்துடன் வில் ரெட்டிங் வரைந்த சித்திரம்
(DRAWING DONE BY WILL READING SIGNED BY BABA )

கான்பூர் நகரைச் சேர்ந்த ராஜ் குமார் ஷர்மாவும் இந்த நேரத்தில் பாபாவைப் பார்க்கும் முயற்சியில், ஆகஸ்ட் 11 அன்று நேரடியாக மெஹராஸாத்திற்குச் சென்றார், ஆனால் அவர் உள்ளே அனுமதிக்கப்படாமல் திரும்பிச் செல்லுமாறு வற்புறுத்தப்பட்டார்.

பூனா மையத்தின் சில சேவகர்களிடையே கடுமையான கருத்து வேறுபாடுகள் நிலவின, மேலும் அவர்களை சமரசம் செய்ய 1968 செப்டம்பர் 1 அன்று பூனாவில் ஆதி, அவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டார். மறுநாள் பாபாவிடம் இது குறித்து தெரிவித்தபோது, பாபா கீழ்வரும் தொலைத்தந்தியை ராமகிருஷ்ணனுக்கு அனுப்பினார்.

**எனது வெளிப்பாட்டிற்கான நேரம் மிக அருகாமையில் உள்ளது. எனவே, நீங்கள் அனைவரும் ஒருவரையொருவர் மன்னித்து, கடந்த கால வேறுபாடுகள் அனைத்தையும் அன்புடன் மறந்துவிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன், இதன் மூலம் அவதார் மெஹர் பாபா பூனா மையம் ஒரு குழுவாக, கொடுக்கல் வாங்கல் மனப்பான்மையுடன் பணியைத் தொடர முடியும். நான் உடல் ரீதியாக பிறந்து, அவதார புருஷர் என்று அறிந்த நகரங்களில் பூனா முதன்மையானது.**

அன்றைய தினம் பாபா, “**எனக்கு, தனிப்பட்ட பேரழிவு ஏற்படும்**” என்று எடுத்துரைத்தார். அவர் ஹாஃபீஸின் ஈரடிக் கவிதை ஒன்றை மேற்கோள் காட்டி, இவ்வாறு விளக்கினார்: “**கவிதை எவ்வளவு அற்புதமாக உள்ளதோ, அதே அளவுக்கு அர்த்தமானவை ஹாஃபீஸின் வார்த்தைகள். இதில், தலையில் வளரும் மயிர்களைப் போல் ஆயிரக்கணக்கான நுட்பமான மற்றும் நுணுக்கமான புள்ளிகள் உள்ளன. தலையை மொட்டையடிப்பவர்களுக்கு ஆன்மீகப் பாதையின் மகத்துவம் தெரியாது.**”

பிறந்தநாள் அல்லது ஆண்டுவிழா போன்ற சில விசேஷமான தருணங்கள் அல்லது விழாக்களில், எப்போதேனும் பாபா தனக்காகவும் மண்டலிக்காகவும் உணவு தயார் செய்து வழங்க, தனது அன்பர்கள் பணம் செலுத்த அனுமதிப்பது அவ்வப்போது நடந்து வந்தது. மும்பையைச் சேர்ந்த ஆதி காஸ்வாலா (ADI GHASWALA) என்ற அன்பர், பாபாவிற்கு அனுப்பப்படும் உணவுக்காக ரூ.100க்கான காசோலை அல்லது பண அஞ்சல் ஒன்றை ஆதி சீனியருக்கு அனுப்பியிருந்தார், ஆனால் பணம் எப்படியோ போக்குவரத்தில் தொலைந்து போனது. காஸ்வாலா அதிர்ச்சியடைந்து கவலையுற்றார்; ஆனால் பாபா அந்த சிந்தனையைப் பாராட்டி, செப்டம்பர் 2 அன்று காஸ்வாலாவிற்கு தனது

அன்பையும் ஆசீர்வாதத்தையும் தொலைத்தந்தி மூலம் தெரிவித்தார், "**அன்புடன் வழங்கப்படும் எதுவும் இழக்கப்படமாட்டாது**."

12ஆம் தேதி ஸரோஷ், விலூ, ஆதி, ருஸ்தம் காக்கா ஆகியோர் இசைப்பதிவு கருவியுடன் மெஹராஸாத்திற்கு வந்த வேளையில், பாபா, ஜெய்ப்பூர் கவாலி பாடகர் கஜ்வானியின் பதிவைக் கேட்க முடிந்தது. இசைப்பதிவு கருவியின் வேகம் சரியாக இல்லாததால், அது நிறுத்தப்பட்டது. ஆதி அடுத்த நாள் டாக்டர் டானுடன் மெஹராஸாத்திற்குச் திரும்பிச் சென்றார். குஷ்ரு குவார்ட்டர்ஸில் டாக்டர் டான் தங்குவது குறித்த ஏற்பாடுகளில் அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் நிலவின, அதைத் தங்களுக்குள் தீர்த்துக்கொள்ளுமாறு பாபா அவர்களிடம் கூறினார்.

ரமண மஹரிஷி மற்றும் ரிஷிகேஷில் வாழ்ந்த துறவி ஷிவானந்தாவின் சீடருமான சுவாமி ஸச்சிதானந்தா (54) என்ற புகழ்பெற்ற இந்திய யோகி, அமெரிக்காவிற்குச் சென்று, அங்கு நியூயார்க் நகரில் யோகா மையத்தை நிறுவினார். இந்த நேரத்தில் ஹாரி கென்மோர் தொலைபேசியில் எரச்சைத் தொடர்பு கொண்டு, ஸச்சிதானந்தா தனது சீடர்கள் குழுவுடன் மஹாராஷ்டிரா வழியாக பயணம் செய்யவிருப்பதால், மெஹர் பாபாவை சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்தார். ஆனால் செப்டம்பர் 13 அன்று ஸச்சிதானந்தாவின் செயலாளர் மும்பையிலிருந்து ஆதியை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, பாபா கடுமையான ஏகாந்தவாசம் கடைப்பிடிப்பதாகவும், இந்த நேரத்தில் யார் ஒருவரையும் சந்திக்கவில்லை என்றும் ஆதி அவருக்குத் தெரிவித்தார். அதற்கு பதிலாக, பாபாவின் அனுமதியுடன், அவர்களின் ரயில் சில மணி நேரம் நிற்கும் மன்மாட் ரயில் சந்திப்பில் (அஹமதுநகரிலிருந்து சுமார் 100 மைல்) ஸச்சிதானந்தா மற்றும் அவரது குழுவினரிடம் பாபாவைப் பற்றி பேச ஆதி முன்வந்தார்; அது ஏற்கப்பட்டது.

1968 செப்டம்பர் 16 அன்று, ஆதியை டாக்டர் டான் தனது காரில் மன்மாட் ரயில் சந்திப்பிற்கு அழைத்துச் சென்றார், அங்கு அவர்கள் சுவாமி ஸச்சிதானந்தாவையும் அவரைப் பின்பற்றுபவர்களில் சுமார் 23 பேரையும் சந்தித்தனர் (அவர்களில் சிலர் மேற்கத்தியர்கள்). ஆதி அவர்களுக்கு பாபாவைப் பற்றிய இலக்கியங்களை வழங்கி, கேள்விகளுக்கு பதிலளித்தார். 'மெஹர் பாபா யோகாவை பரிந்துரைக்கவில்லையா?' என்று குழுவில் ஒருவர் கேள்வி எழுப்பியதற்கு ஆதி இவ்வாறு பதிலளித்தார்: "பாபா யோகா உட்பட அனைத்திலும் உளதாயிருக்கிறார். பாபா எதையும் தவிர்ப்பதில்லை, ஆனால் அன்பின் மீது மிகுந்த முக்கியத்துவத்தை வைக்கிறார். மேலும் ஒவ்வொரு

யோகாவின் உண்மையான நோக்கம் கடவுளின் அன்பைத் தூண்டுவதும், 'நீ போய்' (YOU GO - 'நான்' எனும் அகந்தை போய்), 'பாபா வருவதை'க் கண்டுகொள்வதும்தான் (BABA COMES)."

"பாபா அவர்களை எப்போது பார்ப்பார்" என்று ஸச்சிதானந்தா கேட்டதற்கு ஆதி, "இப்போது இல்லை, பின்பு சாத்தியப்படலாம்" என்று பதிலளித்தார்.

அவர்களின் சந்திப்புக்குப் பிறகு, ஸச்சிதானந்தா உண்மையானவராகவும் நேர்மையாகவும் இருப்பதாக ஆதி, பாபாவிடம் தெரிவித்தார். ஆதியின் அறிக்கையைக் கேட்டு பாபா மகிழ்ச்சியடைந்தார், ஆனால் ஸச்சிதானந்தாவை தரிசனத்திற்காக அழைக்கவில்லை.

1968 செப்டம்பர் 30 அன்று, பாபா கூறினார்: "**இன்று நான் விதைகளை விதைத்துவிட்டேன். 1969 ஜனவரி 10 அன்று நாம் பழங்களை உண்போம்.**"

இப்போது பாபாவின் 'விலக்களிப்பு' காலம் முடிந்துவிட்டதால், அவரது அன்பர்களின் பொறுமையின் எல்லையும் முடிந்துவிட்டது; மேலும் உலகெங்கிலும் வாழும் அன்பர்களிடமிருந்து தரிசனம் கோரி கடிதங்கள் வந்த வண்ணம் இருந்தன. அவர்களின் ஏக்கத்தை அறிந்த பாபா, மண்டலியிடம் கூறினார்: "**அவர்கள் என்னைப் பார்க்கப் பொறுமையிழந்து இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். என்னைப் பற்றி என்ன சொல்ல? அவர்கள் என்னைப் பார்ப்பதில் நானும் பொறுமையின்றி இருக்கிறேன். ஆனால் அதற்கான நேரம் இன்னும் வரவில்லை. எனவே, என் அன்பர்களே! நாம் இன்னும் சிறிது காலம் காத்திருக்க வேண்டும்.**"

இரவு நேரக் கண்காணிப்பில் பாபாவுடன் பாவ் கல்சூரி இருந்தபோது, பாபா அன்பர்களிடமிருந்து வந்த கடிதங்களைப் பற்றிக் கேட்டார். ஒரு நாள், பாவ் கல்சூரி இவ்வாறு பதிலளித்தார், "அனைத்து கடிதங்களும் ஒன்றே ஒன்றை நாடுகின்றன - அதுவே உங்கள் தரிசனம், நீங்கள் அதை வழங்கவில்லை!"

பாவ் கல்சூரி கூறியதை விளக்கும் விதத்தில் பாபா பதிலளித்தார், "**எனது பணி வேறுபட்டது. மக்கள் எனது பாதங்களில் தலை வணங்குவதற்காகத் தொடர்ந்து பயணம் செய்வதும், தரிசன நிகழ்ச்சிகளை நடத்துவதும் எனது பணி அல்ல. நீண்ட உரைகள் வழங்கி, அற்புதங்கள் புரிந்து, திரள் திரளாக கூட்டத்தை என்னை நோக்கி ஈர்க்க நான் வரவில்லை, அனைவரையும் எழுச்சியுறச் செய்ய வந்துள்ளேன்.**

"**இந்த வருகையின் போது, நான் மக்களுக்கு வழங்கிய அளவுக்கு தரிசனம், எந்தக் காலத்திலும் நான் வழங்கியதில்லை. இருந்தும் நீங்களும்**

**பிற அனைவரும் புகார் கூறுகிறீர்கள்! எனது தரிசனம் மிகவும் வித்தியாசமானது.**”

பாபா தொடர்ந்து விளக்கினார், “**நான் உண்மையில் என்ன செய்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாது. நீங்கள் வில்லை பின்நோக்கி எவ்வளவு இழுக்கிறீர்களோ, அவ்வளவு தூரத்திற்கு அம்பு பறந்து இலக்கைத் தாக்கும். நான் இப்போது ஏகாந்தவாசத்தில் இருக்கிறேன், ஆம், ஆனால் நான் எனது வில்லை மேலும் மேலும் இழுத்து, என் அன்பின் அம்பை எய்தும்போது, அது ஆழமாகத் தாக்குவதால் விளையும் காயங்கள், அவர்களுக்கு எனது தரிசனத்தைத் தொடர்ச்சியாக வழங்கும், அதுவே எனது உண்மையான தரிசனம்**”

பாபா இவ்வாறு கூறி முடித்தார், “**உலகிற்கு எனது தரிசனத்தை வழங்குவதற்காக நான் ஏகாந்தவாசத்தில் பணிபுரிகிறேன். என்னை நேசிப்பவர்களுக்கும் என்னை அறிந்தவர்களுக்கும் இந்த தரிசனம்தான் முழு அர்த்தத்தை வழங்கும்.**”

இருப்பினும், பாபா-அன்பர்கள் அவரது செய்தியைப் பரப்புவதற்காக இடம் விட்டு இடம் சென்றபோது, பாபாவின் தரிசனம் கோரி மக்களிடமிருந்து அதிக எண்ணிக்கையிலான கடிதங்கள் வந்து குவிந்தன. பாபா இந்தக் கடிதங்களை மண்டலி மண்டபத்தில் - ஆங்கிலம் மற்றும் குஜராத்தியில் வந்த கடிதங்களை எரச்சும், இந்தி மொழியில் வந்ததை பாவ் கல்சூரியும் - சத்தமாக வாசிப்பதைக் கேட்பது வழக்கம். பாரசீக மொழியில் வந்த கடிதங்கள் அலோபாவால் வாசிக்கப்பட்டன.

இந்தக் காலகட்டத்தில், ஒரு வாரம் முழுவதும் பாவ் கல்சூரிக்கு கடிதங்களை வாசிக்கும் வாய்ப்பு இல்லாமல் போயிற்று. எட்டாவது நாள் காலையில், பாபா அந்தக் கடிதங்களுக்கு செவி மடுத்து தக்க பதில்களை வழங்குவார் என எண்ணி, பாவ் கல்சூரி அனைத்து கடிதங்களையும் தன்னுடன் மண்டபத்திற்கு எடுத்துச் சென்றார்.

பாபா அவரைப் பார்த்து, “**இன்று, எனக்கு ஒரே தலைவலியாக உள்ளது, நீங்களே அவற்றிற்கு பதில் எழுதுங்கள்**” என்று சைகையால் தெரிவித்தார்.

இதை பாபா தெரிவித்ததும், பாவ் கல்சூரியின் மனதில் ஓர் எண்ணம் தோன்றியது: “அவர் எப்படிப்பட்ட கடவுள்? அவருடைய அன்பர்கள் உண்மையில் பெரியவர்கள். அவர்கள் அவரிடமிருந்து ஆன்மீகம் அல்லது உலகப்பொருள் எதையும் விரும்பவில்லை; அவர்கள் அவருடைய தரிசனத்தை மட்டுமே விரும்புகின்றனர். ஆனால் அவர் கூறுகிறார், ‘தரிசனம் இல்லை!’ அதன் பின்னர்,

அவரிடமிருந்து நேரடியாக சில அன்பான வார்த்தைகளை எதிர்பார்க்கின்றனர், அவர் என்னிடம், 'நீங்களே பதில் எழுதுங்கள்' என்று கூறுகிறார்"

ஆனால் பாவ் கல்சூரி எதுவும் சொல்லவில்லை, பாபாவும் அவரிடம் எதுவும் கேட்கவில்லை. அன்று பிற்பகல் மூன்று மணியளவில், பாபா அவரது அறைக்கு ஓய்வு எடுக்கச் சென்றபோது, பாவ் கல்சூரியும் அவரைப் பின்தொடர்ந்தார். ஒரு கட்டத்தில் பாபா, **"இன்று எத்தனை கடிதங்கள் எழுதினீர்கள்?"** என்று கேட்டார்.

எரிச்சலடைந்த பாவ் கல்சூரி "ஒரு கடிதம் கூட எழுதவில்லை, பாபா!" என்று பதிலளித்தார்.

**"ஏன் இல்லை?"**

"நேரம் எங்கே பாபா? மண்டபத்தில் நான் உங்களுடன் இருந்தேன், நீங்கள் இங்கு வரும்போது நான் உங்களைப் பின்தொடர்ந்து வந்தேன்."

**"ஆமாம், நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் சொல்லுங்கள், நீங்கள் மண்டபத்தில் என்ன நினைத்துக் கொண்டிருந்தீர்கள்?"**

"ஒன்றுமில்லை."

**"என்னிடம் உண்மையை சொல்லுங்கள்!"** எனவே "பாபாவின் அன்பர்கள் பெரியவர்கள் என்றும் அவருடைய தரிசனத்திற்காக மட்டுமே ஆசைப்படுகின்றனர்" என்றும் பாவ் கல்சூரி அவரது மனதில் தோன்றியதை மீண்டும் கூறினார். அதற்கு பாபா, **"ஆமாம், நீங்கள் சொல்வது சரிதான். என் அன்பர்கள் உண்மையிலேயே பெரியவர்கள். ஆனால் இப்படி நினைப்பதன் அர்த்தம்தான் என்ன? இத்தனை வருடங்களாக என்னுடன் இருக்கிறீர்கள், என்றாலும் அவர்களுக்கு நான் என்ன செய்கிறேன் என்று உங்களுக்கு இன்னும் புரியவில்லை! அவர்கள் என்னைப் பார்க்க வந்தால், என்ன பார்ப்பார்கள்? இந்தப் பௌதீக உடல் வடிவம்! இதில் ஒன்றுமில்லை"** என்று கூறினார்.

பாபா தனது தொடையை கை முட்டியால் தட்டி, அவரது ஏகாந்தவாசப் பணிக்கான அடையாளமாக இதைத் தெரிவித்துக் கூறினார், **"இது நான் அவர்களுக்குக் வழங்கும் உண்மையான ஒன்று, என்னை இந்த உடலில் பார்க்காதவர்களுக்கு என்ன நிகழும் என்பதை நீங்கள் உங்கள் கண்களால் காண்பீர்கள். அவர்கள் என்னை உடல் ரீதியாக பார்க்கவில்லை என்றாலும் - அவர்கள் என்னுடன் இருக்கிறார்கள், நான் அவர்களுக்காகப் பணிபுரிகிறேன். அவர்கள் என்னுடன் இங்கு இருக்கிறார்கள்."**

எவ்வாறாயினும் பாபா, 1968 அக்டோபர் 9ஆம் தேதி முதல் சில தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பர்களைப் பார்க்க ஒப்புக்கொண்டதோடு, அக்டோபர்

13ஆம் தேதி 'தமது சொந்த நிபந்தனைகளின் பேரில்' தரிசனம் வழங்குவது குறித்து விவாதிக்க ஒரு கூட்டத்தை நடத்தினார். சம்பந்தப்பட்டவர்களுக்கு தொலைத்தந்தி மூலம் தெரிவிக்குமாறு ஆதி சீனியருக்கு அறிவுறுத்தினார். அழைக்கப்பட்டவர்களுக்கு இவ்வாறு எழுதுமாறு எரச் அறிவுறுத்தப்பட்டார்: "அன்றைய தினம், யார் ஒருவரும் தனிப்பட்ட உரையாடலுக்காக ஒரு நிமிடம் கூட கோருவதை பாபா விரும்பவில்லை, ஏனெனில் அவர் அன்று என்ன சொல்ல விரும்புகிறார் என்பதில் நீங்கள் அனைவரும் ஒருமித்த கவனத்துடன் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்."

தொடர்பு கொண்டவர்களில் ஹாரி கென்மோரும் (HARRY KENMORE) அடங்குவார், அவருக்கு அக்டோபர் 4 அன்று தொலைத்தந்தி ஒன்றை அனுப்பி, மெஹராஸாத்தில் வந்து தங்குமாறு தெரிவிக்கப்பட்டது. அதில், **"மெஹராஸாத்தில் ஒரு வாரம் தங்குவதற்காக நவம்பர் 1ஆம் தேதி காலை வந்து சேருங்கள். எனது மண்டலியில் ஒருவராக வாருங்கள், என் அன்பில் மண்டலியாக வாழுங்கள். தொலைத்தந்தி வந்ததை உறுதி செய்யுங்கள்"** என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

பாபாவின் அறிவுறுத்தலின்படி, எரச், ஹாரி கென்மோருக்கு சிகிச்சைக்குத் தேவையான கருவிகள் பொருத்தப்பட்ட மருத்துவராக வருவதை பாபா விரும்பவில்லை என்றும், அவரது போலராய்டு கேமரா, திரைப்பட கேமரா அல்லது பாபாவின் தனிப்பட்ட வசதிக்காக வடிவமைக்கப்பட்ட நாற்காலி போன்ற வேறு ஆச்சரியமளிக்கும் எதையும் கொண்டு வருவதை பாபா விரும்பவில்லை என்றும் எழுதினார். ஹாரி கென்மோர் ஏன் அழைக்கப்பட்டார் என்று எவரேனும் கேட்டால், **"உங்கள் 'தந்தையின்' தனிப்பட்ட பணிக்காக நீங்கள் அழைக்கப்பட்டீர்கள் என்று அவரிடம் சொல்லுங்கள்"** என்று பாபா அறிவுறுத்தினார்.

இதற்கிடையில், தொடர்பில் வந்தவர்களில் மற்றுமொருவர் ஜெரி பால்ஸன் (JERRY PAULSON) என்ற அமெரிக்க இளைஞர் ஆவார்; அவர் பாபாவின் ஏகாந்தவாசம் நிறைவடைந்ததும் அவரைப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கையில், கிட்டத்தட்ட பத்து மாதங்கள் இந்தியாவில் காத்திருந்தார். பால்ஸன் முதன்முதலில் மெஹர் பாபாவைப் பற்றி 1966இல் கலிஃபோர்னியா மாகாணத்தின் ஸான்டா பார்பராவில் (SANTA BARBARA, CALIFORNIA) மிக் & உர்ஸூலா ஹாமில்டன் (MIK & URSULA HAMILTON) மூலமாகக் கேள்விப்பட்டார். இந்தியா வரும் வழியில், பால்ஸன் ஜெர்மனியில் நின்றபோது, அங்கு அவர் மிக் மற்றும் உர்ஸூலாவை மீண்டும் சந்தித்தார். பாபா கடுமையான ஏகாந்தவாசத்தைக்

கடைப்பிடிப்பதாகவும், அவரை சந்திப்பதற்கான வாய்ப்பு மிகக் குறைவு என்றும் அவருக்குத் தெரிவித்தனர்.

ஆயினும்கூட, ஜெரி பால்ஸன் எப்படியோ அங்கும் இங்கும் தாவி இந்தியாவிற்குத் தரைவழியாகச் சென்றார், கைகளில் பணம் எதுவும் இல்லாமல் வந்து சேர்ந்தார். அவர் பாபாவின் செயலாளரான ஆதி சீனியருடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து, பாபா அவரை அழைக்கக்கூடும் என்ற மிகக் குறைவான வாய்ப்பில், நாட்டின் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு பயணித்தார். பால்ஸன் கல்கத்தாவில் பல மாதங்கள் இருந்தபோது, ஏ.சி.எஸ். சாரி அவரைப் பற்றி எரச்சிற்கு அடிக்கடி கடிதம் எழுதினார். ஆனால் பாபா அவரை அழைக்கவில்லை.

கடைசியாக, டெல்லியில், பால்ஸனின் கைவசம் இருந்த பணம் முழுவதுமாகச் செலவழிக்கப்பட்டு, நீண்ட காலமாக எதுவுமே இல்லாமல் வாழ்வதில் ஏற்பட்ட விரக்தியின் காரணமாக, மிகுந்த அவநம்பிக்கையுடன் இருந்த காலகட்டத்தில், பாபா ஏகாந்தவாசத்திலிருந்து வெளிவருவது காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டதாகவும், புதிய தேதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் ஆதி எழுதினார். 1969 மே அல்லது செப்டம்பர் - அக்டோபர் மாதங்களுக்கு முன்பு, பாபா, பால்ஸனை சந்திப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று ஆதி உணர்ந்ததால், அவரை அமெரிக்காவிற்குத் திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தினார்.

இந்தச் செய்தி ஜெரி பால்ஸனை சென்றடைந்த போது, இயல்பாகவே அவர் மனச்சோர்வடைந்தார், ஆனால் அவர் மீண்டும் எழுதினார்:

அன்பான பாபாவைக் காண வேண்டும் என்று என் இதயம் நீண்ட காலமாக, எந்த விதமான காரணங்களுக்கும் செவிமடுக்காமல் இருந்தது. நான் பாபாவின் அருகில் இருக்கும் நோக்கத்தில் தெற்கு நோக்கிச் செல்லச் துடிக்கிறேன். இந்தியாவை விட்டு வெளியேறி, வந்த வழியே திரும்பிச் செல்வது இந்த நேரத்தில் எனது சக்திக்கு அப்பாற்பட்டது. ஆனால் நான் என் இல்லத்திற்குத் போகமாட்டேன் என்றோ, இல்லத்திற்குப் போக முடியாது என்றோ, அன்பான பாபாவின் விருப்பத்திற்கு மாறாக நடக்க வேண்டும் என்றோ கூறவில்லை. பாபா என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரோ அதை அப்படியே செய்ய விரும்புகிறேன். நான் திரும்பிச் செல்வது அவருடைய விருப்பமாக இருந்தால், அது எனக்கு வெளிப்படும் என்றும், அவருடைய சித்தத்தை நிறைவேற்ற பாபா எனக்கு உதவுவார் என்ற நம்பிக்கையும் எனக்கு உள்ளது.

பால்ஸன் எழுதிய கடிதம் பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டது, பாபா இதுகாறும் அவரை அழைக்கவில்லை.

இந்தியாவில் தொடர்ந்து தங்குவதற்குத் தேவையான பணத்தை எப்படியேனும் அடையப் பெறுவதற்கான விரக்தியின் காரணமாக, பாகிஸ்தான்-இந்திய எல்லையில் சட்டவிரோதமான போதைப் பொருட்களைக் கடத்திச் செல்வதற்காக, அவர் சந்தித்த சில போதைப்பொருள் வியாபாரிகளின் கருத்தை பால்ஸன் ஏற்றுக்கொண்டார். (அமெரிக்க மற்றும் ஐரோப்பிய 'ஹிப்பிகள்' பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு ஹாஷிஷ் கடத்துவதற்காகப் பணியமர்த்தப்பட்டனர், ஏனெனில் அந்த நேரத்தில் பாகிஸ்தானியர்களோ அல்லது இந்தியர்களோ எல்லையை கடந்து செல்ல முடியாத சூழ்நிலை நிலவியது.) "**போதைப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும்**!" என்ற பாபாவின் அறிவுறுத்தல்களை நன்கு அறிந்திருந்த பால்ஸன், இந்த விதமான கடத்தல் தொழிலில் ஈடுபடுவதில் மிகுந்த தயக்கம் காட்டினார்; ஆனால் அவருக்கு வேறு எந்த வழியும் தென்படவில்லை; அவர் உடைந்து போய், ஊட்டச் சத்தும், உண்ண உணவும் இல்லாமல் இருந்தார்; இந்த நிலையில் அமெரிக்காவிற்குத் திரும்பிச் செல்வதற்கான மாற்று வழி அவரது மனதில் தாங்க முடியாததாக இருந்தது.

அடுத்த நாள் காலையில், போதைப்பொருள் வியாபாரிகளை சந்திக்க பால்ஸன் புறப்பட்ட வேளையில், ஆதியிடமிருந்து அவருக்குத் தொலைத்தந்தி ஒன்று வந்தது, அதில்: "**நீங்கள் உடனடியாக அஹமதுநகருக்கு வர வேண்டும் என்று பாபா விரும்புகிறார்**" என்று கூறி, அவர் நியமிக்கப்பட்ட நேரத்தையும் தேதியையும் குறிப்பிட்டிருந்தார். உடனடியாக ரயிலில் அஹமதுநகருக்குப் புறப்பட்டார் பால்ஸன்.

ஜெரி பால்ஸன் 1968 அக்டோபர் 9 புதன்கிழமை அதிகாலையில் அஹமதுநகரை வந்தடைந்தார்; கனமழை காரணமாக ரயில் நிலையத்தில் ஓய்வெடுக்க வேண்டியிருந்தது. கடைசியாக காலை 8:00 மணிக்கு குஷ்ரு குவார்ட்டர்ஸ் சென்றதும், டாக்டர் டான் அவசரமாக அவருக்கு தேநீரையும் காலை சிற்றுண்டியையும் வழங்கினார். மெஹராஸாத் செல்லும் சாலை வெள்ளத்தில் மூழ்கியிருந்ததால், ஜெரி காலை ஒன்பது மணிக்கு பாபாவை சந்திக்க முடியுமா என்ற கவலையில் ஆதி பேரச்சத்தில் இருந்தார். உடனடியாக அவர்கள் டாக்டர் டானின் காரில் புறப்பட்டனர். பால்ஸன் இப்போது பாபாவை பார்க்கும் வாய்ப்பை அடையப் பெற்றதில் எவ்வளவு மகிழ்ச்சியாக உள்ளார் என்பதை ஆதி அவரிடம் கூறினார்: "சமீபகாலமாக பாபாவின் ஏகாந்தவாசம் மிகவும் தீவிரமாகிவிட்டது, அவரை யார் ஒருவரும் பார்க்க அனுமதியில்லை, மண்டலி கூட அனுமதிக்கப்படவில்லை."

மெஹராஸாத்தில், ஜெரி ஒரு நீள் இருக்கையில் அமர்ந்து பாபாவை சந்திப்பதற்காக காத்திருந்த வேளையில், ஆதி அவர்கள் வந்துவிட்டதாக பாபாவிற்குத் தெரிவித்தார். ஜெரி முற்றிலும் நிம்மதியாக உணர்ந்தார். பல மாதங்களாக, நீண்ட நெடிய காத்திருப்புக்குப் பின்பு, பாபாவைப் பார்க்கவே முடியாது என்பதை மனதளவில் ஏற்றுக்கொண்ட பின்னர் இதோ! சில நிமிடங்களில் ஆதி திரும்பி வந்து கூறினார், "இப்போது பாபாவைப் பார்க்கலாம். நீங்கள் அவருடன் ஐந்து நிமிடங்கள் மட்டுமே இருக்க வேண்டும், அதற்கு மேலும் நேரம் கேட்கக்கூடாது. அவர் உங்களுக்கு இந்த அளவுக்கு வழங்கியுள்ளது மிகவும் அசாதாரணமானது. எப்படி அல்லது ஏன் உங்களை அவர் அனுமதித்தார் என்பது எங்களில் எவருக்கும் புரியவில்லை. நீங்கள் உள்ளே செல்லும்போது அவரது பாதங்களில் முத்தமிடவோ, அவரை அரவணைக்கவோ, அவருக்கு வணக்கம் செலுத்தவோ கூடாது. உங்களோடு எதையும் கொண்டு வராதீர்கள்."

ஆனால் அவர்கள் மண்டபத்திற்குள் நுழைந்ததும், பாபா அணைத்துக் கொள்வதற்காக தனது கைகளை நீட்டியபோது, பாபாவின் கைகளில் ஜெரி வேகமாகப் பாய்ந்து, அணைத்துக்கொண்டார், பதிலுக்கு பாபாவும் அவரை அரவணைத்தார். ஜெரியை அமரச் சொல்லி, எரச் வழியாக பாபா எடுத்துரைத்தார், "**நான் உங்களை இங்கே அழைத்தேன், நீங்கள் வந்தீர்கள், நீங்கள் இங்கு வந்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நீங்களும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? உங்களை வர அனுமதித்ததற்கு நீங்கள் மிகவும் நன்றியுள்ளவராக இருக்க வேண்டும்.**

"**இறை அன்பு மற்றும் உண்மைப்பொருள் பற்றிய எனது செய்தியை அனைவருக்கும் சொல்லுங்கள், ஆனால் தரிசனம் வழங்கப்படுவதாக சுற்றறிக்கை அனுப்பும் வரை வேறு எவரையும் அஹமதுநகருக்கு வரச் சொல்லாதீர்கள். அதற்கு முன் யார் ஒருவரும் வரக்கூடாது. மக்கள் என்னிடம் வர அனுமதிக்க இன்னும் ஐந்து மாதங்கள் ஆகும். இப்போது என்னுடன் இருப்பதால் நீங்கள் மிக மிக அதிர்ஷ்டசாலி.**"

அப்போது பாபா கூறினார், "**நான் மனித உருவில் வருகை தந்த கடவுள். அன்பை விட கீழ்ப்படிதல் மேலானது. ஒரு நாள் என்னை எனது உண்மை ரூபத்தில் பார்க்க வேண்டும் என்பதற்காக, கீழ்வரும் வழிமுறைகளை நான் உங்களுக்கு வழங்குகிறேன். கீழ்ப்படிவதே குருநாதரின் அருளைப் பெறுவதற்கான வழி. நான் உங்களுக்கு வழங்கும் அறிவுரைகள், நீங்கள் எனக்குக் கீழ்ப்படிவதற்கான வாய்ப்பை வழங்குவதோடு, என்னை எனது உண்மை ரூபத்தில் பார்க்கும் என் அருளை அடையப் பெறுவதும் ஆகும்.**

இதை விளக்கிக் கூறி பாபா, "**நீங்கள் உடனடியாக இல்லம் திரும்ப வேண்டும். அதைச் செய்வீர்களா?**" என்று கேட்டதற்கு ஜெரி 'ஆம்' என்றார்.

"**முடிந்தவரை, நடைமுறைக்கு உகந்த விரைவுடன் அமெரிக்காவிற்குத் திரும்பிச் செல்லுங்கள். நீங்கள் போதைப்பொருள் மற்றும் திருமணத்திற்குப் புறம்பான காமச் செயல்களில் ஈடுபடக் கூடாது. இதில் எப்போதேனும் நீங்கள் தோல்வியுற்றால், உடனடியாக பாபாவிற்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.**"

ஜெரி வியட்நாம் போருக்கு எதிராக குரல் எழுப்பிய ஓர் அமைதிவாதி. அந்த நேரத்தில் அமெரிக்க இராணுவத்தில் ஒருவரைக் கட்டாயப்படுத்திப் படையில் இணைக்கும் வரைமுறை அமலில் இருந்ததால், மனசாட்சிக்கு எதிராக இருக்கும் நிலையை அடைவது மிகவும் கடினமாக இருந்தது. அவரது வரைமுறை பிரச்சினையைக் குறித்து பாபா அவருக்கு அறிவுரை வழங்கினார், "**நீங்கள் போரில் பணிபுரிவதற்கு எதிரான உங்கள் வாதங்களை இராணுவத்தின் முன்னால் வைக்க வேண்டும்; இருந்தாலும், எந்த சூழ்நிலையையும் தவிர்க்க நீங்கள் எந்த வகையிலும் முயற்சி செய்யக்கூடாது. நீங்கள் அதை எதிர்கொள்ள வேண்டும். சட்டப்பூர்வமான வழிகளைப் பயன்படுத்தி இராணுவத்திற்கு வெளியே இருக்கும் வாய்ப்பை அடையப் பெறலாம், ஆனால் சிறைச்சாலைக்குச் செல்லாதீர்கள். நீங்கள் இராணுவத்தில் இணைய வேண்டியிருந்தால், நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

"**நீங்கள் எங்கிருந்தாலும் எனது செய்தியைப் பரப்பலாம்**" என்று பாபா அவருக்கு நினைவூட்டினார்.

பாபா தொடர்ந்து கூறினார், "**என்னுடைய அறிவுரைகளை உங்களால் இயன்றவரை நிறைவேற்றுங்கள், என்ன நடந்தாலும் அது எனது விருப்பப்படியே நடப்பதாக எடுத்துக் கொள்ளுங்கள். நான் இப்போது உங்களுக்கு வழிகாட்டுவது போல் உங்கள் விருப்பமும் இருக்கட்டும்.**"

பாபா அவரை எச்சரித்தார், "**உங்கள் மனம் உங்களுடன் பல தந்திர விளையாட்டுகளில் ஈடுபடும், மனம் என்னதான் செய்தாலும் - என் அறிவுரைகளைப் பின்பற்றுவதில் எந்த விதமான ஆசைகள், அச்சம், குழப்பங்கள் மனதில் எழுந்தாலும் - எனது தாமனை** (DAAMAN, **மேலங்கி**) **உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள். எல்லா சூழ்நிலைகளிலும் எனக்குக் கீழ்ப்படியுங்கள்.**"

பாபா அப்போது கூறினார்: "**நீங்கள் என்னை எனது உண்மை ரூபத்தில் பார்க்க முயற்சி செய்ய வேண்டும்; இந்தப் பௌதீக உடலை அல்ல; 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தைப் படித்தீர்களா?"**

அதைப் படித்ததாக பால்ஸன் கூறினார்.

"**நீங்கள் அதை மீண்டும் படிக்க வேண்டும் - முழுவதையும்**" என்று பாபா அறிவுறுத்தினார்.

இதுவரையிலான சூழல் மிகவும் தீவிரமாக இருந்தது. ஜெரி பால்ஸன், பாபாவின் வார்த்தைகள் தன் இதயத்தில் ஊடுருவுவதை உணர்ந்தார்; அவர் மனம் முழுவதுமாக, பிரியமான பாபாவின் மீது குவிந்திருந்தது.

ஜெரி, மண்டலி மண்டபத்திற்குள் நுழைந்ததும், பாபாவைப் பற்றிய முதல் சிந்தனை, அவர் எவ்வளவு வயதானவர் என்பதுதான். "பாபா இவ்வளவு வயதானவராக இருப்பதைக் காட்டும் எந்த ஒரு புகைப்படத்தையும் நான் எங்கும் பார்த்ததில்லை" என அவர் பின்பு நினைவு கூர்ந்தார். "அவருடைய வயது 74, ஆனால் 90 வயதிற்கும் மேலாகத் தோற்றமளித்தார்."

பாபா, "**உங்களுக்கு என்ன வயது?**" என்று கேட்டார்.

"இருபத்தி நான்கு" ஜெரி கிட்டத்தட்ட ஒரு கேள்வியின் தொனியில் பதிலளித்தார்.

"**நான் வயதிற்கு அப்பாற்பட்டவன்!**" பாபா சைகையால் தெரிவித்தார்.

அனைவரும் சிரித்தனர், தீவிரமான சூழ்நிலை மிகவும் இலகுவானதாக மாறியது.

"**இப்போது நீங்கள் எனது அறிவுரைகளைக் கேட்டீர்கள், நீங்கள் எப்படி அவற்றைப் பின்பற்றுவீர்கள்? அவற்றை எவ்வாறு செயல்படுத்தப் போகிறீர்கள்? எப்படி இல்லம் திரும்புவீர்கள்?**" பாபா கேட்டார்,

ஜெரி, தான் மும்பைக்குச் சென்று அமெரிக்காவிற்கு செல்லும் கப்பலில் ஒரு வேலையைத் தேட நினைத்துள்ளதாகக் கூறினார்.

"**ஐரோப்பாவிற்கு எப்படியேனும் தாவித் தாவிப் போவதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**" பாபா வினவினார்.

"எனக்கு கப்பலில் வேலை கிடைக்கவில்லை என்றால், நான் அதைச் செய்ய வேண்டியிருக்கும்" என்று பால்ஸன் பதிலளித்தார்.

பாபா இவ்வாறு அறிவுரை வழங்கினார்: "**மும்பைக்குச் சென்று முயற்சி செய்யுங்கள், அது நிறைவேறாத பட்சத்தில் ஐரோப்பாவிற்குச் செல்ல முயற்சி செய்யவும். அமெரிக்கா திரும்பிச் செல்வதற்கு உதவாத வழியில் எங்கும் நிற்காதீர்கள். எது நடந்தாலும் அதை எனது விருப்பமாக எடுத்துக்கொள்ளுங்கள். நான் உங்களை இராணுவத்தில் பணிபுரியச்**

**செய்தால், அல்லது நான் உங்களை மாணவர்களுடன் அல்லது மற்றவர்களுடன் இணையச் செய்தால் - அதை நீங்கள் எப்பொழுதும் எனது விருப்பம் என ஏற்றுக்கொண்டு, நான் உங்களுக்கு அறிவுறுத்தியபடி எனக்குக் கீழ்ப்படிய வேண்டும். உங்கள் தொடர்பில் வரும் ஒவ்வொருவரும் எனது விருப்பத்திற்கிணங்க வருபவர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**"

ரிக் சேப்மெனைப் பற்றி பாபா ஏதோ சொல்லத் தொடங்கினார், அப்போது ஆண் மண்டலியில் ஒருவர் (ஐந்து நிமிடம் நிறைவடைந்ததும் பாபாவை நினைவுபடுத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தார்) குறுக்கிட்டார். பாபா, "**ஆமாம், ரிக் சேப்மெனும் இங்கு நீண்ட நேரம் இருந்தார்**" என்று சைகையால் தெரிவித்து, சிரித்துக்கொண்டே, "**பரவாயில்லை**" என்று கூறினார்.

ஐந்து நிமிட வரம்பு 20 நிமிடங்களாகக் கடந்ததை ஜெரி பால்ஸன் அப்போதுதான் உணர்ந்தார். ஜெரி திரும்பிச் சென்றதும் ரிக்கைத் தொடர்பு கொள்ளுமாறு பாபா பரிந்துரைத்தார், "**அவரை சந்திக்க முயற்சி செய்யுங்கள்.**"

பாபா மீண்டும் கூறினார், "**எனது செய்தியை மக்களிடம் எடுத்துச் செல்ல, சொல்லத் தயங்காதீர்கள்; ஆனால் அவர்கள் இங்கு வரமாட்டார்கள். என்னைத் தேடுபவர்கள் எங்கும் இருக்கிறார்கள், ஆனால் ஒரு சிலர் மட்டுமே என்னைக் கண்டுகொள்வார்கள். இப்போது உங்கள் சக்திகளை, என்னை எனது சுய ரூபத்தில் பார்க்கும் அளவுக்கு திசை திருப்ப வேண்டும்.**"

பாபா, "**நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?**" என வினவினார்.

"ஆம், பாபா."

"**நூறு சதவிகிதம்?**"

"ஆம்."

"**உங்களிடம் ஏதேனும் கேள்விகள் உள்ளனவா?**"

ஜெரியிடம் கேட்பதற்குப் பெரிதாக எதுவும் இல்லை, ஆதலால், அப்பாவித்தனமாக ஹாமில்டன் தம்பதியினரைக் குறிப்பிட்டு கேட்டார், "உங்களுக்கு மிக் மற்றும் உஸ்சியைத் தெரியுமா?"

"**நன்றாகத் தெரியும்**" என்று பதிலுக்குப் புன்னகைத்த பாபா, தன் கட்டை விரலையும் ஆள்காட்டி விரலையும் ஒரு வட்டமாக வளைத்து, மகிழ்ச்சியின் அடையாளமாகக் கையைக் காட்டினார்.

பாபா, "**நான் உங்களுடன் இருப்பேன்; நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம். இறை அன்பு மற்றும் உண்மைப்பொருளைப் பற்றிய எனது செய்தியை அனைவருக்கும் எடுத்துக் கூறுங்கள்**" என்று கூறி முடித்தார். பாபா மீண்டும் தனது கைகளை நீட்டியபோது, ஜெரிக்கு மற்றுமோர் இதயப்பூர்வமான அரவணைப்பு கிடைத்தது. பாபா, சடசடவென தனது விரல்களின்

வல்லொலியுடன், '**செல்ல வேண்டிய நேரம் இது**' என்று சுட்டிக்காட்டினார்; ஜெரி மகிழ்ச்சியுடன் வெளியேறினார். அன்று இரவே பூனாவிற்குச் சென்ற அவருக்கு, மும்பையிலிருந்த சில நாட்களிலேயே அமெரிக்கா செல்லும் கப்பலில் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது.

ஜெரி பால்ஸன், பாபாவுடனான தனது சந்திப்பை பின்பு சுருக்கமாகக் கூறினார்: "உண்மையில் இது எனது 'சுயத்தை' சந்திப்பது போல் இருந்தது. பட்டாசுகள் வெடிப்பது போன்ற ஆரவாரம் எதுவும் இல்லை - அது எளிமையாகவும், அமைதியாகவும் இருந்தது, பாபாவின் புன்னகை முழுமையாக, 100 சதவீதம் தெளிவாக இருந்தது."

அடுத்த நாள் 1968 அக்டோபர் 10 வியாழன் அன்று, பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டவர்களில் மற்றுமொருவரான மஹாராணி ஷாந்தாதேவி மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். அவர் காலை 9:00 மணிக்கு வந்து பாபாவுடன் ஒரு மணி நேரத்தைக் கழித்தார். ஷாந்தாதேவியின் கணவர் பிரதாப் ஸிங் கெய்க்வாட் (PRATAP SINGH GAEKWAD) கடந்த ஜூலை மாதம் காலமானார். கெய்க்வாட் 1943இல் தனது மனைவி மற்றும் குழந்தைகளை கைவிட்டு, மறுமணம் செய்து கொண்ட ஒரு சீர்கெட்ட விளையாட்டுப்பிள்ளையாக இருந்தாலும், ஷாந்தாதேவி எப்பொழுதும் அவருக்கு விசுவாசமாக இருந்தார். ஆனாலும், கணவரின் அலட்சிய போக்கையும் நடத்தையையும் கண்டு, அவரால் மனச்சோர்வும் வேதனையும் அடைவதைத் தவிர்க்க முடியவில்லை. பாபா, மஹாராணிக்கு ஆறுதல் கூறினார், ஷாந்தாதேவி பாபாவின் நெருங்கிய அன்பராக இருந்ததால், அவரது கணவரின் நடத்தை மோசமாக இருந்தபோதிலும், பாபா அவரது கணவரை ஆசீர்வதித்தார் என்றும் அவர் மன அமைதியாக இருப்பதாகவும் அவருக்குத் தெரிவித்தார். "**உங்களுக்கு முந்தைய பிறவிகளில் எண்ணற்ற கணவன் மனைவிகள் இருந்திருக்கிறார்கள், அதை உங்களால் நினைவுகூர முடியாது**" என்று பாபா அவரிடம் கூறினார். மஹாராணி மிக்க ஆறுதலுடனும் உற்சாகத்துடனும் வெளியேறினார்.

அஹமதுநகரிலிருந்து திரும்பிச் செல்வதற்கு முன்பு, ஷாந்தாதேவி விலூ வில்லாவிற்கு சிற்றுண்டிக்காகச் சென்றார். '**ஷாந்தாதேவி எதை நினைத்தும் கவலைப்பட வேண்டாம் என்றும், தூங்குவதற்கு தூக்க மாத்திரைகளை எடுத்துக் கொள்ளுமாறும், பூனாவைச் சென்றடைந்ததும் ஆதியை தொலைபேசியில் தொடர்பு கொள்ளவேண்டும்**' என்று தகவல் வழங்குமாறு பாபா, எரச் மூலமாக ஆதிக்கு தொலைபேசியில் தெரிவித்தார்.

மஹாராணியைப் போல துரதிர்ஷ்டவசமான மற்றுமோர் இளம் ஆஸ்திரேலிய பெண்மணி, ரோஸ்லின் ஸெயின்ட் ஜான் (ROSLYN ST. JOHN) என்றழைக்கப்பட்ட பாலே நடனக் கலைஞர், பாபாவை எப்படியேனும் சந்திக்க விரும்புவதாக தனது விருப்பத்தை வெளிப்படுத்தி, அதே நாளில் அஹமதுநகரில் ஆதியின் அலுவலகத்திற்கு வந்தார். பாபா அவரது ஆசீர்வாதங்களை ஒரு குறிப்பு மூலம் அந்தப் பெண்மணிக்குத் தெரிவித்தார், ஆனால் அவரை மெஹராஸாத்திற்கு வர அனுமதிக்கவில்லை.

அடுத்த நாள் அக்டோபர் 11, ஸரோஷ், விலூ, ஆதி மூவரும் பாபாவை ஒரு மணி நேரம் சந்தித்தனர். தாரா - அம்ரித் (DARA - AMRIT) இருவரின் திருமணத்திற்கான ஏற்பாடுகள் குறித்து பாபாவுடன் கலந்து ஆலோசித்து, அவர்களின் பொது திருமணப் பதிவை ஏற்பாடு செய்யுமாறு ஸரோஷிடம் அறிவுறுத்தினார்.

கேஷவ் நிகம், புக்கார் இருவரும் ஹமிர்பூரிலிருந்து அன்று மதியம் மெஹராஸாத் வந்தனர். குறிப்பிட்ட பணிக்காக பாபா அவர்களை அழைத்திருந்தார். கேஷவ் இவ்வாறு குறிப்பிட்டார், "இந்த நேரத்தில் பாபா வெளி உலகத்திலிருந்து முற்றிலும் விலகி இருப்பவர் போலத் தோன்றினார்." பாபா, கேஷவிடம் அவரது கைகளை தன் முன்னால் நீட்டுமாறு கேட்டுக்கொண்டார். நடுக்குவாத நோயால் (PARKINSON'S DISEASE) அவரது வலது கை மிகவும் நடுங்கியது. மருத்துவர்களிடம் தொடர்ந்து சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பாபா திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறினார், "**இது குணப்படுத்த முடியாதது, ஆனால் ஒரு நாள் அது போய்விடுமாறு நான் பார்த்துக் கொள்கிறேன், கவலைப்பட வேண்டாம்**" என்று கூறினார்.

ஹமிர்பூர் சமூகத் திட்டமான மெஹர்புரி பற்றி பாபா, புக்காருடன் கலந்துரையாடினார். திட்டத்தை விரைவில் முடிக்குமாறு வலியுறுத்தி, பாபா அதன் திறப்பு விழாவை 1970 நவம்பரில் நடத்தவேண்டும் என்று நிர்ணயித்தார். மேலும் பாபா, புக்கார், கேஷவ் இருவரிடமும், குறிப்பிட்ட வேளைகளில், சுழற்சி முறையில் மேளாக்களை (திருவிழாக்கள்) - ஒரு வருடம் மெஹர்புரியில் (ஹமிர்பூர்), மற்றொரு வருடம் மெஹர் தாமில் (நௌரங்கா), அடுத்த முறை மெஹரஸ்தானாவிலும் (மஹேவா) நடத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார். நிகழ்ச்சிகளின் அட்டவணையைத் தயாரித்து, பாபாவிடம் சமர்ப்பிக்கத் தயாராக இருக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

பாவ் கல்சூரி இந்தியில் மொழிபெயர்த்த 'வேஃபேரர்ஸ்' (WAYFARERS) புத்தகத்திற்கு 'பதிக்' ('PATHIK' - யாத்ரிகர்) என்று பெயர் வழங்கி நிறைவு செய்யப்பட்டது; மேலும் இந்தி பாடல்களின் தொகுப்பு, 'மெஹர் கீதிகா' (MEHER GEETIKA) என்றும் 'கஸல்'களின் புத்தகம், 'மெஹர் ஸரோத்' (MEHER SAROD) என்றும் அழைக்கப்பட்டன. பாபா மூன்று கையெழுத்துப் பிரதிகளையும் கேஷவ் நிகமிடம் கொடுத்து, ஒவ்வொன்றிற்கும் தலைப்புகளை வழங்கி, அவற்றை எவ்வளவு விரைவில் அச்சிட முடியுமோ, அவ்வளவு விரைவில் ஹமிர்பூரில் அச்சிடுமாறு அறிவுறுத்தினார்.

பாபா எந்த ஒரு புத்தகத்தை பாவ் கல்சூரியிடம் எழுதச் சொன்னாலும், அதை அச்சிடுவதற்காக அனுப்பும் முன்பு, பாபா அதை ஆரம்பம் முதல் இறுதி வரை வாசிக்கச் சொல்லி கேட்பது வழக்கமாக நடந்து வந்தது. ஃபிரான்சிஸ், எரச், மணி இவர்கள் என்ன எழுதினாலும் இதே போல பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டது. பாவ் கல்சூரி இதுவரை இந்தியில் கிட்டத்தட்ட ஒரு டஜன் புத்தகங்களை எழுதியுள்ளார், மேலும் இந்தப் பணியால் அவர் மிகவும் சோர்வடைந்து போனார். அவர் கஸல்கள் எழுதுவதை நிறுத்திவிட்ட பின்னரும், அவர்கள் மெஹராஸாத் திரும்பியதும், பாபா, பாவ் கல்சூரிக்கு தினமும் ஒரு பாடல் வரியைக் கொடுத்துக்கொண்டே இருந்தார். ஒருமுறை ஃபிரான்சிஸ், பாவ் கல்சூரி இருவரிடமும் பாபா, 'தி டெர்விஷ்' (THE DERVISH - துறவி) என்ற தலைப்பில் ஒரு கஸல் எழுதுமாறு கூறி, அதன் கடைசி வரியை ஃபிரான்சிஸுக்கு ஆங்கிலத்திலும், பாவ் கல்சூரிக்கு இந்தியிலும் வழங்கினார்.

சில நேரங்களில் பாபா, பாவ் கல்சூரிக்கு வழங்கிய வரிகளிலிருந்து ஓரிரு கஸலை இயற்றி அதை அவருக்குப் படித்துக் காட்டினார், ஆனால் பெரும்பாலும் அவர், பாபா வழங்கிய வரிகளை சேகரித்து, கஸல் எழுதுவதைத் தள்ளிப் போட்டுக்கொண்டே இருந்தார்; ஏனெனில், உடனடியாகச் செய்வதற்கு பாவ் கல்சூரியிடம் பல பணிகள் இருந்தன. பாபா ஏப்ரல் மாதம் தரிசனம் வழங்க முடிவு செய்திருந்தார், மேலும் பல விஷயங்கள் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்தது. எனவே இது தொடர்பாக கூட்டம் ஒன்று நடத்த திட்டமிடப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில், வாமனின் திருமண நிச்சயதார்த்தம் நடந்ததால், அவர் இல்லாத பட்சத்தில், ஆதி அவ்வப்போது கடிதங்கள் மற்றும் தொலைத்தந்திகளுடன் மானேக்கை மெஹராஸாத்திற்கு அனுப்பி வந்தார். முந்தைய ஆண்டு, பாவ் கல்சூரி இந்தியில் 'ஆதி ஸச்சேதனா' (AADI SACHETANA) என்ற தலைப்பில் ஒரு பாடலை எழுதியிருந்தார். 1968 அக்டோபர் மாதத்தில் ஒரு

நாள், மானேக் அவரது தந்தை ருஸ்தம் காக்காவுடன் வந்தபோது, பாபா, மானேக்கிடம் '**பாவ் கல்சூரி எழுதிய ஆரத்திக்கு இசை வடிவம் கொடுக்குமாறு**' அறிவுறுத்தினார்.

மானேக் திரும்பிச் சென்று, அவ்வாறு செய்து, அடுத்த முறை மெஹராஸாத்திற்குச் சென்றபோது, பாபா முன்னிலையில் ஆரத்தியைப் பாடினார். பாபா அதை விரும்பாமல், "**இதற்கு ஒரு நல்ல மெல்லிசையைத் தேர்ந்தெடுத்து நாளை கொண்டு வாருங்கள். நான் உங்களுக்கு உதவுகிறேன்**" என்றார். இப்படியே பல நாட்கள் கடந்தது; பாபா அவருடைய எந்த ஒரு ஸ்வரத்தையும் விரும்பவில்லை; இறுதியாக, அவர் மானேக்கை எச்சரித்தார், "**நான் விரும்பும் இசையை நீங்கள் கண்டுகொள்ளவில்லை என்றால், உங்கள் அனைத்து இசைக்கருவிகளையும் ஒரு பெட்டியில் வைத்து மூடி, அதில் ஆணி அறைந்து, ஸீனா நதியில் எறிந்து விடுங்கள்!**"

இரவு முழுவதும் மானேக் கவலையுடன் பரிதாபமாக இருந்தார். அடுத்து நடந்ததை அவர் இவ்வாறு விவரித்தார்:

நான் மிகுந்த வருத்தத்தில் ஆழ்ந்தேன். என்ன செய்வதென்று தெரியாமல்... வயலின், ஹார்மோனியம், தபேலா அனைத்தையும் அரை வட்டத்தில் என் முன் வைத்து, அவற்றைப் பார்த்து உத்வேகத்திற்காக வேண்டிக்கொண்டேன். ஐயகோ, ஆனால் எந்த உத்வேகமும் வரவில்லை! ஆரத்திக்கு இசைவான இசை கிடைக்காமல் தவித்துப் போய், இரவு முழுவதும் தூங்க முடியவில்லை. அதிகாலை 4:00 மணியளவில் யாரோ என்னை உலுக்கவே, நான் விவரிக்க முடியாத தெய்வீக மெல்லிசையையும், இனிமையான ஒலிகளையும், இசைக் குறியீடுகளையும் கேட்க ஆரம்பித்தேன். அவசர அவசரமாக குறிப்பெழுதிவிட்டுப் பாடத் தொடங்கினேன்.

எட்டு மணிக்கு பாபா என்னை அழைத்ததால் காலை 7:00 மணியளவில் நான் எனது சைக்கிளில் மெஹராஸாத்திற்கு விரைந்தேன். நான் அணுகு சாலையைச் சென்றடைந்தபோது, எனக்காகக் காத்திருந்த அலோபா, "ஏன் தாமதமாக வந்தீர்கள்?" என்று வினவினார்; "பாபா உங்களுக்காகக் காத்திருக்கிறார்; அவர் 7:30 மணிக்கே வந்து உங்களைக் கேட்கத் தொடங்கினார். வேகமாகச் செல்லுங்கள்." நான் மண்டலி மண்டபத்திற்கு விரைந்து சென்று, பாபாவின் முன்னால் அமர்ந்தேன். ஆரத்திக்கு நான் அமைத்த இசையைக் கேட்டு அவர், "**மிகவும் நன்றாக உள்ளது, நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், நீங்கள் இதற்கு எப்படி இசையமைத்தீர்கள்?**" என்று கேட்டதும், நான் முழுக் கதையையும் விவரித்தேன், அதற்கு செவிமடுத்த அவர், "**உங்களுக்கு நான் உதவுவேன் என்று சொல்லவில்லையா? ஆனால் இப்போது இந்த ஆரத்தியை**

**பாட வேண்டாம். நான் எனது உடலைத் துறக்கும் போது பாடுங்கள்"** என்று கூறினார். பாபாவின் வார்த்தைகளைக் கேட்டு நாங்கள் அதிர்ச்சியடைந்தோம்.

பாவ் கல்சூரியிடம், "**நான் எனது பௌதீக உடலைக் கைவிட்ட பின்னர், இந்த ஆரத்தி இந்தியா முழுவதும் பாடப்படும்**" என்றார் பாபா.

கேஷவ் நிகம், புக்கார் இருவரும் தரிசனம் குறித்த கூட்டத்திற்காக மெஹராஸாத்தில் தங்கியிருந்தனர். ஒரு நாள் மதியம் பாபாவின் அறைக்குச் செல்வதற்கு முன்பு, பாவ் கல்சூரி, கேஷவுடன் ஐந்து நிமிடங்கள் உரையாடிக் கொண்டிருந்தார். கேஷவ், ஹமிர்பூரில் பாபாவின் பெயரில் நடக்கும் பணிகளைப் பற்றி அவரிடம் விளக்கிக் கூறினார், "பல விஷயங்கள் நன்றாக உள்ளன, ஆனால் பாபாவின் வாழ்க்கை வரலாற்றை இந்தியில் எழுத வேண்டும், அதற்கான தேவை இப்போது வந்துள்ளது, அது மிகவும் இன்றியமையாதது" என்று குறிப்பிட்டார்.

இரவு கண்காணிப்பின் போது, பாவ் கல்சூரியிடம் பாபா, "**கேஷவுடன் பேச உங்களுக்கு வாய்ப்புக் கிடைத்ததா?**" இரவு கண்காணிப்பிற்கு வருவதற்கு முன்பு சில நிமிடங்கள் அவரைப் பார்த்ததாக பாவ் கல்சூரி பதிலளித்தார். "**கேஷவ் என்ன சொன்னார்?**"

"அதிகம் எதுவும் இல்லை," பாவ் கல்சூரி பதிலளித்தார். "நான் அவரிடம் ஹமிர்பூரில் நடக்கும் பணிகளைப் பற்றி கேட்டுக்கொண்டிருந்தேன்."

"**வேறு என்ன?**"

"ஒன்றுமில்லை. சில கணங்கள் மட்டுமே அவருடன் பேசினேன்."

"**வேறு எதுவும் விவாதிக்கப்படவில்லையா?**"

கடைசியாக பாவ் கல்சூரி தவிர்க்க முயன்ற விஷயத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது, மேலும் பாவ் கல்சூரி, "'உங்கள் சுயசரிதை இந்தியில் தேவை' என்று அவர் கூறினார்" என்றார்.

"**ஆம், கேஷவ் கூறுவது சரிதான்**" என்றார் பாபா. "**ஏன் நீங்கள் எழுதக்கூடாது?**"

பாவ் கல்சூரி மன்றாடினார், "எனக்கு இந்த எழுத்து வேலை அலுத்து விட்டது. இவ்வளவு பெரிய வேலைக்கு இந்த நாட்களில் நேரமும் இல்லை. தயவுசெய்து, இனி வேண்டாம்!"

தற்போதைக்கு பாபா, இதற்கு மேலும் எதுவும் பேசவில்லை, அந்த விஷயம் அப்போது கைவிடப்பட்டது.

பாபாவின் முன்னாள் இரவு கண்காணிப்பாளர் கிருஷ்ணா நாயர் எதிர்பாராத விதமாக அஹமதுநகருக்கு வந்து, ஆதியை சந்தித்தார். அவர்

பாபாவைப் பார்க்க விரும்பினார், ஆனால் தற்போது பாபா, யார் ஒருவரையும் பார்க்கவில்லை என்று ஆதி அவருக்குத் தெரிவித்தார். கிருஷ்ணா முயற்சி செய்ய முடிவு செய்து, மெஹராஸாத்திற்குப் பேருந்தில் பயணம் செய்து மதியம் 2:00 மணிக்கு வந்து சேர்ந்தார். வாயிலில் கண்காணித்துக் கொண்டிருந்த புக்கார், முதலில் அவரை அடையாளம் கண்டுகொள்ளாமல் அவர் கிருஷ்ணாவை வெளியேறச் சொன்னார், ஆனால் கிருஷ்ணா அவர் வந்திருப்பதை பாபாவிற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். அறிவிக்கப்பட்டதும், பாபா அவரை அறைக்குள் அழைத்து கிருஷ்ணாவிடம், "**ஏன் வந்தீர்கள்?**" என வினவினார்.

"நான் உங்களைப் பார்க்க விரும்பினேன். நான் விரும்பும் போதெல்லாம் உங்களைப் பார்க்க எனக்கு அனுமதி வழங்கியுள்ளீர்கள்."

**"நீங்கள் என்னைப் பார்த்துவிட்டீர்கள், இப்போது போகலாம், ஆனால் நீங்கள் எப்போது மீண்டும் வருவீர்கள்?"**

"நீங்கள் எப்போது அழைத்தாலும் நான் வரலாம்" என்று கிருஷ்ணா பதிலளித்தார்.

பாபா, "**இல்லை, நீங்கள் நீண்ட நாட்கள் என்னைப் பார்க்க மாட்டீர்கள். இப்போது அனைத்தும் முடிந்துவிட்டது. நேராக மும்பைக்குத் திரும்பிச் செல்லுங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார். கிருஷ்ணா மும்பைக்குத் திரும்பிச் சென்றார். 'நீண்ட, நெடிய நேரம்' என்பதன் பொருள் என்ன என்பதை அவர் பின்னர் உணர்ந்தார், ஏனெனில் இதுவே கிருஷ்ணா நாயர், பாபாவை அவரது பௌதீக உடலில் இறுதியாக சந்தித்தது.

1968 அக்டோபர் 13 ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணிக்கு, பாபா அவரது முக்கிய சேவகர்களுக்கு அடுத்த ஆண்டு 1969 ஏப்ரல் 10 முதல் ஜூன் 10 வரை, குருபிரசாத்தில் தரிசனம் வழங்குவதற்கான தனது முடிவைத் தெரிவிக்க ஒரு கூட்டத்தை நடத்தினார். பாபாவுடன் தங்கியிருந்த ஆண் மண்டலியைத் தவிர, பின்வரும் ஆண்கள் மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர்:

மெஹராபாத்: பாதிரி

அஹமதுநகர்: ஆதி, ஃபெராம், டாக்டர் டான், பகீரத், ரங்கோலே, சகன், கில்னானி, டாக்கே, ருஸ்தம் காக்கா மற்றும் மானேக்.

பூனா: சதாஷிவ் பாட்டீல், ஜால்பாய், பெஹராம், மெஹர்ஜி, பவ்ஸார், தாதி கேரவாலா, சுபாஷ் போக்ளே, ராமகிருஷ்ணன், ஸோமன், மதுசூதன், காம்ப்ளே, ஷங்கர் ராவ் டோய்ஃபோடே மற்றும் மெஹர்வான் ஜெஸவாலா.

ஆந்திரா: குடும்ப சாஸ்திரி மற்றும் சுவாமி சத்யபிரகாஷ்.

நவ்ஸாரி: ஹோஷங் பரூச்சா.

மும்பை: ஸொராப்ஜி ஸிகன்போரியா மற்றும் கிஷின்சந்த் கஜ்வானி.

டெல்லி: அமர் ஸிங் ஸைகல்.

ஹமிர்பூர்: கேஷவ் நிகம் மற்றும் புக்கார்.

குழு மண்டபத்திற்குள் நுழைவதற்கு முன்னர், எரச் பின்வரும் அறிவுரைகளை அனைவருக்கும் அறிவித்தார்: “நீங்கள் அனைவரும் அவரை தலை வணங்க வேண்டாம் என்று பாபா விரும்புகிறார்; அவர் யார் ஒருவருக்கும் தனிப்பட்ட நேர்காணலை வழங்க மாட்டார்; அவர் மலர் மாலைகளையோ வெகுமதிகளையோ ஏற்க மாட்டார். நீங்கள் உள்ளே சென்று அமருங்கள், ஆனால் சிவப்பு கம்பளத்தின் மீது அல்ல (பாபாவின் முன்னால், அனைவரும் பாபாவின் இருக்கையிலிருந்து குறைந்தது ஐந்து அடி தூரத்தில் அமர வேண்டும்).”

டாக்டர் ஹோஷங் பரூச்சா உள்ளே சென்றபோது, பாபா அவரிடம், “**நான் எப்படி இருக்கிறேன்?**” என்று கேட்டார். டாக்டர் பரூச்சா, பாபாவின் உடல் எடை குறைந்துவிட்டதாக உணர்ந்தார், மேலும் அவரது முகத் தோற்றத்திலிருந்து பாபாவின் பணியின் சிரமம் தெளிவாகத் தெரிந்தது.

பிற அன்பர்கள் அனைவரும் உள்ளே நுழைந்ததும், பாபா அவர்களை அமரும்படி சைகையால் தெரிவித்தார். அவர் கேலி செய்தார், “**எனது உடல் எடை குறையும் அதே வேளையில் நீங்கள் அனைவரும் நல்ல உடல் நலத்துடன் இருக்கிறீர்கள்! புக்காரைப் பாருங்கள், அவர் வெடித்துவிடும் நிலையில் இருப்பது போலத் தெரிகிறது!**”

அன்பர்களின் உடல் ஆரோக்கியம் குறித்து விசாரித்த பின்பு, பாபா தொடங்கினார்:

**இப்போது காலை 8:30 மணி. இந்த சந்திப்பை 10:30 மணிக்குள் நிறைவுசெய்ய வேண்டும். எரச் வாசிக்கும் அனைத்தையும் கவனமாகக் கேளுங்கள், பின்னர் அவற்றைப் பற்றி விவாதிக்கலாம். குறிப்புகளை எடுக்க உங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. என்னிடமிருந்து நீங்கள் கேட்கும் அனைத்தையும் பிறருக்கு எடுத்துக்கூற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; ஆனால் இன்றைய சந்திப்பைக் குறித்து யார் ஒருவரும் மேற்கத்திய அன்பர்களுக்கு எழுதக்கூடாது. இன்றைய உரையாடல் ஆங்கிலத்தில் இருக்கும். இங்கு என்னுடன் இருக்கும் இரண்டு நபர்களின் நன்மைக்காக அதை மொழிபெயர்த்து நேரத்தை வீணடிக்க மாட்டோம்; அவர்களில் ஒருவருக்கு (காம்ப்ளே) சற்று ஆங்கிலம் புரியும், மற்றொருவருக்கு (சதாஷிவ் பாட்டீல்) காது கேட்பது கடினமாதலால், எரச்**

**ஆங்கிலம் அல்லது மராட்டியில் பேசினாலும் அவரைப் பொறுத்தவரை எந்த வித்தியாசமும் இருக்காது.**

இந்த சந்திப்பின் நோக்கத்தை விளக்கி, பாபா தொடர்ந்தார்:

**முதலில், நான் ஏகாந்தவாசம் கடைப்பிடித்த கடந்த பதினெட்டு மாதங்களில் நான் செய்த பணிகளைப் பற்றி விளக்குகிறேன். ஏகாந்தவாசத்தில் எனது தீவிரமான பணி காலம் நிறைவடைந்த பின்னரும், என்னைப் பார்க்க என் அன்பர்களை நான் இன்னும் ஏன் அனுமதிக்கவில்லை என்று எல்லா இடங்களிலும் வாழும் மக்களும் என் அன்பர்களும் ஆச்சரியப்படுகின்றனர் என்பதில் சந்தேகமில்லை.**

**அந்தப் பதினெட்டு மாத கால உழைப்பால் ஏற்பட்ட சிரமம் அளப்பரியது. நான் ஒவ்வொரு நாளும் பல மணிநேரம் எனது அறையில் தனியாக அமர்ந்திருந்தேன், அதே நேரத்தில் மண்டலி முழு அமைதி கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம், மேலும் அந்த நேரத்தில் அவர்களில் எவரும் அறைக்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை. நான் அனைத்து ஆன்மீக உணர்வுத் தளங்களிலும் பணிபுரிந்தேன்; இந்த சிரமம் நான் மேற்கொண்ட பணியினால் அல்ல; ஆனால் பௌதீகத் தளத்துடன் எனது தொடர்பு துண்டிக்கப்படாமல் பாதுகாப்பதில் ஏற்பட்ட சிரமம். இந்த இணைப்பைத் தக்கவைக்க நான் தொடர்ந்து எனது வலது தொடையில் கை முட்டியால் அறைய வேண்டியிருந்தது.**

பாபா தனது வலது தொடையில் பல முறை முட்டியால் அறைந்து குழுவிற்கு இதை நடைமுறையில் காட்டினார், மேலும் அவர்கள் ஒவ்வொரு முறையும் அது பலத்த சத்தம் எழுப்புவதைக் கேட்க முடிந்தது.

**மணிக்கணக்காக இது தொடர்ந்ததால், நான் உடல் ரீதியாக சோர்வடைந்தேன், அடுத்த நாள் மீண்டும் பணியைத் தொடங்குவதற்கான வலிமையை மீட்டெடுக்க, அந்த நாள் எஞ்சிய நேரம் முழுவதும் ஓய்வெடுக்க வேண்டியதாயிற்று..**

**இப்போது என் உடல்நிலை சற்று நன்றாக இருப்பதால், என் அன்பர்கள் என்னிடம் வர வேண்டும் என்ற ஏக்கத்தை உடனடியாக நிறைவேற்ற விரும்புகிறேன் - அவர்களில் பலர் என்னை முதல் முறையாகப் பார்ப்பார்கள் - உடல் அழுத்தத்தின் அனைத்து சுவடுகளும் மறைவதற்கு இன்னும் சிறிது காலம் பிடிக்கும். அவர்கள் அனைவரையும் பார்க்க நான் 100 சதவீதம் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். எனவே, இதையும் நடைமுறை சூழலையும் கருத்தில்கொண்டு, எனது தரிசனத்தை என்**

**அன்பர்களுக்கு மட்டுமே வழங்க முடிவு செய்துள்ளேன், பொதுமக்களுக்கு அல்ல.**

**இது என் அன்பர்களுக்கான நேரம். நான் எனது மௌனத்தைக் கலைத்து, தெய்வீகத்தை வெளிப்படுத்தும் அந்த நேரத்தில், உலக மக்கள் திரள்திரளாக என்னிடம் வருவார்கள்.**

**இந்த மக்கள் கூட்டம், 1962 கிழக்கு-மேற்கு சகவாசத்தில் பங்கெடுத்த கூட்டத்துடன் ஒப்பிடுகையில் மிகப்பெரிது. ஏனெனில் நான் ஏகாந்தவாசத்தில் தீவிரமாகப் பணிபுரிந்து கொண்டிருந்த வேளையில், உலகெங்கிலும் வாழும் எனது சேவகர்களும், அன்பர்களும் என்னைப் பற்றி உலகிற்கு எடுத்துக் கூறுவதில் தீவிரமாக இருந்தனர், மேலும் எனது செய்தி இப்போது, பலத்த காற்றுக்கு முன் பரவும் காட்டுத் தீ போல், இந்தியாவில் நிகழ்ந்ததைப் போலவே, மேற்கத்திய நாடுகளில் பல இடங்களில் பரவி வருகிறது.**

**தினமும் காலை இரண்டு மணி நேரமும், மதியம் இரண்டு மணி நேரமும் சிறிய எண்ணிக்கையிலான 500 பேருக்கு ஒரே நேரத்தில் தரிசனம் வழங்குவேன்; ஆனால் நான் என் அன்பர்களைத் தனித்தனியாக பார்க்கவோ அல்லது அவர்களுக்குத் தனிப்பட்ட நேர்காணல் வழங்கவோ மாட்டேன், ஏனெனில் அது சாத்தியமல்ல. இது நான் பேரம் பேசுவது போல் இணக்கம் தெரிவிப்பதன் ஒரு பகுதி. அன்பர்கள் பூனாவிற்கு எப்படி வந்து, எங்குத் தங்குவார்கள் என்பது தரிசனத்திற்காக வரும் ஒவ்வொருவரின் திட்டமாக இருக்கும்.**

பாபா பின்னர் இந்தியாவில் சில அன்பர்கள் செய்த பணியைப் பாராட்டினார். அவர்களில் அமர் ஸிங் ஸைகல் தனித்துவமான இடத்தைப் பெற்றார்.

**அமர் ஸிங் என்னை மிகவும் நேசிக்கிறார். நான் கடவுள் என்பதில் அவருக்கு என் மீது உறுதியான நம்பிக்கை உள்ளது. பாபா அவதார புருஷர் என்று அவர் பலரிடம் கூறுகிறார். அவர் செல்வந்தர்கள் மற்றும் ஏழைகள், கல்வியறிவு மற்றும் கல்வியறிவற்றவர்கள், அரசாங்க அமைச்சர்கள் ஆகியோருடன் தொடர்பு கொள்கிறார், மேலும் பாபா மனித உருவில் வருகை தந்த கடவுள் என்று அனைவருக்கும் கூறுகிறார்.**

**மும்பையில், கஜ்வானி, ஸிகன்போரியா போன்றவர்கள் மக்களிடம் இதையே சொல்கிறார்கள். பூனாவைச் சேர்ந்த அன்பர்களின் பணி 100 சதவீதம் திருப்திகரமாக உள்ளது. முன்பெல்லாம் ஸோமன் என் அன்பில் மந்தமாக இருந்தார், ஆனால் இப்போது அவர் நெருப்பில் எரிகிறார்!**

புக்கார், கேஷவ் இருவரும் உத்தரபிரதேசத்தில் மகத்தான பணிகளை செய்துள்ளனர். புக்கார் எப்பொழுதும் பயணம் செய்து, ஊர் ஊராக, கிராமம், கிராமமாக நடந்து சென்று எனது பெயரைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்.

ஆந்திராவில் குடும்ப சாஸ்திரி, சுவாமி சத்யபிரகாஷ், ரமணய்யா, ராமமோகன ராவ் தவிர, எனது லட்சியத்தில் பணிபுரிபவர்கள் ஏராளம் உள்ளனர்.

கொல்கத்தா, ஜபல்பூர், நாக்பூர் மற்றும் பல இடங்களில் அமைந்த மையங்களும் பெரிய அளவில் பணியில் ஈடுபடுகின்றன, இருப்பினும் இந்த மையங்களிலிருந்து சேவகர்கள் இன்று இங்கு அழைக்கப்படவில்லை.

பதினெட்டு மாதங்களாக நான் ஏகாந்தவாசம் மேற்கொண்ட இந்த நாட்களில், மக்கள் எனது சேவகர்களிடம் இவ்வாறு கேட்டது உண்டு: "நீங்கள் இந்த அளவுக்குப் பெருமையாக பேசும் இறை-மனிதர் எங்கே? எப்போது அவரைப் பார்க்க அனுமதிப்பார்?"

இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க முயற்சித்து நீங்கள் துன்புறுத்தப்பட்டிருக்க வேண்டும். நான் இப்போது பூனாவில் தரிசனம் வழங்க முடிவு செய்துள்ளேன், ஆனால் என்னைப் பார்க்க வரும் பெரும் கூட்டத்தை என் உடல் சமாளிக்கும் வகையில் நான் அனுபவித்த உடல் உளைச்சலிலிருந்து சிறிது நேரம் மீண்டு வர விரும்புகிறேன். எனது மௌனத்தை கலைப்பதும், எனது பொது வெளிப்பாடும் பின்பு நிகழும்.

அஹமதுநகரில் தரிசனம் வழங்க நினைத்தாலும் அது முடியாது; அங்கு ஹோட்டல்கள் அல்லது தர்மசாலைகள் எதுவும் இல்லை. பூனாவிலும் அனைவரின் தேவைகளையும் பூர்த்தி செய்வது கடினமாக இருக்கும், ஆனால் நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து முயற்சி செய்து அதை சாத்தியமாக்குங்கள்.

நான் எனது மௌனத்தைக் கலைத்து, யுகத்தின் அவதார புருஷராக வெளிப்பட்ட பிறகு, தரிசன நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகள் தேவையில்லை, ஏனெனில் அனைவரும் என்னை உள்ளூர அறிந்து உணர்வார்கள். பிறகு நான் இடம் விட்டு இடம் பயணம் செய்ய வேண்டியதில்லை.

எனது முந்தைய வருகைக் காலங்களில் நான் பௌதீக உடலை கைவிட்ட பின்னரே மக்கள் என்னை வழிபட்டு வணங்கினர். இந்த நேரத்தில், நான் இந்த உடலில் இருக்கும்போதே, அவதார புருஷருக்கு உலகளவில் அங்கீகாரம் கிடைக்கும். கடந்த காலத்தை விட அன்பர்களின் எண்ணிக்கை பத்து மடங்கு அதிகமாக இருக்கும் என்பதால், வரும் தரிசனத்தின் போது பூனாவில் சிரமங்கள் அதிகமாக இருக்கும்.

அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியாவில் வாழும் தமது சேவகர்களை பாபா அன்புடன் நினைவு கூர்ந்தார், **பாபாவின் பணி, கிழக்கில் மட்டுமே செய்யப்பட்டது என்ற தோற்றத்தை வழங்கும் இந்த சந்திப்பின் அறிக்கையைப் படிக்கும் போது, அவர்கள் ஏமாற்றமடைவார்கள்** என்று அவர் கருத்துத் தெரிவித்தார். அவர் சற்று நகைச்சுவை கலந்த தொனியில் கூறினார்:

**மேற்கத்திய நாடுகளில் பாபா-பணி காட்டுத் தீயாகப் பரவுகிறது! மாணவர்களும் மற்றும் பலரும் 'பாபாவை எதிர்பார்த்த இறை மனிதர்'** (BABA AS THE EXPECTED ONE) **என அங்கீகரிப்பதைப் பற்றிய செய்திகள் ஏறக்குறைய தினமும் வந்துகொண்டே இருக்கின்றன.**

**இப்போதெல்லாம் கல்லூரிகளில் மாணவர்களின் கலவரம் சகஜமாக நடந்து வருகிறது. அதேபோல் எனது பெயரும் மாணவர்களிடையே அன்பின் கலவரத்தை ஏற்படுத்துகிறது. பல சேவகர்கள் எனது அன்பின் கதவைத் தட்டுவதற்கு முன்பே, கதவு திறப்பதை அனுபவிக்கிறார்கள். மேற்கத்திய நாடுகளில் வாழும் சேவகர்கள் என்னைப் பற்றிய உரையை வழங்குவதற்காக வானொலி, தொலைக்காட்சி மற்றும் பிற நிகழ்ச்சிகளில் தோன்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றனர்.**

1969 ஏப்ரலில் வழங்கப்படும் தரிசனத்தைப் பற்றி பாபா விளக்கினார்:

**நான் தரிசனம் வழங்க ஆரம்பித்த பின்னர், அது இரண்டு மாதங்கள் எடுத்தாலும், ஒவ்வொரு நாளும் காலையில் இரண்டு மணி நேரம் மேற்கத்திய அன்பர்களுக்கும், பிற்பகல் கிழக்கத்திய அன்பர்களுக்கு இரண்டு மணிநேரமும் தரிசனம் வழங்குவதற்கு நான் பொறுப்பாவேன். தரிசனத்திற்கான ஏற்பாடுகள் குறித்த பொறுப்பை, சேவகர்களாகிய உங்களிடமே முழுவதுமாக விட்டுவிடுகிறேன்; ஆனால் தரிசனத்திற்கு வருபவர்கள் தொடர்பாக வெவ்வேறு பாபா மையங்களுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பும், ஒருங்கிணைப்பும் மிகவும் இன்றியமையாதது.**

**மேற்கத்திய அன்பர்கள் என்னை அமெரிக்காவிற்கு அழைத்தனர், ஆனால் நான் அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. கலிஃபோர்னியா மாகாணத்தில், கல்லூரி வளாகங்களில் மெஹர் பாபா குழுமங்கள்'** (MEHER BABA LEAGUES) **தொடங்கப்பட்டு, அவர்களும் மெஹர் பாபா கடவுள் என்று பொதுமக்களிடம் கூறி வருகின்றனர். எனவே, தரிசனத்திற்காக மேற்கத்திய நாடுகளிலிருந்து ஏராளமான அன்பர்கள் வருவார்கள்.**

அறையின் ஓர் ஓரத்தில் நாற்காலியில் அமர்ந்திருந்த கேஷவ் நிகமிடம் திடீரெனத் திரும்பிய பாபா, **"கேஷவ் எனக்காக அதிகம் உழைத்திருக்கிறார், இப்போது வலது கையில் 'நடுக்குவாதம்' நோயால்** (PARKINSON'S DISEASE)

**அவதிப்படுகிறார். அது குணப்படுத்த முடியாதது**" என்று கூறினார். ஆனால் பாபா அவரிடம், "**மருத்துவ சிகிச்சை உங்களுக்கு நிவாரணம் தரவில்லை, ஆனால் ஒரு நாள் என் அருள் உங்களை நோயிலிருந்து விடுவிக்கும்**" என்று உறுதியளித்தார்.

பாபா அவருக்கு முன்னால் அமர்ந்திருந்தவர்களை நோக்கி கைகளை விரித்து, "**அவரது கைகளையும் எனது கைகளைப் போல மீண்டும் ஆரோக்கியமாக்குவேன்**" என்றார்.

பாபா தொடர்ந்து கூறினார்:

**1962 மற்றும் 1965 சகவாசக் கூட்டங்களில், பெரிய மேற்கவிகைகள் கட்டப்பட்டன. பூனா மற்றும் பிற மையங்களிலிருந்து நிதி உதவி கேட்க வேண்டியிருந்தது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் தரிசன நிகழ்ச்சியின் போது, அனைத்து அன்பர்களையும் மேற்கவிகையின் கீழ் அமர வைக்க முடியாது. நிகழ்ச்சிக்காக அன்பர்களிடம் நன்கொடை வழங்குமாறு நான் கேட்கப் போவதில்லை. எல்லாவற்றையும் நீங்களே ஏற்பாடு செய்யவேண்டும்.**

டாக்டர் பரூச்சாவை நோக்கி, பாபா குறிப்பிட்டார், "**எனது பௌதீக உடலுடனான தொடர்பை தக்கவைப்பது எனக்கு மிகவும் சிரமமானது. ஏற்கனவே காயம்பட்ட எனது காலுக்கு, எனது தொடைகளை கை முட்டிகளால் அறைவது நல்லதல்ல என்று கோஹெர் என்னிடம் கூறினார், ஆனால் அதுதான் ஒரே வழி. இப்போது எனது பணியும் ஏகாந்தவாசமும் முடிவடைந்த பின்பும், சில சமயங்களில் எனது கால்களில் நடுக்கம்** (தசைப் பிடிப்பு) **ஏற்படுகிறது, நாளடைவில் அது சீராகிவிடும். ஆனால் நான் கடவுள் என்பதை மறந்துவிடாதீர்கள்.**"

வானொலி மற்றும் தொலைக்காட்சியில் உரை வழங்குவதில் மிகவும் மும்முரமாக இருந்த ஆஸ்திரேலியாவின் பில் லே பாஜ் (BILL LE PAGE) பற்றி பாபா குறிப்பிட்டார். "**சுருக்கமாகச் சொன்னால், மக்கள் கூட்டம் பயங்கரமாக இருக்கும். ஓரிரு மாதங்கள் தரிசனம் வழங்க வேண்டியது வரும்.**"

மேலும், "**இன்று நான் யார் ஒருவரையும் அரவணைக்க மாட்டேன், ஏனெனில் இங்கு இருப்பவர்கள் அனைவரும் இந்த முக்கியமான கூட்டத்திற்காக வந்துள்ளனர், எனது தரிசனத்திற்காக அல்ல. இன்று மெஹர்ஜியின் பிறந்தநாளாக இருந்தபோதிலும், நான் அவரைத் தழுவவில்லை. கடந்த பதினெட்டு மாதங்களில், குருபிரசாத்திலும் கூட, என்னைப் பார்க்க யார் ஒருவரும் அழைக்கப்படவில்லை.**"

திடீரென பாபா, **“என்னைப் பார்த்ததில் நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?”** என்று கேட்டதும், அனைவரும் உற்சாகத்துடன் ‘ஆமாம்’ என்று பதிலளித்தனர்.

பாபா அவர்களிடம் கேட்டார், **“டாக்டர் அலன் கோஹெனைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அலன் ஒரு கடுமையான உழைப்பாளி. அவர் கலிஃபோர்னியா மாகாணத்தில் அமைந்த ஜான் எஃப். கென்னடி பல்கலைக்கழகத்தில் உளவியல் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். அவர் என்னைப் பற்றிய உரை நிகழ்த்த இங்கிலாந்திற்குச் சென்றுள்ளார். அவர் இன்னும் என்னை சந்திக்கவில்லை.”**

வாழ்க்கைச் சுற்றறிக்கை எண். 70இன் (பின்னர் 1968 நவம்பர் 1 அன்று வெளியிடப்பட்டது) உள்ளடக்கத்தைப் படிக்குமாறு எரச்சிடம் பாபா கேட்டுக்கொண்டார்.

**கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் வாழும் அவதார் மெஹர் பாபாவின் அனைத்து அன்பர்களும், ‘எப்போதேனும், எங்கேயேனும், எப்படியேனும்’ தரிசனம் வழங்குவது குறித்து, அவரிடமிருந்து வரும் அறிவிப்பை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.**

**“அவதார் மெஹர் பாபா இப்போது அவரது அன்பர்களுக்கு தரிசனம் வழங்குவதாக அறிவிக்கிறார், ‘ஆனால்’ இந்த சுற்றறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளின்படி மட்டுமே.”**

**சுற்றறிக்கையில் தரிசனத்திற்கான நிபந்தனைகள் அனைத்தும் பட்டியலிடப்பட்டிருந்தன. ‘தரிசனமானது பழைய மற்றும் புதிய, கிழக்கு மற்றும் மேற்கத்திய அன்பர்களுக்குக் கண்டிப்பாக வழங்கப்படும் என்றும், வெகு ஜனங்களுக்கான திறந்த, பொது தரிசனமாக இராது’ என்றும் பாபா மீண்டும் மீண்டும் கூறினார். “நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, மக்கள் திரள்திரளாக என்னிடம் வருவார்கள். இந்த அறிவுறுத்தலை நீங்கள் கடைப்பிடிக்கத் தவறினால், என்னுடன் நீங்கள் அதிக நேரம் இருக்க முடியாமல், வாய்ப்பை இழந்தவர் ஆகிவிடுவீர்கள்.”**

**பாபா மீண்டும் காலையில் மேற்கத்திய அன்பர்களையும், பிற்பகலில் கிழக்கத்திய அன்பர்களையும் தனித்தனியாகப் பார்ப்பதாகக் கூறினார். ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்து வரும் அன்பர்கள் பூனாவில் ஒரு வாரத்திற்கு மேல் தங்கக் கூடாது என்றும், அந்த ஒரு வாரத்தில் பாபா நான்கு முறை மட்டுமே அவர்களைப் பார்ப்பார் என்றும் கூறினார்.**

**பாகிஸ்தான், ஈரான் மற்றும் ஆ·ப்ரிக்காவிலிருந்து வரும் அன்பர்கள் நான்கு நாட்களுக்கு மேல் தங்க வேண்டாம், பாபா அவர்களை இரண்டு முறை பார்ப்பார். இந்தியாவிலிருந்து வருபவர்கள் பூனாவில் மூன்று நாட்களுக்கு மேல் தங்கக்கூடாது, பாபா அவர்களை ஒருமுறைதான் பார்ப்பார் என்று அறிவுறுத்தப்பட்டது. பூனாவில் வாழ்பவர்கள் பாபாவை தரிசன காலத்தில் ஒருமுறை மட்டுமே பார்க்க அனுமதிக்கப்பட்டனர்.**

**ஒரே நேரத்தில் குறைந்த எண்ணிக்கையிலான நபர்களுக்கு மட்டுமே குருபிரசாத் பிரதான மண்டபத்தில் இடம் போதுமானதாக இருக்கும் என்பதால், கிழக்கு மற்றும் மேற்கத்திய அன்பர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் வருவதற்கான தேதிகள் நிர்ணயிக்கப்பட்டன. இது குறித்து பல விஷயங்கள் விவாதிக்கப்பட்டன; மேலும் சில வட்டாரங்களுக்கு தரிசனத்திற்கான தேதிகள் நீட்டிக்கப்பட்டன. பாபா உறுதியாகக் கூறினார்: "ஒவ்வொருவருக்கும் திட்டமிடப்பட்ட நாளில் தரிசனத்திற்கான வாய்ப்பைப் பயன்படுத்த முடியாத அன்பர்கள், அவர்கள் இல்லாததற்கு காரணம் எதுவாக இருந்தாலும், தரிசனத்தை அடையப் பெற மாட்டார்கள்."**

இவ்வாறு சுற்றறிக்கை நிறைவுற்றது:

**பாபாவின் தரிசனத்திற்காக பூனாவிற்கு வர விரும்புபவர்களும், வர முடியாதவர்களும் மனச்சஞ்சலமோ, வருத்தமோ அடையாமல், 'எப்போதேனும், எங்கேயேனும், எப்படியேனும்' அவரது தரிசனம் அவர்களுக்கும் நிச்சயம் கிடைக்கும் என்பதை அறிந்து, தம் அன்பில் இணைந்திருக்க வேண்டும் என்று பாபா கூறுகிறார்.**

**கடிதப் பரிமாற்றத்தின் மீதான தற்போதைய கட்டுப்பாடு இப்போது இருப்பதைப் போலவே, மேலும் தொடரவும், கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் பாபா விரும்புகிறார்.**

**பூனாவில் ஹோட்டல்களுக்கான முன்பதிவுகளில் மேற்கத்திய அன்பர்களுக்கு உதவுவதற்காக மெஹர்ஜி நியமிக்கப்பட்டார்; அதே சமயம் தேவைப்பட்டால், குருபிரசாத் வந்து செல்ல, போக்குவரத்து உட்பட பொதுவாக அவர்களுக்கு உதவ, ஜால்பாய் பொறுப்பேற்றார். பாபாவின் இளமைப் பருவம் மற்றும் ஆரம்பகால பணிகள் தொடர்பான இடங்களைச் சுற்றிப் பார்க்க அவர்களுக்கு வழிகாட்டவும் ஜால்பாய் உதவியாக இருப்பார்.**

மீண்டும் ஹோஷங் பரூச்சாவை நோக்கி, பாபா அவரிடம், **"இப்போது என்ன நேரம்?"** என வினவினார்.

"காலை 10:40 மணி," ஹோஷங் பதிலளித்தார்.

பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **"நான் சொல்லிக்கொண்டே வருகிறேன்: 'நேரம் நெருங்கிவிட்டது, அது விரைவில் நெருங்குகிறது, அது கைகளுக்கு எட்டும் தூரத்தில் இப்போது உள்ளது. இன்று, நான் சொல்கிறேன்: 'நேரம் வந்துவிட்டது.' இதை நினைவில் கொள்ளுங்கள்!"**

பின்னர் அவர் முழுக் குழுவையும் தாமதமின்றி புறப்படுமாறு அறிவுறுத்தினார். அவர்கள் மண்டலி மண்டபத்தை விட்டு வெளியேறிய பின்பு, காலந்தாழ்த்தாமல் உடனடியாக மெஹராஸாத்திலிருந்து செல்லுமாறு அவர் பல முறை கூறி அனுப்பினார். அன்றைய தினம் மெஹர்ஜியின் பிறந்தநாள் என்பதால், பாபா அவரது முடிவை மாற்றி, அவரைத் தனியாக முன் வந்து கையை முத்தமிட அனுமதித்தார்.

பாபா விரும்பிய கஸல்களில் ஒன்றான **'அல்லா ஹு'** (GOD IS, கடவுள் உளதாயிருக்கிறார்) கஸலின் இசைப் பதிவை பாபா கேட்க வேண்டும் என்று கஜ்வானி விரும்பினார். ஆனால் பாபா, **"இப்போது நேரம் இல்லை"** என்று பதிலளித்தார்.

அனைவரும் வெளியேறிய பிறகு கஜ்வானி, மண்டபத்தில் அமர்ந்து பாபாவைப் பார்த்தார். காலை 10:45 மணிக்கு பாபா தமது அறைக்குச் சென்றபோது, கஜ்வானி மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

மூன்று நாட்களுக்குப் பின்னர், 1968 அக்டோபர் 16, அன்று, பாபாவின் சித்திரத்திற்கு முன்பாக அதிகாலை பிரார்த்தனை மற்றும் வழிபாட்டுக்குப் பிறகு, திடீரென மாரடைப்பால் கஜ்வானி தனது இல்லத்தில் காலமானார். பாபா, கஜ்வானி குடும்பத்தினருக்கு தொலைத்தந்தி மூலம் இந்த ஆறுதல் செய்தியை அனுப்பினார்.

**எனது குழந்தை கிஷின்சந்த் கஜ்வானி, எனது தெய்வீக பேரின்பத்தில் நித்திய ஓய்விற்காக என்னிடம் வருவதற்கு சற்று முன்னர், என்னை உடல் ரீதியாக பார்க்கும் பாக்கியத்தை அடையப் பெற்றார். என் மீதான அவருடைய ஆழ்ந்த அன்பும், நம்பிக்கையும் அவரது முழுக் குடும்பத்தையும் ஆசீர்வதித்துள்ளது.**

'**கஜ்வானியின் மகன் நரிமன் மற்றும் அவரது குடும்பத்தினர்**, 1000 **ஏழை எளிய மக்களுக்கு தனது தந்தையின் பெயரில் உணவு வழங்கக் கூறுமாறு**' ஆதியிடம் பாபா அறிவுறுத்தினார்.

கூட்டம் நிறைவடைந்த பின்பு, பாபா, சுற்றறிக்கை வெளியிடுவதைத் தடுக்க, எரச் தன்னால் இயன்றவரை முயன்றார், ஏனெனில் பாபாவின் ஆபத்தான, நிச்சயமற்ற உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, தரிசனம்

வழங்குவது சாத்தியமில்லை என்று அவர் உணர்ந்தார். ஆனால் பாபா பிடிவாதமாக இருந்து, "**நான் தரிசனம் வழங்குவேன்; அவர்கள் வர வேண்டும். அதை அனுப்புங்கள்**" என்று பதிலளித்தார். எரச் கீழ்ப்படிந்தார்.

சுற்றறிக்கையின் நகல் தட்டச்சு செய்து அச்சிடுவதற்காக, ஆதியின் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. அது அன்பர்களுக்கு அஞ்சல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பல தொலைத்தந்திகளும் கடிதங்களும் வரத் தொடங்கின, பாபா அதற்கான பதில்களை எடுத்துரைத்தார். அடுத்த கோடையில் நடைபெறவிருக்கும் '**மஹா தரிசனம்**' (THE GREAT DARSHAN) என்ற தலைப்பை அவ்வப்போது சுட்டிக்காட்டினார். ஒரு நாள், "**மார்ச் மாதம், நீங்கள் அனைவரும் பூனாவிற்கு** (MARCH) **அணிவகுத்துச் செல்லுங்கள்**" என்று நகைச்சுவையாகக் கூறினார்.

ஒரு சந்தர்ப்பத்தில் எரச் கெஞ்சினார், "பாபா, ஏன் தினமும் தரிசனம் வழங்கக்கூடாது? அவ்வாறு வழங்குவதானால், அந்த வெறித்தனமான நெரிசல் அல்லது சூழ்நிலை நம் அனைவரையும் மிகவும் ஒடுக்கக்கூடியதாக இருக்காது; இயற்கையாகவே அது உங்களை சோர்வடையவும் செய்யாது. ஆயிரக்கணக்கான மக்கள் வருவார்கள், தாய்மார்கள் சிறிய குழந்தைகளை கைகளில் ஏந்திக்கொண்டு, அன்பளிப்பாக பழங்களையும் சுமந்த வண்ணம், இறுதியில் அவர்கள் உங்களை வந்தடையும் நேரத்தில் அவை கெட்டுப்போய்விடும்; கடுமையான வெயிலில் மணிக்கணக்கில் வரிசையில் நிற்க வேண்டும், மேலும் அவர்கள் இரவில் எங்கு தங்குவார்கள், எப்படி இருப்பார்கள் என்று நீங்கள் கவலைப்படுவீர்கள்; அவர்கள் இரவை எப்படிக் கழிக்கிறார்கள், அவர்கள் எப்படி வீடு திரும்புவார்கள், ரயிலில் இருக்கைகள் கிடைக்குமா? என்ற எண்ணத்தில் ஆழ்ந்து விடுவீர்கள். இவை அனைத்தும் எதற்கு?

"ஏன் தினமும் தரிசனம் வழங்கக்கூடாது? ஒவ்வொரு நாளும் தரிசனம் வழங்கும் நேரத்தை நிர்ணயம் செய்வோம், அவர்களின் தங்குமிடத்தைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அவர்கள் ஒவ்வொரு நாளும் வரட்டும். அது மிகவும் எளிதாக இருக்கும்" என்று எரச் கூறி முடித்தார்.

அதற்கு பாபா, "**அந்த நேரமும் வரும். இப்போது இல்லை, பூனாவிலிருந்து திரும்பி வந்த பிறகு, தினமும் தரிசனம் நிகழும், ஆனால் நாம் திரும்பி வந்த பிறகுதான்**" என்று பதிலளித்தார்.

அப்போது மண்டபத்தில் இந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த மணி, 'தினமும் தரிசனம்' என்று அறிவிக்கும் முற்றிலும் புதிய சுற்றறிக்கை ஒன்றை அவர் கற்பனை செய்தார்; பின்பு, பாபாவின் உடல்நிலை காரணங்களுக்காக, தரிசனம் ரத்து செய்யப்பட்டதாகத் தெரிவிக்கும் மற்றுமொரு

சுற்றறிக்கை. ஆனால் அவர் இடையே குறுக்கிட்டு “பாபா, நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்று காத்திருந்து பார்த்த பின்பு முடிவு செய்யலாம்” என்று கூறி, திடீர் அறிவிப்புகளை நிறுத்த முயன்றார்.

பாபா அதற்கு செவிமடுத்து, “**தினமும். ஒவ்வொரு நாளும். நான் பூனாவிலிருந்து வரும்போது தினமும் தரிசனம் நிகழும்**” என்று மெதுவாகத் திரும்பத் திரும்பக் கூறினார்.

இந்நேரத்தில், வேறொரு சந்தர்ப்பத்தில் பாபா அவராகவே இவ்வாறு குறிப்பிட்டார், “**உங்கள் அன்பு என்னை உங்கள் இல்லத்திற்கு - உங்கள் சொந்த அறைக்கு அழைத்துச் செல்லும் காலம் வரும். நான் என் அன்பர்களை ஓரிடத்தில் மட்டும் பார்க்காமல், ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான இடங்களில் பார்க்கும் நேரம் வரும். உங்கள் அன்புதான் இதை சாத்தியமாக்கும்.**”

1968 அக்டோபர் 15ஆம் தேதி, இர்வின், எட்வர்ட் லக் (IRWIN & EDWARD LUCK) ஆகியோரின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதமாக, பாபா அவர்களுக்கு அஞ்சல் அட்டை ஒன்றில் இந்தச் செய்தியை ஆதியின் மூலமாக அனுப்பினார்: “**நீங்கள், தூய்மையான அன்புடன் மேலும் மேலும் அவரை நேசிக்க வேண்டும் என்பதைத் தவிர, வேறு எந்த அறிவுறுத்தல்களும் அவரிடம் இல்லை என்பதை, நீங்கள் இருவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்று பாபா விரும்புகிறார்.**” நிகழ்வுகளின் காலப்போக்கில், இதுவே லக் சகோதரர்களுக்கு பாபாவின் இறுதி கடிதப் பரிமாற்றமாக இருந்தது.

குமார் தனது மகள் அம்ரித்துடன், அக்டோபர் 16 அன்று டெஹ்ரா டூனிலிருந்து வந்தபோது, டாக்டர் டான் அவர்களை மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்றார். ஆதி ஜூனியரின் மகன் தாராவுடன் நிகழவிருக்கும் திருமணத்திற்கு முன்பு, பாபாவையும் பெண் மண்டலியையும் சந்திக்க குமார் அம்ரித்தை அழைத்து வந்திருந்தார். மறுநாள் அஹமதுநகர் பதிவாளர் அலுவலகத்திற்கு திருமண சான்றிதழை விண்ணப்பிக்க அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். மெஹராஸாத்தில் நடைபெற இருந்த திருமண தேதியை நிர்ணயம் செய்துவிட்டு, அவர்கள் அக்டோபர் 18ஆம் தேதி புறப்பட்டுச் சென்றனர்.

தத்துவப் பேராசிரியரான டாக்டர் மூர்த்தி, அக்டோபர் 20 ஞாயிற்றுக்கிழமை அன்று மெஹராஸாத்திற்கு வந்தார்; அவர் எந்த அழைப்புமின்றி வந்த போதிலும், பாபா அவரை மண்டபத்தில் சிறிது நேரம் அமர

அனுமதித்தார். அடுத்த நாள், ஜால்பாய் எதிர்வரும் தரிசனத்தின் தேதிகளை மாற்றுவதற்கான திட்டத்துடன் வந்தபோது அது மறுக்கப்பட்டது.

1968 அக்டோபர் 21ஆம் தேதி, துளசிதாஸ் எழுதிய ராமரின் வாழ்க்கையின் புகழ்பெற்ற காவியமான ராமாயணத்தின் நகல் ஒன்றைக் கொண்டுவர ஏற்பாடு செய்யுமாறு, பாபா, பாவ் கல்சூரிக்கு உத்தரவிட்டார். பாபாவிடமிருந்து பொதுவான செய்திகள் அஹமதுநகரில் வாழும் பாவ் கல்சூரியின் குடும்பத்திற்கு தினமும் அனுப்பப்படுவது வழக்கம்; மேலும் புத்தகத்தின் நகல் ஒன்றை விரைவில் அனுப்புமாறு தகவல் தெரிவிக்கப்பட்டது. மறுநாள் மாலை ராமாயணத்தின் பிரதி ஒன்று வந்து சேர்ந்தது; பாவ் கல்சூரியின் இரவு கண்காணிப்பின் போது, பாபா புத்தகத்தை எடுத்து, எதேச்சையாக ஒரு பக்கத்தைத் திறந்து, சில வசனங்களை சத்தமாக வாசிக்குமாறு பாவ் கல்சூரியிடம் கூறினார். அவர் புத்தகத்தின் பல்வேறு பத்திகளைப் படித்த பிறகு, பாபா அவரிடம் அதை மூடுமாறு சைகையால் தெரிவித்து, "**நீங்கள் இதை விட நன்றாக எழுதுவீர்கள்**!" என்று கூறியதும், அதிர்ச்சியடைந்த பாவ் கல்சூரி மீண்டும் பாபாவிடம், குறிப்பாக வரவிருக்கும் தரிசன நிகழ்ச்சிக்காக மேலும் எழுதுமாறு கேட்க வேண்டாம் என்று கெஞ்சினார். மீண்டும் பாபா அந்த விஷயத்தைப் பற்றி எதுவும் கூறாமல் கடந்து சென்றார்.

பாபா அவரது அறையில் ஒவ்வொரு பிற்பகலும் 20 நிமிடங்களுக்குப் பணிபுரிவதைத் தொடர்ந்தார், "**எனது ஏகாந்தவாசப் பணிக்கு இறுதி வடிவம் கொடுக்கும் நோக்கத்தில் இதைச் செய்கிறேன்**" என்று அவர் குறிப்பிட்டார். அவர் மிகச்சிறிய விஷயங்களுக்கும் அதிக கவனம் செலுத்துவதால், மேலும் மோசமடைந்த பாபாவின் உடல்நிலையை அவர் தொடர்ந்து மறைக்க முயன்றார். சில நேரங்களில் அவர் அதைப் பற்றி புகார் கூறினாலும், சில நேரங்களில் மிகவும் சுறுசுறுப்பாகவும், வலுவாகவும் தோன்றினார்.

டாக்டர் கிண்டே 1968 அக்டோபர் மாதத்தில் அமெரிக்கா சென்றபோது, அங்கு அவர் நியூயார்க் மற்றும் கலிஃபோர்னியாவில் பாபா-அன்பர்களுடன் கலந்துரையாடினார். அவர் திரும்பி வந்ததும், ஆதியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பாபாவை நேரில் சந்தித்து அவரது பயணத்தைப் பற்றி தெரிவிக்க அனுமதி கோரியபோது, அது வழங்கப்பட்டது; கிண்டே அவரது மனைவியுடன் 1968 அக்டோபர் 23 புதன்கிழமை அன்று மெஹராஸாத்திற்கு வந்தார்; ஆனால் டாக்டர் கிண்டே மட்டும் அரை மணி நேரம் பாபாவுடனான சந்திப்பிற்கு அனுமதிக்கப்பட்டார். அந்த அரை மணி நேர உரையாடலின் போது,

பாபா மனமார சிரித்துக் கொண்டிருந்தார். முந்தைய நாள், பாபாவிற்கு கடுமையான தசைப்பிடிப்பு ஏற்பட்டது, ஆனால் அவரைப் பரிசோதித்த பிறகு, டாக்டர் கிண்டே கூறினார், "பாபாவிடம், எந்த நோயின் அறிகுறியும் இல்லை. உங்கள் உடல் நிலை மிகவும் சாதாரணமாக உள்ளது."

அன்றைய தினம், பாபாவிற்கு பாஸ்கர் தனது மனைவி அல்லது தாயார் தயார் செய்த இட்லி மற்றும் சாம்பார் (தென்னிந்தியாவில் பிரபலமானது) கொண்டு வந்தார்.

நரிமன், அர்னவாஸ், கேட்டி மூவரும் அக்டோபர் 25 அன்று மும்பையிலிருந்து மெஹராஸாத் வந்தனர்; இரண்டு நாட்கள் கழித்து ஜிம் மிஸ்திரியும் வந்தார். இந்த நேரத்தில் பால் நாத்துவும் மெஹராஸாத்திற்கு வந்து ஒரு வாரம் தங்கினார்.

பாபா, ஜிம்மிடம் கேலி செய்து வேடிக்கையாகப் பேசினார், "**உங்கள் ரோடி** (மனைவி ரோடா) **ஒரு மஸ்தானி ஆகிவிட்டார்**! **இப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்**?"

ஜிம் உடனே, "அவர் உங்கள் மீது இவ்வளவு அன்பு வைத்திருப்பதில் நான் பெருமைப்படுகிறேன்!" என்றார்.

"**அவர் திருமணம் செய்ய வேறொரு சிறந்த நபரைக் கண்டுகொள்ள முடியவில்லையா**?"

"அவர் என்னை கண்டுகொண்டதே மாபெரும் அதிர்ஷ்டம்! அவர் உங்களுக்காகச் செய்யும் பணியில் நான் எவ்வகையிலும் குறுக்கிட மாட்டேன்!"

ஜிம்மிடம் கேட்டபோது, அவர் தனது மனைவியின் 'மஸ்தானி போன்ற' நடத்தைக்கு உதாரணம் ஒன்றை எடுத்துரைத்தார். ஒருமுறை மும்பையில் அனைத்து வாடகைக் கார் ஓட்டுநர்களின் வேலைநிறுத்தம் நடைபெற்றது; இது நன்கு விளம்பரப்படுத்தப்பட்டதால் அனைவரும் இது குறித்து அறிந்திருந்தனர். ரோடா அன்று பாபா மையத்திற்குச் செல்ல வேண்டும், வழக்கம் போல வாடகைக் கார் நிலையத்திற்குச் சென்றார். அவர் கடுமையான வெயிலில் நான்கு மணி நேரம் காத்திருந்தார், வழக்கமாக, ஒவ்வொரு ஐந்து நிமிடங்களுக்கும் ஒரு கார் வந்து செல்லும் இடத்தில், கார்கள் எதுவும் வரவில்லை. மையத்திற்குச் செல்லும் ஆர்வத்தில் அவர் வேலைநிறுத்தத்தை மறந்துவிட்டார். யாரோ ஒருவர் அவரைப் பார்த்து அதை நினைவுபடுத்த, அவர் வீட்டிற்கு திரும்பி நடந்தார்.

பாபா உடனே, "**அவர் என்னையும் ஒரு நாள் மறந்து விடுவார்**!" என்றார்.

பதிலளித்த ஜிம், “உங்கள் நினைவில் என்னை மறந்தால், நான் மகிழ்ச்சியாக இருப்பேன்” என்று கேலி செய்தார்.

பாபா இதைக் கேட்டு, “**அப்படியானால், அவருடைய மஸ்தானி போன்ற நிலையில் நான் மகிழ்ச்சியடைகிறேன் என்று அவருக்கு இன்று ஒரு கடிதம் எழுதுங்கள்**” என்று கூறியபோது, ஜிம் அதைச் செய்தார்.

1968 அக்டோபர் 27 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபாவின் மண்டலியில் ஒருவரான ஸெயிலர் மாமா, நீரிழிவு நோய் காரணமாக பூனாவில் 78 வயதில் காலமானார். ஸெயிலர், பாபாவின் சிறுவயது நண்பர்களில் ஒருவராக இருந்தார்; 1915 டிசம்பர் மாதத்தில் ஷிர்டியில் சாய்பாபாவையும், உபாஸனி மஹாராஜையும் சந்திக்க பாபாவுடன் சென்றிருந்தார். ஸெயிலரும் அவரது குடும்பமும் நாசிக் மற்றும் மெஹராபாத்தில் 1949இல் பாபா ‘புது வாழ்க்கை’ தொடங்கும் வரை வாழ்ந்து வந்தனர்.

அக்டோபர் 28 அன்று, சகன் மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டு, டிசம்பர் மாதத்தில் மெஹராவின் பிறந்தநாள் விழா மற்றும் தாரா-அம்ரித் இருவரின் திருமணத்திற்குத் தேவையான உணவு தயாரிப்பது குறித்து பாபா அறிவுரைகளை வழங்கினார். அக்டோபர் 29ஆம் தேதி ஆந்திர மாநிலம் கொவ்வூரை சேர்ந்த மறைந்த கோடூரி கிருஷ்ணராவின் மகன் கோடூரி பிரசாத், பாபாவை சந்திக்க குடும்பத்துடன் மெஹராஸாத்திற்கு வந்தார். கோடூரி கிருஷ்ணராவின் மறைவு அவரது மனைவிக்கு மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியது. பாபா, அவருக்கு ஆறுதல் கூறினார், “**கோடூரி ராவ் எவ்வளவு அதிர்ஷ்டசாலி! அவர் எனக்காக மெஹர்ஸ்தானை உருவாக்கினார், அவருடைய நினைவுச் சின்னம் அதன் வாசலில் எப்பொழுதும் இருக்கும். எனது தரிசனத்திற்காக மெஹர்ஸ்தானுக்கு வருபவர்கள் முதலில் கோடூரி கிருஷ்ணா ராவைப் பார்ப்பார்கள். அவர் என்றென்றும் இறவாதவராகிவிட்டார்.**” பாபாவின் வார்த்தைகள் குடும்பத்திற்கு இனிய ஆறுதலாக இருந்தது, அரை மணி நேரம் கழித்து அவர்கள் மகிழ்ச்சியுடன் வெளியேறிச் சென்றனர்.

1968 நவம்பர் 1 வெள்ளிக்கிழமை காலை 8:00 மணிக்கு, ஹாரி கென்மோர் ஏழு நாட்கள் மெஹராஸாத்தில் தங்குவதற்காக நியூயார்க் நகரிலிருந்து வந்தார். மெஹர்ஜி அவரை பூனாவிலிருந்து அழைத்து வந்து, நரிமன், அர்னவாஸ் மற்றும் ஜிம்மியுடன் திரும்பிச் சென்றார். அன்றைய தினம் கேட்டியும் ரயிலில் புறப்பட்டார்.

ஹாரி கென்மோரின் கையைப் பற்றிக் கொண்டு, பாபா விறுவிறுப்பாக மண்டலி மண்டபத்தில் முன்னும் பின்னும் நடந்ததைக் கண்டு, கென்மோருக்கு மிகுந்த ஆச்சரியமும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. எப்போதேனும் பாபா, கென்மோரை நாற்காலியிலிருந்து எழுந்து நிற்க உதவுமாறு கூறி, குனிந்து கையைக் கொடுத்து, பாபா, கென்மோரை வேகமாக அவரை நோக்கி இழுத்தார். பாபாவின் இத்தகைய திடீர் பலம் கென்மோருக்கு பெரும் ஆச்சரியமாக இருந்தது. இருப்பினும், 'மனிதகுலத்தை மீட்டெடுக்க அவரது ஏகாந்தவாசப் பணியின் மூலம் உடலை சுக்குநூறாக்க அனுமதித்து, அதைப் பிரபஞ்சத்திற்கு அர்ப்பணிக்கிறார் என்ற உண்மையை பாபா, கென்மோரிடமிருந்து மறைத்து வருகிறார்!'

பாபா, ஹாரி கென்மோரிடம், "**நீங்கள் மண்டலியில் ஒருவர், ஆதலால் நான் ஏகாந்தவாசக் காலகட்டத்தில் உங்களை இங்குத் தங்க அனுமதித்தேன்... வரும் ஜூலை மாதம் முதல் மெஹராஸாத்தில் நிரந்தரமாகத் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவீர்கள்**" என்று கூறினார்.

ஏழு நாட்கள் தங்கிய பிறகு, ஹாரி கென்மோர் இந்தியாவிற்குத் திரும்பி வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய நவம்பர் 8 அன்று மெஹராஸாத்திலிருந்து நியூயார்க்கிற்குப் புறப்பட்டார். அவர் செல்வதற்கு முன்பு, பாபா கூறினார், "**நான் எல்லா கடவுள்களுக்கும் கடவுள், நான் வழி மட்டுமல்ல, இலக்கும் கூட.**"

பாபா, கென்மோரிடம், "**மீண்டும் (1969) ஜூலை மாதத்தில் வாருங்கள். நான் உங்களை அழைப்பதற்காகக் காத்திருக்க வேண்டாம்; அழைக்கப்படாமல் நீங்கள் வரலாம்**" என்று அறிவுறுத்தினார். 'கென்மோரின் வருகை தள்ளிப்போகக்கூடாது' என்பதில் பாபா உறுதியாக இருக்கிறார் என அனைவரும் கருதினர், ஆனால் உண்மையில் பாபா வேறு ஏதோ வித்தியாசமான குறிப்புகளை வழங்கத் தொடங்கினார்.

கென்மோர் தாயகம் திரும்பியதும் அவருக்கு ஒரு கடிதம் எழுதுமாறு பாபா அறிவுறுத்தினார். 1969 ஜனவரி 2 அன்று ஹாரி கென்மோர், அவரை பாபா இந்தியாவிற்கு வர அனுமதித்ததற்காக தனது நன்றியைத் தெரிவித்து கடிதம் எழுதினார்:

எனது சௌகரியத்திற்காக ஒவ்வொரு விஷயத்தையும் நீங்கள் நன்கு கவனித்ததால், மெஹராஸாத்தில் நான் தங்கியிருந்தது மிகவும் இனிமையானதாகவும் வசதியாகவும் இருந்தது. உண்மையில், அனைத்துமே எனக்காக மிகவும் நேர்த்தியாகச் செய்யப்பட்டன; இந்த பூமியில் எனக்காக அமைந்த ஒரே 'இல்லத்தில்' நான் தங்கி இருந்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். சுருக்கமாகச் சொன்னால், அது உங்களின் உதவியாக இல்லாதிருந்திருந்தால்,

அங்கிருந்து வெளியேறுவது எளிதானதாக இருந்திருக்கும், ஏனெனில் நான் தங்குவதற்கு ஒரு தொடக்கமும் முடிவும் இருப்பதை நான் ஆரம்பத்தில் அறிந்திருந்தேன், அதை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன்.

பிரியமான பாபா, நான் உங்களை நோக்கி மேற்கொண்ட இந்த வருகையை நான் எவ்வாறு மதிப்பிடுவது? நீங்கள் அங்கு இருப்பதால் நான் எப்பொழுதும் இருக்க விரும்பும் ஒரே இடம் அது என்று எனக்குத் தெரியும். நீங்கள் அங்கு இருப்பதால், உலகம் இல்லை; ஏனெனில் நீங்கள் இருக்கும் இடத்தில் வேறு எதுவும் இல்லை.

உங்களுடன் இருந்ததால் நான் பிரபஞ்சத்தின் 'ஒரே உச்சத்தில்' இருந்தேன் என்பது மட்டும் எனக்குத் தெரியும்; அதீத அதிர்ஷ்டசாலி, பலே பாக்கியவான், நல் வாய்ப்பும், தனிச் சலுகையும் அடையப் பெற்ற உங்கள் பையன், உண்மையில்... உங்கள் விருப்பத்திற்கும் ஆர்வத்திற்கும் முழுமையாகக் கீழ்ப்படிந்து, சரணடைவதே எனது வாழ்வின் ஒரே மார்கம் மற்றும் ஒரே குறிக்கோள் என்ற தன்னிச்சையான தீர்மானத்துடன் வந்தேன்.

பிரியமான பாபா, 1969 ஜூலை மாதத்தில் நான் மெஹராஸாத்தில் நிரந்தரமாக வாழ முடியும் என்று நீங்கள் குறிப்பிட்டபோது, என் இதயம் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தது, ஏனெனில் அதுவே எனது வாழ்க்கையின் ஒரே நோக்கமாகவும் லட்சியமாகவும் இருந்தது - ஏனெனில் உங்களுடன் வாழ்வதற்கு இணையான மகத்தான வாழ்க்கை வேறு எதுவும் இல்லை.

1968 நவம்பர் 3 அன்று, அலன் கோஹென், ரிக் சேப்மென், ராபர்ட் ட்ரே:ஃபஸ் ஆகியோருக்கு எரச் கடிதம் எழுதினார்; பாபாவின் பெயரிலான திட்டங்களைத் தொடங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் வாழும் அவரது 20 முக்கிய பாபா-அன்பர்களாகிய இளம் சேவகர்களுக்கு அவரிடமிருந்து ஒரு செய்தியைத் தெரிவிக்க பாபா விரும்புகிறார். எரச் எழுதிய கடிதம் பின்வருமாறு:

இங்கே ஓர் இன்றியமையா பணி உள்ளது, ஆனால் பிரியமான பாபா உங்களுக்கென திட்டமிட்டுள்ள ஓர் இனிமையான பணி அது. பாபாவின் செய்தியை இங்கே வழங்கியுள்ளபடி, அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் வாழும் அவரது முதன்மை பாபா-அன்பர்களாகிய இளம் சேவகர்கள் அனைவருக்கும் - பாபாவின் திட்டங்களைத் தொடங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் மற்றும் அவற்றைச் சுற்றி அணிதிரளுமாறு பிறரைத் தூண்டியவர்கள் - நீங்கள் உங்கள் அன்பான அவதார் மெஹர் பாபாவிடமிருந்து அடையப்பெறும் பின்வரும் செய்தியை அனுப்பி வைக்க விரும்புகிறேன்:

**“நீங்கள் எனக்கு மிகவும் பிரியமானவர்கள், எனது பெயரிலும் பணியிலும் நீங்கள் முன்னோக்கி வந்துள்ள விதத்தில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நேரம் நெருங்கிவிட்டது, விரைவில் நான் ஆதிகாலப் புருஷன் என்பதை உலகம் அறியும்.”**

நிச்சயமாக இந்தச் செய்தி உங்கள் மூவருக்கும் உரித்தானது. பாபாவின் இந்த அதிர்ஷ்டசாலிகளான இளம்-அன்பர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளின் தட்டச்சு செய்யப்பட்ட நகலை எனக்கு அனுப்பினால் நான் மகிழ்ச்சியடைவேன்.

பெயர்களின் பட்டியலில் இருபது-வயதுகளில் உட்பட்ட பல்வேறு அமெரிக்கர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் இருந்தனர், ஆனால் அவர்களின் பெயர்கள், கடிதங்கள் மற்றும் அதன் உள்ளடக்கங்கள் அனைத்தும் அவர்களுக்குள்ளே வைக்கப்பட வேண்டும் என்பதால் அவை விநியோகிக்கப்படவில்லை. இளம்-சேவகர்கள், பாபாவின் பெயரையும் செய்தியையும் பரப்புவதில் தத்தமது பகுதியில் செய்யப்பட்ட பணியின் சாராம்சத்தையும், அவர்களின் தற்போதைய ஏற்பாடுகள் மற்றும் திட்டங்களின் விவரங்களையும் தெரிவித்து, இந்தியாவில் பாபாவிற்கு பதிலளித்திருக்க வேண்டும்.

இதற்கிடையில் தென்னிந்தியாவில், யோகி ஷுத்தானந்த பாரதி தனது ‘பாரத **சக்தி**’ (THE POWER OF INDIA) என்ற புதிய புத்தகத்திற்காக ஒரு செய்தியைக் கோரி பாபாவிற்கு எழுதினார். கடிதப் போக்குவரத்துகளுக்குத் தடை இருந்தபோதிலும், நவம்பர் 5ஆம் தேதி பாபா அந்தக் கடிதத்திற்கு செவிமடுத்து, பல ஆண்டுகளுக்கு முன்பு வழங்கிய செய்தி ஒன்றை அனுப்புமாறு ஆதியிடம் கேட்டுக்கொண்டார்:

**நானே ராம், நானே கிருஷ்ணா. நான் ‘இந்த ஒருவனாக’ இருந்தேன், ‘அந்த ஒருவனாக’ இருந்தேன், இப்போது நான் மெஹர் பாபா. எனது உடல் மற்றும் உதிரத்தின் இந்த உருவில் நான் ஒருவனே நித்தியமாக போற்றி வணங்கப்பட்ட மற்றும் புறக்கணிக்கப்பட்ட, எப்போதும் நினைவில் கொள்ளப்பட்ட மற்றும் மறக்கப்பட்ட அதே ஆதிகாலப் புருஷன்.**

நவம்பர் 6ஆம் தேதி, மணி, பாபாவிடம் சிறப்புப் பரிசாக ஐந்து பெரிய புகைப்படங்களில் கையெழுத்திடுமாறு வற்புறுத்தினார். பாபா அவரது பெயரில் கடைசியாக கையெழுத்திட்டது இந்தச் சித்திரங்களில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

1968 நவம்பர் 8 வெள்ளிக்கிழமை காலை 9:00 மணிக்கு ஆதி, பாஸ்கர், வாமன் ஆகியோர் மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர். பாபா அவர்களுடன் அலுவலகப் பணிகளைப் பற்றி விவாதித்து, அவரது வெளிப்பாட்டின் நேரம் விரைவில் வரவிருப்பதை மீண்டும் எடுத்துரைத்தார். ஆதி, பாஸ்கர் இருவரும் பாபாவின் பணியில் மேலதிக விழிப்புடனும் கவனத்துடனும் இருக்குமாறும் மேலும் முடிந்தவரை 'அலுவலகப் பணிகளில் முழு முனைப்புடன் ஈடுபடுமாறும் அறிவுறுத்தப்பட்டனர். வாமன் எந்த விதமான சூழ்நிலைக்கும் தயாராக இருக்க வேண்டும். **"எதுவும் நடக்கலாம்"** என்று பாபா கூறினார் - மற்றுமொரு மறைமுகமான குறிப்பு.

இந்தக் காலகட்டத்தில், பாப் ராய்ட்டன் (BOB ROYETON) என்ற ஸூஃபி (ஐவி டியூஸ் மற்றும் டான் ஸ்டீவன்ஸுடன் இணைந்திருந்தவர்) கொரியாவில் அமெரிக்க இராணுவத்தில் பணிபுரிந்தார். '1969 **சகவாசத்தில் பங்கெடுப்பது கேள்விக்குறியாக இருந்ததால், டிசம்பர் 25 மற்றும் 30 தேதிகளுக்கு இடையில் அவர்கள் இருவரும் ராய்ட்டனுடன் இணைந்து வருவதானால் அரை மணி நேரம், அவரைப் பார்ப்பதாக பாபா ஒப்புக்கொண்டார்**' என்ற தகவலைத் தெரிவித்து, ஆதி நவம்பர் 8 அன்று டான் ஸ்டீவன்ஸுக்கு எழுதினார்: "மூவரும் காலை 9.00 மணிக்கு வந்து, பாபாவை சந்தித்து உடனடியாக புறப்பட வேண்டும்."

ஆதி, டான் ஸ்டீவன்ஸுக்கு எழுதினார்: "**பாப் ராய்ட்டன் உங்களுடன் வர முடியாவிடில், நீங்கள் இந்த விஜயத்தை முழுவதுமாக கைவிட வேண்டும், மேலும் 1969 கோடையில் பிற மேற்கத்திய அன்பர்களுடன் நீங்களும் ராய்ட்டனும் பூனாவில் தரிசனத்திற்கு வர வேண்டும்.**" இராணுவத்திடமிருந்து ராய்ட்டனின் விடுப்பைப் பெறுவதில் சிக்கல் இருந்ததால், நீண்ட இடைவெளிக்குப் பிறகு, இறுதியாக அவர்கள் வர இயலாது என்று பாபா அறிவித்து, அவரது விருப்பத்திற்கு அடிபணியுமாறு டான் ஸ்டீவன்ஸுக்குத் தகவல் அனுப்பினார்.

1968 நவம்பர் 9 சனிக்கிழமை காலை 9:15 மணிக்கு நரிமன் கஜ்வானியின் மனைவி கேக்கி, அவரது தாயார் ஆகியோர் குடும்பத்தினருடன் மீண்டும் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்பட்டனர். பாபா அவர்களுடன் சுமார் 20 நிமிடங்கள் உரையாடினார், "**நீங்கள் அதிர்ஷ்டசாலி. தாதா** (கிஷின்சந்த்) **என்மீது கொண்ட அன்பின் காரணமாக, யார் ஒருவரும் அனுமதிக்கப்படாத இந்த நேரத்தில், இன்று உங்களுக்கு ஒரு நேர்காணல் வழங்கப்படுகிறது. இப்போது நீங்கள் விரும்பியதைக் கேளுங்கள், ஏனெனில் இத்தகைய வாய்ப்பு மீண்டும்**

**வராது**. (1969) **ஏப்ரல் 10 முதல் ஜூன் 10 வரை தரிசனத்திற்காக வருபவர்களுக்குக் கூட அத்தகைய வாய்ப்பு கிடைக்காது**."

நரிமன் கஜ்வானி, பாபாவின் ஆசியைக் கோரினார். '**பாபாவின் அரவணைப்பில் அவரது தந்தை மகிழ்ச்சியாக இருப்பதாகவும், அவருக்காக எவரும் வருந்த வேண்டாம்**' என்றும் பாபா கூறினார். 1969 பிப்ரவரி 7ஆம் தேதி மெஹராஸாத்தில் கவாலி இசை நிகழ்ச்சி ஒன்றை நடத்த, சித்திக் ஜெய்ப்பூர் கவாலி பாடகருக்கு, அவரது தந்தை ஒரு தொகையை விட்டுச் சென்றதாக நரிமன், பாபாவிடம் தெரிவித்தார்.

பாபாவின் விருப்பத்திற்கு இணங்க நவம்பர் 10ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மெஹராஸாத் மண்டலி அனைவரும் மௌனம் அனுஷ்டித்தனர்.

ஆதியின் அலுவலகத்தில் அவரது முக்கிய உதவியாளராக இருந்த ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா (FERAM WORKINGBOXWALA), ஒரு மாற்றத்தை விரும்பி, 10ஆம் தேதி மெஹராஸாத்திற்கு வந்து மூன்று வாரங்கள் தங்கினார். ஒவ்வொரு வருடமும் இந்த நேரத்தில் பாபா அவரை அழைப்பதும், அவருக்கு இவ்வாறு அறிவுறுத்துவதும் வழக்கம்: "**நீங்கள் அஹமதுநகரில் தட்டச்சு செய்வதைத் தவிர வேறு எதுவும் செய்வதில்லை, எனவே நீங்கள் இங்கே இருந்து ஓய்வெடுங்கள்**." ஆனாலும் தவிர்க்க முடியாத ஒரு சில பணிகள் செய்யப்பட வேண்டும், இவ்வாறு ஃபெராம் தனது 'ஓய்வு காலகட்டத்தில்' தட்டச்சு செய்ய வேண்டியிருந்தது. சொல்லப்போனால், ஃபெராம், ஆதியின் அலுவலகத்தில் பல ஆண்டுகள் பணிபுரிந்தார், மேலும் பாபா மீதான அவரது அளப்பரிய அன்பு பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையும் விதத்தில் இருந்தது. எளிமையான பழக்கவழக்கங்களைக் கொண்ட நேர்மையான மனிதர், ஃபெராம், கடிதங்கள், தொலைத்தந்திகள் மற்றும் சுற்றறிக்கைகளை தாக்கல் செய்து, சேமித்து வைப்பதன் மூலம் ஆதிக்குப் பெரும் உதவியாக இருந்தார். பாபா ஒருமுறை அவருக்கு '**முந்தைய பிறவியில் ஃபெராம் ஒரு யோகியாக இருந்ததை வெளிப்படுத்தினார், மேலும் உபாஸனி மஹாராஜின் வார்த்தைகள் உண்மை என்றும், இதுவே அவரது 'இறுதி வாழ்வு காலம்**' என்றும் அவருக்கு உறுதியளித்தார்.

ஃபெராம் அடிக்கடி புகார் கூறுவதுண்டு, "ஆன்மீகம் என்பது வெறும் தொல்லைகளே தவிர வேறொன்றுமில்லை!" புதிய அன்பர்களிடம் பாபாவைப் பற்றிய இனிமையான, அன்பான விஷயங்களை மட்டும் கூறி, பிற மண்டலி பொய் அல்லது பாதி உண்மையை மட்டுமே எடுத்துரைக்கும் வேளையில்,

மண்டலி கடந்து செல்ல வேண்டிய ‘கடினமான’ அனுபவங்களைப் பற்றி எதுவும் கூறுவதில்லை.

அமெரிக்காவில் சமீபத்தில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் ரிச்சர்ட் நிக்ஸன் (RICHARD NIXON) தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி வந்ததும், அவரை விரும்பாத ஃபெராம், பாபா எப்படி இப்படிப்பட்ட ஒருவரை ஜனாதிபதியாக அனுமதித்திருப்பார் என்று யோசித்துக்கொண்டிருந்தார். பாபா அவரிடம் கூறினார், “**அமெரிக்காவின் அதிபராக இருக்க தகுதியான மனிதர் வேறு எவரும் இல்லை. நிக்ஸன் ஒருவரே உள்ளார்.**”

1960இல் நடந்த தேர்தலில், ரிச்சர்ட் நிக்ஸன், ஜான் எஃப் கென்னடியிடம், குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்த போது, நிக்ஸன் அதிபராக வர வேண்டும் என்று பாபா குறிப்பிட்டார். 1964இல் நியூயார்க்கில் நடந்த உலக கண்காட்சியில் நிக்ஸன் கலந்துகொண்டபோது, மெஹர் பாபாவின் பெயருடன் ஒரு சிறிய எதிர்பாராத ‘பரிச்சயம்’ ஏற்பட்டது. ஜேன் ஹெய்ன்ஸ் மற்றும் அவரது மகள் வெண்டி ‘பெவிலியன் ஆஃப் அமெரிக்கன் இன்டீரியர்ஸ்’ (PAVILION OF AMERICAN INTERIORS) அரங்கத்தில் அமைக்கப்பட்ட மெஹர் பாபா கண்காட்சிக் கூடத்திலிருந்து வெளியே வந்துகொண்டிருந்த வேளையில், நிக்ஸனை சுற்றிலும் ஒரு கூட்டம் கையெழுத்து வாங்கிக்கொண்டிருந்ததைக் கண்டு, ஜேன், பாபாவின் ‘**உலகளாவிய செய்தி**’யின் (UNIVERSAL MESSAGE) நகலை அவர் கையில் திணித்ததும், ஒரே பார்வையில், நிக்ஸன் அவரது பெயரை பாபாவின் புகைப்படத்தின் மேல் கையொப்பமிட்டு, கையேட்டை ஜேனிடம் திருப்பிக் கொடுத்தார்.

பாபாவை தினமும் காலையில் நான்கு தோட்டத் தொழிலாளர்கள் தூக்கு நாற்காலியில் மண்டபத்திற்கு அழைத்து வந்தனர், மேலும் அவர் காக்கா, ஃபிரான்சிஸ் ஆகியோரின் உதவியுடன் நாற்காலியிலிருந்து எழுந்து, பின்பு மண்டபத்தில் தமது இருக்கையில் அமர்ந்தார். பாபா அவரது அறைக்குத் திரும்பிச் செல்லும் வேளையில் அவராகவே உதவியின்றி எழுந்து, தூக்கு நாற்காலியில் அமர, ஒருபுறம் காக்காவும் மறுபுறம் ஃபிரான்சிஸும் அழைத்துச் சென்றனர்.

ஒரு நாள் காலை சுமார் 11:00 மணியளவில் பாபா வழக்கம் போல நாற்காலியிலிருந்து எழுந்திருக்க முயன்றார், ஆனால் அவரால் முடியவில்லை. இரண்டு மூன்று முறை முயற்சி செய்தும் அவரால் முடியவில்லை. ஃபெராமைப் பார்த்து, “**இது எனக்கு ஒரு தனிப்பட்ட சோகத்தின் ஆரம்பம்**” என்று குறிப்பிட்டார்.

1968 நவம்பர் 13 புதன்கிழமை அன்று பாபா, மண்டலிக்கு இவ்வாறு அறிவித்தார்:

**எனது வெளிப்பாட்டின் நாட்கள் வேகமாக நெருங்கி வருகின்றன, மெஹராவிடம் மட்டுமே எனது மௌனத்தைக் கலைக்கும் நேரத்தை நான் குறிப்பிட்டேன். நான் எனது பௌதீக உடலைக் கைவிடுவதற்கு முன்னர், எனது வெளிப்பாட்டின் காலம் பதினான்கு ஆண்டுகள் நீடிக்கும். எனவே, இந்த அவதார வெளிப்பாடு மிகப்பெரியதாக இருக்கும்.**

பாபாவின் அபரிமிதமான துன்பத்தைப் பார்த்த ஃபெராம், பாபா எப்படி உடைந்துபோன இந்த உடலுடன், தன்னை வெளிப்படுத்துவார் என்ற ஆச்சரியத்தில் ஆழ்ந்தார். '**அவர் என்ன நினைக்கிறார்**' என்று பாபா கேட்டதற்கு, ஃபெராம் உண்மையை கூறிய போது பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**எனது வெளிப்பாட்டின் போது, ஒரே நேரத்தில் நான்கு நபர்களைத் தூக்கி எறியும் அளவுக்கு நான் வலிமை வாய்ந்தவனாக இருந்தது போன்ற இளம் உருவில் அது இருக்கும்!**"

13ஆம் தேதி மதியம், '**மண்டலி உறுப்பினர் யார்**' என்பதன் அர்த்தத்தையும், அதன் நிலையையும் தெளிவுபடுத்தி பாபா விளக்கினார்:

**இத்தனை வருடங்களாக என்னுடன் எல்லா சூழ்நிலையிலும், என்னதான் இடர்பாடுகள் இருந்தாலும், என்னை உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்த ஒரு சில ஆண் மற்றும் பெண் அன்பர்கள் மட்டுமே எனது மண்டலி. மெஹராஸாத் மற்றும் மெஹராபாத்திற்கு வெளியே வாழும் பிற அனைவரும் என் அன்பர்கள்.**

**நான் எனது மண்டலியை மெஹராவிற்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் வைத்துள்ளேன்; பின்னர் அன்பர்கள்; அதன் பின்னர் உலகம். மெஹரா, எனது மண்டலி, என் அன்பர்கள், உலகம், அந்த வரிசையில் அனைவருக்காகவும், தினமும் தவறாமல் என்னையே நான் வழிபட்டு வேண்டிக் கொள்கிறேன்.**

**பாபா தன்னைத்தானே வேண்டிக்கொள்வதைப் பற்றி குறிப்பிடவில்லை, ஆனால் அவர் அதை கீழ்வரும் விதத்தில் விளக்கினார்:**

**நான் 'உயர்ந்தவர்களில் உயர்ந்தவன்'. அஹமதுநகரில் ஒரு மாதம் பாவ் கல்சூரியை தனது குடும்பத்துடன் தங்க அனுமதிக்குமாறு கோஹெர் என்னிடம் கூறுகிறார். நான் அதற்கு உடன்படவில்லை; ஏனெனில், பாவ் மண்டலியைச் சேர்ந்தவர், எனது மண்டலி தனிச் சிறப்புமிக்கவர்கள். அதேபோல், ஃபிரான்சிஸும் மண்டலி உறுப்பினரைச் சேர்ந்தவர்; அவர் பல**

**ஆண்டுகளாக என்னுடன் எனது சேவையில் இருக்கிறார் என்பதைக் கருத்தில் கொண்டு, அவதார புருஷரின் உறைவிடத்தையும்** (AVATAR'S ABODE) **அத்துடன் இணைக்கப்பட்ட சொத்தையும் கவனித்துக்கொள்வதற்காக ஃபிரான்சிஸை மீண்டும் ஆஸ்திரேலியாவிற்குச் செல்ல நான் அனுமதிக்கவில்லை.**

**கைக்கோபாத் இறை காட்சிகளை அடையப்பெற்றாலும், உடல் ஊனமுற்ற நிலையில் இருந்தாலும், அவரும் எனது மண்டலியைச் சேர்ந்தவர். அதனால்தான் நான் அவரை மெஹராபாத் மேல்மலையில் அவரது குடும்பத்துடன் தங்க அனுமதிக்கவில்லை.**

**இத்தனை வருடங்களாக நான் எனது மண்டலியை அரவணைத்துக்கொண்டு இருந்தேன்; அவர்கள் எனக்கு மிக அற்புதமாக சேவை புரிந்து வருகிறார்கள். கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களைப் போல் அவர்கள் என்னை வீழ்த்தி விடமாட்டார்கள்.**

**நான் அவதார புருஷர்களில் மிகப் பெரியவன், ஏனெனில் நான் என் உடலில் நிலைகொண்டிருக்கும்போதே எனது வெளிப்பாடு இருக்கும். அடுத்த ஆறு மாதங்களில், மண்டலி என்னைக் கைவிடும் சூழ்நிலைகள் உருவாகும். ஆனால் நான் அதை அனுமதிக்க மாட்டேன். அதேபோல, மண்டலி எனது தாமனை** (மேலங்கி) **உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

**எனது வெளிப்பாட்டிற்கு முன்னர் உயிரைத் துறக்கும் இரண்டு அல்லது மூன்று மண்டலியைத் தவிர, பிற மண்டலி அனைவரும் என்னுடன் இருப்பர்.**

**"இறுதியில் என்னுடன் பதினான்கு பேர் இருப்பார்கள்"** என்று பாபா பல ஆண்டுகளுக்கு முன்னரே அறிவித்திருந்தார். குறிப்பிடத்தக்க வகையில், இந்தக் குறிப்பிட்ட நேரத்தில், மெஹராஸாத்தில் அவருடன் பதினான்கு மண்டலி இருந்தனர் - அதாவது ஆறு பெண் மண்டலி: மெஹரா, மணி, நாஜா, கோஹெர், மெஹரு மற்றும் ரானோ. எட்டு ஆண்கள் - எரச், பெண்டு, பைதூல், காக்கா, அலோபா, கைக்கோபாத், பாவ் கல்சூரி மற்றும் ஃபிரான்சிஸ்.

பாபா பிற அன்பர்களுக்கு வழங்கிய தனிப்பட்ட உத்தரவுகளின் வரம்பிற்குள் தங்கள் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தவர்களில், மெஹராபாத் மண்டலியும் உள்ளடங்குவர்: பாதிரி, சிது, மன்ஸாரி, வாலு, சுஷீலா (விஷ்ணுவின் உறவினர்) மற்றும் கைக்கோபாத்தின் குடும்பம். குஷ்ரு குவார்ட்டர்ஸில் வாழும் மண்டலி ஆதி, அவரது சகோதரி டாலி, டாக்டர் டான்,

ஃபெராம் மற்றும் கல்சூரி குடும்பம்; ஸரோஷ், சகன் இருவரும் அஹமதுநகரில் வாழ்ந்து வந்தனர்.

இந்தக் காலகட்டத்தில், ஷீலா, மெஹர்நாத் இருவரில் ஒருவர் ஞாயிற்றுக்கிழமைகளில் மாறி மாறி மதிய உணவுக்காக மெஹராஸாத்திற்கு, வாமன் படாலேயுடன் அவரது இரு சக்கர வாகனத்தில் சவாரி செய்தனர். பாபா, மெஹர்நாத்தை நவம்பரில் இரண்டு முறையும், ஷீலாவை ஒரு முறையும் அழைத்தார். மெஹர்நாத் கடைசி முறையாக வந்தபோது, பாபா அவனிடம் ஒரு கதை சொல்லுமாறும் பின்னர் அவரது கால்களை மஸாஜ் செய்யுமாறும் கூறினார். சிறுவனை முத்தமிட்டு பிரசாதம் வழங்கி பாபா, “**மெஹர்நாத், இனி என்னுடன் இருக்க உங்களுக்கு இப்படி ஒரு வாய்ப்பு கிடைக்காது. இந்த மாதம் இரண்டு முறை உங்களை இங்கு அழைத்தது உங்கள் அதிர்ஷ்டம். இனிமேல் நானும் ஏகாந்தவாசம் மேற்கொள்வேன்; என்னைப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்காது**” என்று கூறினார்.

1968 டிசம்பரில் ஷீலா கடைசி முறையாக வந்தபோது, அவள் பாபா மற்றும் பெண் மண்டலியுடன் உணவு உண்ட பின்பு, பாபா அவளை முத்தமிட்டு சைகையால் விடையளித்தார். பாபா வராண்டாவில் வந்து அவளைத் திரும்ப அழைத்து, தழுவி, “**இதுவே எனது கைகளால் உனக்கு வழங்கும் கடைசி உணவு. இது போன்ற வாய்ப்பு உங்களுக்கு மீண்டும் வராது. இதுவே நான் உங்களுக்கு வழங்கும் எனது வாழ்நாள் பிரசாதம். இதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள்**” என்று கூறினார்.

மெஹரா, பாபாவுடன் வெளியே வந்து அவருடைய சைகைகளை விளக்கிக் கொண்டிருந்தார். மெஹராவைப் பற்றி குறிப்பிட்டு, பாபா தொடர்ந்து, “**உலகில் பல அன்பர்கள் உள்ளனர், ஆனால் மெஹராவைப் போல் எவரும் இல்லை. அவருடைய அன்பு தனிச்சிறப்பு வாய்ந்தது. அவர் என் ராதா. அவருடைய அன்பு ஒப்பற்றது, அதற்கு நான் தலைவணங்குகிறேன்**” என்று கூறி பாபா, அவரைத் தலை தாழ்த்தி வணங்கியபோது, மெஹரா அவரைத் தழுவினார்.

பாபா, ஷீலாவிடம் கேட்டார், “**உங்கள் தாயாரை இங்கு நான் அழைக்காததால் அவர் மன உளைச்சலில் உள்ளாரா?**”

“மிகவும், பாபா. நீங்கள் அவரைப் பார்க்க விரும்பவில்லை என்று அவர் கூறுகிறார்.”

“**அப்படி எதுவும் இல்லை. நீங்களும் மெஹர்நாத்தும் இந்த இளமைப் பருவத்தில் வாமனுடன் இரு சக்கர வாகனத்தில் பயணிக்க முடியும், அவரால்**

**அது முடியாது. நான் எப்பொழுதும் அவருடன் இருக்கிறேன் என்று கூறுங்கள். நான் அடிக்கடி அவரை நினைக்கிறேன், நேசிக்கிறேன். அவர் உண்மையிலே மிகவும் சிறந்தவர். நீங்கள் இப்போது இதை புரிந்துகொள்ள மாட்டீர்கள், நீங்கள் வளரும் போது இதை உணர்வீர்கள். உங்கள் தாயார் மிகவும் நல்லவர். நான் அவரை விரைவில் அழைப்பேன் என்று கூறுங்கள்.**"

1968 நவம்பர் 17 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா அஹமதுநகர் மையத்தின் முக்கிய சேவகர்களை அழைத்து, அவரது அஹமதுநகர் மாவட்டம், ஔரங்காபாத் மற்றும் பீட் (BEED) அன்பர்களுக்கு தரிசனம் வழங்குவது குறித்து அவர்களுடன் கலந்துரையாடினார். அடுத்த கோடையில் குருபிரசாத் செல்வதற்கு முன்பு, பாபா அவர்களுக்கு 1969 பிப்ரவரி 1 முதல் 10 வரை ஏழு நாட்களுக்கு மெஹராஸாத்தில் தரிசனம் வழங்கப்போவதாக முடிவு செய்யப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில், பாபா தமது அஹமதுநகர் அன்பர்களிடமிருந்து ஒரு பணிவான சேவையை ஏற்றுக்கொண்டார்; அவர்கள் பாபா மற்றும் மண்டலிக்காக மெஹராஸாத்திற்கு உணவு வழங்குவது குறித்த அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற அனுமதித்தார். ஒரு ஞாயிற்றுக்கிழமை, பத்தார்டி கிராமத்தின் படே பிளீடர் உணவு அனுப்பினார்; அடுத்ததாக தௌலத் லாட்ஜின் உரிமையாளர் பீலாமாய் (உள்ளூர் உணவகம் மற்றும் விடுதி); பிரேம் கில்னானியின் மனைவி கிரிஜாவும் அவ்வப்போது மதிய உணவை அனுப்பினார். ஒருமுறை, பாபா, கோகிலாவிடம் பருப்பு தயார் செய்து அனுப்புமாறு கூறினார். பின்னர், அவரது விருப்பத்திற்கு இணங்க, சகன், பாபாவிற்கு உணவு தயார் செய்து, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மெஹராஸாத்திற்கு கொண்டு வரத் தொடங்கினார். ரமா ஒவ்வொரு வாரமும் பாபா மற்றும் மண்டலிக்கு பஜ்ஜியையும், வாரத்திற்கு ஒரு முறை கொண்டைக் கடலைக் கூட்டும் (கடலைச் செடியில் வளர்ந்த பச்சை இலைகள்) மேலும் பாபா அவ்வப்போது விரும்பி கேட்கும் பிற உணவுகளையும் அனுப்பிவைத்தார்.

இவை அனைத்தும் மிகச்சிறிய சம்பவங்களாகத் தோன்றலாம், ஆனால் இறுதி நாட்கள் என்பதால் அவை பெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தன, மேலும் அது குறித்த நினைவுகள், சம்பந்தப்பட்ட அன்பர்களின் மனதிலும் இதயத்திலும் ஆழமாகப் பதிந்தன. பாபாவும் அதில் மிகுந்த ஆர்வம் காட்டி, ஒருவரிடமிருந்து உணவு வந்ததும், "**இப்போது அடுத்த ஞாயிற்றுக்கிழமை யார் அனுப்புவார்?**" என்று கேட்கத் தொடங்கினார்.

நவம்பர் 19 அன்று, பாபா, உஷா பாஸ்கரிடம் சாம்பார் மற்றும் சாதம் அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். அவரும் அவ்வாறே செய்தார், ஆனால்

இரண்டு வாய் மட்டும் உண்டு, பாபா "**எனது வயிறு நிரம்பிவிட்டது**" என்றார். இது ஆச்சரியமாக இருந்தது, ஏனெனில் பாபா எப்பொழுதும் இந்த உணவை ருசித்து உண்பதுண்டு, ஆனால் அவரது உடல்நிலை சீரின்றி பசியும் இல்லாமல் இருந்தது.

அன்றைய தினம் மண்டலி மண்டபத்தில், எல்லையில்லா வெற்றிட நிலையை (INFINITE VACUUM STATE) விவரிக்கும் ஹாஃபீஸின் ஈரடிக் கவிதை ஒன்றை எரச்சிற்கு மொழிபெயர்த்தபோது, சுருக்கெழுத்தில் அதை குறிப்பெடுக்குமாறு ஃபெராமுக்கு பாபா அறிவுறுத்தி, இவ்வாறு எடுத்துரைத்தார்:

**உறைவிடமின்மையே என் இருப்பிடம்,**
**குறியீடு இல்லாததே என் அடையாளம்,**
**என் உடல் உயிர்வாழவில்லை,**
**என் இதயம் உயிர்வாழவில்லை,**
**ஏன், கடவுளும் உயிர்வாழவில்லை!**

பாபா மேலும் கூறினார், "**இறை உணர்தலுக்கு முன்னர் ஒவ்வொருவரும் இந்த நிலையைக் (நிர்வாண நிலை) கடந்து சென்று, உடனடியாக இறை உணர்வை எய்த வேண்டும்.**"

அப்போது பாபா, "**என்னால் கூட ஹாஃபீஸின் இந்த ஈரடிக் கவிதைக்கு மேலும் மெருகூட்ட முடியாது!**" என்றார்.

நாளுக்கு நாள் பாபாவிற்கு இரத்த சோகை அதிகமாகிக்கொண்டே இருந்தது. இதற்கிடையில், எரச்சின் தாய்வழி மாமா மெஹர்ஜி ஸட்டா உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக செய்தி வந்தது. 1968 நவம்பர் 19ஆம் தேதி, பூத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, 21ஆம் தேதி அவருக்கு ரத்தம் வழங்கப்பட்டது. கெய்மாய், மெஹர்வான் இருவரும் பூனாவிலிருந்து அவரை கவனித்துக் கொள்ள வந்தனர். அடுத்த நாள், மெஹர்வானின் பிறந்த தினத்தன்று மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். மெஹர்ஜி மாமாவின் மோசமான நிலை குறித்தும், ரத்தம் செலுத்தப்பட்ட பின்னர் அவருக்கு ஏற்பட்ட முன்னேற்றம் குறித்தும் மெஹர்வான் பாபாவிடம் தெரிவித்தபோது, பாபா வினவினார், "**எனக்கு ஏன் ரத்தம் செலுத்தக்கூடாது?**"

மண்டலி இந்தக் கருத்தை லேசாக எடுத்துக் கொண்டனர், மேலும் எரச் நகைச்சுவையாக பதிலளித்தார், "இறை-மனிதன் ஒரு சாதாரண மனிதனின் இரத்தத்தை எப்படி எடுக்க முடியும்?"

"**ஏன் கூடாது?**" என்று பாபா கேட்டார். "**இன்னொருவரின் இரத்தத்தை எடுத்துக்கொள்வதால் இறை-மனிதனின் நிலை எந்த வகையிலும் மாறாது!**"

மேலும் மெஹர்ஜி ஸட்டாவிற்கு இரண்டாவது முறையாக இரத்தம் வழங்கப்பட்ட போது, பாபா மீண்டும் ஏன் அவருக்கு அதை வழங்கவில்லை என்று கேட்டார்.

டாக்டர் அலு கம்பாட்டா கடந்த ஓராண்டாக, குறிப்பாக கைக்கோபாத்தை கவனித்துக் கொள்ளவும், டாக்டர் கோஹெருக்கு உதவவும் மெஹராஸாத்தில் தங்கிவந்தார். அவரது தொண்டையில் வீக்கமடைந்த சுரப்பிகள் உருவானது கண்டறியப்பட்டதால், அது புற்று நோய் அல்ல என்பதை உறுதிசெய்ய மும்பையில் பரிசோதனை செய்யுமாறு டாக்டர் கிரான்ட் அவருக்கு அறிவுறுத்தினார். டாக்டர் அலு மெஹராஸாத்திலிருந்து வெளியேற விரும்பவில்லை என்றாலும், பாபா அவரை நவம்பர் இறுதியில் அங்கு அனுப்பிவைத்து, ஜனவரியில் அவரை மீண்டும் அழைப்பதாக உறுதியளித்தார்.

டிசம்பர் பிற்பகுதியில், டாக்டர் கோஹெர், பாபாவிடம், "எங்களுக்கு அவர் (அலு) தேவை என்பதால் நீங்கள் ஏன் அவரை அழைக்கக் கூடாது" என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

அதற்கு பாபா, "**நேரம் வரும்போது நான் அவரை அழைக்கிறேன்**" என்று பதிலளித்தார்.

1968 நவம்பர் 26 அன்று, பாபாவிற்கு உடல்நிலை சீரில்லாமல் இருந்ததால், மண்டலியால் எனிமா வழங்கப்பட்டது. நவம்பர் 28ஆம் நாள், ஆதியின் சுழலும் அலுவலக நாற்காலி மெஹராஸாத்திற்குக் கொண்டுவரப்பட்டது, இதனால் பாபா திறந்த வெளியில் அமர்ந்து தினமும் சிறிது நேரம் சூரிய ஒளியில் நனைய முடிந்தது.

டிசம்பர் 3 அன்று பாபா அவரது அறையில் இருந்த, எளிதாக 'இடம்பெயர்க்கத்தக்க கழிப்பறை நாற்காலியில்' அமர்ந்திருந்தபோது கடுமையான தசைப்பிடிப்பு ஏற்பட்டது. இது திடீரென, வேகமாக உருவாகி மிகவும் வேதனையாக இருந்தது. அவர் முற்றிலும் வெளிர்ந்து காணப்பட்டார்; சில நேரம் உணவு உண்பதையும் நிறுத்தினார். எதிர்வரும் தரிசனத்தின் அழுத்தத்தை அவரது உடல் தாங்கும் வகையில் நன்றாக உணவு உண்ணுமாறு மண்டலி அடிக்கடி கேட்டுக் கொண்டனர்; ஆனால் அதைக் குறிப்பிடும் போதெல்லாம், பாபா சிறிதும் கவலையற்றவராகத் தோன்றி, "**தரிசனம் வழங்குவது எனக்குப் பெரிய விஷயமல்ல! கவலைப்படாதீர்கள், நான் தரிசனம் வழங்குவேன்**" என்று குறிப்பிட்டார்.

அந்த ஆண்டு மெஹர்புரி மற்றும் நௌரங்காவில் நடந்த மேளாக்களுக்கு, பாபா, ஸரோஷ், டாக்கேஃபால்கர், சகன் ஆகியோரைத் தனது பிரதிநிதிகளாக அனுப்பினார். அவர்கள் திரும்பி வந்ததும், பாபா, டிசம்பர் 8 காலை 9:30 மணிக்கு டாக்கே, அவரது மனைவி சஞ்சீவனி இருவரையும் மெஹராஸாத்திற்கு அழைத்தார். பாபாவின் ஹமிர்பூர் அன்பர்களின் அன்பால் சஞ்சீவனி வெகுவாக ஈர்க்கப்பட்டதை அறிந்த பாபா, "**மக்கள் எனது லீலையை** (தெய்வீக நாடகத்தை) **பார்க்க விரும்பினால், அவர்கள் ஆந்திரா அல்லது ஹமிர்பூருக்குச் செல்ல வேண்டும்**" என்று குறிப்பிட்டார்.

பூனா, ஸஸூன் பொது மருத்துவமனை (SASSOON GENERAL HOSPITAL) அதன் 100ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது, மேலும் இதைச் சிறப்பிக்கும் விதத்தில் பத்து நாள் நூற்றாண்டு விழாவிற்கான அமைப்புச் செயலாளர் பேராசிரியர் டாக்டர் ஜி.எஸ். முத்தாலிக் (PROFESSOR DR G.S. MUTALIK), பாபாவின் ஆசீர்வாதத்தைக் கோரி அவருக்குக் கடிதம் எழுதினார். பாபா (1968 செப்டம்பர் 10 அன்று) பின்வரும் செய்தியை வழங்கினார்:

**இந்த மருத்துவமனையின் நிர்வாகம், மருத்துவ மற்றும் பணியாளர் ஊழியர்களுக்கு எனது ஆசீர்வாதங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்; உலகையே ஈன்றெடுக்கும் நான் இந்த மருத்துவமனையில் ஈன்றெடுக்கப்பட்டேன்.**

ஜால்பாய் 1968 அக்டோபர் 3ஆம் தேதி மெஹராஸாத்திற்கு வந்து, ஸஸூன் மருத்துவமனை நூற்றாண்டு விழா கொண்டாட்டத்திற்காக ரூ.1,000 நன்கொடையாக சேகரித்து, அந்த விழாவிற்கான பாபாவின் செய்தியையும் சேர்த்து வழங்கினார்.

விழாவை சிறப்பிக்கும் முக்கிய நிகழ்ச்சி மருத்துவமனையை ஒட்டி அமைந்த கல்லூரி அரங்கத்தில் 1968 டிசம்பர் 1 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:00 மணிக்கு நடைபெற்றது. டாக்டர் ராம் கிண்டே, ஆதி, ஸரோஷ் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு, அன்றைய முதன்மை பேச்சாளர் கிரிஜானந்தன் துபே (GIRJANANDAN DUBE) என்பவருடன் இணைந்து உரை நிகழ்த்தினர். அன்றைய தினம் ஜால்பாய்க்கு பாபா அனுப்பிய தொலைத்தந்தியை டாக்டர் கிண்டே பொதுக்கூட்டத்தில் வாசித்தார்:

**பூனா, ஸஸூன் பொது மருத்துவமனையின் நூற்றாண்டு விழாவிற்காக, பி.ஜே. மருத்துவக் கல்லூரி** (B.J. MEDICAL COLLEGE) **அரங்கில் ஒன்று கூடியிருக்கும் உங்களுக்கு, 'இறை அன்பு மற்றும் ஏக இறைவனான உண்மைப்பொருள்' குறித்த எனது பழங்கால செய்தியை வழங்குகிறேன்.**

**‘இறை ஞானம், இறை சக்தி, இறை அன்பு’ என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ளும் இறை உணர்வை எய்த எனது அன்பையும், ஆசிகளையும் வழங்குகிறேன்.**

ஜால்பாயின் முயற்சியில் டிசம்பர் 9 அன்று மாலை 6:00 மணிக்கு, மெஹர் பாபா பிறந்த மருத்துவமனைக் கட்டிடத்தின் வெளிப்புறச் சுவரில் நிறுவப்பட்டிருந்த பாபாவின் பிறந்த தேதி பொறிக்கப்பட்ட பளிங்குப் பலகையைத் திறந்து வைக்கும் மற்றுமொரு நிகழ்ச்சி நடைபெற்றது. சகன் இந்தியில் குருநாதருக்கான பர்வர்திகார் பிரார்த்தனையை மொழிந்தார்; அதைத் தொடர்ந்து மஹாராஷ்டிரா சட்டமன்றத்தின் துணை சபாநாயகர் கே.டி. கிர்மே (K.D. GIRME) ஆங்கிலத்திலும் மராட்டியிலும், கீழ்வரும் வாக்கியங்கள் எழுதப்பட்ட பலகையை வெளியிட்டார்:

**அவதார் மெஹர் பாபா, ஸஸூன் பொது மருத்துவமனையில்,**
**1894 பிப்ரவரி 25ஆம் தேதி பிறந்தார்.**

இந்த நிகழ்ச்சியின்போது மருத்துவமனைக்கு பாபாவின் நன்கொடையை வழங்கி ஆதி உரை நிகழ்த்தினார்.

மேற்கு வங்காளத்தில் வாழும் பாபா-அன்பர்கள் 1968 டிசம்பர் 8 அன்று கொல்கத்தாவிற்கு வருகை தந்த பேகம் அக்தரை (BEGUM AKHTAR) வாழ்த்தும் விதத்தில் ஒரு சிறப்பு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். பாபா அவர்களுக்கு, கீழ்வரும் செய்தியை அனுப்பினார்.

**கடவுளின் அன்பை வழங்குவதற்கும், கடவுள் ஒருவரே உண்மையானவர், பிற அனைத்தும் மாயக்கனவுகள் என்ற யதார்த்தத்திற்கு அவர்களை எழுச்சியுறச் செய்வதற்கும் இறை-மனிதன் இங்கே மானிடனின் மத்தியில் இருக்கிறார்.**

சில தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி பாபாவிடம் ஆலோசனை கேட்டு கொல்கத்தாவிலிருந்து, மூர்த்தி கடிதம் ஒன்று எழுதியிருந்தார். பாபா கீழ்வரும் பதிலை அனுப்பிவைத்தார்: “**உங்கள் இதயம் எதைச் செய்யச் சொல்கிறதோ, அதைச் செய்யுங்கள்.**”

1968 டிசம்பர் 11ஆம் தேதி, பாபா அவரது எதிர்வரும் 75ஆவது பிறந்தநாளுக்காக இந்தச் செய்தியை வழங்கினார், ஆனால் ஜனவரி கடந்து செல்வதற்கு முன்னர் அதை அச்சிட்டு வெளியிட வேண்டாம் என்று ஆதிக்கு அறிவுறுத்தப்பட்டது:

**நான் உங்களுக்கு எதுவும் கொடுக்கலாம் என்பதற்காக என்னை நேசிப்பது என்பது, என்னை நேசிப்பதாகவே ஆகாது. உங்களுக்காக எதையேனும் அடையப் பெறுவதற்காக, எனது நோக்கத்தில் எதையும் தியாகம் செய்வது, பார்வைக்காக ஒரு குருடன் தனது கண்களைத் தியாகம் செய்வது போன்றது. நான் இறை-அன்பிற்குரியவன் ஆதலால் நான் நேசிக்கப்படுவதற்கு உகந்த இறை-மனிதன். இதன் காரணமாக என்னை நேசிப்பவர் அளவிறுதியற்ற பார்வையுடன் ஆசீர்வதிக்கப்பட்டு, என்னை எனது உண்மையான சுய ரூபத்தில் காண்பார்.**

பாபாவின் இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகள் 1968 நவம்பர் 28 அன்று பூனா, ரூபி ஹால் கிளினிக்கிற்கு (RUBY HALL CLINIC) அனுப்பப்பட்டன, ஆனால் சோதனை முடிவுகள் உறுதியற்றதாக இருந்தது (வழியில் மாதிரிகள் கெட்டுப்போயிருக்கலாம்). மேலதிக மாதிரிகள் டிசம்பர் 5 அன்று டாக்டர் டான் மூலமாக அனுப்பப்பட்டபோது, முடிவுகள் ஆபத்தான அளவுகளை வெளிப்படுத்தின. டாக்டர் (திருமதி) ஆர்.என். இச்சாபோரியா, நோயியல் நிபுணர் (DR. MRS. R.N. ICHAPORIA, THE PATHOLOGIST), டாக்டர் கோஹெருக்கு எழுதிய கடிதத்தில், பாபாவின் இரத்த அளவு (HEMOGLOBIN) 7 சதவீதமாக (சாதாரணமாக 14) குறைந்துள்ளதாகத் தெரிவித்தார். மேலும் அவரது இரத்த யூரியா (BLOOD UREA) 148 மி.கி. (இயல்பானது 20-40), உடலின் வளர்சிதை மாற்றத்தின் கழிவுப் பொருட்கள் சிறுநீரகங்களால் சரியாக வெளியேற்றப்படவில்லை என்பதைக் குறிக்கிறது. டாக்டர். இச்சாபோரியா எழுதினார்: “பாபாவிற்கு வாரத்திற்கு 2 கிராம் (12 சதவிகிதம்) என்ற அளவில் (இரத்த ஹீமோகுளோபின்) குறைந்து வருகிறது. அவருக்கு அவசரமாக இரத்தயேற்றம் தேவைப்படுகிறது மற்றும் வார இடைவெளியில் இரண்டு முறை அதிகமாகத் தேவைப்படுகிறது.”

டாக்டர். கிரான்டிடம் இது குறித்து ஆலோசிக்கப்பட்டது, அறிக்கையைப் பார்த்தவுடன் அவர் படித்ததை அவரால் நம்ப முடியவில்லை. ‘பாபா சுயநினைவுடன் இருக்கிறாரா?’ என்று டாக்டர் டானிடம் கேட்டதற்கு, பாபா முழு உணர்வுடன் இருக்கிறார் என்று அவர் பதிலளித்தார். கிரான்ட், முதல் இரத்த பரிசோதனையில் தவறு இருப்பதாக நினைத்து, டிசம்பர் 13 அன்று இரண்டாவது இரத்த அறிக்கைக்கு அழைப்பு விடுத்தார். ரத்தத்தில் யூரியா அளவு இப்போது 97 மி.கி., ஹீமோகுளோபின் 5.8 சதவீதமாக இருந்தது. எந்தத் தவறும் நடக்கவில்லை என ஊர்ஜிதமானது. யூரியா மற்றும் இரத்த சர்க்கரை அளவுகளில் முன்னேற்றம் தென்பட்டாலும், இரத்த எண்ணிக்கை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது மற்றும் இரத்தயேற்றம் உடனடியாகத்

தேவைப்பட்டது - சில வாரங்களுக்கு முன்பு, பாபா இதைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

13ஆம் தேதி காலை மெஹராஸாத்திற்குச் சென்ற ஆதி, "பாபாவை அவரது அறையில் பார்க்கிறேன். அவரது உடல் நிலை சற்றும் சரியில்லை. எரச், ஃபிரான்சிஸ், பாவ் கல்சூரி ஆகியோர் சிரமத்துடன் அவர் எழுந்து நிற்க உதவுகின்றனர்" என்று தனது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

1968 டிசம்பர் 15 ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணிக்கு, டாக்டர் கிரான்ட் மெஹராஸாத்திற்கு வந்தார். பூனாவிலிருந்து தனது செவிலியருடன் வந்து, பாபாவிற்கு ரத்தம் வழங்கி இதயத்துடிப்பின் (CARDIOGRAM) அளவீடு சோதனை செய்யப்பட்டது. மெஹர்ஜி, டாக்டர் வாடியா மற்றும் டாக்டர் இச்சாபோரியாவுடன் வந்தார், அவர்களுடன் ஆதி, டாக்டர் டான் ஆகியோரும் இருந்தனர்.

பாபா மிகவும் நல்ல மனநிலையில் இருந்தார்; பரிசோதனையின் போது மருத்துவர்களுக்கு ஒரு சிறிய சொற்பொழிவை வழங்கினார், "**இன்று உலகில் பாசாங்குத்தனம் உச்சத்தை எட்டியுள்ளது, நான் அதை அழிக்க வந்துள்ளேன்! பொருளுலக முன்னேற்றம் பராமரிக்கப்படும்; ஆனால் அதனுடன், மனிதன் தார்மீக ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் வளர வேண்டும்.**"

இரண்டு நாட்களுக்குப் பிறகு மேலும் இரத்தப் பரிசோதனைகள் செய்யப்பட்டு, இரத்த அளவுகள் சிறப்பாக இருந்தபோதிலும், யூரியாவின் அளவில் மாற்றம் எதுவும் இல்லாமல் அப்படியே இருந்தது. மும்பையிலிருந்து டாக்டர் கிண்டேயை வரவழைக்க எரச் பரிந்துரைக்கவே, அவர் 19ஆம் தேதி வந்தார். பாபாவின் தோற்றம் வெளிர்ந்து போய், அவரது பாதங்கள் மற்றும் கணுக்கால்களைச் சுற்றி வீக்கம் தென்பட்டது. அவர் அமர முடியாமல் கைகால்களில் தசைப்பிடிப்பு ஏற்பட்டது. அவருக்கு அவ்வப்போது தூக்கம் வந்தது. ஆனால் டாக்டர் கிண்டே அங்கு இருந்த சுமார் அரை மணி நேரத்தில், பாபாவின் உடல்நிலை தெளிவடைந்து, அவர் தனது வழக்கமான தோற்றத்தில் காணப்பட்டார். அவரை பரிசோதனை செய்த பிறகு, டாக்டர் கிண்டே வழக்கத்திற்கு மாறான மாற்றங்கள் எதையும் கண்டுபிடிக்கவில்லை. பாபாவின் இரத்த அளவு 8 சதவீதமாக இருந்தது மற்றும் இச்சாபோரியா சந்தேகித்ததற்கு இணங்க, உள் இரத்தப்போக்குக்கான எந்த அறிகுறியும் இல்லை என்று டாக்டர் கிண்டே கூறினார். பாபாவிற்கு மேலும் ஓர் இரத்தயேற்றம் தேவை என்று அவர் நினைக்கவில்லை. டாக்டர் கிண்டே அதே நாளில் மும்பைக்குத் திரும்பிச் சென்றார்.

பாபாவின் உடல்நிலை நிச்சயமாக மோசமடைந்து வந்தது. தினமும் மதியம் 20 நிமிடம் அவரது அறையில் தனியாக அமர்ந்து பணிபுரியும் போது, ஏற்கனவே குறிப்பிட்டது போல, பாபா தனது கை முட்டிகளால் தொடை மற்றும் மார்பில் அறைவதை இன்னும் வழக்கமாகக் கொண்டிருந்தார். இறுதியாக, டிசம்பர் மாதத்தில் ஒரு நாள், இதைச் செய்ய முடியாத அளவுக்கு அவர் பலவீனமடைந்தார். அவரது பணியின் உச்சக்கட்ட அழுத்தம் காரணமாக அவரது உடலில் பலவீனம் ஏற்பட்டது. எனவே, பாபா, பாவ் கல்சூரியை தன்னுடன் அறையில் இருக்க அனுமதித்தார், மேலும் அவர் பணிபுரியும் போது, பாவ் கல்சூரியிடம் அவரது தொடைகளிலும் மார்பிலும் அறையும்படி கட்டளையிட்டார். பாபாவின் தொடைகள் பளிங்கு போல கடினமாகிவிட்டன, உண்மையில் பாபாவின் உடலை அறைந்த போது, அது பாவ் கல்சூரிக்கு உடல் வலியை விளைவித்தது. பாவ் கல்சூரி, பாபாவைக் காயப்படுத்துவதாக எண்ணி, ஒரு நாள் பாபாவின் மார்பில் லேசாக அறைந்தார். ஆனால், பாபா மீண்டும் தனது மார்பில் அறையத் தொடங்கினார், அது அவருடைய வலியையையும் பலவீனத்தையும் மேலும் அதிகரித்தது. பாபா மீண்டும் தன்னால் இயன்றவரை அவரைத் தாக்கத் தொடங்கி, அதை அவர் ஜனவரி 30ஆம் தேதி வரை தொடர்ந்தார் - அதுவே பாபாவின் பணியின் கடைசி நாள்.

பாபா அவரது பிரபஞ்சத்திற்கான பணியைச் செய்துகொண்டிருந்தபோது, அவர் முற்றிலும் அதில் உள்வாங்கப்பட்டு, ஆழ்ந்திருந்தவர் போலத் தோன்றினார். அவரது கண்கள் திறந்தே இருந்தாலும், அவர் வேறு எங்கோ இருந்தார். உதாரணமாக, ஒரு நாள் பாபா தனது தொடையில் அறைந்தபோது, அவரது விரல் நகத்திலிருந்து இரத்தம் கசிவதை பாவ் கல்சூரி பார்த்தார். பாபா அதைக் கண்டுகொள்ளாமல் அவரது பணியைத் தொடர்ந்தார்.

டிசம்பர் 19 அன்று அமெரிக்காவின் வர்ஜீனியா கடற்கரையைச் சேர்ந்த, புகழ்பெற்ற, 'கண்கட்டு வித்தைகள்' (CLAIRVOYANT) புரியும் எட்கர் கெய்ஸி (EDGAR CAYCE) என்பவரின் மகன் ஹக் லின் கெய்ஸி (HUGH LYNN CAYCE), அவரது ஆன்மீக சங்கத்தின் மாணவர்களுடன் 1969 பிப்ரவரி மாதத்தில் இந்தியாவிற்கு வரவிருப்பதாக, ஆதிக்கு கடிதம் எழுதினார். முடிந்தால் மெஹர் பாபாவை சந்திக்க விரும்புவதாகவும் குறிப்பிட்டிருந்தார். தற்போதைக்கு பாபா ஏகாந்தவாசம் மேற்கொள்வதாகவும், சந்திப்பிற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்றும் ஆதி பதிலளித்தார்.

1968 டிசம்பர் 20 காலை 7:00 மணிக்கு, மெஹர்ஜி மீண்டும் டாக்டர் கிரான்ட் மற்றும் டாக்டர் இச்சாபோரியா இருவரையும் அழைத்து வந்து,

பாபாவிற்கு இரண்டாவது முறையாக புது இரத்தயேற்றம் வழங்கப்பட்டது. பாபா அவர் முன்னிலையில் மிக்க மகிழ்ச்சியாக இருந்ததோடு, மேலும் பல ஆன்மீக விஷயங்களை அவருக்கு விளக்கினார். பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: “**அனைவராலும் ‘எதிர்பார்க்கப்பட்ட நான்**’ (THE EXPECTED ONE) **இன்னமும் இந்தப் பௌதீக உடலில் இருக்கும்போதே ‘ஏற்றுக்கொள்ளப்பட்டவனாக**’ (ACCEPTED ONE) **இருப்பேன். எனது வெளிப்பாட்டின் போது அனைவரும் என்னை அறிவர், ஆனால் இப்போது என்னை அறிந்து நேசிப்பவர்களே உண்மையில் பாக்கியவான்கள்.**”

டாக்டர் கிரான்ட், பாபாவின் இதயத்துடிப்பை (ELECTROCARDIOGRAM) எடுத்து, அது சாதாரணமாக இருப்பதாகத் தெரிவித்தார்; ஒரு மணி நேரத்தில் அவர் மெஹர்ஜியுடன் புறப்பட்டுச் சென்றார். டாக்டர் இச்சாபோரியா முழு அளவு இரத்தயேற்றம் முடிவது வரை தங்கினார். ஓட்டுநர் யூஸுஃப், அவரை காரில் பூனாவிற்குத் திரும்ப அழைத்துச் சென்றார்.

டாக்டர் கோஹெர் இரவும் பகலும் பாபாவைக் கண்காணிப்பதில் மும்முரமாக இருந்தார்; அது ஒரு சோர்வுறச் செய்யும் சேவையாக இருந்தது. டாக்டர் கோஹெருக்கு உதவ நவ்ஸாரியிலிருந்து டாக்டர் ஹோஷங் பரூச்சாவை அழைக்க எரச் பரிந்துரைத்தார், ஆனால் பாபா, “**இப்போது இல்லை. தக்க நேரத்தில் அவரே வருவார்**” என்று பதிலளித்தார்.

இதற்கிடையில், பாபாவின் சகோதரர் ஆதி ஜூனியரின் மகன் தாராவின் (24) திருமணத்தை குமாரின் மகள் அம்ரித்துடன் (18) மெஹராஸாத்தில் நடத்த பாபா ஒப்புதல் அளித்திருந்தார். பல நாட்களாக பெண்டு, எரச், மணி ஆகியோர் இரண்டு நாள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளில் மும்முரமாக இருந்தனர். ஸரோஷ், விலூ, ஆதி ஆகியோரும் இந்த ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

திருமணத்திற்காக அழைக்கப்பட்டவர்களுக்கு 1968 டிசம்பர் 12 அன்று ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது:

1968 டிசம்பர் 22, 23ஆம் தேதிகளில் மெஹராஸாத்திற்கு வருகை தரும் பாபா-அன்பர்கள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்:

1) **பாபாவை யார் ஒருவரும் தரிசனம் செய்யக்கூடாது.**
2) **எவரும் அவரைத் தழுவக் கூடாது.**
3) **எவரும் அவருக்கு மாலை அணிவிக்கக் கூடாது. (அவருக்கு அருகில் பூக்கள் வைக்கப்படலாம்.)**
4) **ஒவ்வொருவரும் 22ஆம் தேதி காலை அவரை (முதலில் பெண்மணிகள் பின்னர் ஆண்கள்) வரிசையில் நின்று கடந்து**

**செல்வார்கள். பாபா கூறுகிறார், அதற்குரிய மனநிலையில் அவர் இருந்தால் அவரது கையை முத்தமிட அனுமதிக்கலாம்; இல்லையேல், ஒவ்வொருவரும் அவரைக் கூப்பிய கைகளுடன் மட்டுமே வணங்க வேண்டும்.**

பெண் பாபா-அன்பர்களுக்கான சிறப்பு வழிமுறைகள் சேர்க்கப்பட்டன:

1) **யார் ஒருவரும் மெஹரா, மணி அல்லது வேறு எவரையும் தழுவக்கூடாது.**
2) **கைகளைக் குலுக்குதல் அல்லது கையில் முத்தமிடுதல் எதுவும் அனுமதிக்கப்படாது. அனைவரும் மெஹராவையும், பிற பெண்மணிகளையும் கூப்பிய கரங்களுடன் 'ஜெய் பாபா' என்று கூறி வாழ்த்த வேண்டும்.**
3) **யார் ஒருவரும் மெஹராவிற்கு மாலை அணிவிக்கக்கூடாது** (அதாவது அவர் கழுத்தில் மாலை அணிவிக்கக்கூடாது), **ஆனால் கைகளில் பூக்களை வழங்கலாம்.**

குமார், மனைவி சுபத்ரா அவர்களது மகன், மகள் அம்ரித் ஆகியோர் 1968 டிசம்பர் 18 அன்று வந்தபோது, மெஹராஸாத்தில் பாவ் கல்சூரியின் அறையில் தங்க வைக்கப்பட்டனர். பாவ் கல்சூரி எரச்சுடன் தங்கினார்.

லண்டனிலிருந்து இரண்டு நாட்களுக்குப் பின்னர் 20ஆம் தேதி ஆதி ஜூனியர் மற்றும் குடும்பத்தினர் வருகை தந்தனர். அவர்களுடன் டக்ளஸ் - மோலி ஈவ் தம்பதியினரின் மகள் ஆன் ஈவ் (ANN EVE, 32, THE DAUGHTER OF DOUGLAS & MOLLIE EVE) வந்திருந்தார்; அவர் ஏறக்குறைய பத்து ஆண்டுகளாக அவர்களின் வீட்டு மாடியில் வசித்து வந்தார் மற்றும் நெருங்கிய குடும்ப நண்பராகிவிட்டார். ஆதி சில நாட்கள் மெஹராஸாத்தில் தங்கியிருந்து, பின்பு, பிங்கர் (BHINGAR) கிராமத்தில் ஃபிரீனி மற்றும் ஷிரீன் தங்கியிருந்த அவர்களது குடும்ப இல்லத்திற்குச் சென்றார்; தாரா, ஆன் இருவரும் ஸரோஷ் - விலூவின் இல்லத்தில் ஃபிரீனியின் தாய் மற்றும் சகோதரருடன் தங்கினர். முதலில் திருமண தேதி நவம்பரில் நிச்சயிக்கப்பட்டது, ஆனால் ஷிரீனுக்கு பள்ளி விடுமுறை காரணமாக ஜூன் மிகவும் வசதியாக இருக்கும் என்று ஆதி எழுதினார். இதற்கு பாபா இணங்கவில்லை, ஆனால் டிசம்பர் மாதத்தில் ஷிரீனின் குறுகிய கிறிஸ்மஸ் விடுமுறை நாட்களில் நடத்தலாம் என்று ஒப்புக்கொண்டார். திருமண தேதியை ஒத்திவைக்க பாபா இணங்கும் பட்சத்தில், "**நான் எனது பணியை சரிசீரமைக்க வேண்டியது வரும்**" என்று குறிப்பிட்டார்.

பிரதான இல்லத்திற்கு எதிரே அமைந்த மெஹராஸாத் பூந்தோட்டத்தில் சுமார் 300 நாற்காலிகள் அடங்கும் விதத்தில் நிழலுக்காக விதானம் ஒன்று

அமைக்கப்பட்டது. மதிய விருந்திற்கான ஏற்பாடுகள் உட்பட அனைத்தும் பிரமாதமாக நடந்தன. மும்பை, பூனா, அஹமதுநகர், மெஹராபாத் ஆகிய இடங்களிலிருந்து நெருங்கிய அன்பர்கள் இரண்டு நாட்களுக்காக அழைக்கப்பட்டனர், காலையில் வந்து மாலையில் திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நரிமன், அர்னவாஸ், கேட்டி, கோர்ஷெத் போன்றவர்கள் மெஹராஸாத்தில் தங்கியிருந்தனர்.

பாபாவின் உடல்நிலை மோசமாக இருந்தபோதிலும், அவர் இந்த விழாக்களுக்கு இணக்கம் தெரிவித்தார்; உண்மையில் அவை நடக்க வேண்டும் என்று விரும்பினார். நெருங்கிய அன்பர்களுக்கு கடைசியாக ஒரு முறை தரிசனம் வழங்குவது அவரது இரக்கத்தன்மையின் வெளிப்பாடாக இருந்தது, ஏனெனில் அங்கு அழைக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் அவரைப் பார்ப்பதற்கான கடைசி வாய்ப்பாக இருக்கும் என்று பாபாவிற்குத் தெரியும்.

மறுநாள் 1968 டிசம்பர் 21 சனிக்கிழமை அன்று, ஆதி ஜூனியரின் குடும்பம், ஆன் ஈவுடன் பாபாவைப் பார்க்க வந்தனர். மணமகன், மணமகள் இருவருக்கும் இடையிலான முதல் சந்திப்பாகவும் இது இருந்தது; ஆனால் மெஹராஸாத்தை வந்தடைந்ததும், அம்ரித் ஜூரத்தால் அவதியுற்றதால், அவருக்கும் தாராவுக்கும் இடையே எந்த சந்திப்பும் அன்று நிகழவில்லை.

டிசம்பர் 22 ஞாயிற்றுக்கிழமை, கொண்டாட்டங்களின் முதல் நாள் - மெஹராவின் பிறந்தநாள், தாரா மற்றும் அம்ரித்தின் நிச்சயதார்த்தம் மற்றும் தாதாச்சாஞ்சி குடும்பத்தின் நான்கு குழந்தைகளின் நவ்ஜோத் விழா ஆகியவற்றை சிறப்பிக்கும் மூன்று நிகழ்வுகள் நடந்தன. ஹோஷங் - ஹவோவி தாதாசாஞ்சி இருவரும் முதலில் அர்னவாஸ் மூலமாக பாபாவிடம் தங்கள் மகன் ரெயோமண்ட் (RAOMAND, 10) மற்றும் மகள் மெஹர்ருக் (MEHERRUKH, 7) ஆகியோரின் புனிதநூல் விழாவை 1969 மே மாதத்தில் குருபிரசாத்தில் நடத்தும் விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டனர், ஆனால் பாபா 'இல்லை' என்று பதிலளித்தார். மெஹராவின் பிறந்தநாளில் அதைச் செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு பாபா, 'ஒப்புதல்' (கபூல்) வழங்கினார்!"

**"இவர்களைத் தவிர இதே வயதிலான குழந்தைகள் உள்ளனரா? அவர்களுக்கும் அதே நேரத்தில் புனிதநூல் விழாவை நடத்துவது நல்லது"** என்று பாபா பரிந்துரைக்க, தாரா தாதாதாஞ்சியின் மகன் நவோஸர் (NAOZER, 6) மற்றும் டாலி தஸ்தூரின் சகோதரி, ரோஷன் ஈரானியின் மகள், மெஹர்னாஸ் (MEHERNAZ, 7) ஆகியோரும் விழாவில் இணைக்கப்பட்டனர்.

அன்று காலை, சுமார் 200 விருந்தினர்கள் பேருந்துகள் மூலம் மெஹராஸாத்திற்கு வந்தனர். பாபா அவரது அறையில் இருந்தார், எரச், பாவ்

கல்சூரி இருவரும் அவரை சக்கர நாற்காலியில் வராண்டாவிற்கு அழைத்து வந்தனர். அனைவரும் 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்று திரும்பத் திரும்ப கோஷமிட்டு அவரை வரவேற்றனர். மெஹராவிற்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் என்ற பாடலுடன் நிகழ்ச்சி தொடங்கியது. தாரா வராண்டாவில் அமர வைக்கப்பட்டார், விரைவில் பெண் மண்டலி அம்ரித்தை வெளியே அழைத்து வந்தனர். மெஹராவின் பிறந்தநாளுக்காக ஃபிரான்சிஸ் இயற்றிய கவிதையை ஆதி ஜூனியர் வாசித்தார்; அன்று காலையில் பாபா முன்னிலையில் இது வாசிக்கப்பட்டது, விருந்தினர்கள் அதைக் கேட்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

பாபா மோதிரங்களைத் தொட்டு ஆசீர்வதித்ததைத் தொடர்ந்து, தாராவும் அம்ரித்தும் அவர் முன்னிலையில் மோதிரங்களை மாற்றிக் கொண்டனர். அதற்குப் பிறகு, நான்கு குழந்தைகளும் தங்கள் நவ்ஜோத் அலங்காரத்துடன் பாபாவின் முன்னால் வந்தனர். "ஓ அஹுரமஸ்தா, அஷோ (ASHO - கர்த்தர்) ஸொராஸ்டர், அவதார் மெஹர் பாபா!" என்ற எளிய வழிபாட்டுப் பிரார்த்தனை மொழியப்பட்டதைத் தொடர்ந்து, பாபாவின் கீழ்வரும் செய்தி வாசிக்கப்பட்டது:

**மதச் சடங்கு சம்பிரதாயங்கள் ஒருவரை மாயாவிலிருந்து விடுவிப்பதற்கு பதிலாக, அதனுடன் உறுதியாகப் பிணைக்கின்றன. மக்களை இதுபோன்ற சடங்கு சம்பிரதாயங்களிலிருந்து விடுவிக்க வந்துள்ளேன். அன்பின் மூலமாகத்தான் கடவுளை அடைய முடியும்; ஆகையால், நான் யார் என்பதை நீங்கள் அறியும் வரை, மேலும் மேலும் என்னை நேசிக்கவும்.**

கோகிலா, ருஸ்தம் காக்கா இருவரும் ஒவ்வொரு பாடலைப் பாடினர், அதைத் தொடர்ந்து தரிசன நிகழ்ச்சி தொடங்கியது. பாபா வராண்டாவில் சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்க, அனைவரும் வரிசையில் நின்று, கூப்பிய கைகளுடன் மேலே வந்து அவரைக் கடந்து சென்றனர். பாபா தரிசனத்தின் போது 'வெகு தொலைவில்' இருப்பது போலத் தோற்றமளித்தாலும், தமக்கு முன் வரும் நபர்களை நேருக்கு நேர் பார்த்து, தனது கைகளை மார்புக்கு முன்னும் பின்னுமாக நகர்த்தி, அவர்களின் மரியாதையை ஏற்றுக்கொண்டார். ஒரு கட்டத்தில் பாபா, "**என்னை நன்றாகப் பாருங்கள்... நான் பூனாவில் தரிசனம் வழங்கும்போது, இப்போது என்னைப் பார்ப்பது போல நீங்கள் பார்க்க மாட்டீர்கள்**" என்று குறிப்பிட்டார்.

அனைவருக்கும் தரிசனம் வழங்கிய பின்பு, பாபா மீண்டும் தமது அறைக்குத் திரும்பிச் சென்றார். விருந்தினர் விரும்பியதை உண்ணும் வகையில் தானே பரிமாறிக் கொள்ளும் தொகுப்பு உணவு வழங்கப்பட்டது. முதலில் அவரது உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, பாபா விழாவில் கலந்துகொள்வது

சாத்தியமில்லை எனத் தோன்றியது, ஆனால் முதலில் திட்டமிடப்பட்டதை விட வராண்டாவில் அதிக நேரம் செலவழித்து அனைவரையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கினார். பாபா, மெஹர்ஜியை அவரது அறையில் அழைத்த போது, அவர் பாபா மிகவும் பலவீனமாகவும் உடல் நலிவுற்றும் இருப்பதைக் கண்டு கண் கலங்கினார்.

டிசம்பர் 23 திங்கட்கிழமை காலை, தாரா, அம்ரித் இருவரும் அஹமதுநகரில் காலை 8:00 மணிக்கு விலூ வில்லாவில் பொது விழாவில் திருமணம் செய்து கொண்டனர்; மணமக்கள் பாபாவின் ஆசீர்வாதத்தை நாடி மெஹராஸாத்திற்கு, முந்தைய நாள் வருகை தந்த அதே 200 விருந்தினர்களுடன் அழைத்துவரப்பட்டனர். நிகழ்ச்சிகள் தொடங்குவதற்கு முன்பு, பாபா தமது பூனா அன்பர்களான சதாஷிவ் பாட்டீல், ஸோமன், காம்ப்ளே ஆகியோரை தனது அறைக்கு அழைத்தார். பாபாவின் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்ததைக் கண்டு சதாஷிவ் கண்ணீர் விட்டு அழுதார். பாபா அவரிடம், "**நான் விரைவில் சீராகி என் அன்பர்களுக்கு தரிசனம் வழங்குவேன்**" என்று உறுதியளித்தார்.

அவரது உடல்நிலை மோசமாக இருந்தபோதிலும், பாபா தனது உடல் உபாதைகளைக் குறித்து '**ஒன்றும் இல்லை**' என்று கேலி செய்து, அனைவரையும் உற்சாகப்படுத்தினார். ஆனாலும், அன்பர்கள் அவரது நிலையை தாங்களாகவே பார்த்து, அவரது துன்பத்தை 'தரிசனம்' செய்தனர்.

பாபா வராண்டாவில் சக்கர நாற்காலியில் அழைத்துவரப்பட்ட போது, அம்ரித், தாரா இருவரையும் ஆசீர்வதித்தார். ஸரோஷின் சிறிய பேத்தி ஹோமாய் நடனம் ஆடினார். நடனத்திற்குத் துணையாக இசையுடன் கூடிய இசைத்தட்டு பலனளிக்காததால், ஸரோஷின் மகள் குல்னார் கைகளால் தாளமிட வேண்டியதாயிற்று.

பாபா கூட்டத்தில் இருந்த அனைவரிடமும் கூறினார்: "**நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் பார்க்கும் இந்த உடல் நான் அல்ல. நான் எல்லையற்ற அன்பின் இறைப்பெருங் கடல். நான் அவதார புருஷர் என்பதை உலகுக்கு வெளிப்படுத்தும் நேரம் வந்துவிட்டது**."

அப்போது வேடிக்கையான ஒன்று நடந்தது. பல நாட்களாக, காக்கா 'தனித்துவமான' கீர்த்தனை ஒன்றை இசைக்கத் தொடங்கினார். அவர் கைகளைத் தட்டி, "ஹோ, ஹோ, ஹோ!" எனக் குரல் எழுப்பியது மண்டலியையும் பாபாவையும் சிரிப்பில் ஆழ்த்தியது. காக்கா வராண்டாவிற்குச் சென்று தனது கீர்த்தனையைத் தொடங்கியதும், குமார், எல்சா மிஸ்திரி இருவரும் அவருடன் இணைந்தனர், அங்கிருந்த அனைவரும் அதை மனமார ரசித்தனர்.

பெஹராமின் மகன்களான இரட்டையர், ருஸ்தம் மற்றும் ஸொராப், தங்கள் நண்பர் ஒருவருடன் ஒரு நகைச்சுவையான பாடலை (அந்த வாளியில் ஒரு துளை உள்ளது - THERE IS A HOLE IN THE BUCKET) பாடியது பாபாவை சிரிக்க வைத்தது. கடந்த முறை பார்த்தபோது, இரண்டு சிறுவர்களும் மிகவும் பருமனாக இருந்தனர்; பாபா அவர்களின் எடையைக் குறைக்குமாறு அறிவுறுத்தியதன் விளைவு, இந்த முறை அவர்கள் மிகவும் மெலிந்து காணப்பட்டனர்; இதுவும் பாபாவை மகிழ்வித்தது.

அன்பர்கள் கூட்டம் மீண்டும் தரிசனத்திற்காக பாபா முன்னால் வந்தது. பாபா அவரது அறைக்குச் செல்வதற்கு முன்னர், "**இன்று எனது தரிசனத்தை அடையப் பெற்ற நீங்கள் அனைவரும் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்**" என்று குறிப்பிட்டு, "**எனது நேரம் நெருங்கிவிட்டது**" என்று சைகையால் தெரிவித்தார்.

மீண்டும் மதிய வேளையில் தாமே விரும்பி உண்ணும் தொகுப்புணவு வழங்கப்பட்டது.

ஒரு கட்டத்தில், பாபா, பபாயையும் (BAPAI), மும்பையில் வாழும் அவரது மகள் மெஹர் தேசாய் (MEHER DESAI) இருவரையும் தமது அறைக்கு அழைத்தார். மெஹர் தேசாய், பாபாவின் விருப்பப்படி மருத்துவம் பயின்று, மெஹராஸாத்தில் நிரந்தரமாக பாபாவின் சேவையில் இருக்க விரும்பினார். பாபா, அவரிடம், "**தற்போது நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ, அதையே தொடருங்கள், பிறகு பார்க்கலாம்**" என்று கூறினார். அவர் விரும்பினால் மேற்படிப்புக்காக வெளிநாடு செல்ல பாபா அனுமதித்தார்.

மதிய உணவுக்குப் பிறகு, விருந்தினர்கள் அனைவரும் தத்தமது இல்லங்களுக்குத் திரும்பினர்.

தமக்கு நெருக்கமான அன்பர்களுக்கு தரிசனம் வழங்குவது மட்டுமின்றி, ஜாதி, மத பேதங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே இந்தத் திருமணத்தை ஏற்பாடு செய்ததில் பாபாவின் பணியின் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம்; ஏனெனில், தாரா ஒரு ஸொராஸ்ட்ரியன், அம்ரித் ஓர் இந்து; மேலும் கலப்பு-சாதி திருமணங்கள் இந்தியாவில் மிகவும் அரிதானவை. சாதாரண திருமணமாக இருந்திருந்தால், பாபா தனது துன்பத்தின் உச்சக்கட்டத்தில் அதை நடத்த ஒப்புக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். இந்த அர்த்தத்தில், இது ஒரு வரலாற்று நிகழ்வு மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு முன்னோடியாக இருக்கலாம்.

கோர்ஷெத், கேட்டி, நர்கிஸ் ஆகியோர் 24ஆம் தேதி மும்பைக்குத் திரும்பிச் சென்றனர்; திருமணத்திற்குப் பிறகு நரிமனும் அர்னவாஸும் மெஹராஸாத்தில் மூன்று வாரங்கள் தங்கினர். அம்ரித்தின் பெற்றோரான குமார்,

சுபத்ரா இருவரும் டிசம்பர் 26ஆம் தேதி டெஹ்ரா டூனுக்கு திரும்புவதற்காக மெஹராஸாத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

1968 டிசம்பர் 24 செவ்வாய் அன்று, டெஹ்ரா டூனைச் சேர்ந்த கேக்கி நலவாலா தனது மனைவி ஃப்ரீனி மற்றும் மகன் நவ்ஷேர்வானுடன் (NAOSHERWAN) மெஹராஸாத்திற்கு வந்தார். தம்பதியரின் உடல்நிலை குறித்து பாபா கேட்டார்; அவரே மிகவும் மோசமான நிலையில் இருந்தபோது பாபாவின் அன்பான அக்கறையைக் கண்டு அவர்கள் கண் கலங்கினர்.

உரையாடல் அப்போது நவ்ஷேர்வானுக்கு எந்த வேலை சிறப்பானதாக இருக்கும் என்ற தலைப்பை நோக்கிச் சென்றது; மேலும் பாபா அவர்களுக்கு சில ஆலோசனைகளை வழங்கினார். அவருக்கு முன்னால் பல வாய்ப்புகள் இருந்தன - ஒன்று 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' (TIMES OF INDIA) பத்திரிகையில் பணிபுரிவது, மற்றொன்று 'ஏர் இந்தியா' (AIR INDIA) நிறுவனம். கேக்கி தனது மகன் இராணுவத்தில் பணிபுரிவதை விரும்பினார். பாபா அந்த இளைஞனிடம், **"நீங்கள் என்ன விரும்புகிறீர்கள்?"** என வினவினார்.

"பாபா, உங்கள் முடிவை நான் ஏற்றுக்கொள்வேன்" என்று நவ்ஷேர்வான் பதிலளித்தார்.

பாபா, மண்டலியிடம் வினவவே, எரச், "எதுவாயினும் பாபா, ஏற்கனவே ஒரு 'பேனா' அவருடைய கையில் உள்ளது (அதாவது, அவர் எழுத்தில் ஆர்வம் மிக்கவர்) அதனால் ஏன் 'டைம்ஸ் ஆஃப் இந்தியா'வாக இருக்கக் கூடாது?" என்றார்.

பாபா அதையே ஆமோதித்து, **"நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்"** என்று நவ்ஷேர்வானுக்கு உறுதியளித்தார். நவ்ஷேர்வான் ஒரு வருடம் 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' நிறுவனத்தில் பணியாற்றினார், ஆனால் பின்னர் 'ஏர் இந்தியா'வுடன் சிறந்த வாய்ப்பை அடையப் பெற்றார்.

டிசம்பர் 26 முதல், பாபாவின் தசைப்பிடிப்பு அதிகரித்தது. சிறிய அசைவுகளும் சில நேரங்களில் தசைப்பிடிப்பை விளைவித்தது. மாத இறுதியில், அவரது இரத்த அளவு 10 சதவீதத்தில் நிலையாகவும், யூரியா அளவு மிகையாக 136 மி.கி.ஆகவும் இருந்தது.

டாக்டர் கிண்டே அதைப் பற்றி கவலைப்படுவதாகவும், அதற்கான காரணத்தை புரிந்து கொள்ள முடியவில்லை என்றும் எழுதினார். ஆனால் டிசம்பர் 20 அன்று பாபாவின் இரண்டாவது இரத்தயேற்றத்திற்குப் பின்னர், அவர் கூறாதவரை எந்த மருத்துவரையும் அழைக்கக்கூடாது என்று பாபா கட்டளையிட்டார். கோஹெர், பாபாவின் யூரியா அளவை நினைத்து அஞ்சினார்,

எனவே டாக்டர் டான், பாபாவின் உடல்நிலையைச் சென்று பார்க்க அனுமதிக்கப்பட்டார். பூனா தரிசனம் பற்றி மண்டலி பேசும் போதெல்லாம், "**அதைப் பற்றி கவலைப்படாதீர்கள்**" என்று பாபா சாதாரணமாக பதிலளிப்பது வழக்கம். சில நாட்கள், அவருக்குத் தசைப்பிடிப்புகள் இல்லாமல் இருந்தாலும் அவை அவ்வப்போது தோன்றியது. பாபா அடிக்கடி மண்டலியிடம், "**நேரம் நெருங்கிவிட்டது**" என்று கூறிவந்தார்.

இப்படியாக 1968ஆம் ஆண்டின் கடைசி நாட்கள் வேதனையுடன் கழிந்தது. பாபா எல்லையற்ற துன்பம் எனும் அரவை ஆலையில் தனது உடலை நசுக்கிக் கொண்டிருந்தார், மேலும் அவரது பலவீனமான ஆரோக்கியத்தைக் குறித்து ஆண், பெண் மண்டலி அனைவரும் கவலையுடனும் மிகுந்த அக்கறையுடனும் இருந்தனர். இருப்பினும், பாபா அவரது உண்மையான உடல் நிலையை தொடர்ந்து மறைத்து, "**நான் கடவுள் என்பதை மறந்துவிடாதீர்கள்! அனைத்தும் நான் அறிவேன். நான் சொல்வதைச் செய்யுங்கள்**" என்று கூறினார்.

அவர் இவ்வாறு விளக்கினார்: "**எனது உலகளாவிய சுமையின் அழுத்தம் என் உடல் மீது பிரதிபலிக்கிறது. மேலும் ஏகாந்தவாசத்தில் நான் புரியும் பணியின் சிரமம் கடுமையாக இருப்பதால், என் உடலில் அதன் விளைவும் கடுமையாக உள்ளது. அதன் விளைவு மனித ரீதியில் இருந்தாலும், காரணம் தெய்வீகமானது, எனவே அது எனது கைகளில் உள்ளது.**"


அவர் இறுதியாகக் கூறி முடித்தார்: "**மானிடனின் துன்பத்தை எனது தோள்களில் தாங்கிக்கொள்ள நான் மனித வடிவம் எடுத்துள்ளேன்.**"

ஆதி ஜூனியர், லண்டனிலிருந்து ஒரு பழங்கால பித்தளையிலான எச்சரிக்கை மணி ஒன்றைக் கொண்டு வந்திருந்தார்; அது பாபாவின் படுக்கையறையின் கதவுக்கு வெளியே தொங்கவிடப்பட்டிருந்தது. அதில் அறைந்து ஓசை எழுப்பியதும், எரச், பாவ் கல்சூரி இருவரும் அவரது அறைக்கு விரைந்தனர். பெண்மணிகளும் ஆண்களும் இந்தக் காலகட்டத்தில் பாபாவிற்கு சேவை செய்ய தங்களால் இயன்றதைச் செய்தனர். மிகவும் உதவியற்ற நிலையில், பாபா அவர்களுக்கு அதற்கான வாய்ப்பை வழங்கினார்.

காலம் குறிப்பிட்டது போல, 'மனிதகுலத்திற்காக பாபாவின் துன்பம் புது வருடத்தில் எல்லையற்ற துயரத்தின் அதே பாடலுடன் ஒலித்தது; அதன் எதிரொலி அவரது விருப்பத்திற்கு முற்றிலும் இணங்கியதாக இருந்தது. பிரபஞ்சத்தின் இதயத் துடிப்பு அவதார புருஷரின் விருப்பத்தைப் பொறுத்தது;

அதன் துடிப்பை சாதாரணமாக வைத்திருக்க, அவதார புருஷர் பிரபஞ்சத்தின் துன்பத்தை தம் மீது தாங்கிக் கொள்கிறார்."

இருப்பினும், பாபா துன்பப்படுவதைப் பார்ப்பது மண்டலிக்கு வேதனையாக இருந்தது. அவரது எல்லையற்ற வேதனையால் மட்டுமே (அதுவும் மௌனத்தில் தவித்து) உலகின் துடிப்பை சீராக வைத்திருக்க முடியும். எல்லையற்ற பேரின்பம் மற்றும் எல்லையற்ற துன்பம் என்ற போர்வையில் தம்மை மறைத்திருந்தாலும், அனைத்தும் அவரது விருப்பத்திற்கு இணங்க நடந்தது.



மெஹர் பாபா, மெஹராஸாத், **22 டிசம்பர் 1968**

(MEHER BABA, MEHERAZAD, 22 DECEMBER 1968)

# காலத்தின் கண்ணீர் - இறுதி மாதம்

(**Age Weeps Again - Last One Month**)

1969 ஜனவரி 1 புதன்கிழமை அன்று, ஆந்திராவைச் சேர்ந்த சிந்தா சர்வராவ், மெஜட்டி ராமமோகன ராவ், மாணிக்யாலா ராவ் ஆகியோர் அனுமதிக்கப்படவே மூவரும் ஆதியுடன் மெஹராஸாத் வந்தனர். காலை 9:00 மணியளவில் பாபா அவரது இருசக்கர நாற்காலியில் மண்டலி மண்டபத்திற்குள் நுழைந்தார். விஜயவாடாவில் பாபாவின் பெயரில் மூவரும் செய்து வரும் பணியை பாராட்டிய அவர், “**நேரம் நெருங்கிவிட்டது. நான் உங்கள் மூவரையும் சந்திப்பது உங்கள் அதிர்ஷ்டம்**” என்று குறிப்பிட்டார். பாபா மாணிக்யால ராவிடம் அவரது தனிப்பட்ட மற்றும் குடும்ப விவகாரங்களைக் குறித்து கேட்டார். பாபாவின் சகவாசத்தில் சுமார் அரை மணி நேரம் அமர்ந்து, மூவரும் புறப்பட்டுச் சென்றனர்.

இந்தியாவிலும் பிற இடங்களிலும் வாழும் இதர நெருங்கிய அன்பர்களும் பாபாவைப் பார்க்க அனுமதி கோரினர், ஆனால் அவர்களுக்கு இந்த செய்தியை அனுப்பினார்: “**பூனாவிற்கு வாருங்கள். அப்போது நான் ஏகாந்தவாசம் கடைப்பிடிக்க மாட்டேன்.**”

மேலும் இரத்தம், சிறுநீர் மாதிரிகள் ஜனவரி 2 அன்று பூனா மருத்துவமனைக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டன. யூரியாவின் அளவு இன்னும் அதிகமாகக் காணப்பட்டதால், பாபா புரதம் உட்கொள்வதைக் கட்டுப்படுத்துமாறு கோஹெருக்கு அறிவுரை கூறி டாக்டர் கிரான்ட் பதில் எழுதினார். கல்லீரல் மற்றும் எலும்பு ரசம் (SOUP) நிறுத்தப்பட வேண்டும், பாபாவின் சிறுநீரகங்கள் மற்றும் சுக்கிலச் சுரப்பியை (PROSTATE) பரிசோதிக்க வேண்டும்.

ஜனவரி 4ஆம் தேதி அஹமதுநகரை சேர்ந்த டாக்டர் ஜி.வி. கேட்கரை (DR. G.V. KETKAR) மெஹராஸாத்திற்கு ஆதி அழைத்து வந்தார். அவர் பாபாவின் அடிவயிறு லேசாக விரிவடைந்திருப்பதைக் கண்டார், ஆனால் அங்கு திரவங்கள் சேமிக்கப்பட்டதற்கான எந்த அறிகுறியும் இல்லை, மேலும் சுக்கிலச் சுரப்பி பெரிதாகவுமில்லை, மாறாக தட்டையாகவும் உறுதியான நிலையிலும் இருந்தது. யூரியா அளவு அதிகரித்து வருவதால் டாக்டர் கேட்கர் முழு சிறுநீரக பரிசோதனையை மட்டுமே பரிந்துரைக்க முடியும். ஆதி ஜூனியர் மும்பையில் ஒரு நிபுணரைப் பற்றி அறிந்திருந்தார், அவரை அடுத்த நாள் தொடர்பு கொள்ள முயன்றார், ஆனால் அவரை அணுக முடியவில்லை.

**1969** ஜனவரி **5** ஞாயிறு அன்று மதியம், மேரி ரோஸலன்ட் பென்னட் (MARY ROSALIND BENNETT) என்ற இளம் ஆஸ்திரேலியப் பெண், எதிர்பாராத விதமாக மெஹராஸாத் வந்தடைந்தார். ஸிட்னி நகரைச் சேர்ந்த அவர், அங்கு வாழும் சில இளம் பாபா-அன்பர்கள் மூலம் பாபாவைப் பற்றி அறிந்துகொண்டார். மேரி ஒரு 'மலர்-குழந்தை' (FLOWER-CHILD - ஹிப்பி வகையைச் சார்ந்தவர்) போலத் தோற்றமளித்தார் மற்றும் இந்தியாவைச் சுற்றி அலைந்து திரிந்து கொண்டிருந்தார். அவர் ரயிலில் பயணம் செய்து, அன்று காலை அஹமதுநகர் ரயில் நிலையத்திலிருந்து ஒன்பது மைல் தூரம் வெறுங்காலில், தோளில் கிட்டாரை மாட்டிக்கொண்டு, லீ & ஸ்டீவன் கேம்ப்பெல் (LEIGH & STEVEN CAMPBELL) இருவரும் தயார் செய்த பாபாவின் சித்திரத்தை (POSTER) வழங்குவதற்காக மெஹராஸாத்தை நோக்கி நடந்தார். மணி அவரை வரவேற்றபோது அவர், பெண் மண்டலிக்காக ஒரு பாடலை கிட்டாரில் வாசித்தார்; பின்னர் அவர் பாபாவின் படுக்கையறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்; அங்கு அவர் தனது கிட்டாரை இசைத்து அவருக்காக ஒரு பாடலையும் பாடினார்.

பாபா, மேரியை '**மஸ்தானி**' என்று அழைத்து, கேம்ப்பெல் தம்பதியினர் வரைந்த சித்திரத்தைப் பார்க்க விரும்பினார். '**அந்த வருட கோடையில் குருபிரசாத்தில் நிகழவிருக்கும் தரிசனத்தில் கலந்துகொள்ளுமாறு**' பாபா அவரிடம் வற்புறுத்தினார். மேரி பென்னட் மீண்டும் அஹமதுநகருக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் நீராடி விலூ வில்லாவில் இரவு உணவை உண்டு, அன்று இரவே டெல்லிக்கு ரயிலில் பயணம் செய்தார். வருடங்கள் கடந்தும் அவரிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை.

ஸரோஷின் மருமகன் ஹிர்ஜி ஏடென்வாலா (HIRJI ADENWALA), தாராவின் திருமணத்திற்காக அஹமதுநகர் வந்திருந்தார். அவரும் அவரது மனைவி குல்னாரும் ஒவ்வொரு டிசம்பர் மாதத்தில் வருவதும், பாபாவை சந்திப்பதற்காக ஸரோஷ், விலூ இருவரும் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்வதும் வழக்கம். ஹிர்ஜி ஒரு மருத்துவராக மும்பைக்கு அருகில் பணிபுரிந்தார், மேலும் அவரிடம் பாபாவின் இரத்த அறிக்கைகள் பரிசீலனை செய்ய வழங்கப்பட்டன. அவர் ஆதி சீனியர், டாக்டர் டான், டாக்டர் கேட்கர் ஆகியோருடன் பாபாவின் உடல்நிலை குறித்து விவாதித்தார். மெஹராஸாத், தேவையான சோதனைகளுக்குப் பொருத்தமற்ற இடமாக இருப்பதாக ஹிர்ஜி கருத்துத் தெரிவித்தார், ஆனால் பாபாவின் தற்போதைய உடல் நிலையைப் பொறுத்தவரை, எந்த அவசர சிகிச்சையும் தேவை என்று அவர் கருதவில்லை. அந்தத் தகவலை டாக்டர் கோஹெருக்குத் தெரிவிக்க, ஞாயிற்றுக்கிழமை,

டாக்டர் ஹிர்ஜியை முன்னறிவிப்பு ஏதுமின்றி டாக்டர் டான் மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்றார். அவர் பாபாவை பரிசோதிக்க விரும்பினார். டாக்டர் ஹிர்ஜியின் இந்தத் தலையீட்டில் பாபா மகிழ்ச்சியாக இல்லை, ஆனால் அவரைப் பார்க்க ஒப்புக்கொண்டார்.

டாக்டர் ஏடென்வாலா, பாபாவின் அறைக்குள் நுழைந்ததும், அவரிடம் வாயைத் திறக்குமாறு கூறி, முகர்ந்து பார்க்க விரும்பினார். அவர் கவனக்குறைவாக தனது ஸ்டெதஸ்கோப்பைக் (STETHOSCOPE) எடுத்து வர மறந்துவிட்டதால் பாபாவின் இதயத்துடிப்பை உணர அவரது மார்பின் மீது காதை வைக்குமாறு அறிவுறுத்தியதும், அதை அவர் செய்தார். அவர் இரண்டு அல்லது மூன்று கேள்விகளைக் கேட்டதற்கு பாபா கை சைகைகள் மூலம் தெளிவாக பதிலளித்தார். ஹிர்ஜி ஆச்சரியத்தில் ஆழ்ந்தார், ஏனெனில் அறையை விட்டு வெளியே வந்த பிறகு, டாக்டர் கோஹெர் மற்றும் எரச்சிடம் அவர் கூறியதற்கு இணங்க, இரத்த ஓட்டத்தில் யூரியாவின் அளவு அசாதாரணமாக அதிகரித்து இருக்கும் எவரும் சுயநினைவுடன் இருக்க முடியாது, மிகக் குறைவாகவே ஒன்றை அறிந்துகொள்ள முடியும், மேலும் அறை முழுவதும் துர்நாற்றம் நிரம்பியிருக்க வேண்டும். இங்கு அப்படி எதுவும் இல்லை. பாபா முழு சுயநினைவுடன் இருந்தார், அவருடைய வாயிலிருந்து துர்நாற்றம் வீசவில்லை.

டாக்டர் ஏடென்வாலா, “இது அசாதாரணமானது! இந்த நிலையில், பாபாவை இங்குத் தங்கவைப்பது விரும்பத்தக்கது அல்ல. அவரை பூனாவிற்கு அழைத்துச் சென்றால் முழுமையான பரிசோதனை செய்யலாம்” என்றார்.

இந்த நேரத்தில், சகன் ஒவ்வொரு நாளும் மெஹராஸாத்திற்குச் சென்று பாபாவின் அருகில் சில மணிநேர கண்காணிப்புப் பணியைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினார்.

1969 ஜனவரி 7 செவ்வாய் அன்று, பாபா வழங்கிய சுற்றறிக்கை ஆதியின் அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்டது (வாழ்க்கை சுற்றறிக்கை எண்: 71, தேதி: ஆகஸ்ட் 15):

**பிரியமான அவதார் மெஹர் பாபாவின் மூன்று வருட அயராத உழைப்பு, அவரது உடல்நிலையை சிதைத்து விட்டது என்பதை அவரது அன்பர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என விரும்புகிறார். இதையும் மீறி, உலகெங்கிலும் வாழும் தமது அன்பர்களை அடுத்த கோடையில் தரிசனத்திற்காக வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்; ஏனெனில், அதுவே அவரிடம் வந்து, அவரது அன்பை அடையப் பெறுவதற்கு உகந்த நேரம்.**

இதுவே அந்த நேரம்; இடம், 'குருபிரசாத், 24, பந்த் கார்டன் ரோடு, பூனா', என தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவரது தற்போதைய உடல்நிலையைக் கருத்தில்கொண்டு, அங்கு வரும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு, அன்பான பாபா எப்படித் தமது தரிசனத்தை வழங்குவார் என்பது தீர்மானிக்கப்பட உள்ளது, ஆனால் அது நடக்கும். அவர் தரிசனம் வழங்குவார்.

இந்த தரிசனம், மௌனத்தில் வழங்கப்படும் இறுதி தரிசனமாக இருக்கும் - அதுவும் உலகிற்குப் புத்துணர்ச்சியூட்டும் 'இறை வார்த்தைகளின் வார்த்தை'யை மொழிவதற்கு முன்னதாக வழங்கப்படும் தரிசனமாக இருக்கும் என்று பாபா கூறுகிறார்.

குறிப்பு:

1) யார் ஒருவருக்கும் அல்லது நிகழ்வுகள் அல்லது நிகழ்ச்சிகளுக்கும், பாபா வழங்கும் ஆசீர்வாதங்களுக்காக எவரும் பதில் கடிதம் எழுதவோ, தொலைத்தந்தி அனுப்பவோ கூடாது, ஆனால் அவருடைய ஆசீர்வாதங்கள் தொடர்ந்து அனைத்து அன்பர்களுக்கும் வழங்கப்படுவதை அறிந்து, திருப்தி அடைய வேண்டும். பாபாவிற்கு அத்தகைய தகவல் தெரிவிக்கப்படாது, எனவே அது வந்ததற்கான எந்த பதிலும் அனுப்பப்படமாட்டாது.
2) 1968 நவம்பர் 1ஆம் தேதியில் வழங்கிய வாழ்க்கைச் சுற்றறிக்கை எண்: 70இல் குறிப்பிடப்பட்ட அவதார் மெஹர் பாபாவின் நிபந்தனைகளுக்கு இணங்க, ஏப்ரல் 10ஆம் தேதி வரை எவரும் பாபாவைப் பார்க்க முயற்சிக்கக் கூடாது.
3) காலமும், சூழ்நிலையும் எங்கள் கவனத்தை அனுமதிக்காது என்பதால், பாபாவின் பணி அல்லது மையங்களை நடத்தும் முறை அல்லது பாபாவின் உடல்நிலை போன்ற பிரச்சினைகள் குறித்து, யார் ஒருவரும் பாபாவுக்கோ அல்லது பாபா-மண்டலிக்கோ எனக்கோ (ஆதி கே. ஈரானி) எழுதக்கூடாது.
4) அஞ்சல் மற்றும் தொலைத்தந்தி முகவரி மாற்றம் குறித்து மட்டும் எனக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

1969 ஜனவரி 9 வியாழன் காலை, மேலும் இரத்த மாதிரிகள் 'ரூபி ஹால்' மருத்துவமனைக்கு (RUBY HALL CLINIC) அனுப்பப்பட்டது. யூரியா அளவு 124 ஆகவும், இரத்த அளவு 10 சதவீதமாகவும் இருந்தது. டாக்டர் கிரான்ட் பாபாவை பூனாவிற்கு அழைத்து வருமாறு அறிவுறுத்தினார். டாக்டர் கிண்டேயும்

தொலைபேசியில் தொடர்பு கொண்டு பாபாவின் உடல்நிலை குறித்து விசாரித்தார். எனவே, ஆண், பெண் மண்டலி அனைவரும் பாபாவை திட்டமிட்ட நேரத்திற்கு முன்னதாக, மார்ச் மாத இறுதியில் பூனாவிற்குச் செல்லுமாறு அறிவுறுத்தினர், ஆனால் பாபா மேலும் சோதனைகளுக்காகச் செல்ல விரும்பவில்லை.

இந்த நேரத்தில்தான், ஒருவேளை, மண்டலியின் அச்சத்தைப் போக்க, பாபா படுத்துக்கொண்டே தரிசனம் வழங்குவதைக் குறிப்பிடத் தொடங்கினார். **“என் அன்பர்களுக்கு நான் படுத்துக்கொண்டே தரிசனம் வழங்கினால், அதில் தவறு ஏதும் இருக்குமா?”** என்று அவர் கேட்டார்.

அதற்கு மண்டலி, “நிச்சயமாக இல்லை பாபா, அதில் என்ன தவறு உள்ளது? உங்கள் அன்பர்களின் ஒரே கவலை உங்களை மகிழ்ச்சியாகக் காண்பதுதான்” என்றனர்.

ஆனால் பாபாவின் உடல்நிலை மோசமடைந்ததால், மண்டலி கவலையில் ஆழ்ந்தனர், மேலும் ‘ஏப்ரல் 10 முதல் ஜூன் 10 வரை இரண்டு மாதங்களுக்கு பாபா தரிசனம் வழங்குவது எப்படி’ என்று அவர்கள் தொடர்ந்து யோசிக்கத் தொடங்கினர். ‘அவரது உடல் அத்தகைய அழுத்தத்தைத் தாங்குமா’ என அவர்கள் அஞ்சினர், ஆனால் பாபா அவர்களுக்கு உறுதியளித்தார்:

**எனது அன்பர்களுக்கு தரிசனம் வழங்குவது எனக்கு எளிதாக இருக்கும், எனவே நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் சாய்ந்த வண்ணம் தரிசனம் வழங்குவேன், அது என் உடலில் எந்த சிரமத்தையும் ஏற்படுத்தாது.**

**இது முந்தைய அனைத்து தரிசனங்களிலிருந்தும் வித்தியாசமானதாக இருக்கும், மேலும் இது எனது மௌனத்தில் நான் வழங்கும் இறுதி தரிசனம். இது தரிசனங்களின் தரிசனமாக, இணையற்றதாக இருக்கும்.**

**நான் சாய்ந்த வண்ணம் இருந்தாலும், மிகவும் வலுவாக இருப்பேன். இப்போது எனது பௌதீக உடலின் நிலை எனது பணியின் காரணமாக இப்படி உள்ளது, ஆனால் அதற்குள் எனது பணி முழுமையடைந்து, ஆனந்தக் களிப்பில் இருக்கச் செய்யும். ஒரு பெரிய லாட்டரியை வெல்லும் ஏழை மனிதர், திடீர் செல்வத்தைக் கண்ட அதிர்ச்சியில் மிகவும் உற்சாகமாகி, நிலைகுலைந்து உயிரைத் துறந்துவிடுவார். எனது பணி முடிவடைவதிலும், அதன் சில விளைவுகளை அறிந்து கொள்வதிலும் என் அதிர்ஷ்டம் இருக்கும்; ஆனால் எனது பெருமகிழ்ச்சி என்னை வீழ்ச்சியடையச் செய்யாது - அது எனது மகிமையாக இருக்கும்.**

ஆதி ஜூனியர், ஃபிரீனி, ஷிரீன், தாரா, அம்ரித் மற்றும் ஆன் ஈவ் ஆகியோர் மறுநாள் லண்டனுக்குத் திரும்புவதற்கு முன்பு, பாபாவிடம் விடைபெறுவதற்காக அன்று வந்தனர். அவரது உடல்நிலை குறித்து பாபா, “**கவலைப்படாதீர்கள். இந்த மாத இறுதிக்குள் அனைத்தும் சரியாகிவிடும்**” என்று ஃபிரீனிக்கு உறுதியளித்தார்.

பாபா ஜனவரி 9ஆம் தேதி சூரிய ஒளியில் அமர்ந்த வண்ணம் வெளியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது, அவர் இயேசுவையும் அவரது அப்போஸ்தலர்களையும் குறித்து ஆதி ஜூனியரிடம், “**எரச் எனது பீட்டர். பீட்டர் இயேசுவைக் கைவிட்டார், ஆனால் எரச் என்னைக் கைவிடமாட்டார்**” என்று தனது சகோதரருக்கு வெளிப்படுத்தினார்.

புறப்படும் முன்னர் ஆதி ஜூனியர் கண்கலங்கி அழுதார். பாபா அவரை அறைக்குள் அழைத்து, காரணத்தை வினவ, “உங்களை இனிமேல் பார்க்க மாட்டேன் என்ற உணர்வு எனக்கு” என்றார் ஆதி.

அதற்கு பாபா, “**ஓ, நான் உயிரைத் துறக்கப் போவதில்லை. இன்னும் பதினான்கு வருடங்களுக்குப் பிறகுதான் என் உடலைக் கைவிட வேண்டும்**” என்று பதிலளித்தார். ஏற்கனவே குறிப்பிட்டபடி, அவர் 90 வயது வரை வாழ்வார் என்று பாபா முன்பே குறிப்பிட்டிருந்தார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், பாபா, “**எனது மௌனத்தைக் கலைத்த பிறகு, நான் பதினான்கு ஆண்டுகள் உயிருடன் இருப்பேன்**” என்று குறிப்பிட்டார்.

“அதற்குள் நாம் அனைவரும் முதியவர்களாகி விடுவோம்” என்று கூறி எரச் மீண்டும் இணைந்தார்.

அருகாமையில் வாழ்ந்த பார்சி விவசாயி ரத்தன்ஷா கியாராவின் (RATANSHAH GYARA) இல்லத்தில் வசிக்கும் காஷ்மீரா (KASHMIRA) என்ற ஒன்பது வயது கிராமத்துப் பெண், அதே நாளில் பாபாவைப் பார்க்க வந்தாள். அதற்கு முந்தைய நாள் காஷ்மீரா தனது தாயார் மற்றும் கிராம மக்களுடனும் வந்தபோது, எரச் அவளிடம் தனியாக வருமாறு கேட்டுக்கொண்டார். அவள் பாபாவை சந்திக்க வேண்டும் என்ற ஏக்கத்தில், பாபா அவளுக்கு தரிசனம் வழங்க ஒப்புக்கொள்ளும் வரை உண்ணுவதையும், அருந்துவதையும் கூட நிறுத்தினாள். பாபா அவளை அன்புடன் சந்தித்து அறிவுறுத்தினார், “**நீங்கள் என்னைப் பார்த்துவிட்டீர்கள், இப்போது திரும்பிச் சென்று உங்கள் உணவை உண்ணுங்கள்.**”

உடல்நிலை குறிப்பிடத்தக்க அளவில் பலவீனமடைந்தது. டாக்டர் கோஹெர் மற்றும் பிற ஆண்களிடம் பாபா கூறினார், “**நீங்கள் என்னிடம் உணவு**

**உண்ணச் சொல்கிறீர்கள், ஆனால் நான் கேட்பதை நீங்கள் எனக்குக் கொடுக்கவில்லை. நான் ஏப்ரல் மாதத்தில் குருபிரசாத்திற்குச் சென்று, எந்த நிலையில் நான் இருந்தாலும், வாழ்க்கைச் சுற்றறிக்கை எண் 71இல் குறிப்பிடப்பட்டதற்கு இணங்க - தேவைப்பட்டால் படுத்துக்கொண்டே தரிசனம் வழங்குவேன். அடுத்த ஒரு வாரத்திற்கு எந்த மருத்துவரையும் அழைக்க வேண்டாம். அதைத் தொடர்ந்து மற்றுமோர் இரத்தப் பரிசோதனை செய்ய முடியும்; அதற்குப் பிறகு நீங்கள் மருத்துவரை அழைக்கலாம்; இல்லையேல் இல்லை.**"

அவர் தொடர்ந்து கூறினார், "**இப்போது நான் என் உடலைக் கைவிடுவதை நீங்கள் விரும்பினால், என்னை பூனாவிற்கு அழைத்துச் செல்லுங்கள்! எனது தற்போதைய உடல்நிலைக்கு மருத்துவ ரீதியில் எந்தக் காரணமும் இல்லை; இது முற்றிலும் எனது பணியின் அழுத்தத்தால் ஏற்பட்டது. நான் கூறுவது வரை மருத்துவர்களை மீண்டும் அழைக்க வேண்டாம்.**"

அன்று காலை ஆதி சீனியர் வந்தபோது, எரச், பாவ் கல்சூரி, கோஹெர் மற்றும் நரிமன் முன்னிலையில் பாபா அவரிடம் உறுதிப்பட எடுத்துரைத்தார், "**நான் கடவுள், நான் ஒவ்வொருக்காகவும் துன்பப்படுகிறேன்; ஆனால் நீங்கள் இப்போது செய்வதைப் போல, மனசாட்சிக்கு இணங்கி எனக்கு சேவை செய்தால், நான் நன்கு குணமாகிவிடுவேன்.**"

பாபா அவரிடம், "**நான் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? நான் கடவுள்! அதைச் சொல்லுங்கள்! நான் கடவுள் என்றும், நான் என்ன செய்கிறேன் என்றும் எனக்குத் தெரியும் என அவர்களிடம்** (பிற மண்டலியிடம்) **எடுத்துச் சொல்லுங்கள்**" என்று கூறினார்.

ஆதி அதை ஆமோதிக்கும் விதத்தில், "பாபா, நீங்கள் கடவுள்" என்று பதிலளித்தார்.

பாபா தொடர்ந்து கூறினார், "**நான் மனிதன், ஆனால் நான் கடவுள் என்பதை மறந்துவிடாதீர்கள். என் உடல்நிலை மோசமாக உள்ளது. அது மேலும் மோசமாகிவிடும். நான் உணர்விழந்த முழு மயக்க நிலைக்குச்** (COMA) **செல்லலாம்; ஆனால் நான் திரும்பி வருவேன். நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும். நான் 'பைத்தியமாக' மாட்டேன் அல்லது என் உடலை கைவிட மாட்டேன், இப்போது குருபிரசாத்திற்குச் செல்லுமாறு என்னை வற்புறுத்த முயற்சிக்காதீர்கள்.**"

டாக்டர் கிண்டேயை தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு பாபா ஆதிக்கு அறிவுறுத்தினார். "**நான் அழைப்பது வரை கிண்டே இங்கு அல்லது**

**குருபிரசாத்திற்கு வரவேண்டாம் என்று கூறுங்கள். அவருடைய அக்கறையும், என்னை மேலும் பரிசோதிக்க வேண்டும் என்ற அவரது கவலையும் என்னை ஆழமாகத் தொட்டது; ஆனால் அவர், நான் விரும்புவதைச் செய்ய வேண்டும், எதையும் அளவுகடந்து செய்ய வேண்டாம்.**"

இதே செய்தியை டாக்டர் கிரான்டிற்கும் தெரிவிக்குமாறு ஆதியிடம் அறிவுறுத்தப்பட்டது.

அங்கிருந்த அனைவரும் நிராதரவாக இருந்து, பாபாவின் விருப்பத்தை ஏற்க வேண்டியதாயிற்று. செப்டம்பர் மாதத்தில் பாபா கூறியதை அவர்கள் நினைவு கூர்ந்தனர்: "**இன்று நான் விதையை விதைத்துவிட்டேன். 1969 ஜனவரி 10 அன்று பழங்களை நாம் உண்போம்.**" பாபா பிரபஞ்சத்திற்காக அளவிறுதியற்ற துன்பங்களை அனுபவித்தார், ஆனால் அது அவருடைய இரக்கத்தன்மையால், முழு விருப்பத்துடன் ஏற்பட்டது. அனைத்து படைப்பின் இரட்சிப்புக்காக அவர் அந்தக் கடுமையான வலியைத் தாங்கவேண்டியிருந்தது; மேலும் பாபாவிற்கு உண்மையான உதவியை வழங்க முடியாத சூழ்நிலை. வரம்புக்குட்பட்டவர்கள் அளவிறுதியற்ற ஒருவருக்கு எப்படி உதவ முடியும்? அளவிறுதியற்ற ஒருவரின் ஆனந்தம் எல்லையில்லா வேதனையை அனுபவிப்பதில் உள்ளது; அளவிறுதியற்ற ஒருவரின் விருப்பம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பது ஒன்றுதான் வரையறுக்கப்பட்ட ஒருவருக்கு இன்றியமையாதது.

இதுவே அவருக்கு நாம் செய்ய முடிந்த ஒரே உதவி. பாபாவின் ஆண், பெண் மண்டலி பாபா-அன்பர்களுக்காகவும், உலகத்திற்காகவும் அவர் அனுபவித்த துன்பத்தின் அதி தீவிரத்தை விவரிக்க இயலாது. அவருடைய அன்பும், கருணையும் எல்லையற்றது. அவர் அனைத்து உயிர்களின் துன்பத்தையும் தம்மீது எடுத்துக்கொண்டு, அதற்கு பதிலாக அன்பையும் கருணையையும் வழங்குகிறார்.

பாபா ஒவ்வொரு நாளும் மண்டலி மண்டபத்திற்கு வந்து கொண்டிருந்தார், ஆனால் 1969 ஜனவரி 12 ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னர், அவர் தமது படுக்கையறையை விட்டு வெளியே வரவில்லை. நாளுக்கு நாள் அவரது உடல்நிலை கவலைக்கிடமாகி வந்தது. 13ஆம் தேதி இரவு 8.30 மணி முதல் மறுநாள் காலை 8:45 வரை, 12 மணி நேரத்திற்கும் மேலாக பாபா சிறுநீர் கழிக்கவில்லை - இதற்கு டாக்டர் கோஹெர் மருந்து கொடுக்க வேண்டியிருந்தது.

ஜனவரி 13 பாவ் கல்சூரியின் பிறந்தநாள்; பாபாவின் உடல்நிலை சீரில்லாமல் இருந்தபோதிலும் அவர் பாவ் கல்சூரியை அன்புடன் தழுவிக்கொண்டார்.

ஜனவரி 13ஆம் தேதியிலிருந்து பாபா அதிக ஆகாரம் உட்கொள்வதை நிறுத்திவிட்டார். அவருக்குக் கடுமையான தசைப்பிடிப்புகள் ஏற்படத் தொடங்கின, சிறிதளவு அசைவும் கட்டுக்கடங்காத அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவர் தனது விரல்களைப் பயன்படுத்தி சைகைகளைச் செய்யும்போது, அவருக்கு திடீர் அதிர்ச்சிகள் ஏற்பட்டன, இதனால் அவரது முழு உடலும் படுக்கையிலிருந்து தூக்கி எறியப்பட்டது! மீண்டும் அவரை பூனாவிற்கு அழைத்துச் செல்லும் முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது, பாபா மறுத்துவிட்டார்.

1969 ஜனவரி 14 செவ்வாய் அன்று, இந்து பண்டிகையான 'சங்கராந்தி' (SANKRANT) கொண்டாடப்பட்டது; பாபா பாரம்பரிய இனிப்புகளை "**இந்த இனிப்பை உண்டு இனிமையாக பேசுங்கள்**" என்ற வாழ்த்துக்களோடு வழங்கினார். அந்த நாள் டான் ஸ்டீவன்ஸின் பிறந்தநாளும் என்பதால் பாபா அவரையும் நினைவு கூர்ந்தார்.

எரச் கடவுளின் 101 நாமங்களை மொழியுமாறு அறிவுறுத்தப்பட்டார்: "வணங்கி வழிபடத் தக்கவர்... சர்வ வல்லமை படைத்தவர்... அனைத்தும் அறிந்தவர்... அனைவருக்கும் இறைவன்... தொடக்கமும், முடிவும் இல்லாதவர்..." என்று ஒவ்வொரு பெயரும் மொழியப்பட்டது. பாபா மீண்டும் மீண்டும் பரிபூரணத்தை அடையாளப்படுத்தும் முழுவட்டத்தை சைகையால் தெரிவித்தார்.

அன்று ஆதி தனது நாட்குறிப்பில் பதிவு செய்ததாவது:

பாபாவின் துன்பம் மீண்டும் மீண்டும் பல்வேறு அறிகுறிகளாக வெளிப்படுகிறது; அவர் தனது செயலின் அதிபதி, அதன் எதிர்வினையைத் தாங்கும் அளவுக்கு வலிமை மிக்கவர் என்பதை நன்கு அறிந்திருந்தாலும், அவருக்கு அருகில் இருப்பவர்களையும் எங்களையும் கவலையுறச் செய்து, பதற்றத்தில் ஆழ்த்துகிறது. இது குறித்து டாக்டர் டானுக்குத் தெரிவிக்கப்பட்டது. பன்னிரண்டு மணி நேரம் பாபா சிறுநீர் கழிக்கவில்லை; பின்னர் அவர் சிறுநீர் கழிக்கிறார் என்ற செய்தி வந்ததும், நாங்கள் நிம்மதியடைந்தோம்.

ஜனவரி 15ஆம் தேதி, பாவ் கல்சூரி, டெஹ்ரா டூனில் வாழும் புர்ஜர் சாச்சாவிற்கு (BURJOR CHACHA) எழுதினார்: "பாபாவின் உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் தென்படவில்லை, அவர் மிகவும் பலவீனமாகிவிட்டார். உயிரைத் துறக்கும் மனிதகுலத்திற்கு உயிர் நீரை வழங்கவும், 'இறை

வார்த்தை'க்கு செவிமடுக்கும் விதத்தில் அதைத் தயார்படுத்தவும், அவர் ஒவ்வொரு கணமும் சிலுவையில் அறையப்படுவதாகத் தெரிகிறது."

ஜனவரி 16, டாக்கேஃபால்கரின் பிறந்தநாள் அன்று, அவர் பாபாவிற்கும், மண்டலிக்கும் பிற்பகல் தேநீர் விருந்தாக ஜிலேபி, பஜ்ஜி, வெற்றிலைக் சுருள்கள் மற்றும் பிற சுவையான உணவுகளை மானேக் மூலமாக அனுப்பிவைத்தார். அவர் எழுதிய குறிப்பு பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டதும், பாபா அவருக்கு எரச் மூலம் '**அவருடைய அன்பு, பாபாவை மகிழ்ச்சியடையச் செய்தது**' என்ற பதில் குறிப்பை அனுப்பினார்.

நாட்கள் செல்லச் செல்ல பாபா பலவீனமானார். ஜனவரி 17 அன்று, மற்றுமோர் இரத்த மாதிரி பூனாவிற்கு அனுப்பப்பட்டது. (முடிவுகள் யூரியாவின் அளவு 97ஆகக் குறைந்து கணிசமான முன்னேற்றத்தைக் காட்டியது, ஆனால் இரத்த அளவு - ஹீமோகுளோபின், HEMOGLOBIN - 9ஆக குறைந்தது.) கோஹெர், பாபா பலவீனமாக இருப்பதாகவும், பல நாட்களாக நடக்கவில்லை, தினமும் சில நிமிடங்கள் எழுந்து நின்று, உடற்பயிற்சி செய்ய முயற்சிக்கிறார் என்று மெஹர்ஜிக்கு எழுதினார். உடலில் நடுக்கம் மற்றும் திடீர் அதிர்வுகள் தொடர்ந்தது, ஆனால் சற்று குறைந்த தீவிரத்துடன், சில நேரங்களில் அவை திடீரென வெளிப்பட்டன.

பாபா படிப்படியாக அதிக அளவிலான ஊட்டச்சத்தை எடுத்துக் கொண்டார், ஒரு நாளைக்கு சுமார் 900 கலோரிகள் (CALORIES), மேலும் அவர் திரவம் உட்கொள்வதும், சிறுநீர் அளவும் போதுமானதாக இருந்தது. அவரது வயிற்றின் மேல் பகுதியில் (இரைப்பை) தொடர்ச்சியான அழுத்தம் மற்றும் மந்தமான வலி, சில நேரங்களில் உணவு உண்ட பின்னர் அதிகரித்தது என்பது அவரது முக்கிய புகாராக இருந்தது. பாபாவிற்கு இருந்த குமட்டலும், வாந்தியும் இப்போது குறைந்துவிட்டது. அவருடைய இரண்டு கால்களிலும் வீக்கம் தென்படவே டாக்டர் கோஹெர் அவருக்கு இரண்டு நாளுக்கு ஒருமுறை 25 மி.கி 'டுராபோலின்' (DURABOLIN) ஊசி மருந்து, வைட்டமின் மற்றும் பிற மாத்திரைகளை, கடந்த பன்னிரண்டு நாட்களாக வழங்கிவந்தார்.

அன்று ஆதி மெஹராஸாத்திற்கு வந்தபோது, பாபா தனது அறையில் குறட்டைவிட்டு தூங்கிக் கொண்டிருந்தார். சிறிது நேரம் கழித்து கண்விழித்த அவர் உடல் முழுவதும் வலியாக இருப்பதாகத் தெரிவித்தார். பாபாவின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, மார்ச் மாதம் மெஹராஸாத்தில் மூன்று நாள் தரிசன நிகழ்ச்சி குறித்து ஆதி கேட்டபோது, பாபா அதை ரத்து செய்யுமாறு அறிவுறுத்தினார், "**நான் குருபிரசாத்திலிருந்து திரும்பி வந்த பின்பு, ஜூலை**

**அல்லது ஆகஸ்ட் மாதத்தில் எனது அஹமதுநகர் நகரம் மற்றும் மாவட்ட அன்பர்களுக்கு தரிசனம் வழங்குவேன்"** என்று கூறினார்.

அன்று மாலையே நரிமன், அர்னவாஸ் இருவரும் மும்பைக்குத் திரும்பிச் சென்றனர். பாபா அவர்களிடம், **"மும்பைக்குத் திரும்பிச் செல்லுங்கள், உங்கள் பணியை முடித்துவிட்டு, விரைவில் திரும்பி வாருங்கள்"** என்று கூறினார்.

புறப்படும் நேரத்தில், தாதாசாஞ்சி தம்பதிகள் இதுவே பிரியமான பாபாவுடனான இறுதித் தழுவல் என்று நினைக்கவில்லை. பாபா மிகவும் பலவீனமாக இருந்ததால், அவரால் கைகளை உயர்த்த முடியவில்லை; அவரால் அமர முடியவில்லை, மண்டலியில் நான்கு அல்லது ஐந்து பேர் அவருக்கு உதவ வேண்டியிருந்தது; அப்போதும் அவர் கடுமையான வலிகளை அனுபவித்தார். பதினைந்து அல்லது இருபது நிமிடங்கள் மட்டுமே படுக்கையில் அவரால் அமர்ந்திருக்க முடிந்தது, பின்னர் ஆண்கள் மெதுவாக அவரை படுக்கையில் சாய்ந்துகொள்ள உதவினர். நரிமனும் அர்னவாஸும் பாபாவைத் தழுவியபோது, பாபாவிற்கு சிறிதும் வலி ஏற்படாமல் இருக்கும் விதத்தில் இதமாகத் தழுவினர்; ஆனால் ஆச்சரியம் என்னவெனில், பாபா அவர்களை மிகவும் இறுக்கமாக அரவணைத்துக்கொண்டார், ஒரு கணம் அவர் இவ்வளவு சக்தியை எப்படி வரவழைத்தார் என்று அவர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். அவர்களுக்குத் தெரியாமல் இருந்தாலும், இந்த அரவணைப்பு அவர்களின் கடைசி அரவணைப்பாக இருக்கும் என்பதை பாபா அறிந்திருந்தார்.

அடுத்த ஒரு வார காலத்தில் ரானோவிற்கும் இதே போன்ற சம்பவம் நடந்தது. அவர் ஆதி ஜூனியருக்காகத் தயார் செய்த 'மாஸ்டரி இன் ஸெர்வீட்யூட்' (சேவகத்தில் லாவகம் - MASTERY IN SERVITUDE) **சின்னத்தின்,** வர்ணத்தால் வரைந்த சித்திரத்தைத் தபாலில் அனுப்பும் முன்பு, பாபா அதைத் தொட்டு ஆசீர்வதிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். பாபா அவ்வாறே செய்து, தாம் மகிழ்ச்சியடைந்ததை வெளிப்படுத்தி, **"என்னைத் தழுவுங்கள்"** என்று சைகையால் தெரிவித்தார்.

ரானோ பின்பு நினைவு கூர்ந்தார்: "அப்போது பாபா எளிதில் நொறுங்கக்கூடியவர் போலக் காணப்பட்டார், அவரைத் தொடுவதற்கு நான் கிட்டத்தட்ட அஞ்சினேன், அதனால் நான் அவரை மிகவும் லேசாகத் தொட்டேன். ஆனால் அவர் என்னைத் தழுவியதும், அது பழைய நாட்களில் வழங்கியது போன்ற வலுவான அரவணைப்பாக இருந்தது." அதுவே பாபாவிடமிருந்து அவர் அடையப்பெற்ற கடைசி அரவணைப்பு.

1969 ஜனவரி 19 ஞாயிற்றுக்கிழமை அன்று பாபாவின் உடல்நிலை ஓரளவு நன்றாக இருந்தது, ஆனால் அவர் மிகவும் பலவீனமாகிவிட்டார். சில சமயங்களில், சில நபர்களை நினைவுகூர்ந்து அவர் தனது அன்பர்களை வணங்கினார், ஆனால் அவரது முகம் சோர்ந்து, தேய்ந்துபோன தோற்றத்தை வெளிப்படுத்தியது!

பாபா அன்றைய தினம் உஷா (USHA), பாஸ்கர் (BHASKER) இருவரையும் அழைத்து, உஷாவிடம் மீண்டும் சாம்பார் கொண்டு வருமாறு அறிவுறுத்தினார். இந்த நேரத்தில் பாபா திரவ ஆகாரத்தை மிகவும் ரசித்தார்; அவரது மதிய மற்றும் இரவு உணவாக அதையே உண்டார். பாபா அவரது படுக்கையில் அமர்ந்து உணவு உண்ணும் வேளையில், தலையணை ஒன்றை அவரது முதுகிலும் மற்றொன்றை அவரது கால்களுக்கு கீழேயும் வைத்திருந்தார்.

அடுத்த நாள், ஜனவரி 20 அன்று, அவர் கோகிலாவிடம் (KOKILA) சாதம், மார்வாரி பருப்பு போன்றவற்றை தயார் செய்யுமாறு கூறினார், பாபா பருப்பை சிறிது சுவைத்தார். மேலும், ரமா கல்சூரியிடம் வறுத்த வழுதுணங்காய் தயார் செய்து அனுப்பவும் அறிவுறுத்தப்பட்டது. பாபாவின் பசி மிகக் குறைவாக இருந்தது, உணவு உண்ணும் ஆசை அறவே இல்லை. அவர் தயக்கத்துடன் உணவை தனது கையில் எடுக்கும் வேளையில், உடல் வலிமைக்காக அதை உண்ண வற்புறுத்துவதும் மிகவும் கடினமாக இருந்தது.

சில நேரங்களில் மண்டலி அவரை சந்திக்கும் போது, பாபா, அவருக்குப் பசி இல்லை என்று சைகையால் தெரிவித்து, அவரது உணவை மண்டலிக்குக் கொடுக்க முயற்சிப்பது உண்டு. எரச், பாபாவிடம் செல்வதற்கு முன்பு வெற்றிலையை மெல்லும் சூழ்ச்சியைக் கையாண்டார், அதனால் பாபாவின் உணவை அவருக்கு வழங்கும்போது, ”மன்னிக்கவும், பாபா, நான் உணவுக்குப் பிறகு வெற்றிலையை மென்று வருகிறேன்” என்று கூற முடியும்.

கோஹெர், பாபாவிற்கு உறிஞ்சு குழாய் ஒன்றைக் கொடுத்து, சத்துள்ள ஏதாவது திரவ ஆகாரத்தை அருந்தச் செய்ய முயற்சித்தார். கோஹெர் கவனிக்காதபோது, பாபா உறிஞ்சு குழாயையை நடுவில் அழுத்தி சேதப்படுத்தி, **“இப்போது என்னால் அதை அருந்த முடியாது, குழாய் நசுக்கப்பட்டுவிட்டது”** என்று சைகையால் தெரிவித்து, அதை உட்கொள்ளாமலிருக்க ஒரு சாக்குபோக்கை முன்வைப்பது வழக்கம்.

அந்த வாரத்தில், பாபா ‘ஹா-ஹம்ப்’ (HAAA-HUMPH) என்ற சத்தத்தை எழுப்பத் தொடங்கினார். அவர் கடந்த காலத்திலும் இதேபோன்ற ஒலியை எழுப்பினார், ஆனால் இது கவனிக்கத்தக்க அளவுக்குத் தெளிவாக ஒலித்தது. அடுத்த சில நாட்களில் அவர் அதை பலமுறை செய்தார். ஒருமுறை பாபா தனது

படுக்கையில் அமர்ந்திருந்தபோது நடந்ததை எரச் விவரித்தார். பாபா "ம்ம்ம்ம்ம்ம்ம்" (MMMMMMMM) என்ற ஓசை எழுப்பி, மேலும் அந்த ஓசை வராமல் தடுப்பது போல, வாயின் மேல் கையை வைத்தார். பாபா அவரது மௌனத்தை உடைத்துவிட்டதாக எரச் உணர்ந்தார், ஆனால் பாபா அப்படி செய்ததாக பாவ் கல்சூரி நினைக்கவில்லை, பின்னர் எரச் அதற்கு ஒப்புக்கொண்டார். இந்த சம்பவத்தைப் பற்றி பாபா ஒரு போதும் கருத்துத் தெரிவிக்கவில்லை.

ஜனவரி 20ஆம் தேதி காலை 8:00 மணிக்கு பாதிரி, பாபாவைப் பார்த்தார்... ஒருமுறை இந்த நேரத்தில் பாதிரி மெஹராஸாத்திற்கு வந்தபோது, பாபாவிடம், "நம் அனைவருக்கும் இப்போது வயதாகிவிட்டது! கடையை மூடிவிடுவது நல்லது!" என்றார்.

பாபா சிரித்துக்கொண்டே கூறினார், "**என்ன சொல்கிறீர்கள்? கடையை மூடுவதா? இந்தக் கடை இப்போதுதான் திறக்கப்படும்!**"

1969 ஜனவரி 21ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை, பாபா படுக்கையில் அமர மண்டலி உதவினர். அவர் தொண்டையில் மூச்சுத் திணறல் இருப்பதாக புகார் கூறினார், மேலும் அவர் ஒரு ஆஸ்துமா நோயாளியைப் போல அரை மணி நேரம் மூச்சுத்திணறலுடன் சிரமமாக சுவாசித்தார். சூடான தேநீரை வரவழைத்து, அத்துடன் 'பெலர்கால்' (BELARGAL) மாத்திரையும் சேர்த்துப் பருகியதும், மூச்சுத்திணறல் குறைந்தது. அவர் மிகவும் பலவீனமாக இருப்பதாக புகார் கூறிய அதே வேளையில் 'அன்றைய தினம் திரவ ஆகாரங்களை மட்டுமே உண்பேன்' என்று கூறினார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் படுக்கையில் அமர வைக்க உதவியபோது, பாபாவிற்கு லேசான மூச்சுத் திணறல் ஏற்பட்டது. டாக்டர் கோஹெர் ஏற்கனவே காலையில் அவருக்கு ஒரு மாத்திரையை கொடுத்தார், இது மூச்சுத் திணறலைக் கட்டுப்படுத்துவதற்கும், அதன் அறிகுறிகளை ஓரளவு சீர் செய்யவும் உதவியது. பாபா, "**கவலைப்படாதீர்கள். உணர்விழந்த முழு மயக்க நிலைக்கு** (COMA) **நான் சென்றாலும், நீங்கள் கவலைப்படாதீர்கள். இன்னும் ஓரிரு நாட்களில் அதிலிருந்து வெளியே வந்துவிடுவேன்**" என்று பாபா மீண்டும் கூறினார்.

அன்று, பாபா மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார்; காலையிலும் மாலையிலும் ஃபிரான்சிஸ் மற்றும் காக்காவுடன் சதுரங்கம் விளையாடி மகிழ்ந்தார். காக்கா தனது 'ஹோ, ஹோ, ஹோ!' (HO, HO, HO!) கீர்த்தனையை பாபா முன்பாக மொழிந்த அவ்வேளையில், பாபா அவரை "**சாய்**

**பாபா, பாபாஜான், மெஹர் பாபா அனைவரும் பகவான் (கடவுள்)**!" என்று பாட வைக்க முயன்றார்:

எரச் இந்த சொற்றொடரை மீண்டும் மீண்டும் மொழிந்தார், ஆனால் காக்கா வெறுமனே தனக்குப் பிடித்த "ஹோ, ஹோ, ஹோ!" கீர்த்தனையை பாடிக்கொண்டே இருந்தார். அங்கிருந்த அனைவரும் காக்காவின் முயற்சியைக் கண்டு மனம்விட்டு சிரித்தனர், மேலும் மெஹராஸாத்தில் பல மாதங்களாக இருந்த பதட்டமான மற்றும் தீவிரமான சூழல் இலகுவானது. பாபாவின் தீராத துன்பச் சுமைகளில் உடல் நசுங்கிக் கொண்டிருந்தாலும், அவர் மகிழ்ச்சியாகத் தோற்றமளித்து மண்டலிக்கு தைரியத்தை வழங்கினார்.

முந்தைய நாள், பாபா உடல்நிலை சீரின்றி இருந்தார். ஆனால் அன்று அவர் மிகவும் நன்றாகத் தோன்றினார். டாக்டர் டான் இரண்டு நாட்களும் வந்து பாபாவை சோதனை செய்து, அந்த மாற்றத்தைக் கண்டு வியப்படைந்தார். பாபாவின் விருப்பப்படி, விலூ அவருக்கு எலுமிச்சை பழப்பாகு அனுப்பி வைத்ததை அவர் உண்டார்.

சகன் 20ஆம் தேதி மெஹராஸாத்திற்கு வந்திருந்தார். அவர் ஜனவரி 23 வியாழன் அன்று, பாபாவிற்கு காய்கறி புலாவ் தயார் செய்து அனுப்பினார், பாபா அதில் சிறிது உண்டார். அன்று பிற்பகல் 3.00 மணி முதல், இரவு 10:30 மணி வரை, பாபா அதீத வலியில் இருந்தார். அவர் ஓய்வெடுக்க முயற்சிக்கும் போதெல்லாம் அவருக்கு ஏற்படும் கடுமையான நடுக்கங்களால், அவரது உடல் மிகவும் கடினமாகவும் பதட்டமாகவும் அவரது முதுகுத்தண்டு விறைப்பாகவும் இருந்தது, மேலும் மண்டலி அவரது முதுகைத் தாங்கி உதவிய போதிலும், படுக்கையில் திரும்புவது அவருக்குப் பெரும் சோதனையாக இருந்தது. பதற்றம் அடிக்கடி தசைப் பிடிப்புகளை ஏற்படுத்தியது, இது அவரது சுவாசத்தை கடினமாக்கியது, மேலும் தொண்டையில் ஏற்பட்ட மூச்சுத் திணறல், அவரது துன்பத்தை அதிகரித்தது.

இரவு 9:00 மணியளவில், டாக்டர் கோஹெர் மிகவும் உதவியற்றவராக உணர்ந்தார், அவர் டாக்டர் டானை உடனடியாக அழைக்குமாறு எரச்சிடம் கேட்டுக்கொண்டார். அவர் தொலைபேசியில் அழைப்பதற்காக பாபாவின் அருகிலிருந்து எழுந்துச் செல்ல ஆயத்தமான போது, பாபா அவரைத் தடுத்தார். அன்று இரவு, அலோபா இரவு 10:00 மணி முதல் காலை 4:00 மணி வரை இரவு கண்காணிப்பில் இருந்தார். பாபா தூங்கி ஓய்வெடுத்ததாகவும், இரண்டு முறை சிறுநீர் கழித்ததாகவும் அவர் தெரிவித்தார். அவர் கண்விழித்தபோது உடலில் ஒரு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. பாவ் கல்சூரி, பெண்டு, ரானோ ஆகியோரும் இரவு கண்காணிப்புப் பணியைப் பகிர்ந்துகொண்டனர்.

1969 ஜனவரி 24 வெள்ளிக்கிழமை அதிகாலையில் பாபாவிடமிருந்து இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பூனா 'ரூபி ஹால் கிளினிக்'கிற்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டது. கஜ்வானியின் பேத்தியின் திருமணத்தில் கலந்துகொள்வதற்காக ஆதி மும்பைக்குச் சென்றிருந்ததால், மெஹர்ஜி, டாக்டர் டானுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, சோதனை முடிவுகளைத் தெரிவித்தார். பாபாவின் இரத்த அளவு (ஹீமோகுளோபின்) 8.5 சதவிகிதம் மற்றும் யூரியா 80 மி.கி. என்று டாக்டர் கிரான்ட் கூறினார். இரத்த அளவு குறைந்தால் பாபாவிற்கு மீண்டும் இரத்தமேற்றப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார். தசைப்பிடிப்புகளுக்கும் மருந்து பரிந்துரைக்கப்பட்டது.

டாக்டர் கிரான்டின் வார்த்தைகளில்: "பாபா, முதன்மையாக, அவரது சிறுநீரகத்தை பாதித்த நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டார். அவரது இடது சிறுநீரகத்திலிருந்து ஒரு சிறிய கல் வெளிவந்ததைக் காணமுடிந்தது. அதைத் தொடர்ந்து இரத்தத்தில் அதிக அளவு யூரியா (UREMIA) இருப்பது கண்டறியப்பட்டது, முதுகெலும்பு பகுதியில் பல வட்டு தேய்மானங்களும் இறுதியில், கடுமையான இரண்டாம் நிலை இரத்த சோகையும் உருவாகியுள்ளது. இரத்தத்தில் அதிக அளவு யூரியாவின் காரணமாக அவருக்கு நுண்ணுயிர் எதிர்ப்பு (ANTIBIOTIC) மருந்துகள், இரத்த சோகைக்காக மருந்துகள் மற்றும் புதிய இரத்தமாற்றமும் பரிந்துரைக்கப்பட்டது. அவரது நேரம் நெருங்கிவிட்டதால், இந்த மருந்துகளைத் தொடருவதில் எந்த பயனும் இல்லை என்று பாபா கூறினார்.

ஜனவரி 24 ஃபிரான்சிஸின் பிறந்தநாளாக இருந்ததை ஒட்டி, அவர் பாபாவின் அரவணைப்பைப் பெற்றார். அன்று இரவு கண்காணிப்பு வேளையில், பாபா, பாவ் கல்சூரியிடம், "**நான் கூறுவதை கவனமாகக் கேளுங்கள். நான் உங்களுக்கு மிகவும் முக்கியமான பணியை வழங்குகிறேன். எனது வாழ்க்கை வரலாற்றை நீங்கள் கவிதை நடையில் எழுத வேண்டும்**" என்று சைகையால் தெரிவித்தார். அவர் கை சைகைகளால் விளக்கிக் கொண்டிருந்தபோது, பாபாவிற்கு அடிக்கடி திடீரென மிகப் பெரிய நடுக்கம் ஏற்பட்டது, மேலும் அவர் விளக்க முயற்சித்தபோது, அவரது துன்பத்தைக் கண்டு பாவ் கல்சூரியின் இதயம் நொறுங்கிப்போனது.

பாவ் கல்சூரி மன்றாடினார், "பாபா, இப்போது எதுவும் சொல்லாதீர்கள். நீங்கள் மிகுந்த வேதனையில் இருக்கிறீர்கள். சற்று காலந்தாழ்த்தி, நீங்கள் நன்றாக இருக்கும் போது சொல்லுங்கள்."

ஆனால் பாபா அவருக்கு அறிவுரைகளை வழங்கிக்கொண்டே சென்றார். அவருக்கு நடுக்கம் ஏற்பட்டவுடன், சில கணங்கள் அமைதியாக படுக்கையில் சாய்ந்து, பின்னர் அவர் அறிவுறுத்தல்களை மீண்டும் தொடங்கினார். பிரியமான பாபா இதுபோன்ற கஷ்டங்களை அனுபவித்ததைப் பார்த்தது, பாவ் கல்சூரியின் வாழ்க்கையில் மிகவும் வேதனையான காட்சியாக இருந்தது.

பாபா இவ்வாறு அறிவுறுத்தினார்: "800 **பக்கங்களை எழுதுங்கள். எளிமையாகவும், ஈர்க்கும் விதத்திலும் எழுதி அதை சுவாரஸ்யமாக்குங்கள். போதனைகளை வழங்குவது போல் இருக்கட்டும். நான்கு வகையான எதுகை, மோனை இயைபுடன் எழுதுங்கள். தொடக்கத்தில் ஐந்து பரிபூரண குருநாதர்களின் வாழ்க்கையையும், பின்னர் எனது தந்தையின் வாழ்க்கையையும் இணைத்துக்கொள்ளுங்கள்.**

"**எனது இறுதி வெளிப்பாட்டிற்காக** 100 **பக்கங்களைத் தனியாக வைத்துக்கொள்ளுங்கள். நான் எதுகை, மோனை இயைபுடன் கூடிய வரிகளை வழங்குகிறேன், மேலும் எனது வெளிப்பாட்டைப் பற்றி பின்பு கூறுவேன். கவலைப்பட வேண்டாம். நான் உங்களுக்கு அனைத்தையும் விளக்குவேன்.**"

பாவ் கல்சூரி இடையே குறுக்கிடாமல் கவனமாகக் கேட்டுக் கொண்டார். இப்படிப்பட்ட மிக முக்கியமான தருணத்தில் பாபாவிடம் எதையும் கேட்பது, அவருடைய துன்பத்தை மேலும் அதிகரித்திருக்கும். எனவே, பாபாவின் உடல் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் கண்டதும் அவரிடம் விளக்கத்தைக் கேட்கலாம் என்று பாவ் கல்சூரி நினைத்தார்.

பாபாவின் விருப்பத்திற்கிணங்க பாவ் கல்சூரி எழுதுவதைத் தெரிவிக்க கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஆனது, இறுதியில் பாபா இந்தி மொழியில் பாவ் கல்சூரி எழுதியதைக் குறிப்பிட்டுக் கூறினார் , "**உங்கள் எழுத்தின் கைவண்ணம் எனக்கு மிகவும் பிடிக்கும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். உலகம் அதில் தவறு கண்டாலும், நீங்கள் அதைப் பொருட்படுத்த வேண்டாம், நான் உங்களுக்கு நேர்மையாகச் சொல்கிறேன், நீங்கள் எழுதுவது எனக்கு மிகவும் பிடிக்கும் எனும்போது, உங்களுக்கு வேறு என்ன வேண்டும்?**"

1969 ஜனவரி 24 அன்று இரவு பாபாவின் அறையில் நிகழ்ந்த காட்சி எப்பொழுதும் பாவ் கல்சூரியின் கண்களுக்கு முன்னால் இருக்கும்; இந்தக் கண்ணீரின் கதை அவருக்கு மட்டுமே தெரியும். '**மெஹர் தரிசனம்**' ('மெஹர் தர்ஷன்' இந்தி மொழியில் கவிதை நடையில் சுயசரிதை) மற்றும் '**மெஹர் பிரபு**' (இந்தி உரைநடையில் சுயசரிதை) ஆகியவை பாபாவின் இறுதி அறிவுறுத்தல்களாக வழங்கப்பட்டன. பாவ் கல்சூரி பின்பு நினைவு கூர்ந்தது

போல: "நான் அதை எழுத வேண்டும் என்பது அவரது விருப்பம், அதன் மூலம், நான் அவரது கடைசி கட்டளையை நிறைவேற்றினேன்."

1969 ஜனவரி 26ஆம் தேதி மணியின் குடும்பக் கடிதம் (FAMILY LETTER) உலகம் முழுவதும் அனுப்பப்படுவதற்கு முன்பு, பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டது. அவரது உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, "பாபா, நீங்கள் விரைவில் எதிர்வரும் தரிசனத்தை ரத்து செய்ய விரும்பினால், அது இன்னும் சாத்தியம்" என்று எரச் சுட்டிக்காட்டினார்.

பாபா சிரித்துக்கொண்டே, "**இல்லை இல்லை, அதை ரத்து செய்யக்கூடாது. என் அன்பர்களுக்கு நான் இந்த தரிசனத்தை வழங்குகிறேன். எனது சுய நிபந்தனைகளுக்கு உட்பட்டு நான் அதை வழங்குகிறேன்**" என்று பதிலளித்தார்.

அவர் அனைவரிடமும் திரும்பத் திரும்ப இவ்வாறு வலியுறுத்திக் கூறினார்: "**எதுவாக இருந்தாலும் நான் சொல்வது போலச் செய்யுங்கள், ஏனெனில் நான் என்ன செய்கிறேன் என்று எனக்குத் தெரியும்.**"

அவர் மீண்டும் எச்சரித்தார்: "**எனது தாமனை** (மேலங்கி) **உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். எந்த சூழ்நிலையிலும் அதை நழுவ விடாதீர்கள்.**"

ஒரு கட்டத்தில் 1958 முதல், மண்டலியைப் பொறுத்தவரை, 'காணாமல்போன' பாபாவின் இரகசிய புத்தகத்தைப் பற்றி எரச் கேட்டார், "உங்கள் புத்தகத்தைக் குறித்து என்ன கூற விரும்புகிறீர்கள்?" பாபா உடனே, "**இது யார் ஒருவரிடம் இருக்கவேண்டுமோ அவருடைய கைகளில் உள்ளது**" என்று உறுதியளித்தார், மேலும் ஒரு தொப்பியை சாய்வாக வைத்து சைகையால் தெரிவித்தார் (இது சூழ்நிலையைப் பொறுத்து, ஆதி சீனியர் - மேற்கத்திய நாடு - அல்லது ஒரு மேற்கத்திய அன்பரிடம் இருப்பதாகப் பொருள்படலாம்).

ஜனவரி 26 ஞாயிறு காலை, பாபா அறுவை சிகிச்சை படுக்கைக்கு மாற்றப்பட்டார். அதை மேலும் கீழும் அசைத்து சரிசெய்ய முடியும் என்பதால், அவர் அதில் மிகவும் சௌகரியமாக உணர்ந்தார். ஆனால் அன்று அதிகாலையிலிருந்து நண்பகல் வரை, சில நிமிடங்களுக்கு ஒருமுறை அவரது உடலை கொடூரமான தசைப்பிடிப்புகள் தாக்கின. அவை அவரை முற்றிலும் சோர்வடையச் செய்தன. டாக்டர் கோஹெர் தலையிட்டு ஒரு மயக்க மருந்தை வழங்கியபோது தசைப் பிடிப்புகள் படிப்படியாக தணிந்தன.

அன்று காலை, பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**நாம் அனைவரும் விரைவில் குருபிரசாத்திற்குச் செல்வதானால், டாக்டர்கள் கிண்டே மற்றும் கிரான்ட், கோஹெர் விரும்புவதுபோல, தேவை எனக் கருதும் போதெல்லாம்**

**என்னை கவனித்துக்கொள்ள எளிதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.**"

எரச் கூறினார், "அது சரி பாபா, குருபிரசாத்தில் அனைத்தும் தயாராக உள்ளது. நீங்கள் தேதியை மட்டும் கூறுங்கள்."

"**உங்கள் அனைவருக்கும் மற்றும் பூனாவில் வாழும் அன்பர்களுக்கும் எந்த நாளும் அது வசதியாக இருக்கும்**" என்று பாபா பதிலளித்தார். "**ஆனால், பெண்கள் அவர்களது பெட்டி படுக்கைகளைத் தயார் செய்ய குறைந்தது ஏழு நாட்கள் தேவைப்படும்**!"

எரச், "அப்படியானால், உங்கள் முடிவை இன்று மெஹர்ஜி, மெஹர்வான் இருவருக்கும் தெரிவிக்கிறேன்" என்றார். என்னவாயினும், பாபா அவரைத் தடுத்து நிறுத்தி, அடுத்த நாள் நிச்சயமாகத் தெரிவிப்பதாகவும், பின்பு தேதியை நிர்ணயிப்பதாகவும் கூறினார்.

ஆதி சீனியர் ஜனவரி 25 அன்று மும்பையிலிருந்து அஹமதுநகர் திரும்பி வந்தார். ஜிம் மிஸ்திரியின் மனைவி ரோடா, பாபாவின் மோசமான நிலையைக் கேள்விப்பட்டு, ஆதியுடன் பயணம் செய்து, மறுநாள் காலை அவர்கள் மெஹராஸாத் வந்தடைந்தனர். பாபாவிற்கு அருந்த அர்னவாஸ், கேட்டி இருவரும் சுமார் 20 இளநிகளை ஆதி மூலமாக அனுப்பி வைத்தனர்.

இந்த இக்கட்டான காலகட்டத்தில் பாபாவிற்கும் பெண் மண்டலிக்கும் சில சேவைகளைச் செய்ய அனுமதிக்கப்படுவார் என்று ரோடா நம்பினார்; ஆனால் பாபா அனைத்தும் நன்றாகிவிடும் என்று உறுதியளித்து அவரைத் திருப்பி அனுப்பினார். அவர் குஷ்ரு குவார்ட்டர்ஸில் மதிய உணவு உண்டு கொண்டிருந்தபோது, பாபா, ரோடாவிற்கு ஒரு 'முக்கிய செய்தியை' அனுப்பினார். 1969 ஏப்ரல் மாதத்தில் குருபிரசாத் தரிசன நிகழ்ச்சியில் அவர் நிச்சயமாகக் கலந்து கொள்ள வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ரோடா, ஸரோஷுடன் மறுநாள் மும்பைக்குத் திரும்பிச் சென்றார்.

இந்தக் கடைசி நாட்களில், பாபா நன்றாக உண்டு, காலை 8:00 மணிக்கு காலை உணவை எடுத்துக் கொண்டிருந்தார். அவர் காலை 10:00 மணிக்கு தண்ணீருடன் காம்ப்ளான் (ஒரு புரத கலவை) அருந்தினார். அதன் பின்னர் இளநீர். பாபா அவரது இரவு உணவை மாலை 5 முதல் 5:30 மணிக்குள் உண்டுவிடுவது வழக்கம்; அடிக்கடி அவர் நாய் மஸ்தானுக்கு மாமிசத் துண்டுகளைக் கொடுத்தார்.

ஜனவரி 26ஆம் தேதி, விலூவிடமிருந்து வரவழைத்த மற்றுமொரு எலுமிச்சை பழப்பாகை பாபா நன்கு ரசித்து உண்டார்.

அதே நாள் மாலை 4:45 மணிக்கு, காக்கா மீண்டும் தனது அற்புதமான "ஹோ, ஹோ, ஹோ!" என்ற கீர்த்தனையை மொழிந்து பாபாவை சிரிக்க வைத்தார்.

அன்று இரவு ஆறரை மணி நேரம், அதிகாலை 4:00 மணி வரை, பாபா நன்றாகத் தூங்கினார், கட்டுக்கடங்காத அதிர்ச்சியால் எந்தத் தொந்தரவும் இல்லை. ஆனால் 27ஆம் தேதி காலை 6:30 முதல் 7:15 வரை, பின் இடுப்புப் பகுதியில் வலி இருப்பதாகப் புகார் கூறினார். படுக்கையில் திரும்புவது பொதுவாக அவருக்கு மிகவும் கடினமாக இருந்தது, இருப்பினும் சில நேரங்களில் அவரது உடல் மிகவும் இலகுவாகவும் மிருதுவாகவும் மாறும் தருணங்களில் அவர் படுக்கையில் தானே திரும்ப முடிந்தது.

மதியம் 1:30 மணிக்கு, வழக்கம் போல, '**மார்ச் இறுதி வரை பூனாவிற்குப் போவதில்லை**' என்று முடிவு செய்ததாக பாபா மண்டலிக்குத் தெரிவித்தார். '**டாக்டர் கிண்டேயை தொலைபேசியில் தொடர்புகொண்டு அவர் வர முடியுமா என்று கேட்கவும், ஸரோஷின் இல்லத்தில் நான்கு அல்லது ஐந்து நாட்கள் தங்கவும், அதனால் தினமும் காலை முதல் மாலை 5:00 மணி வரை மெஹராஸாத்தில் தங்கி, பாபாவிற்கு அடிக்கடி ஏற்படும் தசைப்பிடிப்புகளை கவனிக்கவும், பாபாவின் உணவு மற்றும் மருந்துகளைப் பற்றி கோஹெரிடம் ஆலோசனை செய்யவும் முடியும்**' என்று ஆதிக்கு அறிவுறுத்தப்பட்டது. கிண்டே வர ஒப்புக்கொண்டார்.

1968 டிசம்பர் மற்றும் 1969 ஜனவரி மாதங்களில் டாக்டர் கிண்டே அஹமதுநகருக்கு பலமுறை காரில் வந்தது மண்டலிக்குத் தெரியாது. ஆனால் பாபா அவரைப் பார்க்க அனுமதி வழங்காததால், மெஹராஸாத்தை நெருங்கியதும், காரைத் திருப்பிக்கொண்டு மும்பைக்குச் செல்லுமாறு அவர் ஓட்டுநரிடம் கூறினார். அவரது உடலிலும், உதிரத்திலும் உளதாயிருக்கும் ராமரிடம் காட்டிய ராம் கிண்டேயின் பக்தி அப்படித்தான் இருந்தது!

டாக்டர் கிரான்ட் பூத் மருத்துவமனைக்கு மாதந்தோறும் விஜயம் செய்த வேளையில், ஜனவரி 30ஆம் தேதி மெஹராஸாத்திற்கு வர வேண்டும் என்று தெரிவிக்கப்பட இருந்தது. வசதியாக இருந்தால் மெஹர்ஜி, மெஹர்வான், டாக்டர் இச்சாபோரியா ஆகியோர் அவருடன் வரலாம். பாபா பூனாவிற்குச் செல்லும்போது அவசர மருத்துவ ஊர்தியில் பயணம் செய்ய வேண்டும்

என எரச் கருத்துத் தெரிவித்திருந்தார், மேலும் அவர்கள் ஏற்கனவே ஊர்தி ஒன்றை ஏற்பாடு செய்வது குறித்து விசாரிக்கத் தொடங்கினர்.

27ஆம் தேதி மதியம் சுமார் 1:30 மணியளவில், பாபா, சகன் தயார் செய்த உணவை உண்டார். தசைப்பிடிப்புகளுக்கு இரண்டு மணிநேரத்திற்கு ஒருமுறை பாபாவிற்கு (மேக். ஃபாஸ். - MAG. PHOS. 12X) சில ஹோமியோபதி மருந்துகளை ஆதி அனுப்பினார்.

1969 ஜனவரி 28ஆம் தேதி செவ்வாய்கிழமை அதிகாலையிலிருந்து, பாபாவிற்கு அடிக்கடி உடலில் கொடூரமான நடுக்கங்கள் - ஒரு மின்சார அதிர்ச்சி அவரது உடல் முழுவதும் பாய்வது போல் ஏற்படத் தொடங்கின. அது ஒரு பயங்கரமான நாள். பாபாவிற்கு காலை 5:00 மணி முதல் இரவு 9:00 மணி வரை, பதினாறு மணி நேரம், `பெரிய மற்றும் சிறிய 'திடீர் உடல் அதிர்வுகள்' தொடர்ந்து இருந்தது; எரச், பாவ் கல்சூரி, பெண்டு, ஃபிரான்சிஸ் ஆகியோர் அவரைப் படுக்கையோடு சேர்த்து, பற்றிப் பிடித்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம். அதிர்ச்சி அவரை முற்றிலும் சோர்வடையச் செய்தது. ஒவ்வொரு முறை உடல் திடீரென அதிரும்போதும், பாபா தனது பின் இடுப்புப் பாகத்தில் பயங்கரமான வலி இருப்பதாகப் புகார் கூறினார்; மூச்சு விடுவதில் கூட சிரமப்பட்டார். இறுதியாக, பாபாவின் உடல் இயல்பு நிலைக்குத் திரும்பியது; இரவு 9:00 மணி முதல் அதிகாலை 3:30 மணி வரை, கிட்டத்தட்ட எந்த அதிர்ச்சியும் இல்லை.

பாதிரி 29ஆம் தேதி காலை மெஹராஸாத்திற்கு வந்தார். ருஸ்தம் காக்காவின் மகன் மானேக், ஆதியின் அலுவலகத்திலிருந்து அவசரக் கடிதங்கள் அல்லது தொலைத்தந்திகளை வழங்குவதற்காக மெஹராஸாத்திற்கு அடிக்கடி செல்வது வழக்கம். மானேக் அன்று காலை 8:15 மணிக்குத் தொலைத்தந்தியுடன் வந்தபோது, பாபா நல்ல மனநிலையில் காணப்பட்டார்; பாபா அவரிடம், "**முழு சுமையும் என் மீது இருப்பதால் நான் மிகவும் சிரமப்படுகிறேன். எனது நிலை குறித்து எரச் உங்களுக்குக் கூறினாரா?**" என வினவினார்.

அதற்கு பதிலளித்த மானேக், "பாபா, இவை அனைத்தும் உங்கள் திருவிளையாடல். உங்கள் மீது ஒரு பெரிய சுமை இருக்கிறது என்று கூறினால், அதை நீங்கள் உருவாக்கியதே காரணம்" என்று கனிவாக எடுத்துரைத்தார்.

அவர் கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த பாபா, "**இந்த 40 வருடங்களாக இவர்கள்** (மண்டலி) **புரிந்து கொள்ளாததை நீங்கள் ஒரு நிமிடத்தில் புரிந்து கொண்டீர்கள்!**" என்று சைகையால் தெரிவித்தார்.

உள்ளூர் மையம் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து மானேக்கிடம் பாபா கேட்டார், "**நான் கூறியது நிறைவேறும். அஹமதுநகர் மையம் ஒரு நாள் உலகின் மிகப்பெரிய மையமாகத் திகழும். நீங்கள் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். நீங்கள் முழு வீச்சில் பணிபுரிய வேண்டும்.**"

அன்று பாபா சாதாரண காலை உணவையும் மதிய உணவையும் உண்டார். அன்றைய தினம் அவருக்கு, திடீரென நிகழும் பெரிய அளவிலான அதிர்ச்சிகள் எதுவும் ஏற்படவில்லை, இரண்டு அல்லது மூன்று முறை சிறிய அதிர்ச்சிகள் இருந்தன - தற்செயலாக மின் கம்பியைத் தொடும்போது ஏற்படும் உணர்வு போன்றது. மட்டுமீறிய உடல் தசைகளின் நடுக்கம் குறித்து பாபா இறுதியாக விளக்கினார், "**எனது பணியை விரைவில் முடிக்க நான் அனைத்தையும் துரிதப்படுத்தும் ஆயத்தத்தில் இருக்கிறேன்.**"

இருந்தபோதிலும், அன்று, மும்பையில் வாழும் டாக்டர் கிண்டேயை தொலைபேசியில் தொடர்புகொண்டு, பிப்ரவரி வரை காத்திராமல், விரைவில் அஹமதுநகருக்கு வருகை தருமாறு தெரிவிக்க ஆதிக்கு அறிவுறுத்தப்பட்டது. டாக்டர் கிண்டே பிப்ரவரி 1ஆம் தேதி வருவதாகக் கூறினார்.

பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, அவரது கட்டளைகள் அல்லது செய்திகளை தெரிவிக்கும் வகையில், பாவ் கல்சூரி அஹமதுநகரில் வாழும் தனது குடும்பத்தினருக்கு தினமும் (சில நேரங்களில் ஒரு நாளைக்கு இரண்டு முறை) சிறு குறிப்புகளை எழுதுவது வழக்கம். 1969 ஜனவரி 29 புதன்கிழமை அன்று, அவர் எழுதியதாவது:

பிரியமான பாபாவின் உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது; முன்னேற்றத்திற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை. நேற்று நாங்கள் அனைவரும் அச்சத்தில் ஆழ்ந்தோம். ஆனால் அவர் கடவுள்; அவரது ஆரோக்கியம் அவரது கைகளில் உள்ளது. அவருக்கு சேவை செய்யும் வாய்ப்பை அவர் நமக்கு வழங்குகிறார்.

பல மாதங்களாக, மெஹர்நாத், ஷீலா இவர்களின் எதிர்காலம் குறித்து கருத்துகள் பரிமாறப்பட்டன. இத்தகைய நெருக்கடியான நிலையிலும், பாபா அவரது அன்பர்களின் அன்றாட நடைமுறை கவலைகளைப் பற்றி எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருந்தார்; அடுத்த நாள் பிற்பகல் ஜனவரி 30 அன்று, அவர்களின் எதிர்காலம் குறித்த அவரது முடிவை பாபா தெரிவித்தார். **ஷீலா ஆயுர்வேத மருத்துவராகவும், மெஹர்நாத் கல்லூரியில் நுழைந்து அறிவியலில் முதுகலைக் கல்வியும் பயிலவேண்டும்**. பாபா விளக்கினார்,

**“ஒரு மருத்துவராவதன் மூலம், பேபி** (ஷீலா) **எனக்கு சேவை புரிவார். நான் எப்பொழுதும் அவருடன் இருப்பேன்.**” பாபா அவர்களின் கல்வி மற்றும் பராமரிப்புக்காக நிதி வழங்கப்படும் என்று பாவ் கல்சூரியிடம் உறுதியளித்தார்.

இந்த இறுதி மாதங்களில், பாபா, பாவ் கல்சூரிக்கு கஸல்களுடன் இணைப்பதற்கென பல வரிகளை எடுத்துரைத்தார். ஜனவரி 29 அன்று மாலை, அவர் இந்தி மொழியில் இந்த வரியை வழங்கி, அதன் கருப்பொருளின் அடிப்படையில் ஒரு கஸலை எழுதுமாறு பாவ் கல்சூரியிடம் கூறினார்:

**‘நீங்கள் சென்ற பின்பு, நாங்கள் இப்போது**
**எங்கள் வாழ்க்கையில் என்ன செய்வோம்?’**

பாவ் கல்சூரி வரியின் பொருளைக் குறித்து ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்.

‘விரைவில் அவர் இதைப் புரிந்துகொள்வார்’

பாவ் கல்சூரிக்கு பாபா வழங்கிய கடைசி வரிகளில் இதுவும் ஒன்று. மண்டலியின் மனங்களும் இதயங்களும் பாபாவின் மீது முழுவதுமாக குவிந்திருந்தன, ஆனால் அவருடைய பரம சித்தத்தின் முன்னால் அனைவரும் உதவியற்றவர்களாக இருந்தனர்.

அன்றிரவு 9:00 மணிக்கு பாபாவின் உடலை கூரிய, கொடூரமான நடுக்கங்கள் தொடர்ந்து தாக்கின, அப்போது, கோஹெர், எரச் இருவரும் அழைக்கப்பட்டனர். எரச்சும், பாவ் கல்சூரியும் பாபாவை உறுதியாகப் பற்றிப் பிடித்துக்கொண்டனர். பாபா சைகையால் தெரிவித்தார், “**ஒவ்வோர் அதிர்ச்சியும் மின்சார அதிர்வுபோல் உணரப்படுகிறது!**”

பாபாவின் உடல் பாறைபோல மாறியதால், அதிர்ச்சிகள் முழு உடலையும் படுக்கையிலிருந்து தூக்கி எறிந்தது. இது ஒரு மணி நேரம் தொடர்ந்து பின்னர் தணிந்தது. அறையின் சூழ்நிலை மாறிய அந்த கணத்தில், பாபாவின் உடல் பூவைப் போல மென்மையாக மாறியது, அவர் எதுவும் நடக்காதது போல் உரையாடத் தொடங்கினார்.

பாபா, எரச்சிடம் அவரது உறவினர்கள், அஹமதுநகரில் வாழும் ஸட்டா மற்றும் தமானியா குடும்பங்கள், பூனாவில் அவரது தாயார் கெய்மாய், சகோதரி மனு, சகோதரர் மெஹர்வான் ஆகியோரைப் பற்றி விசாரித்தார். மெஹர்வான் ஒவ்வோர் ஆண்டும் பாபாவின் பிறந்தநாளை ஒட்டி, ஒரு மாதம் மெஹராஸாத்திற்கு வருவது வழக்கம், “**மெஹர்வான் எப்போது வருவார்?**” என்று பாபா கேட்டார்.

எரச் கூறினார், “இந்த ஆண்டு, பூனாவில் தரிசன நிகழ்ச்சி இருப்பதால், அது குறித்த பணியில் உதவுவதற்காக அவர் அந்த நேரத்தில் தனது

வேலையிலிருந்து (மெஹர்ஜியின் 'காகித ஆலை'யில் பணிபுரிந்தார்) விடுப்பு எடுக்க வேண்டும், எனவே அவர் பிப்ரவரியில் இங்கு வரத் திட்டமிடவில்லை."

**"இல்லை, அவர் பிப்ரவரியில் வர வேண்டும்"** என்று பாபா அறிவுறுத்தி, **மெஹர்வான் 30ஆம் தேதி மெஹர்ஜியுடன் மெஹராஸாத்திற்கு வரலாம்** என்று சுட்டிக்காட்டினார். பின்பு மெஹர்வான் தனக்கு கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தவில்லை என்று வருந்தவேண்டிய சூழ்நிலை உருவாகும்.

இதற்கிடையில் டாக்டர் கிரான்ட், 1969 ஜனவரி 30 வியாழன் அன்று அஹமதுநகர் பூத் மருத்துவமனைக்குச் (BOOTH HOSPITAL) செல்லவிருந்தார், எனவே, பாபாவின் விருப்பப்படி, மெஹர்ஜி அவரை முதன்முதலில் காலை 8:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். மருத்துவர் முன்னிலையில் பாபாவின் உடல்நிலை சாதாரணமாகத் தெரிந்தது, மேலும் பாபா அவருடன் மிகுந்த ஆர்வத்துடன் உரையாடினார். டாக்டர். கிரான்ட், ஒரு புதிய அறக்கட்டளையை ('ரூபி ஹால் பூனா மருத்துவ அறக்கட்டளை' - 'POONA MEDICAL FOUNDATION AT RUBY HALL' என்ற பெயரில்) தொடங்குவது குறித்து யோசிப்பதாகவும், ஆனால் அது வெற்றி பெறும் என உறுதியாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார். அதை முன்னெடுத்துச் செல்லும்படி பாபா அவரைத் தூண்டினார். டாக்டர் கிரான்டுடன் வந்த செவிலியர் சில தனிப்பட்ட நிதிப் பிரச்சினையையும் பாபாவிடம் விவாதித்தார். இறுதிவரை, பாபா, மக்களின் அன்றாட நடைமுறை விஷயங்களில் இரக்கத்தையும் அக்கறையையும் வெளிப்படுத்தினார்.

பாபா சரியாக உணவு உண்ணவில்லை; டாக்டர் கிரான்ட், பாபாவின் உடல்நிலையில் முன்னேற்றம் இருப்பதாக நினைத்து, அதிக புரதச்சத்தை உட்கொள்ளுமாறு அவருக்கு அறிவுறுத்தினார். பாபா கேலி செய்தார், **"முதலில் என் உணவில் சில கட்டுப்பாடுகளை விதித்தீர்கள், இப்போது புரதச்சத்தை அதிகமாக எடுத்துக்கொள்ளச் சொல்கிறீர்கள்!"**

டாக்டர் கிரான்ட் பதிலளித்தார், "நீங்கள் உண்பது அரிதாக இருப்பதால், புரதச்சத்து அதிகம் உள்ள உணவை நீங்கள் உட்கொள்ள வேண்டும்."

**"நீங்கள் மாமிசம் மற்றும் மீன் உண்பது உண்டா?"** என்று பாபா கேட்டார்.

கிரான்ட் ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே உண்பதாகவும், அவர் அசைவ உணவை எடுத்துக்கொள்வதாகவும் பதிலளித்தார். பாபாவை பரிசோதனை செய்த பிறகு, டாக்டர் கிரான்ட் கூறினார், "எனக்கு எதுவும் புரியவில்லை, மேலும் சோதனைகள் செய்யப்படும் வரை என்னால் எதுவும் கூற இயலாது, அதனால் ஓர் உறுதியான நோயறிதலைத் தீர்மானிக்க முடியும். நீங்கள்

பூனாவிற்கு வந்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும். தசைப் பிடிப்புக்கான காரணங்களைக் கண்டறிய வெவ்வேறு சோதனைகள் செய்யப்பட வேண்டும்."

பாபா பதிலளித்தார், "**எனது நேரம் வந்துவிட்டது**."

பாபா மிகவும் வெளிர் நிறமாகத் தெரிந்ததால், பிப்ரவரி 1ஆம் தேதி பாபாவின் இரத்தம் மீண்டும் பரிசோதிக்கப்படும், தேவைப்பட்டால், கிரான்ட் காலை 7:30 மணிக்குத் திரும்பி வருவார் என்று முடிவு செய்யப்பட்டது. பிப்ரவரி 2ஆம் தேதி பாபாவிற்கு மேலுமோர் இரத்தயேற்றம் வழங்கவேண்டும். (டாக்டர் கிண்டே பிப்ரவரி 1ஆம் தேதி வரவிருப்பதால், இரத்தயேற்றத்தின் போது, அவரும் உடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்.)

டாக்டர் கிரான்ட், மெஹர்ஜியுடன் புறப்பட்டுச் சென்றார். பூனாவிற்குத் திரும்பிச் செல்லும் வழியில், கிரான்ட், மெஹர்ஜியிடம், "பாபாவின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது. பாபாவே இதை அறிந்திருக்கிறார், அதனால் அவரும் அவ்வாறே எடுத்துரைத்தார்" என்று கூறினார்.

கிரான்ட் புறப்பட்டுச் சென்ற பிறகு, திடீர் அதிர்ச்சிகள் மீண்டும் பிரியமான பாபாவின் உடலைத் தாக்கின. பாபாவின் அறையில் இருந்த எரச், பெண்டு, ஃபிரான்சிஸ், பாவ் கல்சூரி ஆகியோர் அவரது கைகளையும் கால்களையும் உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டனர். என்ன சிகிச்சை வழங்குவது என்று தெரியாமல் டாக்டர் கோஹெர் பாபாவின் அருகில் அமர்ந்திருந்தார். பாபா கூறினார், "**இது நான் சிலுவையில் உயிரைத் துறப்பதற்கு சமம்! கிறிஸ்து ஒருமுறை சிலுவையில் அறையப்பட்டார், ஆனால் நான் ஒவ்வொரு கணமும் சிலுவையில் அறையப்படுகிறேன்!**"

அவர் இதைப் பலமுறை திரும்பத் திரும்பக் கூறினார்; டாக்டர் டான் அவரைப் பார்க்க பாபாவின் அறைக்கு வந்தபோது, அவர் அதையே மீண்டும் மீண்டும், குறிப்பாக, அவருக்காக எடுத்துரைத்தார், "**இந்தத் துன்பம் நான் சிலுவையில் உயிரைத் துறப்பதற்கு சமம்! கிறிஸ்து ஒருமுறை சிலுவையில் அறையப்பட்டார், ஆனால் நான் ஒவ்வொரு கணமும் சிலுவையில் அறையப்படுகிறேன்!**"

அவர் மீண்டும் இதை டானிடம் எடுத்துரைத்தார்: "**இவை அனைத்தும், நான் இதுவரை அனுபவித்த துன்பங்கள் அனைத்தும், அந்த இறை வார்த்தையை மொழிவதற்காக என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டதாகும் - ஒரே இறை வார்த்தைக்காக!**"

மேலும் ஒரு குறும் புன்னகையுடன், "**இதைக் கற்பனை செய்து பாருங்கள்!**" என்றார்.

பாபாவின் ஒவ்வொரு விரல் அசைவும் ஒரு தசைப்பிடிப்பை ஏற்படுத்தியது, அவருடைய சைகைகளைப் புரிந்துகொள்வதே கடினமாக இருந்தது. ஒரு மணி நேரத்திற்குப் பிறகு தசைப்பிடிப்புகள் தணிந்தன.

பாபாவின் அறையின் ஒரு மூலையில் இயேசு கடலில் நடந்து செல்ல, அப்போஸ்தலர் பீட்டர் அவரைப் பார்த்துக்கொண்டிருப்பது போன்ற ஒரு படம் தொங்கவிடப்பட்டிருந்தது. அதில் இந்த வார்த்தைகள் இருந்தன: "**ஆண்டவரே, என்னைக் காப்பாற்றுங்கள், இல்லையேல் நான் அழிந்துவிடுவேன்**!"

அந்தச் சித்திரத்தைச் சுட்டிக்காட்டி, பாபா, எரச்சிடம், "**நீங்களே எனது பீட்டர்**..." என்று சைகையால் தெரிவித்தார்.

இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடன் 'இறுதி இரவு போஜனத்தில்' (LAST SUPPER) அமர்ந்திருந்த சித்திரத்தை வரவழைத்தார். (இயேசுவின் மார்பில் சாய்ந்த வண்ணம் இருந்த) அப்போஸ்தலர் ஜானை சுட்டிக்காட்டி, பாபா, எரச்சிடம், "**பாவ் எனது ஜான்**..." என்று சைகையால் தெரிவித்தார்.

இந்தக் கடைசி நாட்களில் பாபா பல சந்தர்ப்பங்களில் பாவ் கல்சூரிக்கு இதைத் திரும்பத் திரும்பக் கூறினார். பாவ் கல்சூரி கண்காணிப்புப் பணியில் இருந்தபோது, பாபா விளக்கினார், "**கிறிஸ்துவின் சீடர்களில் ஜான் இளையவர்**. **கிறிஸ்து அவரை முத்தமிட்டு மிகவும் நேசித்தார்**. **அதேபோல**, **நான் உங்களை நேசிக்கிறேன்**. **நான் அனைவரையும் நேசிக்கிறேன்**, **ஆனால் இது எனது தனிப்பட்ட அன்பு**."

சகன் தினமும் மதியம் அஹமதுநகரிலிருந்து மெஹராஸாத்திற்கு பல்வேறு ஆயுர்வேத புத்தகங்கள் மற்றும் மருந்துகளை கொண்டு வருவது வழக்கம். அவர் நூல்களைக் கலந்தாலோசித்து, ஒரு மருந்தைப் பரிந்துரைப்பதும், அதை பாபா உண்ணுவதும் அன்றாடம் நடந்துவந்தது. அவதார புருஷரின் தெய்வீக விளையாட்டு அத்தகையது. அவருக்கு எந்த மருந்தும் தேவையில்லை என்றாலும், சகனுக்கு சேவை செய்யும் வாய்ப்பை அவர் வழங்கினார்.

ஜனவரி 30 மதியம், பாபா தனது உலகளாவிய பணியை வழக்கம் போல செய்தார். அவருடன் அவரது அறையில் இருந்த பாவ் கல்சூரி, பாபாவின் அறிவுறுத்தலுக்கு இணங்க, அவரது மார்பில் தனது முஷ்டிகளால் அறைய வேண்டியிருந்தது. இந்த இறுதி நாள் பணி முடிந்ததும், பாபாவின் கன்னங்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. பாபா, பாவ் கல்சூரியை நிமிர்ந்து பார்த்து, அவரை, தன்னை நோக்கி இழுத்து அரவணைத்துக் கொண்டார். பாபா முற்றிலும் சோர்வடைந்து, வேதனையுடனும் காணப்பட்டார். படைப்பின் உலகளாவிய

துன்பத்தின் சக்திகளின் ஆலையில் அரைக்கப்பட்ட பின்னர், அவரது உடல் சுக்குநூறாக உடைக்கப்பட்டது.

ஜனவரி 30ஆம் தேதி, பாபா, பாவ் கல்சூரிக்கு எடுத்துரைத்த நான்கு முன்னறிவிப்பு வரிகளை, பாபா அவரது உடலைத் துறந்த சில மாதங்களில், பாவ் கல்சூரி மேற்கோள் காட்டி கூறினார்.

**அனைத்தும் முழு அமைதியாக இருந்தது.**
**மேலும் நான் உச்சத்தில் குதித்து தாவினேன்.**
**'உண்மையில் ஒன்றுமில்லாத' ஒன்றிலிருந்து,**
**'எல்லாமாகிய' நான் புறப்பட்டு விட்டேன்.**

இந்தி மொழியில்:
[SAB KE SAB KHAMOSH THE.
AUR MAE UCHAL KE KOOD GAYA.
KUCH NAHI KE MADHYAM SE
SAB KUCH NIKAL KE REH GAYA.]

ஆங்கில மொழிபெயர்ப்பு:
[ALL WERE SILENT
AND I JUMPED UP AND LEAPT AWAY.
FROM THE NOTHING
EVERYTHING WENT AWAY. ]

அதைத் தொடர்ந்து பாபா தனது விரல்களை நகர்த்தத் தொடங்கினார்; பாவ் கல்சூரிக்கு கஸலின் மற்றுமொரு வரியை வழங்க முற்படவே, பயங்கரமான தசைப்பிடிப்பு ஏற்பட்டது. பாவ் கல்சூரி அவரிடம், "பாபா, தயவு செய்து இப்போது எதையும் எடுத்துரைக்க வேண்டாம். நீங்கள் மிகவும் வேதனையில் உள்ளீர்கள். நீங்கள் நன்றாக உணரும்போது எனக்கு அதைக் கொடுங்கள்" என்று கெஞ்சவே, பாபா நிறுத்தினார்.

சிறிது நேரம் கழித்து, பாபா, எரச்சை அழைத்து, "**என் உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது**" என்று சைகையால் தெரிவித்தார்.

எரச் கூறினார், "நாங்களும் அதை உணர்கிறோம் பாபா, ஆனால் நாங்கள் உங்கள் விருப்பத்திற்கு மாறாக ஆதரவற்றவர்களாக உள்ளோம்."

பாபா விரும்பியபடி அன்று பிற்பகல் பாபாவின் மார்பில் பலமாக அறைய முடியவில்லையே என்று பாவ் கல்சூரி வருத்தப்பட்டார். அவருக்கு ஆறுதல் கூறும் விதத்தில், பாபா, எரச்சிடம், "**பாவை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**" என்று கேட்டார்.

“பாவ் ஈடுஇணையற்றவர்” என்று எரச் பதிலளித்தார். பாபா அப்போது அவரிடம் நீங்கள் போகலாம் என்று சைகையால் தெரிவித்தார்.

பாதிரி, சகன் இருவருக்கும், இரவு கண்காணிப்பில் உதவுவதற்காக, ஏழு நாட்கள் மெஹராஸாத்தில் தங்குமாறு கூறி எரச் செய்தி ஒன்றை அனுப்பியிருந்தார், அன்று மாலை பாதிரி தனது இரு சக்கர வாகனத்தில் வந்தார். பாதிரி மெஹராபாத்திலிருந்து புறப்பட்டுச் சென்றதும், “பாதிரி எங்கே சென்றார்?” என்று சிதுவிடம் முஹமது மஸ்த் வினவினார். பாபாவிற்கு உடல்நிலை சரியில்லாததால், மண்டலிக்கு உதவ மெஹராஸாத்திற்கு பாதிரி அழைக்கப்பட்டதாக சிது அவரிடம் கூறினார். இதைக் கேட்டதும், பெரும்பாலும் புரியாமல் முணுமுணுக்கும் முஹமது மஸ்த், “பாதிரி நாளை திரும்பி வருவார்” என்று தெளிவாகத் தெரிவித்தார்.

சிது உடனே, “இல்லை, இல்லை பாபா அவரை ஏழு நாட்களுக்காக அழைத்தார்” என்றார்.

அப்போது முஹமது மஸ்த், “நாளை தாதா (பாபா) இங்கு வருகிறார், குஸ்தாஜியுடன் (ஏற்கனவே காலமானவர்) இணையப் போகிறார்” என்றார்.

பாதிரி மெஹராஸாத்திற்கு வந்ததும், பாபாவின் அறைக்குச் சென்றார். பாதிரியின் மோட்டார் சைக்கிளின் சத்தம் பாபாவிற்கு இடையூறாக இருந்தது; ஆனால் பாபா, பாதிரியிடம் இரவு உணவை உண்ணுமாறும், அவருக்குப் பகல் நேர கடமை வழங்கப்படும் என்றும் கூறி, “**நான் உங்களை அழைக்கும் போது வாருங்கள்**” என்று சைகையால் தெரிவித்தார்.

பல மாதங்களில் முதல் முறையாக, பாபா அன்று மாலை இரண்டு மணி நேரம், ஏழு முதல் ஒன்பது மணி வரை, நன்றாகத் தூங்கினார்; உண்மையில் குறட்டைவிட்டுக் கொண்டிருந்தார். பாபாவின் படுக்கைக்கு எதிரே இருந்த நாற்காலியில் பாவ் கல்சூரி அமர்ந்திருக்க, அவர் மனதில் எண்ணங்கள் அலைமோதின. “இது ஏதோ காட்சிகளைக் கண்டதுபோல் இருந்தது” என்று பாவ் கல்சூரி பின்பு கூறினார்: “நாங்கள் அனைவரும் பாபாவின் உடலை மெஹராபாத்திற்கு எடுத்துச் செல்வதை நான் பார்த்தேன், ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு ஒன்றுதிரண்டு அழுதனர். பத்திரிகை நிருபர்கள் வந்து என்னிடம் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தனர். அறக்கட்டளை அலுவலக வளாகத்தில் நானும், எனக்குக் கீழ் பலரும் பணிபுரிவதையும் பார்த்தேன்.”

பாபா எழுந்ததும் அவருக்கு தசைப்பிடிப்பு ஏற்பட்டது. இரவு **9:15** மணியளவில், ஒரு மென்மையான மற்றும் மகிழ்ச்சியான வெளிப்பாட்டுடன், பாபா, பாவ் கல்சூரிக்கு சைகையால் தெரிவித்தார்:

## "இதை நினைவில் கொள்ளுங்கள், நான் இந்த உடல் அல்ல!"

அலோபா இரவு கண்காணிப்புப் பணியை 10:00 மணிக்குத் தொடங்கிய போது, பாவ் கல்சூரியிடம் ஓய்வெடுக்கச் செல்லுமாறு அறிவுறுத்திய பாபா ஒரு மணி நேரத்தில் அவரை மீண்டும் அழைத்தார். இந்த நேரத்தில், பாபா உண்மையில் பாவ் கல்சூரியிடம் இரண்டு வார்த்தைகளை மொழிந்தார்: "**நினைவில் கொள்ளுங்கள்**!" ('யாத் ரக்' - 'REMEMBER THIS') பின்னர் அவர், "**நான் இந்த உடல் அல்ல**!" என்று சைகையால் தெரிவித்தார். பாபா பல வருடங்களாக இதே கூற்றை சைகையால் தெரிவித்திருந்தாலும், இம்முறை அது பாவ் கல்சூரியின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. முதன்முறையாக, பாவ் கல்சூரி இந்த வார்த்தைகள் முற்றிலும் உண்மை என்பதை உணர்ந்தார்.

பாவ் கல்சூரி இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "பாபாவின் குரல் பலவீனமாக இருந்தாலும், ஒலி கேட்கக்கூடியதாகவும் தெளிவாகவும் இருந்தது, அதன் தீவிரமும் தாக்கமும் மிக மிக வலிமையானதாக இருந்தது. பாபா பேசுகிறார் என்பதை எனது மனமே பதிவு செய்யவில்லை அல்லது கேள்வி எதுவும் எழுப்பவில்லை, அது ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது."

"ஆம், பாபா இந்த உடல் அல்ல" என்றேன்.

"**கலக்கமடைய வேண்டாம்**" என்று பாபா சைகையால் தெரிவித்தார். "**என்னை நினைத்து கவலைப்படாதீர்கள். தூங்கச் செல்லுங்கள்**."

பாவ் கல்சூரி அவரது அறைக்குத் திரும்பிச் சென்றார், இரண்டு மணி நேரம் கழித்து, பாபா அவரை மீண்டும் அழைத்து, "**என்னை நினைத்து கவலைப்படாதீர்கள். தூங்கச் செல்லுங்கள்**" என்று மீண்டும் கூறினார்.

அன்றிரவு பெண்டுவும் இரவு கண்காணிப்புப் பணியில் இணைந்தார். ஒரு கட்டத்தில், பாபா எதையோ தெரிவிக்க விரும்பினார், ஆனால் வலி காரணமாக அவரது கைகளை வழக்கம் போல் அசைக்க கடினமாக இருந்தது. ஒவ்வொரு முறையும் அவர் தொடர்பு கொள்ள விரல்களை நகர்த்தும்போதும், அவர் வலிமிகுந்த தசைப்பிடிப்பை அனுபவித்தார். பெண்டுவிற்கு பாபாவின் அடையாளங்களைப் பின்பற்றுவதில் சிக்கல் ஏற்பட்டதால், அவரிடம் அதை நிறுத்துமாறு கெஞ்சினார். பாபா கவிதை நடையில் குஜராத்தி மொழியில் தெரிவிக்க முடிந்தது:

> மூன்று வருட உழைப்பு வீணாகிவிட்டது.
> எனது தந்தை நான் சொல்வதற்கு செவிமடுப்பாரா?
> தந்தையின் தந்தை கூட கேட்டாக வேண்டும்!

குஜராத்தி மொழியில்:
[TAN VARAS NU KAM PAANI MA GAYA.
BAAP MARO SAMAJSE KAY?
BAAP NA BAAP NAE BHI SAMAJVOO PARSAY!]

ஆங்கில மொழிபெயர்ப்பு:
[THREE YEARS OF WORK HAS GONE DOWN THE DRAIN
WILL MY FATHER LISTEN TO ME?
EVEN FATHER’S FATHER WILL HAVE TO LISTEN!]

மும்பையில் வாழும் டாக்டர் கிண்டேயை மீண்டும் இரவு 9:30 மணிக்கு ஆதி தொலைபேசியில் தொடர்பு கொண்டார். மேலும் (அவரது அறுவை சிகிச்சைக்கான நோயாளிகள் எவருக்கும் பாதகம் ஏற்படாமல்) கூடிய விரைவில் வருமாறு கூறினார். ஜனவரி 31ஆம் தேதி வெள்ளிக்கிழமை வருவதாக டாக்டர் கிண்டே கூறினார். மெஹராஸாத் வருவதற்கு முன்பு, பூனாவில் நின்று, பாபாவின் தற்போதைய நிலை குறித்து டாக்டர் கிரான்டிடம் ஆலோசிக்க வேண்டும் என்று அவரிடம் கூறப்பட்டது.

நரம்பியல் பிரச்சினைகள் தவிர, வேறு விஷயங்களில் மேலதிகமான ஆலோசனைகள் தேவைப்பட்டால், மும்பையில் இரண்டு மருத்துவ நிபுணர்கள் தன்னிடம் இருப்பதாக டாக்டர் கிண்டே கூறினார். தேவைப்பட்டால், அஹமதுநகரிலிருந்து தொலைபேசியில் அழைத்ததும், அவர்கள் சனிக்கிழமை மெஹராஸாத்திற்கு விரைந்து வந்துவிடுவார்கள் என்று அவர் கூறினார். அனைத்து விஷயங்களும் கட்டுப்பாட்டில் இருந்தால், கிண்டே அன்றே புறப்பட்டுவதாக திட்டம்.

ஜனவரி 30 இரவில் பாபா நான்கு மணி நேரம் ஓய்வெடுத்தார், இரண்டரை மணி நேரம் தூங்கினார். அதிகாலை 3:45 மணிக்கு அவர் எரச், பெண்டு, பாதிரி, பாவ் கல்சூரி, கோஹெர் ஆகியோரை அழைத்தார். மீண்டும் மீண்டும் தசைப்பிடிப்பால் உருவான அதிர்ச்சிகள் அவர் உடலை படுக்கையிலிருந்து வேகமாக எழச் செய்தது. அனைவரும் அவரது கைகால்களைப் பற்றிப் பிடித்துக்கொண்டனர், ஆனால் அதிர்ச்சிகள் மிகவும் கட்டுக்கடங்காமல் இருந்தன. பாபாவின் முதுகில் அதீத வலி இருந்தது, மேலும் அவரது உடலில் மின்சாரம் பாய்வது போல் உணர்ந்ததாக அவர் தெரிவித்தார்.

காலம் வருத்தத்துடன் குறிப்பிட்டது, “அவதார புருஷரின் நிலை கற்பனைக்கு அப்பாற்பட்டது. ஒவ்வோர் அதிர்ச்சியிலும், அவர் தமது உடலின் ஒவ்வொரு பகுதியையும் அவரது அன்பர்களுக்காகவும் பிரபஞ்சத்திற்காகவும் அர்ப்பணித்தார் - **‘உண்மைப்பொருளைத் தக்கவைத்து நிலைநிறுத்தும்**

**மாயை**’க்காக (ILLUSION THAT SUSTAINS THE REALITY) - அந்த அதிர்ச்சிகளின் மூலமாக மாயாவின் சக்திகளை பலவீனப்படுத்தினார்.

பாபா இவ்வாறு வெளிப்படுத்தினார்:

“**மாயா என்னைக் கொன்றுவிட முயற்சிக்கிறாள், ஆனால் நான் அவளை வென்றுவிடுவேன்**!”

அவர் மேலும் குறிப்பிட்டார்:

“**சிலுவையில் அறையப்படுவது போன்ற இந்தத் துன்பம் இன்னும் ஏழு நாட்கள் நீடிக்கும், பின்பு நல்லதொரு திருப்பத்தை எடுக்கும். ஏழு நாட்களுக்குப் பிறகு நான் எனது துன்பங்களிலிருந்து 100 சதவீதம் விடுபடுவேன்**.”

பாபா பக்கவாட்டில் திரும்பினார், எரச் அவருக்கு மஸாஜ் செய்தார். திடீரென எதையோ தெரிவிக்கும் விதத்தில், அவரது விரல்கள் அதிர்ந்தன. எரச் அவரது சைகைகளைப் புரிந்துகொள்ள ஒருபுறம் சாய்ந்தார், பாபாவின் கை சைகைகள், “**ஆனால் நான் திரும்பி வருவேன்... நான் திரும்பி வந்தாக வேண்டும்....**” என்று தெளிவாகப் பறைசாற்றின.

எரச்சிற்கு முதலில் பாபா ஏன் இப்படிக் கூறுகிறார் என்று புரியவில்லை, ஆனால் பத்து நாட்களுக்கு முன்பு ‘கைஸர்-இ-ஹிந்த்’ (KAISER-I-HIND) எனும் குஜராத்தி பத்திரிகையில் வெளியான ஒரு கதையை, பாபா முன்னிலையில் படித்தது அவருக்கு நினைவிற்கு வந்தது. 1,500 ஆண்டுகளுக்கு முன்பு, புத்த மடாலயத்தின் மடாதிபதியாக இருந்த திபெத்திய லாமாவைப் பற்றிய கதை. அந்தப் பழங்காலக் கதை கூறப்பட்டதற்கு இணங்க: ஒரு நாள் லாமா தனது இருப்பிடத்தை விட்டு வெளியேறிய வேளையில், அவர் தனது சீடர்களிடம் திரும்பி வருவதாகக் கூறிச் சென்றார், ஆனால் அவர் ஒருபோதும் திரும்பி வரவில்லை. அவரை பின்பற்றியவர்களும் அவர்களுக்குப் பின் வந்த தலைமுறையினரும், மடத்தில் அமைந்த அவரது அறையை சுத்தம் செய்து கச்சிதமாக வைத்து, அவரது படுக்கையின் போர்வைகள் மற்றும் தலையணைகளை மாற்றி, தண்ணீர் பானைகளை நிரப்பி, எந்த நேரத்திலும் அவர் திரும்பி வருவார் என எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

எரச் வினவினார், “ஓ, நீங்கள் அந்த மடாதிபதியை சொல்கிறீர்களா?”

பாபா, “**ஆம், அந்தத் துறவி திரும்பி வரவில்லை, நான் திரும்பி வருவேன்**” என்று சைகையால் தெரிவித்தார்.

1969 ஜனவரி 31 வெள்ளிக்கிழமை அதிகாலை முழுவதும் தசைப்பிடிப்புகள் தொடர்ந்தன. சுமார் 7:00 மணியளவில் ஆண் மண்டலி

அனைவரையும் காலை உணவுக்காக அனுப்பிவிட்டு, பாபா அனைத்து பெண்மணிகளையும் தனது அறைக்கு அழைத்தார்.

ஆச்சரியமான விஷயம் என்னவெனில், அவரது முன்னிலையில் மெஹரா இருக்கும்போதெல்லாம், பாபா முற்றிலும் எந்தவிதமான அதிர்ச்சியும் இல்லாமல் சாதாரணமாகக் காணப்பட்டார். டாக்டர் கிரான்ட் அல்லது டாக்டர் கிண்டே இருக்கும் போதும்கூட இதைத்தான் காணமுடிந்தது. அவர் அனுமதித்தபோது மட்டுமே தசைப்பிடிப்புகளும் அதிர்ச்சிகளும் அவரைத் தாக்கியது என்ற தீர்க்கமான முடிவுக்கு மண்டலியால் வரமுடிந்தது! மெஹரா, பாபாவிற்கு சவரம் செய்ய, மணி, கோஹெர், ரானோ, மெஹரு, நாஜா ஆகியோர் பாபாவின் அறையை சுத்தம் செய்து சீராக்கினர்.

எரச் அவரது அறையில் அமர்ந்து ஆதிக்கு எழுதினார்:

பாபா அதிகாலை **4:00** மணி முதல் அடிக்கடி திடீர் அதிர்வுகளை அனுபவித்து வருகிறார். இந்த அதிர்வுகள் அவருக்கு, பின் முதுகின் கீழ்ப்பகுதியில் பயங்கரமான வலியைக் கொடுக்கிறது, முதுகை சுக்குநூறாக்குகிறது. அவரது செயலின் சிறிதளவு அறிகுறியே அவருக்கு ஒரு சலனத்தை ஏற்படுத்துகிறது. பாபாவிற்கு நன்றி கூற வேண்டும், இது போன்ற உபாதைகள் மருந்துகளின் உதவியுடன் சீரடைவதைக் காண முடிகிறது, இருந்தாலும் ஒவ்வொரு நாளும் கடந்து செல்லும் போது, மருந்துகளின் செயல்திறன் படிப்படியாகக் குறைந்து வருவதாகத் தெரிகிறது, ஏனெனில் ஒப்பீட்டளவில் அமைதியாக இருக்கும் காலம் குறுகிவிட்டது.

காலை **8:00** மணிக்கு எரச், பெண்டு, பாதிரி, பாவ் கல்சூரி, ஃபிரான்சிஸ், சகன் (அவர் அன்று காலை வந்தார்) ஆகியோரை பாபா அழைத்தார். மணி, ரானோ, கோஹெர் ஆகியோரும் பாபாவின் அறைக்குச் சென்றனர். காக்காவும் உள்ளே வந்து அமர்ந்தார். மதிய உணவு வேளைக்குள் டாக்டர் கிண்டே வந்துவிடுவதாகக் குறிப்பு ஒன்றை அனுப்பினார் ஆதி. இது பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டதும், அவர் அதில் மகிழ்ச்சியடைந்தார்.

பாபா அவரது கன்னத்தைச் சுட்டிக்காட்டி, வருடி எரச்சிடம் "**மெஹரா எனக்கு எவ்வளவு மென்மையாக சவரம் செய்திருக்கிறார் பாருங்கள்!**" என்று கூறினார்.

பின்னர் அவர் அனைவருக்கும் எடுத்துரைத்தார்: "**எனது உடல்நிலைக்கு கோஹெர் பொறுப்பல்ல. நான் கடவுள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!**"

மீண்டும் கட்டுக்கடங்கா தசைப்பிடிப்பும், உடல் அதிர்வும் தொடங்கியது. மண்டலி அனைவரும் பாபாவின் உடலை அவரது படுக்கையில் பற்றிப் பிடித்துக்

கொண்டனர், ஆனால் அதிர்ச்சிகள் தொடர்ந்தன. பிரபஞ்சத்தின் நன்மைக்காக பாபா தமது உடலை தெய்வீக அன்பின் பலிபீடத்தில் தியாகம் செய்து கொண்டிருந்தார், அதன் மூலமாக அவர் உலகளாவிய துன்பத்தை இறுதியாக அனுபவிக்க வேண்டியிருந்தது.

டாக்டர் கிண்டேயை நினைவுகூர்ந்து, அவர் வந்துவிட்டாரா என்று சில முறை விசாரித்தார். ஒவ்வொரு முறையும் அவர் 'ஜி' (G) என்று சைகையால் தெரிவிக்கும் போது, கடுமையான தசைப்பிடிப்பு மற்றும் தாங்க முடியாத வலியால் அவதியுற்றார்.

முந்தைய நாள் இரவு, மண்டலி மண்டபத்திலிருந்து கீழ்ப்படிதல் குறித்த ஹாஃபீஸின் மூன்று ஈரடிக் கவிதைகள் எழுதி வர்ணம் பூசப்பட்ட பலகையைக் கொண்டு வருமாறு பாபா அலோபாவிடம் கூறினார். அலோபா அதை பாபாவின் படுக்கையறைக்கு காலை **10:00** மணிக்கு கொண்டு வந்து, அதை ஒரு குறுகிய அலமாரி மீது வைத்தார். பாபாவால் அடிக்கடி மேற்கோள் காட்டப்பட்ட அந்த ஈரடிக் கவிதைகளின் வரிகள் வாசிக்கப்பட்டன:

- அதிர்ஷ்டசாலியான அடிமை ஒருவருக்கு உகந்த விதத்தில், குருநாதரின் ஒவ்வொரு கட்டளையையும் ஏன், என்ன என்ற கேள்விகள் எழுப்பாமல் நிறைவேற்றுங்கள். (BEFITTING A FORTUNATE SLAVE, CARRY OUT EVERY COMMAND OF THE MASTER, WITHOUT ANY QUESTION OF WHY AND WHAT.)
- குருநாதரிடமிருந்து நீங்கள் கேட்பதை ஒருபோதும் தவறு என்று கூறாதீர்கள், ஏனெனில் என் அன்பரே, அவரைப் புரிந்துகொள்ள முடியாததன் தவறு உங்கள் சுய இயலாமையில்தான் உள்ளது. (ABOUT WHAT YOU HEAR FROM THE MASTER, NEVER SAY IT IS WRONG, BECAUSE, MY DEAR, THE FAULT LIES IN YOUR OWN INCAPACITY TO UNDERSTAND HIM.)
- அறியாமையிலிருந்து என்னை விடுவித்த குருநாதருக்கு அடிமை நான். குருநாதர் எதைச் செய்தாலும் அது, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் உயர்ந்த பலனைத் தரும்! (I AM THE SLAVE OF THE MASTER, WHO HAS RELEASED ME FROM IGNORANCE; WHATEVER MY MASTER DOES IS OF THE HIGHEST BENEFIT TO ALL CONCERNED.)

பாபா தனது கைகளைக் கூப்பி வணங்கி, (பாரசீக மொழியில்) "**குதா ஹாஃபீஸ்** (KHUDA HAFIZ - கடவுள் உங்களைக் காப்பாராக!)" என்று சைகையால் தெரிவித்தார்.

டாக்டர் கிண்டே இதுகாறும் வரவில்லை என்று பாபாவிற்குத் தெரிவிக்கப்பட்டதும், அவர் அலோபாவை நீர் விநியோக நிலையத்திற்கு அனுப்பி, ஆதியின் மூலமாக, பூனாவில் டாக்டர் கிரான்டை தொலைபேசியில் தொடர்புகொண்டு, டாக்டர் கிண்டேயை காலந்தாழ்த்தாமல் நேரடியாக

மெஹராஸாத்திற்கு அனுப்புமாறு அறிவுறுத்தினார். கிண்டே பூனாவில் கிரான்டைப் பார்த்தபோது, அவருக்கு இந்தச் செய்தி வழங்கப்பட்டது; ஆனால் டாக்டர் கிரான்ட் அப்போது சாதாரணமாக, "நான் நேற்றுதான் பாபாவைப் பார்த்தேன். கவலைப்படும் அளவுக்கு எதுவும் இல்லை. மெஹராஸாத்திற்குச் செல்வதற்கு முன்பு மதிய உணவை உண்ணுங்கள்" என்றார். இருப்பினும் டாக்டர் கிண்டே தாமதம் செய்யாமல் உடனடியாகப் புறப்பட்டுச் சென்றார்.

நண்பகலில், பாபா மீண்டும் டாக்டர் கிண்டேயை நினைவு கூர்ந்து, '**அவர் வந்தாரா**' என்று கேட்டார். பதில் எதிர்மறையாக இருந்தபோது, பாபா சற்று சோகமாக, "**இப்போது அவர் வந்திருக்க வேண்டும்**. **நேரமாகிறது**" என்று சைகையால் தெரிவித்தார். டாக்டர் கிண்டே வந்தவுடன் நேராக மெஹராஸாத்திற்கு வருமாறு, ஆதிக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்க மீண்டும் அலோபா அனுப்பப்பட்டார்.

ஆங்கில மருந்துகள் பாபாவிற்கு நிவாரணம் அளிக்காததைக் கண்ட பாதிரி, பத்து நிமிடங்களுக்கு ஒருமுறை, ஹோமியோபதி மருந்தை அவருக்கு வழங்கத் தொடங்கினார். "**இந்த மருத்துவர்கள் அனைவரும் பார்பர்கள்** (முடித்திருத்தம் செய்பவர் - BARBER)!" பாபா பாதிரியிடம் கூறியிருந்தார். "**நீங்கள் எனக்கு ஏதாவது கொடுங்கள்**." பாதிரி அன்று மதியம் பாபாவிற்கு நான்காவது முறை மருந்தைக் கொடுத்த பிறகு, பாபா கிண்டல் செய்தார், "**உங்கள் மருந்து பயனற்றது; அது எனக்கு எந்த வகையிலும் உதவவில்லை**!"

மேலும் டாக்டர் கோஹெரிடம் ஊசி போடுவதை நிறுத்துமாறு கூறி பாபா, "**நான் கடவுள் என்பதை மறந்துவிடாதீர்கள்**" என்றார்.

பாதிரி, பாபாவிற்கு மேலும் ஒருமுறை மருந்து வழங்கினார், பத்து நிமிடங்களுக்குப் பின்னர் இன்னுமொரு முறை வழங்குமாறு எரச்சிடம் கூறினார். பாதிரி அறையை விட்டு வெளியே செல்ல ஆயத்தமானபோது, மதியம் 12:15 மணியளவில், ஒரு பயங்கரமான தசைப்பிடிப்பு பாபாவை உலுக்கி, மூச்சைத் திணறடித்தது. பாபா அவரது படுக்கையில் முதுகு மற்றும் தலையை உயர்த்தி அமர்ந்திருந்தார். கைகளை வளைத்து வாயை இறுக்கமாக மூடினார். அவரது சுவாசம் திடீரென நின்றுவிட்டது. தசைப்பிடிப்புக்குப் பின்னர் எந்தவிதமான தளர்வும் இல்லை; பாபா முற்றிலும் அசைவின்றி, மனிதகுலத்தை மீட்பதற்காக தன் உடலை அமைதியாகத் தியாகம் செய்தார்.

பாபாவின் வாயைத் திறந்து பார்த்த எரச், பாபாவின் நாக்கு பின்வாங்கியிருப்பதைக் கண்டார், அவர் உடனடியாக வாய் மீது வாய் வைத்து சுவாசித்து புத்துயிர் வழங்கத் தொடங்கினார்.

பூத் மருத்துவமனையிலிருந்து டாக்டர் பிரீஸ்மேனை (DR. BRIESEMAN) உடனடியாக ஆக்ஸிஜன் சிலிண்டருடன் அனுப்பச் சொல்லி ஆதியை தொலைபேசியில் தொடர்புகொள்ள சகன் வெளியே ஓடினார்.

“பாபா! ... பாபா!” என்று கதறி அழுது அவரை உயிர்ப்பிக்கும் முயற்சியில் டாக்டர் கோஹெர் அவருக்கு ஊசி மருந்தைச் செலுத்தத் தொடங்கினார். மெஹரு, ஃபிரான்சிஸ், பாவ் கல்சூரி ஆகியோர் அவரது மார்பை அழுத்திக்கொண்டிருந்தனர்.

“பாபா, நீங்கள் கடவுள்... நீங்களே கடவுள்!... பாருங்கள் உங்கள் மெஹரா அழுவதைப் பாருங்கள்” என்று மணி கதறி அழுது கொண்டிருந்தார்.

மெஹரா அறைக்குள் நுழைந்து, திகைப்பில் ஆழ்ந்து நாற்காலியில் அமர்ந்து அழத் தொடங்கினார். “பாபா டார்லிங்!... பாபா டார்லிங்!” அவர் உச்சரித்த ஒரே வார்த்தைகள்.

சுமார் பதினைந்து நிமிடங்களுக்கு வாயோடு வாய் வைத்து புத்துயிர் வழங்க முயற்சித்த பின்னர், எரச் சோர்வுற்று தரையில் சாய்ந்தார். பாவ் கல்சூரியும் சில நிமிடங்கள் அதைத் தொடர்ந்தார்; பின்னர் ஃபிரான்சிஸ் பாபாவை உயிர்ப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். பெண்டு, பாபாவின் இடது மணிக்கட்டைப் பற்றிக்கொண்டு, அவரது இதயத்துடிப்பை உணர முயன்றார். இதயத்துடிப்பு தொடர்ந்து வந்து சென்றதை உணர முடிந்தது, ஆனால் பின்பு ‘முற்றிலும் இல்லாமல் போனது’ என்று அவர் கூறினார். பாதிரி, பாபாவின் நாக்கை குறடால் பற்றிப் பிடித்துக்கொண்டிருந்தார்.

மதியம் 12:40 மணியளவில், ஆதியும் டாக்டர் கிண்டேயும் வந்தனர், அவரது காரைத் தொடர்ந்து சிறிது நேரத்தில் டாக்டர் பிரீஸ்மேன், டாக்டர் டான் இருவரும் ஆக்ஸிஜன் சிலிண்டருடன் வந்தனர். அவர்களை அவசரப்படுத்த கோஹெர் விரைந்தார். “வாருங்கள், உடனே வாருங்கள்!” என்று கத்திக் கதறி, உள்ளே அவர் டாக்டர் கிண்டேயை உலுக்கி, “ஏதாவது செய்யுங்கள், டாக்டர், ஏதாவது செய்யுங்கள்!” என்று அழுதார்


டாக்டர் ப்ரீஸ்மேன், பாபாவின் மார்பை அழுத்தி, பின்பு ஸ்டெதஸ்கோப் மூலம் பாபாவின் இதயத் துடிப்பை உணர்ந்து, அதை டாக்டர் டானிடம் கொடுத்தார்; அவரும் பாபாவை பரிசோதித்த பிறகு, டாக்டர் கிண்டேயிடம் கொடுத்தார். கிண்டே தனது மின்விளக்கு மூலம் பாபாவின் கண்களின் பிரதிபலிப்புகளை சோதனை செய்து, பின்பு மூன்று மருத்துவர்களும் ஒன்றிணைந்து தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர்.

அங்கிருந்தவர்கள் அனைவரும் அழத் தொடங்கினர். அறைக்குள் நுழைந்த ஆதி எப்படியோ கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டு, “யார்

ஒருவரும் அழக்கூடாது. தயவு செய்து அமைதியாக இருங்கள்” என்று கெஞ்சினார். ஆனால் மெஹரா திகைப்பில் ஆழ்ந்து துக்கமாக இருப்பதைக் கண்டு, அவரும் தனது துக்கத்தை அடக்க முடியாமல் வெளியே சென்று தன்னைக் கட்டுப்படுத்த முயன்றார்.

பாபாவிற்கு ஆக்ஸிஜனை வழங்குமாறு டாக்டர் பிரீஸ்மேனிடம் எரச் கேட்டுக் கொண்டபோது, அதை அவர் செய்தார். டாக்டர் கோஹெர் உள் இதயத்தில் ஊசி மருந்தைச் செலுத்த முடியுமா என்று கேட்க, டாக்டர் கிண்டே அதை செலுத்தினார், ஆனால் அது மிகவும் காலதாமதமானது. மனித உதவிக்கு அப்பாற்பட்டவர் பாபா. அவர் அனைத்தையும் கடந்து சென்றுவிட்டார்.

“பிரியமானவர் இனிமேல் இறைப்பெருங்கடலின் கரையாக இருக்கப்போவதில்லை, ஆனால் என்றென்றும் நிலைகொண்டிருக்கும் இறைப்பெருங்கடலாகத் திரும்பிச் சென்றார்” என்று காலம் கூறியது. “அவரது உலகளாவிய பணியை நிறைவுசெய்து, ஆதிகாலத்தவர் தம் அன்பர்களின் இதயங்களில் நுழைந்தார். தம்மை முழுமையாக மறைத்துக்கொண்ட மேலங்கியைக் கைவிட்டு, அவரது நினைவில் கண்ணீரை விட்டுச் சென்றார்.” காலம் மீண்டும் கண்ணீர் சிந்தி அழுதது.




மெஹராபாத் மேல்மலை சமாதி,
**1-7 பிப்ரவரி, 1969**
(MEHERABAD HILL SAMADHI, 1-7 FEBRUARY 1969)





மெஹராபாத் மேல்மலை சமாதி,
**1-7 பிப்ரவரி, 1969**
(MEHERABAD HILL SAMADHI, 1-7 FEBRUARY 1969)





# மெஹர் பாபாவின் சமாதி - இறுதி ஏழு நாட்கள்

(**Meher Baba's Samadhi - Last Seven Days**)

பாபா உண்மையிலேயே உடலைத் துறந்துவிட்டார் என்பது உறுதியானதும் டாக்டர் பிரீஸ்மேன் திரும்பிச் சென்றார்; டாக்டர் கிண்டே மற்றும் ஆண் மண்டலி அனைவரும் ஃபிரான்சிஸின் அறையில் ஒன்றுதிரண்டனர். உலகெங்கிலும் வாழும் அன்பர்களுக்குத் தகவல் தெரிவிப்பது குறித்து விவாதிக்கப்பட்டது; இறுதியாக ஆதி, எரச், ஃபிரான்சிஸ் மூவரும் இந்தத் தொலைத்தந்திக்கான உள்ளடக்கத்தைத் தீர்மானித்தனர்:

அவதார் மெஹர் பாபா, அவரது அன்பர்கள் அனைவரின் இதயங்களிலும் நிரந்தரமாக வாழ்வதற்காக, 1969 ஜனவரி 31ஆம் தேதி மதியம் 12 மணிக்கு, மெஹராஸாத்தில் தமது பௌதீக உடலைத் துறந்தார். பிரியமான பாபாவின் புனித உடல் மெஹராபாத்தில் பிப்ரவரி 1ஆம் தேதி காலை 10:00 மணிக்கு, அவர் நீண்ட காலத்திற்கு முன்னரே, அவரால் கட்டி எழுப்ப உத்தரவிடப்பட்ட சமாதியில் அடக்கம் செய்யப்படும்.

மண்டலியின் மனம் முற்றிலும் ஸ்தம்பித்தது போலிருந்தது. டாக்டர் கிண்டே அப்போது, "பாபா நித்தியமானவர்" என்று கூறி அவர்களை ஆறுதல்படுத்த முயன்றார். 'அனைவருக்கும் ஆறுதல் கூறுவதற்காக பாபா அவரை மெஹராஸாத்திற்கு அழைத்தார்' என்று கூறினார்.

டாக்டர் கிண்டே, ஆதி இருவரும் சில நிமிடங்கள் தாமதமாக வந்ததற்கு ஒரு காரணம், கிண்டே, ஆதியின் அலுவலகத்திற்கு வந்ததும், அவர் குளியலறைக்கு நீராடச் சென்றார்; சில நிமிடங்களில் அவருக்கு லேசான மாரடைப்பு ஏற்பட்டது. ஆனால் அவர் இதை ஆதியிடம் வெளிப்படுத்தவில்லை; மேலும் பலவீனமாக உணர்ந்ததால், மெஹராஸாத்திற்குச் செல்வதற்கு முன்னர் ஒரு டம்ளர் சூடான பால் மட்டுமே அருந்தினார்.

டாக்டர் கிண்டே ஆண் மண்டலியிடம், "உணர்ச்சிவசப்படாதீர்கள். நீங்கள் நடைமுறையில் நிகழும் சம்பவமாக இதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பாபா விரும்புவார்" என்றார். பின்னர் அவர் மெஹர் பாபாவின் இறப்பு சான்றிதழை எழுதினார்:

74 வயது 11 மாதங்களான அவதார் மெஹர் பாபா என்று அழைக்கப்படும் திரு. மேர்வான் ஷெரியார் ஈரானி, கடந்த சில ஆண்டுகளாக, சிறுநீரக அழற்சி மற்றும் உயர் இரத்த அழுத்தத்தால் நாட்பட்ட இரத்த சோகை மற்றும் நீரிழிவு

நோயால் பாதிக்கப்பட்டு, மிகவும் மோசமான திடீர் திருப்பத்தை சந்தித்த நிலையில், 1969 ஜனவரி 31ஆம் தேதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில், உயிர்ப்பிக்க மேற்கொண்ட அனைத்து முயற்சிகளுக்கும் மத்தியில், தசைப்பிடிப்புகள் உருவாகி, சுவாசக் கோளாறு காரணமாக உயிர் துறந்தார்.

டாக்டர் கோஹெர் ஆர். ஈரானி
டாக்டர் வில்லியம் டான்கின்
டாக்டர். ராம் ஜி. கிண்டே

மெஹராஸாத் (பிம்பல்காவ்ம்-மால்வி)
அஹமதுநகர்
தேதி: வெள்ளி, 31 ஜனவரி 1969
நேரம்: மதியம் 12:15

பாபா மண்டலிக்கு பலமுறை அறிவுறுத்தியதை எரச் நினைவு கூர்ந்தார்: "**நான் எனது உடலை எங்கு துறந்தாலும், அதை மெஹராபாத்திற்கு எடுத்து வந்து, எனக்காகக் கட்டப்பட்ட சமாதியில் வைக்கவும்**." மேலும் 'பிகின் தி பிகீன்…' (BEGIN THE BEGUINE…) என்ற கோல் போர்ட்டர் (COLE PORTER) எழுதிய பாடலின் ஒலிப்பதிவை பாபா அவரது உடலைத் துறக்கும்போது இசைக்கச் சொன்னதையும் எரச் நினைவு கூர்ந்தார்.

ஆறு மணி நேரத்திற்குள் பாபாவின் உடலை மெஹராபாத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று டாக்டர் கிண்டே பரிந்துரைத்தார். மெஹராவும் பிற பெண்மணிகளும் பாபாவின் உடலை மெஹராஸாத்தில் வைக்க விரும்பினர். மணி, டாக்டர் கிண்டேயிடம் வாதாடினார், "ஒரு நாள் கோமா நிலைக்குச் சென்று மயக்கமடைந்தால், ஏழு நாட்களுக்குப் பிறகு மீண்டும் உயிரத்தெழுவார் என்று பாபா ஒருமுறை என்னிடம் கூறினார்."

டாக்டர் கிண்டே இவ்வாறு விளக்கினார், "ஆனால் இது கோமா அல்ல. கோமாவில் இருப்பவரின் இதயம் தொடர்ந்து துடித்துக்கொண்டிருக்கும், மேலும் அவரது சுவாசமும் துடிப்பும் நிற்காது. பாபா கோமா நிலையில் இல்லை."

மணி அதற்கு இணங்காமல் தொடர்ந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பாபாவின் உடலை மூன்று நாட்களுக்கு கீழ் மெஹராபாத், மண்டலி மண்டபத்தில் வைக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகு சிதைந்த உடலை சமாதிக்கு நகர்த்துவது கடினம் என்று கிண்டே விளக்கினார்.

அப்போது எரச், “பாபாவின் கட்டளைப்படி, அவரது உடலை மெஹராபாத் மேல்மலையில் அமைந்த அவரது சமாதிக்கு எடுத்துச் செல்ல வேண்டும்” என்றார்.

பெண்மணிகள் உட்பட அனைத்து மண்டலியும் இறுதியில் இணக்கம் தெரிவித்தனர்; மேலும் மெஹரா, மணி இருவரும் உடலை அன்று மாலை ஐந்து மணி வரை மெஹராஸாத்தில் வைக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

டாக்டர் கிண்டே அப்போது திடீரென, “சமாதி எங்கே உள்ளது? தரை எதனால் ஆனது?” என்று வினவியபோது, கல்லால் ஆன தரை என்று கூற, தரையிலிருக்கும் கற்பாளங்களை அகற்ற வேண்டும் என்றார் டாக்டர் கிண்டே. பாதிரி மெஹராபாத்திற்குப் புறப்பட்டுச் சென்று, சமாதியின் அடிப்பகுதியில் இருந்த கற்பாளங்கள் தோண்டி எடுக்கப்பட்டிருப்பதைப் பார்வையிடச் சென்றார்.

பாபாவின் உடல் சமாதிக்குள் வைக்கப்படும் ஒரு மரப் பலகையை உருவாக்குவதற்காக சகன் அஹமதுநகருக்கு அனுப்பப்பட்டார். டான் மரப்பேழை ஒன்றை தயார் செய்து சமாதியில் பாபாவின் மேல் வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டார்.

இதற்கிடையில், மெஹராஸாத்தில், பாபாவின் அறுவை சிகிச்சை படுக்கை கிடைமட்ட நிலையில் வைக்கப்பட்டது. பாபாவின் சத்ரா மற்றும் உள் ஆடை மாற்றப்பட்டு, மேலும் பாபாவை நீராட்டவேண்டாம் என்று தீர்மானிக்கப்பட்டது, ஏனெனில் அவர் நீராடுவதை விரும்பியதில்லை; கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக நீராடவில்லை. என்றாலும்கூட, அவர் உடல் எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும், நறுமணத்துடனும் இருந்தது. பாபாவின் உடல் அவரது படுக்கையிலிருந்த இரண்டு போர்வைகளால் தோள்கள் முதல் கால்விரல்கள் வரை மூடப்பட்டிருந்தது. பாபாவின் படுக்கைக்கு அருகில் இருந்த கம்பளத்தின் மீது ஒரு பிளாஸ்டிக் ஷீட் வைக்கப்பட்டு அதன் மேல் ஒரு படுக்கை விரிப்பும் பரப்பப்பட்டிருந்தது. பாபாவை மண்டலி மெதுவாகத் தூக்கி, மெல்லிய மெத்தை மீது வைத்தனர். அவர் மீண்டும் மெல்லிய மெத்தை, பிளாஸ்டிக் விரிப்பு மற்றும் கம்பளத்தால் மூடப்பட்டிருந்தார். சதுர கட்டங்களாலான வெள்ளை மற்றும் இளஞ்சிவப்பு தோள் துண்டு ஒன்று அவரது தலையிலும் கன்னத்தின் கீழும் கட்டப்பட்டிருந்தது. பாபா புத்துயிர் பெற்று வருவார் என்ற எண்ணத்தில் பெண்மணிகள் வெந்நீர் நிரப்பிய பை ஒன்றைக் கொண்டு வந்தனர். பாபா உண்மையிலேயே உயிரைத் துறந்துவிட்டார் என்பதை அவர்களால் இன்னும் நம்ப முடியவில்லை.

இந்த நேரத்தில், பூத் மருத்துவமனையிலிருந்து அவசர மருத்துவ ஊர்தியை அழைத்துவர டான் புறப்பட்டுச் சென்றார், மேலும் இந்தியா மற்றும் உலகின் அனைத்து பகுதிகளுக்கும் தொலைத்தந்தி அனுப்ப ஆதி தனது அலுவலகத்திற்குச் சென்றார். 'பிகின் தி பிகீன்' இசைத்தொகுப்பு பலமுறை இசைக்கப்பட்டபோது, டான் அவசர மருத்துவ ஊர்தியுடன் வந்தார். எரச், மணியிடம் அவரது காணொளி திரைப்பட கேமராவில் படம் எடுக்குமாறு கூறினார். பாபாவின் உடலை தூக்கு படுக்கையில் வைத்து, எரச், பாவ் கல்சூரி, அலோபா ஆகியோர் அவரது அறையிலிருந்து மண்டலி மண்டபத்திற்கு கொண்டு வந்து, பாபாவின் அலுமினிய படுக்கையில் வைக்கப்பட்டபோது, மண்டலி, சேவகர்கள் அனைவரும் பாபாவை தரிசனம் செய்தனர். பாபா மெஹராஸாத்திலிருந்து உடல் ரீதியாக விடைபெற்றுக் கொண்டிருந்தார். ஒவ்வொரு மலரிலும் இலையிலும் இருள் நிறைந்த சோகம் தென்பட்டது. ஆனாலும் அனைத்தும் தைரியமாக நடந்துகொண்டிருந்தது.

மெஹரா முழுப் பிரபஞ்சத்தின் சார்பாக, கண்களில் நீர் ததும்ப அழுதார்; அனைத்து படைப்புகளின் கண்ணீர் அவர் கண்களிலிருந்து பெருக்கெடுத்தது. கோஹெர், நாஜா இருவரும் தொடர்ந்து அழுதனர்; ஆனால் மணியும் ஆண்களும் உலர்ந்த கண்களுடன் உறுதியுடன் இருந்தனர்.

பாபாவின் புனித உடலை சுமந்து செல்லும் தூக்கு படுக்கை அவசர மருத்துவ ஊர்தியின் இருக்கையில் வைக்கப்பட்டு, எரச்சும் பாவ் கல்சூரியும் அருகில் அமர்ந்தனர். "அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!" என்ற உரத்த கோஷத்துடன் பிரியமானவரின் உடல் வடிவம் மெஹராஸாத்தை நிரந்தரமாக விட்டுவிட்டு, மெஹராபாத்தை நோக்கிச் சென்றது. ஆண், பெண் அனைவரும் கார்களில் பின்தொடர்ந்தனர். ஆதிகால புருஷரின் புனித உடல் எவருக்கும் தெரியாமல் அமைதியாக அஹமதுநகர் நகரத்தைக் கடந்து சென்றது.

அவசர மருத்துவ ஊர்தி மாலை 6:00 மணியளவில் மெஹராபாத்தை வந்தடைந்தது; மேலும் பாதிரி ஓட்டுநருடன் அமர்ந்து அவரை மேல்மலையில் அமைந்த சமாதிக்கு வழிநடத்தினார். பூமியில் தெய்வீக வாழ்வின் சூரியன் அஸ்தமித்து, மாலைப் பொழுதில் ஒரு புதிய தொடக்கத்தின் சந்திரன் உதயமாகும் தருணத்தில், மெஹராபாத் மேல்மலையை நோக்கி, பிரியமான பாபாவின் புனித உடல் மெதுவாக ஊர்தியில் நகர்ந்து சென்றது.

அவசர மருத்துவ ஊர்தி பாபாவின் டின் கேபினுக்கு எதிரே நின்றது, தூக்கு படுக்கை கேபினுக்குள் வைக்கப்பட்டதும் மணி 'பிகின் தி பிகீன்' பாடலை இசைக்கச் செய்தார்.

அன்று மாலை ஏழு மணியளவில் பாதிரி, சமாதியின் கல் தளம் அகற்றப்பட்டு அதன் அடிப்பகுதி ஓர் அடி ஆழத்திற்கு தோண்டப்பட்டதாக அறிவித்தார். அனைத்தும் தயாராக இருந்த நிலையில், இங்கு நிகழ்ந்த சம்பவங்கள் கிராம மக்களுக்கு வழக்கத்திற்கு மாறான எதையோ அறிவுறுத்தியது; மேலும் மெஹர் பாபா அவரது புனித உடலைத் துறந்துவிட்டார் என்ற செய்தி வேகமாகப் பரவியது.

'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்ற கோஷங்களுக்கு மத்தியில் தூக்கு படுக்கை டின் கேபினிலிருந்து சமாதியின் நுழைவாயிலுக்கு கொண்டு செல்லப்பட்டது. தூக்கு படுக்கையில் பாபாவின் தலைப் பக்கம் முதலில் உள்ளே எடுத்துச் செல்லப்பட்டு, சமாதியின் உள்ளே பக்கவாட்டில் வைக்கப்பட்டது. பாபாவின் புனித உடல் வைக்கப்பட இருந்த மரப்பலகை முதலில் உள்ளே வைக்கப்பட்டது. பாபாவின் தலை வைக்கப்படும் பலகையின் அடியில் சமாதியின் தரையிலிருந்து அகற்றப்பட்ட மூன்று கற்பாளங்களை எரச் உள்ளே வைத்தார். எனவே,பாபாவின் தலைப் பாகம் நான்கு அங்குலங்கள் உயர்த்தப்பட்ட நிலையில் பலகை சாய்வாக இருந்தது.

பாபாவின் புனித உடல், அது வைக்கப்பட்டிருந்த கம்பளத்துடன் எடுக்கப்பட்டு 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்ற உரத்த கோஷங்களுடன் பாபாவின் தலைப் பாகம் வடக்கு நோக்கியும், அவரது பாதங்கள் சமாதியின் கீழ் மட்டத்திற்குச் செல்லும் படிகளை ஒட்டிய மரப்பலகையின் மீதும் தாழ்த்தப்பட்டது. அவரது தலைக்கு அடியில் ஒரு தலையணையும் வைக்கப்பட்டது. பாபாவின் தலைமுடி மெதுவாக வாரிவிடப்பட்டது. தலை, காதுகள் மற்றும் கன்னத்தை சுற்றியிருந்த தோள் துண்டு சீராக்கப்பட்டது. அவரைச் சுற்றியிருந்த போர்வைகள் நேர்த்தியாக மடிக்கப்பட்டு, மரப் பலகைக்கும் சமாதி கீழ்மட்ட சுவருக்கும் இடைப்பட்ட இடத்தில் பனிக்கட்டிகள் நிரப்பப்பட்டன. பனிக்கட்டி பாபாவின் உடலை அனைத்து பக்கங்களிலும் சூழ்ந்திருந்தது, ஆனால் அவரது உடலைத் தொடாமல் இருந்தது. பாபாவின் தலையைச் சுற்றி ஒரு மலர் மாலை அணிவித்து, அவரது கண் இமைகள் மூடிய நிலையில், முதல் பார்வையில், அவர் நிம்மதியாக தூங்குவது போலத் தோன்றினார். பொழுது சாய்ந்த வேளையில் சமாதியில் பெட்ரோமாக்ஸ் விளக்கு தொங்கவிடப்பட்டது. 'பிகின் தி பிகீன்' (BEGIN THE BEGUINE) பாடல் இசை அவருடைய ஓய்விடத்தில் காற்றோடு கலந்து, அதன் வலியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

ஆண், பெண் மண்டலி அனைவரும் நள்ளிரவுக்கு முன்பு மெஹராஸாத்திற்குச் திரும்பிச் சென்றனர். பாதிரி, சகன் இருவரும் இரவு

முழுவதும் சமாதிக்குள் இருந்து, தரிசனத்திற்காக திரள்திரளாக வந்த மக்களை வரிசையில் வழிநடத்திக் கொண்டிருந்தனர். ஆதி அவரது அலுவலகத்தில் அமர்ந்து, இந்தியாவிலும் அயல்நாட்டிலும் அமைந்த பல்வேறு மையங்கள் மற்றும் தனிநபர்களுக்குத் தொலைத்தந்தி அனுப்புவதும், தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிப்பதிலும் மும்முரமாக இருந்தார். 'ஆல் இந்தியா ரேடியோ' (ALL INDIA RADIO) மெஹர் பாபா காலமான செய்தியை ஜனவரி 31 அன்று இரவு 10:00 மணி எனத் தவறாக அறிவித்தது. மறுநாள், வானொலியில் பகல் நேரத்தில் பலமுறை அறிவிப்புகள் செய்யப்பட்டன; பி.பி.சி.யும் இந்த செய்தியை ஒலிபரப்பியது.

31ஆம் தேதி மாலைக்குள் செய்தி மும்பையைச் சென்றடைந்தது; மேலும் பாபா-அன்பர்கள் அஹமதுநகரை நோக்கி அனைத்து வழிகளிலும் விரைந்து வந்தனர். பாபாவின் உடல் சமாதியில் வைக்கப்பட்ட உடனேயே பலர் வந்து சேர்ந்தனர். அன்று காலை (பாபாவின் முன் சம்மதத்துடன்) மும்பை சென்றிருந்த ஸரோஷ் உடனே மெஹராபாத் திரும்பிவந்தார். அந்த நேரத்தில் மும்பையில் இருந்த மெஹர்ஜியும் பூனாவிற்கு விமானத்தில் பறந்து வந்து, ஜெஸவாலா குடும்பத்துடன் அன்றிரவு மெஹராபாத் வந்தார்.

பாபா அவரது உடலை துறந்துவிட்டதாக முஹமது மஸ்திற்குத் தெரிவிக்கப்பட்டதும், அவர் மராட்டியில், "தாதா சென்றுவிட்டார், ஆனால் அவர் திரும்பி வருவார்" என்று கூறினார்.

கிழக்கு அல்லது மேற்கத்திய நாடுகளில் வாழ்ந்த பெரும்பாலான அன்பர்களுக்குத் தொலைத்தந்தி வந்ததும் செய்தியை நம்ப முடியவில்லை. இன்னும் சில மாதங்களில் பூனாவில் தரிசனம் வழங்கத் திட்டமிட்டிருந்ததால், இது ஒரு கொடூரமான புரளி என்று நினைத்தனர். அன்றிரவு முழுவதும் ஆதியின் அலுவலகம், செய்தியை ஊர்ஜிதம் செய்ய முற்பட்டவர்களின் தொலைத்தந்திகள் மற்றும் தொலைபேசி அழைப்புகளால் நிரம்பி வழிந்தது. அது உண்மை என அவர்கள் கண்டுகொண்டதும், காரிருள் மேகம் அவர்களின் உலகை நிரப்பியதாகத் தோன்றியது.

மெஹர் பாபாவின் அன்பர்களும் பக்தர்களும் தங்கள் இதயத்தின் ஒரே அன்பானவரின் கடைசி தரிசனத்தை அடையப் பெற, நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து மெஹராபாத்தில் குவிந்தனர். பாபாவின் உடல் அடுத்த நாள், பிப்ரவரி 1 காலை 10:00 மணிக்கு அடக்கம் செய்யப்படும் என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. எனவே தொலைதூர இடங்களிலிருந்து வந்தவர்கள் தொலைத்தந்தி மற்றும் தொலைபேசி அழைப்புகளை அனுப்பி, அவர்கள் வரும் வரை அந்த நேரத்தைத் தள்ளிப்போடுமாறு வேண்டினர்.

வெளிநாடுகளில் வாழும் மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய அன்பர்களும் செய்தியை மீண்டும் உறுதிப்படுத்தி, வர முயன்ற வேளையில், தங்குவதற்கு சரியான இடவசதி இல்லாததால், அவர்கள் வர வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டனர். டாக்டர் கிண்டே, பாபாவின் உடல், வேதியியல் முறையில் பாதுகாக்கப்படாததால் (EMBALMING), அதை விரைவில் அடக்கம் செய்யுமாறு அறிவுறுத்தினார்; மேலும் அவரது கருத்துப்படி, பனிக்கட்டிகளில் வைத்திருந்தாலும் 20 மணி நேரத்திற்குள் அடக்கம் செய்யப்பட வேண்டும். மற்றுமொரு காரணம், பாபாவின் உடலில் அதிக அளவு யூரியா இருந்ததால், அது இன்னும் விரைவான உடல் சிதைவை ஏற்படுத்தும் என்று டாக்டர் கிண்டே கூறினார்.

வரமுடிந்தவர்கள், தகவல் அறிந்ததும் மெஹராபாத்திற்கு விரைந்தனர். பலர் தங்கள் பணியிலிருந்து உத்தியோகபூர்வ விடுப்பு இல்லாமலும், பலர் தேவையான உடைகள் மற்றும் கைகளில் பணம் எதுவும் இல்லாமலும் வந்தனர். அன்பர்களை மெஹராபாத்திற்கு அழைத்து வர சிறப்புப் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. 1969 பிப்ரவரி 1 சனிக்கிழமை காலை, டாக்டர் கிண்டே, ஃபிரான்சிஸ் ஆகியோர் பாபாவின் உடலை உடனடியாக அடக்கம் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர், ஆனால் ஸரோஷ், நஸர்வான் ஸட்டா மற்றும் பிலூ மாமா ஸட்டா (எரச்சின் தாய்வழி மாமன்கள்) ஆகியோர் பாபா-அன்பர்கள் தரிசனம் பெற்றுக்கொள்வது வரை கண்டிப்பாக காத்திருக்க வேண்டும் என்று கோரினர். அவர்களின் வாதம் விரும்பிய விளைவை ஏற்படுத்தியது.

பாபா முன்பு, '**நான் படுத்துக்கொண்டே தரிசனம் வழங்குவேன்**' என்றும், '**மேலும் அவரது தலையை உயர்த்தி வைத்திருப்பதால், அன்பர்கள் அவரை தூரத்திலிருந்து பார்க்க முடியும்**' என்றும் குறிப்பிட்டிருந்தார். இப்போது, பாபா கூறிய வார்த்தைகளின் முழு தாக்கம், அவர் சமாதியில் படுத்துக்கொண்டு, அன்பர்களுக்கு தரிசனம் வழங்கிய விதம் அவரது வாக்குறுதியை மெய்யாக்கியது.

இவ்வாறு, பாபா திறந்த சமாதியில் ஏழு நாட்கள் இருந்தார், அவர் வெறுமனே தூங்குவது போல் ஒரு மென்மையான பிரகாசம் அவரது முகத்தில் தோன்றியது. ஏழு நாட்கள் இரவும் பகலும் தெய்வீகப் பிரியமானவர், பல்லாயிரக் கணக்கான அன்பர்களுக்கு தரிசனம் வழங்கினார். மெஹராபாத் மேல்மலையில் ஒருவார கால தரிசனம், வாழ்க்கையில் மறக்க முடியாத வாரமாக இருந்தது; அங்கு அன்பர்கள் இறுதி நேரத்தில் அவரை வணங்கவும், அவருக்கு ரோஜா மற்றும் மலர் மாலைகளை வழங்கவும், அவரைப் போற்றிப்

புகழ்ந்து பாடவும், அவரது பாதங்களில் அன்பினால் கண்ணீர் சிந்தவும் ஒன்றுதிரண்டனர்.

தரிசனத்திற்கு பிறகு, சமாதியிலிருந்து வெளியே வரும்போது சிலர், “பாபா எவ்வளவு அழகாக இருக்கிறார், எவ்வளவு இளமையாகத் தோன்றுகிறார்!” என ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

“அவர் ஏன் அப்படி இருக்கக்கூடாது?” காலம் வினவியது. “நானே இறை அன்பு” என்று அவர் எப்போதேனும் சொல்லாமல் இருந்ததுண்டா? தெய்வீக அன்பு, தெய்வீகமான அன்பை தரிசனம் செய்து கொண்டிருந்தது. பற்று, ஆசை, விருப்பம் போன்றவற்றின் எண்ணங்கள் அனைத்தும் இல்லாமல் போனது; அன்பர்கள், அன்பிற்குரியவரின் முகத்தில் அன்பு ஒளிர்வதைக் கண்டனர். அங்கு வந்த அன்பர்களின் அன்பானது, வலி மற்றும் மனவேதனையால் நிறைந்தது; அன்பிற்குரியவரின் இறை அன்பால் மட்டுமே அந்த ஏக்கத்தை ஏற்படுத்த முடிகிறது; இதுவே, அதன் மகிமையின் ஒரு கணப் பார்வையை அவர்களுக்கு வழங்கியது.

இரவோடு இரவாக அமைதியான, நிசப்தம் நிறைந்த, தொலைதூர இடத்திலிருந்த மெஹராபாத், நெரிசலான யாத்திரை ஸ்தலமாக மாற்றப்பட்டது. பேருந்துகள், கார்கள், இரு சக்கர வாகனங்கள், டோங்காக்கள் மற்றும் காளை வண்டிகள் என வரிசை வரிசையாக போக்குவரத்து சாலையோரங்களில் குவிந்தன. மலையின் மீது மக்களை வழிநடத்தும் விதத்தில் அறிவிப்புப் பலகை ஒன்று அமைக்கப்பட்டது, ஆனால் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கூட்டத்திற்கு உதவுவது என்பது பாதிரிக்கு மிகவும் கடினமாக இருந்தது. சோகத்தில் ஆழ்ந்தவர்களுக்கு இடமளிக்க, சமாதிக்கு வெளியேயும் மலையைச் சுற்றியும் ஒவ்வோர் அங்குல இடமும் பயன்படுத்தப்பட்டது. உணவு எதுவும் இல்லாத நிலையில் தேநீர் வழங்குவதற்காக சாலையோர சிற்றுண்டிக் கடை ஒன்று முளைத்து வந்தது.

சகன் 1969 பிப்ரவரி 2 ஞாயிற்றுக்கிழமை அன்று உணவு தயார் செய்து கொண்டு வந்தார், அவர் மீண்டும் அதை 6ஆம் தேதி செய்தார்.

மேல் மற்றும் கீழ் மெஹராபாத்திற்கு இடையே செல்லும் ரயில் பாதையில் மும்பை மற்றும் ஆந்திராவிலிருந்து பயணம் செய்த அன்பர்களால் ரயில்களில் பேரளவில் நெரிசல் ஏற்பட்டது. ஏழு நாட்களும், ரயில்கள் கடந்து செல்லும் போதெல்லாம், ஓட்டுநர்கள் இக்கால அவதார புருஷருக்காக அர்ப்பணிக்கப்பட்ட கூட்டத்திற்கு, நீண்ட விசில் ஓசை எழுப்பி அன்பையும், அங்கீகாரத்தையும் வழங்கினர்.

அப்போது மெஹராபாத்தில் மின்சாரம் இல்லை, ஆனால் போதுமான விளக்குகள் ஒளிர்ந்தன. ஒரு முழு நிலவு குளிர்கால இரவு வானத்தில் வாரம் முழுவதும் பிரகாசித்தது போல், ஆதிகால புருஷரின் பழங்கால விளக்கு அவரது யாத்ரீகர்களுக்கு வழியை காட்டிக்கொண்டிருந்தது. பிப்ரவரி 1ஆம் தேதி விஜயவாடாவைச் சேர்ந்த சிந்தா சர்வராவ், மஜேட்டி ராமமோகன ராவ் ஆகியோர் வந்தபோது, மின்சாரம் தயார் செய்யும் மோட்டார்கள் ஏற்பாடு செய்து, ஒளிரும் விளக்குகள் சமாதியைச் சுற்றி போடப்பட்டன. பகல் வேளையில் தரிசனத்திற்காக, கொளுத்தும் வெயிலில் காத்திருந்தவர்களுக்கு சிறிது நிழல் வழங்கும் நோக்கத்தில் சமாதியின் முன்னால் மூங்கில் தூண்களின் மேல் நீளமாக தற்காலிக வெள்ளை துணியால் மறைக்கப்பட்டது. சமாதிக்கு வெளியே அமைந்த மேடையில் வெவ்வேறு பஜனை குழுவினர் தங்கள் இதய கீதங்களைப் பாடிக்கொண்டிருந்தனர்.

காலம் இதை இவ்வாறு பதிவு செய்தது, “ஒரே ஒரு பொது மொழி மட்டுமே பேசப்பட்டது; அதுவே அன்பு மற்றும் ஒற்றுமைப்பாட்டின் மொழி. இருமைத்தன்மை அதன் வேதனையின் நெருப்பில் எரிந்துகொண்டிருந்தது. இந்த அன்பு மற்றும் ஒற்றுமைப்பாட்டின் மொழி, பிரியமான பாபா மொழிய இருந்த இறை வார்த்தைகளின் எதிரொலி இல்லையா? மேலும் அது ஒவ்வோர் அன்பரின் இதயத்திலிருந்தும் இடைவிடாது எதிரொலிக்கவில்லையா? பாபாவின் மௌனம் அவர்களின் இதயங்களில் உடைந்து கொண்டிருந்தது, மேலும் அவரது அன்பினால் எழுச்சியுறும் அதிக எண்ணிக்கையிலான இதயங்கள் உடைந்து கொண்டே இருக்கும்.

ஆதி சீனியரின் வார்த்தைகளில்: “மெஹர் பாபாவின் இறை வார்த்தை பிரபஞ்சத்தில் ஊடுருவ நேரம் பிடிக்கும்.”

இந்த ஒரு வாரத்தில் அருகிலிருந்தும், தொலை தூரத்திலிருந்தும் பல்லாயிரம் பேர் வந்து சேர்ந்தனர். மேற்கத்திய அன்பர்களிடையே முதலில் வந்தவர் டான் ஸ்டீவன்ஸ், பிப்ரவரி 2 அன்று. தொடர்ந்து விரைவில் ஹாரி கென்மோர், ஆதி ஜூனியர் மற்றும் டிலியா டிலியோன் ஆகியோர் வந்தனர். ரிக் சாப்மேன், அலன் கோஹென், அனீஸ் ஹாஸன் ஆகியோர் பிப்ரவரி 6ஆம் தேதியும், இர்வின்-எட்வர்ட் லக் சகோதரர்கள் அடுத்த நாள் 7ஆம் தேதி காலையிலும் மெஹராபாத் வந்தடைந்தனர். அவர்கள் அனைவரும் ‘விலூ வில்லா’ - ஸரோஷ், விலூவின் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

ருஸ்தம் & ஸொராப் ஈரானி; ஹாரி கென்மோர், டான் ஸ்டீவன்ஸ், டிலியா, ஸரோஷ் - பிப்ரவரி 3-6 தேதிகளில் மெஹராபாத்தில் தங்கியிருந்தனர்.

யாத்ரீகர்கள் அழுது கொண்டே வந்தாலும், பலருக்கு பாபாவைப் பார்த்ததும் அவர்களின் துயரம் மகிழ்ச்சியாக மாறிவிடும். சிலர் உணர்ச்சிவசப்பட்டு கதறி அழுதனர். பிரேம் ஆஷ்ரம நாட்களில் சிறுவர்களின் கட்டுக்கடங்கா அழுகையைக் கட்டுப்படுத்தி வந்த ராவ்ஸாஹேப் அஃப்ஸேரி, தனது சுய கட்டுப்பாட்டை இழந்தார். அழுதுகொண்டே ராவ்ஸாஹேப் சமாதியின் கல் சுவர்களில் தலையை அறையத் தொடங்கியதை, சிரமப்பட்டு கட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்தது. பாபா ஒருமுறை அவரிடம், பாபா, தனது பௌதீக உடலைத் துறந்த பிறகு தான், ராவ்ஸாஹேப் உயிரைத் துறப்பார் என்று கூறினார். “இப்போது என்னை அழைத்துச் செல்லுங்கள், இப்போது என்னை அழைத்துச் செல்லுங்கள்!” என்று கதறினார் ராவ்ஸாஹேப்.

சிலரை மயக்கமடைந்த நிலையில் தூக்கிச் செல்ல வேண்டியதாயிற்று. கிருஷ்ணா நாயர் ஜனவரி 31ஆம் நாள் நள்ளிரவில் வந்து, அஹமதுநகர் ரயில் நிலையத்திலிருந்து மெஹராபாத் வரை பல மைல்கள் நடந்து வந்தார். பாபாவின் உடலைக் கண்டதும் அவர் கண் கலங்கி அழத் தொடங்கி, சுயநினைவை இழந்தார்.

இரண்டு சேவகர்கள் எல்லா நேரங்களிலும் சமாதியில் இருந்தனர். ஒருவர் சமாதியில் கீழே இறங்கும் இடத்தில் அமர்ந்து பாபாவை நோக்கி விசிறிக்கொண்டிருந்தார், மற்றொருவர் சமாதி வாசலில் பூக்களை சேகரிப்பதிலும், ஈரத்துணியால் தரையை சுத்தம் செய்வதிலும் மும்முரமாக இருந்தார். ஷன்னல் (CHANEL) நிறுவனம் தயார் செய்த லாவெண்டர் வாசனைத் திரவியம் (பாபா விரும்பியது) அவர் உடல் மீது தெளிக்கப்பட்டது. ஒரு நாளைக்கு மூன்று முறை, சமாதியின் கதவுகளை மூடி பாபாவைச் சுற்றி வைக்கப்பட்ட பனிக்கட்டிகள் மாற்றப்பட்டன. மரத்தூள் மற்றும் ரோஜா இதழ்கள், பனி உருகுவதை மட்டுப்படுத்த அதன் மீது தூவப்பட்டன.

டாக்டர் கோஹெர் அடிக்கடி பாபாவின் உடல் சிதைவதற்கான அறிகுறிகளை பரிசோதித்து வந்தார். முதல் நாள் வயிறு சற்று வீக்கமாக இருந்தாலும், அதற்குப் பின்னர் அதுபோன்ற அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. பாபாவின் முகம் மட்டுமே வெளியே தெரிந்தது, அது ஏழு நாட்களும் மிருதுவாகவும், பளபளப்பாகவும் இருந்தது. பாபாவின் உடலின் கீழ் இருந்த விரிப்பு மாற்றப்படவில்லை, ஆனால் அவர் மீது போர்த்தப்பட்டிருந்த போர்வை தினமும் மாற்றப்பட்டது, அதில் பக்தர்கள் தங்கள் மலர் காணிக்கைகளை வைத்தனர். பாபாவின் தலை மற்றும் கழுத்துப் பாகத்தைச் சுற்றியிருந்த இளஞ்சிவப்பாலான தோள் துண்டு அவரது மார்பை மூடிய வண்ணம் இருந்தது.

பெண் மண்டலி மெஹராபாத் மேல்மலையில் கிழக்கு அறையில் தங்கி, பாபாவின் அருகில் அமர ஒவ்வொரு நாளும் பல முறை வந்தனர். ஒலிபெருக்கி ஒன்று இணைக்கப்பட்டிருந்தது, அதன் வழியாக மெல்லிய பஜனைகள் மற்றும் கவாலி பாடல்கள் காற்றில் தவழ்ந்தன, மேலும் கவிதைகளும் பிரார்த்தனைகளும் மொழியப்பட்டன. கேஷவ் நிகம் ஒவ்வொரு நாளும் சமாதிக்குள் அவர் எழுதிய 'மெஹர் சாலிஸா'வை ஓதினார்; மேலும் ஹாரி கென்மோர் குருநாதர் மற்றும் மனம் வருந்தி மன்னிப்புக் கோரும் இரங்கல் பிரார்த்தனைகளை மொழிந்தார். ஒவ்வொரு மாலையும், அன்பர்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகளை வழங்க முடியாத அவதார் மெஹர் பாபா அறக்கட்டளையின் அறங்காவலர்கள் சார்பாக ஸரோஷ் மன்னிப்புக் கோரினார். பிறர் தங்குவதற்கு வசதியாக, பாபாவின் தரிசனத்திற்குப் பிறகு மெஹராபாத்தை விட்டு வெளியேறுமாறு பக்தர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

பாபாவின் உடல் அடக்கம் செய்யப்படும் வரை, யார் ஒருவரும் வெளியேற விரும்பவில்லை, அது எப்போது நடக்கும் என்று எவருக்கும் உறுதியாகத் தெரியவில்லை. ஒவ்வொரு காலையிலும் பாபாவின் உடலின் நிலையைக் குறித்த டாக்டர் கோஹெரின் அறிக்கையை அறிய அனைவரும் ஆவலுடன் இருந்தனர், ஏனெனில் 'மெஹர் பாபா அறக்கட்டளை' உடல் சிதைவதற்கான முதல் அறிகுறிகளில் உடலை அடக்கம் செய்வதாக அறிவித்தது. மெஹரா, மணி இருவரும் பாபாவே அவரது உடலை எப்போது அடக்கம் செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்வார் என்று நினைத்தனர்; உடல் புத்துணர்ச்சியுடனும் பொலிவுடனும் இருக்கும் வரை அதை அவர்கள் அனுமதிக்க விரும்பவில்லை. '**ஏழு நாட்களுக்குப் பிறகுதான் துன்பத்திலிருந்து விடுபடுவேன்**' என்று பாபா 31ஆம் தேதி காலையில் குறிப்பிட்டார். இதை அவரிடமிருந்து வெளிவந்த முக்கிய குறிப்பாகக் கருதி, அறங்காவலர்கள் கூட்டத்தில் 1969 பிப்ரவரி 7ஆம் தேதி வெள்ளிக்கிழமை மதியம் 12:15 மணிக்கு அடக்கம் செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. ஸொராஸ்ட்ரியன் நாட்காட்டியின்படி அந்த ஆண்டு 7ஆம் தேதி பாபாவின் பிறந்தநாளாகவும் இருந்தது.

1969 பிப்ரவரி 7 வெள்ளிக்கிழமை அதிகாலை 4:30 மணியளவில், அனைவரும் சமாதியில் ஒன்றுதிரண்டனர். இருபது நிமிடங்களுக்குப் பிறகு, பெண் மண்டலி உள்ளே நுழைந்த போது, அனைவரும் எழுந்து நின்று பாபா, பாவ் கல்சூரிக்கு வழங்கிய 'சச்சிதானந்த, பரமானந்த, மெஹர் பாபா வித்னியானந்த' என்ற வரியைத் திரும்பத் திரும்பப் பாடினர். பல்லாயிரக்

கணக்கானோர் கலந்து கொண்டு, சரியாக ஐந்து மணிக்கு அனைவரும் ஒன்றிணைந்து ‘அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!’ என்று கோஷம் எழுப்பினர்.

பெண்மணிகள் பாபாவின் புனித உடலில் மலர் மாலை அணிவித்து, சமாதியின் கதவுகள் திறக்கப்படவே அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர். அப்போது இறுதி தரிசனம் தொடங்கியது. வெகு சிலரே சமாதியின் கீழ் மட்டத்தில் இறங்கி பாபாவின் பாதங்களைத் தொட அனுமதிக்கப்பட்டனர். அனைவருக்கும் அந்த பாக்கியம் கிடைப்பதற்கு போதுமான நேரம் இல்லை. காலை 7:00 மணிக்குப் பிறகு, சேவகர்களாக இருந்த இருவரைத் தவிர வேறு எவரும் சமாதிக்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை, ஒருவர் வாசலிலும் மற்றும் ஒருவர் பாபாவை விசிறியால் வீசிக்கொண்டும் இருந்தார். பல அன்பர்களுக்கு இந்த இரண்டு நிமிட கடமை வழங்கப்பட்டது.

சூரிய உதயத்திற்குப் பிறகு மெஹராபாத் மேல்மலையில் மக்கள் கூட்டம் அலைமோதியது, ஏனெனில் பூனா, அஹமதுநகர் மற்றும் பிற பகுதிகளில் வெளிவந்த செய்தித்தாள்கள் மூலம் பிப்ரவரி 7 அன்று தரிசனத்தின் இறுதி நாள் என்றும் பாபாவின் உடல் 12:15 மணிக்கு, சரியாக ஏழு நாட்களுக்குப் பின்னர் அடக்கம் செய்யப்படும் என்றும் விளம்பரப்படுத்தப்பட்டது.

கீழ் மெஹராபாத்தில் வாழ்ந்த பாதிரி, சிது இருவரும் முஹமது மஸ்தை சமாதிக்கு அழைத்து வந்தனர். முஹமது சமாதியின் வாசலில் நின்றார், ஆனால் உள்ளே செல்லுமாறு வற்புறுத்தியும் அங்கேயே நின்ற வண்ணம் அவர் மராட்டி மொழியில், “பார்த்தேன் (பஹில), பார்த்தேன் (பஹில)!” என்று கூறி “போதும் (பஸ்), போதும் (பஸ்)!” என்று கூறவே, முஹமது மஸ்த் அவரது அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

காலை 11:20 மணிக்குள் அங்கிருந்த அனைவரும் பாபாவின் புனித உடலை கடைசியாக தரிசனம் செய்தனர். அனீஸ் ஹாஸன் சமாதிக்குள் சில திரைப்பட காட்சிகளைக் காணொளி படமாக்கினார். சரியாக மதியம் 12:00 மணிக்கு, கென்மோர் குருநாதருக்கான பிரார்த்தனையை மொழிந்தார், மீண்டும் அதே பிரார்த்தனையை மதியம் 12:15 மணிக்கு மொழியவே, “அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!” என்று மூன்று முறை உரத்த ஆரவாரங்கள் ஒலித்தது. சமாதியின் கதவுகள் தற்காலிகமாக மூடப்பட்டன, பாபா ஒரு சுத்தமான போர்வையால் மூடப்பட்டிருந்தார். எரச் பனிக்கட்டிகளை அகற்றவே, அவை சமாதியில் நின்றுகொண்டிருந்த பிற மண்டலி மற்றும் மேற்கத்திய அன்பர்கள் மூலமாக வெளியே எடுத்துச் செல்லப்பட்டன. மரக்கட்டைகள் அனைத்தும் அகற்றப்பட்டதும், பாபாவின் தலையைச் சுற்றியிருந்த இளஞ்சிவப்புத் துணி இறுதியாக மாற்றப்பட்டது. அவரது தலைமுடியை சீராக்கி, தலையைச் சுற்றி

அணிந்திருந்த தோள் துண்டு நேராக்கப்பட்டது, அவரது முகத்தில் இருந்த தூசி துகள்கள் மெதுவாக துடைக்கப்பட்டது, மேலும் அவர் புதிய ரோஜா மலர்களால் அலங்கரிக்கப்பட்டார்.

மெஹறா, மணி மற்றும் பிற பெண் மண்டலி கடைசியாக தரிசனம் செய்ய சமாதிக்கு வந்தனர். விரைவில், பாபாவின் அன்பான உடல் வடிவம் பார்வையிலிருந்து மறைந்துவிடும். அனைவரும் அமைதியாக பாபாவின் புனித உடலைச் சுற்றி நின்றனர். முழு அமைதி நிலவியது. குண்டூசி விழுந்தால் கூட கேட்கும் அந்த நிசப்தத்தில் ஏக இறைவனான ஒரே ஒருவரை நேசிக்க வேண்டிய விதத்தில் நேசிக்கும் மெஹறாவின் இதயத்தை பிளக்கும் ஆழ்ந்த அழுகை மட்டுமே கேட்டது. மெஹறாவும் பிற பெண்மணிகளும் பாபாவின் பாதங்களில் விழுந்து வணங்கினர். அவருடைய சகவாசத்தில் இருந்த இத்தனை வருடங்களின் நினைவுகள் அடங்கிய கண்ணீர் அவர்களின் கண்களிலிருந்து பெருக்கெடுத்தது. மெஹறா, பாபாவிற்கு மலர் மாலை அணிவித்து முத்தமிட்ட பிறகு, பெண்மணிகள் சமாதியை விட்டு வெளியேறினர்.

ஆண் மண்டலி பின்பு சமாதிக்குள் சென்றனர். மரத்தாலான பேழையின் மூடி சமாதியின் வாசல் வழியாக வெளியே நின்ற அன்பர்களால் உள்ளே கொண்டு வரப்பட்டு, அதன் மூலைகளில் உள்ள நான்கு கைப்பிடிகளிலும் கயிறுகள் கட்டப்பட்டன. பாபாவின் மேல் வைக்கப்படுவதற்கு சற்று முன்னர், எரச் சமாதியில் கீழே இறங்கி, மெஹறா வழங்கிய மிகவும் அழகான பட்டுத்துண்டை பாபாவின் முகத்தின் மேல் வைத்தார். மரப்பேழையின் மூடியை சமாதியின் கீழ் தளத்தில் நின்று கொண்டிருந்த மண்டலி, மேலே அதைத் தாங்கிக்கொள்ள, ‘அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!’ என்ற உரத்த கோஷங்களுக்கு மத்தியில், மூடி மெதுவாக பாபாவின் மேல் வைக்கப்பட்டது - அது அவரை முற்றிலும் பார்க்க முடியாமல் மறைத்தது. மெஹறாவும் பிற பெண்மணிகளும் வடக்கு ஜன்னலில் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

மரப்பேழையின் மூடி வைக்கப்பட்ட பின்னர், ஆண் மண்டலி வெளியே வந்தனர், பெண்மணிகள் மீண்டும் ஒரு பெரிய ரோஜா மலர் மாலையை மரப்பேழையின் மீது அணிவிக்க உள்ளே சென்றனர். மெஹறாவும் பிற பெண்மணிகளும் வெளியே சென்ற பிறகு, மரப்பேழை மீது பூக்களை தூவுவதற்காக ஆண்கள் உள்ளே சென்றனர். ஒரு கமேளா (இரும்பு கொள்கலன்) நிரம்ப மண் உள்ளே கொண்டு வரப்பட்டது, ஒவ்வோர் ஆண் மண்டலியும் அதன் மீது ஒரு கைப்பிடி மண்ணைத் தூவினர்.

பல்லாயிரக் கணக்கான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் வெளியே காத்திருந்ததால், ஒவ்வோர் அன்பரும் சமாதிக்குள் சென்று, கைப்பிடி

மண்ணைத் தூவுவதற்கு பதிலாக, அவர்கள் வாசலில் வந்து மண்ணைத் தொடுவது போதுமானது என்று அறிவுறுத்தப்பட்டது. பின்னர் அதை மரப்பேழையின் மீது முழுவதுமாகத் தூவலாம் என்றும் கூறப்பட்டது. இந்த வழியில் நீண்ட வரிசை உருவாகி, பின்பு சமாதியில் மண் நிரப்பப்பட்டது. சமாதியின் கீழ் மட்டத்திற்கும், அதை நோக்கிச் செல்லும் படிகளுக்கும் இடையே கல் அடுக்குகள் செருகப்பட்டு, படிகள் மண்ணால் மூடப்பட்டன. மரப்பேழையின் மேற்பகுதியில் சுமார் அரை டஜன் ஆறு அங்குல அகலமான மரப் பலகைகள், கிடைமட்டமாக பாபாவின் உடலின் மேல் வைக்கப்பட்ட மரப்பலகைக்கு மேலதிக பாதுகாப்பாக அமைந்தன.

அன்று (ஸொராஸ்ட்ரிய நாட்காட்டியின்படி) பாபாவின் பிறந்தநாள் என்பதால், தரிசனத்திற்கு வந்த அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. ஏறக்குறைய ஐந்து மணி நேரத்திற்குப் பிறகு, மாலை 5:00 மணியளவில், சமாதி மண்ணால் நிரப்பப்பட்டது. சமாதியின் தளம் துடைத்து சுத்தம் செய்யப்பட்டு, பாபாவின் ஏழு வர்ணக் கொடி மண்மீது கிடைமட்டமாக விரிக்கப்பட்டிருந்தது. பெண் மண்டலி மீண்டும் சன்னதிக்குத் திரும்பிவந்து, பிறப்பு, இறப்பு இல்லா, நித்தியமான, என்றென்றும் அழிவில்லாத, அவரைத் தவிர வேறு எதுவும் இல்லாத, தங்கள் பிரியமான ஏக இறைவனுக்கு மலர்களை வழங்கினர். இறைவன் உளதாயிருப்பதை, காணத்தக்க வகையில் அறிந்து, புரிந்து கொள்வதோடு, அளவிறுதியற்ற அன்பையும், இரக்கத்தையும் நமக்கு உறுதிப்பட உணர்த்துவதற்காக, பௌதீக உடல் வடிவில் வந்து, பிறகு கண்டு உணர்வதற்கு இயலாத நுண்பொருளாக மாறுவதன் மூலம், உருவமற்ற உண்மையான ரூபத்தை நாம் கண்டுகொள்ளும் வழியை அவர் வகுத்தார்.

1969 பிப்ரவரி 8 அன்று, மண்டலியுடன் கலந்துரையாடிய பின்னர், ஆதி இந்தத் தொலைத்தந்தியை முழு உலகிற்கும் அனுப்பினார்:

மெஹர் பாபா பௌதீக உடலில் இல்லாவிடிலும், 1969 ஜூன் 10ஆம் தேதி வரை பாபாவின் தரிசனத்திற்கான அழைப்பை ஏற்று, பூனா, குருபிரசாத்திற்கு வர விரும்பும் அன்பர்கள், (1968) நவம்பர் 1 தேதியில் வெளியிடப்பட்ட குடும்ப கடிதத்தின்படி (FAMILY LETTER) திட்டமிடப்பட்ட தேதிகள் மற்றும் நிபந்தனைகளை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கலாம். இப்பயணத்தில் பாபாவின் சமாதியில் அஞ்சலி செலுத்த மெஹராபாத்திற்கு அரை நாள் விஜயமும் அடங்கும்.

ஜூன் 10ஆம் தேதிக்குப் பிறகு பூனாவிற்கும் பாபாவின் சமாதிக்கும் தனித்தனியாகவோ ஒன்றிணைந்தோ யாத்திரை மேற்கொள்ளலாம். அனைத்து ஏற்பாடுகளும் சுயமாகச் செய்யப்பட வேண்டும் என்பதை நினைவில்

கொள்ளுங்கள். உங்கள் அக்கம் பக்கத்தில் வாழும் அனைவருக்கும் இதைத் தெரிவிக்கவும். ஜெய் பாபா!

1969 ஏப்ரல் முதல் ஜூன் வரை, பாபா விரும்பியபடி குருபிரசாத்தில் 'தரிசனங்களின் தரிசனம்' நடைபெற்றது, மேலும் உலகம் முழுவதிலுமிருந்தும் மக்கள் புனித யாத்திரையாக மெஹராபாத்திற்கு வரத் தொடங்கினர்.

காலம் இவ்வாறு பறைசாற்றியது: "ஆதிகாலபுருஷர், தமது வில்லைப் பின்னோக்கி இழுத்து, இறை வார்த்தையை சுமந்த அம்புகளை எய்தினார். அம்பு, அவரது அன்பர்களின் இதயங்களில் பாய்ந்து, ஆழமான காயத்தை ஏற்படுத்தியது; இதன் மூலம் இறை வார்த்தை கேட்கப்படுகிறது. இதயத்தின் வடு, மெஹர் பாபா என்றென்றும் உளதாயிருப்பதை அறிய வைப்பதோடு, அந்த நிலையை எய்தும் ஏக்கத்தையும் உருவாக்குகிறது.

"பிரியமான பாபா, உண்மையாகவே நீங்கள் கற்பிக்க வரவில்லை, விழித்தெழச் செய்ய வந்தீர்கள், இந்த உலகத்திற்கு நீங்கள் அர்ப்பணித்த இந்த 'இறை வார்த்தைகளின் வார்த்தை' படிப்படியாக அதன் இதயத்தை ஊடுருவி, உண்மைப்பொருளில் எழுச்சியுறச் செய்யும்! எங்களை என்றென்றும் உங்கள் பாதங்களில் தலை வணங்கி நிற்கச் செய்யுங்கள், உங்களைப் பற்றிய நினைவுகள் எங்களில் ஒவ்வொரு சுவாசமாக இருக்கச் செய்யுங்கள்.

பாவ் கூறுகிறார், "எனது பிரியமானவரே! உங்கள் கருணை எல்லையற்றது, உங்கள் அன்பு எல்லையற்றது, உங்கள் உண்மைப்பொருளான 'சுயம்' எல்லையற்றது! நீங்கள் எனக்குக் கண்ணீரைத் தந்தீர்கள், ஆனால் அது உமது கருணைக்குக் குறைவில்லாதது - அந்தக் கண்ணீரின் மூலாதாரமே என் இதயம், அது என் இதயத்திற்கு மட்டுமே தெரியும்."

1969 ஜனவரி 29 அன்று பாபா எடுத்துரைத்த கடைசி வரியை பாவ் கல்சூரி நினைவு கூர்ந்தார், "**நீங்கள் சென்ற பின்பு நாங்கள் எங்கள் வாழ்க்கையில் என்னதான் செய்வோம்?**" இந்த வரியைப் பின்புலமாகக் கொண்டு பாவ் கல்சூரி கவிதை ஒன்றை இயற்றினார்.

காலத்தின் கவிதையை கவனமாகக் கேளுங்கள்...

நீங்கள் சென்ற பின்பு, நாங்கள் எங்கள்
வாழ்க்கையில் என்னதான் செய்வோம்?
நீங்கள் எங்களை விட்டுச் சென்றதும்
யாருடைய முகத்தைப் பார்ப்போம்?

ஓ மெஹர்! நீங்கள் எங்களை விட்டு பிரிந்தது
எப்படி என்பதை யாமறியோம்!
இப்போது நீங்கள் சென்ற இந்த கணம்
எங்கள் கண்ணீரை நாங்களே அருந்துவோம்!

பூ மொட்டிலிருந்து தேனீயை மறைத்து வைத்தால்
இந்த வாழ்க்கை தாங்க முடியாததாகி விடும்!
இப்போது எங்களை விட்டு நீங்கள் சென்ற
ஒவ்வொரு கணமும், நாங்கள் செத்து பிழைப்போம்!

உங்கள் அன்பான முத்தத்தையும் அரவணைப்பையும்
இப்போது நாங்கள் எங்கே காண்போம்?
நீங்கள் சென்றுவிட்ட பின்னர் உங்களுடன்
நாங்கள் எப்படி உரையாடுவோம்?

நீங்கள் உங்கள் பௌதீகக் கண்களை மூடிய அந்த கணம்
நாங்கள் உயிரை துறக்காதது ஏன்?
நீங்கள் பிரிந்து சென்ற இந்த நேரம், பிரியாவிடையின்
நெருப்பில் நாங்கள் எரிவோம் என்பேன்!

ஓ அன்பே, உமது பார்வையை எங்கள் பாதையில் திருப்பி,
எங்களை உலகிற்கு உயிரற்றவராக்குங்கள்!
நீங்கள் சென்ற பின்னர் இதுவே எங்களின்
ஒரே ஆசையாக ஏற்றுக்கொள்ளுங்கள்!

ஓ பாவ், நீரிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட
மீன்கள் துடிக்கின்றன வேதனையில்,
நீங்கள் சென்ற பின்னர், யார்தான் அவர்களைக்
காப்பாற்றுவார் இந்த வேளையில்?

நீங்கள் ஒருபோதும் வருவதும் இல்லை, போவதும்
இல்லை என்பதை நாங்கள் அறிவோம்;
ஆனால் இப்போது, நீங்கள் சென்ற பின்பு, நாங்கள்
எங்கள் இதயத்துடன் என்ன செய்வோம்?


நீங்கள் எப்பொழுதும் இங்கே உளதாயிருக்கிறீர்;
நீங்களே எல்லோருக்கும் ஜீவனாக உள்ளீர்!
நீங்கள் சென்ற இந்த நேரத்தில் நாங்கள் உங்களை
உள்ளளவில் தேடுவோம் என்பதை அறிவீர்!

நாங்கள் உம்மைத் தேடும் நோக்கத்தில்
உமது முகத்தை எங்களிடமிருந்து மறைத்தீர்.
நீங்கள் சென்ற இந்த நேரத்தில் உம்மை
என்றென்றும் தேடுவதை நீர் அறிவீர்.

நீங்கள் கருணையின் மகா சமுத்திரம் -
உலகின் பிரியமானவர் என்பதை அறிவோம்!
இப்போது, நீங்கள் சென்ற இந்த நேரத்தில்
நாங்கள் உங்களைப் பின்தொடர்ந்து வருவோம்.

பிரியமானவருக்காக உயிரைத் துறப்பது எளிதல்ல; அது மிகவும் கடினமான விஷயம். அத்தகைய மரணம் ஒன்றுதான் - பிறப்பு, இறப்பு எனும் சுழற்சிகளை அதனுள் ஒன்றிணைக்கும் ஒன்று - மெஹர் பாபா வருவதும் இல்லை போவதும் இல்லை, ஆனால் எப்பொழுதும் அவர் உளதாயிருக்கிறார் என்பதை ஒருவருக்கு உணர்த்துகிறது.

"பிரியமானவரே, நீங்கள் உலகை இவ்வாறு கேட்டுக்கொண்டீர்கள், "**உங்களால் இயன்றதைச் செய்யுங்கள். பின்பு கவலையின்றி, மகிழ்ச்சியாக இருங்கள்! நான் உங்களுக்கு உதவுவேன்**," ஏனெனில் நீங்கள் மட்டுமே உண்மையாக உளதாயிருக்கும் ஏக இறைவன், பிற அனைத்தும் பொய். உங்கள் மீதான நிலையான நினைவு மட்டுமே எங்களை, நீங்கள் உண்மையில் யார் என்பதை உணர வழிவகுக்கும் - மேலும், அவ்வாறு செய்வதன் மூலம் எங்கள் உண்மையான சுய அடையாளத்தை உணரும் சாத்தியத்தை அடையப் பெறுவோம்."



# பிற்சேர்க்கை - 1: காட்சித் தொகுப்பு

(**Appendix '1': Meher Baba's Scenario**)

மெஹர் பாபாவால் வழங்கப்பட்ட '**மாயாவின் ஸ்பரிசம்**' (A TOUCH OF MAYA) என்ற தலைப்பில், பின்வரும் புனை கதை, பல திரைக்கதைகளுக்கு அடிப்படையாக பயன்படுத்தப்பட்டது:

**முதல் வாழ்க்கை பாகத்தின் பாத்திரங்கள்**:

**ஏ**: எதிர் பாலின பெண்ணை வெல்லும் நரமாமிச மனிதன் (தன்னினம் உண்ணும் - CANNIBAL);
**பி**: நரமாமிச இளம் பெண்;
**சி**: பொறாமை கொண்ட வேறொரு நரமாமிச மனிதன் கொல்லப்படுகிறான்.

நரமாமிசம் உண்பவர்கள் ஒரு காட்டில் நெருப்பை வளர்த்து, அதைச் சுற்றி அமர்ந்து, ஒரு சடலத்தை புசிக்கின்றனர். ஆண் (**ஏ**), அந்த இளம் பெண்ணின் (**பி**) கண்களைக் கவர்கிறான், அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி புன்னகைக்கின்றனர்; அவன், அவளுக்கு ஒரு சுவையான மாமிசத் துண்டை வீசுகிறான். அவள் அதை உண்டு மகிழ்கிறாள். மூன்றாவது மனிதன் (**சி**) அதைக்கண்டு பொறாமைப்படவே, இருவருக்கும் இடையே ஏற்படும் மோதலில் '**சி**'யைக் கொன்று, '**ஏ**' வெற்றிவாகை சூடுகிறான்.

**இரண்டாவது வாழ்க்கை பாகத்தின் பாத்திரங்கள்**:

**சி**: கொலை செய்யப்பட்ட நரமாமிச மனிதன் இப்போது ஒரு கொடூரமான மன்னன்;
**ஏ**: நரமாமிசம் உண்ணும் பெண்ணின் காதலன் இப்போது அயல் நாட்டவர்;
**பி**: நரமாமிசம் உண்ணும் பெண், கொடூரமான மன்னனின் மனைவி.

இவ்வேளையில், '**ஏ**' மீது பரிதாபப்பட்டு, தனது கணவனிடம் அவனை மன்னித்து விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறாள்.

மாபெரும் ஆனால் கொடூரமான மன்னர் (**சி**), துருக்கி நாட்டை ஆட்சி புரிகிறார்; அவரது ராஜாங்க எல்லைக்குள் வரும் அனைத்து அயல் நாட்டினரையும் கொன்று குவித்தார். '**ஏ**', ஒரு பாரசீகன், மன்னனால் சிறை பிடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகிறார்: அவர் ஒரு மரத்தில் கட்டப்பட்டு சவுக்கால் அறையப்படுகிறார்; விரல்களில் ஊசிகள் அறையப்படுகின்றன; தலைகீழாக தொங்கவிடப்பட்டு அவனது உள்ளங்கால்கள் காயப்படுத்தப்படுகின்றன.

மன்னனின் மனைவி '**பி**', பாரசீக நபரிடம் பரிதாபப்பட்டு, தனது கணவரிடம் '**ஏ**'யை மன்னிக்குமாறு கேட்டுக்கொள்கிறார். 'சி' தனது மனைவியை மிகவும் நேசிப்பதால் '**ஏ**'யை மன்னிக்கிறார், பின்னர் அவர் அரசவையில் அனைவரும் விரும்பத்தக்கவராக மாறுகிறார். இறுதியில், ராணி '**பி**' பாரசீக நாட்டவரைக் (**ஏ**) காதலிக்க, இதைக் கண்டுபிடித்த மன்னர், அவர்கள் இருவரையும் கொன்றுவிடுகிறார்.

**மூன்றாம் வாழ்க்கை பாகத்தின் பாத்திரங்கள்**:

**பி**: இப்போது கணவனால் கொல்லப்பட்ட ராணி
சீனாவில் நேர்மையான வணிகர்;

**சி**: கொடூரமான மன்னர் இப்போது வணிகரின் மகன், ஒரு சீர்கெட்ட நபர்;

**ஏ**: பாரசீக நாட்டவரும் ராணியின் காதலரும் இப்போது
வணிகரின் மனைவி, அவர் தனது மகனை நேசிக்கிறார்.

சீனாவில் வணிகரான '**பி**' மற்றும் அவரது மனைவி '**ஏ**' ஆகியோருக்கு மூன்று மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். அவர்கள் செல்வந்தர்கள், ஆடம்பரமான வாழ்க்கை வாழ்கின்றனர். வணிகர் மிகவும் நேர்மையானவர். இருப்பினும், அவரது மகன், '**சி**', ஒரு ஊழல் பேர்வழி, மது மற்றும் போதைப்பொருட்களில் மட்டுமே ஆர்வமாக உள்ளார். '**சி**' ரகசியமாக, தந்தையின் பணத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறார். ஒரு பெரிய தொகைக்கு '**பி**'யின் காசோலையை போலியாகக் கையொப்பமிட்டு மாற்றுகிறார், மேலும் '**பி**' அதைப் பற்றி கேள்விப்படுகிறார். அவரது மகனுக்கு உதவுவதற்கு பதிலாக, '**பி**' அவரை சிறையில் அடைக்கிறார்.

வணிகரின் மனைவி, '**ஏ**', '**சி**'யை நேசிப்பதால் ஆழ்ந்த வருத்தத்திற்கு உள்ளாகி, படிப்படியாக நோய்வாய்ப்படுகிறாள். விரைவிலேயே '**பி**', வணிகர் தனது வாழ்க்கையில் வெறுப்படைந்து உயிரைத் துறந்துவிடுகிறார். '**சி**' சிறையில் மிகவும் சிரமப்படுகிறார்; சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர், அவர் மனம்திருந்தி ஒரு சிறப்பான வாழ்க்கையை நடத்தி, அமைதியாக உயிரைத் துறக்கிறார்.

**நான்காவது வாழ்க்கை பாகத்தின் பாத்திரங்கள்**:

**ஏ**: சீன வணிகரின் மனைவி இப்போது இந்தியாவில்
ஆட்சி புரியும் இளவரசர்;

**பி**: சீன வணிகர் இப்போது இளவரசரின் மனைவி;

**சி**: சிற்றின்பங்களில் ஈடுபட்ட மகன் இளவரசனின்
ஆன்மீக சிந்தனை படைத்த அடிமை.

'**ஏ**', இந்தியாவில் ஆட்சி புரியும் இளவரசர், '**பி**' அவரது மனைவி. '**சி**', '**ஏ**'யின் அடிமை ஆன்மீக சிந்தனை மிக்கவர், அவர் தினமும் பெனாரஸில் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்திருக்கும் மகத்தான யோகியிடம் சென்று, அவரது

பாதங்களில் பணிந்து இருக்கிறார். இளவரசரும் இளவரசியும் ஒருவரையொருவர் மிகவும் நேசிக்கின்றனர்.

ஒரு நாள் அடிமை தனது மனைவியின் மரணத்தால் அவளை இழக்க நேர்ந்தாலும், அமைதியாக இருக்கிறார். இளவரசர் ஆச்சரியப்பட்டு "உனது மனைவி மறைந்த பின்னரும் உன்னால் எப்படி அமைதியாக இருக்க முடிகிறது?" என்று அவரிடம் கேட்கிறார்.

'**சி**' பதிலளிக்கிறார், "எனது குருநாதர் எனக்கு வாழ்க்கை மற்றும் மரணத்தின் ரகசியத்தை புரிய வைத்துள்ளார்." இதைக் கேட்டதும் '**ஏ**', குருநாதரை சந்திக்க ஏங்குகிறார், அடிமை அவரை அழைத்துச் செல்லவே, குருநாதரை சந்தித்த இளவரசர், அவரால் மிகவும் ஈர்க்கப்பட்டுக் கூறுகிறார், "ஓ குருநாதரே, நான் உங்களிடம் சரணடைகிறேன், முற்றிலுமாக உங்களுக்குக் கீழ்ப்படிவேன்."

"எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னிடம் வாருங்கள்" என்று குருநாதர் கூறவே, இளவரசர் '**ஏ**' தனது ராஜ்ஜியத்தையும் அதிலுள்ள அனைத்தையும் துறந்து, மஞ்சள் நிற அங்கியை அணிந்து, அவரது மனைவி '**பி**'யுடன் குருநாதரின் கட்டளைகளுக்காக அவரது ஆசிரமத்திற்குச் செல்கிறார். இளவரசர் '**ஏ**' தனது சொந்த குடிமக்களிடம் சென்று யாசிக்குமாறு குருநாதர் கட்டளையிடவே, இளவரசர் கீழ்ப்படிகிறார். குருநாதர் பின்னர் இளவரசர் '**ஏ**'யிடம் ஒரு வருடம் காட்டில் அலைந்து திரியுமாறும் கட்டளையிடுகிறார்.

'**ஏ**', **பி**' இருவரும் ஒன்றாகச் செல்கின்றனர்; அவர்கள் காட்டில் காய், கனி மற்றும் உலர்கனிகளை உண்டு வாழ்வதோடு குருநாதரைத் தொடர்ந்து தியானம் செய்கின்றனர். ஒரு நாள் காட்டில், ஒரு புலி அவர்களை நெருங்கியபோது, '**ஏ**' அந்தப் புலியைப் பார்த்து குருநாதரின் பெயரை உச்சரித்த அடுத்த கணமே, புலி அவர்களை ஆசிர்வதிக்கும் குருநாதராக மாறி மறைகிறது. ஆசீர்வாதத்தைத் தொடர்ந்து, இளவரசர் ஒரு நினைவிழந்த நிலைக்குள் நுழைந்து முதல் ஐந்து ஆன்மீகத் தளங்களைக் கடந்து செல்கிறார்.

முதல் ஆன்மீகத் தளத்தில் இளவரசர் தனது பௌதீக உடலின் தொடர்பு துண்டிக்கப்பட்டு, தனியாக இருப்பதைக் காண்கிறார், மேலும் அவரது சூட்சும உடலின் மூலம் (ஒவ்வொரு வடிவத்திலும், விவரத்திலும் இது பௌதீக உடல் போன்றது, ஆனால் அது புகை போல் ஆவியாக வெளிப்பட்டது என்பதைத் தவிர) சூட்சும அனுபவத்தை அடையப் பெறுகிறார்; அவரது நுண்ணிய சூட்சும செவிகளில் இனிமையான மெல்லிசை, மனதை மயக்கும், சிலிர்ப்பூட்டும், நேர்த்தியான ராகங்களின் ஒலிகள், தாளமிடும் நீரோடைகளாகப் பாய்ந்தோடுகின்றன; அவர் அத்தகைய மெல்லிசையை கனவிலும் கண்டதில்லை. அவரது சூட்சும மூக்கு மிகவும் இனிமையான, புத்துயிரூட்டும் வாசனையை நுகர்கிறது, அவர் முற்றிலும் புத்துணர்ச்சியடைந்ததாக உணர்கிறார். அவரது சூட்சும கண்கள் வெவ்வேறு ஒளிரும் அதீத வண்ணங்கள் மற்றும் நிலையான ஒளியின் எண்ணற்ற சிறிய வட்டங்களையும், அவற்றில்

அவரது குருநாதரின் மாபெரும் உருவத்தையும் காண்கிறார். அவர் இப்போது தனது பௌதீக உடல் தன்னுடன் மீண்டும் இணைந்திருப்பதைக் காணும் அந்த கணத்தில், பௌதீக உணர்வு நிலைக்குத் திரும்புகிறார். ஆனால் சூட்சும அனுபவங்களின் பிரமாண்டமான மனப்பதிவுகள் அவரை ஒரு திகைப்பூட்டும் நிலையில் விட்டுவிடும் அளவுக்கு அவர் மீது தாக்கத்தை ஏற்படுத்தின.

முதல் ஆன்மீகத் தளத்தைப் போலவே இரண்டாவது ஆன்மீகத் தளத்திலும், இளவரசர் தனது பௌதீக உடலின் தொடர்பு துண்டிக்கப்பட்டு, தனியாக இருப்பதைக் காண்கிறார், மேலும் அவரது சூட்சும உடலின் மூலம், பல சூட்சும அனுபவங்களை அடையப் பெறுகிறார். நிலையான ஒளியின் எண்ணற்ற, சிறிய வட்டங்கள், சிதறிய ஒளியின் பெருந்திரளாக மாறுவதை அவர் காண்கிறார். அவர் தனது சூட்சும உடல் ஒளியின் சிதறிய பெருந்திரள் வழியாகப் பயணிப்பதை அனுபவிக்கிறார், அவர் தனது பயணத்தின் போது அந்த ஒளி அவருக்கு அருகிலும், அவருடனும் இருப்பதை உணர்கிறார். இவ்வாறு அவர் இந்தப் பரவசமான பயணத்தின் போது, விவரிக்க முடியாத சுகத்தை அனுபவிக்கிறார். சில நேரங்களில், அவர் தனது சூட்சும உடல், ஒளியில் இணைந்திருப்பதைக் காண்கிறார். அடர்த்தியான உடல் இல்லாத லட்சக்கணக்கான ஆவிகள் - நீராவி, புகை போன்ற வடிவங்கள் - மிக வேகமாக நகர்ந்து ஒவ்வொன்றையும் நோக்கி சைகைகள் செய்வதை அவர் காண்கிறார். அப்போது அவர் இந்த ஆவிகள் நடனமாடுவதையும் பார்க்கிறார். ஆவிகளின் இந்த நடனம் மிகவும் வித்தியாசமானது, அற்புதமானது, மிகவும் சிறப்பானது, அவர் முற்றிலும் வாயடைத்துப்போகும் அளவுக்கு அதிர்ச்சிக்குள்ளாகிறார். உலகில் நடக்கும் அனைத்து விஷயங்களைப் பற்றிய முழு அறிவையும் அவர் இப்போது தன்னுள்ளிருந்து அடையப் பெறுகிறார். அவரது சூட்சும புலன்கள் மூலம், அவர் இப்போது உளதாயிருப்பதையும், அவர் விரும்பும் போதெல்லாம் உலக விவகாரங்கள் அனைத்தையும் பார்க்கிறார். உலகின் ஒரு மூலையிலிருந்து, சூட்சும உலகில் தனது சூட்சும உடலில் பயணிக்கும்போது, உலகின் மறுமூலையில் என்ன நடக்கிறது என்பதையும் அவர் அறிகிறார்.

இறுதியில் அவர் தனது பௌதீக உடல் மீண்டும் தன்னுடன் இணைந்திருப்பதை உணர்ந்து, சாதாரண உணர்வு நிலைக்கு வந்து, பிற சாதாரண உணர்வு நிலையில் இருப்பவர்களுடன் இணைவதைக் காண்கிறார். இப்போது, இரண்டாவது ஆன்மீகத் தளத்தின் ஆழமான மனப்பதிவுகள், அருகில் இருக்கும் யார் ஒருவரின் மனதையும் அறிந்து கொள்வது போன்ற சக்திகளை அவருக்கு வழங்கியுள்ளது.

மூன்றாவது ஆன்மீகத் தளத்தில், அவர் மீண்டும் தனது பௌதீக உடலின் தொடர்பு துண்டிக்கப்பட்டு, தனியாக இருப்பதைக் காணும் அதே வேளையில், சிதறடிக்கப்பட்ட பெருந்திரளான ஒளியில் மூழ்கியிருப்பதையும், அவர் அந்த ஒளியின் ஒரு பகுதியாக இருப்பதையும் காண்கிறார். இப்போது இரண்டாவது ஆன்மீகத் தளத்தில் இருந்ததை விட பரவசம் மிகையாக உள்ளது. அவர்

இப்போது பிற மேல்நிலை ஆன்மாக்களின் லட்சக்கணக்கான ஆழ்மன உடல்களை நீராவி விதைகளின் வடிவில் காண்கிறார், மேலும் அவரது சூட்சும உடலால் அவர்களுக்கு அறிகுறிகள், சைகைகள் போன்றவற்றை உருவாக்கவும் அவற்றின் அறிகுறிகளைப் புரிந்துகொள்ளவும் முயற்சிக்கிறார். அவர் தனது சூட்சும புலன்கள் மூலம், விவரிக்க முடியாத மெய்சிலிர்க்கும் சுகத்தை உணர்கிறார்.

காலப்போக்கில், அவர் மீண்டும் தனது பௌதீக உடல் தன்னுடன் இணைந்திருப்பதைக் கண்டுகொண்டு, சாதாரண பௌதீக உணர்வுக்கு வருகிறார். மூன்றாவது ஆன்மீகத் தளத்தின் இயற்கைக்கு அப்பாற்பட்ட மனப்பதிவுகள், ஸ்பரிசம் அல்லது எண்ணம் அல்லது பார்வையால் குணப்படுத்தும் அற்புதங்களைப் புரியக்கூடிய ஆற்றல்களை அவருக்கு வழங்கியுள்ளன; இப்போது உலகில் தூரம் என்பது ஒரு பொருட்டே இல்லாமல் எந்தவொரு நபரின் மனதை அறியவும், மேலும் சூட்சும தளத்தில் நிலைகொண்டிருப்பவர்களின் மனங்களை அறியவும் முடியும்.

நான்காவது ஆன்மீகத் தளத்தில், இளவரசர் மீண்டும் தனது பௌதீக உடலின் தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்பதைக் காண்பதோடு, அவரது சூட்சும கண்களால் சிதறடிக்கப்பட்ட ஒளியின் வரம்பற்ற நிறை, நிலையான ஒளியின் ஒரு முழுமையான, பிரிக்கப்படாத கடலாக இருப்பதைக் காண்கிறார். அந்த ஒளிக் கடலின் மேற்பரப்பில் தனது சூட்சும உடல் பயணிப்பதை அவர் காண்கிறார். அவர் இதர ஆன்மாக்களின் எண்ணிலடங்கா சூட்சும உடல்களைப் பார்க்கும் அதே வேளையில், ஆழ்மன உடல் ஆன்மாக்களுடன் நேரடியாக தொடர்பு கொள்கிறார். பரவசம் இப்போது மேலதிகமான அளவில் தீவிரமடைந்துள்ளது.

அவரது பௌதீக உடல் அவருடன் மீண்டும் இணைக்கப்படும் போது, அவர் பிற பௌதீக உணர்வுள்ள ஆத்மாக்களின் நிலைக்குத் தள்ளப்படுகிறார், ஆனால் நான்காவது ஆன்மீகத் தளத்தின் இயற்கைக்கு அப்பாற்பட்ட நுட்பமான சூட்சும மனப்பதிவுகள் இப்போது அவருக்கு உயிர் துறந்தவர்களை உயிர்ப்பித்தல், கண்பார்வையற்றவர்களுக்கு கண்பார்வையை வழங்குதல் போன்ற இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளை வழங்கியுள்ளன; இன்னும் சொல்லப்போனால் தற்காலிக பௌதீக வடிவங்களை உருவாக்கும் சக்திகளையும் வழங்குகின்றன.

ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில், இளவரசர் தனது பௌதீக மற்றும் சூட்சும உடல்களை ஒதுக்கி வைத்து, அவரது ஆழ்மன (விதை போன்ற, ஆவி உருவில்) உடலையும் தனது அனுபவங்களின் ஊடகமாகக் கண்டுகொள்கிறார். நான்கு கீழ் நிலை ஆன்மீகத் தளங்களில், அவர் தனது பௌதீக உடலை ஒதுக்கி வைத்துவிட்டு, தனது சூட்சும உடல் ஒளியில் பயணிப்பதை அனுபவிக்கிறார். ஐந்தாவது ஆன்மீக மேல் நிலையில், அவர் தனது பௌதீக மற்றும் சூட்சும உடல்கள் இரண்டையும் ஒதுக்கி வைத்துவிட்டு, தனது ஆழ்மன உடலின் மூலம் அனைத்தையும் அனுபவிக்கிறார். அவர் இப்போது தனது ஆழ்மன உடல்

ஒளியின் கடலைக் கடந்து செல்வதையும், ஆழ்மன ஆன்மீக ஆவிகளின் அதே மட்டத்தில் வாழ்வதையும் காண்கிறார். அவர் அந்த ஆன்மீக ஆவிகளுடன் நேரடியாகத் தொடர்புகொள்வது மட்டுமின்றி, அவர்களுடன் இணைந்திருப்பதை உணர்கிறார். பரவசம் மிகவும் தீவிரமடைந்து இருப்பதோடு, அவர் தனது ஆழ்மன உருவில் தெய்வீக ஆனந்தத்தின் வழக்கமான ஓட்டத்தைக் காண்கிறார்.

மீண்டும், அவர் தனது பௌதீக மற்றும் சூட்சும உடல்கள் இரண்டையும் அடையப் பெறுகிறார், மேலும் ஐந்தாவது ஆன்மீகத் தளத்தின் நீடித்திருக்கும் மனப்பதிவுகள், அவருக்கு பௌதீக, சூட்சும மற்றும் ஆழ்மன உலகங்களின் அனைத்து விவகாரங்களையும் எண்ணங்களையும் அறியக்கூடிய சக்திகளை வழங்கியுள்ளன. ஆனால் நான்காவது ஆன்மீகத் தளத்திலிருந்து வெளியே வரும் வேளையில் அவர் தனது சக்திகளைப் பயன்படுத்துவதில்லை.

இறுதியாக, இளவரசர் '**ஏ**', அவரது மனைவி, '**பி**'யுடன் உயிரைத் துறக்கிறார்.

**ஐந்தாவது வாழ்க்கை பாகத்தின் பாத்திரங்கள்**:

**ஏ**: முன்னாள் இளவரசர் ஆன்மீகத் தலைவராக இருக்கும் மூத்த சகோதரராக மாறுகிறார்;

**பி**: இளவரசரின் முன்னாள் மனைவி இப்போது சகோதரராக '**ஏ**'யைப் பின்பற்றி வாழ்கிறார்.

**சி**: இளவரசரின் முன்னாள் அடிமை இப்போது சகோதரராக '**ஏ**'யைப் பின்பற்றி வாழ்கிறார்.

'**ஏ**', '**பி**', '**சி**' மூவரும் ஒரே குடும்பத்தில் பிறந்து இப்போது சகோதரர்கள், அமெரிக்காவில் வாழும் ஒரு பெரும் கோடீஸ்வரரின் மகன்கள். அவர்கள் அனைவரும் நன்கு படித்தவர்கள். மூவருக்கும் தலைவர் '**ஏ**'. அவர் ஆன்மீக சிந்தனை படைத்தவர், எப்பொழுதும் ஆன்மீக விஷயங்களையும், துறவிகள் மற்றும் குருநாதர்களின் வாழ்க்கையைப் படிப்பவர், மேலும் ஏழைகளுக்கு பெரும் நன்மை புரிபவர். அவருடைய இரண்டு சகோதரர்களும், ஆன்மீக எண்ணம் மிக்கவர்கள், எப்பொழுதும் அவருடைய விருப்பத்திற்குக் கீழ்ப்படிபவர்கள்.

ஒரு பரிபூரண குருநாதர் இந்தியாவிலிருந்து அமெரிக்கா வருகிறார். மக்கள் அவரால் வெகுவாக ஈர்க்கப்படுகிறார்கள். அவர்கள் அவரிடம் திரள் திரளாக வந்து, அவர்களில் பெரிய மாற்றத்தைக் காண்கிறார்கள். '**ஏ**', குருநாதரைப் பற்றி கேள்விப்பட்டு அவரைத் தேடுகிறார். '**ஏ**'யைப் பார்த்ததும் குருநாதர் மிகவும் மகிழ்ச்சியடைந்து, "**இதோ இறுதியாக இங்கே நான் விரும்பும் மனிதர்**!" என்றார்.

குருநாதர் '**ஏ**'யைத் தழுவி அவருக்கு 'ஒளியூட்டம்' (ILLUMINATION) வழங்குகிறார். அவர் ஆறாவது ஆன்மீகத் தளத்தை அனுபவிக்கிறார். அவர் தனது பௌதீக, சூட்சும, ஆழ்மன உடல்கள் பிரிக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறார், மேலும் அவரது ஆன்மீக உடலை

புரிந்துகொள்ள முடியாத ஒளி வெள்ளத்தில் ஒரு புள்ளியாகக் காண்கிறார். அவரது ஆன்மீக உடலுடன் (கண்கள், காதுகள் மற்றும் மூக்கு ஒன்றாக உள்ளது), அவர் உண்மையான ஒளியின் பெருங்கடலைக் (கடவுள்) காண்கிறார். அவரது பரவசம் இப்போது அதி உச்சத்தில் உள்ளது. அவர் தனது பௌதீக, சூட்சும மற்றும் ஆழ் மன உடல்களைத் திரும்பப் பெறுவதில்லை. இவ்வாறு இருப்பதால், அவர் உலகையும் அதன் விவகாரங்களையும் புறக்கணிக்கிறார். அவர் கடவுளைப் பற்றிய உணர்வுடன் மட்டுமே இருக்கிறார். அவரது பௌதீக, சூட்சும மற்றும் ஆழ் மன உடல்கள் அனைத்தும் ஆன்மீக நிலைப்பாட்டில் உள்வாங்கப்பட்டுள்ளன.

'**ஏ**' நான்கு நாட்கள் அதீத உணர்வு மற்றும் தெய்வீக மயக்க நிலையில் இருக்கிறார், பின்னர் அவர் பிரபஞ்சத்தின் உணர்வு நிலையை குறுகிய ஒளியூட்டத்துடன் மீண்டும் அடையப் பெறுகிறார். '**ஏ**' நிரந்தர மாற்றத்தை சந்தித்து, தனது இல்லத்திற்குச் செல்கிறார். அவருடைய பெற்றோர் மற்றும் பிறரால் அவரைப் புரிந்துகொள்ள முடியாமல், அவரை மனநிலை பாதிக்கப்பட்டவராக நினைக்கிறார்கள். ஆனால் அவரது சகோதரர்கள் அதைப் புரிந்துகொண்டு அனுதாபப்படுகிறார்கள். '**ஏ**' உண்பதும், உறங்குவதும் இல்லை, ஆனால் எந்நேரமும் மகிழ்ச்சியான தோற்றத்துடன் காணப்படுகிறார். அவரது பெற்றோர் அவருக்கு வேண்டிய சிகிச்சை அளிக்க மருத்துவர்களை அழைக்கின்றனர், ஆனால் '**ஏ**'யின் நிலையில் எந்த மாற்றமும் இல்லை.

ஒரு நாள் இரண்டு சகோதரர்களும் தங்கள் தந்தையிடம் கிழக்குப் பாகத்திலிருந்து வந்த குருநாதரைப் பற்றி விளக்கி, '**ஏ**'யை அவரிடம் அழைத்துச் செல்லுமாறு வேண்டினர். '**ஏ**' குருநாதரிடம் அழைத்துச் செல்லப்படுகிறார், குருநாதர் இரண்டாவது முறையாக அவரைத் தழுவி அவருக்கு தெய்வீக ஞானத்தை வழங்குகிறார் (ஏழாவது ஆன்மீகத் தளத்தின் உணர்வு நிலை). இங்கே, அவர் எல்லையற்ற ஒளியின் தெய்வீகப் பெருங்கடலுடன் ஒன்றாக இணைகிறார். அவர் இப்போது கடவுள் - எல்லையற்றவர். அவர் ஒரு பரிபூரண குருநாதராக மாறுகிறார்; அதே வேளையில் அவரது இரண்டு சகோதரர்களும் அவர் மீது அதீத பக்திமிக்க சீடர்களாக மாறுகின்றனர்.

# பிற்சேர்க்கை - 2: சொற்பொழிவுகள்

(**Appendix '2': Meher Baba's Discourses**)

**[இந்திய அரசியல் தலைவர்களுக்கு 1942ஆம் ஆண்டு வழங்கியது.]**

## தற்போதைய போரின் ஆன்மீக முக்கியத்துவம்

**தற்போதைய போரில் (இரண்டாம் உலகப்போர்) இரண்டு வகையான சக்திகள் செயல்படுகின்றன - முதலாவதாக, அன்பு, நீதி, நல்லிணக்கம் மற்றும் ஒட்டுமொத்த மனிதகுலத்தின் நல்வாழ்வை உருவாக்கும் சக்திகள்; இரண்டாவதாக, குறுகிய இன அல்லது தேசிய இணைப்புகளுடன் கூட்டணியில் இடம் பிடித்து, சுயநலத்திற்திற்காக பிறரை சுரண்டும் விதத்தில் பணிபுரியும் சக்திகள். இந்தப் போர், லட்சக்கணக்கான மக்களுக்குப் பெரும் அழிவையும், பேரிடரையும் கொண்டு வருகிறது. ஆனால் இவை அனைத்தும் வீண் போகாது. இந்தக் குழப்ப நிலையிலிருந்து சுதந்திரம், மகிழ்ச்சி மற்றும் புரிதலின் புதிய உலகம் உருவாகும்.**

**போர் பெரும்பாலும் ஓர் இலக்கை நோக்கி நிகழ்வது; ஒருபோதும் சிறந்ததொரு முடிவாக இருக்க முடியாது; ஆகவே, போர்த் தலைவர்கள் தங்கள் இதயங்களைத் தேடித் துருவி, அவர்கள் போராடும் நோக்கத்தின் விளைவு, தெய்வீகத் திட்டத்தின் பிரதிபலிப்பு என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம் - எனவே இனம், நிறம், வர்க்கம், தேசியம், மதம் அல்லது கொள்கை, கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையிலான வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், அனைத்து மனிதர்களின் ஒற்றுமையைக் கருத்தில் கொள்ளவேண்டும். போர்-முயற்சி நியாயப்படுத்தப்படுவதும் அல்லது கண்டிக்கப்படுவதும், அது உருவாக்கும் விளைவுகளால் அல்லாமல், அது தூண்டப்படும் இலக்கால் இருக்க வேண்டும். உலகம் இந்தப் போரை எதிர்கொண்டு, ஈடுசெய்ய முடியாத சேதம் மற்றும் மீட்க முடியாத துன்பத்தை விலையாகக் கொடுத்தாலும் கூட, அதன் நெருப்பாகிய தொல்லை மிகுந்த சோதனையைக் கடந்து செல்ல வேண்டும்; அது அவசியம் அனுபவித்தாக வேண்டிய தீமை.**

**போர் அதனளவில் கலப்பில்லாத தீமை என்று கூறமுடியாது, ஏனெனில், உடனடியாக எதிர்கொள்ளும் ஆபத்தின் அழுத்தத்தின் கீழ், அது வரம்புக்குட்பட்ட சுயத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல், சக உயிர்களின் பாதுகாப்பு, வளர்ச்சி போன்றவற்றைக் கருத்தில்கொண்டு, தியாகம், துன்பம் இரண்டையும் வரவேற்கும் தன்னலமற்ற மனப்பான்மையால் ஈர்க்கப்பட்ட செயல்களை முன்வைக்கும் சூழ்நிலையை உருவாக்குகிறது. இதுபோன்ற தன்னலமற்ற செயலை, ஆபத்தான சூழ்நிலையின் தூண்டுதலின் கீழ் வெளிப்படுத்துவது, ஒருபோதும் வெளிப்படுத்தாமல் இருப்பதை விட நல்லது.**

தனிமனித பாதுகாப்பு எனும் அவமானத்திற்குரிய செயலிலும், தனிமனித நல் வாழ்வு மற்றும் நலன்களை நிலைநிறுத்தும் இரக்கமற்ற முயற்சியிலும் நிரந்தரமாகத் தற்காத்துக் கொள்வதைவிட, ஒரு கூட்டுப் பேரிடரின் அழுத்தத்தின் கீழ், மானிடன் தமது அற்ப சுயத்தை மறந்துவிடுவது நல்லது. போர்-முயற்சி, ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த பல குணங்களை உருவாக்குவது மட்டுமின்றி, அவற்றைப் பேணிப் பாதுகாக்கிறது; எனவே அதை, தனிப்பட்ட முறையில் கருத்தில் கொண்டால் கூட, அதில் ஆன்மீக முக்கியத்துவம் முற்றிலும் இல்லாமல் இல்லை. மேலும், நன் மதிப்புகள் மற்றும் தன்னலமற்ற பொது நல்வாழ்வை கருத்தில்கொண்டு, ஒரு தேசம் அல்லது மக்கள் மீது போர்-முயற்சி கட்டாயப்படுத்தப்படும்போது, அது ஆன்மீக ரீதியில் பாதுகாக்கப்படக்கூடியது மட்டுமின்றி தவிர்க்க முடியாததாகவும் மாறும்.

கடமை உணர்வுடன் ஒன்றை எதிர்கொள்ளும் நோக்கத்தில் விடுக்கும் அழைப்பு, உறுதியாகவும் கட்டாயமாகவும் இருக்கும் போது, எந்தத் தியாகமும் துன்பமும் மிகையாகாது என்ற நம்பிக்கையில், போர் நிகழ்வுகளை மக்கள் தைரியத்துடனும், சமமான மனபலத்துடனும் எதிர்கொள்ள வேண்டும். ஒரு நேரடி மற்றும் வலிய தாக்குதல் ஏற்பட்டால், வேறு எந்த மாற்று வழியும் இல்லாத சூழ்நிலையில், போரில் நேரடியாக பங்கேற்பதன் மூலம், அதை எதிர்கொள்வது அனைவரின் உறுதியான கடமையாகும். ஆனால் அத்தகைய எதிர்ப்பை வழங்குவதில், அவர்கள் கடமை உணர்வால் மட்டுமே தூண்டப்படுகிறார்கள் என்பதையும், ஆன்மீக அறியாமையின் கீழ் செயல்படும் ஆக்கிரமிப்பாளர் மீது அவர்களுக்கு வெறுப்பு அல்லது மனக்கசப்பு இல்லை என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், வான், கடல், தரை வழியாக நிகழும் தாக்குதல்களில் ஏற்படும் உடல் மற்றும் மன துன்பங்களுக்கு அவர்கள் அலட்சியமாக இருக்கக்கூடாது. மாறாக, போரில் காயமடைந்த மற்றும் நம்பிக்கை இழந்தவர்களுக்கு, அவர்களின் தனிப்பட்ட திறன் மற்றும் இயற்கையான ஆற்றலுக்கு ஏற்ப, மக்களால் இயன்ற ஒவ்வொரு சேவையையும் வழங்க வேண்டும்.

ஒரு விதிமுறையாக, ஆன்மீக ஆர்வலர்கள் முற்றிலும் பொருள் சார்ந்த நல்வாழ்வில் அலட்சியமாக உள்ளனர். பெரும்பாலான போர்கள் முற்றிலும் பொருள் சார்ந்த காரணங்களால் நிகழ்கின்றன என்ற அடிப்படையில், அவர்கள் போர் மற்றும் போர் முயற்சியில் அலட்சியபோக்கைக் கடைப்பிடிக்கின்றனர். ஆனால் ஆன்மீகத்தை, பொருளுலக சிந்தனையிலிருந்து விலக்கி வைப்பது தவறு. பொருள் சார்ந்த கருத்தார்வம், ஆன்மீக அம்சத்தையும் முக்கியத்துவத்தையும் உள்ளடக்கியது. ஆன்மீக ஆர்வலர்கள் கூட, ஆன்மீக உள் வாழ்வின் அதீத உணர்வு நிலையில் மூழ்கி, குறிப்பாக அவர்கள் அதில் நேரடியாக ஈடுபடும்போது, போரைப்

புறக்கணிக்க முடியாது. ஆன்மீக ஆர்வலர்கள் அளவிறுதியற்ற ஆத்மாவின் உண்மை மற்றும் உறுதித்தன்மையின் மீது தங்கள் நிலைப்பாட்டை எடுக்கிறார்கள்; ஆகவே, உள்ளறிவு மற்றும் உள்ளுணர்வின் அடிப்படையில், கடமையின் நிமித்தம், அனைத்திலும் உரிமையுடன் ஈடுபடுவது என்பது, அவர்களுக்கு எளிதாக இருக்க வேண்டும்.

உண்மையைப் புரிந்து கொள்வதானால், அனைத்து மோதல்களும், போர்களும் தெய்வீக நாடகத்தின் ஓர் அங்கமாகப் பார்க்கப்படுகின்றன; பிரபஞ்ச சக்தியால் உருவாக்கி நிலைநிறுத்தப்படும் இருமைத்தன்மை மிக்க மாய உலகில், தெய்வீக சித்தத்தின் வெளிப்பாடாக மோதல்களும் போர்களும் நிகழ்கின்றன. தெய்வீக நாடகத்தில் மாயாவின் நோக்கம் இரண்டு வகையில் இருக்கும்: முதலாவதாக, ஆன்மாவை, மாயையின் பிரமைகளில் சிக்க வைப்பதற்கும், இரண்டாவதாக ஆன்மாவை, ஆன்மீக அறியாமை மற்றும் அடிமைத்தனத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கும் இது கருவியாக இருக்கும். மாயாவைப் புறக்கணிக்கக் கூடாது; அதை, பற்றற்ற தன்மை மற்றும் சரியான புரிதலுடன் கையாளவேண்டும். போர்கள் மாயாவின் கைவண்ணத்தில் உருவாகின்றன; அவை, பல்வேறு படைப்புகளை உள்ளடக்கிய மாய உலகின் மீதான பற்றுதல் அல்லது பற்றற்ற தன்மையைப் பொறுத்து, ஆன்மீக ரீதியில் பேரழிவு அல்லது மாறான விளைவுகளைக் கொண்டுவரும்.

அறுதியும் இறுதியுமான ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளின் ஆன்மீகக் கண்ணோட்டத்தில், அனைத்து ஆத்மாக்களும், அவற்றின் சாராம்சத்திலும், அடிப்படை நிலையிலும் ஒன்றே ஒன்றுதான். ஒருவருக்கொருவர் மோதிக்கொள்ளும் மக்களிடையே உண்மையான பிரிவினை அல்லது பிளவை போர் உருவாக்க முடியாது. போரில் ஈடுபடும் நாடுகளில் வாழும் மக்கள், வெவ்வேறு உடல்கள் மற்றும் மனங்களைக் கொண்டிருப்பதன் மூலம், ஒருவருக்கொருவர் வேறுபட்டதாகத் தோன்றுகிறது; ஆனால் அவர்களின் ஆன்மாக்களைப் பொறுத்தவரையில், அனைத்து வேறுபாடுகளும் இரண்டாம் தரமானது மட்டுமல்ல, தவறானவை. மோதல்கள், போர்கள் இருந்தபோதிலும் அனைத்து ஆத்மாக்களின் ஆன்மீக ஒற்றுமையும் ஒருமைப்பாடும் மீற முடியாததாக உள்ளது; அறுதியும் இறுதியுமான ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளின் பார்வையில், எந்த ஆத்மாவும் உண்மையில் வேறு எந்த ஆன்மாவுடன் மோதலிலும், போரிலும் ஈடுபடவில்லை என்பதுதான் உண்மை. வெவ்வேறு சித்தாந்தங்களில் போர் நிகழ்வது உண்டு; மேலும் இந்த சித்தாந்தப் போர் மக்களின் மனங்களை மட்டுமல்ல, உடல்களையும் உள்ளடக்கியது; ஆனால் பிரிக்கப்படாத மற்றும் பிரிக்க முடியாத ஆன்மா அதன் குற்றமற்ற மற்றும் ஒருங்கிணைந்த ஒற்றுமையில் ஒன்றாக உள்ளது.

ஆன்மீக ரீதியில் மேல்நிலையை எய்தியவர்கள், அனைத்து ஆன்மாக்களின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் உண்மையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; இறை நாடகத்தில் அவர்கள் வகிக்கும் பங்கு, அவர்களின் ஆன்மீகப் புரிதலின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. தெய்வீக சித்தத்திற்கு ஒத்துழைத்து, அவர்கள் தங்கள் கடமையை செய்கின்றனர்; மேலும், எல்லையற்ற ஏக இறைவனான உண்மைப்பொருளுக்கு இசைவாக இருப்பதால், அவர்கள் தங்கள் பங்கை ஆற்றுவதில், சுயநல ஆதாய சிந்தனைகளிலிருந்து விடுபட்டு இருப்பது மட்டுமின்றி, வெறுப்பு, தீங்கு அல்லது பழிவாங்கும் பிற்போக்கு உணர்வுகளிலிருந்தும் விடுபட்டு இருக்கிறார்கள்.

உலகப்பொருட்கள் மற்றும் உடைமைகளின் இழப்பு அல்லது அழிவு ஆகியவற்றால் ஆன்மா தீண்டப்படாமலும், காயமடையாமலும் உள்ளது; மேலும் மரணம் என்பது தொடர்ந்து வாழ்வதற்கான ஒரு நுழைவாயில் மட்டுமே. தெய்வீக நாடகத்தில் தத்தமது பங்கை வகிப்பவர்கள், எந்தத் துக்கங்களாலும் அல்லது இழப்புகளாலும் பாதிக்கப்படாமல் இருப்பார்கள்; மேலும் அவர்கள் தெய்வீக சித்தத்திற்கு அடிபணிந்து இருக்கும் மகிழ்ச்சியான, மனநிறைவான உணர்வை பிறருக்கு வழங்குவார்கள். போரால் விளையும் துன்பங்கள் பெரும்பாலான ஆன்மாக்களிடையே (மக்கள்) கசப்புணர்வை ஏற்படுத்தும்; அசைக்க முடியாத நம்பிக்கையையும், அழியாத இனிமையையும் அவர்களிடையே மீட்டெடுக்க உதவ வேண்டியது அவசியம். ஆன்மீக உள் வாழ்வில் அடியெடுத்து வைப்பவர்கள், தேவையற்ற இருள் மற்றும் மனச்சோர்வை அகற்றும் சுமையை சுமந்து, வேதனையில் வருந்துபவர்களை உற்சாகப்படுத்துவார்கள்.

சோதனைகளை சந்திக்கும் நேரத்தில், அனைவரின் சிந்தனையும், வரையறுக்கப்பட்ட 'நான்' எனும் சுயத்திற்காக அல்லாமல் பிறருக்காக - அகங்கார வாழ்க்கையின் உரிமையை கோருவதற்காக அல்லாமல், எல்லாவற்றிலும் சமமாக இருக்கும் தெய்வீக சுயத்தின் உரிமையை நிலைநாட்டுவதாக - இருக்கட்டும். மனித துன்பங்களை மாயையான பிரபஞ்சத்தின் ஒரு பகுதி என்று புறக்கணிப்பது தவறு. மனித துன்பங்களைப் புறக்கணிப்பதன் மூலம் அல்ல, ஆனால் அதைக் கையாளுவதன் மூலம் நித்திய வாழ்க்கைக்கான நுழைவாயில் திறக்கப்படுகிறது; மேலும், கடுமையான அலட்சியத்தால் அல்ல, ஆனால் செயல் மற்றும் தன்னலமற்ற சேவை மூலமாக, மாயையெனும் பிரபஞ்சத்தின் பக்கபலமாக அமைந்த அனைத்திற்கும் அப்பாற்பட்ட, வரம்பற்ற ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளை எய்த வழிவகுக்கிறது.

'பகுத்தறிவு' மற்றும் 'இறை அன்பு'க்கு ஆதரவாக நிற்பவர்களின் இறுதியான, இன்றியமையாத கடமை என்னவெனில், போரையும் போர் முயற்சியையும் சரியான கண்ணோட்டத்தில் பார்ப்பது ஒன்றுதான், அமைதி

மற்றும் சரியான புரிதலுக்கான இலக்காக இருக்கும். போரின் மூலம் அடைய விரும்பும் முடிவைத் தவிர்த்து, அதை நியாயப்படுத்த முடியாது. போரை உருவாக்கி, அதை ஊக்குவிக்கும் ஆன்மீகத் திறன்களாலும் நியாயப்படுத்த முடியாது; இந்தப் பண்புகளை அமைதியான காலங்களிலும் வளர்த்துக் கொள்ள முடியும். தன்னியல்பான மற்றும் தன்னலமற்ற செயல்களை விடுவிக்க ஆபத்தான காலத்தின் தூண்டுதல் தேவையில்லை, அன்பு மற்றும் சேவையின் தன்னிச்சையான உணர்வால் மனிதகுலம் உள்வாங்கப்படும் நேரம் இது.

கடினமாகத் தோன்றினாலும், மனிதகுலம் - பாதிக்கப்படாத ஆன்மீக நேர்மை மற்றும் நாணயத்துடன், தீமை அல்லது பழிவாங்கும் விஷம் இல்லாத இதயங்களுடன், வழங்கிய அல்லது வாங்கிய அடி, உதைகளின் தாக்கங்கள் அகற்றப்பட்ட மனங்களுடன், துன்பத்தால் துவண்டு போகாத மற்றும் புத்துணர்வால் நிரம்பிய ஆன்மாக்களுடன் - இந்தப் பயங்கரமான போரிலிருந்து வெளிவர வேண்டும். தெய்வீக விருப்பத்திற்கு நிபந்தனையற்ற முறையில் சரணடைவது, போருக்குப் பிறகு வாழும் மனிதகுலத்தை உற்சாகப்படுத்தி ஊக்கமளிக்கும். தீமைகள் விளைந்த போதிலும், இந்தப் போர், பூமியில் தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்றவும், 'உண்மைப்பொருள்' மற்றும் 'இறை அன்பு', 'தெய்வீக அமைதி' மற்றும் 'உலகளாவிய சகோதரத்துவம்', 'ஆன்மீகப் புரிதல்' மற்றும் 'எல்லையற்ற படைப்பாற்றல்' ஆகியவற்றின் எதிர்வரும் சகாப்தத்தை மனிதகுலம் சந்திக்கும் விதத்தில், எனது பணியில் அதன் பங்கை வகிக்கும்.

இந்தியாவை நேரடியாகவும் வெளிப்படையாகவும் பாதிக்கும் போரின் முடிவில், வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தல்களை அடையப் பெறுவதற்காக, என்னைப் பின்பற்றுபவர்களிடமிருந்து பல விசாரணைகள் வரும் இந்த நேரத்தில் - அன்பின் உணர்வுடன் தங்கள் வழக்கமான செயல்பாடுகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளை, பற்றற்ற தன்மை, தொண்டு மனப்பான்மை மற்றும் நம்பிக்கையுடன் செய்ய - சம்பந்தப்பட்ட அனைவரையும் அழைப்பதன் மூலம், அவரவர் சமூக சூழ்நிலையில் இருந்த வண்ணம், பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

<u>எனது சீடர்களுக்கு (மண்டலி)</u>:

1. அவர்கள் கட்சிகள் சார்ந்த அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும் மற்றும் பிறரைக் குறித்த தீய எண்ணமும், தீய நோக்கும் மனதில் கொள்ளக்கூடாது.
2. அன்றைய அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட குடிமக்களுக்கான போர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தையும் சீடர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.
3. சீடர்கள் வழக்கம் போலத் தங்கள் சிறப்புக் கடமைகளைச் செய்து, என்னுடைய ஆன்மீக நோக்கத்திற்காகப் பணியாற்ற வேண்டும்.

4. அவசரகாலச் சட்டங்களின் கீழ் வெளியேறுமாறு அரசாங்கத்தால் உத்தரவிடப்பட்டாலன்றி, எந்தவொரு கடினமான சூழ்நிலையிலும், சீடர்கள் இந்தியாவில் எங்கிருந்தாலும் தங்கள் பதவி மற்றும் நியமனங்களில் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும்.
5. அந்தத் திசையில் செயல்படும் எந்தக் கட்சி அல்லது அரசியல் அமைப்புடன் சீடர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளாமல், நான் விதித்த ஆன்மீகக் கடமைகளை நிறைவு செய்த பின்னர், எஞ்சியிருக்கும் நேரம் மற்றும் ஓய்வு என்ற வரம்பிற்குள், மதம் சார்பற்ற, மானிட சேவை மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளலாம்.
6. சீடர்களுக்குத் தொடர்பும், செல்வாக்கும் உள்ள பகுதியில் வாழும் மக்களின் மனதில் பீதியை விளைவிக்கும் நிலையை மட்டுப்படுத்தும் நோக்கில், அவர்களுக்கு ஆன்மீக ஆறுதலையும், தைரியத்தையும் வழங்க வேண்டும்.
7. அசாதாரணமான நிகழ்வுகள், விதிவிலக்கான சூழ்நிலைகள், வழக்கமான வாழ்க்கை நடைமுறையில் மறுசீரமைப்பு தேவைப்படும் சூழ்நிலைகள் அனைத்தும் எனக்குத் தெரிவிக்கப்படலாம்.

மெஹர் பாபா அவரது அன்பர்கள் மற்றும் பக்தர்களுக்கு பின்வரும் பரிந்துரைகளை வழங்கினார்:

ஏ. மேற்குறிப்பிட்ட வரிசையில் 1, 2, 3, 6 மற்றும் 7 இவர்களுக்கும் முழுமையாகப் பொருந்தும்.

பி. அவர்கள் தங்கள் குடும்பம் மற்றும் வணிகப் பிரச்சினைகளை சீர் செய்து, சூழ்நிலை மற்றும் உள்ளூர் நிலைமைகளின் அவசரத் தேவைக்கேற்ப, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம்.

சி. அவர்கள் மானிட சிந்தனையில் நிவாரணப் பணிகளில் ஈடுபடலாம், தேவைப்படின் அந்த வழியில் செயல்படும் எந்தவொரு கட்சி அல்லது அரசியல் அமைப்பிலும் இணையலாம்.

போரைப் பற்றி, மெஹர் பாபா தனது அன்பர்களுக்கு / பக்தர்களுக்கு வழங்கிய பொதுவான பரிந்துரைகள்:

1. அவர்கள் ஏ.ஆர்.பி.யில் (AIR RAID PRECAUTIONS COMMITTEE) இணையலாம்; மற்றும் அரசாங்கத்தின் ஊர்க்காவல் படை அமைப்புகள் (HOME GUARD ORGANISATIONS), ரெட் கிராஸ் ஆம்புலன்ஸ் சொஸைட்டி (RED CROSS AMBULANCE SOCIETY), 'லீக் ஆஃப் மெர்சி' (LEAGUE OF MERCY) போன்ற அதிகாரப்பூர்வமற்ற அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் மானிட சேவைகளில் ஈடுபடலாம்.
2. அவர்கள் தத்தமது குடும்ப விவகாரங்கள் மற்றும் வணிக பிரச்சனைகளை, அவசர சூழ்நிலைக்கு ஏற்ப, உள்ளூராட்சியின்

கட்டளைகளுக்கு முற்றிலும் இணங்கி, தேவையான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

3. அவர்கள் மானிட சேவை மற்றும் நிவாரணப் பணிகளை சுதந்திரமாகவோ அல்லது தங்கள் விருப்பப்படி, ஏதேனும் ஒரு பிரிவு அல்லது அரசியல் அமைப்போடு இணைந்து மேற்கொள்ள வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், எதிர்வரும் நெருக்கடியை அனைவரும் எதிர்கொள்ள வேண்டும், அது எவ்வளவு தான் வேதனையாகவும் கொடூரமாகவும் மாறினாலும், பொறுமை, துணிவு மற்றும் சுய தியாகத்துடன், தெய்வீக அன்பின் மூலமாக வழிநடத்தப்படும் மனிதகுலத்தின் இரட்சிப்பு, பெரும்பாலான மக்கள் நம்புவதை விட மிக அருகாமையில் உள்ளது என்ற உண்மையை ஒரு போதும் மறந்துவிடக்கூடாது.

## வன்முறையும் அறவழியும் (அகிம்சை)

(VIOLENCE AND NON-VIOLENCE)

மனிதன், ‘வசீகர வார்த்தை’களைத் தொற்றிக் கொண்டிருக்கும் போக்கைக் கடைப்பிடிப்பதால், உயிரோட்டம் மிக்க கருத்துடன் தனது செயலை நேரடியாகக் கொண்டு வராமல், அந்த வார்த்தைகள் அவனது செயலை, கிட்டத்தட்ட இயந்திரத்தனமாகத் தீர்மானிக்க அனுமதிக்கிறான். வார்த்தைகளுக்கு வாழ்வில் தனி இடமும் பயன்பாடும் உண்டு; ஆனால் செயல், புத்திசாலித்தனமாக இருக்க வேண்டுமானால், இந்த வார்த்தைகள் வெளிப்படுத்தும் அர்த்தத்தை கவனமாக ஆராய்ந்து, தீர்மானிக்க வேண்டியது அவசியம். இந்த வகையான ஆய்வு தேவைப்படும் வார்த்தைகளில், ‘வன்முறை’, ‘அறவழி’ போன்ற வார்த்தைகள் இன்றியமையாதவை. அவை குறிப்பிட்ட செயல்களை மட்டுமின்றி, வாழ்க்கையின் முழுக் காலத்தையும் வடிவமைக்கும் சித்தாந்தங்களின் மீது நேரடித் தாக்கத்தைக் கொண்டுள்ளன.

ஆன்மீக வாழ்க்கை என்பது, உணர்வுபூர்வமான விஷயமே தவிர, இந்த விதிமுறைகள், மிக உயர்ந்த மதிப்புகளைக் குறிக்கும் போது கூட, அவற்றுடன் இயந்திரத்தனமாக இணங்கிப் போவதாக இராது; இது அனைத்து வார்த்தைகள் அல்லது சூத்திரங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு புரிதலைக் குறிக்கிறது. அனைத்து வார்த்தைகளும் சூத்திரங்களும் ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளைக் கட்டுப்படுத்தும் போக்கைக் கொண்டுள்ளன: எனவே, இந்த சூத்திரங்களின் அடிப்படையிலான உள்ளுணர்வை வெளிக்கொணர விரும்புவோர், வடிவமைக்கப்பட்ட கொள்கைகளை ஆழமாகத் தேடித் துருவி, அவ்வப்போது, பகுப்பாய்வு செய்ய வேண்டும்; மேலும் வாழ்வின் உறுதியான எடுத்துக்காட்டுகளுடன் தொடர்ந்து தொடர்பைத் தக்கவைத்துக்கொள்வதன் மூலம் இந்தப் பகுப்பாய்வை துணைப்பொருளாக இணைக்க வேண்டும். ‘வன்முறை மற்றும்

அறவழி'யின் எதிர் கருத்துகளின் உதவியுடன் வடிவமைக்கப்பட்ட வாழ்க்கையின் வழிகாட்டும் கொள்கைகளைப் பொறுத்தவரை, இது குறிப்பாக உண்மை என்று கூறலாம்.

'வன்முறை', 'அறவழி' போன்ற வார்த்தைகள், நடைமுறை வாழ்க்கையில் இதுபோன்ற மாறுபட்ட சூழ்நிலைகளுக்குப் பொருந்தும் எனும்போது, இந்த மாறுபட்ட சூழ்நிலைகளில், அவற்றை ஆரம்பக் கருத்தாகப் பயன்படுத்தினாலொழிய, அதில் அடங்கிய சிக்கல்களின் எந்த விளக்கமும் முழுமையடையாது. இருப்பினும், இதை விளக்கி வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக, இந்த வார்த்தைகளால் உள்ளடக்கப்பட்ட அனைத்து சாத்தியமான வேறுபாடுகளையும் ஒன்றுவிடாமல் அலசி ஆராய வேண்டிய அவசியமில்லை: மிகவும் பிரதிநிதித்துவப் படுத்தும் விதத்தில் சில சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்வது போதுமானது. குறிப்பிடப்பட்ட பிரதிநிதித்துவ சூழ்நிலைகள், 'வன்முறை மற்றும் அறவழி'யின் கருத்துகளை மையமாகக் கொண்ட அடிப்படை மதிப்புகளை மிகையாக வெளிச்சமிட்டுக் காட்டும் திறன் காரணமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மெஹர் பாபாவின் செய்தி, மனித துன்பம் மற்றும் வன்முறையின் ஐந்து தொடர்ச்சியான சூழ்நிலைகளை விவரிக்கின்றன.

<u>நீரில் மூழ்கும் மனிதனுக்கு உதவும் முதல் சூழ்நிலை</u>:

நீச்சல் தெரியாத ஒருவன், ஏரியில் விழுந்து மூழ்குகிறான் என்று வைத்துக்கொள்வோம். மேலும் நீச்சலில் திறமையான மற்றும் நீரில் மூழ்காமல் அவரைக் காப்பாற்ற விரும்பும் மற்றொரு நபர் அருகில் இருக்கிறார். நீரில் மூழ்கும் மனிதனுக்கு உதவ வரும் நபரைத் தீவிரமாகப் பற்றிப் பிடிக்கும் போக்கு உள்ளது; மேலும் உதவும் நபரின் கைகளை ஏடாகூடமாக அந்த நேரத்தில் பற்றிக் கொள்வது, நீரில் மூழ்கும் மனிதனைக் காப்பாற்றுவதை சாத்தியமற்றதாக்குவது மட்டுமின்றி, உதவிக்காக வந்தவரை மேலும் நீரில் மூழ்கடிப்பதற்கு வழிவகுக்கும். நீரில் மூழ்கும் மனிதனைக் காப்பாற்ற விரும்பும் ஒருவர், அவருக்கு உதவத் தொடங்கும் முன்பு, தலையில் அறைந்து மயக்கமடையச் செய்ய வேண்டும். அத்தகைய சூழ்நிலையில் நீரில் மூழ்கும் மனிதனின் தலையில் அறைவதை வன்முறையாகவோ அல்லது அறவழியாகவோ (அகிம்சையாகவோ) பார்க்க முடியாது.

<u>நோய் மற்றும் அறுவை சிகிச்சையின் இரண்டாவது சூழ்நிலை</u>:

ஒரு மனிதன் ஏதேனும் தொற்று நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம்; அதை அறுவை சிகிச்சை மூலம் மட்டுமே குணப்படுத்த முடியும். இப்போது இந்த நோய்வாய்ப்பட்ட மனிதனைக் குணப்படுத்தவும், பிறரை இந்த நோய்த்தொற்று பாதிக்காமல் பாதுகாக்கவும், ஒரு அறுவை சிகிச்சை நிபுணர் தனது கத்தியைப் பயன்படுத்தி, அவரது

**உடலிலிருந்து பாதிக்கப்பட்ட பாகத்தை அகற்ற வேண்டும். இந்த உடலை கத்தியால் அறுவை சிகிச்சை செய்வது வன்முறையாகவோ அல்லது அறவழியாகவோ** (அகிம்சையாகவோ) **பார்க்க முடியாத விஷயங்களில் ஒன்றாகும்.**

**<u>ஆக்கிரமிப்பு நடத்தும் நாடு எதிர்கொள்ளும் மூன்றாவது சூழ்நிலை</u>:**

**ஆக்கிரமிப்பு நோக்கத்தில் ஒரு பலவீனமான தேசத்தை, சுயநல நோக்கங்களுக்காக ஆக்கிரமிக்கிறது என்றும், பலவீனமான தேசத்திற்கு உதவிக்கரங்களை வழங்கும் உன்னதமான ஆர்வத்தால் மட்டுமே ஈர்க்கப்பட்ட வேறு ஒரு நாடு, ஆயுதம் ஏந்திய இந்த ஆக்கிரமிப்பு படையெடுப்பை எதிர்க்கிறது என்றும் வைத்துக்கொள்வோம். பலவீனமான தேசத்தின் பாதுகாப்பிற்காக, இத்தகைய எதிர்ப்பை முன்னெடுத்து போராடுவதை வன்முறை அல்லது அறவழி** (அகிம்சை) **என்று பார்க்க முடியாது, ஆனால் 'அறவழியில் வன்முறை'** (NON-VIOLENT VIOLENCE) **என்று அழைக்கலாம்.**

**<u>பைத்தியம் பிடித்த வெறிநாயைக் கொல்லும் நான்காவது சூழ்நிலை</u>:**

**ஒரு வெறிநாய் ஓடிவந்து பள்ளி மாணவர்களைத் தாக்கக்கூடும் என்று வைத்துக்கொள்வோம், மேலும் இந்தப் பள்ளியின் ஆசிரியர்கள் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக, வெறிநாயைக் கொல்கிறார்கள். வெறிநாயைக் கொல்வது வன்முறையைக் குறித்தாலும், அதில் வெறுப்பு என்பது இல்லை.**

**<u>வலிமையான மனிதனால் வன்முறையை எதிர்க்கும் ஐந்தாவது சூழ்நிலை</u>:**

**உடல் வலிமையுடைய ஒருவனை, திமிர்பிடித்த, அதே வேளையில் பலவீனமான ஒருவன் எச்சிலைத் துப்பி அவமானப்படுத்துகிறான் என்று வைத்துக்கொள்வோம், மேலும் திமிர்பிடித்தவனை நசுக்கும் வல்லமை படைத்த வலிமையானவன், திமிர்பிடித்த மனிதனை காயப்படுத்தாமல் அமைதியாக அவனுக்கு அன்பின் நற்செய்தியை விளக்கும் பட்சத்தில், இந்தச் செயல் அறவழியைக்** (அகிம்சை) **குறிக்கும், ஆனால் இது வல்லமை படைத்தவர்களின் அறவழி** (அகிம்சை).

**இந்த சூழ்நிலைகளைக் குறித்து பாபா தொடர்ந்து கருத்துரைத்தார்:**

**குறிப்பிடப்பட்ட முதல் மூன்று சூழ்நிலைகள், 'வன்முறையைக் குறிக்கிறதா?' அல்லது 'அறவழியைக் குறிக்கிறதா?' என்ற கேள்வியை பல நுட்பமான பரிசீலனைகளுக்கு உட்படுத்தாமல் தீர்மானிக்க முடியாது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது: முதலாவது, சூழ்நிலை தொடர்பான பல்வேறு விவரங்களைப் பொறுத்தது; இரண்டாவது, செயலைத் தூண்டும் நோக்கத்தின் தன்மையைச் சார்ந்தது. கடைசி இரண்டு சூழ்நிலைகளைப் பொறுத்தவரை, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை வன்முறை அல்லது**

அறவழியைக் குறிக்கிறது என்று எளிதாகச் சொல்ல முடிந்தாலும், வன்முறை அல்லது அறவழியானது வேறு சில காரணிகளால் வகைப்படுத்தப்படலாம்; இது, இந்த வார்த்தைகளுடன் இணைக்கப்பட்டுள்ள சாதாரண அர்த்தத்தைக் கடந்து, மேலதிகமான அர்த்தத்தை வழங்குவதை வெளிப்படுத்துகிறது.

நீரில் மூழ்கும் மனிதனின் தலை மீது அறைந்தது குறித்த விரிவான பகுப்பாய்வு, (சூழ்நிலை ஒன்று) தாக்கப்பட்ட நபரின், முன் அனுமதியின்றி சக்தியைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது என்றாலும், அந்த சக்தி இறுதியில் உயிரைக் காப்பாற்றும் நோக்கத்துடன் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் காட்டுகிறது.

அந்த சூழ்நிலையில், அது யாருக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறதோ, அந்த மனிதனின் அனுமதியின்றி பலத்தைப் பிரயோகிப்பதும் அடங்கும்: இந்த அர்த்தத்தில், இது வன்முறையைக் குறிப்பதாகக் கூறலாம்: ஆனால் அந்த பலம், நீரில் மூழ்கும் மனிதனின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படுகிறது; அது மட்டுமல்ல, அவருக்குக் காயம் அல்லது தீங்கு விளைவிக்கும் எந்த ஆர்வமும் இல்லாத பட்சத்தில், இது வன்முறை வகையைச் சார்ந்ததாக இராது என்றும் கூறலாம். சிறப்புக் கண்ணோட்டத்தில், இந்த சூழ்நிலை முறையே, வன்முறை, அறவழி இரண்டையும் உள்ளடக்கியது என்று கூறலாம்; ஆனால் வார்த்தைகளின் சாதாரண அர்த்தத்தில், அதை வன்முறை அல்லது அறவழியின் சார்பாகப் பார்க்க முடியாது.

தொற்று நோயை அகற்றுவதற்கான அறுவை சிகிச்சையை குறித்த சூழ்நிலை இரண்டு, நீரில் மூழ்கும் மனிதனைப் பற்றிய சூழ்நிலையிலிருந்து சற்று வித்தியாசமானது. இங்கும் பலத்தின் பயன்பாடு உள்ளது (உடலின் பாதிக்கப்பட்ட பகுதியை அறுவை சிகிச்சை செய்வது); மற்றும் பலத்தைப் பயன்படுத்துவது யாருக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறதோ, அந்த நபரின் நன்மைக்காகவே உள்ளது: ஆனால் இதுபோன்ற உதாரணங்களில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அறுவை சிகிச்சையை நிறைவேற்றுவதற்குத் தேவையான சக்தியைப் பயன்படுத்துவதற்கு, நோயாளி தனது முன் ஒப்புதலை வழங்குகிறார். மேலும், இந்த அறுவை சிகிச்சையானது நோயின் மேலதிகமான அழிவிலிருந்து நோயாளியைப் பாதுகாப்பதற்காக மட்டுமின்றி, தொற்று பரவுவதிலிருந்து பிறரைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. நோயாளி மற்றும் அவருடன் தொடர்பு கொள்ளக்கூடிய பலருக்கு நன்மையாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தில், இங்கு சக்தி பயன்படுத்தப்படுகிறது. எந்த விதமான தீங்கு அல்லது காயமும் நோக்கமாக இல்லாததால், இந்த சூழ்நிலையில் சக்தியைப் பயன்படுத்துவது, சாதாரண அர்த்தத்தில் வன்முறையாகாது: மேலும் இது உடலின் ஒரு பாகத்தை அறுவை சிகிச்சை

செய்வது என்பது தெளிவாக இருப்பதால், போதுமான அளவில் அறவழி (அகிம்சை) என்றும் பார்க்க முடியாது.

ஓர் ஆக்கிரமிப்பு நாட்டிற்கு எதிராகப் போராடும் சூழ்நிலை (மூன்று) சுவாரஸ்யமாகவும், ஒன்றை அறிவுறுத்துவதாகவும் இருக்கும். இங்கு சுயநல நோக்கமோ அல்லது தனிப்பட்ட நலன்களோ இல்லாமல், பலவீனமான நாட்டைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், நாட்டின் ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பை வழங்குவதில் ஈடுபட்டுள்ள மோதல், ஆக்கிரமிக்கப்பட்ட தேசத்தின் மீது, அதிக காயத்தையும் அழிவையும் ஏற்படுத்தக்கூடும். மேலும் போர் பலத்தைப் பயன்படுத்துவது, அது பயன்படுத்தப்படும் ஆக்கிரமிப்பட்ட தேசத்தின் அனுமதியை முன்கூட்டியே அடையப் பெறாதது மட்டுமல்லாமல், அது நிச்சயமாக அதன் உணர்வுபூர்வமான விருப்பத்திற்கும் எதிரானது. ஆனால் இந்த சூழ்நிலையில் கூட, இதை வன்முறை என அடையாளப்படுத்துவதற்கு நம்மிடம் எந்தத் தெளிவான காரணியும் இல்லை, ஏனெனில் இதில் காயம் மற்றும் தீங்கு விளைந்தாலும், பலத்தைப் பயன்படுத்துவது பாதிக்கப்பட்ட பலவீனமான தேசத்தின் நன்மைக்காக மட்டுமல்ல, மிக முக்கியமான அர்த்தத்தில், ஆக்கிரமிப்பு தேசத்தின் நன்மைக்காகவும் கூட, ஏனெனில் அதன் ஆக்கிரமிப்பால் விளைந்த எதிர்ப்பின் மூலம், அதன் ஆன்மீக பலவீனம் அல்லது பலவீனமான நாடுகளை ஆக்கிரமித்து சுரண்டும் போக்கைக் கொண்ட நோயிலிருந்து படிப்படியாக அது குணப்படுத்தப்படுகிறது. இந்த ‘வன்முறை’, உண்மையில் வன்முறை அல்ல, எனவே இதை ‘அறவழியில் வன்முறை’ (NON-VIOLENT VIOLENCE) என்று அழைக்கிறோம்.

மெஹர் பாபா ஒரு தாக்குதல் ஆக்கிரமிப்பு நாட்டை மேற்கோள் காட்டிப் பேசினார்:

ஓர் ஆக்கிரமிப்பு நாட்டிற்கு எதிராக போராடும் சூழ்நிலையை, உண்மையில், பாதிக்கப்பட்ட உடல் பாகத்தை அறுவை சிகிச்சை செய்வதோடு ஒப்பிடலாம். ஆக்கிரமிப்பு தேசத்துடன் போராடும் விஷயத்தில், பலவீனமான தேசத்தின் நன்மை முதன்மையான விளைவாகத் தோன்றுகிறது, மேலும் ஆக்கிரமிப்பு தேசத்தின் நன்மை (அதற்கு எதிராகப் போராடும் வேளையில்) இரண்டாம் நிலை விளைவாகத் தோன்றுகிறது. அறுவை சிகிச்சையைப் பொறுத்தவரை, நோயாளியின் நன்மையைக் கருத்தில்கொண்டு (அவருக்கு எதிராக அறுவை சிகிச்சை என்றழைக்கப்படும் வன்முறை) செய்யப்படுவது முதன்மையான முடிவாகவும், பிற அனைவரின் நன்மை இரண்டாம் நிலை முடிவாகவும் தோன்றுகிறது. ஆனால் இதில் ஒரு சிறிய வேறுபாடு மட்டுமே உள்ளது; இரண்டு சூழ்நிலைகளையும் கவனமாக பகுப்பாய்வு செய்து ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவை இரண்டும் சமமாக வன்முறை சக்தியின் இலக்கின் நன்மையையும், அதே போல் அந்த சூழ்நிலையில் ஈடுபட்டுள்ள பலரையும் ஊக்குவிக்கின்றன.

பலவீனமானவர்களை பாதுகாப்பது தன்னலமற்ற சேவையின் ஒரு முக்கிய வடிவமாகவும், கர்ம யோகாவின் ஓர் அங்கமாகவும் பார்க்கப்படுகிறது; இந்த நோக்கத்திற்காக, தேவைப்படும் போது, வன்முறை சக்தியைப் பயன்படுத்துவது, விரும்பிய நோக்கத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு தவிர்க்க முடியாத கருவியாக நியாயப்படுத்தப்படுகிறது. ஆனால், பலவீனமானவர்களைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட வேண்டிய எந்த ஒரு முயற்சியும், எந்தவிதமான சுயநல நோக்கமும் வெறுப்பும் இல்லாமல், ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். இது, மோசமான நோக்கங்களுக்காக ஓர் ஆண்மகனால் தாக்கப்படும் ஒரு பெண்ணைப் பாதுகாத்து, பெண்ணின் மானத்தையும் உயிரையும் காப்பாற்றி, தாக்கும் மனிதனை தண்டித்து, வருந்தச் செய்யும் சம்பவத்தை ஒத்திருக்கிறது.

மெஹர் பாபா பின்னர் ஒரு வெறிநாயைக் கொன்ற நிகழ்வு மற்றும் வலிமையானவர்களின் அறவழிச் செயலைப் பற்றி கருத்துரைத்தார்:

வெறிநாயை அழிக்கும் சம்பவம் (நான்காவது சூழ்நிலை) நிச்சயமாக வன்முறையைக் குறிப்பதாகும், ஆனால் அது நியாயமானது, ஏனெனில் அதில் வெறுப்பு இல்லை, மேலும் இது வெறிநாயால் தாக்கப்படும் குழந்தைகளின் மிகச்சிறந்த நன்மையை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டது. பழிவாங்குவதற்கு பதிலாக உபதேசம் செய்யும் வலிமையான மனிதனைப் பொறுத்தவரை (ஐந்தாவது சூழ்நிலை) அந்த நிகழ்வு அறவழியைக் குறிக்கிறது, ஆனால் அது செயலற்ற தன்மையையோ அல்லது பலவீனத்தையோ குறிக்காமல், வலிமை மற்றும் பொதுமுறையான தன்மையின் உண்மையான, ஆக்கப்பூர்வமான நடவடிக்கை. இது வலிமைமிக்கவர்களின் அறவழி (அகிம்சை).

மேற்குறிப்பிட்ட பல்வேறு சூழ்நிலைகளின் விரிவான பகுப்பாய்வு மற்றும் அவற்றின் பரஸ்பர ஒப்பீட்டின் மூலம், வன்முறை அல்லது அறவழி தொடர்பான கேள்விகள், அவற்றின் நியாயம் அல்லது நியாயமற்ற தன்மை, உண்மையான மதிப்பு அல்லது மதிப்பின்மை ஆகியவற்றைக் கண்டறிவது என்பது, யார் ஒருவராலும், உலகளாவிய விதிமுறையை முறையாக எடுத்துரைத்து, அவற்றைத் தீர்மானிக்க முடியாது என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது.

அவை பல நுட்பமான ஆன்மீகச் சிக்கல்களையும் தாக்கங்களையும் உள்ளடக்கியது. ஆன்மீக நெறிகளின் திட்டத்தைப் பொறுத்தவரை, வன்முறை மற்றும் அறவழியின் நிலையைப் பற்றிய சரியான புரிதலுக்கு, வாழ்க்கையின் (உளதாயிருப்பதன்) நோக்கத்தின் அர்த்தத்தைப் பற்றிய உண்மையான கருத்து தேவைப்படுகிறது. எனவே, செயலானது, வெறும் வன்முறை அல்லது வெறும் அறவழி (அகிம்சை) என்ற முழுமையற்ற மற்றும் தேவைக்குக் குறைவான கருத்துகளின் அடிப்படையில், எந்த ஸ்லோகங்களாலும் (வசீகர வார்த்தைகள் - எவ்வளவுதான் ஓங்கி ஒலிப்பதாக

இருந்தாலும்) நிர்வகிக்கப்படக்கூடாது; இது தெய்வீக அன்பின் தன்னிச்சையான விளைவாக இருக்க வேண்டும், இது இருமை தன்மைக்கும் ஆன்மீகப் புரிதல் மற்றும் விதிமுறைகளுக்கும் மேலானது.

## இந்தியாவில் ஆக்கப்பூர்வமான தலைமைத்துவத்தின் தேவை:

முதிர்ச்சிவாய்ந்த கடந்த காலகட்டங்கள் முழுவதும், இந்தியா, மனிதகுலத்தின் ஆன்மீக வரலாற்றை வடிவமைப்பதில் மிக முக்கிய பங்கை வகித்துள்ளது. அது, அவதார புருஷர்கள், தீர்க்கதரிசிகள், குருநாதர்கள், சாதுக்கள் மற்றும் முனிவர்களின் இல்லமாக இருந்து வருகிறது; மனிதகுலத்தின் ஆன்மீகப் பரிணாம வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பு ஈடு இணையற்றது. விஞ்ஞானிகள், கவிஞர்கள், தத்துவஞானிகள், தலைவர்கள், பேரரசர்கள் மற்றும் முதல் தர அரசியல்வாதிகளை உருவாக்கியதால், உலகப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. கடந்த காலத்தில், இந்தியா ஆன்மீகம் மற்றும் சாதாரண உலக வாழ்க்கைத் துறைகளில் சிறந்து விளங்கியது: மேலும் போருக்குப் பின் தோன்றும் 'எதிர்கால புது உலகில்' அதன் இடம் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கும்.

இன்று இந்தியா எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகள், தீர்வுக்காக அழைக்கப்படும் வேறு எந்த நாட்டின் பிரச்சினைகளை விட, சில வழிகளில், மிகவும் சிக்கலானவையாக இருக்கும். அனைத்து இனங்கள், சமயங்கள், வழிபாட்டு முறைகள் மற்றும் மதங்களைச் சார்ந்த மக்கள், இந்தியாவை ஓர் இல்லமாக பாவித்துக்கொண்டனர்: மேலும் இந்தப் பன்முகத்தன்மையால், இந்தியாவின் தேசிய வாழ்க்கையில், ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைக்கு வருவதில் சில சிரமங்கள் இருந்தாலும், அதை எந்த வகையிலும் வெறும் முட்டுக்கட்டையாகப் பார்க்கக்கூடாது. இந்திய வாழ்க்கை வரலாற்றில் ஊற்றாகப் பெருகிவந்த கலாச்சாரத்தின் பல்வேறு நீரோடைகள், அவளது தேசிய ஆளுமையின் செல்வத்தை சேர்த்தன; மேலும் அவை ஒரு புதிய கலாச்சார தொகுப்புக்கு வழிவகுப்பதற்குப் பொருத்தமான வாய்ப்பை உருவாக்கியது மட்டுமின்றி, அது தழைத்தோங்கி வளர்வதை இன்றியமையா தேவையாக்கியது. ஆக்கப்பூர்வமான தலைமைத்துவத்துடன் கையாளப்பட்டால், இந்திய வாழ்வில், முரண்பட்ட கூறுகளை ஒன்றிணைத்து, ஒரு வளமான உலகக் கலாச்சாரத்தை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படலாம், இது இந்திய வாழ்க்கையைப் புதுப்பிக்கவும், ஒத்திசைவாக இருக்கவும் வழிவகுப்பது மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலக வாழ்க்கைக்கும் ஒரு புதிய பாணியை வழங்கும்.

புதிய உலகக் கலாச்சாரத்தை நாம் அடையப்பெறும் செயல்முறை முற்றிலும் இயந்திரத்தனமாக இருக்க முடியாது. கலாச்சாரத்தின் தற்போதைய பன்முகத்தன்மையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட,

தனிமைப்படுத்தப்பட்ட சில கூறுகளை ஒன்றாகக் குவிப்பதன் மூலம், நாம் ஒருபோதும் தீவிரமான உலகக் கலாச்சாரத்தை அடையப்பெற முடியாது; அந்த வழியில், நாம் குறுகிய ஒட்டு வேலைகளால் உருவாகும் உயிர் சக்தியை அடையப் பெறுவதில் மட்டுமே வெற்றி காண்போம்.

தாறுமாறான சிந்தனைகளின் தொகுப்பு, இறுதி இறை இலக்கின் நேரடி மற்றும் புதிய கருத்துக்கு ஒருபோதும் மாற்றாக இருக்க முடியாது. புதிய உலக-கலாச்சாரமானது, தற்போதைய மரபு வழிகளிலிருந்து விலகி, ஏக இறைவனான உண்மைப்பொருளின் ஒருங்கிணைந்த பார்வையிலிருந்து வெளிப்பட வேண்டும்; பாதுகாக்கப்பட்ட, உயர் மதிப்புகளிலிருந்து தேர்வு செய்து, தொகுப்பது போன்ற கடினமான செயல்முறையிலிருந்து அல்ல.

ஏக இறைவனான உண்மைப்பொருளின் ஒருங்கிணைந்த பார்வையிலிருந்து வெளிப்படும் புதிய உலக கலாச்சாரம், எவ்வாறாயினும், கலாச்சார ஒருங்கிணைப்பை தானாகவே கொண்டு வரும். புதிய உலக-கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் பார்வை, விரிவானதாக இருக்கும் என்பதால், அது பலதரப்பட்ட மரபுகளின் மதிப்புகளை நிராகரிக்காது அல்லது அவற்றிற்கு ஆதரவளிக்கும் சகிப்புத்தன்மையைக் கொண்டிருக்காது. மாறாக, பலதரப்பட்ட மதங்கள் மற்றும் கலாச்சாரங்களின் முக்கியமான அனைத்தையும் செயலில் பாராட்டுவதன் மூலம் வெளிப்படுத்தும். ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளின் பரந்த பார்வையை எந்த மதம், கோட்பாடு அல்லது பிரிவுகளால் வரையறுக்க முடியாது; இருப்பினும், தற்போதைய மதங்கள், கோட்பாடுகள் மற்றும் பிரிவுகளுக்கு எந்த மதிப்பையும் கண்மூடித்தனமாக மறுப்பதன் மூலம் அல்லாமல், அவற்றில் மறைந்திருக்கக்கூடிய உண்மைப்பொருளின் அம்சங்களைக் கண்டறிந்து, வலியுறுத்தி, விரிவுபடுத்தி, மேம்படுத்துவதன் மூலம் இந்த வரம்புகளைக் கடந்து செல்வதற்கு மனிதர்களுக்கு உதவுகிறது.

அளவிறுதியற்ற ஏக இறையான உண்மைப்பொருளை வெளிப்படுத்தும் ஓர் ஆழ்நிலை மற்றும் செயற்கை கலாச்சாரத்தை உருவாக்குவது இந்தியாவின் முன்னால் இருக்கும் ஒரு பணியாகும். குறிப்பிடத்தக்க தகுதியை அடையப் பெற்றுள்ள இந்தியாவின் அடுத்த பணி, பரஸ்பர புரிதல் மற்றும் நல்லிணக்கத்தை அடையப் பெறும் விதத்தில் பிற நாடுகளுக்கு உதவுவதாகும். இந்த இரண்டாவது பணியைப் பொறுத்தவரை, உலகின் பிற நாடுகளின் தலைவிதிகளுடன் இந்தியா நிறைவேற்ற வேண்டிய பணியைக் குறித்து, மூடி மறைக்கப்படாத கருத்தைக் கொண்டிருக்கும் ஆக்கபூர்வமான தலைமை தேவைப்படுகிறது.

இந்திய வெளியுறவுக் கொள்கையில், அது எந்த வகையிலும் நிற-பாரபட்சம் மற்றும் நிற-போராட்டத்திற்கு உடந்தையாக இருக்கக்கூடாது. கருப்பு, மஞ்சள் மற்றும் வெள்ளை ஆகியவை சருமத்தின் வேறுபாடுகள்; அவை ஆன்மாவின் உள்ளளவிலான வேறுபாடுகள் அல்ல. கடந்த கால

வரலாற்றின் மூலம், இந்தியா, கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு இடையே ஓர் இணைப்பாக இருந்து வருகிறது, மேலும் அதன் மூலம் இரு துருவங்களும் ஒருவருக்கொருவர் நெருக்கமாகிவிட்டனர்.

இந்திய தேசத்தின் ஆக்கப்பூர்வமான தலைமையின் முன்னால் உள்ள மூன்றாவது பணி, கடினமான சூழ்நிலையில் தள்ளப்பட்டாலும், அரசியல் ரீதியில் நிதானத்துடன் கூடிய நம்பிக்கைக்காகப் பாடுபடுவதுதான். அரசியல் ஆதிக்கத்திலிருந்தும், அந்நிய ஆக்கிரமிப்பு அல்லது எதிர்ப்பு குறித்த அச்சத்திலிருந்தும் விடுபடாத வரை, இந்தியா தனது முழுப் பங்களிப்பையும் உலகிற்கு வழங்க முடியாது. அனைத்து தேசங்களின் சகோதரித்துவத்தில் இந்தியா தமது பணியை நிறைவேற்ற வேண்டுமாயின், தமது சுய தேசிய வாழ்க்கையை வடிவமைக்கவும், பிற நாடுகளுக்கான தமது கொள்கையை தீர்மானிக்கவும் சுதந்திரமாக இருக்க வேண்டும். ஆனால் இந்த அடிப்படை தேவையை வலியுறுத்தும் அதே நேரத்தில், இந்திய அரசியல் சமநிலையை சீர்குலைக்க அனுமதிக்கக் கூடாது.

இந்திய தலைமை தேசிய சுதந்திரம் மற்றும் சுயநிர்ணய உரிமைக்காக பாடுபடுவது நியாயமானதாக இருந்தாலும், அது பிற்போக்குத்தனமான தனிமைவாதத்தால் தன்னைத் தானே சிதைக்க அனுமதிக்கக் கூடாது. அதேபோல், அயல் நாட்டு ஆக்கிரமிப்பை எதிர்க்கும் தெளிவான கடமையை நிறைவேற்றும் அதே வேளையில், இந்தியா, வெறுப்பு, தீமை அல்லது பழிவாங்கும் எண்ணங்களிலிருந்து விடுபட முயற்சிக்க வேண்டும்.

ஆக்கிரமிப்பு என்பது தக்க எதிர்ப்புடன் எதிர்கொள்ளப்பட வேண்டும்; இங்கு அறவழியை வலியுறுத்துவது நடைமுறைக்குப் புறம்பானது. இருமைத்தன்மையை முற்றிலும் கடந்து சென்று, அறுதியும் இறுதியுமான ஒரே உண்மைப்பொருளை உணர்ந்துகொள்ளும் தருவாயில், தூய அறவழி அல்லது தூய்மையான அன்பு தன்னியல்பாக வந்துசேரும்; கடுமையான ஒழுக்கத்தின் மூலம், அனைத்து வகையான பேராசை, வெறுப்பு போன்றவற்றை தங்கள் மனதிலிருந்து அகற்றிய மேம்பட்ட ஆத்மாக்களுக்கு மட்டுமே துணிச்சலான அறவழி சாத்தியமாகும். ஆனால் வெகுஜனங்களைப் பொறுத்த வரையில், தற்காப்புக்காகவோ அல்லது பிற பலவீனமான சகோதரர்களின் பாதுகாப்பிற்காகவோ, ஆக்கிரமிப்பை எதிர்ப்பது, அவர்களின் தெளிவான கடமையாக இருக்கும்போது, வெளியளவிலான அறவழியின் சூத்திரத்தைச் சார்ந்திருக்குமாறு அவர்களைக் கேட்பது விரும்பத்தகாதது. பக்குவமடையாத வெகுஜனங்களைப் பொறுத்தவரை, அறவழியின் மீதான உலகளாவிய வலியுறுத்தல், அவர்கள் கோழைத்தனமாகவும், பொறுப்பற்றவர்களாகவும், செயலற்றவர்களாகவும் இருக்க வழிவகுக்கும்.

உண்மையான அன்பு என்பது தைரியமற்ற, பலவீனமானவர்களின் விளையாட்டு அல்ல; அது வலிமை மற்றும் புரிதலின் நிமித்தம் பிறந்தது. ஆக்கிரமிப்பை எதிர்கொள்ளும் போது, சாதாரண மக்களைப் பொறுத்தவரை

அறவழியின் இலட்சியப் போக்கு, நடைமுறைக்கு சாத்தியமற்றது: மேலும் இது, பழி கூற இடம் வகுக்கும் நிலைமைகளை அடிமைத்தனமாக ஏற்றுக்கொள்வதற்கும், தெளிவான கடமையை வெறுமனே கைவிடுவதற்கும் ஒரு சூழ்ச்சியாக அந்தச் சிக்கலான நேரத்தில் பயன்படுத்தப்படும் போக்கைக் கொண்டிருக்கும். மிக உயர்ந்த இலட்சியத்திற்கான அதன் ஆர்வத்தில், புத்திசாலித்தனமான தலைமை எந்த வகையிலும், ஒப்பீட்டளவிலான நடைமுறை உணர்வை இழக்க முடியாது. மனித பரிணாமம் சுயநல வன்முறையிலிருந்து, தன்னலமற்ற வன்முறையை நோக்கி, படிப்படியான நிலைகளில் தொடர்கிறது, பின்பு துணிச்சலானவர்களின் அறவழியிலிருந்து தூய்மையான மற்றும் அழிவில்லாத அறவழியாக ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளின் அளவிறுதியற்ற அன்பாக முன்னேறுகிறது.

அனைத்து குறுகிய மனப்பான்மையும் அன்பைக் கட்டுப்படுத்துகின்றன. இந்தியாவிலும், உலகின் பிற பகுதிகளிலும், சாதி, நம்பிக்கைகள், இனம், தேசியம், மதம் அல்லது கலாச்சாரம் போன்ற மேலோட்டமான மற்றும் இறுதியில் தவறான வேறுபாடுகளின் அடிப்படையில், மனிதகுலம் குறுகிய குழுக்களாகப் பிரிகின்றது: இந்த குழுக்கள் நீண்ட காலமாக அந்த வழியில் பழகிப்போனதால், அவநம்பிக்கை மற்றும் பிரிந்துபோகும் அச்சத்தில் அவர்கள் ஒருவருக்கொருவர் அலட்சியம், அவமதிப்பு அல்லது விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். இவை அனைத்திற்கும் அறியாமை, தவறான எண்ண ஓட்டம், சுயநலம் இவையே காரணமாகும்: செயற்கையாக உருவான தனிமைவாதத்தைத் தகர்த்தெறியும் பரஸ்பர உணர்வை வளர்ப்பதன் மூலம் மட்டுமே அதை சீராக்க முடியும், மேலும் இது ஒட்டுமொத்த வாழ்க்கையின் மீறப்படாத ஒற்றுமையின் உணர்விலிருந்து அதன் வலிமையைப் பெறுகிறது.

ஆக்கப்பூர்வமான தலைமைத்துவம் (இந்திய மண்ணில் இதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளது) ஒட்டுமொத்த உலகிற்கான மாபெரும் தெய்வீகத் திட்டத்தில், தங்கள் இணைபிரியா கூட்டுறவால் மட்டுமல்ல, நல்லொழுக்கத்தாலும் அனைத்து மனிதர்களும் ஏற்கனவே ஒருவரோடொருவர் ஐக்கியமாகி உள்ளனர் என்ற உண்மையை உணர்ந்து வலியுறுத்த வேண்டும். அவை அனைத்தும் ஒரே வாழ்வின் வெளிப்பாடு ஆகும்.

இந்த ஏக இறைவன் எனும் ஆழமான உண்மைப்பொருளுடன் முழுமையாக இணங்கிப்போகும் வரை, எந்த நடவடிக்கையும் உண்மையில் உதவியாகவோ அல்லது பலனளிப்பதாகவோ இராது.

மனிதகுலத்தின் எதிர்காலம் இந்தப் பார்வை உள்ளவர்களின் கைகளில் உள்ளது.

# பிற்சேர்க்கை - 3: பிரார்த்தனைகள்

(**Appendix '3': Repentance & Master's Prayers**)

## மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனை (REPENTANCE PRAYER)

**இரக்கமிக்க இறைவா, எங்களது அனைத்து பாவங்களுக்காகவும், தவறான அல்லது நேர்மையற்ற அல்லது தூய்மையற்ற ஒவ்வோர் எண்ணத்திற்காகவும், பேசத்தகாத ஒவ்வொரு வார்த்தைக்காகவும், செய்யத்தகாத ஒவ்வொரு செயலுக்காகவும் நாங்கள் மனம் வருந்தி மன்னிப்புக் கோருகிறோம்.**

**சுயநலத்தால் தூண்டப்பட்ட ஒவ்வொரு சொல், செயல், சிந்தனைக்கும், வெறுப்பால் தூண்டப்பட்ட ஒவ்வொரு சொல், செயல், சிந்தனைக்கும் நாங்கள் மனம் வருந்தி மன்னிப்புக் கோருகிறோம்.**

**ஒவ்வொரு காம சிந்தனைக்கும், ஒவ்வொரு காமச் செயலுக்கும் குறிப்பாக நாங்கள் மிகவும் வருந்துகிறோம்; ஒவ்வொரு பொய்க்கும், அனைத்து பாசாங்குத்தனத்திற்கும்; வழங்கப்பட்ட ஆனால் நிறைவேற்றப்படாத ஒவ்வொரு வாக்குறுதிக்கும்; அனைத்து அவதூறு மற்றும் புறங்கூறல்களுக்கும் நாங்கள் மனம் வருந்தி மன்னிப்புக் கோருகிறோம்.**

**மிகவும் குறிப்பிடத்தக்க முறையில் பிறரை சீர்குலையச் செய்த ஒவ்வொரு செயலுக்காகவும்; பிறரை புண்படுத்திய ஒவ்வொரு சொல்லுக்கும் செயலுக்கும்; பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் ஒவ்வொரு விருப்பத்திற்காகவும் நாங்கள் மனம் வருந்தி மன்னிப்புக் கோருகிறோம்.**

**கடவுளே, நீர் உமது அளவிறுதியற்ற கருணையால், நாங்கள் செய்த அனைத்து பாவங்களையும் மன்னிக்க வேண்டுகிறோம். உமது சித்தத்தின்படி சிந்தித்து, பேசி, செயல்படுவதில் நாங்கள் தொடர்ந்து தவறிழைத்ததற்காக எங்களை மன்னிக்குமாறு வேண்டுகிறோம்.**

## இறை பிரார்த்தனை (MASTER’S PRAYER)

**எல்லாம் வல்ல இறைவனே - அனைத்தையும், அனைவரையும்**
**பேணி பாதுகாப்பவரே!**
**‘நீர்’ ஆதியும் அந்தமுமற்றவர், இருமைத்தன்மை இல்லாதவர்,**
**ஒப்பற்றவர், உம்மை எவராலும் அளவிட முடியாது.**
**‘நீர்’ நிறம், உருவம், உணர்ச்சி வெளிப்பாடு மற்றும் குணங்களற்றவர்.**
**‘நீர்’ அளவிறுதியற்றவர், ஆழங்காண முடியாதவர்,**
**கற்பனைக்கும் கருத்தாக்கத்திற்கும் அப்பாற்பட்டவர்;**
**என்றுமிருப்பவர், அழிவற்றவர்.**
**‘நீர்’ பிரிக்கமுடியாதவர்; ‘தெய்வீக விழி’யின்றி உம்மை**
**எவரும் காணமுடியாது.**
**‘நீர்’ என்றென்றும் உளதாயிருந்தீர், இருக்கிறீர், இருப்பீர்;**
**‘நீர்’ எங்கும் உள்ளீர்; எதிலும் உள்ளீர்; மேலும்**
**‘நீர்’ எங்கும், எல்லாவற்றிற்கும் அப்பாலும் உள்ளீர்.**
**‘நீர்’ வானிலும் பாதாளத்திலும் உளதாயிருக்கிறீர்;**
**‘நீர்’ வெளிப்பட்டும் வெளிப்படாமலும் அனைத்து**
**ஆன்மீகத் தளங்களிலும், அதற்கு அப்பாலும் உள்ளீர்.**
**‘நீர்’ மூவுலகிலும் உள்ளீர்; மூவுலகிற்கு அப்பாலும் உள்ளீர்;**
**‘நீர்’ பார்வைக்குப் புலப்படா நுண்பொருளாகவும்,**
**சுதந்திரமாகவும் உள்ளீர்.**
**‘நீர்’ ‘படைப்பாளர்’, ‘தேவதேவர்’, அனைவரின் மனங்களையும்**
**இதயங்களையும் ‘அறிந்தவர்’;**
**‘நீர்’ எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்தவர்.**
**‘நீர்’ ‘அகண்ட ஞானம்’, ‘அகண்ட சக்தி’, ‘அகண்டானந்தம்’.**
**‘நீர்’ ‘இறை ஞானத்தின் சமுத்திரம்’, அனைத்தும் அறிந்தவர், அகண்ட ஞானி;**
**கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் அனைத்தையும்**
**‘அறிந்தவர்’, ‘இறை ஞானமாகவும்’ இருப்பவர்.**
**‘நீர்’ தனிப்பெருங் கருணைக்கடல், என்றென்றும் வாரிவழங்கும் வள்ளல்.**
**‘நீர்’ ஆத்மாக்களின் ‘பரமாத்மா’; எல்லையற்ற பண்புகளை**
**உள்ளடக்கிய ‘ஏக இறைவன்’;**
**‘நீர்’ ‘உண்மைப்பொருள்’, ‘இறை ஞானம்’, ‘பேரின்பம்’**
**இவற்றின் ‘மும்மூர்த்தி’.**
**‘நீர்’ ‘உண்மைப்பொருளின் ஆதாரம்’; ‘இறை அன்பின் மகா சமுத்திரம்’;**
**‘நீர்’ ‘ஆதிகாலத்தவர்’, ‘உயர்ந்தவர்களில் உயர்ந்தவர்’;**
**‘நீர்’ ‘பிரபு’ மற்றும் ‘பரமேஷ்வர்’;**
**‘நீர்’ ‘கடவுளுக்கு அப்பாற்பட்டவர்’, மேலும்**

**‘அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட கடவுள்’;**
**‘நீர்’ ‘பரபிரம்மா’, ‘அல்லா’, ‘இலாஹி’, ‘யெஸ்தான்’, ‘அஹுரமஸ்தா’,**
**மேலும் ‘பிரியமான கடவுள்’.**
**‘நீர்’ ‘ஈஸாத்’ என்று அழைக்கப்படுகிறீர் -**
**‘போற்றி வணங்குவதற்கு உகந்தவர்’.**

# பிற்சேர்க்கை - 4: உயிர் துறந்தவர்கள்

**(Appendix '4': List of Departed Ones – 21st December, 1951)**

## காலமான 87 நபர்களின் பெயர்கள் பின்வருமாறு:

- **ஷெரியார்ஜி** (மெஹர் பாபாவின் தந்தையார், போபோ, BOBO)
- **புவாஸாஹேப்** - BUASAHEB (பெஹராம் எ.்ப். ஈரானி; முதல் சீடர் பெஹராம்ஜி)
- **டாக்டர் கனி** - GHANI (அப்துல் கனி முன்ஸி.்ப்)
- **சாஞ்சி** (.்பெராம்ரோஸ் எச். தாதாசாஞ்சி)
- **மாஸாஜி** (ருஸ்தம் மாஸா ஈரானி; பெண்டு மற்றும் நாஜாவின் தந்தையார்)
- **முன்ஷி ஸாஹேப்** (முன்ஷிஜி; முன்ஷி ரஹீம்)
- **நவல் தலாட்டி**
- **காக் ஸாஹேப்**
- **ஜாம்ஷெட் எஸ். ஈரானி** (மெஹர் பாபாவின் மூத்த சகோதரர்)
- **வால்டர் மெர்டென்ஸ்** – WALTER MERTENS (சுவிட்சர்லாந்து)
- **நெர்வஸ்** (கொடாதத் ஈரானி)
- **சம்பத் ஐயங்கார்** (சென்னை)
- **சுவாமிஜி** (சென்னை)
- **அர்ஜுன் ஸுப்பேக்கர்** (கஸ்பா பேட், மன்ஸில்-இ-மீம்)
- **கொண்டிராம்** (மன்சில்-இ-மீம்)
- **ஸையத் ஜமதார்** (கஸ்பா பேட், மன்ஸில்-இ-மீம்)
- **லட்டூஸ்** - LATTOOS (காய்குஷ்ரு கொடாதத் ஈரானி; மெஹர் பாபாவின் சிறுவயது நண்பர், பூனா)
- **.்பேரடூன் மாஸா** (.்பேரடூன் ஷெர்மர்ட் ஈரானி; மெஹர் பாபாவின் தாய்வழி மாமா; ஷிரீன்மாயின் சகோதரி டவ்லாவின் கணவர்)
- **கான்ஸாஹேப் காய்குஷ்ரு ஈரானி** (குல்மாயின் கணவர்)
- **பிஹாரிலால் ஜி. அகர்வால்** (1929இல் மெஹராபாத்தில் வாழ்ந்தார்)
- **காய்குஷ்ரு மாஸா** (ஸூனாமாசியின் கணவர், மும்பை)
- **குஞ்ச் பிஹாரி சௌபே** (ராய்ப்பூர்)
- **மானேக் ரஞ்சி** (நாசிக்)
- **சாது கிறிஸ்டியன் லீக்** – SADHU CHRISTIAN LEIK
- **நாதிர்ஷா பரூச்சா** – NADIRSHA BHARUCHA (1920களில் மெஹராபாத்தில் வாழ்ந்தவர்)
- **சிமன் சௌத்திரி** (மன்ஸில்-இ-மீமில் சமையல்காரர், கஸ்பா பேட்)

- **பார்ஸோப்** - BARSOAP (அப்துர் ரஹ்மான், மன்ஸில்-இ-மீம்)
- **தௌலத் பதிர்** – DAULAT PADIR (மெஹர் ஆசிரம மாணவர்)
- **லூயிஸ் ஹென்றி காக்ஸ் நெல்ம்ஸ்** (LOUIS HENRY COX NELMES)
- **காரெட் ஃபோர்ட்** (GARRETT FORT)
- **ஜம்பூ மாமா** (புவாஸாஹேபின் தாய்வழி மாமா, பூனா)
- **குயென்டின் டாட்** – QUENTIN TOD (இறப்பு 5 மே 1947)
- **ஸொராப்ஜி எம். தேசாய்** (ஸோமா தேசாய், நவ்ஸாரி)
- **அஜோபா** (கங்காராம் பவார்; அரங்காவ்ம் கிராமத்தைச் சேர்ந்த முதல் சீடர்)
- **அஹமது கான் கவாய்** (GAVAI, மன்ஸில்-இ-மீம்)
- **தெஹம்தன் தாதாசாஞ்சி** (நௌரோஜி தாதாசாஞ்சியின் மூத்த மகன்)
- **கொடாதத் காக்கா** (ஷெரியார்ஜியின் சகோதரர், ஈரான்)
- **ஷா** (ஷைர்) **கொடாதத்** (பாபாவின் உறவினர்; கொடாதத் காக்காவின் மகன்)
- **புலட் கொடாதத்** – PULAD KHODADAD (பாபாவின் உறவினர்; கொடாதத் காக்காவின் மகன்)
- **பபானந்த சுவாமி** (BHABANANDA)
- **நஸர்வான் கேரவாலா** (பானுமாசியின் கணவர்)
- **டாக்டர். கர்கல்** - KARKAL (ஆரம்பகால மெஹராபாத் மருத்துவர்)
- **ஜெனு சம்பர்** – GENU CHAMBHAR (பிரேம் ஆசிரம சிறுவன்)
- **ஜான்** (மெஹர் ஆசிரம கிறிஸ்தவ சிறுவன்; நவம்பர் 1967 பட்டியலில் ஜேம்ஸ் - டைட்டஸ் என திருத்தப்பட்டது)
- **ராம்நாத்** (பாபாவின் பால்ய நண்பர்)
- **பாலா ஸுப்பேக்கர்** (BALA, அர்ஜுன் ஸுப்பேக்கரின் சகோதரர்)
- **அலி அக்பர்** (பாரசீக பிரேம் ஆசிரம சிறுவன், புனைப்பெயர் மஜ்னுன்)
- **ஸொராப்ஜி வக்கீல்** (VAKIL, சூரத்)
- **ஃபேரடுன் ஆர். ஈரானி** (பைதூலின் மகன்)
- **பெஹராம் ஆர். ஈரானி** - BEHERAM (பைதூலின் மகன்)
- **ஹொர்மஸ்தியார் ஆர். ஈரானி** - HORMAZDIAR (பைதூலின் மகன்)
- **பாப்பு காண்டே** (BAPU GHANTE - பாப்பு பிராமின், பூனா, மன்ஸில்-இ-மீம்)
- **காஷிநாத்** (காஷியா; மன்ஸில்-இ-மீமில் சலவைக்காரர்)
- **லாலா பட்டான்** (PATHAN, ராஞ்சி, நாசிக், மெஹராபாத் ஆகிய இடங்களில் இரவு காவலாளி)
- **சிந்தாமன் ராவ்** (அஹமதுநகர்)
- **ஸோலி கொத்வால்** – SOLI KOTWAL (ஸவக் கொத்வாலின் சகோதரர்)

- **பெஹராம் எம். தேசாய்** - BEHERAM (மன்ஸாரியின் தந்தை; ஸோமா தேசாயின் சகோதரர், நவ்ஸாரி)
- **அர்தேஷிர் என். தேசாய்** (கேக்கி தேசாயின் தந்தை, டெல்லி)
- **மானேக்ஜி கன்ஃபெக்ஷனர்** – MANEKJI CONFECTIONER (காக்கா பாரியாவின் மைத்துனர்)
- **என். நாம்தார் தஸ்தூர்** – NAMDAR DASTUR (1920களின் பிற்பகுதியில் மெஹராபாத்தில் வாழ்ந்தவர்)
- **ருஸ்தம் தின்யார் ஈரானி** – RUSTOM DINYAR (கர்மான் மாசியின் கணவர், 1920களின் பிற்பகுதியில் மெஹராபாத்தில் வாழ்ந்தவர்)
- **பாவ்ஸாஹேப் மெஹந்தர்கே** (BHAUSAHEB MEHENDARGE, மெஹராபாத் பள்ளிக்கூட ஆசிரியர்; தத்து மெஹந்தர்கேயின் மாமா)
- **ரஷித் குஷ்ரூ ஈரானி** (ஜாஃப்ராபாத், ஈரான்)
- **ஜாம்ஷெட் பெஹராம் ஷிர்மெட்** - SHIRMED (பைதூலின் மாமனார்)
- **ஷெர்மர்ட் கோர்பண்ட் ஈரானி** – SHERMARD KHORBAND (ஈரானை சேர்ந்த பிரேம் ஆசிரம சிறுவன்)
- **ஸொராப் ஜஹாங்கீர் ஈரானி** (கோஹெரின் தந்தைவழி மாமா)
- **கான் பஹதூர் புதும்ஜி** – KHAN BAHADUR PUDUMJEE ((மும்பை)
- **பாலன்ஜி மோதிவாலா** – PALANJI MOTIWALA (பப்பா ஜெஸவாலாவின் ஜபல்பூரைச் சேர்ந்த பார்சி நண்பர்)
- **மோட்டாபவா கஜோடியா** (MOTABAVA KHAJOTIA, ஆதி கஜோடியாவின் தாத்தா; நாக்பூரின் ஜெஸவாலா குடும்ப நண்பர்)
- **நௌரோஜி ஆர். ஸட்டா** – NAOROJI R. SATHA (நஸர்வான் ஸட்டா மற்றும் கெய்மாய் ஜெஸவாலாவின் தந்தை)
- **மேர்வான் காய்குஷ்ரு ஈரானி**
- **கோல்வாட்வாலா** (GOLVADWALA, ஸொராப்ஜி ஈரானி; கோல்வாட்டைச் சேர்ந்த மாஸாஜியின் உறவினர்)
- **கோல்வாட்வாலாவின் மகன்**
- **துஞ்சிபாய் கேரவாலா** – DHUNJIBHOY KERAWALA (ஜால் கேரவாலாவின் தந்தை)
- **ஸக்கர்** (SAKKUR, பிரேம் ஆசிரமத்தில் பணிக்காரர்)
- **பெஹராம் ஈரானி & ருஸ்தம் ஸலேங்கி** (SALENGI, பாபாவின் பணியாளர்கள், எல்பின்ஸ்டோன் சாலை, மும்பை)
- **அர்தேஷிர் கொடாராம் ஈரானி** (மெஹர் ஆசிரம சிறுவன்)
- **மெஹர்வான் காய்குஷ்ரு ஈரானி**
- **ருஸ்தம் பி. ஈரானி** (போமன்ஜியின் சகோதரர், கராச்சி)

- **காய்குஷ்ரு ஐஸ்கிரீம்வாலா** (பாபாவின் சிறுவயதில் பூனா ஐஸ்கிரீம் கடையின் உரிமையாளர்)
- **ஹோர்முஸ்த் போமன் ஈரானி** – HORMUZD BOMAN (பீலாமாயின் கணவர், கராச்சி)
- **கஸம்** - KASAM (ராம்ஜூவின் மகன்; கால்-கை வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டு 1951 ஆகஸ்ட் 24 அன்று மூளை அறுவை சிகிச்சைக்கு இரண்டு நாட்களுக்குப் பின்பு காலமானார்)
- **ஃபேரடுன் ஈரானி** (டௌலா மொண்டியின் உறவினர் அல்லது மகன், பூனா)
- **ஓட்டோ பில்லோ** – OTTO BILLO (ஐரீனின் தந்தை, சுவிட்சர்லாந்து)
- **ருஸ்தம் ஜாம்ஷெட் ஈரானி** (பெய்லியின் சகோதரர்)
- **ஸொராப் ஷிர்ஸாத் ஈரானி** – SOHRAB SHIRZAD (ஸெயிலரின் சகோதரர்)
- **பெஜன்ஜி ராம்ஜி** – BEJANJI RAMJI (அல்லது **புர்ஜர் தேசாய்** - BURJOR; ஸோமா தேசாயின் நெருங்கிய நண்பர் அல்லது உறவினர், நவ்ஸாரி)

## காலமான 37 பெண்மணிகளின் பெயர்கள் பின்வருமாறு:

- **ஷிரீன்மாய்** (மெஹர் பாபாவின் தாயார், மெமோ, MEMO)
- **நான்னி கெய்லி** (NONNY GAYLEY)
- **நதின் டால்ஸ்டாய்** (NADINE TOLSTOY)
- **மேபெல் ரியான்** – MABEL RYAN (மார்கரெட் க்ராஸ்கேவின் நண்பர், லண்டன்)
- **டவ்லா மாசி எஃப். ஈரானி** (மெஹர் பாபாவின் பெரிய அன்னை)
- **பிரோஜா ஆர். ஈரானி** (பாபாவின் சித்தி; பெண்டு & நாஜாவின் தாயார்)
- **காக்குபாய் தேவ்ரூக்கர்** (விஷ்ணுவின் தாயார், பூனா)
- **நாஜா கோடாதத் ஈரானி** (ஸெயிலரின் மனைவி; அஹமதுநகர் சிவில் மருத்துவமனையில், சுமார் 1955-56இல் காலமானார்)
- **பச்சாமாய்** – BACHAMAI (நௌரோஜி தாதாசாஞ்சியின் மனைவி, மும்பை)
- **ஜிப்பூ** (JIBBOO) **இர்ஷாத் ஃபரூக்கி** (ராம்ஜூவின் மகள்; மார்ச் 15, 1951இல் காலமானார்)
- **ஃப்ரீனி மாசி என். டிரைவர்** (பாதிரியின் தாயார்)
- **யஷோதா காடேக்கர்** (GADEKAR - ராமச்சந்திர காடேக்கரின் முதல் மனைவி)
- **கம்லாபாய் டாக்கேஃபால்கர்** (டாக்கேயின் முதல் மனைவி)
- **ஜான்கி காளே** (காளே மாமாவின் மனைவி - மெஹராபாத்தில் 14 மார்ச் 1934இல் காலமானார்)
- **கிறிஸ்டின் மெக்நாட்டன்** – CHRISTIAN McNAUGHTON (யு.கே.)

- **ஷாந்தி** (ஷாந்தா, காக்கா ஷஹானேயின் மகள்)
- **கீதா எஸ். பாட்டீல்** (சதாஷிவ் பாட்டீலின் மனைவி, பூனா)
- **பானுபாய் எம். கன்ஃபெக்ஷனர்** - BANUBAI (காக்கா பாரியாவின் சகோதரி)
- **பானுபாய் லக்டவாலா** - LAKDAWALA (நர்கிஸ் கொத்வாலின் தந்தைவழி அத்தை, மும்பை - 19 ஜூலை 1949இல் காலமானார்)
- **குலு ஏ. ஈரானி** - GULU (ஆதி ஜூனியரின் முதல் மனைவி)
- **கோர்ஷெத்பானு பஸ்தாகியா** – KHORSHEDBANU PASTAKIA (கராச்சியில் பீலமாயின் பார்சி நண்பர்; ஆரம்பகாலத்தில் மெஹராபாத்தில் வசித்தார்)
- **பானு ஈரானி** - BANU (பைதூலின் மகள்)
- **ஸோஹ்ரா பிர்ஸாடே** (ZOHRA PIRZADE - ஸையத் ஸாஹேப்பின் மனைவி, நாசிக்)
- ஸையத் ஸாஹேப்பின் மகள்
- **அய்மாய் புர்ஜர் தஹிவாலா** – AIMAI BURJOR DAHIWALA (மஞ்ஸில்-இ-மீமில் அண்டை வீட்டார்)
- **தாக்குபாய்** (DHAKUBAI, அரன்காவ்ம்; தனது சொத்தை பாபாவிற்கு உயில் எழுதி வைத்தார்)
- **கொடாதத் சர்க்கிள்வாலாவின் மகள்** (பால் வியாபாரியின் மனைவி, மும்பை)
- **மெஹரா கொடாராம் ஈரானி** (நாசிக், ஸர்க்கிள் சினிமா உணவக உரிமையாளரின் மனைவி)
- **சி.டி. தேஷ்முக்கின் தாயார்** (நாக்பூர்)
- **ஷிரின்பாய் ஸொராப் ஈரானி** (மெஹராவின் தாய்வழி பாட்டி)
- **பிக்கைஜி என். ஹன்ஸோட்டியா** - BHIKAIJI (குஸ்தாஜியின் தாய்)
- **தொண்டிபாய்** (மெஹர் பாபாவின் ஆயா, அவர் குழந்தையாக இருந்தபோது)
- **சீதா** (அரங்காவ்ம் பணிப்பெண் மெஹராபாத்தில் சமையல் செய்தவர்)
- **ஹெலினா டேவி** – HELENA DAVY (கிட்டி டேவியின் தாயார், லண்டன்)
- **தினாமாய் ஸட்டா** (ஜெமி மாமா ஸட்டாவின் மனைவி; எரச்சின் சித்தி)
- ஷாந்தா (காஷியா, பணிக்காரரின் மனைவி))
- சுந்தர் பகாஜி (SUNDER BHAGAJI, மெஹராபாத்தில் பணியாளர்)

**1953 ஜூன் - மெஹர் பாபா பின்வரும் பதினாறு பெயர்களை ஆண்கள் பட்டியலிலும், ஒன்பது பெயர்களை பெண்கள் பட்டியலிலும் இணைத்தார்:**

**ஆண்கள்:**

- **டாக்டர். கே. தாருவாலா** (மெஹர் ஆசிரமத்தில் மருத்துவர்)
- **ஜாம்ஷெட் மேத்தா** (மகாத்மா காந்தியின் நண்பர், கராச்சி; ஆகஸ்ட் 1, 1952இல் காலமானார்)
- **சதாஷிவ் பாட்டீலின் மாமா** (பூனா)
- **ஜக்கா ஸேட் –** JAKA SETH (ராம்ஜூவின் மாமனார்)
- **ஜாம்ஷெட் ஈரானி** (ஒருவேளை பாபாவின் உறவினர்களில் ஒருவர்)
- **கொடாதத் மாஸா** (ஷிரீன்மாயின் மைத்துனர்; பானுமாசியின் கணவர்)
- **தின்ஷா மாமா** - DINSHAW (ஷிரீன்மாயின் சகோதரர்)
- **டக்டு ஸுப்பேகர்** - DAGDU (அர்ஜுனின் தந்தை, கஸ்பா பேட் )
- **ஜால் டி. கேரவாலா** (நாக்பூர்)
- **ஜஹாங்கீர் தமானியா** (நஸர்வான் மற்றும் கெய்மாயின் சகோதரி ஷிரினின் கணவர், அஹமதுநகர்)
- **ருஸ்தம் லிம்ஜிபாய் எலாவியா –** RUSTOM LIMJIBHAI ELAVIA (மும்பையிலிருந்து குஸ்தாஜியின் உறவினர்)
- **ஸொராப் மாவலி**
- **ரஷித் ஈரானி** (பாபாவின் உறவினர்; பானுமாசி & கொடாதாத் மாஸாவின் மகன்)
- **ஹோர்முஸ்டியார் பெஹராம் ஈரானி** (கொரம்ஷா, ஈரான்)
- **ஃபேரடூன் ஈரானி** (பெட்ரூ, புனைப்பெயர்)
- **பாபு** - (BABU, அண்ணா 104இன் மைத்துனர், அஹமதுநகர்)

**பெண்கள்:**

- **பிக்கைஜி தேசாய்** - BHIKAIJI (நவ்ஸாரி)
- **பாய்ஜிமாய் போமன் தேசாய்** (ஸோமா தேசாயின் சகோதரி, நவ்ஸாரி)
- **திருமதி அண்ணா ஜாக்கல்** (அண்ணா 104இன் மனைவி, அஹமதுநகர்)
- **ராவத் மாமி** (பாபாவின் அத்தை; ஷிரீன்மாயின் சகோதரர் தீன்ஷாவின் மனைவி)
- **சிங்குதாய்** (காளேமாமாவின் மகள், அஹமதுநகர்)
- **பில்லா ஸட்டா** (பிரோஜா ஸட்டா, ஹோமி மாமாவின் மனைவி, அஹமதுநகர்)
- **கோர்ஷெத்மாய் தமானியா** (புனைப்பெயர் ஃபுய்மாய் – தந்தை வழி அத்தை)
- **மைனா பாட்டீல்** (சதாஷிவ் பாட்டீலின் மகள்)
- **கஜாபாய் டோக்கே –** GAJABAI DOKEY (சதாஷிவ் பாட்டீலின் மாமியார்)

# பிற்சேர்க்கை - 5: 1958 - மர்டில் பீச் சகவாசத்தில் கலந்துகொண்டவர்கள்

**(APPENDIX '5' - PEOPLE WHO ATTENDED MYRTLE BEACH SAHAVAS – 1958)**

- **அடேர், மேரி** - (ADAIR, MARIE) நியூயார்க் நகரம்
- **அல் ஃபகிஹ், ஐடா** - லெபனான்
- **அல்வராடோ, ஹெலன்** - கலிஃபோர்னியா.
- **அல்வராடோ, ஹெர்மன்** - கலிஃபோர்னியா.
- **அல்வராடோ, மாக்டலேனா** - கலிஃபோர்னியா.
- **அல்வராடோ, ஸண்ட்ரா** - கலிஃபோர்னியா.
- **ஆண்ட்ரியானி, மேரி** - நியூயார்க்
- **பஹ்ஜெஜியன், ஐரோன்ஹி** - நியூயார்க் நகரம்
- **பேரன், ஆக்னஸ்** - (BARON, AGNES) ஓஹாய் (OJAI)
- **பார(ர்)னம்** (BARNUM- மகள்) **ஹெலன்** - வர்ஜீனியா
- **பா(ர்)னம்,** (மகள்) **டோரா ஜீன்** - வர்ஜீனியா
- **பா(ர்)னம், திருமதி. ஏ. ஜே. (டோரதி)** - வர்ஜீனியா
- **பாஸ், ஜான்** - நியூயார்க் நகரம்
- **பெலோட்** (BELOTE), **ஸ்பார்க்கி லூக்ஸ்** - வர்ஜீனியா
- **பென் ஷம்மாய், கேரி** (CARRIE) - இஸ்ரேல்
- **பெரி, ஃபுளோரின்** (BERRY, FLORINE) - ஃபுளோரிடா
- **பெவன், கிறிஸ்டோபெல்** (BEVAN, CHRISTOBEL)- மெக்ஸிகோ
- **பர்ட்** (BIRD), **ஜாய்ஸ் பி.** - இங்கிலாந்து
- **பிளேக்** (BLAKE), **ஜோஸஃப்** - தெற்கு கரோலினா
- **பூன்** (BOONE), **அமி ஏ.** - தெற்கு கரோலினா
- **பிராட்பரி, ஈடித்** (BRADBURY, EDITH) - நியூயார்க் நகரம்
- **ப்ரோக்மேயர், ஈவா எம்.** - (BROCKMEYER, EVA M. - ஈவியா ஸாலமனின் – EVEA SOLOMON - இரட்டை சகோதரி) - இந்தியானா
- **பிரையன், ஜிம்** (BRYAN, JIM) - ஃபுளோரிடா
- **டி புடே, கேமரொன்** (DE BUDAY CAMARON) - நியூயார்க் நகரம்
- **டி புடே, பியா** (PIA) - நியூயார்க் நகரம்
- **டி புடே, டானிட்** (TANIT) - நியூயார்க் நகரம்
- **கேம்பன், ஜீன்** (CAMPEN JEAN) - பாரிஸ்
- **கேம்பன், மார்வின்** - பாரிஸ்
- **கார்பெண்டர், சிப்** (CHIP) - மர்டில் பீச்
- **கார்பெண்டர், வர்ஜீனியா & 2 மகன்கள்** - மர்டில் பீச்

- **கார்வால்ஹோ, பெர்னி** (CARVALHO BERNIE) - வாஷிங்டன் டிசி
- **ஸெப்ரூன், ஜீன்** (CEBRUN, JEAN) - நியூயார்க் நகரம்
- **சேஸ், ரூத்** (CHACE, RUTH) - கலிஃபோர்னியா.
- **சேம்பர்லைன், ஜேம்ஸ் அலன்** - ஹூஸ்டன்
- **கிளார்க், ஜான்** - ஃபுளோரிடா
- **கோட்ஸ், எய்லீன்** (COATES EILEEN) - மர்டில் பீச்
- **கோஹென், ஸாம்** - நியூயார்க் நகரம்
- **கோர்ஃப், எனிட்** - நியூயார்க் நகரம்
- **கோரிநெட், சார்மியன்** (CORRINET CHARMIAN) - நியூயார்க் நகரம்
- **காக்ஸ், ஜானிஸ்** - வடக்கு கரோலினா (எய்லீன் கோட்ஸின் மகள் - **2** நாட்கள் மட்டுமே)
- **க்ராஸ்கே, மார்கரெட்** - நியூயார்க் நகரம்
- **டாமன், கேத்ரின்** (DAMON CATHRYN) - நியூயார்க் நகரம்
- **டேவி, கிட்டி** - மர்டில் பீச்
- **டிப்லாஸியோ, தெரேஸா** (DeBLASIO THERESA) - நியூயார்க் நகரம்
- **டிக்ரே, ஜூலியன்** (DeGRAY JULIAN) - நியூயார்க் நகரம்
- **டிலாவிக்னே லாரா** (DeLAVIGNE, LAURA) - மர்டில் பீச்
- **டிலாவிக்னே, லீ** - மர்டில் பீச்
- **டிலாங், ஹில்டா** (DeLONG HILDA)- ஃபுளோரிடா
- **டிலாங், லேலண்ட்** (LELAND)- ஃபுளோரிடா
- **டிலாங், ஸில்வியா** - ஃபுளோரிடா
- **டிம்ப்ஃபில், கிளாடியா** (DIMPFL CLAUDIA) - கலிஃபோர்னியா
- **டிம்ப்ஃபில், டயான்** (DIANE) - கலிஃபோர்னியா
- **டிம்ப்ஃபில், ஜோன்** (JOAN) - கலிஃபோர்னியா
- **டிம்ப்ஃபில், லுட்** (LUD) - கலிஃபோர்னியா.
- **டொனால்ட்ஸன், எல்சி** - நியூயார்க் நகரம் (நடனக் கலைஞர், மார்கரெட்டின் நண்பர்)
- **டிரேக், டாஃப்னே** - ஓஹியோ (எலிஸபெத்தின் மருமகள்)
- **டியூஸ், ஐவி** (IVY DUCE) - கலிஃபோர்னியா
- **டுஃப்ரென், ஸ்டெல்லா** (DuFRESNE) - நியூயார்க் நகரம்
- **ஈட்டன், பிலி** - நியூயார்க் நகரம்
- **ஈட்டன், ஃபிராங்க் ஜூனியர்** - மர்டில் பீச்
- **எல்ஸ்வொர்த், திரு. & திருமதி. கென்னத்**
- **ஃபேபியன், ஜோ** (FABIAN JOE) - நியூயார்க் நகரம் (மார்கரெட்டின் நடனக் கலைஞர்களில் ஒருவர்)
- **ஃபார்பர், வயோலா** (FARBER VIOLA)- நியூயார்க் நகரம்

- **ஃபெரென்ஸ், ஸ்டெல்லா** - நியூயார்க் நகரம்
- **ஃபீல்ட், டானா** (DANA, FIELD)- கலிஃபோர்னியா
- **ஃபிஷர், ஃபே** (FISHER, FAYE)- நியூயார்க் நகரம்
- **ஃப்ளோர்ஷெய்ம், ஹாரி** (FLORESHEIM HARRY)- நியூயார்க் நகரம்
- **ஃப்ளோர்ஷெய்ம், மேரியன்** (MARION) - நியூயார்க் நகரம்
- ஃபுட், டோரோதியா (FOOTE, DOROTHEA)- வாஷிங்டன் டிசி
- ஃபுட், நெட் (NED)- வாஷிங்டன் டிசி
- **ஃபிரடெரிக், ஃபிலிஸ்** - நியூயார்க் நகரம்
- **ஃப்ரீஸ், கிளாரா** - நியூயார்க் நகரம்
- **ஃப்ரே, கரோலின்** (FRAY)- கலிஃபோர்னியா
- **ஃப்ரே, ஃப்ரெட் ஜூனியர்** - கலிஃபோர்னியா
- **ஃப்ரே, மால்கம்** - கலிஃபோர்னியா
- **ஃப்ரே, தாரா** (TARA) - கலிஃபோர்னியா
- **ஃப்ரே, டோரி ஆன்** (TORY ANN) - கலிஃபோர்னியா
- **கெய்ன்ஸ், ஸில்வியா** (GAINES, SYLVIA) - நியூயார்க் நகரம்
- **கேலர், ரிச்சர்ட் எ.ஃப்.** (GALOR) - மேரிலாந்து
- **கார்பேட், ரோஸ்** (GARBADE ROSE) - நியூயார்க் நகரம்
- **கின்ஸ்பர்க், எய்ன்** (GINSBERG ANNE) - நியூயார்க் நகரம்
- **குளூர், டெய்ட்ரே** (GLOOR DEIRDRE) - நியூயார்க்
- **குளூர், வர்ஜீனியா** - நியூயார்க்
- **கிரஹாம், ஜெஸ்ஸி** - மர்டில் பீச்
- **கிரஹாம், கேத்ரின்** - ஃபுளோரிடா
- **கிரேயர், ஈவ்லின்** - நியூயார்க்
- **கிரிகோயர், மிரியம்** (GREGOIRE MIRIAN) - நியூயார்க் நகரம்
- **ஹார்ப், ஜோஸஃப்** (HARB JOSEPH) - கலிஃபோர்னியா
- **ஹார்ப், காரி** (KARI) - கலிஃபோர்னியா
- **ஹார்ட், டெலோரஸ்** (HARD DELORES) - தெற்கு கரோலினா
- **ஹார்ட்ஷோர்ன், ஹாரி** (HARTSHORNE, HARRY) - விஸ்கான்ஸின்
- ஹாஸன், ஸெல்மா (HASSEN, SELMA) - ஓக்லஹோமா
- **ஹேமன், பென்** (HAYMAN BEN) - டெக்ஸாஸ்
- **ஹெய்ன்ஸ், சார்லஸ்** (HAYNES)- மர்டில் பீச்
- **ஹெய்ன்ஸ், ஜேன்** - மர்டில் பீச்
- **ஹெய்ன்ஸ், ஜான்** - மர்டில் பீச்
- **ஹெய்ன்ஸ், வெண்டி** - மர்டில் பீச்
- **ஹீலி, வாரன்** (HEALEY, WARREN)- ஸியாட்டில்
- **ஹென்ட்ரிக்ஸன், மார்கரெட்** - நியூயார்க் நகரம்

- **ஹெர்னாண்டஸ், பாப்** (HERNANDEZ, BOB) - ஃபுளோரிடா
- **ஹெர்னாண்டஸ், லிபி** - ஃபுளோரிடா
- **ஹெர்னாண்டஸ், ரால்ஃப்** - ஃபுளோரிடா
- **ஹெர்னாண்டஸ், ரிக்கி** - ஃபுளோரிடா
- **ஹெர்னாண்டஸ், ஸ்டெல்லா** - ஃபுளோரிடா
- **ஹைடவர், டெக்ஸ்** - நியூயார்க் நகரம்
- **ஹூஸ்டன், முரியல்** - மிர்டில் பீச்
- **ஹட்சின்ஸ், டாக்டர். அர்னால்ட் & திருமதி. வயலட்** - வடக்கு கரோலினா
- **இனாபினெட் மார்குரைட்** (INABINETT MARGUERITE) - தெற்கு கரோலினா
- **ஐவரி, பெர்னிஸ்** - (BERNICE) நியூயார்க் நகரம்
- **ஜான்ஸன், ஆல்ஃப்** - மேரிலாந்து
- **ஜான்ஸன், வெர்னா** - மேரிலாந்து
- **கர்ராஷ், அன்னரோஸா** (KARRASCH ANNAROSA) - நியூயார்க் நகரம்
- **கர்ராஷ், லாரி** - நியூயார்க் நகரம்
- **கஷௌட்டி, ஹென்றி** (KASHOUTY HENRY) - வர்ஜீனியா
- **கஷௌட்டி, கெச்சா** - வர்ஜீனியா
- **கெல்லி, பன்டி** (KELLY, BUNTY) - நியூயார்க் நகரம்
- **கென்மோர், ஹாரி** (KENMORE, HARRY) - நியூயார்க் நகரம்
- **கென்யான், திருமதி. டெடி** - கனெக்டிக்கட்.
- **கில்லியன், ஹில்டா** - வாஷிங்டன் டிசி
- **கோஹனோவ், ஆன்** (KOHANOW ANN) - நியூயார்க் நகரம்
- **கோஹனோவ், மைக்கேல்** - நியூயார்க் நகரம்
- **கிராமர், திருமதி. எம்.** (KRAMER) - நியூயார்க் நகரம்
- **குஸ்ஸெவிச், மார்கோ** (KUSSEVICH, MARKO)- நியூயார்க் நகரம்
- **குஸ்செவிச், ஸ்டெல்லா** - நியூயார்க் நகரம்
- **கைல், மில்ட்ரெட்** (KYLE MILDRED) - ஃபுளோரிடா
- **லாமொர், எம்மா** (LAMOUR EMMA) - நியூயார்க் நகரம்
- **லேன், ஜோஸப்** - வாஷிங்டன் டிசி
- **லாட்டன், டான்** (LAWTON, DAWN) - வேல்ஸ்
- **லாட்டன், ஜான்** - வேல்ஸ்
- **லெவி, டோரதி** (LEVY) - நியூயார்க் நகரம்
- **லாக், கிளாடிஸ்** (LOCKE, GLADYS) - தெற்கு கரோலினா
- **லோஃப்டஸ், மைக்** (LOFTUS, MIKE) - மேரிலாந்து
- **லாங், லோயிஸ்** (LONG, LOIS) - தெற்கு கரோலினா
- **மெக்டொனால்ட், டாஃப்னே** (DAPHNE) - கலிஃபோர்னியா

- **மஹ்லர், டொனால்ட்** (MAHLER) - நியூயார்க் நகரம்
- **மஹோன், பார்பரா** (MAHON) - வடக்கு கரோலினா
- **மார்க்ஸ், ஃப்ரெட்** - லண்டன்
- **மார்ட்டின், ஸாடி** (SADIE) - மர்டில் பீச்
- **மௌகம், ஒலிவியா** (MAUGHAM, OLIVIA) - நியூயார்க் நகரம்
- மேஸ், சிந்தியா (MAYS, CYNTHIA) - நியூயார்க் நகரம்
- மெக்லீன், லாரன் (McLEAN)- ஃபுளோரிடா
- மெஹ்தி, எட்டா (MEHDY, ETTA) - கலிஃபோர்னியா
- **மீஸன்ஹைமர், லெனோரா** (MEISENHEIMER, LENORA) - மர்டில் பீச்
- **மெர்டென்ஸ், ஹெடி** (MERTENS, HEDI) - சுவிட்சர்லாந்து
- **மில்லர், மேரி ஜேன்** - ஃபுளோரிடா
- **முயிர், ஆண்டி** (MUIR, ANDY)- வாஷிங்டன் டிசி
- **முயிர், பெக்கி** (PEGGY)- வாஷிங்டன் டிசி
- **முங்கோ, எம்மா** (MUNGO, EMMA) - தெற்கு கரோலினா
- **நெல்ஸன், ஹெலன்** - நியூயார்க் நகரம்
- **நெவின்ஸ், ஜீப்ரா** - நியூயார்க் நகரம்
- **நிக்கோல்ஸ், மார்த்தா** - நியூயார்க் நகரம்
- **பாரி, மேரி** (PARRY, MARY) - இங்கிலாந்து
- **பேட்டர்ஸன், எலிஸபெத்** (PATTERSON, ELIZABETH) - மர்டில் பீச்
- **போலே, மார்குரைட்** (POLEY, MARGUERITE) - கலிஃபோர்னியா
- **பொல்லாக், மரியானா** (POLLOCK, MARIANNA) - நியூயார்க் நகரம்
- **பிரைஸ், பிட்டி ஹில்** (PRICE, BIDDIE HILL) - வடக்கு கரோலினா
- **ப்ரூ, எலோயிஸ்** (PRUE, ELOISE) - கலிஃபோர்னியா
- **பர்டம், சார்லஸ்** (PURDOM, CHARLES) - இங்கிலாந்து
- **ரிலே, டாம்** (RILEY, TOM) - நியூயார்க் நகரம்
- **ரிலே, யுவோன்** (RILEY, YVONNE) - நியூயார்க் நகரம்
- **ரிங்கர், ரூத்** - நியூயார்க் நகரம்
- **ரோஜர்ஸ், கொரினா** - வாஷிங்டன் டிசி
- **ரோஜர்ஸ், எல்ஸி** (ELSIE)- நியூயார்க் நகரம்
- **ரூத்பர்ட், டோனி** (ROOTHBERT, TONI) - கனெக்டிக்கட்
- **ரோஸின், ஆல்ஃபிரட்** - நியூயார்க் நகரம்
- **ரோஸின், ஸூஸன் ஸெஷன்ஸ்** (ROSSIN, SUSAN SESSIONS) - நியூயார்க் நகரம்
- **ரோத், ஹெலன்** - நியூயார்க் நகரம்
- **ராய்ஸ், எலிஸன்** - வாஷிங்டன் டிசி
- **ரட், ஹரோல்ட்** (RUDD) - நியூ ஜெர்ஸி
- **ரட், ரஃபேல்** - நியூ ஜெர்ஸி

- **ரட், வர்ஜீனியா** - நியூ ஜெர்ஸி
- **ஸகாலிஸ், லிஸ்** (SACALIS, LIZ) - நியூயார்க் நகரம்
- **ஸன்பார்ன், ஹாரியட்** - ஃபுளோரிடா
- **ஸவுல், பீட்டர்** - நியூயார்க் நகரம்
- **ஷூல்மேன், சார்லஸ்** (SCHULMAN) - நியூயார்க் நகரம்
- **ஸெஷன்ஸ், திருமதி. லீ** - தெற்கு கரோலினா
- **ஷா, ஆரோன்** - நியூயார்க் நகரம்
- **ஷா, டார்வின்** - நியூயார்க் நகரம்
- **ஷா, ஹெலன்** - நியூயார்க் நகரம்
- **ஷா, ஜீன்** - நியூயார்க் நகரம்
- **ஷா, லீட்ரைஸ்** - நியூயார்க் நகரம்
- **ஷா, லோவெல்** - நியூயார்க் நகரம்
- **ஷா, நோரின்** - நியூயார்க் நகரம்
- **ஷா, ரெனே** - நியூயார்க் நகரம்
- **ஷோர், மேரி & 2** குழந்தைகள் - நியூயார்க் நகரம்
- **ஸ்மித், எலினோர்** - கலிஃபோர்னியா
- **ஸ்மித், எலிஸபெத்** - தெற்கு கரோலினா
- **ஸ்மித், ஜோனா** - நியூயார்க் நகரம்
- **ஸ்மித், வாண்டா ஜி.** - ஃபுளோரிடா
- **ஸ்னோ, மேரி டோரீன்** - மேரிலாந்து
- **ஸாலமன், ஈவா** - நியூயார்க் நகரம்
- **ஸ்பிரிங்கிள், டொனால்ட்** - நியூயார்க் நகரம்
- **ஸ்டீவன்ஸ், டான்** - நியூ ஜெர்ஸி
- **ஸ்டீவன்ஸ், டோரதி** - நியூயார்க் நகரம்
- **ஸ்டோவர், வில்மா** - நியூயார்க் நகரம்
- **தோர்ப், ஹில்டா** - இங்கிலாந்து
- **தோர்ப், ஸைமன்** - இங்கிலாந்து
- **திமூர், கென்னத்** - நியூயார்க் நகரம்
- **ட்ரோகல், ஓட்டோ** (TROEGEL) - ஃபுளோரிடா
- **ட்ரோகல், ரூத்** - ஃபுளோரிடா
- **டர்னர், திரு & திருமதி சார்லஸ் சி**. மற்றும் இரண்டு குழந்தைகள்
- **வேண்டர்போகர்ட், திருமதி லாரி** (VANDERBOUGART, MRS. LARRY) – நியூயார்க் நகரம்
- **வீலார்ட், அனிதா - பாரிஸ்**
- **வெப், ஹெலன்** (WEBB) - கலிஃபோர்னியா
- **வெல்லர், லாரெட்டா** - ஃபுளோரிடா

- **வெல்லர், டெட் (**TED) - ஃபுளோரிடா
- **வெஸ்டர்வெல்ட், நயோமி (**NAOMI) - நியூயார்க் நகரம்
- **ஒயிட், ருத் (**WHITE**,** RUTH) **-** மர்டில் பீச்
- **வில்லியம்ஸ், பெனிட்டா** - நியூயார்க் நகரம்
- **வில்லியம்ஸ், பெரில்** - நியூயார்க் நகரம்
- **வில்லோபி, திரு. லியோனார்ட் & திருமதி. டல்ஸினா (**WILLOUGHBY) - நியூயார்க் நகரம்
- **வின்டர்ஃபல்ட், எல்லா (**WINTERFELDT) **-** நியூயார்க் நகரம்
- **வின்டர்ஃபல்ட், ஃப்ரெட் -** நியூயார்க் நகரம்
- **வைஸ், கிறிஸ்டின் (**WISE**,** CHRISTYNE) – விஸ்கான்ஸின்
- **வோல்கின், அடீல் (**WOLKIN**,** ADELE) - நியூயார்க் நகரம்

# பிற்சேர்க்கை - 6: 1958 - ஆஸ்திரேலியா சகவாசத்தில் கலந்துகொண்டவர்கள்

**(APPENDIX '6' - PEOPLE WHO ATTENDED AUSTRALIA SAHAVAS – 1958)**

- **ஆடம்ஸ், கிளாரிஸ்**
- **ஆடம்ஸ், கொலின்**
- **ஆடம்ஸ், சிந்தியா**
- **ஆடம்ஸ், நோயல்**
- **ஆடம்ஸ், ஸ்டான்லி**
- **அடால்ஃபஸ், லாரன்ஸ்**
- **ஐன்ஸ்வொர்த், வாலஸ்**
- **ஆல்ஸ்டன், கிஃபென் (**GIFFEN)
- **பால்ச், ஜோன் (**BAULCH JOAN)
- **பால்ச், மெரில்**
- **பால்ச், பீட்டர்**
- **பால்ச், ஃபிலிப்**
- **பால்ச், ராய்**
- **பிரபாஸோன், ஃபிரான்சிஸ்**
- **ப்ரூஃபோர்ட், பெர்னார்ட்**
- **புரூஃபோர்ட், ஜோன்**
- **புரூஃபோர்ட், ஜோனா**
- **புரூஃபோர்ட், ஜான்**
- **புகேனன், ராபர்ட் (**BUCHANAN)
- **பர்ஸ்டன், பெட்டி**
- **கெய்ன், மாஸ்டர் (**CAIN)
- **காலகன், செலியா (**CALLAGHAN**,** CELIA)
- **சாண்ட், மில்லி**
- **கோர்டெல், ஃபிராங்க்**
- **டேவிஸ், கென்**
- **டொனால்ட்ஸன், மார்ஜோரி**
- **ஃபிர்ம்ஸ்டோன், எமிலி (**FIRMSTONE)
- **கிட்டன்ஸ், பெரில் (**GIDDENS**,** BERYL)
- **கிரான்ட், ஜான்**
- **ஹால், ஓஸ்வால்ட் (**OSWALD)
- **ஹாரிஸ், டாட்**

- **ஹம்ப்ரீஸ், ஜூடித்**
- **ஜென்னிங்ஸ், எலினோர்**
- **லே பாஜ், அல்மா (**Le PAGE)
- **லே பாஜ், பில்**
- **லே பாஜ், ஜென்னி**
- **லே பாஜ், ஜோன்**
- **லே பாஜ், மைக்கேல்**
- **லே பாஜ், ராய்**
- **லே பாஜ், ரூத்**
- **லீ, ஃபிரான்சிஸ்**
- **லீ, நார்மன்**
- **லெம்மன், ஈனா (**LEMMON ENA)
- **லண்ட்கிஸ்ட், மே (**LUNDQUIST)
- **ஓ'பிரைன், டெனிஸ் (**O'BRIEN)
- **ஓ'பிரைன், ஜோன்**
- **ஓ'கீஃப், டோரிஸ் (**O'KEEFE)
- **பாஃபிள், ரெஜினால்ட் (**PAFFLE)
- **பெய்ண்டர், ஜாக் (**PAYNTER)
- **ரோஸ், ரெனி (**RENEE)
- **ரோஸ், லோர்னா**
- **ரோஸ், ராபர்ட்**
- **ஸ்மார்ட், எல்ஸி (**SMART**,** ELSIE)
- **ஸ்னோ, டயானா**
- **ஸ்வான், கிரேஸ் (**GRACE)
- **உட்ஃபோர்ட், கிரேக் (**WOODFORD CRAIG)
- **உட்ஃபோர்ட், எதெல் (**ETHEL)
- **உட்ஃபோர்ட், ஜீன்**

# பிற்சேர்க்கை - 7: 1958 - மெஹராபாத் சகவாசத்தில் கலந்துகொண்டவர்கள்

**(APPENDIX '7' - PEOPLE WHO ATTENDED GATHERING AT MEHERABAD – JULY 1958)**

**அஹமதுநகர்**

- ஆதி சீனியர்.
- அலோபா
- பைதூல்
- பாவ் கல்சூரி
- சகன்
- டாக்கே:பால்கர்
- டாக்கே:பால்கர் சஞ்சீவனி
- டான் (டான்கின்)
- எரச்
- :பெராம்
- ஜங்க்ளே
- கைக்கோபாத்
- காக்கா பாரியா
- பாதிரி
- பெண்டு
- ராம்ஜூ
- ருஸ்தம் காக்கா
- ஸரோஷ்
- ஸட்டா, மெஹர்ஜி
- சிது
- விஷ்ணு

**ஆந்திரா**

- பந்டேலா, பாப்பிராஜு
- பாரதி, சுத்தானந்தா
- பாஸ்கர ராஜு
- பிரம்மையா நாயுடு, ஜி.
- சிந்தா சர்வராவ்
- தனபதி ராவ்
- தர்மராவ்

- கனகதண்டி, டாக்டர்.
- கந்துலா, ராதா
- கட்டா சுப்பா ராவ்
- கோடூரி கிருஷ்ணராவ்
- குடும்ப சாஸ்திரி
- லோகநாத ராவ், பி.
- மஜேட்டி ராமமோகன ராவ்
- மல்லிகார்ஜுன ராவ்
- மாணிக்யால ராவ்
- மூர்த்தி, என்.எஸ்.
- மூர்த்தி, எடூரி நரசிம்மா
- நரசிம்மராவ், ஒய்.வி.
- நாராயண ராவ், வி.வி.
- நாராயண ராவ், கே.
- ராஜா முஹம்மது
- ராமலிங்கேஸ்வர ராவ், பி.
- ரங்கா ராவ், யர்ரம்செட்டி
- சாஸ்திரி, பாபா
- சாஸ்திரி, சுப்ரமணியம்
- ஸதிராஜு, அல
- ஸதிராஜு, எடிதா
- ஸேஷகிரி, ராவ், ஐ.வி.
- சுப்பண்ணா, ஜூபுடி
- சூர்யநாராயண மூர்த்தி, ஆர்.
- திருமலா ராவ்
- வெங்கடேஸ்வர ராவ், ஜோஸ்யுலா

**மும்பை/குஜராத்**

- பச்சூபாய்
- பரோடா, மகாராணி ஷாந்தாதேவி
- பரூச்சா, ஹோஷங்
- பரூச்சா, மினூ
- போமன் ஈரானி
- தாதாசாஞ்ஜி, ஹோமா
- தாதாசாஞ்ஜி, நரிமன்
- தமானியா, ஸவக்

- தேசாய், அடேர்
- காந்தி, தாக்கூரி
- கஜ்வானி
- லாப்சிவாலா
- மேத்தா, புர்ஜர்
- மிஸ்திரி, ஜிம்
- மிஸ்திரி, கிஷோர்
- நாயர், கிருஷ்ணா
- நோஷிர் ஈரானி
- பாஞ்சால், குலாப்தாஸ்
- பாஞ்சால், ராட்டிலால்
- பட்டேல், ஹரிபாய்
- பட்டேல், பிலோ டி.
- பிளீடர் (கலந்துகொள்ள முடியவில்லை)
- ராவ்ஸாஹேப்
- ராவல், ரவிகாந்த்
- ஸட்டா, தொராப்
- ஷிண்டே, டி.எம்.
- ஸிகன்போரியா
- வெஸுனா, கோவாஸ்

**டெல்லி/கொல்கத்தா**

- அகர்வால், மதன் மோகன்
- சாரி, ஏ.சி.எஸ்.
- தேபவ்ரத், டாக்டர் சக்கரவர்த்தி (கலந்துகொள்ள முடியவில்லை)
- ஹர்ஜிவன், லால்
- ஐயர், பி.எஸ்.வி.
- ஜகிந்தர் ஸிங்
- ஜகிந்தர் ஸிங், திருமதி.
- ஜெய்ஸ்வால், பி.பி.
- கெய்ன், பிரபா
- கெய்ன், வாஸ் தேவ்
- குமார்
- மூர்த்தி, ஜி.எஸ்.என்.
- மூர்த்தி, எம்.எஸ்.
- நலவாலா, கேக்கி

- நாத், பைஜ்
- நிரஞ்சன் ஸிங்
- நிரஞ்சன் ஸிங், திருமதி.
- ராகவுலு, ஏ.வி.
- ராமஷங்கர், ராய்ஸாஹேப்
- ராமராவ், வி.
- ரங்காராவ், கே.
- ஸாக்கரே, மனோஹர்
- ஸாக்கரே, மோனா
- ஸ்ரீவஸ்தவா, ஜி.எஸ்.
- தெஹல்ராம், லாலா

**ஹமிர்பூர்**

- கௌரி ஷங்கர்
- கரே, ஆதர்ஷ்
- கரே, கயா பிரசாத்
- மெஹர்தாஸ்
- நிக்கம், பவானி பிரசாத்
- நிக்கம், கேஷவ்
- பாலிவால், லக்ஷ்மிசந்த்
- புக்கார்
- ரகுராஜ் ஸிங், ராஜா
- ராம்பிரசாத், பாபு
- ராம்பிரசாத், ஜனக் ஸிங் (பாபு ராம்பிரசாத்தின் மகன்)
- ஸஹாய், ஸ்ரீபத்
- ஷர்மா, விஷ்ணு
- சாஸ்திரி, மாத்ர தத்தா

**பூனா**

- ஐடூன், ஸால்
- பெஹராம்
- பவ்ஸார்
- பிக்குபாய்
- போர், மஹாராஜா
- பன்டெலு, நாராயண்
- பண்டெலு, சுபத்ரா
- டவ்லே

- டாய்ஃபோடே
- தொராப்ஜி, ஜால்
- காடேக்கர், திகம்பர்
- காடேக்கர், குணாத்தாய்
- காடேக்கர், ஆர்.கே.
- ஜால்பாய்
- ஜாத், மஹாராணி
- ஜெஸவாலா, மெஹர்வான்
- ஜோக், எஸ்.ஜி.
- காம்ப்ளே
- கர்ஹனிஸ் பிளீடர், காக்கா
- கேரவாலா, தாதி
- கெரவாலா, ஸாம்
- குருந்த்வாடி, மஹாராஜா
- குருந்த்வாடி, மஹாராணி
- மதுசூதன்
- மெஹர்ஜி
- நாத்து, பால்
- பெஸி ஈரானி
- ராமகிருஷ்ணன்
- ரங்கோலே
- ராஸ்தே, எம். ஏ.
- ராஸ்தே, திருமதி. எம்.
- சதாஷிவ் பாட்டீல்
- சத்தரவாலா, கோஹியார்
- ஷிண்டே
- ஸோமன்
- தாடே

**ஸாக்கோரி**

- கோதாவரி மாய்
- பரூச்சா, நஸர்வான்
- யஷ்வந்த் ராவ்

**உ.பி./எம்.பி.**

- தௌலத் ஸிங்
- தேஷ்முக், சி.டி.

- தேஷ்முக், இந்து
- தேஷ்முக், பிரபோத்
- தேஷ்முக், சஞ்சீவனி
- ஹஸ்ரா, ஏ.கே.
- காளே, முரளி
- கான், அப்துல் மஜித்
- கேர், நானா
- கேர், ராஜா ஸாஹேப்
- கிஷன் ஸிங்
- லோகண்டே
- மெஷ்ராம், சுலூ
- முனிராஜ்
- நஃப்டே
- பங்க்ராஜ்
- போஃபலி பிளீடர்
- பிரீதம் ஸிங்
- ஷர்மா, ராம் லக்கன்
- உபாத்யாய, ரஜினிகாந்த்
- விபூதி

# பிற்சேர்க்கை - 8: 1962 - கிழக்கு-மேற்கு சகவாசத்தில் கலந்துகொண்டவர்கள்

**(APPENDIX '8' - PEOPLE WHO ATTENDED EAST-WEST GATHERING - 1962)**

- **ஆடம்ஸ், கிளாரிஸ்** (ஆஸ்திரேலியா)
- **அகோஸ்டினி, லூயிஸ்** (நியூயார்க்)
- **அகோஸ்டினி, விவியன்** (நியூயார்க்)
- **அல்-ஃபாகிஹ், கலீத்**
- **அல்வராடோ, ஹெர்மன்** (கலிஃபோர்னியா)
- **அமீன், நான்சி**
- **ஆண்ட்ரியானி, மேரி** (நியூயார்க்)
- **அன்ஸென், நான்சி**
- **ஆல்ட், டிலியா**
- **பஹ்ஜெஜியன், ஸ்ரூஹி**
- **பார்ன்ஸ், கவின் பேனார்ட் (**BARNES**,** GAVIN BAYNARD)
- **பாஸ், ஜான்** (நியூயார்க்)
- **பெல்டன், டெனிஸ்**
- **பெல்டனின் சகோதரர் டெனிஸ்**
- **பென் ஷம்மாய், கேரி** (இஸ்ரேல்)
- **பெர்ன்ஸ்டீன், பன்டி கெல்லி** (நியூயார்க் )
- **பெர்ன்ஸ்டீன், ஹாரி** (நியூயார்க் )
- **போல்ஸ், திருமதி. ஜான் எம். (**BOLES)
- **பிராட்பரி, எடித்** (நியூயார்க்)
- **புரூஃபோர்ட், பெர்னார்ட்** (ஆஸ்திரேலியா)
- **புரூஃபோர்ட், ஜோனா** (ஆஸ்திரேலியா)
- **புரூஃபோர்ட், ஜான்** (ஆஸ்திரேலியா)
- **புல்லார்ட், கிளாரன்ஸ்** (BULLARD**,** கலிஃபோர்னியா)
- **புல்லார்ட், ரீட்டா** (கலிஃபோர்னியா)
- **பர்க், நெல் ஜே. (**BURKE)
- **பர்ன்ஸ், லாரி** (BURNES, LARRY - ஃபுளோரிடா)
- **கேம்பன், மார்வின்**
- **கேம்பன், ஜீனி**
- **செக்லி, பார்பரா** (CEGLIE**,** ஃபுளோரிடா)
- **சேம்பர்லைன், ஜேம்ஸ் அலன்** (டெக்ஸாஸ்)
- **சாண்ட், மில்லி** (CHANT**,** ஆஸ்திரேலியா)

- **சேஸ், ரூத்** (CHACE - கலி்ஃபோர்னியா)
- **கிறிஸ்டி, கேத்ரின்** (நியூயார்க்)
- **கோட்ஸ், எலைன்** (மர்டில் பீச்)
- **கான்லான், ஆன்** (நியூயார்க்)
- **கோர்ஃப், எனிட்** (நியூயார்க்)
- **கொரினெட், சார்மியன் டியூஸ்**
- **கோவன்ஸ், பில் (**COVANS, BHIL)
- **க்ராஸ்கே, மார்கரெட்** (நியூயார்க்)
- **க்ரோன்சைட், எரிக்** **(**CHRONCHITE**,** ERIC - நெவாடா)
- **க்ரோன்சைட், ரெனே** **(**RENAE - நெவாடா)
- **டேவி, கிட்டி** (மர்டில் பீச்)
- **டெடோசாவ், ஹாரி** (HARRY DEDOLCHOW)
- **டெலவிக்னே, லாரா**
- **டெலாங், ஹில்டா** (DELONG - ஃபுளோரிடா)
- **டெலாங், லேலண்ட்** (ஃபுளோரிடா)
- **டெலாங், ஸில்வியா** (ஃபுளோரிடா)
- **டிம்ப்ஃப்ல், பீ**
- **டிம்ப்ஃப்ல், பில்**
- **டிம்ப்ஃப்ல், டயான்**
- **டிம்ப்ஃப்ல், லுட்** (அபாடன், ஈரான்)
- **டிம்ப்ஃப்ல், ஜோன்**
- **டொனால்ட்ஸன், மார்ஜோரி** (ஆஸ்திரேலியா)
- **டியூஸ், ஐவி** (கலிஃபோர்னியா)
- **ஈட்டன், பிலி** **(**EATON**,** BILI - **நியூயார்க்**)
- **ஈவ், டக்ளஸ்** **(**யு.கே.)
- **ஈவ், மோலி** **(**யு.கே.)
- **ஃபார்பர், வயோலா** **(**FARBER**,** VIOLA - **நியூயார்க்**)
- **ஃபீல்ட், டானா** **(**FIELD**,** DANA - **கலிஃபோர்னியா**)
- **ஃபிர்ம்ஸ்டோன், எமிலி** **(**FIRMSTONE - **ஆஸ்திரேலியா**)
- **ஃப்ளோர்ஷெய்ம், மரியன்** **(**FLORSHEIM - **நியூயார்க்**)
- **ஃபுட், டோரோதியா** **(**FOOTE - **வாஷிங்டன் டிசி**)
- **ஃபுட், நெட்** **(**NED - **வாஷிங்டன் டிசி**)
- **ஃபிரடெரிக், ஃபிலிஸ்** (கலிஃபோர்னியா)
- **ஃப்ரே, கரோலின்** (FREY - **கலிஃபோர்னியா**)
- **ஃப்ரே, ஃப்ரெட்** **(**கலிஃபோர்னியா)
- **கார்பெட், ஜூடித்** **(**GARBETT**,** JUDITH - **ஆஸ்திரேலியா**)

- **கிடன்ஸ், பெரில்** (GIDDENS, BERYL - ஆஸ்திரேலியா)
- **கோல்ட், நார்மா** (GOULD NORMA)
- **கிரான்ட், ஜான்** (GRANT - ஆஸ்திரேலியா)
- **கிரிகோயர், மிரியம்** (GREGOIRE - நியூயார்க்)
- **ஹமாடி, திருமதி. ஸானியா** (HAMADY, MRS. SANIYA)
- **ஹாமில், திருமதி ஸாம்**
- **ஹார்ப், ஜோஸஃப்** (HARB)
- **ஹார்ப், காரி**
- **ஹாஸன், அனீஸ் டபிள்யூ.** (HASSAN, ANEECE W.)
- **ஹாஸன், ஸெல்மா** (SELMA)
- **ஹேமன், பென்** (டெக்ஸாஸ்)
- **ஹெய்ன்ஸ், சார்லஸ்** (நியூயார்க்)
- **ஹெய்ன்ஸ், ஜேன்** (நியூயார்க்)
- **ஹெய்ன்ஸ், ஜான்** (நியூயார்க்)
- **ஹெய்ன்ஸ், வெண்டி** (நியூயார்க்)
- **ஹீலி, வாரன்** (வாஷிங்டன்)
- **ஹெய்க்ஸ், ரூத்** (HEIKES, RUTH)
- **ஹெவிட், கிளாடிஸ்** (HEVITT, GLADYS - ஆஸ்திரேலியா)
- **ஹைடவர், டெக்ஸ்** (HIGHTOWER, TEX - நியூயார்க்)
- **ஹம்ப்ரீஸ், ஜூடித்** (HUMPHRIES, JUDITH - ஆஸ்திரேலியா)
- **ஐவரி, பெர்னிஸ்** (IVORY, BERNICE - நியூயார்க்)
- **கர்ராஷ், அன்னரோசா** (KARRASCH, ANNAROSA - நியூயார்க்)
- **கர்ராஷ், லாரி** (நியூயார்க்)
- **கஷௌட்டி, ஹென்றி** (KASHOUTY - வர்ஜீனியா)
- **கென்மோர், ஹாரி** (நியூயார்க்)
- **கோஹனோவ், மைக்கேல்** (KOHSNOW - நியூயார்க்)
- **க்ராஸ்லிஸ், அமோரா** (KRAUZLIS)
- **லெமன், ஈனா** (LEMMON, ENA - ஆஸ்திரேலியா)
- **லிமா, நார்மா** (LIMA)
- **லே பேஜ், பில்** (Le PAGE - ஆஸ்திரேலியா)
- **லே பாஜ், ஜென்னி** (ஆஸ்திரேலியா)
- **லே பாஜ், ஜோன்** (ஆஸ்திரேலியா)
- **லே பாஜ், மைக்கேல்** (ஆஸ்திரேலியா)
- **லக், எட்வர்ட்** (ஃபுளோரிடா)
- **லக், இர்வின்** (ஃபுளோரிடா)
- **லண்ட்கிஸ்ட், மே** (LUNDQUIST, MAY - ஆஸ்திரேலியா)

- **மேக்கிரிகோர், மரியன் (**MacGREGOR)
- **மார்க்ஸ், ஃப்ரெட் (யு.கே.**)
- **மௌகம், ஒலிவியா** (MAUGHAM - நியூயார்க்)
- **மாவ்ரிஸ், ஜூலியா (**MAVRIS, JUULIA)
- **மெஹல், ஜிம்மி (**MEHL)
- **மில்லர், ஷீலா கே.** (அரிஸோனா)
- **முலின்ஸ், கேரி ஈ. (**MULLINS,GARY)
- **நிக்கோல்ஸ், மார்த்தா** (நியூயார்க்)
- **ஓ'பிரைன், டெனிஸ்** (ஆஸ்திரேலியா)
- **பாஃபில், ரெஜினால்ட் (**PAFFLE - ஆஸ்திரேலியா)
- **பாரி, மேரி** (PARRY, MARY - யுகே)
- **பேட்டர்ஸன், எலிசபெத்** (PATTERSON, ELIZABETH - மிர்டில் பீச்)
- **பொல்லாக், மரியன் (**POLLOCK, MARION)
- **பர்டம், சார்லஸ்** (PURDOM - யுகே)
- **ரேபோக், ஆன்** (நியூயார்க்)
- **ரிலே, டாம்** (நியூயார்க்)
- **ரிங்கர், ரூத்** (நியூயார்க்)
- **ரோஜர்ஸ், எல்ஸி** (நியூயார்க்)
- **ரோல்ஃப், ரூபி (**ROLFE)
- **ரோஸின், ஆல்ஃபிரட்** (ROSSIN - நியூயார்க்)
- **ரோஸின், ஸூஸன்** (SUSAN - நியூயார்க்)
- **ரூஸ், லோர்னா** (ஆஸ்திரேலியா)
- **ரோஸ், ராதா** (RADHA - ஆஸ்திரேலியா)
- **ரோஸ், ராபர்ட்** (ஆஸ்திரேலியா)
- **ரூட், வர்ஜீனியா**
- **ஸக்காலிஸ், லிஸ்** (நியூயார்க்)
- **ஸால்பர்ட், லேலா ஷாந்தி (**SALBURT, LELA SHANTI)
- ஸவுல், பீட்டர் (நியூயார்க்)
- **ஷா, டார்வின்** (SHAW, DARWIN - நியூயார்க்)
- **ஷா, ஜீன்** (நியூயார்க்)
- **ஷா, லீட்ரைஸ்** (நியூயார்க்)
- **ஷிப்வே, கிறிஸ்டின்** (ஆஸ்திரேலியா)
- **ஷிப்வே, ஹேஸல் (**SHIPWAY, HAZEL)
- **ஷார்ட், எட்** (ஃபுளோரிடா)
- **ஸ்கீல்ஸ், மார்வெல்** (SKEELS - நியூயார்க்)
- **ஸ்னோ, டயானா** (ஆஸ்திரேலியா)

- **ஸ்பிரிங்கிள், டொனால்ட்** (SPRINGLE - நியூயார்க்)
- **ஸ்டீவன்ஸ், டான்** (கலிஃபோர்னியா)
- **ஸ்டோவர், வில்மா** (நியூயார்க்)
- **ஸ்வான், கிரேஸ்** (ஆஸ்திரேலியா)
- **தோர்ப், அந்தோணி** (நியூஸிலாந்து)
- **தோர்ப், ஹில்டா** (நியூஸிலாந்து)
- **தோர்ப், ஸைமன்** (நியூஸிலாந்து)
- **ட்ரோகல், ஓட்டோ இ.** (ஃபுளோரிடா)
- **ட்ரோகல், ரூத்** (ஃபுளோரிடா)
- **வைலார்ட், அனிதா** (VIEILARD - ஃபிரான்ஸ்)
- **வெப், ஹெலன்** (கலிஃபோர்னியா)
- **வெஸ்டர்வெல்ட், நவோமி** (நியூயார்க்)
- **வைட், ரூத்** (WHITE, RUTH - மிர்டில் பீச்)
- **வில்லியம்ஸ், பெரில்** (BERYL - நியூயார்க்)
- **வின்டர்ஃபெல்ட், எல்லா** (நியூயார்க்)
- **வின்டர்ஃபெல்ட், ஃப்ரெட்** (நியூயார்க்)
- **வைஸ், லூயிஸ்** (WISE)
- **வோல்கின், அடீல்** (WOLKIN, ADELE - நியூயார்க்)
- **ரென், மேக்கின்** (WREN, MAKINE)

# பிற்சேர்க்கை - 9: இறுதி உயில் மற்றும் உறுதிச்சான்று

**(APPENDIX '9' – MEHER BABA'S LAST WILL & TESTAMENT)**

24, குருபிரசாத், பந்த் கார்டன் ரோடு, பூனாவில் தற்போது வசிக்கும் 73 வயதான மெஹர் பாபா என்று அழைக்கப்படும் மேர்வான் ஷெரியார் ஈரானி, செயல்படுத்தும் எனது இறுதி உயில் மற்றும் உறுதிச் சான்று இது.

1. நான் இதுவரை செயல்படுத்திய உயில்கள் மற்றும் உயில் இணைப்புகளை இதன் மூலம் ரத்து செய்கிறேன்.

2. அவதார் மெஹர் பாபா அறக்கட்டளை என அறியப்படும் சொத்து சம்பந்தமான அனைத்து விபரங்களையும் உள்ளடக்கி, 1959ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் நாள், நான் ஓர் அறக்கட்டளையை நிறைவேற்றியுள்ளேன். நான் உயிரை துறக்கும் போது, மேற்கூறிய அவதார் மெஹர் பாபா அறக்கட்டளையின் அறங்காவலர்களாக இருப்பவர்கள், எனது விருப்பத்தை நிறைவேற்றுபவர்களாகவும், அறங்காவலர்களாகவும் தொடர்வார்கள்.

3. எனக்குச் சொந்தமான மற்றும் எனது உடைமையாக இருக்கும் ஒரே அசையாச் சொத்து, அதாவது, மெஹராபாத் - மேல்மலையில், அஹமதுநகர் மாவட்டத்தில் அரன்காவ்ம் கிராமத்திற்கு அருகில் அமைந்த கட்டிடங்கள் மற்றும் பலவற்றுடன், எனது எதிர்கால சமாதி உட்பட, மாற்ற முடியாத வகையில் 1959ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் தேதி, அஹமதுநகர் துணைப்பதிவாளர் முன்பாக, என்னால் செயல்படுத்தப்பட்ட அவதார் மெஹர் பாபா அறக்கட்டளையின் அறங்காவலர்களுக்கு இந்த உடைமை வழங்கப்பட்டது.

4. எனது இலக்கிய படைப்புகளுக்கான பதிப்புரிமை தொடர்பாக, நான் ஏற்கனவே செய்ததைப் போல, நான் உயிர் வாழும்போது, என்னால் குறிப்பாக மாற்றப்பட்ட பதிப்புரிமைகளைத் தவிர,

(1) 'காட் ஸ்பீக்ஸ்' (GOD SPEAKS)

(2) 'லிஸன் ஹியூமானிட்டி' (LISTEN, HUMANITY)

(3) 'லைஃப் அட் இட்ஸ் பெஸ்ட்' (LIFE AT ITS BEST' மற்றும்

(4) 'பீம்ஸ் ஆன் தி ஸ்பிரிச்சுவல் பனோரமா ஃப்றம் மெஹர் பாபா' (BEAMS ON THE SPIRITUAL PANORAMA FROM MEHER BABA), அதன் பதிப்புரிமைகள், கலிஃபோர்னியா, யு.எஸ்.ஏ., மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபிஸம் (SUFISM REORIENTED, CALIFORNIA, U.S.A.) நிறுவனத்திற்கு நிரந்தரமாக என்னால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது, அவற்றுள் கீழ்வருவனவையும் அடங்கும்:

'முதுமொழிகள்' (SAYINGS), 'கவிதைகள்' (POEMS), 'செய்திக் குறிப்புகள்' (MESSAGES), 'கட்டுரைகள்' (ARTICLES), 'உரைகள்' (DISCOURSES), 'புத்தகங்கள்' (BOOKS),

‘விளக்கப்படங்கள்’ (CHARTS), ‘வரைபடங்கள்’ (MAPS) மற்றும் பல; அத்துடன் எனக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பதிப்புரிமைகள் மற்றும் எதிர்காலத்தில் என்னை நேசிக்கும் பிற எழுத்தாளர்களால் எனக்கு அன்பளிப்பாக வழங்கப்படும் பதிப்புரிமைகள், இனி ஒட்டுமொத்தமாக ‘பதிப்புரிமைகள்’ (THE COPYRIGHTS) என்று அழைக்கப்படுகின்றன.

5. 1956, பிப்ரவரி 4 தேதி, அஹமதுநகரைச் சேர்ந்த ஆதி கே. ஈரானிக்கு அனுப்பப்பட்ட எனது உறுதிப்படுத்தல் கடிதத்தின்படி, அவரது வாழ்நாளில் அவரது தனிப்பட்ட நலனுக்காக பதிப்புரிமையைப் பயன்படுத்தவும், கட்டுப்படுத்தவும் மற்றும் அவற்றிலிருந்து நலம் பெறவும், இந்த நிபந்தனையின் பேரில் நான் அவரை தற்காலிகமாக அனுமதித்தேன் - அவரது மறைவுக்குப் பின்பு, பதிப்புரிமைகள் எனது உடைமையாகவும், என் வசம் அல்லது எனது சட்டப் பிரதிநிதிகளின் வசம் மட்டுமே இருக்கும்.

6. மேற்குறிப்பிட்ட ஆதி கே. ஈரானியின் சார்பாகக் கூறப்பட்ட உறுதிப்பாட்டிற்கு உட்பட்டு, ‘அவதார் மெஹர் பாபா அறக்கட்டளையில்’ குறிப்பிடப்பட்ட அறங்காவலர்களுக்கு, அவர்கள் வசம் வைத்திருக்கும் மற்றும் வைத்திருக்க வேண்டிய அனைத்து பதிப்புரிமைகளையும் நான் இதன் மூலம் ‘வழங்கி, உயில் வழியாக ஒப்புதல் அளித்து, அவர்களுக்கு எனத் தீர்மானிக்கிறேன்’; மேலும், இவை அனைத்தும் நான் கூறிய நம்பிக்கைப் பிரகடனத்தில் அறிவிக்கப்பட்ட மற்றும் அடங்கியுள்ள அதிகாரங்களுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டது.

7. உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் எனது சீடர்களில் சிலர், உயில் மூலமாக ஒப்புதல் அளித்து அல்லது சிலர் இனிமேல் எனக்கு அதற்கான உரிமையை வழங்கலாம். மேற்கூறிய அவதார் மெஹர் பாபா அறக்கட்டளையின் அறங்காவலர்களுக்கு, மேற்கூறிய நம்பிக்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, உறுதியான மற்றும் அசையாத அல்லது எனது மரணத்தின் போது உடைமையாக இருந்த அல்லது எனக்கு உரிமையுடையதாக இருக்கும் அனைத்துச் சொத்துகளின் மீதான உயிலை நான் வழங்குகிறேன். அதைத் தொடர்ந்து, மேற்கூறிய உயில் மற்றும் உறுதிச் சான்றில் குறிப்பிடப்பட்டதற்கு இணங்க, நியமனம் மற்றும் சொத்துக்கள் (இதன்மூலம் அதில் குறிப்பிடப்படாத சொத்து தவிர) மேற்கூறிய அறங்காவலர்களுக்கு, அத்தகைய அனைத்து பகுதிகளையும் விற்கவோ, ஏல முறையில் பணமாக மாற்றவோ அதிகாரம் வழங்கப்படவில்லை..

அதற்கு சாட்சியாக நான், மேற்கூறிய மேர்வான் ஷெரியர் ஈரானி, இன்று மூன்று நகல்களில் நிறைவேற்றப்பட்ட எனது உயிலை இந்த ஜூன் 17ஆம் தேதி, ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தேழில் எனது உறுதிப்பாட்டை வழங்குகிறேன்.

மேற்குறிப்பிட்ட இறுதி உயில் மற்றும் உறுதிச் சான்றில் எனது கையொப்பத்துடன் நாங்கள் மூவரும் ஒன்றிணைந்து ஒருவருக்கொருவர் சாட்சிகளாக எங்கள் பெயர்களை பதிவு செய்துள்ளோம்.

கையொப்பம் எம்.எஸ். ஈரானி

கையொப்பம் மணி எஸ். ஈரானி

கையொப்பம் எரச் பி. ஜெஸவாலா

தேதி: **17 ஜூன் 1967**

# பிற்சேர்க்கை - 10: மெஹர் பாபாவின் வாழ்க்கை நிகழ்வுகளின் காலவரிசை

**(APPENDIX 'J' – MEHER BABA'S LIFE – TIMELINE OF EVENTS/MOVEMENTS )**

| மெஹர் பாபாவின் வாழ்க்கை நிகழ்வுகளின் காலவரிசை | |
|---|---|
| **1894 - 1921** | **மேர்வானின் இளமைப் பருவம்** |
| 1894 பிப்ரவரி 25 | மேர்வானின் (மெஹர் பாபாவின்) பிறப்பு<br>தந்தை ஷெரியார் (1853-1932), தாயார் ஷிரீன் (1877-1943) |
| 1899 | பூனா புதும்ஜி குஜராத்தி பள்ளியில் 5 ஆண்டுகள் கல்வி |
| 1902 செப்டம்பர் 1 | பூனாவில் சர்தார் கான் தஸ்தூர் நோஷிர்வான் ஸொராஸ்ட்ரியன் பள்ளிக்கூடத்தில் கல்வி |
| 1902 செப்டம்பர் 15 | ஜால் பிறந்தநாள் |
| 1903 ஆகஸ்ட் 31 | பூனா, அரசு ஆங்கிலப் பள்ளியில் கல்வி |
| 1908 ஜூன் 20 | பெஹராம் பிறந்தநாள் |
| 1909 ஜனவரி 4 | பூனாவில் ஸெயின்ட் வின்ஸென்ட் உயர்நிலைப் பள்ளியில் கல்வி |
| 1911 டிசம்பர் | பூனா டெக்கான் கல்லூரியில் கல்வி |
| | **மேர்வான் இறை உணர்வை எய்தல்** |
| 1913 | ஹஸ்ரத் பாபாஜான் (1790 - 1930) - மேர்வானின் முதல் சந்திப்பு - இறை உணர்வை எய்தல் |
| 1914 ஜூலை 10 | ஆதி ஜூனியர் பிறந்தநாள் |
| 1914 இரண்டு வாரங்கள் | உத்வாடா - ரயிலில் பயணம் (3 நாட்கள்); நவ்ஸாரி 2 நாட்கள், சூரத் 2 நாட்கள், பரூச் 2 நாட்கள், மும்பை, பூனா வருகை |
| 1915 | சத்குரு நாராயண் மஹாராஜ் (1885-1945) - மேர்வானின் முதல் சந்திப்பு |
| 1915 | ஹஸ்ரத் தாஜுதின் பாபா (1861-1926) - மேர்வானின் முதல் சந்திப்பு |
| 1915 | சத்குரு சாய்பாபா - ஷிர்டி (1838-1918) - மேர்வானின் முதல் சந்திப்பு – மேர்வானை 'பர்வர்திகார்' என்று பறைசாற்றியது |
| 1915 | சத்குரு உபாஸனி மஹாராஜ் (1870 - 1941) - மேர்வானின் முதல் சந்திப்பு |
| 1916-17 | பூனாவிலிருந்து நர்கோல் (NARGOL) - சில மாதங்கள் |
| 1916, | பூனாவிலிருந்து கொல்கத்தா - மூன்று மாதங்கள் |
| 1916, ஜூன்-செப்டம்பர் | கொல்கத்தாவிலிருந்து லாஹூர் & பூனா வருகை |
| 1916-17 | ஸாக்கோரி-ஷிர்டி மாதாந்திர விஜயம் மீண்டும் ஆரம்பம் |

| | |
|---|---|
| 1917, ஏப்ரல் | மும்பையில் குஸ்தாஜியை சந்தித்து அதே நாளில் பூனா வருகை |
| 1917, அக்டோபர் | ஸாக்கோரி-ஷிர்டி விஜயம் - பூனா வருகை |
| 1918, ஜனவரி | உறவினர் காய்குஷ்ருவின் இறுதிச் சடங்கிற்காக ரயிலில் மும்பை சென்று பூனா வருகை |
| 1918, ஆகஸ்ட் 1 | கஸ்பா பேட் மதுபானக்கடை கையகப்படுத்தப்பட்டது |
| 1918 | ஸாக்கோரிக்கு தொடர்ந்து விஜயம் |
| 1918 அக்டோபர் 15 | சாய்பாபா காலமானார் |
| 1918 டிசம்பர் 15 | மணி பிறந்தநாள் |
| 1919 | மும்பை விஜயம் - கொடாதத் (நெர்வஸ்) பாபாவால் பூனாவிற்கு அழைத்துவரப்பட்டார் |
| 1919 ஆகஸ்ட் / செப்டம்பர் | ஸாக்கோரி, பேலாபூர், நாக்பூர் விஜயம் |
| 1919, நவம்பர் | ஸாக்கோரியிலிருந்து பெனாரஸ் பயணம் - தொடர்ந்து ஜகந்நாத் பூரி, கரக்பூர் (பீஹார்), நாக்பூர், ஸாக்கோரி வழியாக பூனா வருகை |
| 1919 | மீண்டும் ஸாக்கோரி, நாசிக், கவல்வாடி, ஸாக்கோரி வழியாக பூனா வருகை |
| 1920 | ரயிலில் நாசிக் வருகை - கவல்வாடி கிராமம், போர்காட் மலைக்கு நடந்து சென்று 40 நாட்கள் குகையில் தங்கியிருந்தார் |
| 1920 | ஸையத் ஸாஹேபின் நாசிக் இல்லத்தில் பூனா மண்டலியின் முன்னிலையில் **மெஹர் பாபா** என்ற பெயர் சூட்டப்பட்டது |
| 1921 இறுதி ஜூலை - 1922 ஜனவரி | ஸாக்கோரியில் கடைசி ஆறு மாதம் - உபாஸனி மஹாராஜ் மேர்வானை 'ஆதிசக்தி' (அவதார புருஷர்) என்று பறை சாற்றியது |
| **1922** | **மன்ஸில்-ஏ-மீம் - ஆரம்ப கால பயிற்சி மையம்** |
| 1922 ஜனவரி 23 - 27 | மும்பை வருகை; ஆரம்பகால தோழர்களுடன் நீராவி கப்பலில் 'மாண்ட்வா'விற்குப் பயணம் - பூனா வருகை |
| 1922 | அவதார புருஷனின் ஆரம்ப கால வாழ்க்கை - பூனா, ஃபெர்குஸன் கல்லூரி அருகில் அமைந்த குடில் |
| 1922 | மெஹர் பாபா மண்டலியுடன் மும்பை நோக்கி நடைபயணம் |
| 1922 | மன்ஸில்-ஏ-மீம் - ஆரம்ப கால பயிற்சி மையம் |
| 1922 செப்டம்பர் 11 - 19 | ரயிலில் அஜ்மீர் பயணம் - மும்பை வருகை |
| 1922 அக்டோபர் 8 - 14 | ஜூஹு கடற்கரையில் ஓய்வு - மும்பை வருகை |
| **1923** | **அரன்காவ்ம் வருகை** |
| 1923, ஏப்ரல், மே 13 | மெஹர் பாபா அரன்காவ்ம், அஹமதுநகர் வருகை அரன்காவ்ம் கிராமத்தில் நிரந்தர குடியேற்றம் |

| | இறைப்பயணம் |
|---|---|
| 1923, மே 25-ஜூன் 27 | இறைப்பயணம் - கராச்சி, குவெட்டா, குஜராத் - அஹமதாபாத் |
| 1923, ஜூலை 1 - 5 | நடைபயணம் - அஹமதாபாத், ஜேத்தல்பூர், பரூச், சூரத், நவ்ஸாரி |
| **1924** | |
| 1924, பிப்ரவரி 2 | சத்குரு நாராயண் மஹாராஜை மெஹர் பாபாவின் மண்டலி (குஸ்தாஜி மற்றும் பலர்) - மும்பையில் முதல் சந்திப்பு |
| 1924, பிப்ரவரி 22 | பாரசீகம் - முதல் பயணம் |
| 1924, மார்ச் | பாரசீக பயணத்தின் இறுதியில் மெஹர் பாபா கராச்சி - ரக்ஸால் - மகர் (சத்குரு கபீரின் சமாதி) பயணம் |
| 1924, மார்ச் இறுதி | மெஹர் பாபாவின் ரகசிய பயணம் - இடர்சி - மண்டலி ஒருவரும் உடன் இல்லாமல் |
| 1924, ஏப்ரல் | 'கமேளா யோகா' (உடல் உழைப்பு) ஆரம்பம் |
| 1924, ஜூன் 9 - ஜூலை 17 | மெஹர் பாபாவின் இரண்டாவது குவெட்டா பயணம் (ஸிபி - குவெட்டா - ஸக்கர் - கராச்சி - மும்பை) |
| 1924, ஆகஸ்ட் 3 & 4 | சென்னை பயணம் - போர்டோ நோவோ (பரங்கிமலை) |
| 1924, ஆகஸ்ட் 5 - 8 | நீலகிரி மலைப் பயணம் - ஊட்டி - மேட்டுப்பாளையம் - (21 மைல் நடைபயணம்) - குன்னூர் - சென்னை |
| 1924, ஆகஸ்ட் 11 & 12 | கொல்கத்தா பேலூர் மடம் |
| 1924, ஆகஸ்ட் 14 | 5000 சாதுக்களுடன் சந்திப்பு - ஹரிதுவார் - ரிஷிகேஷ் - லஸ்கர் - ஹரிதுவார் - மொராதாபாத் - போபால் - பரோடா - மவுண்ட் அபு |
| 1924, ஆகஸ்ட் 25 | உஜ்ஜையின் பயணம் |
| 1924, செப்டம்பர் 10, 14 | மும்பை வருகை. கோவா பயணம் |
| **1925** | |
| 1925, ஜனவரி | அரன்காவ்ம் – மெஹராபாத் தலைமையகம் - மெஹர் பாபாவின் அறிவிப்பு |
| 1925, மார்ச் 25 | ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடம் நிறுவப்பட்டது (7-வது வகுப்புவரை), இலவச மருத்துவமனை நிறுவப்பட்டது |
| 1925, மே | தொழுநோயாளிகள் ஆசிரமம் நிறுவப்பட்டது |
| 1925, மே 22 | பள்ளி மாணவர்கள், ஆசிரியர்களுடன் விஸாப்பூர் பயணம் |
| | **மௌனம்** |
| 1925, ஜூலை 10 | மௌனம் ஆரம்பம் (இந்த மௌனம் பாபா 1969 ஜனவரி உடலைத் துறப்பது வரை கடைப்பிடித்தார்) |
| 1925, ஜூலை 13 | இரகசிய புத்தகம் எழுதுதல் ஆரம்பம் |
| 1925, ஆகஸ்ட் 17 | தாஜுதீன் பாபா காலமானார் |
| 1925, நவம்பர் 10 | முதல்முதலாக துனி ஏற்றப்பட்டது |
| 1925, டிசம்பர் 21 & 22 | லோனவாலா மும்பை பயணம் |
| **1926** | |
| 1926 பிப்ரவரி 27 | ஜாம்ஷெட் காலமானார் |
| 1926, டிசம்பர் | ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடம் நிறுவப்பட்டது |
| 1926, டிசம்பர் 31 | மெஹர் பாபா கையால் எழுதிய கடைசி சொற்பொழிவு |

| | |
|---|---|
| **1927** | |
| 1927, ஜனவரி 2 | கையால் எழுதுவது நிறுத்தப்பட்டது |
| 1927, ஜனவரி 5 | விஸாபூர் பயணம் |
| 1927, ஜனவரி 7 | எழுத்துப்பலகையின் பயன்பாடு ஆரம்பம் |
| 1927, பிப்ரவரி 26 | அஹமதுநகர், தேசிய உயர்நிலைப் பள்ளி விஜயம் |
| 1927, மார்ச் 1 | ஹஸ்ரத் பாபாஜான் மேல்நிலைப்பள்ளி திறக்கப்பட்டது |
| 1927, மே 01 | மெஹராஷ்ரம் நிறுவப்பட்டது |
| 1927, ஆகஸ்ட் 10 - 11 | அஹமதுநகர் குஷ்ரு குவார்ட்டர்ஸ் வருகை |
| 1927, ஆகஸ்ட் 16 | எதிர்கால சமாதியின் நிலத்தடி மறைவில் தங்குவது அவ்வப்போது தொடர்ந்தது |
| **1928** | |
| 1928, ஜனவரி 4 | அரன்காவ்ம் கிராமம் வருகை |
| 1928, மார்ச் 6 | ‘ஹேப்பி வேலி’ விஜயம் |
| 1928, மார்ச் | ‘ஹிஸ் ஹோலினெஸ் மெஹர் பாபா & மெஹராஷ்ரம்’ புத்தக வெளியீடு |
| 1928, மார்ச் 25 | பிரேமாஷ்ரம் மேல்மலை சமாதி அருகில் நிறுவப்பட்டது |
| 1928, ஏப்ரல் 01 | ஹஸ்ரத் பாபாஜான் மெஹராபாத் வருகை |
| 1928, மே 17, 25, 28 | டோக்கா கிராமம் சுற்றுப்புற சூழலைப் பார்வையிட அங்கு விஜயம் |
| 1928, ஜூன் 03 | டோக்கா ஆஷ்ரமம் இடம்பெயர்ப்பு |
| 1928, ஜூலை 10 | மௌனம் மூன்றாண்டு நிறைவு. மெஹர் பாபா எழுதிய ‘புஜாவே நார்’ ஆரத்தி பாடல் ஆரம்பம் |
| 1928, நவம்பர் 26 | மீண்டும் மெஹராபாத் வருகை |
| 1928, டிசம்பர் | ‘மெஹர் மெஸேஜ்’ இதழ் வெளியீடு |
| **1929** | |
| 1929, ஜனவரி 13 | பெண் மண்டலி நாசிக் நகரம் இடம்பெயர்தல் |
| 1929, ஜனவரி | நடைபயணம் - பண்டர்பூர் வழியாக கோலாபூர் |
| 1929, ஜனவரி 15 - 27 | மெஹராபாத் - அஹமதுநகர் - டோண்ட் - பாட்டஸ் - ராவன்காவ்ம் - டிக்ஸல் - மெஹராபாத் வருகை |
| 1929, பிப்ரவரி 5 - 7 | மெஹராபாத் - மாலேகாவ்ம் - துலியா - யோவ்லா - மெஹராபாத் வருகை |
| 1929, பிப்ரவரி 26 - 28 | நடைபயணம் ‘ஹேப்பி வேலி’ - மெஹராபாத் வருகை |
| 1929, மார்ச் 30 - ஏப்ரல் 3 | நாசிக் பயணம் - மெஹராபாத் வருகை |
| 1929, ஏப்ரல் 11,17,19 | அஹமதுநகர் விஜயம் |
| 1929, மே 08 - 27 | இமயமலை - குவெட்டா பயணம் (மெஹராபாத் - நாசிக் - மன்மாட் - டெல்லி - ஹரிதுவார் - ரிஷிகேஷ் - லாஹூர் - முல்தான் - ஸுக்கூர் - குவெட்டா - மும்பை - மன்மாட் வழியாக மெஹராபாத்) |
| 1929, ஜூன் 9 - 11 | நாசிக் பயணம் - பாண்டு லேனா குகைகள், கங்காபூர் நீர்வீழ்ச்சி போன்றவற்றைப் பார்வையிடல் - மெஹராபாத் வருகை |
| 1929, ஜூன் 26 - 28 | நாசிக் பயணம் - மெஹராபாத் வருகை |

| | |
|---|---|
| 1929, ஜூலை 10 - ஆகஸ்ட் 27 | காஷ்மீர் பயணம் (சிறப்பு பேருந்து)<br>நாசிக் - துலியா - இந்தூர் - தேவாஸ் - போபால் - குணா - ஷிவ்புரி - குவாலியர் - ஆக்ரா - டெல்லி - பானிபட் - கர்னால் - லூதியானா - அமிர்தசரஸ் - லாஹூர் - ராவல்பிண்டி - ராம்பூர் - ஸ்ரீநகர் - இஸ்லாமாபாத் - ஸ்ரீநகர் - ஹர்வான் - உதம்பூர் - ஜம்மு - சியால்கோட் - வஜிராபாத் - நாசிக் - மெஹராபாத் வருகை |
| 1929, செப்டம்பர் 2 | ஜாம்கேட் கிராமம் - விஜயம் |
| 1929, செப்டம்பர் 03-16 | மும்பை, காண்டிவ்லி - போரிவ்லி - மாஸாகாவ்ம் பந்தர்வாடா நீர் தேக்கம் - போரிவ்லிக்கு அருகில் அமைந்த போயின்ஸூர் மலை (மண்டபேஷ்வர் குகைகள்) - விஜயம் செய்து நாசிக் வருகை |
| 1929, செப்டம்பர் 17-18 | மும்பை வருகை |
| 1929, செப்டம்பர் 20 - நவம்பர் 16 | (பேருந்தில்) பரபரப்பான பாரசீக பயணம் - மும்பை, வர்ஸோவா, கராச்சி, வர்ஸோவா, புஷெயர் - அபாடன் - மொஹம்மரா (கோரம்ஷாஹர்) - அஹ்வாஸ் - டெஸ:ஃபுல், ஜெய்டார் - இஸ்:ஃபஹான் - ஜோல:ஃபா - யெஸ்ட் - ஜா:ஃப்ராபாத் - முபர்கா - கொரம்ஷா - யெஸ்ட் - பெஹ்ராமாபாத் - கெர்மன் - மஹூன் - பாம் (பேருந்து பாலைவனத்தில் சிக்கிக் கொண்டது) - ஃபஹ்ரேஜ் - ஷுர்காஸ் - டஸ்தாப் வந்தடைந்து ரயிலில் ஸுக்கூர், ரோஹ்ரி, ஸமஸதா, முல்தான், மாண்ட்கோமெரி (ஸாஹிவால்) வழியாக லாஹூர் இரவு தாமதமாக வந்தடைந்தனர். ரயிலில் லாஹூரிலிருந்து புறப்பட்டு லூதியானா, ஸிர்ஹிந்த், அம்பாலா, டெல்லி வழியாக நாசிக் வருகை |
| 1929, நவம்பர் 17 | தப்போவன் விஜயம் |
| 1929, நவம்பர் 24 | கங்காபூர் நீர்வீழ்ச்சிக்கு வருகை |
| 1929, டிசம்பர் 1 | தியோலாலிக்கு காரில் பயணம் |
| 1929, டிசம்பர் 6 | பாண்டு லேனா குகைகளைப் பார்வையிடல் |
| 1929, டிசம்பர் 7 - 10 | நாசிக் நகரிலிருந்து பேருந்தில் பைக்கலா, மும்பை பயணம் - தான்ஸா ஏரியை பார்வையிட்டு, நாசிக் வருகை |
| 1929, டிசம்பர் 14 | நாசிக் - துலியா - நாசிக் |
| 1929, டிசம்பர் 20, 22 | நாசிக் நகரிலிருந்து காரில் அகமதுநகர் பயணம் - மீண்டும் நாசிக் வருகை |
| 1929, டிசம்பர் 28, 29 | நாசிக் - கோட்டி - ஜவஹர் - தஹானு - நாசிக் வருகை |
| **1930** | |
| 1930, ஜனவரி | நாசிக்கில் ஏகாந்தவாசம் |
| 1930, ஜனவரி 30, பிப்ரவரி 1 | நாசிக் நகரிலிருந்து பேருந்தில் ஸங்கம்நேர் வழியாக அக்பர் அச்சகம், அஹமதுநகர், மெஹராபாத் வருகை - பிப்ரவரி அன்று மீண்டும் நாசிக் பயணம் |
| 1930, பிப்ரவரி 19, 20 | பாண்டு லேனா குகை, கங்காபூர் நீர்வீழ்ச்சி பார்வையிடல் |
| 1930, பிப்ரவரி 23 - மார்ச் 11 | தென் இந்திய பயணம் (பேருந்தில்)<br>நாசிக் - அஹமதுநகர், பூனா, சத்தாரா, கோலாபூர், தார்வார், ஹூப்ளி, ஹாவேரி, ஹரிஹர், தாவங்கெரே, சித்ரதுர்கா, |

| | |
|---|---|
| | தும்கூர், பெங்களூரு, ராணிப்பேட்டை, ஆற்காடு, காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர், சென்னை வருகை - சென்னை<br>பூந்தமல்லியிலிருந்து சித்தூருக்குப் பேருந்தில் பயணம் - சித்தூரிலிருந்து பெங்களூரு, மைசூரு (அரண்மனை), ஹாஸன், மங்களூரு, ஷிமோகா, ஹரிஹர், ஹூப்ளி, தார்வார், பிஜாப்பூர், ஷோலாபூர், டோண்ட், அஹமதுநகர், வருகை |
| 1930, மார்ச் 21 - 24 | நாசிக் நகரிலிருந்து பேருந்தில் பயணம் - அஹமதுநகர், டோண்ட், ஷோலாபூர், பண்டர்பூர், சத்தாரா, வை, பஞ்ச்கனி - பூனா, அஹமதுநகர் வருகை |
| 1930, மார்ச் 24 - ஏப்ரல் 3 | அஹமதுநகர் - கோப்பர்காவ்ம் - மன்மாட் - நாசிக் - சரக்கு வாகனத்தில் ஸங்கம்னேர் வழியாக மெஹராபாத் வருகை |
| 1930, ஏப்ரல் 9 - மே 14 | அஹமதுநகர், கோப்பர்காவ்ம், மன்மாட், நாசிக், ஸங்கம்னேர், மெஹராபாத், பஞ்ச்கனி - மஹாபாலேஷ்வர் - டைகர் வேலி, கோலாபூர் வருகை |
| 1930, மார்ச் 15 - 26 | டைகர் வேலி குகையில் ஏகாந்தவாசம் தொடக்கம் - பஞ்ச்கனி வழியாக இரவு மெஹராபாத் வருகை |
| 1930, மே 28 - 29 | அகமதுநகர் அக்பர் பிரஸ், காக்கா ஷஹானே இல்லத்திற்கு விஜயம் |
| **1930, ஜூன் 11 - 12** | மெஹராபாத்திலிருந்து காரில் நாசிக் - கங்காபூர் நீர்வீழ்ச்சி, தியோலாலி, நாசிக் - மெஹராபாத் வருகை |
| 1930, ஜூன் 15 - ஜூலை 2 | காஷ்மீர் பயணம்<br>மெஹராபாத்திலிருந்து ரயிலில் புறப்பட்டு நாசிக் - மும்பை - பரோடா - போபால் - ஜான்சி - ஆக்ரா - டெல்லி - (ரயிலில்) அமிர்தசரஸ் - லாஹூர் - ராவல்பிண்டி - முர்ரி - ஸ்ரீநகர் வருகை<br>ஸ்ரீநகரிலிருந்து உதம்பூர் - ஜம்மு - ஸியால்கோட், வஜிராபாத், லாஹூர், அமிர்தசரஸ், ஸஹாரன்பூர், லக்னோ, ஜான்சி, போபால், புஸாவல், மன்மாட், அகமதுநகர் வழியாக மெஹராபாத் வருகை |
| 1930, ஆகஸ்ட் 14- அக்டோபர் 05 | கல்கத்தா - நாக்பூர் - பிஜாபூர் பயணம்<br>நாசிக் - கல்கத்தா - நாக்பூர் - ஹைதராபாத் - கோலாபூர் - பிஜாப்பூர் - பூனா - நாசிக் - மீண்டும் பிஜாப்பூர் வருகை |
| 1930 அக்டோபர் 18 - நவம்பர் 1 | பிஜாப்பூரிலிருந்து நாசிக், மும்பை பயணம் செய்து மெஹராபாத் வருகை |
| 1930, நவம்பர் 7 - 11 | மெஹராபாத் - லோனவாலா - நாசிக் - மெஹராபாத் |
| 1930, நவம்பர் 15-25 | பஞ்சவடி குகையில் ஏகாந்தவாசம் |
| 1930, நவம்பர் 26-27 | மெஹராபாத் - நாசிக் மீண்டும் மெஹராபாத் வருகை |
| 1930, நவம்பர் 29 - டிசம்பர் 23 | மெஹராபாத்திலிருந்து டெல்லி பயணம - மீண்டும் மெஹராபாத் வருகை |
| **1931** | |
| 1931, ஜனவரி 4 - 9 | நாசிக் - மெஹராபாத் - மீண்டும் நாசிக் வருகை |
| 1931, ஜனவரி 15 - 18 | மெஹராபாத் - நாசிக் - மும்பை காரில் பயணம் - ரயிலில் நாசிக் வருகை |

| | |
|---|---|
| 1931, ஏப்ரல் 22 - | லாஹூர் - கராச்சி - குவெட்டா |
| 1931, ஜூன் 01 -<br>ஜூலை 29 | மூன்றாவது பாரசீக பயணம் - டஸ்தாப் - மஷாட்<br>கராச்சி - லாஹூர் - குவெட்டா - கராச்சி வழியாக<br>பிம்பல்காவ்ம் வருகை |
| 1931, ஜூலை 30 -<br>ஆகஸ்ட் 28 | ஸெகன்ட்ராபாத் - குன்னூர் - கராச்சி - மும்பை |
| | **மேற்கத்திய பயணம்** |
| 1931, ஆகஸ்ட் 29 | மெஹர் பாபா, மும்பை கப்பல் தளத்திலிருந்து,<br>'எஸ்.எஸ்.ராஜ்புத்னா' கப்பலில் முதல் மேற்கத்திய பயணம் |
| 1931, செப்டம்பர் 9 | மெஹர் பாபா - மஹாத்மா காந்தி எஸ்.எஸ்.ராஜ்புத்னா<br>கப்பலில் முதல் சந்திப்பு<br>மார்ஸெல்லஸ், பாரிஸ், ஃபோக்ஸ்டன் வழியாக லண்டன்<br>வருகை |
| 1931, செப்டம்பர் 13-24 | கூம்ப் மார்ட்டின், டெவன்ஷியர் விஜயம் |
| 1931, செப்டம்பர் 21 | பூனாவில் ஹஸ்ரத் பாபாஜான் அவரது உடலைத் துறந்தார் |
| 1931, செப்டம்பர் 29 | கென்ஸிங்டன், 32, ரஸ்ஸல் சாலை, லண்டன் - கவிஞர்கள்,<br>விஞ்ஞானிகள், இசைக்கலைஞர்கள் மெஹர் பாபாவுடன் சந்திப்பு |
| 1931, அக்டோபர் 2 | மெஹர் பாபா - காந்தி சந்திப்பு, கிங்ஸ்லி ஹால் சமூக மையம்,<br>ப்ரோம்லி-பை-பௌ, லண்டன் |
| 1931, அக்டோபர் 3-6 | துருக்கி பயணம் - வெனிஸ், பெல்கிரேட், ஸோஃபியா வழியாக<br>இஸ்தான்புல் வருகை |
| 1931, அக்டோபர் 14-18 | மிலான் வருகை. இத்தாலி ஆல்ப்ஸ் மலை |
| 1931, அக்டோபர் 27 | அக்டோபர் 27 - நவம்பர் 6, எஸ்.எஸ். ரோமா கப்பலில் நியூயார்க்<br>- **முதல் அமெரிக்கா பயணம்** - மெஹர் பாபா **ஹார்மன்<br>ரிட்ரீட்** வருகை |
| 1931, டிசம்பர் 5 | வட ஜெர்மன் லாயிட் லைனர் எஸ்.எஸ். ப்ரெமன் கப்பலில்<br>**ஃபிரான்ஸ்** நகரை நோக்கிப் பயணம் |
| 1931, டிசம்பர் 11<br>டிசம்பர் 16 | ஷெர்பர்க் துறைமுகம் வழியாக பாரிஸ் பயணம்<br>மார்ஸெல்லஸ் துறைமுகத்திற்கு ரயிலில் பயணம் |
| 1931, டிசம்பர் 18<br>டிசம்பர் 22 | எஸ்.எஸ். நர்குண்டா கப்பலில் இந்தியா பயணம்<br>போர்ட் ஸாயீட் - எகிப்து வருகை |
| 1932, ஜனவரி 1<br>ஜனவரி 3 | மும்பை, இந்தியா வருகை<br>மெஹர் பாபா - காந்தி சந்திப்பு - மணி பவன், காம்தேவி,<br>மும்பை |
| 1932, | மார்ச் 24, மெஹர் பாபாவின் **இரண்டாவது இங்கிலாந்து<br>பயணம்** - இத்தாலிய கப்பல் 'கோன்டே ரோஸ்ஸோ' |
| 1932, ஏப்ரல் 4 - 6 | வெனிஸ் வருகை - 'ஸெயின்ட் மார்க்ஸ்' சதுக்கம், 'கிரான்ட்'<br>கால்வாய் - காண்டொலாவில் சவாரி - வெனிஸிலிருந்து<br>மிலானுக்குப் பயணம் |
| 1932, ஏப்ரல் 7,<br>ஏப்ரல் 17 | லண்டன் வருகை<br>டெவன்ஷ(ர்) மையம் வருகை |
| 1932, ஏப்ரல் 27 | பாரிஸ் ஈஃபில் கோபுரம், லுகானோ சுவிட்சர்லாந்து, மவுண்ட்<br>ஜெனரோஸோ வருகை |

| | |
|---|---|
| 1932, ஏப்ரல் 30 | மெஹர் பாபாவின் **தந்தையார் ஷெரியார்ஜி** காலமானார் |
| 1932, மே 7 - 9<br>மே 14 | பாரிஸ், புலோக்ன், ஃபோக்ஸ்டன் - (படகில்) லண்டன் வருகை<br>ப்ரேமன் கப்பலில் இரண்டாவது அமெரிக்கா பயணம் ஆரம்பம் |
| 1932, மே 24 | மெஹர் பாபா, ஒரு சிறிய இளஞ்சிவப்பு பூவை எலிஸபெத்திடம் கொடுத்து அன்றைய தேதியைக் குறித்து வைக்கக் கூறிய நிகழ்வு |
| 1932, மே 29 | **லாஸ் ஏஞ்சல்ஸ் ஹாலிவுட்** வருகை |
| 1932, ஜூன் 4,<br>ஜூன் 11 | மான்டேரி கப்பலில் ஹொனலுலு புறப்பட்டனர்<br>ஜப்பானின் எம்பரஸ் கப்பலில் சீனா நான்கிங் பயணம் |
| 1932, ஜூன் 28 | ஷாங்ஹாயிலிருந்து கைசர்-இ-ஹிந்த் கப்பலில் மும்பை பயணம் |
| 1932, ஜூலை 1-15 | ஹாங் காங், சிங்கப்பூர், கொழும்பு, மும்பை வருகை |
| 1932, ஜூலை 16 - 29 | மும்பையிலிருந்து அதே கப்பல் கைசர்-இ-ஹிந்தில் மார்ஸெல்லஸ் பயணம், ஸான்ற மார்கரிற்றா வருகை |
| 1932, ஆகஸ்ட் 6 | அஸிஸி மலை குகையில் பாபாவின் ஏகாந்தவாசம் |
| 1932, ஆகஸ்ட் 8 | ஃபுளோரன்ஸ், போர்குண்டோ மவுண்ட் மான்டேஸெரி வருகை (ஜீஸஸ் முதன் முதலில் ஸெயிண்ட் ஃபிரான்சிஸ்க்கு காட்சி அளித்த இடம்) |
| 1932, ஆகஸ்ட் 11, | போர்டஃபினோ பயணம் |
| 1932, ஆகஸ்ட் 17 - 18 | வெனிஸ் வருகை. ஸெயின்ட் மார்க்ஸ் சதுக்கத்திற்கு விஜயம் |
| 1932, ஆகஸ்ட் 20 - 29 | எகிப்து ‘ஆஸோனியா’ கப்பலில் பயணம். கெய்ரோ, போர்ட் ஸாயீட் - எம்.வி. விக்டோரியாவில் இந்தியாவிற்குப் பயணம். |
| 1932, செப்டம்பர் 5 | மும்பை, நாசிக் வருகை |
| 1932, செப்டம்பர் 13 | மெஹர் பாபா - டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் சந்திப்பு |
| 1932, செப்டம்பர் 21 | சாஞ்சி, ராம்ஜூ இருவரும் பூனா ஏர்வாடா சிறையில் இருந்த மஹாத்மா காந்தியுடன் சந்திப்பு |
| 1932, நவம்பர் 21 | மெஹர் பாபா, மும்பை துறைமுகத்திலிருந்து, இத்தாலிய ‘கோண்தே வெர்டே’ கப்பலில் பயணம் |
| 1932, டிசம்பர் 6<br>டிசம்பர் 14 - 16 | லண்டன் வருகை<br>ஃபெல்ட்மெயிலன், ஸூரிச், ஜெனோவா வருகை |
| 1932, டிசம்பர் 17 - 20,<br>டிசம்பர் 20 | ‘எஸ்பீரியா’ கப்பலில் எகிப்து, அலெக்ஸாண்ட்ரியா பயணம்.<br>ஹெல்வென், ஸக்காரா, கெய்ரோ |
| **1933** | |
| 1933, ஜனவரி 03<br>பிப்ரவரி 2 | எஸ்.எஸ். பலோரன் கப்பலில் இலங்கையை நோக்கிப் பயணம்.<br>மதராஸ் வழியாக மும்பை, நாசிக் வருகை |
| 1933, பிப்ரவரி 15 –<br>மார்ச் 3 | மெஹராபாத், மும்பை விஜயம் |
| 1933, ஏப்ரல் 7 - 26 | மேற்கத்தியர்கள் மும்பை வருகை. பாபாவுடன் பண்டர்தாரா ஏரி, ஆக்ரா, ராவல்பிண்டி, முர்ரி, ஸ்ரீநகர், காஷ்மீர், ஹார்வான் விஜயம் |
| 1933, ஏப்ரல் 26 -27 | மேற்கத்தியர்கள் டெல்லி வழியாக ரயிலில் மும்பை வந்து ‘பிரிட்டானிக்கா’ கப்பலில் ஐரோப்பா பயணம் |

| | |
|---|---|
| 1933, ஜூன் 12<br><br>1933, ஜூன் 23, | மெஹர் பாபா விக்டோரியா கப்பலில் ஐந்தாவது ஐரோப்பிய பயணம்<br>ஜெனோவா, போர்டோ:.பினோ, ஸான்டா மார்கெரிட்டா, ரோம் விஜயம் |
| 1933, ஜூலை 10<br>1933, ஜூலை 24 – ஆகஸ்ட் 4 | மெஹர் பாபாவின் மௌனம் - எட்டாவது ஆண்டு நிறைவு<br>'விக்டோரியா' கப்பலில் பாபா இந்தியா வருகை |
| 1933, செப்டம்பர் 25 – அக்டோபர் 6 | 'எம்.வி.கொண்டே வெர்டே' கப்பலில் ஆறாவது ஐரோப்பிய பயணம். வெனிஸ் வருகை |
| 1933, அக்டோபர் 8-31<br>நவம்பர் 2-14 | பாரிஸ், லண்டன், அவிலா, மாட்ரிட் , பார்சிலோனா பயணம்<br>எஸ்.எஸ். வைஸ்ராய் கப்பலில் மெஹர் பாபா இந்தியா வருகை |
| 1934, பிப்ரவரி 17<br>பிப்ரவரி 18 | மதராஸ் 'மெஹர் பவன்' அய்யங்கார் இல்லம் விஜயம்.<br>மெஹர் பாபாவின் 40-வது பிறந்த நாள் விழா |
| 1934, ஏப்ரல் 17 - மே 02 | பெங்களூரு வருகை. நந்தி மலை, கெங்கேரி கிராமம் ஏகாந்தவாசம். மெஹராபாத் வருகை |
| 1934, ஜூன் 9 - 26 | எஸ்.எஸ். மங்கோலியா கப்பலில் ஏழாவது ஐரோப்பா பயணம். பாரிஸ், லண்டன் வருகை |
| 1934, ஜூலை 6, 12 | ஜூலை 6 ஸூரிச், சுவிட்சர்லாந்து - :.பெல்ட்மெயிலன் மெர்டென்ஸ் இல்லம்.<br>:.பாலென்:.ப்ளூ மலையில் ஏகாந்தவாசம் |
| 1934, ஆகஸ்ட் 2 - 3 | எஸ்.எஸ். ஸ்ட்ராத்நேயர் கப்பலில் பாபா இந்தியா, மெஹராபாத் வருகை |
| 1934, நவம்பர் 15<br><br>நவம்பர் 28-29 | எஸ்.எஸ். டுஸ்கானியா கப்பலில் எட்டாவது மேற்கத்திய பயணம்<br>மார்ஸெல்லஸ், பாரிஸ், லண்டன் வருகை |
| 1934, டிசம்பர் 5 - 18 | எஸ்.எஸ். மெஜஸ்டிக் கப்பலில் அமெரிக்கா பயணம் - நியூயார்க், மெக்ஸிகோ, கலி:.போர்னியா - ரயிலில் பயணம் |
| 1934, டிசம்பர் 26 | ஓசியானோ மணற்குன்றுகள் விஜயம் |
| **1935** | |
| 1935, ஜனவரி 3 - 4 | பாரமவுண்ட், யூனிவெர்ஸல், :.பாக்ஸ், வார்னர் பிரதர்ஸ் ஸ்டுடியோக்கள் விஜயம் |
| 1935, ஜனவரி 10 - பிப்ரவரி 16 | வான்கூவர் - ஹொனலுலு, யோகோஹாமா, ஹாங்காங் , சிங்கபூர், கொழும்பு, மதராஸ் வழியாக மெஹராபாத் வருகை |
| 1935, மே 20 | சத்குரு உபாஸனி மஹாராஜின் 65-ஆவது பிறந்த நாள் |
| 1935, ஜூன் 9 - ஜூலை 10 | ஏகாந்தவாசம், உபவாசம் - அஜ்மீர், தில்வாரா, அர்புடா, மவுண்ட் அபு, சூரத், நவ்ஸாரி, டமன், மெஹராபாத் |
| 1935, ஆகஸ்ட் 23<br>அக்டோபர் 15 - டிசம்பர் 20 | ஏகாந்தவாசத்தின் 40ஆவது நாள்.<br>ஏகாந்தவாசம் - டைகர் வேலி, மும்பை, மெஹராபாத் |
| 1935, டிசம்பர் 31 | மைசூர் பயணம் - மைசூர் ஆசிரமம் |
| **1936** | |
| 1936, ஆகஸ்ட் | ராஹூரி (மஸ்துக்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள்) ஆசிரமம் நிறுவப்பட்டது |

| | |
|---|---|
| 1936, அக்டோபர் 24 – நவம்பர் 23 | கராச்சி, இம்பீரியல் ஏர்வேஸ் ஹத்ரியான் விமானம் வழியாக பாக்தாத், துருக்கி, ஐரோப்பா பயணம் - இந்தியா வருகை |
| 1936, டிசம்பர் 8<br>டிசம்பர் 22 | மேற்கத்தியர்கள் இந்தியா வருகை<br>பண்டர்தாராவிலிருந்து நாசிக் ரிட்ரீட் 'ஸர்ஸாத்' வருகை |
| 1936, டிசம்பர் 25<br>**1937** | கிறிஸ்மஸ் விருந்தும், பரிசுகள் பரிமாற்றமும் |
| 1937, ஜனவரி 5<br>ஜனவரி 8 | மேற்கத்தியர்கள் மெஹர் பாபாவுடன் 'ராஹுரி ஆசிரமம்' விஜயம்<br>மெஹர் பாபாவின் 40 நாள் உபவாசம் ஆரம்பம் |
| 1937, ஜனவரி 11<br>பிப்ரவரி 3 | பாண்டு லேனா குகை - சுற்றுலா<br>மெஹர் பாபா ராஹுரியிலிருந்து நாசிக் வருகை |
| 1937, பிப்ரவரி 17, 18 | மெஹர் பாபாவின் 43ஆவது விசேஷ பிறந்தநாள் விழா |
| 1937, மார்ச் 15,<br>மார்ச் 25 | மேற்கத்திய அன்பர்களுடன் மெஹராபாத் பயணம்<br>கோதாவரி நதியின் பிறப்பிடமான 'திரிம்பக்' மலை விஜயம் |
| 1937, ஏப்ரல் 6<br>ஏப்ரல் 19 - மே 6 | 'ஆனந்த்' பள்ளத்தாக்கு - சுற்றுலா.<br>ராஹுரி ஆசிரமம் மெஹராபாத்திற்கு மாற்றப்பட்டது |
| 1937, ஜூன் ,<br>ஜூலை 10 | மேற்கத்தியர்களில் பலர் தாயகம் (ஐரோப்பா, அமெரிக்கா) திரும்பினர்<br>மௌனத்தின் 12ஆவது வருட நிறைவு நாள் |
| 1937, ஜூலை | ஆன்மீக பணி - மெஹராபாத்தில் மஸ்துகளுக்கும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கும் மெஹர் பாபாவின் சேவை |
| 1937, ஜூலை 31 - ஆகஸ்ட் 13 | 'ஸ்ட்ராத்நேவர்' கப்பலில் மெஹர் பாபா, பெண் மண்டலியுடன் கேன்ஸ் பயணம் |
| 1937, ஆகஸ்ட் 15 | மெஹர் பாபா, பெண் மண்டலியுடன் மோன்ட்ஃப்ளூரியில் 'வில்லா கல்டானா' விலும், ஆண் மண்டலி 'கபோ டி மான்டே' வில்லாவிலும் தங்குதல் |
| 1937, செப்டம்பர் 19-22 | மெஹர் பாபா பெண் மண்டலியுடன் பாரிஸ் பயணம் |
| 1937, செப்டம்பர் 25 - அக்டோபர் 8 | 'ஸ்ட்ராதாய்ட்' கப்பலில் முஹமது மஸ்த் இரண்டு மண்டலியுடன் கேன்ஸ் வருகை |
| 1937, நவம்பர் 3,<br>நவம்பர் 29 | 'டி.எம்.எஸ். ஸர்காஸியா' கப்பலில் மெஹர் பாபா, மும்பை வருகை.<br>மெஹராபாத் அறக்கட்டளை கூட்டம் |
| 1937, டிசம்பர் 21 - 26 | நவ்ஸாரி - நாக்பூர் - மும்பை - தரிசன நிகழ்ச்சி |
| 1937, டிசம்பர் 28 | ஸொராப்ஜி தேசாய் காலமானார்<br>மெஹர் பாபா மெஹராபாத் வருகை |
| **1938** | |
| 1938, ஜனவரி 12,<br>பிப்ரவரி 2 | ஹேப்பி வேலி சுற்றுலா<br>பஞ்ச்கணி - டைகர் வேலி வருகை, இந்து உயர்நிலைப் பள்ளி விஜயம் |
| 1938, பிப்ரவரி 19 - 21 | மெஹர் பாபாவின் மூன்று நாள் சிறப்பு பிறந்தநாள் விழா |
| 1938, மார்ச் 14<br>மார்ச் 28 | பஞ்ச்கணி - 'தில்குஷா' பங்களா - ஏகாந்தவாசம்<br>பிராதாப்கர் கோட்டை விஜயம் |
| 1938, ஏப்ரல் 24, | பெங்களூர் பயணம் - ஆன்மீக மையம் குறித்து பேச்சுவார்த்தை |

| | |
|---|---|
| ஜூன் 10 | நவல் தலாட்டி மாரடைப்பால் மரணம் |
| 1938, ஜூன் 15 | மெஹராபாத் மேல்மலை - கட்டமைப்புப் பணி ஆரம்பம், மெஹர் பாபா, முஹமது மஸ்த் மற்றும் மண்டலி பி.டபிள்யூ.டி. பங்களாவில் தங்குதல் |
| 1938, ஜூலை 10<br>1938, ஜூலை 11 | மௌனத்தின் 13ஆவது வருட நிறைவு நாள்<br>'மெஹர் கெஸட்' பத்திரிகைக் குழு நியமனம் |
| 1938, ஆகஸ்ட் 25<br>செப்டம்பர் 25 | மெஹராபாத் மேல்மலை கட்டிடங்கள் திறப்பு விழா<br>'ராஜா கோபிசந்த்' நாடகம் மஸ்துகளால் அரங்கேற்றப்பட்டது |
| 1938, டிசம்பர் 8<br>டிசம்பர் 8 - 19 | நீலப்பேருந்து பயணம் ஆரம்பம்<br>ஷோலாப்பூர், ஹைதராபாத், நாந்தேட், நாக்பூர், ஜபல்பூர் |
| 1938, டிசம்பர் 29 | மெஹராவின் பிறந்த நாள் |
| **1939** | |
| 1939, ஜனவரி 8-10,<br>ஜனவரி 18 | ஜபல்பூரில் ஆண்கள் & பெண்களுக்கு தனித்தனி தரிசன நிகழ்ச்சி<br>பெனாரஸ் - மெஹர் பாபா கங்கை நதியில் கால்களை நனைத்தல். |
| 1939, ஜனவரி 19,<br>ஜனவரி 23 - 24 | ஸாரநாத் - கௌதம புத்தரைப் பற்றி விளக்கம்<br>கான்பூர், ஆக்ரா விஜயம் |
| 1939, ஜனவரி 26, 27, | தாஜ்மஹால், ஜும்மா மஸ்ஜித், கோட்டை, ஷிஷ் மஹால், மோதி மஸ்ஜித்- எல்லாம் பூஜ்ஜியம் என்ற பாபாவின் விளக்கம், ஃபத்தேபூர் ஸிக்ரி விஜயம் |
| 1939, பிப்ரவரி 1, | டெல்லி வருகை - ஜமா மஸ்ஜித், பழைய கோட்டை, ஹுமாயூன் சமாதி, லஷ்மி நாராயண் கோயில், நிஜாமுதீன் சமாதி, குதுப்மினார் விஜயம் |
| 1939, பிப்ரவரி 06 - 07, | இரண்டு மஸ்துகள் - கமல் போஷ், ஹாஃபீஸ்ஜி நபீனா தொடர்பு; ஆல்வார் வழியாக அஜ்மீர் வருகை |
| 1939, பிப்ரவரி 08 - 13 | ஜெய்ப்பூர் வருகை - அரண்மனை அருகில், பிரம்மானந்தா ஸிங் இரண்டு மேல்நிலை மஸ்துகள் மற்றும் 'சாச்சா' எனும் மஜ்ஜூப் தொடர்பு |
| 1939, பிப்ரவரி 15 -16, | மெஹர் பாபாவின் 45ஆவது பிறந்தநாள் அஜ்மீரில் அனுஷ்டிக்கப்பட்டது; தாரகார் மலை விஜயம் |
| 1939, பிப்ரவரி 27 -<br>மார்ச் 03, 13 | ஜெய்ப்பூர், உஜ்ஜைன், போபால் -<br>மீண்டும் ஜபல்பூர் வருகை |
| 1939, மார்ச் 19 - 25, | குறுகிய பயணம் - நாசிக், பூனா, மும்பை, ஜபல்பூர் |
| 1939, ஏப்ரல் 21 -<br>மே 03, | பதினொரு நாட்கள் உபவாசம், மஸ்துவுடன் ஆன்மீக பணியில் தீவிர ஈடுபாடு |
| 1939, மே 17 - 25, | பத்நேரா, குல்தாபாத் வழியாக **மெஹராபாத்** வருகை |
| 1939, ஜூன் 23, | மஹாத்மா காந்தியை சந்திக்க மெஹர் பாபா, **சாஞ்சி**யை மும்பைக்கு அனுப்பி வைத்தார். |
| 1939, ஜூலை 22 | மஹாத்மா காந்தியின் சக தோழர்கள் மெஹராபாத் விஜயம் |
| 1939, ஜூலை | மெஹராபாத்தில் மஸ்துகளுடன் தீவிர ஆன்மீக பணி - உலகெங்கும் போரின் அறிகுறி |
| 1939, ஆகஸ்ட் 02 - 14 | மெஹர் பாபா ஆண், பெண் மண்டலியுடன் மைசூரை நோக்கிப் பயணம், ஷோலாப்பூர், பெங்களூர் 'லிங்க்ஸ்' பங்களா வருகை |

| | |
|---|---|
| 1939, நவம்பர் 28 - 29 | மஸ்துகளைத் தொடர்புகொள்ள மெஹர் பாபா, தமிழ்நாட்டில் நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி பயணம் |
| 1939, டிசம்பர் 17 | பைரமங்களாவில் மெஹர் பாபாவின் உலகளாவிய ஆன்மீக மையத்திற்கான அடித்தளம் அமைக்கும் விழா |
| 1939, டிசம்பர் 25 - 31 | கிறிஸ்துமஸ், மெஹராவின் பிறந்தநாள் மற்றும் புத்தாண்டை ஒட்டி பெண்மணிகளின் குறுந்நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன |
| **1940** | |
| 1940, ஜனவரி 4 - 10 | தென்னிந்தியாவிற்கு ரயிலில் பயணம் - திருவிதாங்கூர், திருவனந்தபுரம், கேப் காமரின் (கன்னியாகுமரி), மதுரை, திருச்சூர் |
| 1940, ஜனவரி 15 | ஹாஸ்ன் - நீலப்பேருந்தில் குறுகிய பயணம் ‘ஆனந்த்’ பள்ளத்தாக்கு - சுற்றுலா |
| 1940, பிப்ரவரி 15 | மெஹர் பாபாவின் 46ஆவது பிறந்தநாள் லிங்க்ஸ் பங்களாவில் இசை நிகழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது |
| 1940, ஏப்ரல் 1 - 11 | நீலப்பேருந்தில் கோவா பயணம் - அர்சிகேரே, ஷிமோகா, கெர்ஸோப்பா, கார்வார் வழியாக பன்ஜிம் |
| 1940, ஏப்ரல் 15 - 28 | அம்போலி, ஸாவந்த்வாடி, பெல்காவ்ம், சிப்லூன், மகாபாலேஷ்வர், பஞ்ச்கணி டைகர் வேலி குகை விஜயம் |
| 1940, ஏப்ரல் 29 – மே 3 | பஞ்ச்கணியிலிருந்து அஹமதுநகர், ஹேப்பி வேலி விஜயம் பின்னர் மெஹராபாத் வருகை |
| 1940, ஜூன் 1 | மெஹராபாத் மேல்மலையில் அமைந்த மஸ்த் ஆசிரமத்தில் பாபா ஏகாந்தவாசத்தைத் தொடங்கினார் |
| 1940, ஜூலை 3 | மெஹர் பாபா ஆண், பெண் மண்டலி, மஸ்துகளுடன் ரயிலில் ராஞ்சி பயணம் |
| 1940, ஜூலை 19 - 25, | மெஹர் பாபா குழுவுடன் கொல்கத்தா விஜயம்; சக்ரதார்பூர் வழியாக மெஹராபாத் வருகை |
| 1940, நவம்பர் 1 - 4 | இலங்கை பயணம் - தனுஷ்கோடி - தலைமன்னார் - (ரயில், படகு வழியாக) வெயங்கோடா வருகை |
| 1940, டிசம்பர் 5 - 8 | காலிகட் பயணம் - மன்னார், தனுஷ்கோடி, ராம்நாடு - பின்னர் நீலப்பேருந்தில் திண்டுக்கல், பழனி, பொள்ளாச்சி, பாலக்காடு வழியாக காலிக்கட் |
| 1940, டிசம்பர் 23 - 26, | 42 பேர் அடங்கிய குழுவுடன் ஆக்ரா வழியாக ஜெய்ப்பூர் பயணம். |
| **1941** | |
| 1941, ஜனவரி 03 - 08 | மஸ்துகள் தொடர்பு - ஜோத்பூர் வருகை |
| 1941, பிப்ரவரி 03 - 18 | ஜெய்ப்பூரிலிருந்து (5000 மைல் மஸ்த் பயணம்) டெல்லி, லக்னோ, பெனாரஸ், ஜகந்நாத் பூரி, மதராஸ் (ராம்நாடு, திருச்சி), நாக்பூர் பயணம் |
| 1941, பிப்ரவரி 25 - மார்ச் 11 | நீலப்பேருந்தில் மலைவழி பயணம் - ஜெய்ப்பூர், லூதியானா, லாஹூர், மாண்ட்கோமெரி, முல்தான், லோரலாய், குவெட்டா |
| 1941, ஏப்ரல் 10 மே 15 | லாஹூர், லக்ஸர் வழியாக டெஹ்ரா டூன் வருகை அஜ்மீர் வருகை |
| 1941, ஜூன் 11 | மேற்கத்தியர்களில் இருவர் (எலிஸபெத், நோரினா) அமெரிக்காவில் ஆன்மீக மையம் நிறுவும் நோக்கத்தில் தாயகம் திரும்பினர் |

| | |
|---|---|
| 1941, ஜூலை 18<br>ஆகஸ்ட் 01 | மெஹராபாத் வருகை<br>கடுமையான ஏகாந்தவாசம் ஆரம்பம் |
| 1941, செப்டம்பர் 03 –<br>அக்டோபர் 24 | பஞ்ச்கணி ஏகாந்தவாசம், இரண்டு வாரங்களில் இந்தியாவில் 3000 மைல் மஸ்த் பயணம், மீண்டும் பஞ்ச்கணி வருகை |
| 1941, அக்டோபர் 17<br><br>1941, அக்டோபர் 28 -<br>நவம்பர் 12, | மெஹர் பாபா - உபாஸனி மஹாராஜ் இறுதி சந்திப்பு (தஹிகாவ்ம்)<br>பஞ்ச்கணியிலிருந்து நீலப்பேருந்தில் பயணம் - கார்வார் - பெல்காவ்ம் - தார்வாட் |
| 1941, நவம்பர் 14 - 17 | மெஹர் பாபா குழுவுடன் ரயிலில் தமிழ்நாடு, நாகப்பட்டிணம் மஸ்த் (சட்டி பாபா) சந்திப்பு |
| 1941, நவம்பர் 17 - 24 | பெங்களூரிலிருந்து மெஹர் பாபா குழுவுடன் பெல்லாரி, பீஜாப்பூர் வழியாக தார்வாட் வருகை |
| 1941, நவம்பர் 27 - 28 | நீலப்பேருந்தில் மெஹர் பாபாவின் கடைசி பயணம் - தார்வாட் - சத்தாரா - மெஹராபாத் வருகை |
| 1941, டிசம்பர் 12 | துனி நாள் - தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் இந்த தேதியை துனி தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது |
| 1941, டிசம்பர் 24 | சத்குரு உபாஸனி மஹாராஜ் பௌதீக உடலைத் துறந்தார் |
| 1941, டிசம்பர் 29 | மெஹர் பாபா குழுவுடன் மெஹராபாத்திலிருந்து ‘கும்பமேளா’ நிகழும் அலஹாபாத்திற்குப் பயணம் |
| 1942, டிசம்பர் 30 -31 | கும்ப மேளாவில் 7000க்கும் அதிகமான சாதுக்களின் பாதங்களைத் தொட்டு வணங்கினார் |
| **1942** | |
| 1942, ஜனவரி 01 - 06,<br>ஜனவரி 15 - 21, | ஸெக்கந்திராபாத், ஷோலாபூர் வழியாக மெஹராபாத் வருகை.<br>தென்னிந்தியா ஹூப்ளி, நாகப்பட்டினம், நாகூர் பயணம் |
| 1942, | பிப்ரவரி 02 - 05, டெஹ்ரா டூன் வருகை.<br>பிப்ரவரி 11 - 15, இமயமலை அருகில் (ஹரித்வார், ரூர்க்கி) மஸ்த் பயணம் |
| 1942, பிப்ரவரி 15 - 20 | அஜ்மீர், ஜோத்பூர், பரேலி, மொராதாபாத், டெஹ்ரா டூன் மஸ்த் பயணம் - டெஹ்ரா டூன் உள்ளூர் பகுதிகளில் மஸ்த் தொடர்புகள் |
| 1942, மார்ச் 12 - 22,<br>பிப்ரவரி - மார்ச் | மஸ்த் பயணம் - கோரக்பூர், சீதாபூர், பரேலி - டெஹ்ரா டூன்<br>நான்கு செய்திகளை அரசியல் தலைவர்களுக்கு வழங்கினார் |
| 1942, ஏப்ரல் 10,<br>ஏப்ரல் 11 - 15, | காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் பற்றிய விளக்கம்<br>மெஹர் பாபாவின் மண்டலி காந்தியுடன் சந்திப்பு |
| 1942, ஏப்ரல் 25 –<br>மே 24, | மஸ்த் பயணம் - டெஹ்ரா டூன் - ராவல்பிண்டி, ஸியால்கோட், லாஹூர், ஹரித்வார், ரிஷிக்கேஷ், நேபாளம், பூட்டான் எல்லை - டெஹ்ரா டூன் |
| 1942, மே 26 –<br>ஜூன் 30 | பெண் மண்டலியுடன் ரிஷிக்கேஷ், ஹரித்வார் - மஸ்த் பயணம் - டெஹ்ரா டூன் வருகை |
| 1942, ஜூலை 10 - 30,<br>ஆகஸ்ட் 03, | காத்கோடம், பரேலி, நஜிபாபாத், ஸாஹரன்பூர், அஜ்மீர், புஷ்கர் டெஹ்ரா டூன் - ‘காம்ரேட்’ நாளிதழில் இளைஞர்களுக்கான செய்தி |
| 1942, செப்டம்பர் 10,<br>அக்டோபர் 20-29 | மெஹர் பாபா மண்டலியுடன் லோனவாலா வருகை.<br>தென்னிந்திய மஸ்த் பயணம் - நாகப்பட்டினம், ஹூப்ளி |

| | |
|---|---|
| 1942, நவம்பர் 21 | பாபாவின் செய்தியை - மும்பை, பூனா, நாக்பூர், ஹைதராபாத், அலஹாபாத், லாஹூர், ஷோலாப்பூர் நகரங்களில் பரப்பத் தீர்மானம் |
| 1942, டிசம்பர் 04 – 22<br>டிசம்பர் 27 | ராய்பூர் மஸ்த் பயணம் - மெஹராபாத் வருகை.<br>தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பேர் அடங்கிய குழுவின் சிறப்பு கூட்டம் |
| 1942, டிசம்பர் 28 | மெஹராவின் பிறந்தநாள் |
| **1943** | |
| 1943, ஜனவரி 11 | மெஹராபாத் கூட்டத்தின் சிறப்பு செய்தி, ஆகா கான் அரண்மனையில் சிறை வைக்கப்பட்ட காந்திக்கு வழங்கப்பட்டது |
| 1943, ஜனவரி 24 –<br>பிப்ரவரி 02<br>பிப்ரவரி 10 | குல்தாபாத் மஸ்த் பயணம்<br>மஹாபலேஷ்வர் பயணம் |
| 1943, பிப்ரவரி 14 | மெஹர் பாபாவின் 49ஆவது பிறந்தநாள் - மும்பை, பூனா, நாக்பூர், ஷோலாபூர், மதராஸ், லாஹூர் நகரங்களில் சிறப்பு கூட்டங்கள் |
| 1943, பிப்ரவரி 25 | ஷிரீன்மாய், மெஹர் பாபாவின் தாயார் (மெமோ) 65 வயதில் காலமானார் |
| 1943, மார்ச் 09 – 10<br>மார்ச் 11 - 19 | ஷோலாபூர், அக்கல்கோட் விஜயம்<br>தென்னிந்தியாவில் விஜயவாடா, கோட்டலங்கா வருகை |
| 1943, மார்ச் 19 –<br>ஏப்ரல் 17 | பிலார் வனப்பகுதியில் 'ஜல்கி' பங்களாவில் மண்டலியுடன் தங்கியிருந்து மெஹராபாத் வருகை |
| 1943, மே 14 - 19 | மெஹராபாத் சிறப்பு கூட்டம் - 125 இந்திய ஆண் அன்பர்கள் பங்கெடுப்பு - மெஹர் பாபாவின் 'தெய்வீக கருப்பொருள்' விளக்கம் |
| 1943, மே 21 - 26 | மெஹர் பாபா பிலார் பயணம், நீலப்பேருந்தில் ஆண், பெண் மண்டலியுடன் மெஹராபாத் வருகை |
| 1943, ஜூலை 6 –<br>ஆகஸ்ட் 19 | லாஹூர் மஸ்த் பயணம், மெஹராபாத் வருகை. மீண்டும் லாஹூர் பயணம் |
| 1943, செப்டம்பர் 02 -11 | மெஹர் பாபா காஷ்மீர், ஸ்ரீநகர், ராவல்பிண்டி, ஜஸ்கிரான் மலைப்பகுதி, ஹரிபூர் மஸ்த் பயணம் |
| 1943, அக்டோபர் 14 –<br>நவம்பர் 21 | கல்கத்தா, லக்னோ நகரங்களில் 'ஏழை நிகழ்ச்சி' & ஜலந்தர், லாஹூர், அமிர்தசரஸ் பொற்கோயில் விஜயம் |
| 1943, நவம்பர் 30 | மெஹர் பாபா மண்டலியுடன் பிம்பல்காவ்ம் (மெஹராஸாத்) விஜயம் |
| 1943, டிசம்பர் 30 -31 | மெஹராவின் பிறந்தநாளை முன்னிட்டு பூனாவில் சிறப்பு தரிசன நிகழ்ச்சி |
| **1944** | |
| 1944, ஜனவரி 01 – 03<br>ஜனவரி 09 | மெஹராபாத், ஔரங்காபாத் வருகை<br>மெஹராஸாத் இல்லத்தில் தங்கத் தொடங்கினார் |
| 1944, ஏப்ரல் 1 - 10 | குவாலியர், ஔரங்காபாத் மஸ்த் பயணம்; மெஹராபாத் வருகை |
| 1944, ஜூலை 07 - 14 | ராய்பூர் பயணம், மஸ்த் பணி - அமராவதி, எலிச்பூர், பாஸிம், பட்நேரா, டாட்டா நகர் |
| 1944, ஆகஸ்ட் 18, | ஸ்ரீநகர், காஷ்மீர் பயணம் |

| | |
|---|---|
| ஆகஸ்ட் 25 | சாஞ்சி - காஷ்மீரில் மரணம் |
| 1944, செப்டம்பர் 21 30, | ராவல்பிண்டி, பெஷாவர், ஆஃப்கான் எல்லைப்பகுதி விஜயம் - ஆக்ரா, டெல்லி, ஔரங்காபாத் வருகை |
| 1944, அக்டோபர் 02 | மர்டில் பீச், மெஹர் பாபா ஆன்மீக மையம் நிறுவுதல் தொடர்பான கடிதப் பரிமாற்றம் |
| 1944, நவம்பர் 10 – 17<br>1944, டிசம்பர் 19 | நாக்பூர், ஸாவ்னேர் தரிசன நிகழ்ச்சிகள் - ஔரங்காபாத் வருகை<br>மெஹராபாத்தில் மாஸாஜி காலமானார் |
| **1945** | |
| 1945, பிப்ரவரி 02 - 23 | ஜான்சி, ஹைதராபாத் (ஜூபிலி ஹில்ஸ்), ஸெக்கந்திராபாத் மஸ்த் பயணம் - மெஹராபாத் வருகை |
| 1945, பிப்ரவரி 25,<br>மார்ச் 09 | மெஹர் பாபாவின் 51ஆவது பிறந்தநாள்<br>ஹைதராபாத் மஸ்த் பயணம் |
| 1945, மே 22-23,<br>ஜூலை 06 - 26 | மெஹராபாத் - இரண்டு நாள் சிறப்பு கூட்டம்<br>மஸ்த் பயணம் - குல்பர்கா, யாத்கிரி, தும்கூர் - தொடர்ந்து ஹைதராபாத் வருகை |
| 1945, அக்டோபர் 02 | மெஹர் பாபா மண்டலியுடன் ராய்பூர் பயணம் |
| 1945, அக்டோபர் 07 | குல்மாயின் கணவர் கய்குஷ்ரு கான்ஸாஹேப் காலமானார் |
| 1945, அக்டோபர் 06-12 | மெஹர் பாபா கல்கத்தா பயணம் - 1001 ஏழைகளின் கால்களைக் கழுவி பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சி - சுமார் 50 மஸ்துகளுடன் சந்திப்பு |
| 1945, அக்டோபர் 14<br>அக்டோபர் 18 | மிட்னாபூர், பிஷ்ணுபூர், பன்சி, பாலசூர், பத்ரக் மஸ்த் பயணம்<br>கட்டாக், ராய்கர், ராய்பூர் வருகை |
| 1945, அக்டோபர் 31 -<br>நவம்பர் 13, | ஷிஹாவா வனப்பகுதியில் அமைந்த அங்கிரஸ் மலையில் ஏகாந்தவாசம் |
| 1945, நவம்பர் 15 – 16<br>டிசம்பர் 25 | ஜான்சி, மதுரா, லலித்பூர், திகம்பர், போபால் மஸ்த் பயணம்<br>மெஹராவின் 52ஆவது பிறந்த நாள் விழா |
| **1946** | |
| 1946, ஜனவரி 03 | மெஹராபாத்தில் 40 நாள் ஏகாந்தவாசம் ஆரம்பம் |
| 1946, பிப்ரவரி 15 | மெஹர் பாபாவின் பிறந்த நாள் விழா |
| 1946, ஏப்ரல் 14 | நதீன் டால்ஸ்டாய் நியூயாரக்கில் காலமானார் |
| 1946, ஏப்ரல் 20-27 | ஹரித்வார், ரிஷிகேஷ், பானிபட் மஸ்த் பயணம் |
| 1946, ஜூலை 28 –<br>அக்டோபர் 10, | அமிர்தசரஸ், சிம்லா, அம்பாலா, ஹரித்வார், ரிஷிகேஷ், லாஹூர் - மஸ்த் பயணம் |
| 1946, டிசம்பர் 02 | மஹாபலேஷ்வர் (மஸ்த் ஆசிரமம்) வருகை |
| **1947** | |
| 1947, மார்ச் 14, | பூனா வழியாக மெஹராபாத் வருகை. |
| 1947, ஏப்ரல் 01 - 05 | மதராஸ் பயணம், ஐயங்காரின் 'மெஹர் பவன்' இல்லத்தில் தரிசன நிகழ்ச்சி; பக்தர்களின் இல்லங்களுக்கு விஜயம் |
| 1947, ஏப்ரல் 06 –<br>ஆகஸ்ட் 09, | மஹாபலேஷ்வர், புரந்தர் மலை, சத்தாரா ஏகாந்தவாசம், மஸ்துகளுடன் பணி - பூனா வருகை |

| | |
|---|---|
| 1947, ஆகஸ்ட் 09 – ஆகஸ்ட் 15, | சங்கம்னேர், கோப்பர்காவ்ம், ஔரங்காபாத், ஜால்னா, ஹைதராபாத், ஷோலாப்பூர் மற்றும் பிற இடங்களில் மஸ்த் பணி தொடர்ந்தது |
| 1947, ஆகஸ்ட் 15 | இந்திய தேசம் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டது |
| 1947, ஆகஸ்ட் 15 | மெஹர் பாபா பூனா வருகை |
| 1947, ஆகஸ்ட் 15 – 27<br>செப்டம்பர் 10 | சத்தாரா விஜயம்<br>பிம்பல்காவ்ம் கிராமத்திற்குக் குடிபெயர்ந்தார் |
| 1947, செப்டம்பர் 17- 2<br>1947, அக்டோபர் 16, | சூரத், பரோடா & அஹமதாபாத் - வெகுஜன தரிசன நிகழ்ச்சி<br>இறுதி கட்ட மஸ்த் பணி, அஜ்மீர் பயணம் |
| 1947, நவம்பர் 28<br>டிசம்பர் 02 | பிம்பல்காவ்ம் 'தெம்பி' மலை விஜயம்<br>'தெம்பி' மலையில் அலி ஷாவுடன் ஏகாந்தவாசம் ஆரம்பம் |
| 1947, டிசம்பர் 31 | மெஹராவின் பிறந்தநாள் விழா –<br>மெஹர் பாபா பெண்மணிகளுடன் மெஹராபாத் வருகை |
| **1948** | |
| 1948, ஜனவரி 30<br>பிப்ரவரி 07 - 09, | மஹாத்மா காந்தி கொலை செய்யப்பட்டார்<br>அலஹாபாத் 'அர்த்த கும்ப மேளா'வில் சாதுக்களுடன் தொடர்பு |
| 1948, பிப்ரவரி 13<br>பிப்ரவரி 26 | மெஹர் பாபாவின் 54ஆவது பிறந்தநாள்<br>மெஹராபாத்தில் மெஹர் பாபாவின் 40 நாள் உபவாசம் நிறைவு |
| 1948, மார்ச் 15 - 20<br>மார்ச் 30 | மும்பையில் மஸ்த் பணி<br>கல்கத்தா - ராணாகாட் (பாகிஸ்தான் எல்லை) - கல்கத்தா வருகை |
| 1948, ஏப்ரல் 01 | கல்கத்தா, பாட்டாநகர் மஸ்த் பணி, ஹரித்வாருக்கு 'மெயில் ரயில்' வழியாகப் பயணம் |
| 1948, ஏப்ரல் 04 - 21 | ஹரித்வார், ரிஷிகேஷ், தெஹ்ரி கர்வால், பின்னர் உத்தர காஷி நோக்கி நடைப்பயணம், மஸ்த் பணி - ஆக்ரா வழி அஹமதுநகர் வருகை, |
| 1948, ஜூன் 01 - 12 | மெஹராபாத் வருகை, தொடரந்து மஸ்த் பணி மும்பை - பரோடா - அஹமதாபாத் - மும்பை |
| 1948, ஆகஸ்ட் 08 - 19, | மதராஸ் மஸ்த் பயணம் - ராயபுரம், திருச்சிராப்பள்ளி, திருவள்ளூர், அவனாசி, திருப்பூர், மதராஸ் - அஹமதுநகர் வருகை |
| 1948, ஆகஸ்ட் 27, | பிம்பல்காவ்ம் கிராமத்தில் அமைந்த மெஹர் பாபாவின் புதிய இல்லம் 'மெஹராஸாத்' திறப்பு விழா |
| 1948, நவம்பர் 01 -23 | குஜராத் மஸ்த் பயணம் - ஜூனாகாட், தாதர் மலை, கிர்னார் மலை, டில்லி, அஜ்மீர், பரோடா, மோர்வி, ராஜ்கோட், அஹமதாபாத், மும்பை |
| 1948, நவம்பர் - டிசம்பர், | மெஹராஸாத்தில் முழு மாதமும் தங்கியிருந்து, 'கடவுள் பேசுகிறார்' என்ற புத்தகத்திற்குத் தேவையான குறிப்புகளை வழங்கினார். |
| 1948, டிசம்பர் 25<br>டிசம்பர் 30 | மெஹராபாத்தில் கிறிஸ்துமஸ் விழா<br>மெஹராவின் பிறந்தநாள் விழா |
| **1949** | |

| | |
|---|---|
| 1949, பிப்ரவரி 15 - 28 | மஸ்த் பயணம் - பெல்காவ்ம், வெங்குர்லா, அம்போலி, பூனா, மும்பை வருகை |
| 1949, மார்ச் 07 - ஏப்ரல் 11 | மவுண்ட் அபு, விரிவான மஸ்த் சுற்றுப்பயணம் - அஜ்மீர் தாராகர் மலை, ஸோஜத், அஹமதாபாத், தில்வாரா, மும்பை வருகை |
| 1949, ஏப்ரல் 13 - 20 | மஸ்த் பயணம் - அக்கோலா, பத்னேரா, சந்த்தாரா, நாக்பூர், சியோனி, ஜபல்பூர், மாண்ட்லா, கட்னி, ரேவா, அலஹாபாத், சித்ரகோட் வருகை |
| 1949, ஏப்ரல் 22 - 28, | மஸ்த் பயணம் - கோண்டா, பஹ்ரைச், அயோத்தி, பெனாரஸ், கயா, மவுண்ட் அபு வருகை; மீண்டும் தில்வாரா விஜயம் |
| 1949, மே 12 - 16, | மே 12 - 16, மேலும் ஒரு மஸ்த் பயணம் - அபு சாலை, பாலம்பூர், குல்பர்கா, யாத்கிரி, தும்கூர், ஹைதராபாத், மீண்டும் மவுண்ட் அபு வருகை |
| 1949, மே 27 - 31 | மெஹர் பாபா, மவுண்ட் அபுவிலிருந்து ஆண், பெண் மண்டலியுடன் மெஹராஸாத் வருகை |
| 1949, ஜூன் 22 | மெஹர் பாபாவின் 40 நாள் ஏகாந்தவாசம் மெஹராஸாத்தில் (நீலப்பேருந்தில்) தொடங்கியது - மஸ்த் அலி ஷாவுடன் ஆன்மீக உள்பணி |
| 1949, ஜூலை 01 ஜூலை 16 | ஏகாந்தவாசத்தின் இரண்டாம் கட்டம் தொடங்கம். கடைசி கட்ட 9 நாள் ஏகாந்தவாசம் - துபே பங்களா, பூனா |
| 1949, ஆகஸ்ட் 01 | மெஹர் பாபாவின் 'மகத்தான ஏகாந்தவாசம்' நிறைவுக்கு வந்தது; 'புது வாழ்வு' எனும் அடுத்த கட்ட பணி தொடங்க இருந்தது |
| 1949, ஆகஸ்ட் 05 - 10 | மெஹரா, மணி, மெஹரு, கோஹெர் ஆகியோருடன் மெஹர் பாபா, மெஹராஸாத்திலிருந்து சத்தாரா, பஞ்ச்கணி பயணம் |
| 1949, ஆகஸ்ட் 12 | மெஹர் பாபா மண்டலியுடன் மெஹராஸாத் வருகை |
| 1949, ஆகஸ்ட் 15 - 20 | ஜனவரி 01 அன்று 'புது வாழ்வு' தொடர்பான முதல் சுற்றறிக்கை வெளியீடு - மெஹராபாத்தில் 'புது வாழ்வு' குறித்த ஐந்து நாட்கள் கூட்டம் - அக்டோபர் 15, அனைத்தையும் சீர்படுத்தவும், வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடிக்கவும் ஒரு காலக்கெடுவாக நிர்ணயிக்கப்பட்ட நாள் |
| 1949, ஆகஸ்ட் 30 | ஹமிர்பூரிலிருந்து வருகை தந்த நான்கு முக்கியஸ்தர்களுடன் மெஹர் பாபா சந்திப்பு |
| 1949, ஆகஸ்ட் 31, 32 | நெருங்கிய சீடர்களுடன் 'புது வாழ்வின்' நிபந்தனைகளை முன்வைக்கும், இறுதிக்கட்ட கூட்டம் |
| 1949, செப்டம்பர் 11 | 'புது வாழ்வு தோழர்கள்' உடன் எடுத்துச்செல்ல வேண்டிய தனிப்பட்ட உடைமைகளின் பட்டியலைக் குறித்த மெஹர் பாபாவின் விளக்கம் |
| 1949, அக்டோபர் 10 | கிழக்கு மற்றும் மேற்கத்திய நாட்டு அன்பர்களுக்கு பாபாவின் 'புது வாழ்வு' குறித்த சுற்றறிக்கை வெளியீடு |
| 1949, அக்டோபர் 16, | முழுமையான துறவு மற்றும் ஆதரவற்ற 'புது வாழ்வு' - 16 ஆண், 4 பெண் தோழர்களுடன் பெல்காவ்ம் நகரை நோக்கிப் பயணம் ஆரம்பம் |

| | |
|---|---|
| 1949, அக்டோபர் 29 | பெல்காவ்ம் பயிற்சி மையம் - ஹரித்வார் சொத்து என்று அழைக்கப்பட்ட 'மாஞ்ஜ்ரி மா:ஃபி' மனையைப் பற்றிய பாபாவின் விளக்கம் |
| 1949, அக்டோபர் 31 | மெஹர் பாபாவின் **'புது வாழ்வு'** கவிதை - டாக்டர் கனியால் இயற்றப்பட்டது |
| 1949, நவம்பர் 12 | பெல்காவ்மிலிருந்து புறப்பட்டு முகல் ஸராய் வழியாக ரயிலில் பெனாரஸ் பயணம். உணவுக்காக யாசிப்பது குறித்து பாபாவின் விளக்கம் |
| 1949, நவம்பர் 13 - 15 | மும்பையிலிருந்து பெனாரஸுக்கு ரயிலில் பயணம் - 'நாட்டி இம்லி' என்ற விசாலமான பங்களாவில் குழு குடிபெயர்ந்தது |
| 1949, நவம்பர் 13 , 24 | பெனாரஸில் உணவுக்காக யாசிப்பதற்கான நிபந்தனைகளை வெளியிட்டு பாபா முதன்முதலாக யாசிக்கச் சென்றார் |
| 1949, டிசம்பர் 3 – 5<br>டிசம்பர் 12, | சாரநாத்தில் புத்தர் கோவில் விஜயம்<br>ஹரித்வாரை நோக்கி நாடோடி (ஜிப்சி) வாழ்க்கை ஆரம்பம் |
| 1949, டிசம்பர் 29 | மொராதாபாத் வருகை - தொடர்ந்து...1950, ஜனவரி 4 - 12 ரத்தன்கர், நஜிபாபாத், அக்பராபாத் கிராமங்களில் முகாம் - டெஹ்ராடூன் வருகை |
| **1950** | |
| 1950, ஜனவரி 16<br>பிப்ரவரி 5 | தலைமையகம் மாஞ்ஜ்ரி மா:ஃபிக்கு மாற்றப்பட்டது<br>ஹரித்வார் 'கும்பமேளா'வில் கலந்துகொள்ள மோத்திச்சூர் வருகை |
| 1950, மார்ச் 9 | ரிஷிகேஷ் வருகை, இமயமலை அடிவாரத்தில் அமைந்த ஆசிரமங்களில் சாதுக்கள், மகாத்மாக்களுக்கு மரியாதை வழங்கும் நிகழ்ச்சி. |
| 1950, மார்ச் 14 –<br>ஏப்ரல் 4 | ஸாத் ஸரோவர்' ஏரி, கன்கல் மலைப்பகுதி, மாயாபூர், ஹரித்வார் தொடர்புகளுடன் மொத்த எண்ணிக்கை 10,000ஐ எட்டியது |
| 1950, ஏப்ரல் 5<br>மே 10 | கும்பமேளா பணி நிறைவடைந்ததும் மாஞ்ஜ்ரி மா:ஃபி வருகை<br>பாபா, தோழர்களுடன் டெஹ்ராடூன் வருகை |
| 1950, ஜூன் 14 | மாஞ்ஜ்ரி மா:ஃபியில் குறிப்பிடத்தக்க பணியை நிறைவு செய்த பாபா டெஹ்ராடூனிலிருந்து கல்யாண் வழியாக சத்தாரா வருகை |
| 1950, ஆகஸ்ட் 21 – 27 -<br>செப்டம்பர் 11 | உடல் களைப்பால் பூனாவில் ஓய்வு, தரிசனங்கள் இல்லை.<br>மும்பையில் பல மஸ்துகளுடன் சந்திப்பு |
| 1950, செப்டம்பர் 12<br>செப்டம்பர் 14-30 | பாபா, திரைப்பட தயாரிப்பாளர் கேப்ரியல் பாஸ்கலுடன் சந்திப்பு.<br>சத்தாரா வருகை, மஹாபலேஷ்வர் கூட்டம் - தீர்மானங்கள் |
| 1950, அக்டோபர் 1 | பாபா, ஆண், பெண் தோழர்களுடன் மஹாபலேஷ்வர், ஆகா கான் பங்களா வருகை |
| 1950, அக்டோபர் 16-20 | மஹாபலேஷ்வரில் இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்ட 200 அன்பர்களுடன் சிறப்புக் கூட்டம் |
| 1950, அக்டோபர் 21 | ஒரு மாதம் - பீகார், வங்காளம், ஒரிஸா, நேபாளம், மதராஸ், ஹைதராபாத், மும்பை - மஸ்துகள், நடுத்தர ஏழைகளுடன் சந்திப்பு |
| 1950, டிசம்பர் 6 | இறுதியாக மும்பையில் மஸ்த் பணியை நிறைவு செய்து மஹாபலேஷ்வர் வருகை |

| | |
|---|---|
| **1951** | |
| 1951, ஜனவரி 15 - 20 | தெற்கு நோக்கி 1400 மைல் மஸ்த் பயணம் - ஷோலாபூர், ஹைதராபாத், ஸெகந்திராபாத், குல்பர்கா, பூனா, மஹாபலேஷ்வர் |
| 1951, ஜனவரி 29 - பிப்ரவரி 5 | **மும்பை மஸ்த் பயணம்** - மஹாபலேஷ்வர் வருகை |
| 1951, பிப்ரவரி 13 | மஹாபலேஷ்வரில் 100 நாள் ஏகாந்தவாசம் ஆரம்பம் |
| 1951, மார்ச் 27<br><br>1951, ஏப்ரல் 7<br>மே 5 | பூனா வருகை - ஏழு குறிப்பிட்ட இடங்களில் ஏகாந்தவாசம், பூனா 'குருப்பிரசாத் பங்களா' கையகப்படுத்தப்பட்டது<br>மஹாபலேஷ்வரில் ஏகாந்தவாசம் தொடர்ந்தது.<br>மெஹர் பாபா ஆண் பெண் மண்டலியுடன் மும்பை விஜயம் |
| 1951, மே 9<br>மே 22 | மஹாபலேஷ்வர் புல் குடிசையில் ஏகாந்தவாசம் தொடர்ந்தது<br>பூனாவில் 7 மஸ்துகளை சந்தித்து மஹாபலேஷ்வர் வருகை |
| 1951, மே 25 | ஹைதராபாத் பயணம் - 'ஜூப்ளி ஹில்ஸில் அமைந்த கோஹினூர் பங்களா'வில் குடியேறல். ஏகாந்தவாசம், மஸத் தொடர்பு தொடர்ந்தது |
| 1951, ஜூன் | மனோநாஷ் பிரகடனம் - நான்கு கட்ட மனோநாஷ் பணி |
| 1951, ஆகஸ்ட் 20 | டாக்டர் கனி மாரடைப்பால் பூனாவில் காலமானார் |
| 1951, அக்டோபர் 15- 24 | மனோநாஷ் முதல்கட்ட பணி - ஏகாந்தவாசம் ஹைதராபாத் கோஜாகுடா மலையில் ஆரம்பம் |
| 1951, அக்டோபர் 24 | பாபா, கோஜாகுடா மலையிலிருந்து புறப்பட்டு, அஹமதுநகரை நோக்கி மேற்கொள்ளும் அடுத்த கட்டத்தின் கடைசி நடை பயணம் ஆரம்பம் |
| 1951, அக்டோபர் 24<br>நவம்பர் 23 | கோஜாகுடா மலை, லிங்கம்பள்ளி, ஜோகிப்பேட்டை, சங்கரெட்டி, சதாசிவப்பேட்டை, ஹொம்னாபாத், சிட்குப்பா, குல்பர்கா, வாரங்கல், யாத்கிரி, தும்கூர், துல்ஜாப்பூர், உஸ்மானாபாத், ஔரங்காபாத், குல்தாபாத், எல்லோரா, நாந்தேட், டோக்கா, இமாம்பூர், மெஹராஸாத் வருகை |
| 1951, நவம்பர் 23 –<br>1952, பிப்ரவரி 12 | மெஹராஸாத் தெம்பி மலையில் மனோநாஷ், கடைசி கட்ட ஏகாந்தவாசம் நிறைவு |
| **1952** | |
| 1952, பிப்ரவரி 13 | பாபா, 'புது வாழ்வு' தொடங்கியதிலிருந்து முதல் முறையாக மெஹராபாத்திற்கு விஜயம் |
| 1952, பிப்ரவரி 17 – 22<br>மார்ச் 21 | அமெரிக்க விஸா தொடர்பாக மும்பை பயணம்<br>'சிக்கலான சுதந்திர வாழ்வின்' முதல் நாள் - சுற்றறிக்கை வெளியீடு |
| 1952, ஏப்ரல் 18 - 21 | மெஹர் பாபா, 6 பெண் மண்டலி, தொடர்ந்து ஏப்ரல் 20, 5 ஆண் மண்டலி அமெரிக்கா பயணம் - மர்டில் பீச், தெற்கு கரோலினா வருகை |
| 1952, மே 9 | 'மர்டில் பீச் மெஹர் ஆன்மீக மையம்' அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைக்கபட்டது |
| 1952, மே 20 | மெஹர் பாபா பெண் மண்டலியுடன் இரண்டு கார்களில் - ஜூன் 6 அன்று ஸான் ஃபிரான்சிஸ்கோ சென்று, ஜூன் 10ஆம் நாள் |

| | |
|---|---|
| | மர்டில் பீச்சிற்குத் திரும்பி வரும் பயணத்தைத் தொடங்கப் போவதாகத் திட்டம் வகுக்கப்பட்டது |
| 1952, மே 21 - 23 | கொலம்பியா, மர்ஃபி, டென்னசி - மெம்ஃபிஸ், க்ளீவ்லேண்ட், சட்டனூகா, ஆர்கன்ஸாஸ் - ஸெர்சி வழியாக ஓஸர்க் வருகை |
| 1952, மே 24 | ஓக்லஹோமா - லிங்கன் கவுண்டி, சாலை எண் 62, பிராக் நகரில் கார் விபத்து |
| 1952, ஜூன் 4 - 8 | மெஹர் பாபா, பிராக் மருத்துவமனையிலிருந்து அவசர ஊர்தி மூலமாகமர்டில் பீச், யூபான் டூன்ஸ் வருகை |
| 1952, ஜூன் 17, | 'மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸம்' குறித்த சுற்றறிக்கை வெளியீடு |
| 1952, ஜூலை 2, | மெஹர் பாபா மர்டில் பீச் மையத்திற்கு இறுதி விஜயம் |
| 1952, ஜூலை 14 - 15 | மெஹர் பாபா மண்டலியுடன் ஃபுளாரன்ஸ் நகரிலிருந்து ரயிலில் ஸ்கார்ஸ்டேல் & நியூயார்க் பயணம் |
| 1952, ஜூலை 30 - 31 | மெஹர் பாபா, பெண் மண்டலியுடன் நியூயார்க் நகரத்திலிருந்து வான்வழி லண்டன் பயணம் |
| 1952, ஆகஸ்ட் 6, | லண்டன் - ஸூரிச் பயணம், லோகார்னோ வருகை |
| 1952, ஆகஸ்ட் 21 - 23 | பாரிஸிலிருந்து கராச்சி வழியாக மும்பை, மெஹராஸாத் வருகை |
| 1952, ஆகஸ்ட் 31<br>அக்டோபர் 5 | மெஹராபாத், அஹமதுநகர் மண்டலியுடன் பாபாவின் சந்திப்பு ஆந்திரா, ஹமீர்பூர் சுற்றுப்பயண நிர்வாகிகளுடன் சந்திப்பு |
| 1952, அக்டோபர் 6<br>நவம்பர் 1 | பாபாவின் மண்டலி **ஜால் கேரவாலா** இறைவனடி சேர்ந்தார். பாபா மெஹராபாத் விஜயம், மண்டலியுடன் சந்திப்பு |
| 1952, நவம்பர் 1 - 6 | 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு' குறித்த மெஹர் பாபாவின் விளக்கங்களும் பல்வேறு தலைப்புகளில் சொற்பொழிவுகளும் |
| 1952, நவம்பர் 5 | மெஹராவின் தாயார் தௌலத்மாய், 76 வயதில், நாசிக் நகரில் காலமானார் |
| 1952, நவம்பர் 6 - 8 | மெஹர் பாபாவின் மண்டலி மற்றும் அன்பர்களுடன் 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு' குறித்த மூன்று நாள் சிறப்புக் கூட்டம் |
| 1952, நவம்பர் 14 - 16 | 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு' பயணம் - ஸாக்கோரி, ஷிர்டி, பூனா, மும்பை, கான்பூர் வழியாக ஹமிர்பூர் வருகை |
| 1952, நவம்பர் 18 - 27 | அனல் பறக்கும் ஹமிர்பூர் சிறப்பு தரிசனம் |
| 1952, நவம்பர் 28 –<br>டிசம்பர் 5 | ஹமிர்பூரிலிருந்து ஜான்சி வழியாக **டெல்லி** பயணம், தரிசனம் நிறைவு செய்து மெஹராஸாத் வருகை |
| 1952, டிசம்பர் 12 - 24 | குல்தாபாத் பயணம் - மன்மாட் வழியாக ரயிலில் பயணித்து பத்னேரா, அம்ராவதி தரிசன நிகழ்ச்சி - மெஹராஸாத் வருகை |
| 1952, டிசம்பர் 29 –<br>ஜனவரி 2, | ஸாவ்னேர் பயணம் - பிரம்மாண்டமான தரிசன நிகழ்ச்சியைத் தொடரந்து நாக்பூர் வருகை |
| **1953** | |
| 1953, ஜனவரி 2 - 4 | நாக்பூர் கீதா கோயில் தரிசன நிகழ்ச்சி - ஜால் கேரவாலா சமாதி மற்றும் தாஜுதீன் பாபா சமாதி விஜயம் |
| 1953, ஜனவரி 4 - 11, | இரகசிய அலஹாபாத் பயணம் - 'மஸ்த்' தொடர்பு - கும்பமேளாவில் சாதுக்கள் மற்றும் மஹான்களுக்குத் தலைவணங்குதல் |

| | |
|---|---|
| 1953, ஜனவரி 11 - 14 | அலஹாபாத்திலிருந்து ரயில் வழியாக மதராஸ் வருகை- 'மஸ்த்' தொடர்பு |
| 1953, ஜனவரி 16 - 30 | ஆந்திர பிரதேஷ் பயணம் - விஜயவாடா - தாடேபள்ளிகுடம் - பெண்டபடு - பிப்பரா - பெனுகொண்டா - கப்பாவரம் - நிடாடவோலே - கொவ்வூர் - ராஜமுந்திரி - தௌலேஸ்வரம் - ஏலூரு ஆகிய இடங்களில் அனல் பறக்கும் சிறப்பு தரிசன நிகழ்ச்சிகளை நிறைவு செய்து மெஹராஸாத் வருகை |
| 1953, பிப்ரவரி 11 | மெஹர் பாபாவின் 59ஆவது பிறந்தநாள்; 14ஆம் நாள் குஷ்ரு குவார்ட்டர்ஸில் தரிசன நிகழ்ச்சிக்காக வருகை |
| 1953, பிப்ரவரி 16 - 18<br><br>1953, மார்ச் 1 - 2 | பாபா, பெண் மண்டலியுடன் மும்பை வழியாக ரயிலில் டெஹ்ரா டூன் பயணம்<br>ரிஷிகேஷ் 'கோகல் காட்'டில் அமைந்த ஷாந்தி கோட்டியில் தங்கினர் - சுவாமி சிவானந்தாவுடன் சந்திப்பு |
| 1953, மார்ச் 2 - 5, | ரிஷிகேஷ், ஹரித்வார், கன்கல், நஜிதாபாத், முஸாஃபர்நகர், ஸஹாரன்பூர் மஸ்த், மஹான்கள் தொடர்பு - டெஹ்ராடூன் வருகை |
| 1953, மார்ச் 7 | 1924 முதல் யு.எஸ்.எஸ்.ஆர். அதிபராக இருந்த, ரஷ்ய சர்வாதிகாரி ஜோஸப் ஸ்டாலின் மாஸ்கோவில் தற்செயலாகக் காலமானார் |
| 1953, மார்ச் 23 | ராம நவமி பொது விடுமுறை நாள் - தரிசன நிகழ்ச்சி விளம்பரப்படுத்தப்பட்டது - 2500 நபர்கள் பங்கெடுத்தனர் |
| 1953, மார்ச் 24 | ஸஹாரன்பூர் 'கம்பெனி பாக்' (தோட்டம்) - 1001 ஏழை எளிய மக்களுக்கு நுழைவுச் சீட்டுகள் வழங்கி சிறப்பு தரிசனம் |
| 1953, ஏப்ரல் 10 - ஜூன் 1 | டெஹ்ரா டூன் - முஸோரி பயணம் - டெஹ்ரா டூன் வருகை. |
| 1953, ஜூன் 6 - 10 | உத்தரப் பிரதேசம், பஞ்சாப் வழியாக மஸ்த் பயணம். |
| 1953, ஜூன் 12 - ஜூலை 14 | டெஹ்ரா டூன் - புனிதர்களுடன் சந்திப்பு, உபவாசம், ரூர்க்கி மஸ்த் பயணம், ஆன்மீக சொற்பொழிவுகள் |
| 1953, ஜூலை 15 - 18<br>செப்டம்பர் 11 - 15 | டெஹ்ரா டூன், மூன்று சிறப்பு வெகுஜன கூட்டங்கள்.<br>பஞ்சாப், இந்திய வடக்குப் பகுதிகளில் மஸ்த் பயணம் |
| 1953, நவம்பர் 29 - டிசம்பர் 6 | டெஹ்ரா டூனிலிருந்து மும்பை வந்தடைந்து தீவிர மஸ்த் தொடர்புகள் - மஹாபலேஷ்வர் வருகை |
| **1954** | |
| 1954, பிப்ரவரி 1 - 12 | ஹமிர்பூர் - 'அவதார புருஷர்' பிரகடனம், வெகுஜன தரிசன நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் - மஹாபலேஷ்வர் வருகை |
| 1954, பிப்ரவரி 20 - மார்ச் 4, | ஆந்திர பிரதேஷ், 'தெய்வீகப் பணி' பிரகடனம், வெகுஜன தரிசன நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் - மீண்டும் மஹாபலேஷ்வர் வருகை |
| 1954, மார்ச் 20 – 22<br>ஏப்ரல் 29 - மே 1 | ஸாக்கோரி விஜயம், மஹாபலேஷ்வர் வருகை.<br>தார்வார் மஸ்த் பயணம் (11 மஸ்துகள் தொடர்பு) |
| 1954, மே 25<br>ஜூன் 2 | மஹாபலேஷ்வர் வெகுஜன தரிசன நிகழ்ச்சிகள்<br>சத்தாரா (கிராஃப்டன் பங்களா) வருகை |

| | |
|---|---|
| 1954, ஜூன் 26 - 29, | மஸ்த் பயணம் - இஸ்லாம்பூர், கோலாபூர், ஹூப்ளி - மெஹராபாத் வருகை |
| 1954, ஜூன் 29 - ஜூலை 2, ஜூலை 10 | மும்பை மஸ்த் பயணம் - சத்தாரா வருகை<br>மெஹர் பாபாவின் மௌன தினம் |
| 1954, செப்டம்பர் 12<br>செப்டம்பர் 12 | மெஹர் பாபா மண்டலியுடன் மெஹராஸாத் வருகை<br>வாடியா பார்க் தரிசனம் |
| 1954, | மெஹராபாத் மேல்மலையில் மேற்கத்திய அன்பர்களுடன் சந்திப்பு, கலந்துரையாடல் |
| 1954, செப்டம்பர் 20 | மெஹர் பாபா மேற்கத்திய அன்பர்களுடன் ஸாக்கோரி பயணம் |
| 1954, செப்டம்பர் 26 | அஹமதுநகர் குஷ்ரு குவார்டர்ஸில் 'சிறிய தரிசனம்' |
| 1954, செப்டம்பர் 29 -30<br><br>1954, அக்டோபர் 5<br>அக்டோபர் 7 | மெஹராபாத் சிறப்புக் கூட்டம், மெஹர் பாபாவின் இறுதிப் பிரகடனம்<br>மெஹராஸாத்திலிருந்து சத்தாரா வருகை<br>எழுத்துப்பலகை பயன்படுத்துவதை நிறுத்தினார் |
| 1954, அக்டோபர் 16-22,<br>நவம்பர் 6 - 7 | மஸ்த் பயணம் - கோலாப்பூர், பெல்காவ்ம், மைசூர்<br>பண்டர்பூர் தரிசனம் - சத்தாரா வருகை |
| 1954, நவம்பர் 8<br>நவம்பர் 20 | இறுதிப் பிரகடனம் - விளக்கம், உறுதிப்பாடு & தீர்மானம்<br>சுற்றறிக்கை வெளியீடு |
| 1954, டிசம்பர் 1 -<br>1955, ஜனவரி 10 | நாற்பது நாட்கள் சிறப்புப் பணி |
| **1955** | |
| 1955, ஜனவரி 20 - 25 | குல்தாபாத் ஏகாந்தவாசம் - சத்தாரா வருகை |
| 195, பிப்ரவரி 11, 25 | பாபாவின் 61ஆவது பிறந்தநாள் சத்தாராவில் தனிப்பட்ட முறையில் கொண்டாடப்பட்டது |
| 1955, மார்ச் 21 - 28,<br>ஏப்ரல் 7 | குல்தாபாத் பயணம் - மஸ்த் பணி, ஏகாந்தவாசம்<br>மஹாபலேஷ்வர் - 100 ஏழை உழைப்பாளிகளுடன் பணி |
| 1955, ஏப்ரல் 20 முதல் சில நாட்கள் | மெஹர் பாபாவின் சீடர்களின் வட்ட அமைப்பைப் பற்றிய விளக்கம் |
| 1955, ஏப்ரல் 23 - 24 | ஒரு சிறிய குழுவுடன் (வெளியிலிருந்து அழைக்கப்பட்ட அன்பர்கள்) சந்திப்பு - சுற்றறிக்கை வெளியீடு |
| 1955, மே 1 -<br>ஜூலை 31, | சிறப்பு ஏகாந்தவாசம், உலகளாவிய ஆன்மீகப் பணி,<br>மஹாபலேஷ்வர் பயணம், மஸ்த் தொடர்பு, உபவாசம் |
| 1955, ஆகஸ்ட் 13 – 15<br>செப்டம்பர் 16 | மும்பை, ஆஷியானாவில் தரிசன நிகழ்ச்சி, சத்தாரா வருகை.<br>மெஹராபாத்தில் ஒரு மாத 'சகவாச நிகழ்ச்சி' குறித்த சந்திப்பு |
| 1955, அக்டோபர் 14 -16 | பாபா சத்தாராவிலிருந்து பூனா, கணேஷ்கிந்த் தோட்டம், பிந்த்ரா ஹவுஸ், மெஹராஸாத் வருகை |
| 1955, நவம்பர் 4 - 8 | மெஹராபாத் சகவாசம் - குஜராத்தி |
| 1955, நவம்பர் 12 - 16 | மெஹராபாத் சகவாசம் - தெலுங்கு |
| 1955, நவம்பர் 20 - 24 | மெஹராபாத் சகவாசம் - ஹிந்தி |
| 1955, நவம்பர் 28 -<br>டிசம்பர் 2 | மெஹராபாத் சகவாசம் - மராட்டி |

| | |
|---|---|
| 1955, டிசம்பர் 9 | அஹமதுநகர் ரயில்வே அலுவலகங்களில் ஏறக்குறைய 300 ஆண், பெண் ஊழியர்கள் மற்றும் குழந்தைகளுக்கு மெஹர் பாபாவின் தரிசனம் |
| 1955, டிசம்பர் 18 | பூய்ஞ்ச் கிராமத்தில் மெஹர் பாபாவின் தரிசன நிகழ்ச்சி |
| **1956** | |
| 1956, ஜனவரி 14 | மெஹர் பாபாவின் பூனா - கணேஷ்கிந்த் தரிசன நிகழ்ச்சி |
| 1956, ஜனவரி 24,<br>ஜனவரி 26 | கும்தா கிராமத்தில் மெஹர் பாபாவின் தரிசன நிகழ்ச்சி<br>ஸாக்கோரி வருகை |
| 1956, ஜனவரி 27,<br>ஜனவரி 28-29 | ஸங்கம்னேர் தரிசன நிகழ்ச்சி<br>மும்பை வருகை. நவ்ஸாரி, பாஜ்வா தரிசன நிகழ்ச்சிகள் |
| 1956, ஜனவரி 31<br>ஜனவரி 31 - மார்ச் 19 | சத்தாரா வருகை; கிராம மக்களுக்கு தரிசனம்<br>'ஜட்ஜ்' பங்களாவில் ஏகாந்தவாசம், மஸ்துகளுடன் பணி |
| 1956, மார்ச் 29-ஏப்ரல் 2<br><br>1956, ஏப்ரல் 12 , 13, 15<br>ஜூன் 10 வரை | 56 சன்னதிகளையும் 56 ஏழைகளையும் வணங்க மெஹராஸாத், ஔரங்காபாத், குல்தாபாத் மீண்டும் சத்தாரா வருகை<br>பாபா தண்ணீர் கூட அருந்தாமல் முழு உபவாசம்<br>சத்தாராவில் உபவாசம், ஏகாந்தவாச பணி தொடர்ந்தது |
| 1956, ஜூன் 10, | சத்தாராவிலிருந்து மண்டலியுடன் மெஹராஸாத் பயணம் - உபவாசம், ஏகாந்தவாசம், மேற்கத்திய பயணத்திற்கான ஆயத்த பணி தொடர்ந்தது |
| 1956, ஜூலை 2<br>ஜூலை 7, | எதிர்வரும் 'பேரிடர்' குறித்த 'வாழ்க்கை சுற்றறிக்கை' வெளியீடு<br>சத்தாரா பயணம், மேற்கத்திய பயணத்திற்கான பணி தொடர்ந்தது |
| 1956, ஜூலை 16 | சத்தாராவிலிருந்து மும்பைக்குப் புறப்பட்டுச் சென்று, நான்கு மண்டலியுடன் ஏர் இந்தியா விமானத்தில் ஸூரிக் பயணம் |
| 1956, ஜூலை 17<br>ஜூலை 19 - 20 | ஸூரிக்கிலிருந்து பாரிஸ் வழியாக லண்டன் பயணம்<br>லண்டனிலிருந்து பான் ஆம் விமானத்தில் நியூயார்க் பயணம் |
| 1956, ஜூலை 24<br>ஜூலை 30 | **பாபா** குழுவுடன் மர்டில் பீச் மையம் வருகை<br>அமெரிக்காவின் அரசியல் தலைநகரான வாஷிங்டன் விஜயம் |
| 1956, ஜூலை 30<br>ஜூலை 31 | 60 பேர் அடங்கிய குழுவுடன் பாபா கலி:ஃபோர்னியா பயணம்<br>லாஸ் ஏஞ்சலஸ் சர்வதேச விமான நிலையம் வருகை |
| 1956, ஆகஸ்ட் 2 | கலி:ஃபோர்னியா, ஓஹாய் 'மெஹர் மவுண்ட்' மையத்திற்கு காரில் பயணம் |
| 1956, ஆகஸ்ட் 2 | லாஸ் ஏஞ்சலஸிலிருந்து விமானத்தில் **ஸான்:ஃபிரான்சிஸ்கோ** வருகை |
| 1956, ஆகஸ்ட் 7 - 9 | முதல் முறையாக **ஆஸ்திரேலியா** பயணம் - ஹவாய், ஹொனலுலு, ஸுவா :ஃபிஜி தீவுகள் வழியாக **ஸிட்னி** வருகை |
| 1956, ஆகஸ்ட் 11 | பாபாவும் மண்டலியும் 20 ஆஸ்திரேலியா அன்பர்களுடன் ஸிட்னியிலிருந்து மெல்போர்ன் நகருக்கு விமானத்தில் பயணம் |
| 1956, ஆகஸ்ட் 13 | மெல்போர்னிலிருந்து ஸிட்னி வருகை |
| 1956, ஆகஸ்ட் 14 - 16 | ஆஸ்திரேலியாவிலிருந்து பாபாவும் மண்டலியும் டார்வின், ஜகார்த்தா, சிங்கப்பூர் கொழும்பு வழியாக மும்பை வருகை |
| 1956, ஆகஸ்ட் 17 | மேற்கத்திய நாடுகளில் பயணத்தை நிறைவு செய்து, பாபா இந்தியா வருகை; சத்தாராவில் ஏகாந்தவாசப் பணி தொடர்ந்தது |

| | |
|---|---|
| 1956, செப்டம்பர் 07-11 | பாபா, சத்தாராவிலிருந்து ஹைதராபாத், அதைச் சூழ்ந்த இடங்களுக்கு, காரில் மஸ்த் பயணம் |
| 1956, அக்டோபர் 03-06<br>அக்டோபர் 08 | மும்பை மஸ்த் பயணம்; மெஹராஸாத் வருகை<br>மெஹராபாத்தில் மஸ்த் அலி ஷாவை சந்தித்து, சத்தாரா வருகை |
| 1956, அக்டோபர் 16-22<br>அக்டோபர் 21-23 | சத்தாராவில் உபவாசமும் ஏகாந்தவாசப் பணியும் தொடர்ந்தது<br>நாசிக், இந்தூர் மஸ்த் பயணம், மெஹராபாத் வருகை |
| 1956, நவம்பர் 16-21<br>டிசம்பர் 02 | உத்தரபிரதேசம் மஸ்த் பயணம், மெஹராஸாத், சத்தாரா வருகை<br>சத்தாரா - பூனா - சத்தாரா காரில் பயணம், உத்தராவில் கார் விபத்து |
| 1956, டிசம்பர் 10 | பாபா, அவசர மருத்துவ ஊர்தி மூலம் பூனாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் |
| **1957** | |
| 1957, பிப்ரவரி 12<br>1957, பிப்ரவரி 15 | பாபா, பூனாவிலிருந்து மெஹராஸாத் அழைத்துவரப்பட்டார்.<br>ஓராண்டு கால ஏகாந்தவாசம் ‘ஏழை’ நிகழ்ச்சியுடன் நிறைவு |
| 1957, மார்ச் 18<br>மார்ச் 23 | ஸாக்கோரி விஜயம், மெஹராஸாத் வருகை<br>பூனா ஸெயின்ட் மீரா பள்ளிக்கூடம் விஜயம், மெஹராஸாத் வருகை |
| 1957, ஏப்ரல் 18 – 28<br>ஏப்ரல் 28 | பூனா, கணேஷ்கிந்த் தோட்டம் வருகை; சிகிச்சை தொடர்ந்தது<br>பூனா, ‘குருபிரசாத்’ பங்களா - ஒரு மாத விஜயம் |
| 1957, ஜூன் 1<br>ஜூன் 8 | மீண்டும் பூனா, கணேஷ்கிந்த் தோட்டம் வருகை<br>பூனா மெஹர் பாபா, மையம் விஜயம் |
| 1957, ஜூன் 10 | மெஹர் பாபா, பெண் மண்டலியுடன் பூனா, கணேஷ்கிந்த் தோட்டத்திலிருந்து மெஹராஸாத்திற்குப் பயணம் |
| 1957, ஜூன் 15 | நோரினா மேட்சபெல்லி தனது 77ஆவது வயதில், மர்ட்டில் பீச் ‘யூபான் டூன்ஸ்’ இல்லத்தில், காலமானார் |
| 1957, ஆகஸ்ட் 01<br>ஆகஸ்ட் 24 | மெஹர் பாபாவின் 75 நாள் சிறப்புப் பணி ஆரம்பம்<br>பூனா பயணம் - கணேஷ்கிந்தில் 80 பூனா அன்பர்களுடன் சந்திப்பு |
| 1957, செப்டம்பர் 6, 8 | மெஹராஸாத் வருகை, மும்பை, பூனா, அஹமதுநகரைச் சேர்ந்த 32 நபர்களுடன் மூன்று மணி நேர சந்திப்பு |
| 1957, அக்டோபர் 08<br>அக்டோபர் 27 | பாபா, பல்வேறு மருத்துவ சிகிச்சைகளுக்காக மும்பை வருகை<br>நெருங்கிய மும்பை அன்பர்களுக்கு தரிசனம் |
| 1957, அக்டோபர் 30<br>நவம்பர் 4 | குஸ்தாஜி காலமானார் - மெஹராபாத்தில் உடல் அடக்கம்<br>மெஹராபாத்தில் குஸ்தாஜிக்கு அஞ்சலி, மெஹராஸாத் வருகை |
| 1957, டிசம்பர் 22<br>டிசம்பர் 26 | மும்பை தரிசன நிகழ்ச்சி<br>மெஹராஸாத் வருகை |
| **1958** | |
| 1958, பிப்ரவரி 15 - 19<br>பிப்ரவரி 22 - 26 | ஹிந்தி & மராட்டி சகவாசம் - மெஹராபாத்<br>தெலுங்கு & குஜராத்தி சகவாசம் - மெஹராபாத் |
| 1958, மார்ச் 15<br>மார்ச் 19 - 23 | மும்பையிலிருந்து மெஹராஸாத் வருகை<br>பூனா கணேஷ்கிந்த் தோட்டம் - மஹாபலேஷ்வர் வருகை |

| | |
|---|---|
| 1958, ஏப்ரல் 30-மே 15 | பூனா குருபிரசாத்தில் இளைப்பாறல்; அமெரிக்கா பயணத்திற்காக மும்பை வருகை |
| 1958, மே 15 - 17<br>மே 19 - 30 | நியூயார்க் - வடக்குக் கரோலினாவின் வில்மிங்டன் வருகை<br>மர்டில் பீச் சகவாசம் |
| 1958, மே 31-ஜூன் 02 | வாஷிங்டன் டி.சி., ஸான்ஃபிரான்சிஸ்கோ வழியாக ஆஸ்திரேலியா பயணம் - ஸிட்னி - பிரிஸ்பேன் வருகை |
| 1958, ஜூன் 03 - 06 | ஆஸ்திரேலியா சகவாசம் |
| 1958, ஜூன் 8 - 10 | அமெரிக்கா, ஆஸ்திரேலியா சகவாசத்திற்கு பின்னர் இந்தியா வருகை; மும்பை ஆஷியானா, பூனா கணேஷ்கிந்த் தோட்டம் வருகை |
| 1958, ஜூன் 14 | மெஹராஸாத் வருகை; ஜூன் 15 முதல் மெஹராபாத் விஜயம் - ஜூலை 10ஆம் நாள் நிகழவிருக்கும் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் குறித்த சந்திப்பு |
| 1958, ஜூலை 6 | சாது வாஸ்வானியின் பூனா, ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளிக்கு விஜயம் / ரிஷிகேஷிலிருந்து மஸ்த் நீல்கந்த்வாலா மெஹராஸாத் வருகை |
| 1958, ஜூலை 09 - 10 | 180 அன்பர்கள் அடங்கிய மெஹராபாத் சிறப்புக் கூட்டம் - மெஹர் பாபாவின் உலகளாவிய செய்தி வழங்கல் |
| 1958, ஜூலை 14 –<br>டிசம்பர் 1, 15 | நான்கரை மாத சிறப்பு ஏகாந்தவாசம்<br>டிசம்பர் 15, பூனா குருபிரசாத் வருகை |
| 1958, பிப்ரவரி 1 | சுற்றறிக்கை வெளியீடு |
| **1959** | |
| 1959, பிப்ரவரி 9 | அரன்காவ்ம் கிராம மக்களுக்கு தரிசனம் |
| 1959, பிப்ரவரி 25<br>மார்ச் 21 | **மெஹர் பாபாவின் 65ஆவது பிறந்தநாள்**<br>300 ஆந்திரா யாத்ரீகர்களுக்கு அஹமதுநகர் ‘ரயில்வே கிளப்’பில் தரிசனம் |
| 1959, மார்ச் 7 -<br>ஆகஸ்ட் 8 | மெஹர் பாபாவின் மும்பை பயணம், பொது தரிசனம் - பூனா குருபிரசாத் வருகை; தரிசன நிகழ்ச்சி |
| 1959, ஆகஸ்ட் 8<br>ஆகஸ்ட் 14 -<br>அக்டோபர் 29 | மெஹராஸாத் வருகை,<br>மெஹராஸாத் - மெஹர் பாபாவின் பணி - மிக முக்கியமான காலகட்டம் |
| **1960** | |
| 1960, ஜனவரி 2<br>பிப்ரவரி 25 | ‘அவதார் மெஹர் பாபா அரன்காவ்ம் மையம்’ திறப்பு விழா<br>பாபாவின் 66ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம் |
| 1960, பிப்ரவரி 25 | பிம்பல்காவ்ம் கிராமத்தைச் சேர்ந்த 60 பள்ளி மாணவர்களின் கால்களைக் கழுவி தலை வணங்கும் நிகழ்ச்சி |
| 1960, மார்ச் 6<br>மார்ச் 9 | குஷ்ரு குவார்ட்டர்ஸ் வளாகத்தில் தரிசன நிகழ்ச்சி<br>மெஹராபாத்தில் ஒரு சிறிய ‘ஏழை நிகழ்ச்சி’ |
| 1960, மார்ச் 20<br>மே 1 | பூனா குருபிரசாத் வருகை<br>ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்ட மிகப் பெரிய தரிசன நிகழ்ச்சி |
| 1960, மார்ச் 20 -<br>ஜூன் 20, மே 15 | பூனா குருபிரசாத் தரிசன நிகழ்ச்சி தொடர்ச்சி<br>குருபிரசாத் பொது தரிசன நிகழ்ச்சி |

| | |
|---|---|
| 1960, ஜூன் 04 , 06 | அகில இந்திய காங்கிரஸ் அரசியல் கட்சி தலைவர்கள் - ஜக்ஜீவன் ராம், சஞ்சீவ ரெட்டி தரிசனத்திற்காக குருபிரசாத் வருகை |
| 1960, ஜூன் 19<br>ஜூன் 20 | குருபிரசாத்தில் 160 'ஏழை'களுக்கான தரிசன நிகழ்ச்சி<br>குருபிரசாத்திலிருந்து மெஹராஸாத் வருகை |
| 1960, ஜூன் 21<br>ஜூன் 30 | மெஹராபாத் விஜயம்<br>ஆறு மாத கால ஏகாந்தவாசம் குறித்த சுற்றறிக்கை வெளியீடு |
| 1960, ஜூலை 1 | ஆறுமாதகால ஏகாந்தவாசம் ஆரம்பம் - அடுத்த பதினைந்து நாட்களுக்கு மஸ்த் நீல்கந்த்வாலாவுடன் பணி |
| **1961** | |
| 1961, பிப்ரவரி 25<br><br>1961, மார்ச் 22 | மெஹர் பாபாவின் 67ஆவது பிறந்தநாள் - சிறப்புப் செய்தி வெளியீடு<br>பூனா, குருபிரசாத் வருகை - ஏகாந்தவாசம் தொடர்ந்தது |
| 1961, மே 15 - ஜூன் 1<br>ஜூலை 12 | குருபிரசாத் - இரண்டு வார தரிசன நிகழ்ச்சி ஆரம்பம்<br>பூனா, பந்த் கார்டன் பாலம் வழியாக பாபாஜானின் இருப்பிடம் வருகை |
| 1961, ஜூலை 12 | பூனா நகரில் வரலாறு காணாத திடீர் வெள்ளப்பெருக்கு |
| 1961, ஆகஸ்ட் 7 -<br>1962, மார்ச் 31 | பாபா மெஹராஸாத் வருகை; ஏகாந்தவாசம் தொடர்ந்தது |
| **1962** | |
| 1962, மார்ச் 31 | பூனா, குருபிரசாத் வருகை |
| 1962, மே 13 | மெஹர் பாபாவின் நெருங்கிய மண்டலியில் ஒருவர் விஷ்ணு காலமானார் |
| 1962, ஜூலை 8<br>ஆகஸ்ட் 9 | பூனா குருபிரசாத்திலிருந்து மெஹராஸாத் வருகை<br>மெஹர் பாபாவின் ஆன்மீகத் தாயார் குல்மாய் காலமானார் |
| 1962, ஆகஸ்ட் 23<br><br>அக்டோபர் 23 | மெஹராஸாத் - கிழக்கு-மேற்கு சகவாசத்திற்கான சிறப்புக் கூட்டம்<br>பாபா மண்டலியுடன் பூனா, குருபிரசாத் வருகை |
| 1962, நவம்பர் 01 – 04<br>நவம்பர் 10 | பூனா குருபிரசாத்தில் கிழக்கு-மேற்கு சகவாசம்<br>பூனாவிலிருந்து மெஹராஸாத் வருகை |
| 1962, நவம்பர் 16<br>டிசம்பர் | அஹமதுநகர் விலூ வில்லா, குஷ்ரு குவார்ட்டர்ஸ் விஜயம்<br>மெஹராஸாத் - ஏகாந்தவாசம் தொடர்ந்தது |
| 1962, டிசம்பர் 9 | மெஹராவின் பிறந்த நாள் (23ஆம் தேதிக்கு பதிலாக) கொண்டாடப்பட்டது; 150 நெருங்கிய அன்பர்கள் கலந்துகொண்டனர் |
| **1963** | |
| 1963, ஜனவரி 13<br>பிப்ரவரி 28 | அஹமதுநகரிலிருந்து சுமார் 120 சேவகர்களுடன் சந்திப்பு<br>மெஹர்ஸ்தான் திறப்பு விழா - பாபாவின் எட்டு சிறப்புச் செய்திகள் |
| 1963, மார்ச் 17<br>மார்ச் 24 | அஹமதுநகர் மையம் விஜயம்<br>மெஹராஸாத்திலிருந்து பூனா, குருபிரசாத் வருகை |
| 1963, மார்ச் 30, 31 | அவதார புருஷர்கள் ஒவ்வொருவரின் 'பலவீனங்கள்' - விளக்கம் |

| | |
|---|---|
| ஏப்ரல் 7 - ஜூன் 16 | குருபிரசாத் தரிசன நிகழ்ச்சி |
| 1963, மார்ச் - ஏப்ரல், | பிரதமர் ஜவஹர்லால் நேருவைக் குறித்த மெஹர் பாபாவின் கடிதம் |
| 1963, ஏப்ரல் 25<br>மே 3 - 4 | மீட்பு காவல் இல்லத்தின் 250 குழந்தைகளுடன் சந்திப்பு<br>பேகம் அக்தரின் இசை நிகழ்ச்சி |
| 1963, மே 15 | மெஹர் பாபாவின் இறைத் தூதர்கள் - வில் பேக்கெட், அவரது மனைவி மேரி (சில மாதங்களுக்கு முன்பு) காலமாயினர் - பாபாவின் செய்தி |
| 1963, ஜூன் 30 | பாபா, ஆண், பெண் மண்டலியுடன் குருபிரசாத்திலிருந்து மெஹராஸாத் வருகை; ஏகாந்தவாசம் தொடர்ந்தது |
| **1964** | |
| 1964, ஏப்ரல் 01 | மெஹராஸாத்திலிருந்து பூனா குருபிரசாத் வருகை; ஏகாந்தவாசம் தொடர்ந்தது |
| 1964, மே 1 | அவதார் மெஹர் பாபா பூனா மையம் திறப்புவிழா |
| 1964, ஜூலை 1<br>ஜூலை 10 | மெஹராஸாத்தில் ஏகாந்தவாசம் தொடர்ந்தது<br>மௌனத்தின் 39ஆவது ஆண்டு நிறைவு -சிறப்புச் செய்தி வெளியீடு |
| 1964 | சார்லஸ் பர்டம் எழுதிய 'தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்' புத்தகத் தொகுப்பு விரிவாக்கத்துடன், **'தி காட்-மேன்'** என்ற தலைப்பில் லண்டனில் வெளியீடு |
| 1964, ஆகஸ்ட் | ஹார்வர்ட் பல்கலைக்கழக பேராசிரியர்கள், போதை மருந்துப் பொருட்களை' மில்ப்ரூக், கல்வி நிறுவனத்தில் பரிசோதனை செய்தனர் |
| 1964, அக்டோபர் 10 | போதை மருந்துப் பொருட்கள் குறித்த மெஹர் பாபாவின் விளக்கம் |
| 1964, நவம்பர் 15 -19 | ஹமிர்பூர் 'மெஹர்புரி' குடியிருப்பு - அதன் மையப் பகுதியில், பாபாவின் பளிங்கு சிலை எழுப்புவதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது |
| **1965** | |
| 1965, ஜனவரி இறுதி<br>மார்ச் 7 | 71 ஆவது பிறந்தநாள் செய்தி உலகெங்கும் அனுப்பப்பட்டது<br>கிழக்கத்திய அன்பர்களுக்கு சுற்றறிக்கை வெளியீடு |
| 1965, மார்ச் 30<br>ஏப்ரல் 20 | மெஹராஸாத்திலிருந்து பூனா குருபிரசாத் வருகை<br>நியூயார்க் உலக கண்காட்சிக்கான செய்தி வெளியீடு |
| 1965, மே 1<br>மே 2 - 6 | பூனா மையம் திறப்பு விழா - மெஹர் பாபா வருகை<br>குருபிரசாத்தில் 5 நாள் பொது தரிசன நிகழ்ச்சி |
| 1965, ஜூலை 1 | பூனா குருபிரசாத்திலிருந்து மெஹராஸாத் வருகை - ஒரு மாதத் தனிமை - 'ஏகாந்தவாசத்தில் மேற்கொள்ளும் ஏகாந்தவாசம்.' |
| 1965, ஜூலை 10<br><br>அக்டோபர் | 40ஆவது ஆண்டு மௌன தினம் உலகெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது<br>இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் |
| 1965, நவம்பர் 29 | அடுத்த நான்கு மாதங்கள் பாபா, பூனா செல்லும் வரை, இடையூறு எதுவுமின்றி ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போவதாக அறிவிப்பு |

| | |
|---|---|
| 1965, டிசம்பர் 23 | மெஹராஸாத்தில் மெஹராவின் பிறந்தநாள் நிகழ்ச்சி<br>டிசம்பர் மாதம் திட்டமிடப்பட்ட சகவாசம் ரத்து செய்யப்பட்டது |
| **1966** | |
| 1966, ஜனவரி 10 | தாஷ்கண்டில் லால் பஹதூர் சாஸ்திரி திடீரென காலமானார்; இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராகப் பொறுப்பேற்பு |
| 1966, ஜனவரி 16 | சாது வாஸ்வானி பூனாவில் காலமானார்; மெஹர் பாபாவின் சிறப்புச் செய்தி |
| 1966, பிப்ரவரி 25 | மெஹர் பாபாவின் 72ஆவது பிறந்தநாள் உலகம் முழுவதும் வெவ்வேறு மையங்களில் கொண்டாடப்பட்டது |
| 1966, ஏப்ரல் 1<br><br>1966, ஜூலை 1 | பூனா குருபிரசாத்தில் தனது வழக்கமான கோடைகாலத்தைக் கழிப்பதற்காக மெஹராஸாத்திலிருந்து பாபா வருகை<br>பூனாவிலிருந்து பாபா ஆண், பெண் மண்டலியுடன் மெஹராஸாத் வருகை - ஆழ்ந்த ஏகாந்தவாசம் தொடர்ந்தது |
| 1966, ஏப்ரல் - ஜூலை | அமெரிக்காவில் போதைப்பொருள் பற்றிய பாபாவின் செய்தி, கட்டுரைகள், உரைகள், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் வெளியீடு |
| 1966, | 1967 - நவம்பர் வரை, ‘நான் முற்றிலும் இடையூறு எதுவுமின்றி இருக்க விரும்புகிறேன்’ என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது; 1966, நவம்பர் 21 முதல் 1967 நவம்பர் 21 வரை ‘நான்கு அதிசயங்கள் நிகழும்’ மெஹர் பாபாவின் அறிவிப்பு |
| 1966, டிசம்பர் 22 | மெஹராவின் பிறந்தநாள் மெஹராஸாத்தில் தனிப்பட்ட முறையில் கொண்டாடப்பட்டது |
| **1967** | |
| 1967 ஜனவரி 11 | மெஹர் பாபாவின் நீண்டகால, நெருங்கிய சீடரான ராம்ஜூ அப்துல்லா இதய செயலிழப்பால் காலமானார் |
| 1967 பிப்ரவரி 5<br><br>பிப்ரவரி 25 | வாழ்நாள் சுற்றறிக்கை 64 மூலமாக பாபாவின் பிறந்தநாள் செய்தி<br>மெஹர் பாபாவின் 73ஆவது பிறந்தநாள் விழா |
| 1967 ஏப்ரல் 2<br>ஜூன் 17 | பாபா ஆண், பெண் மண்டலியுடன் குருப்பிரசாத் வருகை<br>பாபா கடைசி உயில் மற்றும் ஏற்பாட்டை நிறைவேற்றினார் |
| 1967 ஜூலை 2 | மெஹர் பாபா ஆண், பெண் மண்டலியுடன் பூனாவிலிருந்து புறப்பட்டு மெஹராஸாத் வருகை |
| 1967 ஜூலை<br>ஜூலை 10 | மெஹராஸாத்தில் பாபாவின் ஏகாந்தவாசம் தொடர்ந்தது<br>பாபாவின் 42ஆவது ஆண்டு மௌன நிறைவு விழா |
| 1967 ஜூலை 21 - நவம்பர் 21 | கடுமையான ஏகாந்தவாசம் |
| 1967 செப்டம்பர் 20 | தொழுநோயாளிகளுடனான பணி மற்றும் நேர்காணலுடன் பாபாவின் செய்தி காணொளிப் படமாக்கப்பட்டது |
| 1967 செப்டம்பர் 27 | பூனா ஸெயின்ட் வின்சென்ட் உயர்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு விழா - மெஹர் பாபாவின் சிறப்புச் செய்தி |
| 1967 அக்டோபர் 1 | உலகம் முழுவதும் வாழும் அனைத்து பாபா- அன்பர்களுக்கும் சுற்றறிக்கை வெளியீடு |

| | |
|---|---|
| 1967 நவம்பர் | நவம்பர், ஹமிர்பூர் (மெஹர்புரி), மஹேவா (மெஹரஸ்தானா) மற்றும் நௌரங்கா (மெஹர் தாம்) ஆகிய இடங்களில் வருடாந்திர சிறப்பு மேளா |
| 1967 டிசம்பர் 1 | பாபா 'அவரது ஏகாந்தவாசப் பணியின் கடைசி 70 நாட்கள்' எனச் சுட்டிக்காட்டினார் |
| 1967 டிசம்பர் 5 | பாபாவின் பிறந்தநாளுக்கான (25.02.1968) செய்தி வழங்கப்பட்டாலும், பிறந்தநாள் வரை அதை வெளியிட வேண்டாம்' என அறிவுறுத்தப்பட்டது |
| 1967 டிசம்பர் 22, | மெஹராவின் பிறந்தநாள் |
| **1968** | |
| 1968 ஜனவரி 20 | உலகம் முழுவதும் வாழும் அன்பர்களுக்கு சுற்றறிக்கை வெளியீடு |
| 1968 பிப்ரவரி 20 | தற்போதைய ஏகாந்தவாசம், மார்ச் 25 அன்று நிறைவடைவதற்கு பதிலாக, மே 21 வரை தொடரும் - பாபாவின் அறிவிப்பு |
| 1968 பிப்ரவரி 25 | கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் அமைந்த மெஹர் பாபா மையங்களில் பெரிய அளவில் பிறந்தநாள் கொண்டாட்டம், சிறப்புச் செய்தி |
| 1968 ஏப்ரல் 1, | மெஹர் பாபா, ஆண், பெண் மண்டலியுடன் பூனா, குருபிரசாத் வருகை |
| 1968 மே 15 | 'வாழ்க்கை சுற்றறிக்கை' வெளியீடு |
| 1968 மே 21 - ஜூன் 27, | ஐந்து வாரங்கள் ஏகாந்தவாசப் பணி தொடர்ந்தது |
| 1968 ஜூலை 1, | மெஹர் பாபா மண்டலியுடன் மெஹராஸாத் வருகை |
| 1968 ஜூலை 10 | மெஹர் பாபாவின் மௌனத்தின் 43ஆவது ஆண்டு நிறைவு |
| 1968 ஜூலை | மணியின் குடும்பக் கடிதம் வெளியீடு |
| 1968 அக்டோபர் 13 | 1969 ஏப்ரல் 10 - ஜூன் 10 வரை, குருபிரசாத்தில் தரிசனத்திற்கான முடிவு குறித்து சேவகர்களுடன் சந்திப்பு & சுற்றறிக்கை வெளியீடு |
| 1968 நவம்பர் 13 | 'மண்டலி உறுப்பினர் யார்' என்பதன் அர்த்தத்தையும், அதன் நிலையையும் தெளிவுபடுத்தும் விளக்கம் |
| 1968 டிசம்பர் 1 | மெஹர் பாபா பிறந்த பூனா, ஸஸூன் பொது மருத்துவமனையின் 100ஆவது ஆண்டு நிறைவு விழா |
| 1968 டிசம்பர் 11 | பாபாவின் 75ஆவது பிறந்தநாளுக்காக செய்தியை வழங்கி ஜனவரிக்கு முன்னர் அதை அச்சிட்டு வெளியிட வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டது |
| 1968 டிசம்பர் 22, 23 | மெஹராஸாத்திற்கு வருகை தரும் பாபா-அன்பர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் வெளியிடப்பட்டன |
| **1969** | |
| 1969 ஜனவரி 7<br>ஜனவரி 9 | வாழ்க்கை சுற்றறிக்கை எண்: 71, தேதி: ஆகஸ்ட் 15 வெளியிடப்பட்டது<br>பாபாவின் இரத்த மாதிரிகள் சோதனைக்காக அனுப்பப்பட்டது |
| 1969 ஜனவரி 12 | ஜனவரி இரண்டாவது வாரத்திற்கு பின்பு, பாபா அறையை விட்டு வெளியே வராமல், நாளுக்கு நாள் உடல்நிலை தீவிரமடைந்தது |

| | |
|---|---|
| **1969 ஜனவரி 19** | பாபாவின் உடல்நிலை ஓரளவு நன்றாக இருந்தது - பல உள்ளூர் அன்பர்களுக்கு உணவு தயார் செய்து வழங்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது |
| **1969 ஜனவரி 24** | மீண்டும் பாபாவின் இரத்த மாதிரிகள் சோதனைக்காக அனுப்பப்பட்டது |
| **1969 ஜனவரி 28, 30** | பாபாவிற்கு அடிக்கடி உடலில் கொடூரமான நடுக்கங்கள் ஏற்படத் தொடங்கின |
| **1969 ஜனவரி 31** | ஜனவரி 31, மதியம் 12:15 மணியளவில், பயங்கரமான தசைப்பிடிப்பு பாபாவை உலுக்கி, மூச்சைத் திணறடிக்க அவரது சுவாசம் திடீரென நின்றது |
| **1969 பிப்ரவரி 7** | பிப்ரவரி 7 அன்று பாபாவின் உடல் மதியம் 12:15 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது |
| **1969** | மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு நிறைவடைந்தது. |



நானே ராம்,
நானே கிருஷ்ணா.
நான் ‘இந்த ஒருவனாக’
இருந்தேன்,
‘அந்த ஒருவனாக’
இருந்தேன்,
இப்போது நான்
மெஹர் பாபா.
எனது உடல் மற்றும்
உதிரத்தின் இந்த
உருவில், நான்
ஒருவனே நித்தியமாக
போற்றி வணங்கப்பட்ட,
புறக்கணிக்கப்பட்ட,
எப்போதும் நினைவில்
கொள்ளப்பட்ட மற்றும்
மறக்கப்பட்ட அதே
ஆதிகாலப் புருஷர்.



-அவதார் மெஹர் பாபா